# தாய்வீடு

THAIVEEDU | SEPTEMBER | 2024    தாய்வீடு | செப்ரெம்பர் | 2024



## ‘ஆரையூர் அருள்’

*சிறப்புப் பக்கம்*

**பிரித்தானியா:
இன-நிறவாத வன்முறைகளும் விளைவுகளும்**
- ரூபன் சிவராஜா

**ஈழத்துத் தமிழ்க்
கவிதைப் புலத்தில் பெண்நிலைவாதம்**
- சி. ரமேஷ்

**கண்களைக் குளமாக்கிய கலைமாலை**
- ஜெயா குமாரசுவாமி

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc.


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## கல்வி எனும் கண்களைக் காப்போம்!

*'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்*
*அன்னயாவினும் புண்ணியம் கோடி*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'.*

என்றான் பாரதி. மக்களிடையேயான ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கும், ஒரு முன்னேறிய, முற்போக்கான சமூதாயத்தை உருவாக்குவதற்கும் அனைவருக்கும் பரந்த வகையிலும் பாரபட்சமற்றும் வழங்கப்படும் கல்வியே வழிவகுக்கும் என அவன் அறிந்திருந்ததன் வெளிப்பாடே இந்த வரிகள். இந்த வரிகளைப் பின்பற்றி, முதலமைச்சர் காமராஜர் வகுத்த கல்விக் கொள்கையே அவரைக் 'கல்விக் கண்திறந்த காமராஜர்' என வரலாறு கொண்டாடக் காரணமாயிற்று. அந்தக் கொள்கையை தமிழ் நாட்டின் அடுத்த டுத்த அரசுகளும் தொடர்ந்து கடைப்பிடித்தமையே, தமிழ்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களின் பெருவலுவை ஆற்றுப்படுத்தி இன்று தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ வழிவகுத்தது. ஈழத்திலும், சாதிவாரியாகவும் பிரதேச வாரியாகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்க்கையை வளப் படுத்திக்கொள்ளவும், ஒடுக்குமுறையிலிருந்து தம் சந்ததியை விடுவித்துக்கொள்ளவும் பேராதாரமாக விளங்கியது காலனியாதிக்கத்துக்குப் பின்னரான இலவசக் கல்விக் கொள்கையே. இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி, ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி வழங்கப்படுவதற்கு எதிராக ஆரம்பத்தில் ஆதிக்க சக்திகள் நடத்திய போராட்டங்கள் பற்றியும் நாம் அறிந்திருக்கிறோம். சமயங்களையும் சம்பிர தாயங்களையும் காரணங்காட்டி அவர்கள் நடத்திய இந்தப் போராட்டங்களின் பின்னணியிலிருந்தது, தம்மால் ஒடுக்கப்பட்டவர்களைக் கல்வி விடுவித்துவிடும் என அவர்களுக்கிருந்த தெளிவே.

உலக அரங்கிலும் இதுவே உண்மையாக இருக்கிறது. அமெரிக்காவுக்கு அடிமைகளாகச் சங்கிலியிட்டு இழுத்துவரப்பட்ட கறுப்பின மக்கள், இன்று அந்நாட்டின் அரச தலைவர் பதவிவரை உயரும் அளவுக்கு வழிவகை செய்தது கல்வியே. கறுப்பின மக்கள் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னரும், ஒதுக்குதல் கொள்கை நடைமுறையிலிருந்தது. அந்த ஒதுக்குதலுக்கு எதிராகப் போராடி சமத்துவம் பெற்றுக்-கொடுத்தவர்கள் கல்வியால் உயர்ந்த கறுப்பினத் தலைவர்களே. இதற்குக் காரணமாக அமைந்தது, 1800-களின் நடுப்பகுதியில், அமெரிக்காவின் கல்விக்கொள்கையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக பொதுக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து இலவசக் கல்வியில் முதலிடப்பட்டமையே. இந்த மறுமலர்ச்சியின் பிதாமகர் எனக் கருதப்படும் ஹொரஸ் மான், 'கல்வியே மிகப்பெரிய சமப்படுத்தி' எனச் சொல்லி, சமத்துவமான சமுதாயத்தை உருவாக்குவதில் கல்வியின் பங்கைச் சுட்டிக்காட்டினார்.

கல்வியை யாரும் பாகுபாடின்றி இலகுவில் அடைவதற்கான வாய்ப்பே உலகின் முன்னேறிய நாடுக ளெங்கும் நிலவும் சமத்துவத்துக்கும் சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்கும் காரணமாயிருந்துள்ளது என்றபோதும், அண்மைக்காலமாகச் சிறிது சிறிதாக, கல்வி தனியார் மயப்படுத்தப்பட்டு இலாபத்தை ஈட்டும் பண்டமாக்கப்பட்டு வருவது அச்சமூட்டுவது.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்திலே கடந்த கல்வியாண்டிலே மட்டும் பொதுக்கல்விக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து 300 மில்லியன் டொலரை அரசு வெட்டியுள்ளது என மாகாணத்தின் பொதுப்பாடசாலை ஆசிரியர் சங்கங்கள் வெளியிட்டுள்ள புள்ளிவிபரமொன்று தெரிவிக்கிறது. அதேநேரம், தனியார் பாடசா லைகள் சிறிதும் பெரிதுமாக ஆங்காங்கே முளைத்து வருவதைக் காணமுடிகிறது. இந்த நிலை தொடர்ந் தால், கனடியர்களின் கல்விநிலை ஒரு நூற்றாண்டு பின்நோக்கிச் சென்று, இருதட்டுக் கல்விமுறை உருவாகும் அபாயம் உள்ளது.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும்கூட வசதி படைத்தவர்களுக்கு ஒரு பாடசாலை, வசதியற்றவர்களுக்கு வேறு பாடசாலை என இருதட்டுக் கல்விநிலையே பெருகிவரும் அபாயத்தைக் காண்கிறோம். அரச பாட சாலைகளுக்கான ஆதரவு இந்த நாடுகளிலே தொடரப்படாது விட்டால், காலனியாதிக்கத்துக்குப்பின் அடையப்பெற்ற சமுதாய முன்னேற்றமெல்லாம் பின்னோக்கிச் செல்லும்.

அமெரிக்காவில் உத்வேகம் பெற்றுள்ள அதிபர் தேர்தலிலே, டொனல்ட் டிரம்புக்கு ஆதரவாக இயங்கும் 'செயற்திட்டம் 2025' என்ற கோட்பாட்டின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, பொதுக்கல்விக்கான நிதி வழங்கலை வெட்டி, அதைப் பரந்த அளவில் தனியார் மயப்படுத்துவதே. இந்தப் போக்கு கல்வியை வசதியற்றவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் எட்டாக்கனியாக்கும்.

இந்த அபாயத்தையொட்டி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கல்விக்கான வசதியற்ற சமூகங்கள் சமத்துவமற்ற சமூகங்களாக உருவெடுக்கும். சமத்துவமற்ற சமூகங்கள் சமாதானமற்ற சமூகங்களாக மாறும். கல்வி என்ற அடிப்படை உரிமை அனைவருக்குமானதாகப் பேணப்படும்போது அதனால் விளை-யும் சமத்துவமும் சமாதானமும் முன்னேற்றமும் அனைவருக்கும் ஆனதாகும்.

# இம்மாதத் தாய்வீட்டில்...


**கல்வி எனும் கண்களைக் காப்போம்!** 3

**பிரித்தானியா: இன-நிறவாத வன்முறைகளும் விளைவுகளும்** 5
- ரூபன் சிவராஜா

**கேர்ஸ்க் மீதான தாக்குதல்கள் ரஷ்யாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்துமா?** 9
- ரதன்

**மலையக மக்களின் 'வலியும் வாழ்வும்'** 14
- நெல்லை ஜெயசிங்

**கனடாவில் வெளிநாட்டு மாணவர்களும் கல்வியும்** 18
- த. சிவபாலு

**எழுத்தறிவு முன்னேற்றத்தின் இயந்திரம்** 22
- சி. நற்குணலிங்கம்

**கோடைகாலத் துவிச்சக்கர வண்டிகள்** 24
- செந்தூரன் புனிதவேல்

**மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள்:** 26
- வேலா சுப்ரமணியம்

**காட்டேறிகள் உண்மையா?** 29
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**இக்கிகாய் அல்லது வாழ்க்கை இலக்கு** 32
- குமார் புனிதவேல்

**நூல் வெளியீடும் அறிமுகமும் உரைகளும்** 34
- வேதநாயகம் தபேந்திரன்

**கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் - 2024** 36
- குரு அரவிந்தன்

**ஷோலே... சில நினைவுகள் !** 39
- ஓவியர் ஜீவா

**வென்மேரி சர்வதேச விருதுகள்** 42
- போல் ஜோசப்

**கண்களைக் குளமாக்கிய கலைமாலை** 44
- ஜெயா குமாரசுவாமி

**'சிறகிழந்த கிளிகள்' தந்த தானா. மருதமுத்து** 48
- மல்லியப்புசந்தி திலகர்

**தமிழறிஞர் கலாநிதி க. சொக்கன்** 51
- வே. விவேகானந்தன்

**முருகேசு மாஸ்டரிலிருந்து திருலோகசங்கர் வரை - ஒரு நினைவு மீட்டல்** 54
- மு. நித்தியானந்தன்

**'கல்வி ஓர் அரசியல்' புலனறிவாதமும் புலப்பாட்டு நெறியும்** 57
- அகமட் பிஸ்தாமி

**இளவாலை விஜயேந்திரன் கவிதைகள்: எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது?** 60
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

**'பொருளாதாரம் பற்றி என் மகளுக்கு அளித்த விளக்கம்' எனும் நூலை முன்வைத்து...** 65
- நவஜோதி ஜோகரட்னம்

**மாபெரும் துயர்க்கிண்ணம்** 68
- கருணாகரன்

**சேரனின் 'காஞ்சி'கவிதைத் திரட்டு மீதான ஒரு சிறு கண்ணோட்டம்** 71
- க. நவம்

**கூத்துக்கலைக் காவலர் கூத்திலக்கியம் பற்றிய பார்வை** 74
- ம. கேதீஸ்வரன்

**தமிழ் இலக்கணத்தை நன்கு கற்றறிந்த மரபுவழிக் கவிஞர்** 77
- வெல்லவூர்க் கோபால்

**ஆரையூர் அருளின் இலக்கியப் பணிகள் ஒரு பன்முகப் பார்வை** 78
- இ. குகநாதன்

**ஆரையூர் அருளும் நாடகத் துறையும்** 81
- சிவப்பிரியா வில்வரத்னம்

**ஆரையூர் அருள் அவர்களின் வில்லடிப்பாட்டு - நூல் மதிப்பீடு** 82
- க. மோகனதாசன்

**பக்தி இலக்கியப் படைப்புகள் ஒரு விமர்சனப்பார்வை** 84
- பிரியதர்ஷனி ஜெதீஸ்வரன்

**'கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார்கள் இருக்கும் வரை அவர்களே கூத்தின் இரட்சகர்கள்'** 90
- முத்ததம்பி அருளம்பலம்
நேர்காணல்: பிரசாத் சொக்கலிங்கம்

**அருளின் கவிதைகள்! தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளுள் சிலவற்றின் மீதான பார்வை** 96
- த. கி. ஷர்மிதன்

**ஆரையூர் அருள்** 99
- மு. சிவகுமாரன்

**ஆரையூர் அருளும் சிறுகதையும்** 100
- வ. துஷாந்தன்

**ஆரையூர் அருளின் கட்டுரைகள் நோக்கும் போக்கும்** 102
- மா. உலககேஸ்பரம்

**ஆரையூர் அருளம்பலத்தின் பன்முக ஆளுமையும் சிறப்புகளும்** 104
- சு. சந்திரகுமார்

**ஈழத்தவரின் சமகால நூல் வெளியீடுகள்: ஒரு நூலியல் சார்ந்த பார்வை** 106
- என். செல்வராஜா

**பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நூற்றாண்டு விழாவும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் பொன் விழாவும்** 108
- உ. துரைராஜா

**பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் என்னும் பேராளுமை** 111
- நா. சுப்பிரமணியன்

**ஆய்வு முயற்சிகளில் ஊவாவின் மைந்தன் தெளிவத்தை ஜோசப்** 117
- அ. லெட்சுமணன்

**ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில் பெண்நிலைவாதம்** 124
- சி. ரமேஷ்

**பொருள்கோடலியல்... டில்தே மற்றும் ஹடமர் சிந்தனைகள்** 130
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

**வவுனியா மாவட்டத்தில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள்** 134
- நெடுங்கேணி சானுஜன்

**திருகோணமலை** 138
- த. ஜீவராஜ்

**இனப்படுகொலையின் அரசியல் தத்துவார்த்தக் கேள்விகள்** 141
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**உரையாசிரியர்களும் பிற திறனாய்வாளர்களும்** 148
- சு. வேணுகோபால்

**ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் ஈழமும் இந்தியாவும் கடலால் பிரிக்கப்படாத காலம் ஒன்று இருந்திருக்கிறது** 156
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**மகாகவி பாரதியும் மகான் குள்ளச்சாமியும்** 159
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து...** 163
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**வாழ்வுரிமை - 13** 168
- மா. சித்திவினாயகம்

**பச்சை மை!** 173
- உஷாதீபன்

**பாலைவனம் பற்றிய குறிப்புகள்** 180
- ஜிஃப்ரி ஹாசன்

**கடவுள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு, காத்திருக்கிறார்** 184
- லியோ ரோல்ஸ்ரோய்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்




**வன்முறைக் கலவரங்களின் நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது பிரித்தானியா. அவை பெரும்பாலும் இனரீதியாகத் தூண்டப்பட்டவையே. உலகின் மிகச் சக்திவாய்ந்த பேரரசாகவும் காலனி ஆதிக்க சக்தியாகவும் இருந்த பிரித்தானியா, 1945–இற்குப் பின்னான காலனி நீக்கம், வெளிநாட்டவர்களின் குடியேற்றம், பாரம்பரிய தொழில்துறையின் மூடல் உட்பட்ட பாரிய பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் பேரரசு நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தது. பிரித்தானிய சமூகம் வர்க்கரீதியான பாரிய பாகுபாடுகளையும் பிளவுகளையும் கொண்டதாகும்.**

பிரித்தானியாவின் பாரிய வன்முறைகள் வெடித்துப் பரவி ஓரளவு ஓய்ந்துள்ளன. பல நகரங்களில் நடத்தப்பட்ட வன்முறைகளின் போது முஸ்லீம்கள் இலக்குவைக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர். தீவிர வலதுசாரிக் குழுக்கள் இதனை நடத்தியுள்ளன. ஐந்து குழந்தைகள் படுகாயமடைந்துள்ளனர். குழந்தைகளைக் காப்பாற்ற முயன்ற இரண்டு வளர்ந்தவர்களும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்திற்குரிய பின்னணி அறியப்படவில்லை. படுகொலைகளை மேற்கொண்ட இளைஞன் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளான்.

### பின்னணி:

சிறுமிகள் மீதான கொலைகளை மேற்கொண்ட நபர் ஒரு முஸ்லீம் என்பதான தவறான தகவல் சமூக ஊடகங்கள் வாயிலாகப் பரப்பப்பட்டுள்ளன. கத்திக்குத்துச் சம்பவத்திற்கு அடுத்த நாள் இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போதே வன்முறைகள் வெடித்தன. பள்ளிவாசல் ஒன்றின் முன் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது காவல்துறையினர் மீதும் அவர்கள் காயங்களுக்கு உள்ளாகும் வகையிற் தாக்குதல்கள் வன்முறையாளர்களால் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'English Defence League - EDL' அமைப்பின் ஆதரவாளர்கள் என்று காவல்துறை தெரிவித்திருந்தது. தொடர்ந்த வன்முறைகளை அடுத்து ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காவற்துறையினராற் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வன்முறைகளுக்குரிய பின்னணி என்ன? ஜூலை 29-ம் திகதி லிவர்பூல் (Liverpool)இற்கு வடக்கில் அமைந்துள்ள துறைமுக நகரான சவுத்போட் (Southport) இல் 'யோகா நடன' வகுப்பில் கலந்து கொண்டிருந்த மூன்று சிறுமிகள் பதினேழு வயது இளைஞன் ஒருவனால் கத்திக்குத்துக்கு இலக்காகி கொல்லப்பட்டனர். அவர்களின் வயது முறையே 6, 7, 9 ஆகும். அடுத்த நாள் இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு எதிரான கண்டன ஒன்றுகூடலினைத் தொடர்ந்து தீவிர வலதுசாரி ஆர்ப்பாட்டக்காரர்கள் காவல்துறை மீதும், உள்ளூர்க் கடைகள் மற்றும் ஒரு பள்ளிவாசல் மீதும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். மூன்று வாரங்களுக்கு மேல் நீடித்ததோடு




பிரித்தானியாவின் பல நகரங்களுக்குப் பரவியதுமான வன்முறைகளும் கலவரங்களும் இப்படித்தான் தொடங்கின.

### உடனடிக் காரணமும் உள்ளுறைந்த வெறுப்பும்:

இதற்கான உடனடிக் காரணம் சிறுமிகளைக் கொலைசெய்த இளைஞன் முஸ்லீம் பின்னணியைக் கொண்ட நபர் என்ற தவறான தகவல்கள் திட்டமிட்டுப் பரப்பப்பட்டதாகும். ஆனால், வன்முறைகள் வெடிப்பதற்கான உடனடித் தூண்டுதல் இக் கத்திக்குத்துப் படுகொலைச் சம்பவம் என்றபோதும், உள்ளுறையும் காரணிகள் வேறு. அவை முஸ்லீம் வெறுப்பு. ஒட்டுமொத்தமான வெளிநாட்டவர் மீதான அதிருப்தி. அதாவது, பிரித்தானியாவில் அதிகரித்துவரும் அகதிகள், குடியேற்றம்




சார்ந்த தீவிர வலதுசாரிக் குழுக்களின் வெறுப்பும் எதிர்ப்புமாகும். பிரித்தானிய அரசியலிலும் சமூக அமைப்பிலும் உள்ளுறைந்திருக்கும் அல்லது வளர்த்தெடுக்கப்பட்டிருக்கும் இனவாத-நிறவாதப் போக்கின் வெளிப்பாடு என்றும் கூறத்தக்கது.

பல ஆண்டுகளாக வெளிநாட்டவர் தொடர்பான பகைமை மனநிலை ஊடகச் சித்தரிப்புகளில் மேலோங்கியிருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. ரொம்மி ரொபின்சன் (Tommy Robinsen) போன்ற தீவிர வலதுசாரிப் பிரச்சாரகர்களால் சமூக ஊடகங்களில் வன்முறைகள் தூண்டப்பட்டுள்ளன.

## தீவிர வலதுசாரிகள் – ‘English Defence League – EDL’:

‘English Defence League - EDL’ என்பது பிரித்தானியாவில் இஸ்லாமிய செல்வாக்கிற்கு எதிராக செயற்படும் ஒரு தீவிர வலதுசாரி அமைப்பு. இது 2009-ல் ரொம்மி ரொபின்சனினால் நிறுவப்பட்டது. 2021-ம் ஆண்டு வரை டிம் ஆப்லிட் (Tim Ablitt) இவ்வமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருந்தார். இந்த அமைப்பு பல ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கின்றது. பல தடவைகள் இதன் ஆர்ப்பாட்டங்கள் எதிர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் மோதலில் முடிவடைந்திருக்கின்றன. பிரித்தானியாவின் சுதந்திரக் கட்சி (UKIP) உட்பட்ட பல அரசியல் கட்சிகளுடன் இணைந்தும் ஆதரவு வழங்கியும் செயற்பட்டுள்ளது இந்த அமைப்பு. இதன் பல உறுப்பினர்கள் முன்பு வன்முறைகளில் ஈடுபட்டுத் தண்டனை பெற்றவர்களாவர். இன்னும் பலர் பிரித்தானியாவின் காடையர் வட்டங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற தகவலும் அறியக்கிடைக்கின்றது.

இந்த வட்டங்களில் இருந்து நன்கு அறியப்பட்ட நபர் EDL-இன் முன்னாள் தலைவர் ரொமி ரொபின்சன். முன்னர் இவருடைய முஸ்லீம் மற்றும் வெளிநாட்டவர் வெறுப்புக் கருத்துப் பதிவுகளுக்காக X- தளத்திலிருந்து (முன்னாள் Twitter) தடைசெய்யப்பட்டிருந்தார். எலோன் மஸ்க் (Elon Musk) X-தளத்தை வாங்கிய பிறகு தனது X-தள பயன்பாட்டுக் கணக்கை திரும்பப் பெற்றுள்ளார் ரொபின்சன். தற்போதைய வன்முறைகளின் போது அவர் X-தளத்தில் தவறான தகவல்களைப் பரப்பியுள்ளார். அதேவேளை, பிரித்தானிய குடியேற்ற அரசியற் கொள்கையை விமர்சிக்கின்ற கருத்துக்களைப் பரப்ப சவுத்போட் கத்திக்குத்துத் தாக்குதலை எலோன் மஸ்க் பயன்படுத்திவந்துள்ளார். டொனால்ட் டிரம்ப் ஆதரவாளரான மஸ்க், சமீபத்தில் செயற்கை நுண்ணறிவின் மூலம் உருவாக்கப்பட்ட கமலா ஹாரிஸ் தொடர்பான காணொளியை X-தளத்திற் பகிர்ந்ததற்காக விமர்சனத்திற்கு ஆளானார்.

## சதித்திட்டச் செய்தி பரப்பல்:

‘சனல் 3’ என்ற இணையத்தளம் போலிச் செய்திகளைப் பரப்ப உதவியதாக தி கார்டியன் (The Guardian) குறிப்பிட்

டுள்ளது. அந்த இணையதளம் மனித உருவாக்கச் செய்திக ளுடன் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தினால் உரு வாக்கப்பட்ட தவறான தகவல்களைப் பரப்பியுள்ளது. செயற்கை நுண்ணறிவின் மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக் கம், தகவல் மற்றும் படங்கள் ஆகியவை கடந்த இரண்டு ஆண்டுகளில் வளர்ந்து - தவறான தகவல்களைப் பரப்புவ தற்கான ஒரு கருவியாக - பாரம்பரிய வழிமுறைக்கு நிகராகப் பிரபலமடைந்துள்ளதாக டியூக் பல்கலைக்கழகத்தின் (Duke University) சமீபத்திய ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

## தீவிர வலதுசாரிக் கட்சி 'Reform UK':

பிரித்தானியாவின் இன்னுமொரு தீவிர வலதுசாரிக் கட்சி 'Reform UK' ஆகும். இதனை வலதுசாரிக் கவர்ச்சிவாதக் அரசி யல் கட்சி என்று வரையறுப்பது கூடுதற் பொருத்தம். நைஜல் ஃபரேஜ் (Nigel Farage) அக்கட்சியின் தலைவர்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியாவின் வெளியேற் றத்தைப் பிரச்சாரப்படுத்தும் நோக்கோடு 'Brexit party' எனும் பெயரில் 2018-ல் உருவாக்கப்பட்டது. ஒப்பந்தம் இல் லாத வெளியேற்றத்தை (No-deal Brexit) இது ஆதரித்தது.

2019 ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலில் அதிக இடங்க ளைப் பெற்றது, ஆனால், 2019 பொதுத் தேர்தலில் எந்த இடங்களையும் வெல்லவில்லை. ஜனவரி 2020-ல் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறியது. ஒரு வரு டம் கழித்து, ஜனவரி 2021-ல், கட்சி 'Reform UK' என மறுபெய ரிடப்பட்டது.

தற்போது மேலவையில் 5 உறுப்பினர்களையும் கீழவையில் ஓர் உறுப்பினரையும் கொண்டுள்ளது இக்கட்சி. 2024 பொதுத் தேர்தலை அடுத்து 14.3 சதவீத வாக்குகளுடன் மூன்றாவது பெரிய கட்சி எனும் நிலையை அடைந்துள்ளது. இது மிக அண்மையில் உருவாக்கப்பட்ட கட்சி என்ற நிலையில் இதன் வளர்ச்சி அச்சுறுத்தலுக்குரியதோடு, பிரித்தானியா உட்பட்ட ஐரோப்பிய நாடுகள் தீவிர வலதுசாரிகளின் எழுச்சிக்கான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக உள்ளது.

## நாட்டின் பல நகரங்களில் வன்முறை:

வன்முறைகள் நாட்டின் பல நகரங்களுக்குப் பரவின. கடை கள், வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டதோடு, எரியூட்ட வும் பட்டன. கடைகளிலிருந்து பொருட்கள் சூறையாடப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பள்ளிவாசல்கள் மற்றும் புகலிடம் கோரியோர்(அகதிகள்) தங்கவைக்கப்பட்டிருந்த விடுதிகளும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. குறிப்பிட்ட ஒரு தனியமைப்பு இவ்வன்முறைகளுக்குப் பின்னால் இல்லை என்கிறார் தீவிரவாத ஆய்வுமையத்தைச் (ஒஸ்லோ) சேர்ந்த Graham Machin. உள்ளூர் இளைஞர்கள், காடையர், தீவிர வலதுசாரிகள், நாசிச சக்திகள் உட்பட்ட பல்வேறு தரப்புக ளைக் கொண்ட வலையமைப்பு இவற்றில் ஈடுபட்டுள்ளதாக அவர் கருதுகின்றார். வலிமைமிக்க வலதுசாரிப் பிரச்சாரகர் கள் சமூக ஊடகங்கள் மூலம் முஸ்லீம் எதிர்ப்புக் கருத்துக ளைப் பரப்பி வன்முறைகளைத் தூண்டியுள்ளனர். தவறான தகவல் பரப்பல்களில் அந்நிய சக்திகள் தொடர்புபட்டிருக்க லாம் என்ற சந்தேகத்தினை பிரித்தானிய அரசாங்கம் வெளிட் டிருந்தது.

## வெளிநாட்டவர்களுக்கு எதிரான மனோபாவம்:

அரசியல்வாதிகளும் ஊடகங்களும் பல ஆண்டுகளாக வெளிநாட்டவர்களுக்கு எதிரான மனோபாவத்தை பொதுப் புத்தியில் வளர்ப்பதில் பங்களித்துவந்துள்ளன. நாட்டில் வெளிநாட்டவர்கள் அதிகரித்து வருகின்றனர் என்பதை நாளாந்தச் செய்தியாக எழுதி மக்கள் மனங்களில் அதனைப் பதியவைத்ததில் சில ஊடகங்களின் பங்கு அதிகம் என்றும் Graham Machin விபரிக்கின்றார். தீவிர வலதுசாரிக் குழுக் கள் வெளிநாட்டவர்களின் குடியேற்றம், பன்மைத்துவம், முஸ் லீம்கள் ஆகியவை ஆங்கி லேயே விழுமியங்கள், வாழ்வு முறை, கலாச்சாரம், பாதுகாப்புப் போன்றவற்றுக்கு அச்சுறுத் தலானவை என்று கருதுகின்றன எனத் தீவிரவாதம் தொடர் பான நோர்வேஜிய ஆய்வாளர் Cathrine Thorleifsen தெரி வித்தார்.

பல்லின மக்கட்தொகை அதிகரிப்புக் காரணமாக வேகமான மாற்றத்திற்கு உட்பட்டுவரும் சமூகமாகப் பிரித்தானியா உள் ளது. இந்த குழுக்கள் மக்கட்தொகை மாற்றீடு குறித்த சதிக்க ருத்துகளையும் ஊக்குவிக்கின்றன. பிரித்தானியாவை இன் றைய கலவர நிலைக்குட்தள்ளியதில் பல காரணிகளின் பங் கிருக்கின்றது. பல்வேறு தீவிர வலதுசாரிச் சக்திகள், கட்சி கள், அமைப்புகள், ஊடகங்கள் மக்கட் தொகை மாற்றத்து டன் தொடர்புபட்ட அசமத்துவம், பாதுகாப்பின்மை தொடர் பான அதிருப்திகளை வெளிப்படுத்திவந்துள்ளன. வாழ்க்கை நிலை, பாதுகாப்பு ஆகியவை தொடர்பான உண்மையான கவலைகள், பன்மைத்துவ சமூகத்தினை அச்சுறுத்தற் சித்திர மாக உருவகிக்கின்ற மடைமாற்றப் பாதைக்கு இட்டுச்செல் லப்பட்டுள்ளது. அத்தகு விளைவாகவும் இன்றைய நிலை யைப் புரிந்துகொள்ளலாம்.

பிரித்தானியாவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து அறிக்கையிடும் 'Tell Mama', அமைப்பின் தகவல்களின்படி, வன்முறை இடம் பெற்ற காலப்பகுதியில் பாலியல் வன்புணர்வு, கொலை உள் ளிட்ட அச்சுறுத்தல்களின் எண்ணிக்கை ஐந்து மடங்கு அதிக ரித்துள்ளது. தீவிர வலதுசாரிகளின் அடாவடித்தனங்களின் அதிகரிப்பே இவற்றுக்கான காரணம் என அந்த அமைப்பின் தலைவர் இமான் அட்டா தெரிவித்துள்ளார். அகதிகள், புலம் பெயர்ந்தோர், முஸ்லிம்கள் மற்றும் பிற சிறுபான்மை சமூகங் களை வன்முறை மற்றும் குற்றங்களுடன் இணைப்பது மற்றும் அவர்களைக் குற்றங்களுக்கான பலிகடாக்களாக்கிக் களங் கம் விளைவிக்கும் சித்திரங்களை உருவாக்குவதைத் தவிர்ப் பதற்கு, ஊடகங்கள், அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூ கம் ஆகியவற்றின் கூட்டு முயற்சி அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார நெருக்கடியும் வெளிநாட்டவர் அதிகரிப்பும்:

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானிய வெளியேற் றத்தை (Brexit) ஆதரித்த முதன்மை வாதங்களில் ஒன்று

வெளிநாட்டவர் அதிகரிப்பு ஆகும். அதாவது வேலை வாய்ப்பு விசா பெற்று, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளிலிருந்து தொழில் குடியேற்றங்கள் அதிகரித்துவந்துள்ளன. இது பிரித்தானியர்கள் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்தமைக்கான முதன்மைக் காரணமாக முன்வைக்கப்பட்டது ஆகும். குடியேற்ற அரசியற் கொள்கை தொடர்பான மாற்றங்கள் பிரித்தானிய அரசியலில் நீண்ட காலமாக முக்கியமான பேசுபொருளாக இருந்து வந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரச் சரிவு, ஐரோப்பிய ஒன்றிய வெளியேற்ற விளைவுகள், மருத்துவ, கல்வி, உட்கட்டுமானத் துறை மற்றும் வீட்டுச் சந்தை (Housing market) போன்றவற்றில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான காரணமாக வெளிநாட்டவர்களின் குடியேற்றம் பார்க்கப்படும் நிலை அதிகரித்துள்ளது. பொதுநலத் திட்டங்களில் வெட்டு, விலையேற்றம் போன்றவற்றல் பாதிக்கப்படுகின்ற பிரித்தானிய மக்கள், பில்லியன் கணக்கான நிதியினை அகதிகள் விவகாரங்களுக்கு அரசாங்கம் பயன்படுத்துவதையும் செய்தியாகப் படிக்கின்றனர். இத்தகைய நிலைமைகள் அதிருப்திக்கு வழிகோலுகின்றன என்ற பார்வையும் சிலமட்டங்களில் வெளிப்படுகின்றன.

## கறுப்பினத்தவர்களும் இலக்கு:

வன்முறைகள் முதலில் பள்ளிவாசல்கள், அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த விடுதிகள் மீது தொடங்கப்பட்டு, பின்னர் முஸ்லீம்கள், காவல்துறையினர் மீது விரிவுபடுத்தப்பட்டது. அதற்கும் அடுத்தாற்போல் பிரித்தானியக் கறுப்பின மக்கள் மீதும் வன்முறைத் தாக்குதல்கள் திரும்பின. மன்செஸ்ரரில் (Manchester) கறுப்பினத்தவர் உட்பட்ட வெளிநாட்டவர்கள் கடுமையாக வெள்ளையினத்தவர்களாற் தாக்கப்பட்ட காணொளி ஒன்று பரவியது. தனியாக வெளியிற் செல்வதற்குக் கறுப்பினத்தவர்கள் அச்சப்படுகின்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

1960-களில் நடந்தேறிய கலவரங்கள் தொடர்பான இருண்ட கால நினைவுகளைக் கறுப்பின மக்கள் மத்தியில் தற்போதைய வன்முறை அநுபவங்கள் தட்டியெழுப்பியுள்ளது. இவை குறித்த உரையாடல்கள் கறுப்பின மக்கள் மத்தியில் இடம் பெறத்தொடங்கியுள்ளதாக வன்முறைகளுக்கு எதிரான அமைப்பின் (Sistah Space') இணைப்பாளரான Ngozi Fulani தெரிவித்துள்ளார்.

கறுப்பு மற்றும் ஆசிய சமூகங்கள், குறிப்பாக முஸ்லிம்கள், நாடு முழுவதும் உள்ள வெள்ளை இன ஆங்கிலேய தீவிரவலதுசாரிக் குழுக்களின் இலக்குகளாக ஆகியுள்ளதாக சியாரன் தாப்பர் (Ciaran Thapar) The Guardian-இல் ஒகஸ்ட் 15-இல் ஒரு கட்டுரையில் எழுதியுள்ளார். சியாரன் தாப்பர் 'இளைஞர் நன்மதிப்பு நிதியத்தில் பொது விவகாரங்கள் மற்றும் தகவல் தொடர்பு இயக்குநர் (Director of public affairs and communications at the Youth Endowment Fund) 'Cut Short' ' நூலின் ஆசிரியருமாவார். கார்களை நிறுத்தி கூரிய ஆயுதங்களைக் கொண்டு அச்சுறுத்துவது, எச்சில் துப்புவது, வசைச் சொற்களைப் பிரயோகிப்பது போன்ற செயல்களில் அக்குழுக்கள் ஈடுபட்டதாக அவர் குறிப்பிடுகின்றார்.

## பிரித்தானியாவின் வன்முறைக் கலவரங்களின் நீண்ட வரலாறு:

வன்முறைக் கலவரங்களின் நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது பிரித்தானியா. அவை பெரும்பாலும் இன ரீதியாகத் தூண்டப்பட்டவையே. உலகின் மிகச் சக்திவாய்ந்த பேரரசாகவும் காலனி ஆதிக்க சக்தியாகவும் இருந்த பிரித்தானியா, 1945-ற்குப் பின்னான காலனி நீக்கம், வெளிநாட்டவர்களின் குடியேற்றம், பாரம்பரிய தொழில்துறையின் மூடல் உட்பட்ட பாரிய பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் பேரரசு நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தது.

பிரித்தானிய சமூகம் வர்க்கரீதியான பாரிய பாகுபாடுகளையும் பிளவுகளையும் கொண்டதாகும்.

1950-கள் மற்றும் 60-களில் குடியேறியவர்களுக்கும் வெள்ளையினப் பிரித்தானியர்களுக்கும் இடையே பல மோதல்கள் ஏற்பட்டன. அக்காலம் பல இனக் கலவரங்களின் காட்சியாகவும் சாட்சியாகவும் இருந்திருக்கின்றது. 1970-களின் பெரும்பகுதியில் நாடு கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தது. அன்றைய பிரதமர் மார்கரெட் தாட்சர் வேலையில்லாதோர் நலக்கொடுப்பனவு மற்றும் பல சமூகநலத் திட்டங்களில் வெட்டுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொருளாதாரச் சிக்கலை நிவர்த்தி செய்யலாம் என்று நம்பினார். அது 1980-களில் பெரும் எதிர்ப்புகளுக்கு வழிவகுத்தது. சமூகப் படிக்கட்டின் அடிமட்டத்தில் இருந்தவர்கள் இதனாற் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

1980-களின் கலவரங்கள் சமூக நலத் திட்டங்களில் கொண்டு வரப்பட்ட கடுமையான வெட்டுக்களுக்கான எதிர்வினையாக உருவானவை. ஆனால், 80-களில் இனவாதக் கலவரங்களும் நடந்தன. பாதிக்கப்பட்ட சமூகங்களாகச் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த குழுக்கள் உள்ளன. 1990-களிலும் பல கலவரங்கள் வெடித்தன. 1999-ல், நவ-நாசியான டேவிட் கோப்லேண்ட் (David Copeland) பிரிக்ஸ்டனில் மேற்கொண்ட குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 50 பேர் காயமடைந்தனர். 2011-லும் பெரும் வன்முறைகள் இடம்பெற்றிருந்தன.

வன்முறைகளுக்கு எதிரானதும் வெளிநாட்டவர் குடியேற்றத்திற்கு ஆதரவான பேரணிகளும் இடம்பெற்றுள்ளன. இன-நிறவாதங்களுக்கு எதிரான பதாகைகளுடன் ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்றுகூடிய பேரணிகள் நியூகாஸ்ரல், பிரிஸ்டல், லண்டன், ரோதர்ஹாம் ஆகிய நகரங்களில் இடம்பெற்றன. இன-நிறவாதத்திற்கு எதிரான அமைப்புகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், காவற்றுறையின் பாரிய கைது நடவடிக்கைகளை அடுத்து நிலைமைகளின் தீவிரம் தணிந்துள்ளது. ஆனால், அச்சுறுத்தலும் வன்முறைகளுக்கான பின்னணியாக உள்ளுறைந்துள்ள காரணிகளும் தணியவில்லை. அவை சமூக, அரசியல் மற்றும் மனநிலைகளின் மாற்றங்களும், மறுசீரமைப்புத் திட்டங்களின் மூலமுமே சாத்தியப்படக்கூடியவை.



rooban.s@thaiveedu.com

# கேர்ஸ்க் மீதான தாக்குதல்கள் ரஷ்யாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்துமா?

– ரதன்

ஜூலை முடிந்து ஓகஸ்ட் ஆரம்பமாவதற்குள் உலகில் பல மாற்றங்கள் நடந்துள்ளன. ஆனால் இவையெல்லாம் அதி வேகத்தில் நடைபெற்றுள்ளன. Alberto, Beryl, Chris, Debby, Ernesto இவையெல்லாம் இராணுவத் தளபதிகளின் பெயர்கள் அல்ல. அற்லான்டிக் கடல் பகுதியில் தோன்றிய சூறாவளிகளின் பெயர்கள். இவற்றின் பாதிப்பை அமெரிக்க கண்ட மக்கள் அனுபவித்திருக்கின்றார்கள். உலகெங்கும் 19-க்கும் மேற்பட்ட சூறாவளிகள் பல அழிவுகளை ஏற்படுத்தி யுள்ளன. கலிபோர்னியா மாநிலம், அல்பேட்டா மாகாணம், பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணங்களில் காட்டுத் தீ பல மைல்கள் பரப்பளவைக் கொண்ட காடுகளை அழித்துள்ளன. இப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் வீடுகள், வணிக வளா கங்கள் தீக்கு இரையாகியுள்ளன. அல்பேட்டாவின் பிரபல்ய



மான யஸ்பர் நகரத்தின் பெரும் பகுதி அழிந்துள்ளது. வன விலங்குகள் உட்பட உயிரினங்களும் இறந்துள்ளன. பாதிப் புக்கும் உள்ளாகியுள்ளன. சுற்றுச் சூழல் பாதிப்பு பற்றி மாநா டுகள் உலகெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஊடகங்களின் பதிவுகளுடன் அவை முடிவுக்கு வந்துவிடும். அழிவுகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இவை இயற்கை அழிவுகள்.

யூலை 31, 2024 ஹமாஸின் தலைவர் இஸ்மாயில் ஹனியா (Ismail uaniyeh) கொல்லப்பட்டார். ஈரானில் வைத்தே இவர் கொல்லப்பட்டுள்ளார். இக்கொலையின் பின்னால் அமெ ரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் உள்ளன. பாலஸ்தீனிய கொமாண்டோ தலைவர் Khalil al-Maqdah லெபனானில் வைத்து கொல்லப்பட்டுள்ளார். (senior officer of Al-Aqsa Martyrs Brigades). இதே பகுதியில் வைத்து மற்றுமொரு ஹமாஸ் தளபதியும் கொல்லப்பட்டுள்ளார். காசாப் பகுதியில் தொடர்ச்சியாக இஸ்ரேல் குண்டுகளை வீசி மக்களைக் கொன்றுவருகின்றது. பிறிக்ஸ் அமைப்பு பாலஸ்தீனத்தை தனது மாநாடுகளுக்கு அழைத்துள்ளது. பல நாடுகள் பாலஸ்தீனத்துக்காக குரல் கொடுக்கின்றன. ஆனால் இஸ்-ரேலிய பிரதமர் காசாவை தரைமட்டமாக்கும் வரை தொடர்ந்து குண்டுகளை வீசுவார் என்பது தெளிவாகத் தெரி கின்றது. இன்று அவரது தெரிவுகளே அமெரிக்காவின் விருப் பமாகவும், தெரிவாகவும் உள்ளது. காட்டுத் தீ போன்று காசா வில் குண்டுகள் தீயாக பரவுகின்றன.

பங்களாதேஸ்க்கு சொந்தமான தீவான சென் மாட்டினில் அமெரிக்கா தளம் அமைக்க விரும்பியது. சேக் ஹசீனா (Sheikh uasina Wazed) அனுமதி கொடுக்கவில்லை. விளைவு சேக் ஹசீனாக்கு பதிலாக மொஹமட் யுனிஸ் மாற் றப்பட்டுள்ளார். யுனிஸ் தற்காலிக பிரதம ஆலோசகர் என்ற பெயரிலேயே பதவியேற்றுள்ளார். ஹசீனாவுக்கு எதிரான போராட்டங்களின் பின்னால் அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் இருந்ததாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால் இது அமெ ரிக்காவிற்கு ஒன்றும் புதிதல்ல. வெனிசூலாவில் இடது சாரி யான ஜனாதிபதி Nicolas Maduro வெற்றி பெற்றமையை அமெரிக்கா உற்பட்ட மேற்கு நாடுகள் விரும்பவில்லை. அங்கு தேர்தல் முடிவுகளுக்கு எதிராக போராட்டங்கள் நடை பெறுகின்றன. இங்கிலாந்தில் முஸ்லீம்களுக்கு எதிரான வன் முறைகள் நடைபெற்றுள்ளன.

வெற்றி நிச்சயம் என உறுதியாக நம்பிக் கொண்டிருந்த டொனால்ட் ரம்பன் வெற்றிக்கு சவாலாக கமலா ஹரிஸ் களமி றங்கியுள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்கான முதலாவது விவா தத்தில் சிறப்பாக செயல்படாத பைடனை ஜனநாயகக் கட்சி யினர் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்ததன் மூலம் போட் டியிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக தற்போ தைய உதவி ஜனாதிபதி கமலா ஹரிசை ஜனநாயகக் கட்சியி னர் களமிறக்கியுள்ளனர். நேரமின்மை காரணமாக ஜனநாய கக் கட்சியில் கமலா ஹரிசுடன் எவரும் போட்டியிட முன்வர

வில்லை. இது குடியரசுக் கட்சி வேட்பாளரும் முன்னால் அமெரிக்க ஜனாதிபதியுமான டொனால்ட் ரம்ப்க்கு தலையிடியைக் கொடுத்துள்ளது. அவரது பிரச்சார அட்டைகள் உற்பட்ட ஒலி, ஒளி பதிவுகள் அனைத்தும் பைடனுக்கு எதிராக வேயிருந்தன. அதற்காக பல மில்லியன்களை செலவு செய்திருந்தார். பைடனின் வயதும், அவரது உடல் இயலாமையும் அவரது மகனுக்கு எதிரான கிறிமினல் வழக்குகளும், பைடனின் தடுமாற்றங்களும் ரம்ப்க்கு சாதகமாகவேயிருந்தன. ஆனால் புதிய வேட்பாளர் கமலா அப்படியல்ல. அவருக்கு எதிராக புதிய வியூகங்களை பிரயோகிக்க வேண்டும். அது மட்டுமல்ல ரம்ப்க்கு எதிராக பல குற்றவியல் வழக்குகள் உள்ளன. அவற்றுக்கும் இந்த தேர்தல் காலத்தில் ரம்ப் முகம் கொடுக்க வேண்டும். ரம்ப்பைப் பொறுத்தவரை இந்த தேர்தலில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற நிலையுள்ளது. தேர்தலில் தோல்வியுற்றால் ஜனநாயகக் கட்சியினர் ரம்ப்பை சிறைக்குள்ள தள்ளுவார்கள். அதற்கான சாத்தியங்கள் அதிகமாகவுள்ளன. தற்போதைய அபிப்பிராய வாக்குகள் கமலா ஹரிசுக்கு சார்பாக உள்ளன. ஆனால் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் நிலைமை மாறலாம். ரம்ப் அதற்காக என்னவும் செய்வார், எப்படியும் செய்வார். Robert F. Kennedy Jr. சுயேட்சையாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றார். இவர் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிட விரும்பினார். ஆனால் பைடனுக்கு அதிகளவு ஆதரவு இருந்தமையால் இவர் தேர்வாகவில்லை. இவர் பிரபல்ய கெனடி குடும்ப வாரிசாவார். ஒகஸ்ட் 23-ல் தான் போட்டியிடப் போவதில்லை எனவும், தனது ஆதரவை டொனால்ட் ரம்ப்க்கு அவர் வழங்கியுள்ளார். இது ரம்ப்க்கு ஒரு சாதாகமான விடயமாகும்.

இதற்கிடையில், ரம்பின் ஆதரவாளர் புட்டினை முடக்க பைடனின் அரசு கடும் முயற்சியில் இறங்கியுள்ளது. மத்திய கிழக்கில் சிரியாவில்  ரஷ்ய படைகள் நிலை கொண்டுள்ளன. பி.பி.சியின் செய்தியின் பிரகாரம் சுமார் 63,000 ரஷ்ய படைகள் 2018-ம் ஆண்டளவில் சிரியாவில் நிலைகொண்டிருந்தனர். ஆனால் உக்ரேன் - ரஷ்யா போரின் பின்னர் இந்த எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். ரஷ்ய தளங்களில் போர் விமானங்களும் நிலை கொண்டிருந்தன. சிரியவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்காவும் மற்றைய மேற்கு நாடுகளும் முயற்சித்தன. இது ரஷ்யாவின் முயற்சியால் தோல்வியில் முடிந்தது. ஆப்கான் போன்று ரஷ்யா சிரியாவில் முயற்சிக்கவில்லை. மாறாக சிரிய அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிவருகின்றது. மறுபுறத்தில் ஈரானுக்கும் ரஷ்யாவிற்குமிடையில் நெருக்கமான உறவுகள் உள்ளன. ஈரானிய ரோன்களை ரஷ்யா, உக்ரேனுக்கு எதிரான போரில் பாவித்துள்ளது. அது மட்டுமல்லாமல் வணிக ரீதியான உறவுகளும் உள்ளன. ரஷ்யா 2024-ம் ஆண்டு 1.47 பில்லியன் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. இவற்றுன் கோதுமை, பார்லி, சோளம், மரப்பொருட்கள், கப்பல் போக்குவரத்து உபகரணங்கள் போன்றவையடங்கும். அதே போல் ஈரானும் 579 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்கின்றது. இப்பெறுமதி ரோன்களை தவிர்த்த பெறுமதி. மரக்கறி, பழங்கள், இரசாயணப் பொருட்கள் போன்றன ஏற்றுமதிப் பொருட்களுக்குள் அடங்கும். இவற்றைவிட இராணுவ, போர் தளபாடங்களை ரஷ்யா ஈரானுக்கு ஏற்றுமதி செய்கின்றது. இவ்விரண்டு நாடுகளும் அணு ஆயுத உற்பத்தி விடயங்களில் இணைவாக செயற்படுகின்றன.

ஈரானும் ரஷ்யாவும் மிக நெருக்கமான உறவை கொண்டுள்ளன. இவர்களுக்கிடையிலான உறவு மத்திய கிழக்கில் தோன்றியுள்ள ஹமாசுக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் சங்கடங்களை ஏற்படுத்துகின்றன. இவ்வருடம் மே 19-ம் நாளன்று ஈரானிய ஜனாதிபதி Azerbaijan. Raisi ஹெலிகப்டர் விபத்தில் காலமானார். ஈரானிய வெளிவிவகார அமைச்சர் uossein Amirabdollahian இவ்விபத்தில் கொல்லப்பட்டார். இது விபத்தல்ல இஸ்ரேலின் தாக்குதல் என கருதப்படுகின்றது. இதற்கு சற்று முன்பாக டமாஸ்கஸ்ல் (சிரியா) உள்ள ஈரானிய தூதரம் மீது இஸ்ரேல் தாக்குதலை ஏப்ரல் முதலாம் திகதி மேற்கொண்டிருந்தது. இதில் இரு ஈரானிய இராணுவ தளபதிகள் உற்பட 16 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்துக்கு பதிலடியாக ஏப்ரல் 13 அன்று ஈரான் இஸ்ரேல் மீது ஏவுகணை மற்றும் ரோன் தாக்குதல்களை மேற்கொண்டது. இதில் இஸ்ரேலுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. பல ஏவுகணைகளும், ரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன என இஸ்ரேல் தரப்பும், மேற்கு நாடுகளின் ஊடகங்களும் தெரிவித்தன. ஆனால் இஸ்ரேலுக்கு பல பாதிப்புக்கள் அல்லது இராணுவ கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என சுயாதீன ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

ஈரான்-இஸ்ரேல் போர் மேகங்களை மேலும் இருட்டாக்க இஸ்ரேல் ஈரானில் வைத்து ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியா (Ismail uaniyeh)வைப் படுகொலை செய்தது, இது ஒரு வகையில் இஸ்ரேலின் பாலஸ்தீன அழிப்பின் ஓர் அங்கமாக பார்க்கப்பட்டாலும் மற்றொரு வகையில் ஈரானை இப்போருக்குள் இழுப்பதற்கான முயற்சியாகும். ஈரான் இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்டால், இஸ்ரேலின் பதிலடி என்பது மிகவும் உக்கிரமாக அமையும். ஏற்கனவே மத்திய கிழக்கை அண்டிய கடல் பிரதேசங்களில் அமெரிக்க போர்க் கப்பல்கள் நிலை கொண்டுள்ளன. எனவே ஈரானுக்கு இஸ்ரேல் மீது பதிலடி கொடுப்பது சிரமாக இருக்கும். ஈரானின் நண்பரான ரஷ்யா இப்போருக்குள் வலிந்து இழுக்கப்படும். ரஷ்யா, உக்ரோனுடான போரில் மும்முரமாக வுள்ளது.

ரஷ்யாவை முடக்க நேட்டோ நாடுகளும் அமெரிக்காவும் பல முனைகளில் முயற்சிக்கின்றன. ரஷ்யாவினை முடக்குவதன் மூலம். இன்று அமெரிக்காவினதும், மேற்கினதும் வணிக போட்டியாளரான சீனாவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என மேற்கு கருதுகின்றது. சீனா இன்று வணிகப் பொருட்கள் மட்டுமல்லாமல், இராணுவப் பொருட்களையும் விற்பனை செய்கின்றது. உலக ரோன் விற்பனையை தனது கட்டுப்பாட்டுக்குள் சீனா வைத்திருக்கின்றது. பல ஆபிரிக்க நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்கின்றது. சூடானை பிரித்தமைக்கான காரணங்களில் முக்கியமானது சூடானில் சீனாவின் தலையீடாகும்.

பிறிக்ஸ் அமைப்பின் வளர்ச்சியானது மேற்கு நாடுகளுக்கு பல வழிகளில் தலையிடியைக் கொடுக்கின்றது. உலக நாடுகள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கிக்கு மாற்றீடாக ஓர் அமைப்பை தேடுகின்றன. குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள். பிறிக்ஸ் அதற்கு மாற்றீடாக இல்லாவிட்டாலும் சீனா பல வழிகளில் மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவி செய்து வருகின்றது. இன்று சீனாவும், ரஷ்யாவும் ஓர் அணியாக செயல்படுகின்றன. ஐரோப்பாவுக்கும் மத்திய கிழக்குக்கும் பாலமமைக்கும் நாடான துருக்கி, ரஷ்யாவுடன்

வைத்திருக்கும் நெருக்கமான உறவுகள் நேட்டோவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் எரிச்சலையும் எச்சரிக்கையுணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

துருக்கி, ரஷ்யாவிடமிருந்து A-400 மிசைல் சிஸ்ரத்தை வாங்கியுள்ளது. Akkuyu துருக்கியின் முதலாவது Nuclear Power Plant. இதனை ரஷ்யாவே முற்று முழுதாக நிர்மாணிக்கின்றது. இது நேட்டோவின் விருப்பிற்கு அப்பாற்பட்டது. ரஷ்யா தனது அரசியல் நகர்வுகளை திட்டமிட்டு செயல்படுத்துகின்றது. மேற்கு நாடுகளுடன் அரசியல் கைதிகளை பரிமாற்றம் செய்துள்ளது. செசினியாவின் தலைவர்களுள் ஒருவரை ஜேர்மனியில் வைத்து கொன்றமைக்காக ஜேர்மன் சிறையில் உள்ள Vadim Krasikov உற்பட எட்டு பேரை மேற்கு நாடுகள் விடுதலை செய்தன. பதிலுக்கு ரஷ்யா 16 பேரை விடுதலை செய்தது. இது ஒகஸ்ட் முதலாம் நாள் நடைபெற்றது. இக்கைதி பரிமாற்றம் நடைபெற்று ஒரு வாரத்தில் உக்ரேன் தனது படைகளை ரஷ்யாவினுக்குள் அனுப்பியது.

K-141 Kursk ரஷ்யாவின் அணு சக்தியைக் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல். (Atomic-powered submarine Kursk) 154 மீற்றர் நீளம் கொண்ட இக்கப்பல் ஒகஸ்ட் 12, 2000-ம் ஆண்டு வட ஆக்றிக் சமுத்திரத்தில் உள்ள பறன்ட்ஸ் (Barents) கடலில் காணாமல் போனது. 1943 ஒகஸ்ட் 23-ல் கேர்ஸ்க் பிரதேசத்தை ரஷ்யா, ஜேர்மனியிடமிருந்து மீளக் கைப்பற்றியது. அதன் 50-வது ஆண்டு நிறைவாகவே நீர்மூழ்கிக் கப்பலுக்கு கேர்ஸ்க் என பெயர் சூட்டப்பட்டது. அதே ஒகஸ்ட் மாதமே கேர்ஸ்க் கப்பல் மூழ்கியது. அதே ஒகஸ்ட் மாதம் உக்ரேனின் நகர்வும் அமைந்துள்ளது. இது தற்செயலானது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் முதன் முதலாக ரஷ்ய தாக்குதலுக்குள்ளாகின்றது. உக்ரேனின் எல்லையில் அமைந்துள்ள கேர்ஸ்க் பிரதேசத்தினுள் (Kursk Oblast) உக்ரேன் தனது படைகளை அனுப்பி பல மைல்கள் சுற்றுப் பிரதே




சத்தை கைப்பற்றியுள்ளது. ரஷ்யா பிடித்த உக்ரேன் பகுதிகளை மீள கைப்பற்றாமல் ரஷ்யாவிற்குள் உக்ரேன் நகர்ந்தமை பல கேள்விகளை எழுப்பியுள்ளது. கேர்ஸ்க் பிரதேசத்தில் 95 வீதத்துக்கும் அதிகமான ரஷ்யர்கள் வாழ்கின்றனர். ரஷ்யாவின் மிகப் பெரிய மூன்று அணு சக்தி உற்பத்தியகங்களில் ஒன்று இப்பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. பெருந்தோட்ட விவசாயம், இரும்பு உற்பத்தி போன்றன இப்பிரதேசத்தை வளம்கொழிக்கச் செய்கின்றது. ரஷ்யாவின் மேற்கே இப்பிரதேசம் அமைந்துள்ளது.

Battle of Kursk - இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மன் படைகளுக்கும் ரஷ்ய படைகளுக்குமிடையில் முக்கிய போர் நடைபெற்ற பிரதேசங்களுள் ஒன்றாகும். இரண்டு லட்சம் ரஷ்யர்கள் (20 K) இப்பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். உக்ரேன் 94 கிராமங்களை கைப்பற்றியுள்ளதாக தெரிவித்துள்ளது. 18 மைல்கள் தூரம் வரை தாங்கள் கைப்பற்றியுள்ளதாக உக்ரேன் தெரிவித்துள்ளது. கேர்ஸ்க்கை அடுத்துள்ள Belgorod பிரதேசமும் அவசரகால நிலையை அறிவித்துள்ளது. Belgorod பகுதியை ஒட்டியுள்ள உக்ரேன் பிரதேசத்தில் சில பகுதிகளை ரஷ்ய படைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன. Sudzha நகரத்தை உக்ரேன் கைப்பற்றியுள்ளது. Sudzha நகரத்தினூடாக ரஷ்ய எண்ணெய் ஒஸ்ரியா, ஹங்கேரி, சுலோவாக்கியா போன்ற நாடுகளுக்கு குழாய்கள் மூலம் செல்கின்றது. இந்த நகரத்தைக் கைப்பற்றியதன் மூலம் ரஷ்ய எண்ணெய் விநியோகத்தை தடைப்படுத்தலாம்.

உக்ரேனின் கிழக்கே அமைந்துள்ள நியுயோர்க் நகரத்தை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. கேர்சிக்கை விட்டுவிட்டு ரஷ்யா உக்ரேனின் கிழக்கு பிரதேசங்களில் அதிக கவனம் செலுத்துகின்றது; ரஷ்யாவின் படை நகர்வுகளுக்கு உட்பட்ட பிரதேசமே நியுயோர்க். 1951-ல் நியுயோர்க் நகரப் பெயர் Nov-horodske என மாற்றப்பட்டது. அதற்கு நியுயோர்க் ஒரு முதலாளித்துவப் பெயர் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. பின்னர் மீண்டும் 2016-ல் நியுயோர்க் என மாற்றப்பட்டது. இத்தாக்குதல் நடைபெற்று ஒரு சில நாட்களுள் ஒகஸ்ட் 23-ல் உக்ரேன் படைகள் மற்றொரு தாக்குதலை மேற்கொண்டன. ரஷ்யாவையும் கிறீமியாவிற்கும் இடையில் பொது கப்பல் போக்குவரத்தை நடத்தும் மிகப் பெரிய துறைமுகங்களில் ஒன்று Kav-kaz. இது ரஷ்யாவில் அமைந்துள்ளது. இதனை திட்டமிட்டு உக்ரேன் தாக்கியுள்ளது. அங்கு தரித்து நின்ற எண்ணெய் தாங்கிப் கப்பல் ஒன்று தாக்குதலில் முற்றாக அழிந்துள்ளது. ரஷ்யாவையும் கிறீமியாவையும் இணைக்கும் Kerch Stra-வை கேர்ச் நீரிணை மீதான பாலம், முன்னர் உக்ரேன் தாக்குதலுக்குள்ளாகி சேதமடைந்த நிலையுள்ளது. தற்பொழுது ரஷ்யா கிறீமியாவிற்கு படகுகள் மூலமாகவே பொது போக்குவரத்தை செய்து வருகின்றது. இத்தாக்குதல் ரஷ்யாவிற்கும் கிறீமியாவிற்குவிற்குமிடையிலான போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். உக்ரேன் கடற்படை இப்பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினால் கிறீமியாவை தக்கவைக்க ரஷ்யா போராடவேண்டி வரும். இது உக்ரேனிமிருந்து பிடித்த பிரதேசங்களின் சில பகுதிகளை ரஷ்யா இழக்கவேண்டிவரும்.

Proletarsk oil storage இது ரஷ்யாவின் Rostov பிரதேசத்தில் உள்ள முக்கிய எண்ணெயக் களஞ்சியம், உக்ரேனின் ரோன் தாக்குதலுக்குள்ளாகி எரிந்து கொண்டிருக்கின்றது (ஒகஸ்ட் 18). Seym நதி மீது அமைந்துள்ள மூன்று முக்கிய பாலங்களை உக்ரேன் தகர்த்துள்ளது. இது ரஷ்ய படைகளை தனிமைப்படுத்தியுள்ளது. இந்த நதி ரஷ்யா, உக்ரேன் ஊடாக பாய்கின்றது. இந்த நதியின் கேர்ஸ்க் பகுதியில் ரஷ்ய படைகளின் நகர்வுகளை கட்டுப்படுத்த உக்ரேன் அமெரிக்கா வழங்கிய HIMARS Rocket Systems மற்றும் வெடிக்கக்கூடிய ரோன்கள் மூலம் இதனை உக்ரேன் சாத்தியப்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் Volgograd region அமைந்துள்ள Marinovka military airfield மீது தாக்குதலை நடத்தியுள்ளது. இப்பிரதேசம்

உக்ரேன் எல்லையிலிருந்து சற்று தள்ளியே உள்ளது. உக்ரேன் தனது ரஷ்ய எல்லையிலிருந்து 180 மைல்கள் தூர தாக்குதலை long-range drones மூலம் நடத்தியுள்ளது. Andrey Bocharov, Volgograd region கவர்னர் உக்ரேனின் ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் நியுயோர்க் ரைம்ஸ் உட்பட்ட மேற்கு ஊடகங்கள் இராணுவ தளத்துக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளனர். நாசாவின் செயற்கைகோள் எடுத்த படங்கள் வீடியோக்களை ஆதரமாக முன்வைத்துள்ளார்கள்.(The strikes damaged hangars and other facilities at the base, according to satellite imagery verified by military analysts and data from NASA). எது எப்படியிருப்பினும் உக்ரேன் கேர்சிக் பிரதேசத்துடன் நின்றுவிடாது ரஷ்யாவிற்குள் தனது படை நகர்வுகளை தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதற்கு இந்த விமானத்தளத் தாக்குதல் உதாரணமாகும். உக்ரேன் உளவுப் பிரிவான WBU இத்தாக்குதல் பற்றி கருத்து தெரிவித்த போது ‘Glide’ குண்டுகளை பாவித்து ரஷ்யா, உக்ரேனில் மக்கள் வாழும் பகுதிகளில் கட்டடங்களை அழித்துள்ளது. எனவே நாங்கள் அவர்களது விமானப் படை களஞ்சியங்கள் மீதே தாக்குதல்கள் நடத்துகின்றோம். அதன் மூலம் அவர்களது விமான மற்றும் ரோன் தாக்குதல்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் எனக் கூறியுள்ளது.

கடந்த சில நாட்களில் ரஷ்யா, உக்ரேனின் கிழக்குப் பிரதேசத்தில் முக்கிய நகரங்களை கைப்பற்றி வருகின்றது. Pokrovsk - உக்ரேன் இராணுவத்தினருக்கு மிக முக்கியமான நகரம். இதனை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் அறுபதினாயிரம் உக்ரேனியர்கள் கடும் ஆபத்தில் உள்ளதாக மேற்கு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ரஷ்யா எந்த நகரத்தை கைப்பற்றினாலும் அங்கு வாழும் மக்கள் ஆபத்தான நிலையில் உள்ளதாக மேற்கு ஊடகங்கள் தெரிவிப்பது வழமையாகவுள்ளது. Toretsk - உக்ரேனின் கிழக்கே அமைந்துள்ள நகரம். இது ரஷ்ய சாம்ராஜ்யத்தில் (1721-1917) 1806-ல் உருவாக்கப்பட்ட நகரம். டொன்பஸ் பிரதேசத்தின் முக்கிய பொருளாதார மையம். இதனையும் ரஷ்யா கைப்பற்றியுள்ளது. Pokrovsk, Toretsk, Niu-York ஆகிய நகரங்களின் வீழ்ச்சியானது, உக்ரேனுக்கு கிழக்குப் பகுதியில் மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அதே சமயம் கடந்த மே மாதத்திலிருந்து ரஷ்யா உக்ரேனின் தலைநகர் KyivI குறிவைத்து தாக்கிவருகின்றது.

Roman Kostenko – (the secretary of the defense and intelligence committee in Ukraine’s Parliament) பின்னவருமாறு கிழக்கு உக்ரேன் நகரங்களை கைப்பற்றியமை குறித்து This is a strategic direction for them, and we now see that even though they realize they have no reserves to recapture Kursk, they are still focusing on the territory of Donetsk (உக்ரேன் ஊடகவியலாளர்களுக்கு கூறினார். கேர்ஸ்க்கை மீள கைப்பற்ற அவர்களிடம் போதிய படைகள் அங்கு இல்லாத போதும், கிழக்கு உக்ரேனில் அவர்கள் அதிக கவனம் செலுத்துவது அவர்களது மிக முக்கிய போர் மூலபாய தந்திரங்களுள் ஒன்று) தற்சமயம் கேர்ஸ்க் பிரதேசத்தை மீள கைப்பற்ற ரஷ்யா முனையவில்லை, ஆர்வமும் காட்டவில்லை. ஆனாலும் ஆங்காங்கே ரஷ்ய படைகள் உக்ரேனுக்கு எதிராக தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

கேர்ஸ்க் பிரதேசத்தை உக்ரேன் கைப்பற்றியமைக்கான பிரதான காரணம் ஒரு buffer zone மண்டலத்தை உருவாக்குவதே என உக்ரேன் தெரிவித்துள்ளது. புட்டின் ரஷ்ய பிரதேசங்களிலிருந்து உக்ரேன் வெளியேறிய பின்னரே பேச்சுவார்த்தை சாத்தியம் எனக் கூறியுள்ளார். உக்ரேனிய கொமாண்டர் ஒருவரின் கருத்து மிகத் தெளிவாக உக்ரேனின் யுக்தியை வெளிப்படுத்துகின்றது. ‘We want to bring the war to their territory’ போரை அவர்களது பிரதேசத்துக்குள் கொண்டுவர விரும்புகின்றோம் என்றார். இது வரை காலமும் போர் உக்ரேனின் நாட்டினுள்ளேயே நடைபெற்றது. இப்பொழுது அது ரஷ்யாவிற்குள் நகர்ந்துள்ளது. கேர்ஸ்க் பிரதேசத்தில் American GBU-39 bombs-ஐ தொடர்ச்சியாக உக்ரேன் ரஷ்ய படைகள் மீது வீசி வருகின்றது. இங்கு தங்கியிருந்த ரஷ்ய படை வீரர்கள் பலர் குண்டு தாக்குதலுக்குள்ளாகி இறந்துள்ளனர். கேர்ஸ்க் உடன் நின்று விடாது Voronezh, Savasleyka, Borisoglebsk ஆகிய பிரதேசங்களையும் உக்ரேனிய படைகள் தாக்கியுள்ளன. ரஷ்ய விமான தளங்கள், களஞ்சியங்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்கள் ரஷ்யாவிற்கு பாதிப்பையே ஏற்படுத்தும்.

அதே சமயம் உக்ரேன், அமெரிக்க தயாரிப்பான ATACMS ரொக்கட்டுகளை ரஷ்யாவினுள் பாவிப்பதற்கு அமெரிக்காவிடம் அனுமதி கேட்டுள்ளது. இதுவரை அமெரிக்கா, ஜேர்மனி, கனடா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் ரஷ்யாவினுள் தங்களது இராணுவ உபகரணங்கள், மற்றும் போர்க் கருவிகளை உக்ரேன் பாவிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளன. சில விதிவிலக்குகள் உள்ளன.

முதலில் நேட்டோ ஆயுதங்களை உக்ரேன் பாவித்தது. பின்னர் நேட்டோ படைகள் உக்ரேனில் களமமைத்து உக்ரேன் படைகளை வழிநடத்தினார்கள், பயிற்சிகள் வழங்கினார்கள், F-16 போர் விமானங்கள் பாவிக்கப்பட்டன, இப்பொழுது ரஷ்யாவினுள் நேட்டோ நாடுகளின் போர்க் கருவிகள் உக்ரேனால் பாவிக்கப்படுகின்றன. நேட்டோ நாடுகனின் போர் வீரர்களும் உக்ரேன் படைகளுடன் களமிறங்கியுள்ளனர். ரஷ்யா தொடர்ச்சியாக நேட்டோ மீது முன்வைக்கும் குற்றச்சாட்டை இது உறுதிப்படுத்துகின்றது. முன்னாள் அமெரிக்க இராணுவத் தளபதி Gen. George Patton தனது படைவீரர்களிடம் கூறுவார் ‘L’audace, l’audace, toujours l’audace,’ audacity, audacity, always audacity against an enemy in the field. துணிச்சல், துணிச்சல் எதிரியுடன் துணிச்சலாக போரிடவேண்டும். இன்று ரஷ்ய படைகளுக்கு இது அவசியமான கூற்று.

பெலரசின் ஜனாதிபதி Aleksandr Lukashenko உக்ரேனின் ரஷ்யா மீதான தாக்குதல்கள் ரஷ்யாவை அணு ஆயுத தாக்குதலுக்கு தூண்டும் (Ukraine pushing Russia to use nuclear weapons) எனத் தெரிவித்துள்ளார். ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் Maria Zakharova ‘that such strikes against those targets ‘could result in a large-scale technogenic catastrophe in Europe’, எனத் தெரிவித்துள்ளார். உக்ரேனின் - ரஷ்யா போர் ஒரு புதிய கட்டத்துக்கு நகர்கின்றது. திடீரென உக்ரேனின் ரஷ்யா மீதான தாக்குதல்கள் சர்வதேசத்தை சற்று அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக படிப்படியாக ரஷ்யாவிடம் உக்ரேனின் கிழக்கு பகுதியை இழந்து கொண்டிருந்த உக்ரேன், திடீரென போரில் புதிய வடிவெடுத்துள்ளது. இது உக்ரேனினால் தனித்து முடியாத விடயம். நேட்டோ நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, போலண்ட், கனடா போன்ற நாடுக

ளின் உதவியுடன், அவர்களது வழிநடத்தலுடன் இந்நகர்வினை உக்ரேன் திறம்பட செய்துள்ளது.

போரில் தோல்வியடைந்து கொண்டிருக்கும் பொழுது இராஜதந்திர நகர்வுகள் போரின் திசையை மாற்றும். உக்ரேனின் இந்த நகர்வானது புட்டினை ‘பேச்சுவார்த்தை’ என்ற சொல்லை அழுத்தமாக உச்சரிக்கவைத்துள்ளது. இப்பொழுது உக்ரேனுக்கு தனது பிரதேசத்தை விடுவிப்பதற்கும், ரஷ்யாவினால் கைது செய்யப்பட்ட உக்ரோனிய படை வீரர்களை விடுவிப்பதற்கும் உக்ரேன் தரப்பில் உக்ரேன் பிடித்துள்ள ரஷ்ய பிரதேசங்கள் உள்ளன. ரஷ்யா உலகரங்கில் சிக்கலான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு போரில் ரஷ்ய ஆதரவு நாடான ஈரான் தள்ளப்பட்டுள்ளது. சிரியாவும் நகரமுடியாத நிலை. ரஷ்யாவிற்கு ஆதரவு வழங்குவதற்கு பெலரசைத் தவிர வேறு நாடுகள் இல்லை. சீனா ஆயுதங்கள் வழங்கினாலும் நேரடியாக போரில் இறங்கப் போவதில்லை.

உக்ரேன் பிடித்துள்ள பகுதிகளினூடாக ரஷ்ய எரிவாயு மற்றும் எண்ணெய் விநியோகத்தை முடக்க முடியும். இது ரஷ்யாவுக்கு வணிகரீதியான மோசமான நிலையை ஏற்படுத்தும். தற்பொழுது ரஷ்யா போரை தொடர்ச்சியாக நடத்துவதற்காக மக்களுக்கு அதிகளவு சமூக கொடுப்பனவுகளை வழங்குகின்றது. போரில் இறந்த வீரர்களின் குடும்பங்களுக்கு அதிகளவு ஓய்வூதியங்களை வழங்குகின்றது. ரஷ்ய வட்டி வீதம் அதிகமாகவுள்ளது. அதன் மூலம் ரூபிளின் பெறுமதியை அதிகரித்து சீனா, இந்தியா போன்ற நாடுகளை ரஷ்யாவில் முதலீடு செய்யச் செய்கின்றது. ஆனால் இதன் எரிவாயு விநியோக முடக்கம் இவற்றை பாதிக்கும். ஒரு வகையில் ரஷ்ய பொருளாதார வளர்ச்சி குறையும். இது ரஷ்யாவின் உக்ரேன் மீதான போரினை பாதிக்கும். கருங்கடலில் உக்ரேன் மட்டுமல்லாமல் மேற்கு நாடுகளின் ஆதிக்கம் அதிகரிக்கும். ரஷ்யாவிடமிருந்து கிறீமியா தனிமைப்படுத்தப்படும்.

இப்பொழுது செலன்ஸ்கி போரை நடத்தவில்லை. நேட்டோவே நகர்த்துகின்றது. உக்ரேன் போரின் ஆரம்பத்திலிருந்து ஒன்றைத் தொடர்ச்சியாகச் செய்து வந்தது. அது எதிரிகளை தாக்குவது. விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டாலும் போரின் பாதிப்பை எதிரி உணர்வார். ‘The effectiveness isn’t just in hitting the target-it has an effect even if it’s shot down’. உக்ரேனின் தொடர்ச்சியான முயற்சிகள் இன்று ரஷ்யாவை உக்ரேனுடன் பேச்சுவார்த்தைக்கு செல்லும் நிலைக்கு தள்ளியுள்ளது. போர் இப்போது உக்ரேனின் கைகளுக்கு மாறியுள்ளது. இல்லை இல்லை, நேட்டோவிடம் உள்ளது. இனி நேட்டோவே போரினை நடத்தும், போரிடும். போர் தொடர்கின்றது. ரஷ்யாவின் தற்போதைய பின்னடைவு நிரந்தரமானால் அது சீனா மற்றும் பிறிக்ஸ்ஸின் எதிர்காலத்தையும் பாதிக்கும்.



rathan@thaiveedu.com



# மலையக மக்களின் 'வலியும் வாழ்வும்'



– நெல்லை ஜெயசிங்

திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சி, சிவகங்கை, இராமநாதபுரம், துறையூர், முசிறி, நாமக்கல், மதுரை, அறந்தாங்கி ஆகிய தமிழக மாவட்டங்களில் காணப்பட்ட சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், நிலவுடைமையாளர்களின் ஆதிக்க மனோபாவம், சாதிய ஒடுக்குமுறைகள், வறுமை போன்றவை வாட்டி வதைத்த காலப் பகுதியில், ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முன்பு அனைத்து வலிகளிலிருந்தும் விடுபட வழி தேடி இலங்கை (மலையகம்) நோக்கிப் பயணித்தவர்கள் இன்றும் வலி நிவாரணம் தேடி வலியோடு போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கடந்துவந்த பாதையும் இன்றைய வாழ்க்கைப் பயணமும் வலி நிறைந்தது.

தமிழகத்திலிருந்து கடல் வழியாகவும் தரை வழியாகவும் மலைநாட்டை நோக்கிய அவர்களின் நெடுவழிப் பயணம் கரடு முரடானது. முள் நிறைந்தது, வலி மிகுந்தது. கடல் வழிப் பயணத்தில் ஏராளமானவர்கள் கடலில் மூழ்கி மரித்துப் போனார்கள். பலரையும் ஏற்றிவந்த 'ஆதிலட்சுமிக் கப்பல்' கடலில் கவிழ்ந்து பலரும் கடலில் கரைந்தனர். 'டைட்டானிக் கப்பல்' பற்றிப் பேசும் பலரும் 'ஆதிலட்சுமிக் கப்பல்' பற்றிப் பேசுவதில்லை.

தலைமன்னார்க் கடலைக் கடந்து மலையகம் நோக்கிய அவர்களின் பயணம் வலியின் தொடக்கமாகும். மாத்தளை நோக்கிய காட்டுவழிப் பாதையில் உணவு, மருந்து, நீரின்றி இறந்தோர், இயற்கையின் சீற்றத்தால் இறந்தோர், கொலரா, மலேரியா நோயினால் இறந்தோர் ஏராளம்.

*'பாதி வழியில் ஏ.... ராசாவே*
*பரலோகம் போயிட்டியே...,*

போன்ற ஒப்பாரிப் பாடல்கள் அவர்களின் வழிப் பயணத்தில் வலி கலந்து ஒலித்தன. இவர்களைக் கொண்டுசென்ற துரைமார்களின், முகவர்களான கங்காணிமார்களின் அடக்குமுறை, சுரண்டல், ஆதிக்கம் பெருந்தோட்டங்களில் தலைவிரித்தாடியது. மறுபுறம், மனிதாபிமானமற்ற துரைத்தனங்களின் அடக்குமுறையும் அதிகமாக இருந்தது. இதனை மலையக எழுத்தாளர் திரு. மு. நித்தியானந்தன் அவர்கள் 'துரைத்தன அடக்குமுறையும் கூலித் தமிழும்' என்ற கட்டுரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

*'பஞ்சம் பொழைப்பதற்கு பாற்கடலை தாண்டி வந் தோம்'*
*பஞ்சம் பொழைச்சு நம்ம பட்டணம் போய்ச் சேர லையே*
*ஒரு பழம் தப்பிச்சுன்னு ஒதச்சாண்டி சின்னத்துரை'*

- கூலித் தமிழ்

இவ்வாறு வேலைக்கு வந்தவர்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வாழவேண்டும். வந்து விட்டோமென வலிகளைத் தாங்கிக் கொண்டனர். பாலும் தேனும் ஓடுமென நம்பி வெளிச்சத்தைத் தேடி வந்தவர்களுக்கு இருட்டு மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

ஆரம்ப காலத்தில் பெருந்தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு அடிப்படை வசதிகள் போதியளவுக்குச் செய்து கொடுக்கப்படவில்லை. லயன் வாழ்க்கை. ஒரே ஒரு அறை. அன்று குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இன்று அவை போதுமானதாக இல்லை. ஆரோக்கியக் குறைபாட்டால் அன்றும் இன்றும் இறப்பு விகிதம் கூடி, பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. 'தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் நடத்தப்படும் விதம் வெட்கக்கேடாக இருக்கிறது' என நூற்றாண்டுக்கு முன்பே டொரிங்டன் என்ற ஆங்கிலத் தேசாதிபதி கூறிச் சென்றுள்ளார்.

குடும்பத் தலைவிகளான பெருந்தோட்டப் பெண்களின் வாழ்க்கையும் வலி மிகுந்ததாக இருந்து வருகிறது. மலையெங்கும் காற்று வேகமாக வீசுகிறது. ஆனால் அவர்களின் வாழ்க்கையில் வசந்தம் வீச மறுக்கிறது. கசங்கிய சேலை ரவிக்கை, இடுப்பில் படங்குச் சாக்கு, முதுகில் கொழுந்துக் கூடை. இதுவே அவர்களின் நூற்றாண்டுக் கால அடையாளம். அட்டைக் கடியில், குளிரில் 200 வருடங்கள் கடந்து விட்டன.

ஆயினும் வலி மிகுந்த பயணத்தில் வெளிச்சம் இன்னும் வர வில்லை.

கடந்த காலங்களில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், மனி தர்களாக, இலங்கை நாட்டின் உரிமையுள்ள பிரஜைகளாக மதிக்கப்படவில்லை. 1930-ல் டொனமூர்க் குழு இவர்களுக் கும் வாக்குரிமை வழங்க முற்பட்ட போது இனவாத, சிங்கள, தமிழ், வலது சாரி, அரசியல் தலைவர்கள் எதிர்த்தனர். அத னால் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையே வழங்கப்பட்டது. இவர்களின் வலி மிகுந்த வாழ்க்கைப் பயணத்தைப் பெரும் பான்மை சமூகமும், அனைத்து அரசியல் தலைவர்களும் உணரத் தவறிவிட்டனர்.

இலங்கையின் அனைத்துத் துறைகளின் வளர்ச்சியில் நேரடி யாகவும், மறைமுகமாகவும் இவர்களின் பங்களிப்பு மிக அதி கம். இவர்கள் பெற்றுத்தந்த தேசிய வருமானம் வாயிலாக இலங்கையின் அனைத்து மக்களும் பயனடைந்திருக்கிறார் கள். நாட்டின் வளர்ச்சிக்காக இவர்கள், வரலாற்றுக் காலம்



முழுவதும் அனுபவித்த வலிகளை, வார்த்தைகளில் வடிக்க வியலாது. அதற்குப் பிரதிபலனாக, நன்றி மறந்த இனவாத இலங்கை அரசியல் வாதிகள் அம்மக்களின் குடியுரிமையை, வாக்குரிமையைப் பறித்து வீதியில் நாடற்றவர்களாக நிறுத்தி யமை இலங்கை வரலாற்றில் கறைபடிந்த பக்கங்களாகும்.

## குடியுரிமைப் பறிப்பு:

1948-ல் இலங்கை சுதந்திர உரிமையைப் பெற மலையக மக் கள் குடியுரிமையை இழந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் வாக்கு வங்கி அரசியலில் இனவாதம் முக்கிய புள்ளியாக மாறத் தொடங்கியது. 1948, 1949 குடியுரிமைச் சட்டங்களால் மலையக மக்கள் குடியுரிமை, வாக்குரிமையிழந்து நாடற்றவர் களாக ஆக்கப்பட்டனர். இது உலக வரலாற்றில் தொழிலாளர் வர்க்கத்திற்கு இழைக்கப்பட்ட மிகப் பெரும் துரோகச் செய லாகும். மலையக மக்கள் வலிக்கும், வேதனைக்கும் உள்ளா கினர். அவர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன. அரசு வேலைகள் மறுக்கப்பட்டன. உயர்கல்வி தடைப்பட்டது. நிலவுரிமை, வீட்டுரிமை என்பவை பிரச்சினைக்கு உள்ளா னது. வலியோடு வந்தவர்களின் பயணத்தில் வலி தொடர்கிறது.

குடியுரிமையைப் பறித்ததோடு நின்றுவிடாத சிங்களப் பேரின வாதிகள், அவர்களை இந்தியாவிற்கு நாடு கடத்த வேண்டு மென்ற கோஷத்தை முன்வைக்கத் தொடங்கினர். இடதுசாரிக ளின் சிறியளவிலான எதிர்ப்பு, தொழிற்சங்கங்களின் போராட் டம் பயனளிக்கவில்லை. இறுதியில் இலங்கை, இந்தியா நாடு களுக்கிடையே 1964 மற்றும் 1974 ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப் பந்தங்களின் விளைவாக ஆறு இலட்சம் பேர் இந்தியாவிற்கு நாடுகடத்தப்பட வேண்டும் எனவும் 375,000 பேருக்கு இலங் கைப் பிரஜாவுரிமை வழங்குவது எனவும் முடிவாகியது. மக்க ளின் விருப்பத்திற்கு மாறாக, வலுக்கட்டாயமாக நாடு கடத் தும் வலி நிறைந்த இச்செயல் அம்மக்களுக்கு இழைக்கப் பட்ட மற்றும் ஒரு துரோகமாகும்.

உடன் பிறந்தோர், உறவினர்கள் பிரிக்கப்பட்டனர். குடும்பங் கள் சிதறுண்டன. வேருடன் பிடுங்கி இந்திய மண்ணில் எறி யப்பட்ட இச்செயல் அவர்கள் வாழ்வில் மிகவும் கொடூரமான, வலி மிகுந்த பக்கங்களாகும். ஒரு காலத்தில் வலியோடு இலங்கை சென்றவர்கள் வலியோடு, மறுவாழ்வு தேடி இந்-தியா திரும்பியுள்ளனர். இந்திய மறுவாழ்வுத் திட்டங்கள் திருப்திகரமாக இல்லாத நிலையில் வலியோடு அவர்களும் அவர்களின் சந்ததியினரும் இந்திய மண்ணில் வாழ்ந்து வரு வதாகவும் வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

## இன வன்செயல்:

உடன்படிக்கையின் பின்னரான மலையக மக்களின் வாழ்க் கையில் வசந்தம் வீசுமென எதிர்ப்பார்த்தனர். ஆனால் அது நடக்கவில்லை. பயணம், வலியும் வேதனையும் நிறைந்ததா கவே காணப்பட்டது. இலங்கையின் அரசியல், இனவாதத்தை மையமாகக் கொண்டு நகரத் தொடங்கியது. 1956, 1958, 1977, 1981, 1983, இனக் கலவரங்கள், 1972-ம் ஆண்டு நிலச் சீர்தி ருத்தம் என்பன மலையக மக்களின் வாழ்க்கையைப் பெரி தும் பாதிப்புக்குள்ளாக்கின.

பிரிவினை கேட்காத மலையக மக்கள், 1983-ம் ஆண்டு இனக் கலவரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஏராளமா னோர் கொல்லப்பட்டனர், காயமுற்றனர். நூற்றுக்கணக்கான வணிக நிறுவனங்கள், வீடுகள் அழிக்கப்பட்டன. இனக் கலவ ரமானது அவர்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. பாதுகாப்புத் தேடிப் பல இடங்களுக்கும் ஓடினர். இன்றும் கூட அவர்கள் வாழ வழி விடுங்களென இடந் தேடி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அரசோ எதையும் கண்டுகொள்ளாது குறிப்பிட்ட இனஞ் சார்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

## வடகிழக்கு நோக்கிப் பயணித்த மலையக மக்கள்:

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டோர், 1974-ல் பெருந்தோட் டங்களைச் சிங்களச் சமூகத்திற்குப் பிரித்து வழங்கியதால் வேலைவாய்ப்பு இழந்தோர், உயிர்ப் பாதுகாப்பை வேண்டி



நின்றோரெனப் பலரும் வடகிழக்கு நோக்கி நகரத் தொடங்கினர். சென்றவர்களில் சிலர் நிலவுரிமையாளர்களின் காணிகளில் கூலிகளாயினர். இன்னும் சிலர், அடர் காடுகளை வெட்டிச் சேனைப்பயிர் செய்யத் தொடங்கினர். இப்புதிய வாழ்க்கையும் சுகமானதாக, சுலபமானதாக அமைந்துவிடவில்லை. அங்கும் வலியோடுதான் வாழ்க்கையைத் தொடங்கவேண்டியிருந்தது. அவர்களுக்கு நன்செய் நிலங்கள் வழங்கப்படவில்லை. வானம் பார்த்த பூமியில் பயிர் செய்யவேண்டியிருந்தது.

காடுவெட்டி, நிலவுரிமையாளர்களானோரில் பலர் இன்னும் பூரண உரிமையுள்ள, காணி உரிமைப் பத்திரம் பெறாது இருக்கின்றனர். காணி உரிமையாளர்களும் கூட, போதிய நில வருவாய் இன்மையால் கூலித் தொழில் செய்து வருகின்றனர். வடக்கே நகர்ந்தவர்கள் பாதுகாப்பு வளையத்திற்குள் வாழ்ந்து விடலாமென நம்பினர். ஆனால் கிராம எல்லையோரங்களில் குடியமர்த்தப்பட்ட ஏராளமானோர், உள்நாட்டு யுத்தத்தின் போது பெரியளவில் பாதிப்புக்குள்ளாகினர். அப்பெரு வலியிலிருந்து இன்னும் அவர்கள் விடுபடவில்லை. ஆரம்ப காலத்தில் இவர்கள் இலங்கைத் தமிழர்களுடன் இணைத்துச் சமமாக நடத்தப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. அண்மையில் நாங்கள் அப்பகுதியில் குழுவாகச் சென்று அவதானித்த வகையில் நிலைமை மேம்பட்டிருக்கிறது. ஆனாலும் இடைவெளிக் கோடு முழுவதுமாக நீங்கவில்லை.

வடகிழக்குப் பகுதியில் குடியேறிக் காணியுரிமை பெற்றுச் சொந்தமான வீடுகளில் வசிக்கும் சில மலையக மக்களின் வாழ்க்கை தோட்டத் தொழிலாளர்களுடன் ஒப்பிடும்போது பல மடங்கு உயர்ந்திருப்பது உண்மை. அவர்களின் மலையக அடையாளம் அழிந்து கொண்டு வருகிறது. பிறக்கும் குழந்தைகள் இலங்கைத் தமிழரெனப் பதியப்படுகிறார்கள். அதனை அவர்கள் ஒரு பாதுகாப்பு அரணாக நினைக்கிறார்கள். ஆனால் அதற்கான சமூக அங்கீகாரம் அவர்களுக்குக் கிடைப்பதாகத் தெரியவில்லை.

## இந்திய மண்ணில் அகதி வாழ்க்கை:

இனக் கலவரம், உள்நாட்டு யுத்தம் என்பவற்றிலிருந்து விடுபட மலையக மக்களின் சில பகுதியினர் வாழ்வு தேடி ஆழ்கடற் பகுதியில், படகுகளில் இந்தியா சென்றார்கள். அங்கேயும் விடியல் கிடைக்கவில்லை. 30,000-ற்கு மேற்பட்டவர்கள் இந்திய அகதி முகாம்களில் 35 வருடங்களுக்கு மேலாக உரிமைகள் இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

2019-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தியக் குடியுரிமைச் சட்டத்தில், இந்தியத் தொப்புள் கொடி உறவுகளான இம்மக்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை. வலி மிகுந்த இவர்களின் உரிமை, நலன் பற்றி இலங்கை, இந்திய அரசுகள் கண்டுகொள்ள முன்வருவதில்லை. அகதி முகாம்களில் ஒரு சந்ததியினர் அழிந்துகொண்டு இருக்கிறார்கள்.

## தொடர் தாக்குதல்:

1972-க்குப் பின்னர் பெருந்தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டுச் சிங்களச் சமூகத்திற்குப் பிரித்து வழங்கியபோது

தோட்டத் தொழிலாளர்கள் வேலையிழந்து வெளியேறும் அவலநிலை உருவாகி, அது இன்றும் தொடர்கிறது. தோட்டங்களை நம்பி வந்தவர்கள் வாழ்விழந்து, வலியோடு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்து வாழும் நிலை உருவாகியுள்ளது.

தேயிலைச் செடிகளுடனேயே நூறாண்டு காலம் வாழ்ந்தவர்களுக்கு நிலப் பகிர்தலில் பெருமளவு பாரபட்சம் காட்டப்படுகிறது. தோட்டத் தெபழிலாளர்கள் காணியுரிமை மட்டுமல்லாமல் வீட்டு உரிமையும் இழந்து வருகின்றனர். சிறு தோட்டங்களில் வேலைக்குப் போனவர்களுக்குரிய ஊதியம், வேலைக்கான நிரந்தர உத்தரவாதம் எதுவுமே வழங்கப்படுவதில்லை. குறைந்த வருமானம் மற்றும் வேலையிழப்பு காரணமாக நகர்புறங்களில் கடைநிலை ஊழியர்களாக, பெண்கள் வீட்டு வேலை செய்பவர்களாக, கடைச் சிப்பந்திகளாகப் பணி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

குறைந்த வருமானம் காரணமாகத் தொழிலாளர்களின் குழந்தைகள், பணம் செலவழித்து, நகர்ப்புறம் சென்று, உயர் கல்வி பெறமுடியாத சூழ்நிலை அதிகரித்து வருகிறது. இதனால் மலையகத்தில் கல்வியில் இடைநிற்றல், தேசிய சராசரியை விட அதிகமாகி வருகிறது. ஒரு சமூகத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் பல காரணிகள் இருந்தபோதும் அதில் தலையாயது கல்வியாகும். இதனைப் பூரணமாகப் பெற்றுத் தர அரசியல்வாதிகள் முன்வர வேண்டும்.

## தொழிலாளர்களுக்கான காணி, வீடு:

பல சந்ததியினராகத் தோட்டங்களில் வாழ்பவர்களுக்கு, சொந்தமென்று சொல்லிக்கொண்டு ஒதுங்குவதற்கு, வீடு எதுவுமில்லை என்று சொல்வது வரலாற்றில் கசப்பான உண்மையாகும். இதுவரை இருந்த வலி மிகுந்த லயன் வாழ்க்கை என்பது, ஒரு சாபக்கேடு. எந்தவிதப் பாரபட்சமும் பாராது வீடமைப்புத் திட்டத்தைத் துரிதப்படுத்தி, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உரிமையுள்ள வீடுகளை வழங்க வேண்டியது, சமூக அக்கறை கொண்ட, சோஷலிச ஜனநாயக அரசு எனக் கூறிக்கொள்ளும் இலங்கை அரசின் முக்கிய கடமையாகும்.

200 வருட காலமாகத் தோட்டங்களே தங்களின் வாழ்விடமென வாழ்ந்துவரும் தொழிலாளர்களுக்கு அந்நிலத்தின் மீது உரிமையில்லையென அரசு கூறி வருவது வருந்தத்தக்க விடயமாகும். காணிப் பகிர்ந்தளிப்பில், இனத்துவத்தை தகுதிக்கான அளவுகோலாக, அரசு நிர்ணயிப்பது கண்டிக்கத்தக்கதாகும். ஒரு தேசத்தில் ஒரு சமூகப் பிரிவினர் மட்டும் பின்தள்ளப்படுவது நியாயமாகாது. காணி பகிர்ந்தளிப்பில் தோட்டத் தொழிலாளர்களையும் இணைத்து அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டியது இலங்கை சோஷலிசக் குடியரசின் கடமையாகும்.

## மலையக மக்களின் அடையாளம்:

கடந்த காலங்களில் பஞ்சம் பிழைக்க வந்தவர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கூலிகள், இந்தியத் தமிழர், இந்திய வம்சாவளியினர், வடக்கத்தயான், தோட்டக் காட்டான் எனப் பல் வேறு அடைமொழிகளால் அழைக்கப்பட்ட ஒரு சமூகம் இன்று 'மலையகத் தமிழர்' என்ற கௌரவமான பெயருடன் தலைநிமிர்ந்து நிற்க விரும்புகிறது. இது புதிய சகாப்தத்தின் தொடக்கப் புள்ளியாகும். எனவே 'மலையகம்' என்பது அவர்களின் எதிர்கால இன அடையாளமாக இருக்கவேண்டும் என விரும்புவது தெரிகிறது. மலையகம் என்பது இச் சமூகத்தின் வரலாற்றுக் குறியீடாகவும், தேசிய இன அடையாளத்தின் முகமாகவும் விளங்குகிறது.

மலையகத்தை மையமாகக் கொண்டு இலங்கை தேசமெங்கும் கிளை பரப்பிக் கால் பதித்து, வாழ்ந்து வரும் அனைவரும் மலையக மக்களே, என மறைந்த திரு. லெனின் மதிவாணன் கூறுகிறார். இன்றைய மலையக மக்களில் பெரும் பகுதியினர் இந்திய தேசத்தைக் கண்களால் கண்டிராதவர்கள். இந்தியா இவர்களின் இன்றைய தாயகமல்ல. ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இன்றில்லை. இன்றைய இலங்கையே அவர்களின் பிறந்து வளர்ந்த மண். இவர்களின் கடந்தகால வாழ்க்கை நரகமாகவே நகர்ந்திருக்கிறது. இப்போது இவர்கள் இவ் வலிகளிலிருந்து விடுபட வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். அதன் ஒரு அங்கமாகத் தாங்கள் மலையகத் தேசிய இனம் என்பதை நிலைநிறுத்த, முழங்கை உயர்த்தி எழுந்து நிற்கத் தொடங்கி விட்டார்கள். முஸ்லிம் மக்கள் ஒரு தேசிய இனமாக, இலங்கைத் தமிழர் ஒரு தேசிய இனமாகக் கருதப்படும் போது நாங்களும் ஒரு தேசிய இனமென ஏன் கூறக்கூடாது என்ற முழக்கம் மலையகமெங்கும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. தாங்கள் இதுவரை அனுபவித்த வலி, வேதனை நீக்கப்பட வேண்டுமென விரும்புகிறார்கள். அதற்கான ஆரம்பமே அவர்களின் தேசிய இன அடையாளம்.

இவர்களின் போராட்டமானது வாழ்வதற்கானதேயன்றி நாட்டைப் பிளவுபடுத்துவதற்கானதல்ல. தங்களை உலக அரங்கிலும், இலங்கையின் அரசியல் செயற்பாட்டிலும் நிலைநிறுத்திக் கொள்ள, தங்களின் இன அடையாளத்தை ஆழமாகப் பதிவிட விரும்புகிறார்கள். இன்று மலையகத்தில் படித்தவர்கள், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், தொழிலதிபர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களென ஏராளமான அறிவு ஜீவிகள் எழத் தொடங்கி விட்டார்கள். இலங்கை சமூகத்தில் இவர்களின் அடையாளம் தற்போது தனித்துவமாகத் தெரியத் தொடங்கிவிட்டது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இன வன்முறைகள், விரும்பத்தகாத பல நிகழ்வுகள், மலையக மக்களின் தனித் தேசிய இன உணர்வை அதிகளவில் எழுச்சியடைய வைத்துள்ளது. கடந்த காலங்களில் முல்லோயாக் கோவிந்தன் தொடங்கிப் பல போராளிகளை உரிமைக்காகப் பலி கொடுத்த வரலாற்றையுடைய மலையக மக்கள், வலி நீங்கி வாழ்ந்திடப் போராட்டம் தான் வழி என்றால் அதற்கும் தயாராகி வருகிறார்கள். உரிமைகளுள்ள வாழ்வுக்காகக் காத்திருக்கிறார்கள். கதவுகள் திறக்கப்பட வேண்டும். விடியல் விரைந்து வர வேண்டும்.



jeyasingh@thaiveedu.com



# கனடாவில் வெளிநாட்டு மாணவர்களும் கல்வியும்

– த. சிவபாலு

கனடா வெளிநாட்டு மாணவர்களுக்கான கல்வியை வழங்கும் நாடுகளில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வி வழங்கும் நாடுகளில் நான்காவது இடத்தைக் கனடா வகிக்கின்றது. பெரும்பாலும் வளர்ச்சியடைந்த நாடுகள் கல்வியை மூலதனமாகப் பயன்படுத்துகின்றன. இந்த மூலதனம் கனடாவிற்கு இரண்டு வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

- வெளிநாட்டு நிதியைப் பெற்றுக்கொள்ளுதல்.
- படித்த இளைஞர்களைக் கல்விச் செலவின்றி பணிக்க மர்த்துதல்.

இவ்விரு முறைகளும் பெருமளவிற்கு கல்வியை வழங்குதல் என்ற போர்வையில் வெளிநாட்டு நிதியை உறிஞ்சிக் கொள்வதை மறைமுகமாக தொழில்நுட்ப வல்லமை படைத்த நாடுகள் கையாளுவதைக் காணமுடிகின்றது. தொழில்நுட்பக் கல்வி மற்றும் நவீன சாதனங்கள், உத்திகளைக் கையாண்டு கவர்ச்சிகரமான கல்வியை தொழில் வாய்ப்பை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதனால் மேலைநாட்டுக் கல்வி மட்டுமல்ல சீனா, ரஷ்யா போன்ற நாடுகளும் இவற்றை போட்டியாக மட்டுமன்றி வியாபாரத் தந்திரமாகவும் கையாளுகின்றன. வெளிநாட்டு மாணவர்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட வகையில் கல்வியை வழங்கிவந்த சீனா இன்று பெருந்தொகையான வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பை உருவாக்கி அவர்களை உள்வாங்கிக் கொள்வதைக் காணமுடிகின்றது. மேலை நாட்டினர் கையாளும் தந்திரோபாயங்களை சீனா, யப்பான், ரஷ்யா போன்ற நாடுகளும் கையாண்டு வருவது கண்கூடு.

கனடா அரசாங்கம் 1959-ம் ஆண்டிலேயே இதற்கான வழிமுறைகளைக் கையாளத் தொடங்கியது. பிரித்தானிய பொதுநலவாய அங்கத்துவ நாடுகளான பாகிஸ்தான், இந்தியா, பகாமா, டொமினிக்கன் குடியரசு போன்றவற்றில் உள்ள மாணவர்களுக்குக் கல்வியை நல்குவதன் மூலம் நாட்டிற்கு நன்மைதரும் பயன்களை அனுபவிக்கத் திட்டமிட்டுச் செயற்படத் தொடங்கியது. நாட்டில் பல்வேறு அநுகூலங்களைக் கட்டமைத்துக்கொள்ள, அரசு திட்டமிட்டுச் செயற்படுவதைக் காணமுடியும். அவற்றில் முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

- அந்நிய வெறுப்பு மனப்பான்மையைக் களைவது,
- பல்கலாசாரத்தை ஊக்குவிப்பது,
- பொருளாதாரப் பன்முகத்தன்மையை ஊக்குவித்தல்,
- குடிமக்கள் மத்தியில் பன்முகத்தன்மை, தாராண்மை வாதம், விட்டுக்கொடுப்பு என்பனவற்றை வளர்த்தல்,
- ஒருவருக்கொருவர் பரஸ்பரத் தன்மையை வளர்த்தல் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பது,
- சர்வதேச நல்லெண்ணம் மற்றும் உலகளாவிய நாகரிகத்தை வளர்ப்பது,
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே கலாசார மற்றும் சமூகத் தொடர்புகளை வளர்ப்பது,
- கற்பித்தல் மற்றும் கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளில் அதிக ஈடுபாட்டை ஊக்குவித்தல்,
- படித்த அறிவார்ந்த ஆளணியை உருவாக்குதல்,
- நவீன தொழில்நுட்பம் சார்ந்த கல்விச் சமூகமாக நாட்டை உயர்த்துதல்

என்பன அடிப்படைக் கொள்கைகளாகக் காணப்படுகின்றன. கனடா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்துலக கல்வி உத்திகளின்படி, சர்வதேச மாணவர்கள் ஆரம்ப, இடைநிலை பாடசாலைகளோடு வர்த்தகக் கல்லூரிகளில் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். இதற்குமேலாக பெருந்தொகையான அனைத்துலக மாணவர்கள் பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்நிலைக் கல்வியைப் பெறுபவர்களாகவும் உள்ளனர். வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை 2015 முதல் 2018 வரை அனைத்து நிலைகளிலும் ஏறுமுகமாக அதிகரித்து வந்திருக்கிறது, கல்லூரியில் இணையும் மாணவர்களின் பாரிய அதிகரிப்பு 2019-2024 காலகட்டத்தில் உச்சத்தைத் தொட்டது. சர்வதேசக் கல்வி உத்தியானது உள்வரும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பன்முகப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை உள்ளடக்கியது. அவர்களை ஒரு சில நகரங்களில் குவிக்காமல் நாடு முழுவதும் சமமாக விநியோகிக்க வேண்டும் என்ற திட்டம் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடு முழுமையும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் மாணவர்களை உள்வாங்குவதால் இது சாத்தியமாகிறது. அதிகமான சர்வதேச மாணவர்களை ஈர்க்க, கனடிய கல்வி நிறுவனங்கள் ஆங்கிலத்தை இரண்டாம் மொழி திட்டமாக வழங்குகின்றன. ஆர்வமுள்ள சர்வதேச மாணவர்களுக்கு குறிப்பிட்ட கல்வி உதவித் தொகையை

சில பல்கலைக்கழகங்கள் ஒதுக்கி ஊக்குவிக்கின்றன.

2016-ம் ஆண்டில், கனடாவின் உலகளாவியரீதியில் சர்வதேச கல்விப் பிரிவு கல்விக் கனடா (EduCanada) என்னும் முறைமையை அறிமுகப்படுத்தியது. இது மாகாணங்கள், பிரதேசங்கள், மாகாணக் கல்வி அமைச்சுக்கள், கல்வி ஆலோசனைக்குழுக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டு ஊக்குவிப்பு முயற்சியாக முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேசக் கல்விக்கான கனடிய பணியகம் (CBIE) நடத்திய ஆய்வில், 96% சர்வதேச மாணவர்கள் கனடாவை ஒரு நல்ல கல்விக்கான இடமாக ஏற்றுக்கொண்டு இங்கு கல்வியைத் தொடர விரும்பினர். தரமான கல்வி, பன்முகத்தன்மையை நடைமுறைப்படுத்தும் பாதுகாப்பான, சகிப்புத்தன்மை மற்றும் பல்கலாசார நாடு என்ற நற்பெயர் காரணமாக கனடா வெளிநாட்டு மாணவர்வளைக் கவரும் நாடாகத் தன்னை முன்னிலைப் படுத்துகின்றது. வெளிநாட்டு மாணவர்கள் இதனை நன்கு அறிந்து இங்கு தமது கல்வியைத் தொடர முனைகின்றனர்.

கனடா அரசு சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை 2022-ம் ஆண்டிற்கும் 2024-க்கும் இடையே சுமார் 240,000-இலிருந்து 450,000 ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. 2023-ம் ஆண்டு நாட்டிற்குள் 1,040,985 மாணவர்கள் ஆய்வுக் கல்வியைத் தொடர அனுமதி பெற்றுள்ளனர், இது 2022-ம் ஆண்டை விட 29% அதிகரிப்பைக் காட்டியது. வெளிநாட்டு மாணவர்கள் நாட்டின் மக்கள் தொகையில் 2%-க்கும் அதிகமானவர்களாகக் காணப்பட்டனர். ஆய்வு நோக்கத்திற்காக அனுமதிக்கப்படும் மாணவர்கள் தங்கள் சொந்தநாட்டில் பல்கலைக்கழகப் படிப்பை முடித்தவர்களாக இருத்தல் வேண்டும் என்பது அடிப்படைத் தகமையாகக் கொள்ளப்பட்டது. இது வேற்று நாட்டுப் பட்டதாரிகளை உள்வாங்கும் ஒரு நடவடிக்கையாகவும் பார்க்கப்பட்டது. இவை மாணவர் வரவை அதிகரித்தது. இதனால் குடியிருப்பாளர்கள் சில அநுகூலங்களையும் அதே நேரம் வீடில்லாப் பிரச்சினைக்கும் முகம்கொடுக்க வேண்டியதாயிற்று.

இருப்பினும், கனடாவில் தற்காலிக குடியிருப்பாளர்களின் உத்தியோகபூர்வ எண்ணிக்கை கணிப்பீட்டை விட இது அதிகமாக இருக்கலாம் என்று CIBC மூலதன சந்தையால் (Capital Market) மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. ஆனால் உண்மையான எண்ணிக்கை ஒரு மில்லியன் வரை குறையக்கூடும் என்று அறிக்கை கண்டறிந்துள்ளது.

சில தனியார் நிறுவனங்கள் சர்வதேச மாணவர்களைச் சேர்க்கும் சலுகைகளை அதிகரிக்க முயற்சிக்கின்றது. அதேநேரம் சில கல்வி சார்ந்த பாடநெறிகளை இரத்து செய்கின்றன, ஏனெனில் பெரிய அளவிலான கல்விச் சாதனங்களையோ தொழில்நுட்ப வாய்ப்புக்களையோ ஆய்வுப் பரப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளையோ இந்நிறுவனங்கள் கொண்டிருக்கவில்லை. இவற்றைச் சர்வதேச மாணவர்களுக்கு கிடைக்கச் செய்யும் திறனும் அவர்களிடம் இல்லை. குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (IRCC) எண்களை நிர்வகிப்பதாக எண்ணி, அவர்கள் அதிகமான மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏற்பு கடிதங்களை அனுப்பினர். 2022-ம் ஆண்டில், தகவல் அணுகல் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் இந்திய மாணவர்களின் வரவிலும் அனுமதியிலும் கூடியளவு செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. அதேசமயம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பையும் ஏற்படுத்தி இருந்துள்ளது. அவர்கள் தங்கள் தனிப்பட்ட, பொருளாதார மற்றும் அரசியல் இலக்குகளை எட்டவும் கனடாவின் நோக்கத்தை ஈர்த்துக்கொள்ளவும் அதிகரிக்கவும் காரணிகளாயின.

கனடா சர்வதேச மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதன் மூலம் அதன் அறிவு அடிப்படையிலான பொருளாதாரத்தில் நிதித்துறை சார்ந்த நன்மைகளை உள்ளகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், தேவையான சேவைகளை நெறிமுறையாக வழங்குவதிலும், அவற்றைப் பொறுப்பேற்று தலைமைதாங்குவதிலும் சவால்களை எதிர்கொள்கிறது. கூடுதலாக ஆலோசனை வழங்கும் ஆலோசகர்களால் இந்தத் துறை பாதிக்கப்படுகிறது. வேலை அல்லது படிப்பு அனுமதி உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுமே IRCC அறிக்கை கணக்கிலெடுக்கின்றது. ஆறு மாதங்களுக்கும் குறைவாகப் படிக்கும் குறுகிய கால கல்வித்திட்ட மாணவர்களுக்கு அனுமதி தேவையில்லை, அதாவது குறுகிய கால மாணவர்கள் IRCC புள்ளிவிவரங்கள் கணக்கிடப்படுவதில்லை. கனடாவின் உலகளாவிய விவகாரங்களின் சர்வதேச கல்விப் பிரிவு (GAC) குறுகிய மற்றும் நீண்டகால கற்கை நெறி மாணவர்களை உள்ளடக்கியது,

டிசம்பர் 2019 நிலவரப்படி, கனடாவில் அனைத்து மட்டங்களிலும் மொத்தம் 642,480 சர்வதேச மாணவர்கள் இருந்தனர், இது முந்தைய ஆண்டை விட 13% அதிகரிப்பைக் குறிக்கிறது. பெரும்பாலான சர்வதேச மாணவர்கள் பிந்தைய இரண்டாம் நிலை மாணவர்கள், 120,000-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர் அனுமதி பெற்றவர்கள். 2018-ல் பதிவாகியுள்ளனர் மற்றும் 2018-ம் ஆண்டிற்கான GAC வெளியிட்ட புள்ளிவிவரப்படி 721,000 மாணவர்களைப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2022-ல், கனடாவில் ஆண்டு இறுதியில் 807,260 சர்வதேச மாணவர்கள் இருந்தனர் என்பதை இப்பதிவுகள் காட்டிநிற்கின்றன.

அண்மையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி 1,335,878 இந்திய மாணவர்கள் வெளிநாடுகளில் கல்வி கற்கின்றனர். கனடாவில் 427,000 மாணவர்களும், ஐக்கிய அமெரிக்காவில் 337,630 மாணவர்களும், ஐக்கிய இராச்சயத்தில் 18,500 மாணவர்களும், அவுஸ்திரேலியாவில் 122,202 மாணவர்களும், ஜேர்மனியில் 42,997 மாணவர்களும் கற்பதாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. கனடாவில் கல்வி பயிலும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் குறைவடைந்துள்ளது. இந்தியா - கனடா ஆகிய இரு நாடுகளுக்குமிடையே காணப்படும் முரண்பாடுகளே இதற்கு காரணமாக இருக்கலாம். சீக்கிய இனத்தினரைப் பயங்கரவாதிகளாகக் காட்டி அவர்களைக் கனடிய மண்ணிலேயே கொலை செய்ய இந்தியா உடந்தையாக இருந்துள்ளது என கனடா குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து இந்த இழுபறி நிலை தோன்றியுள்ளமை உலகறிந்த விடயம். கனடாவில் வெளிநாட்டு மாணவர்களுக்குக் கல்வி வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள கல்வி நிறுவனங்கள் இதனால் மூடப்படும் ஆபத்தையும் எதிர்கொண்டுள்ளன. இது அரசாங்கத்திற்குப் பெரும் தலையிடியைத் தரும் விடயமாகக் காணப்பட்டது.

கனடிய உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் தொடக்கப் பள்ளிகளின் அதிகரிப்பால் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை



அதிகரிக்கின்றன. 2000-ம் ஆண்டில், ஆரம்ப மற்றும் இடை நிலை மட்டத்தில் 27,997 சர்வதேச மாணவர்கள் இருப்பதாக GAC தெரிவித்துள்ளது. 2010-ல், இந்த எண்ணிக்கை 35,140-ஆக அதிகரித்தது. 2017-ம் ஆண்டில், Canadian Bureau for International Education (CIBE), Immigration, Refugees and Citizenship Canada (IRCC) எண்களை நம்பி, 71,350 சர்வ தேச மாணவர்கள் மேல்நிலை மற்றும் முதன்மை கனேடியப் பள்ளி அமைப்புகளில் இருப்பதாகப் அறிக்கையை வெளி யிட்டிருந்தது.

அதிக சர்வதேச மாணவர் தொகை கொண்ட மாகாணங்கள் ஒன்டாரியோ மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா ஆகும். 2016-ம் ஆண்டில், கனடாவில் அதிக எண்ணிக்கையிலான சர்வதேச மாணவர்களைக் கொண்டிருந்தது ஒன்டாரியோ, 233,226 குறு கிய கால மற்றும் நீண்ட கால மாணவர்கள் நாட்டிலுள்ள அனைத்து சர்வதேச மாணவர்களில் 44.5% ஆகக் காணப்பட் டனர். பிரிட்டிஷ் கொலம்பியாவில் 145,691 மாணவர்கள் இருந்தனர், இது சர்வதேச மாணவர் எண்ணிக்கையில் 27.8% ஆகும்.

## பல்கலைக்கழகங்களில் பயிலும் வெளிநாட்டு மாணவர்கள்:

Maclean’s இன் கூற்றுப்படி, 2016-ல், முதல் ஆண்டு இளங்க லைப் படிப்பிற்காக...

- பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் 31%,
- McGill பல்கலைக்கழகம் 30.7%,
- Bishop’s பல்கலைக்கழகம் 29.6%

முதலானவை அனைத்துலக மாணவர்களை அதிகளவில் உள்வாங்கிக் கொண்டன.

ஒட்டுமொத்த பட்டதாரி மாணவர்களுக்கு, வின்ட்சர் பல்க லைக்கழகம் 57.2%, நியூஃபவுண்ட்லாண்ட் மெமோறியல் பல்க லைக்கழகம் 50%, கொன்கோர்டியா பல்கலைக்கழகம் 49.2% ஆகியவை சர்வதேச அளவில் அதிக மாணவர்களை உள் வாங்கும் பல்கலைக்கழகங்கள் ஆகும்.

கனடா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கூற்றுப்படி, 2023-ம் ஆண்டில், அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் சர்வ தேச கல்வி அனுமதிகளைப் பெறுவதற்காக உள்வாங்கப்பட் டார்கள். பிந்தைய இரண்டாம் நிலை நிறுவனங்களாகக் கரு தப்படும் ஒன்டாரியோவின் கோனெஸ்டோகா கல்லூரி (30,395 அனுமதிகள்), பிரிட்டிஷ் கொலம்பியாவின் கனடா பல்கலைக் கழக மேற்கு (13,913) மற்றும் ஒன்டாரியோவின் ஃபேன்ஷாவே கல்லூரி (11,706) ஆகியன அதிக மாணவர்களை உள்வாங் கிக் கொண்டன.

## மக்கள் தொகையியலில் வெளிநாட்டு மாணவர்கள்:

கனடிய நிறுவனங்களில் படிக்கும் சர்வதேச மாணவர்கள் முதன்மையாக ஆசியாவிலிருந்து வருகிறார்கள். 2018-ம் ஆண்டிற்கான ஐஆர்சிசி புள்ளிவிவரங்களின்படி அனைத்து சர்வதேச மாணவர்களில் 50%-க்கும் அதிகமானோர் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்து வந்தவர்கள் ஆவார். 172,625 மாணவர்கள் இந்தியாவில் இருந்து வந்தவர்கள். இவர்கள் சுமார் 30% மாணவர்களாகக் காணப்படுகின்றனர். சீனாவில் இருந்து வந்தவர்கள் 142,895 மாணவர்கள் ஆவார். இது 25% மாகவும் காணப்படுகின்றது. தென் கொரியா (24,195), பிரான்ஸ் (22,745), மற்றும் வியட்நாம் (20,330) ஆகிய நாடுகளும் அதிக எண்ணிக்கையிலான மாணவர் களை கனடாவில் மேற்கல்வி பெறுவதற்காக அனுப்புகின் றன.

## மாணவர்களின் பொருளாதார தாக்கம்:

கனடாவில் படிக்கும் அதிக எண்ணிக்கையிலான சர்வதேச மாணவர்கள் கனடிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றனர். 2015-ம் ஆண்டில், சர்வதேச மாணவர்களின் செலவுகள், மாணவர்களின் பார்வையாளர்களுடன் தொடர்புடைய சுற்றுலா உட்பட, $12.8 பில்லியன் மதிப்புடையது; 2016-ல், அந்த எண்ணிக்கை 21.2% அதிகரித்து $15.5 பில்லியனாக இருந்தது. நீண்டகால சர்வதேச மாணவர்கள் 2015-ல் ஆண்டு சராசரியாக $33,800 மற்றும் 2016-ல் $35,100 செலவழித்துள்ளனர். இந்த எண்ணிக்கையில் கல்வியுடன் தொடர்புடைய செலவுகள், அத்துடன் தொடர்பில்லாத விருப்புச் செலவுகள் ஆகியவை அடங்கும். குடும்பம், நண்பர்களை வரவேற்றது மற்றும் அவர்களிடம் வருகை தருதல் போன்றனவற்றுக்குச் செலவழித்த பணம் நீங்கலாகப் பதிவிடப்பட்டுள்ளது. 2015-இல், வெளிநாட்டு மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் 140,010 வேலைகளை உருவாக்கியது அல்லது வேலைகள் ஏற்பட ஆதரவை நல்கியது. 2016-ல் இது 168,860 வேலைவாய்ப்புகளை (143,150 FTE) உருவாக்கியது. 2022 வாக்கில், கனேடிய அரசாங்கக் கூற்றின்படி சர்வதேச மாணவர்களின் வருடாந்த பொருளாதாரப் பங்களிப்பு $22.3 பில்லியனாக அதிகரித்துள்ளது, இது வாகன உதிரிபாகங்கள், மரக்கட்டைகள் அல்லது விமானங்களின் ஏற்றுமதியை விட அதிகமாகும்.

ஒன்ராறியோவில் சர்வதேச மாணவர் செலவினம் 2015-ல் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு $5.04 பில்லியன் பங்களித்தது. இந்த எண்ணிக்கை 2016-ல் $6.35 பில்லியனாக அதிகரித்தது. சர்வதேச மாணவர்களின் செலவுகள் 2015-ல் 62,737 வேலைகளையும், 2016-ல் 79,034 வேலைகளையும் ஆதரித்தன. பிரிட்டிஷ் கொலம்பியாவும் அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2015-ல் $2.39 பில்லியனில் இருந்து 2016-ல் $2.76 ஆக உயர்ந்துள்ளது. அதே காலகட்டத்தில், பிரிட்டிஷ் கொலம்பியாவில் வெளிநாட்டுப் பதிவுகளால் ஆதரிக்கப்படும் வேலைகள் 35,294-லிருந்து 40,499-ஆக அதிகரித்தன.

கனடாவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களின் பொருளாதார விளைவுகள் ஆழமாகவும் மாறுபட்டதாகவும் இருக்கும். உதாரணமாக, அவர்கள் தங்கள் கல்வியின் அனைத்து அம்சங்களையும் சுதந்திரமாக கையாள வேண்டும் மற்றும் அமெரிக்காவிலிருந்து வரும் மாணவர்களை விட அதிக கல்விக் கட்டணம் செலுத்த வேண்டும். நுகர்வோர் செலவுகள் என்று வரும்போது, சர்வதேச மாணவர்கள் தங்களுடைய பணத்தை வீடுகள், உணவு, போக்குவரத்து, வாடகை மற்றும் பிற வாழ்க்கைச் செலவுகள் போன்ற பல்வேறு பொருட்களுக்குச் செலவிடுகின்றனர்.

இந்தியாவில் இருந்து வரும் சர்வதேச மாணவர்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது, கனடாவின் பெரிய இந்திய கனேடிய சமூகத்துக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன் பதட்டத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது, அவர்கள் நாட்டின் நிறுவப்பட்ட இந்தியப் பகுதிகளுக்குள் மாணவர்கள் ‘தங்கள் வேலைகளைத் திருடுகிறார்கள்’ மற்றும் ‘வன்முறையை ஏற்படுத்துகிறார்கள்’ என்று கூறுகின்றனர்.

## பட்டதாரிப் பின்படிப்பில் பொருளாதார தாக்கம்:

அந்தத் துறைகளில் குறைந்த வேலை வாய்ப்புகள் இருந்த போதிலும், வெளிநாட்டைச் சேர்ந்த மாணவர்களில் கணிசமான பகுதியினர் பொதுவான பட்டதாரிப் பின்படிப்புத் திட்டங்களுக்கு ஈர்க்கப்படும் ஒரு போக்கை வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த மாணவர்கள் பெரும்பாலும் வேலை சந்தையில் குறைந்தபட்ச மதிப்பை வழங்கும் திட்டங்களில் இருந்து பட்டம் பெறுகிறார்கள், இதன் விளைவாக வாழ்நாள் முழுவதும் வருமானம் மிகக் குறைவு. இது முழு-நிலை வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான அவர்களின் திறனைக் கட்டுப்படுத்துகிறது, இதனால் அவர்கள் விரும்பத்தகாதவர்களாகவும், அந்தந்த பணியிடங்களுக்கு தகுதியற்றவர்களாகவும் ஆக்கப்படுகிறார்கள். மேலும் அவர்களின் துறைக்குத் தேவையான தொழில்முறை உரிமங்களையும் அவர்களால் பெற முடியவில்லை. கனடிய சமுதாயத்தில் நீடித்த உற்பத்தி மற்றும் ஒருங்கிணைப்புக்கான அத்தியாவசிய திறன்களை வழங்குவதை விட, பணி அனுமதி பெறுவதற்கான ஒரு வழியாக சர்வதேச மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்குவதில் கவனம் செலுத்துவது சர்வதேச மாணவர்களை மட்டுமல்ல, உள்நாட்டு மாணவர்களையும் எதிர்மறையாக பாதிக்கிறது. வேலை வாய்ப்புகளைச் சர்வதேச மாணவர்கள் நாடுவதால் அவர்களது கல்வி விருத்தித் திறன் குறைந்தநிலையிலேயே காணப்படுகிறது. இதனால் சிறந்த மாணவர்கள் பணி அனுமதி சலுகைகளை வழங்கும் பொதுவான படிப்புகள் கொண்ட திட்டங்களை அடிக்கடி மாணவர்கள் தேர்வு செய்வதை கணக்கெடுப்பு ஒன்று வெளிப்படுத்தி நிற்கிறது. எடுத்துக்காட்டாக, கிராண்டால் பல்கலைக்கழகத்தின் மாஸ்டர் ஆஃப் மேனேஜ்மென்ட் திட்டத்தில் பொதுவாக இதுபோன்ற பட்டங்களின் ஒரு பகுதியாக இருக்கும் கணிதம் தொடர்பான படிப்புகள் இல்லை. இதன் விளைவாக, பொதுவான படிப்புகளால் நிரம்பிய இது போன்ற திட்டங்கள், அந்தத் துறைகளுக்குத் தேவையான வேலைவாய்ப்பு திறன்களுடன் மாணவர்களைத் தயார்படுத்துவது இல்லை. இருப்பினும், சர்வதேச மாணவர்கள் படிப்பு அனுமதியிலிருந்து பயனடைய இந்தத் திட்டங்களைத் தேர்ந்தெடுக்கலாம், இது அவர்களின் குடும்பங்களைக் கொண்டு வரவும், பின்னர் நீட்டிக்கப்பட்ட பிந்தைய மாஸ்டர் பணி அனுமதியின் கீழ் வேலை செய்யவும் அனுமதிக்கிறது. இதேபோல், சென்டெனியல் கல்லூரியில், சில மாணவர்கள் தொழில் நலன்களுக்காக அல்லாமல் நிரந்தர வதிவிடத்திற்கான பாதையாக மக்கள் தொடர்பு போன்ற துறைகளை முதன்மையாக தேர்வு செய்வதை கல்வியாளர்கள் கவனிக்கின்றனர்.

படிப்பு அனுமதியில் இருக்கும்போது நீண்ட மணிநேரம் வேலை செய்வது, நிரந்தர வதிவிடத்திற்கு எளிதாக மாறுவது, வலைத்தொடர்பு அல்லது தங்கள் அரசியல் நோக்கு நிலைகள் என்பன அவர்கள் பாதுகாப்பாக வீடு திரும்புவதற்குத் தடையாக அமைகின்றன. கனடிய ஆய்வு அனுமதிகளில் நேர்மைத்தன்மை இருப்பினும், சர்வதேச மாணவர்களுடனான நேர்காணல்கள் இந்த பிரச்சினை ஒருதலைப்பட்சமானது அல்ல என்பதை வெளிப்படுத்துகின்றன. கனடாவில் உயர்தர கல்வி திட்டங்கள் இல்லை. கனடா ஓராண்டு திட்டங்களை வழங்கினாலும், கட்டமைப்பு ரீதியாக இவை சில வேலைக்குத் தயாரான மற்றும் மதிப்புடன் ஒப்பிட முடியாது என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.



sivapalu@thaiveedu.com



# எழுத்தறிவு முன்னேற்றத்தின் இயந்திரம்

– சி. நற்குணலிங்கம்

ஒரு மொழியை எழுத, வாசிக்க, பேசக் கேட்டுப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றலை எழுத்தறிவு எனக்கூறுவர். பல்வகைப்பட்ட தொடர்பாடல் முறைகளைப் பின்பற்றி, எழுத்தறிவு உள்ள சமூகத்துடன் இணையாக பங்களிக்கக்கூடிய ஆற்றலை எழுத்தறிவு என்று வரையறுத்துக் கொள்ளலாம். எழுத்தறிவு என்பது பல்வேறு சூழ்நிலையில் திறம்பட புரிந்துகொள்ளவும், மதிப்பீடு செய்யவும் மற்றும் தொடர்புகொள்ளவும் மக்களுக்கு உதவும் ஓர் அடிப்படைத் திறனாகும். எழுத்தறிவு பெற்றவர்க்கு வாழ்க்கையில் பல கதவுகள் திறந்திருக்கும். எழுத்தறிவு என்பது முன்னேற்றத்தின் இயந்திரம். எழுத்தறிவு நம் ஒவ்வொருவரின் உரிமையும் அதேசமயம் கடமையும் ஆகும். அத்துடன் சமூகத்தின் கலாசார மற்றும் நாகரிக வளர்ச்சிக்கான ஒரு கருவி. இது தனிமனிதரின் வெற்றியின் காரணி, தேசத்தின் வளர்ச்சிக்கான வித்து. தனிமனிதர் தம் உரிமைகளை பெறுவதற்கும், பாதுகாப்பான வாழ்க்கையை அனுபவிக்கவும் தம் பொருளாதார நிலையைப் புரிந்து கொண்டு தம் வரவு, செலவுகளை நிர்வகிக்கவும் எழுத்தறிவு பயன்படுகிறது. அதுமட்டுமல்ல, அடுத்த தலைமுறையை உயிர்ப்புடன் வைப்பதற்கும் செயற்றிறன் கொண்டதாக மாற்றுவதற்கும் எழுத்தறிவு அவசியமான ஒன்று.

யுனெஸ்கோ எனப் பொதுவாக அழைக்கப்படும் ஐ.நா. கல்வி அறிவியல் கலாசார நிறுவனம் எழுத்தறிவு இன்மையை அகற்றும்பொருட்டு 1965-ம் ஆண்டு செப்டரெம்பர் எட்டாம் நாள் ஈரான் நாட்டின் தலைநகர் தெஹ்ரானில், உலகநாடுகளின் கல்வி அமைச்சர்களின் மாநாடு ஒன்றை நடத்தியது. இம்மாநாட்டில் எழுத்தறிவின்மையால் உலகநாடுகளில் ஏற்படும் அரசியல், பொருளாதாரச், சமூக பிரச்சனைகள் பற்றி விவாதிக்கப்பட்டது. எழுத்தறிவின்மையை அறவே உலகிலிருந்து அழிப்பதற்காக ஆற்றவேண்டிய பணிகள், நடைமுறைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டு பின்னர் அவை, பட்டியலிடப்பட்டு அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. எழுத்தறிவின்மையைப் போக்கும் மகாநாடு நடைபெற்ற செப்டெம்பர் எட்டாம் திகதியைச் சர்வதேச எழுத்தறிவு நாள் என யுனெஸ்கோவின் 14-வது பொதுக்குழு பிரகடனம் செய்தது. 1967-ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் எட்டாம் நாள் சர்வதேச எழுத்தறிவு நாளாக(International Literacy Day) கொண்டாடப்பட்டு வருகிறது.

யுனெஸ்கோவால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சர்வதேச எழுத்தறிவு தினம் தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கான எழுத்தறிவின் மதிப்பை குறிப்பிட்டுக் காட்டும் அதேவேளையில் அனைவருக்கும் எழுத்தறிவு தொடர்பான கல்வியை வழங்குவதற்கான முயற்சிகளையும் ஊக்கிவிக்கின்றது. மனிதகுலத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றங்களுக்குத் தடையாக இருக்கும் எழுத்தறிவின்மையை போக்குவது என்பதை எடுத்துரைப்பதும், எழுத்தறிவின்மையை போக்கிட அரசுகள், உலகநாடுகள் மேற்கொண்டுள்ள பல்வேறு சீரிய திட்டங்களை வெளிப்படுத்துவதும் இந்நாளின் நோக்கமாகும். எந்த மொழியிலும் இலகுவான வசனங்களை எழுதவும், படிக்கவும் தெரியாமை எழுத்தறிவின்மையாகும் என ஐ.நா.-வின் சாசனம் வரையறுக்கிறது.

எழுத்தறிவு தொடர்பான கல்வியில் யுனெஸ்கோ வகிக்கும் பங்கு தந்திரோபாயமானது மற்றும் பயனுள்ளது. இது பல்வேறு சூழல்களில் மாணவர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்களை உருவாக்கி ஊக்குவிக்கின்றது. இந்த திட்டங்கள் பல்வேறு தரங்களில் கற்பவர்கள் எதிர்நோக்கும் தனித்துவமான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் முன்பள்ளிப்பருவ எழுத்தறிவு திட்டங்கள் முதல் வயது வந்தோர் கல்வி முயற்சிகள் வரையாக பல்வேறு செயல்முறைகளை உள்ளடக்கியுள்ளன. அதிநவீன கற்பித்தல் முறைகளை மேம்படுத்துதல், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மற்றும் ஆசிரியர்களைத் தயார்ப்படுத்துதல் ஆகிய யுனெஸ்கோவின் முயற்சிகளால் எழுத்தறிவுக் கல்வியின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. மனித கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஓர் அடிப்படைக்கூறு மொழியியல் பன்முகத் தன்மையாகும். அழியும் அபாயத்தில் உள்ள மொழிகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் யுனெஸ்கோவால் உணரப்பட்டுள்ளது. மொழி தகவல் தொடர்புக்கான கருவியாக செயல்படுவதற்கு மேலதிகமாக அடையாளம், மதிப்புகள் மற்றும் மரபுகளை வடிவமைக்கிறது. பன்மொழிக் கல்வியை ஊக்கிவிக்கும் திட்டங்களை ஆதரிப்பதன்மூலம் மாணவர்கள் தங்கள் தாய்மொழியில் எழுத்தறிவுத் திறனை வளர்த்துக்கொள்ள முடியும் என்பதை யுனெஸ்கோ உறுதி செய்கிறது.

எழுத்தறிவு என்பது எழுத, படிக்கும் திறன் மட்டுமல்ல, அனைவருக்கும் செயல்பாட்டுக்கல்வி மற்றும் அறிவுத் திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக யுனெஸ்கோ நிறுவனம் உலகளாவிய எழுத்தறிவு பிரச்சினைகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதனைக்

கருத்தில் கொண்டு செயற்படுகின்றது. 1945-ல் நிறுவப்பட்ட யுனெஸ்கோ நிறுவனம் கல்வியை மேம்படுத்துவதற்கும் கலாசார தொடர்புகளை ஊக்கிவிப்பதற்கும் அறிவியல் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் கடுமையாக உழைத்து வருகிறது. கல்வி பரவலாகக் கிடைக்கக்கூடியதாகவும் சமமாக விநியோகிக்கப்படக் கூடியதாகவும் மாற்றமடையக் கூடியதாகவும் உலகத்திற்கான பூகோள அமைப்பொன்றை உருவாக்குவதே யுனெஸ்கோவின் நோக்கமாகும்.

எழுத்தறிவின் மதிப்பை எடுத்துரைப்பதன் மூலம் சமத்துவமின்மை மற்றும் வறுமையின் சுழற்சியை முடிவுக்கு கொண்டுவரவும் புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் வாழ்நாள் முழுவதும் கற்றலை மேம்படுத்தவும் முடியும் என்பது யுனெஸ்கோ-வின் நம்பிக்கையாகும். யுனெஸ்கோ அமைப்பானது உறுப்பு நாடுகள், அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில்சமூக அமைப்புகளுடன் இணைந்து செயற்படுகிறது. இதன் காரணம் எழுத்தறிவின்மை மற்றும் கல்வியினால் ஏற்படும் பிரச்சினைகள் எந்தவொரு பிரதேசத்திற்கும் அல்லது சமூகத்திற்கும் தனித்துவமானதல்ல என்பதேயாகும்.

எழுத்தறிவுத் திறன்களை மக்கள், தங்கள் சமூகங்களுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் வழங்குவதன் மூலம் அர்த்தமுள்ள பங்களிப்பினைச் செய்கின்றனர். சமூகங்கள் நிலையான வளர்ச்சியை நோக்கி செயற்பட இப்பணிகள் உதவுகின்றன. எழுத்தறிவு என்பது நிகழ்காலத்தை வடிவமைக்கும் மற்றும் உள்ளடக்கிய பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் ஒரு மாற்று சக்தியாகும். கல்வி அறிவினை ஊக்கிவிப்பதன் மூலம் சகிப்புத்தன்மை, பச்சாதாபம் மற்றும் ஊட்டுறவு சகவாழ்வின் அடிப்படையிலான சமூகங்களுக்கான அடித்தளத்தை இட்டுக்கொள்ளலாம். இப்பணியைத் தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலம் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்திக் கொள்ளலாம்.

எழுத்தறிவை வளர்ப்பதற்காக இரண்டு விதமான பரிசுகளை யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

- UNESCO King Sejong Literacy Prize. இந்தப் பரிசு 1989-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. தாய்மொழியை வளர்ப்பது, அதன் வழியே கல்வியை அளிப்பது என்னும் நோக்கத்திற்கு முக்கியத்துவம் தருகிறது. கொரிய அரசின் உதவியோடு இப்பரிசு வழங்கப்படுகிறது.
- UNESCO Confucius Prize for Literacy என்னும் இப்பரிசு சீன அரசின் உதவியுடன் 2005-ம் ஆண்டுமுதல் வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களில் வசிக்கும் வயதுவந்தோர், பள்ளிகளைவிட்டு வெளியேறியவர்கள் (அதிலும் குறிப்பாக பெண்கள்) ஆகியோரின் கல்வி வளர்ச்சிக்கு பாடுபடுபவர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

ஆரம்பகாலத்தில் உலகநாடுகள் எடுத்த முயற்சியால் குறைந்த பட்சம் 15 வயதுக்கு உட்பட்ட அனைவரினதும் கல்வி அறிவு விகிதம் 86.3% ஆகவும், 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களின் கல்வி அறிவு விகிதம் 90% ஆகவும் சில நாடுகளில் காணப்பட்டது. இருப்பினும் நாட்டுக்கு நாடு பெரிய அளவில் வேறுபாடுகள் இருந்தன. உதாரணமாக பின்லாந்து, நோர்வே, லக்சம்பேர்க் போன்ற இடங்களில் 100% எழுத்தறிவினைப் பெற்றிருந்தன. உலகெங்கிலும் 770 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கல்வி அறிவு அற்றவர்களாக இருப்பதனை யுனெஸ்கோ மதிப்பிட்டுள்ளது. இவர்களால் குறைந்தபட்சம் ஒரு மொழியில் படிக்கவோ, எழுதவோ முடியாது. இந்த எண்ணிக்கையில் பெரும்பாலோர் பெண்கள். அவர்களிலும் பாதிக்கு மேற்பட்டோர் பெரியவர்கள்.

குறைந்த வருமானம் கொண்ட ஆபிரிக்க நாடுகளில் 40% இற்கும் குறைவான மக்கள் கல்வி அறிவுள்ளவர்கள். உலகெங்கிலும் பள்ளிக்குச் செல்லாமல் 103 மில்லியன் குழந்தைகள் உள்ளதாக யுனெஸ்கோவின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அனைவருக்குமான கல்வி பற்றிய உலக அறிக்கையை 2006-ம் ஆண்டு யுனெஸ்கோ வெளியிட்டது. அந்த அறிக்கையின்படி தெற்கு மற்றும் மேற்கு ஆசியாப் பகுதிகளிலே வசிக்கும் வயதுவந்தோரில் 58.6% விகிதத்தினர் கல்வியறிவு இல்லாமல் இருக்கின்றனர். அதற்கு அடுத்தபடியாக ஆபிரிக்காவில் 59.7 வீதத்தினர் கல்வியறிவற்றவராகவும் அரபுநாடுகளில் 62.7% வீதத்தினர் கல்வியறிவற்றவராகவும் காணப்படுகின்றனர். எழுத்தறிவின்மைக்கும் நாடுகளின் வறுமைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பையும் இந்த அறிக்கை காட்டுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளுடன் சர்வதேச எழுத்தறிவுதினம் கொண்டாடப்படுகிறது. கருப்பொருளின் மூலம் மக்கள் மத்தியில் எழுத்தறிவு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுகின்றது.

2030-ம் ஆண்டுக்குள் எழுத்தறிவு வளர்ச்சியை உறுதி செய்வதற்காக பின்வரும் இலக்குகளை யுனெஸ்கோ தீர்மானித்துள்ளது. உலகில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான, சமச்சீரான, முற்றிலும் இலவசக் கல்வியை (தொடக்க நிலை முதல் இடை நிலை வரை) உரிய வகையில் அளித்தல், அதற்கு முன்பாக தொடக்கப் பள்ளிக்கு தயார்ப்படுத்தும் பொருட்டு பள்ளி வயதுக்கு முன்பாக முன்தொடக்க நிலைக் கல்வியை அதற்குரிய வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் வழங்குதல், தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, உயர்கல்வி ஆகிய நிலைகளில் அனைவருக்கும் சமவாய்ப்பு அளித்தல், கல்வியில் அனைத்து நிலைகளிலும் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல், அனைத்து இளைஞர்களும் எழுத்தறிவு பெறுவதை உறுதி செய்தல் முதலான இலக்குகளை யுனெஸ்கோ தீர்மானித்துள்ளது.

உலக எழுத்தறிவு நாளில் கல்வி சார்ந்த களங்களில் இயங்குபவர்கள் மனப்பூர்வமாக சில உறுதிமொழிகளை நமக்கு நாமே எடுத்துக்கொண்டு செயற்பட்டால், கற்றோர் நிறைந்த அமைதியான உலகத்தை உருவாக்கி, போர்கள் இல்லாத வன்முறையற்ற வாழ்க்கைக்கு அடித்தளம் இடலாம். ஆதலால், கல்வியறிவற்ற பாமர மக்களுக்கு அறிவூட்டி, சிறந்த சமூகத்தை உருவாக்க இன்றே நாமனைவரும் முன்னின்று உழைப்போம்.



natkunalingam@thaiveedu.com

# கோடைகாலத் துவிச்சக்கர வண்டிகள்

– செந்தூரன் புனிதவேல்

காப்புறுதி முகவராகக் கடமையாற்றுகையில், பெரும் இழப்பு மற்றும் காயங்களுடன் கூடிய கேட்பனவுகளை விட வும், சிறு சீராப்பு, நெளிவு போன்ற விபத்துகளும் அதன் இழப் பிற்கான கேட்பனவுகளுமே அதிகமாகும். இதனால் ஏற்படும்



பண இழப்புகளை விடவும், அது ஏற்பட்டுத்திய அலைச்சல் கூடிய அளவாய் இருப்பதுமுண்டு.

உதாரணத்திற்குத் தெருவில் வாகனத்தைச் செலுத்திக் கொண்டு சிகரெட்டைப் பற்றவைப்பதற்காகக் கவனத்தைத் திசை திருப்பிய வேளை, முன்னால் சென்றுகொண்டிருந்த வாகனத்திற்குப் பின்னால் முத்தம் கொடுத்த கேட்பனவும் உண்டு. முன்னால் வாகனத்தைச் செலுத்திய எனது வாடிக் கையாளர் பின்னால் வந்த சாரதியின் வாய்மையை மெச்சத் தவறவில்லை. இது நிச்சயமாகத் தவிர்க்கக் கூடிய விபத்து அல்லவா?

இக்கால கட்டத்தில் ஒரு சிறு யன்னல் ஊடாகக் கோப்பி, தேநீர் வியாபாரம் நடக்கும் வேளையில் வாகனங்கள் நிரை யாக நின்று பொறுமையாகக் கோப்பியைப் பெற்றுச் செல் வதை நீங்கள் அறிவீர்கள். இத்தகைய வேளைகளில் நேரத் தைப் பயனுடையதாக்குவதற்காகப் பலரும் தொலைபேசி யில் கதைக்க முற்படுகிறார்கள். இறுதியில் இவர்கள் கவனம் திசை திருப்பப்பட்டு முன்னாலிருக்கும் வாகனத்திற்கு இடித் துக் கேட்பனவுகளுக்குச் செல்வதுடன், அவர்கள் கட்டணமும் உயர்வடைகிறது.

சில சந்தர்ப்பங்களில் எனது வாடிக்கையாளருடைய வாகனத் தைப் பின்னால் வந்தவர் இடித்து விட்டு, குற்றம் முன்னால் இருந்தவருடையதேயென வாதிடும் சம்பவங்களும் உண்டு. இத்தகைய வேளைகளில் ‘Dash Cam’ எனும் வாகனத்தில் பொருத்தப்படும் கமராக்கள் குற்றத்தை நிரூபிப்பதற்குப் பெரும் துணையாய் அமையும். இன்னும் ஒரு வினோதமான விபத்து, வாகனத்தைப் பின்னோக்கி நகர்த்தித் தனது அயல் வீட்டுக்காரர் நிறுத்தியிருக்கும் வாகனத்தைக் கவனியாமல் இடித்து விடுகிறார்கள். பொதுவாக அவரது அயலவர் வாக னத்தை நிறுத்தாத இடத்தில் வாகனம் இருக்காதென நம்பிப் பின்னகர்த்தி இடிபடுவதும் உண்டு.

### கவனத் திசை திரும்பிய விபத்துகள்:

சஸ்கட்சுவான் (Saskatchewan) அரசாங்கக் காப்புறுதி அமைப்பானது, இத்தகைய கவனத் திசைதிரும்பிய விபத்து களின் விளைவாக யூலை மாதத்தை மக்கள் கவனயீர்ப்பு மாதமாகக் கொண்டு பல விளம்பரங்களை வெளியிட்டுள் ளார்கள்.

உதாரணத்திற்கு ‘உங்கள் தலையை உயர்த்தி வையுங்கள், கைத்தொலைபேசியைக் கீழே வையுங்கள்’ எனும் வாசகத் தைப் பிரபல்யப்படுத்தியுள்ளார்கள். அரசாங்கக் காப்புறுதிய மைப்பு கீழ்கண்ட அறிவுறுத்தல்களைப் பெரிதும் பரப்புரை செய்துவருகிறது.



- வீதி கடக்கும் நடைபாதையில் அனைவரும் கடக்கும் வரை வாகனத்தை நிறுத்தி வையுங்கள்.
- கடக்கும் நடைபாதையில் நிறுத்தி வைத்திருக்கும் வாக னத்தைக் கடந்து செல்ல முயற்சிக்காதீர்கள்.
- வீதியில் செல்லும் வாகனங்களைக் கவனிக்கும் வேளை யில் நடை பயணிகளைக் கவனியாதிருக்காதீர்கள்

எனப் பலவாறும் அறிவுறுத்துகிறார்கள்.

All state காப்புறுதி நிறுவனம் நடத்திய அண்மைக்காலக் கணக்கெடுப்புப்படி, 47 வீதமான சாரதிகள் வாகனத்தில் வரும் தமது செல்லப் பிராணிகளை ஒருவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக விடுவதாகவும், இருபது விகிதமான வர்கள் தங்கள் செல்லப் பிராணிகளை வாகனத்தின் பின்னி ருக்கையில் சுதந்திரமாக விடுவதாகவும், 6 வீதமான சாரதி கள் செல்லப் பிராணிகளை தங்கள் மடியிலிருத்திய வண் ணம் வாகனத்தைச் செலுத்துவதாகவும் கண்டறிந்துள்ளார் கள்.

ஆனால் காப்புறுதி நிறுவனங்களோ, நல்ல காற்றோட்டமு டைய கூடுகளில் செல்லப் பிராணிகளை வைத்து, கூடுகளை வாகனத்துடன் இறுக்கிக் கட்டி வைப்பதற்கு அறிவுறுத்துகி றார்கள்.

### மோட்டார் சைக்கிள்கள்:

மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள், பாதைக்குக் குறுக்கே தம்மை மற்றவர்கள் இடைமறிப்பதாகத் தெரியப் படுத்தியுள் ளார்கள்.

மோட்டார் சைக்கிள் சாரதிகள் உட்பட எல்லாச் சாரதிகளும் நினைவில் கொள்ளவேண்டிய ஒரு விடயம், தாங்கள் செலுத் தும் திறமையில் அவதானமாக இருப்பதுடன், மற்றைய சாரதி களின் செலுத்தும் திறமையிலும் அவதானமாய் இருக்க வேண்டும் என்பதே.

சஸ்கட்சுவான் அரச அறிவித்தலின்படி, மோட்டார் வண்டி, துவிச்சக்கர வண்டி, E-Scooters போன்றவை மற்ற வாகனங்க ளிலும் சிறியவை என்பதுடன் அவற்றை உங்கள் பார்வைக் குள் வைத்திருப்பது கடினம் என்பதை, எல்லா வாகனமோட்டி களும் உணர வேண்டும் என்பதுடன், போதிய இடைவெளி விட்டு வாகனத்தைச் செலுத்த வேண்டும் என்பதுமாகும்.

குறிப்பாக இடது பக்கச் சந்திகளில் திருப்புகையில் சிந்திப்பு டன் செயற்பட வேண்டும். மோட்டார் சைக்கிள் போன்ற சிறு வாகனங்கள் மற்றைய வாகனங்களின் பின்னால் மறைந்து வந்து கொண்டிருக்கலாம் மீண்டும் மீண்டும் அவதானித்து நோக்கிய பின்தான் வாகனத்தைத் திருப்புங்கள்.

நீங்களும் உங்கள் வேகத்தைக் கட்டுப்படுத்தி சிறப்பாக வாழுங்கள். வீதிகளில் வாகனம் செலுத்துவது உங்கள் உரிமை என்பதுடன், உங்களுக்கென ஒரு கடமையும் உண்டு. அதாவது ஆறுதலாக, அவதானமாக உங்கள் வாகனம் செலுத்தும் உரிமையைப் பாவிப்பது. இப்போது கோடை காலமாதலால் துவிச்சக்கர வண்டிகள் நிறையவே வீதியில் பவனி வருகிறது. கவனமாய் உங்கள் வாகனத்தைச் செலுத்துங்கள்.



senthuran.p@thaiveedu.com




பொதுப்படையாகக் கூறுவதானால் பாவனையில் இல்லாத உபகரணங்களை நிறுத்தி விடுங்கள். ('If You Aren't Using It - Shut It Off') இங்கு வானொலி, கம்பியூட்டர், குளிரூட்டிகள், தொலைக்காட்சி உட்பட மின் விளக்குகளும் உள்ளடக்கப்படுகின்றது.

வீடுகளில் பல தேவைகளுக்காக மின்சாரம் பாவிக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் எத்தகைய வழியில் மின்சாரத்தைச் சேமிப்பதன் மூலம் செலவைக் குறைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி அறிந்திருப்பது சிறந்தது.

### குளிர் ஊட்டிகள் (Air conditioning):

பலரும் கோடைகாலத்தில் AIR CONDITION-ஐப் பாவிப்பது வழக்கம். வீட்டில் நாம் பாவிக்கும் மின்சார உபகரணங்களில் மிக அதிக அளவு மின்சாரத்தை நுகரக் கூடியதும் அதிக செலவை ஏற்படுத்தக் கூடியதும் குளிரூட்டிகள் என்றால் அது மிகையல்ல. எனவே இதனை மிகத் தேவையான நேரங்களில் மட்டும் பாவித்து, அதற்கான பதிலீட்டு வழிகளில் ஈடுபடுதல் நல்லது.

மிக அதிகளவு மின்சாரத்தை நுகர்வதனால் மிக அதிகளவு செலவை ஏற்படுத்தக் கூடியவை குளிரூட்டிகள். எனவே அவற்றை மிக அவசியமான போது மட்டும் பாவிப்பது நல்லது. THEMOST CONTROLER-ஐ 23-25$^{C}$ பாகைக்கு மேல் இயங்கும் விதத்தில் பாவித்தல் சிறந்ததும் இலாபகரமானதும் ஆகும். தவிர இயற்கையான முறைகளில் வெப்பத்தை தணிக்க வழி காண்பது மேலும் பலன் தரவல்லது.

### மேலும் சில ஆலோசனைகள்:

- வீடு சூடேறதவாறு பார்த்துக் கொள்ளல். அதாவது மாலை தொடக்கம் இரவு நேரங்களில் சாளரங்கள் ஊடாக குளிர் காற்றை உள்வாங்கி, பகல் வேளைகளில் உள்வாங்கப்பட்ட குளிர் காற்றை தப்பித்துவிடாது பார்த்துக்கொள்ளல். ('Keep the heat out & invite the cool air in')
- உஸ்ணம் கூடிய வேளைகளில் சூடான காற்றை மின் விசிறி மூலம் வெளியேற்றல்.
- திரைச் சேலைகளை பகலில் மூடி இரவில் திறந்து விடல்.
- ATTIC பகுதியில் கோடை காலத்தில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும். அந்த வெப்பத்தை தணிக்க பல மணி நேரம் குளிரூட்டிகள் இயங்க வேண்டி இருக்கும். ATTIC-இல் தலைக்கு மேலே அடைபட்டிருக்கும் வெப்பமான காற்றை வெளியேற்ற காற்றாடிகள் (FAN) போடப்பட்டால் உங்களது மின்சாரச் செலவில் பாரிய வித்தியாசத்தைக் கண்டு கொள்ள முடியும். அத்துடன் இத்தகைய காற்றாடிகள் கூரையின் ஆயுட் காலத்தைக் கூட்டவும் உதவும். 'ஒரு கல்லில் இரு மாங்காய்' என்பது இங்கு சாலவும் பொருந்தும்.
- நிலக்கீழ் அறை உள்ளவர்கள் கோடை காலத்தில் அங்கு அடைபட்டிருக்கும் குளிர்காற்றை மேற் பகுதிக்குப் பரப்புவதன் மூலம் வீடு வெப்பமாவதைக் குறைக்க முடியும்.
- FURNACE உடன் பொருத்தப்பட்டிருக்கும் காற்றாடியைத் (Blower) தனியாகப் பாவிப்பதில் எந்தவித தப்பும் கிடையாது. குளிரூட்டியுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மின்சாரத்தை மட்டுமே காற்றாடிகள் நுகர்கின்றன.

### சமைத்தல்:

எம்மவர் மத்தியில் சமையற்கலை மிகப் பிரபல்யமானது. நீண்ட நேரம் சமைப்பதில் பலருக்கு இன்பம். ஆனால் மாதாந்த கட்டணங்கள் செலுத்தப்படும் போது அதன் தார்ப்பரியம் பலருக்கும் புரிவதில்லை. தொடர் மாடிக் கட்டடத்தில் இருப்பவர்களுக்கு இதனைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது. பிறரது செலவில் சமையல் செய்து சம்பாதிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் சில தொடர் மாடிக் கட்டட குடியிருப்பாளர்கள். எது எப்படியாயினும் சமையல் துறையில் மின்சாரத்தைக் கட்டுப்படுத்த சில ஆலோசனைகள்:

- மின்சாரத்தில் இயங்கும் அடுப்புகளை விட GAZ-ல் இயங்கும் அடுப்புகள் சிக்கனம் வாய்ந்தவை. அத்துடன் பழைய அடுப்புகளை விட புதிய அடுப்புகள் (ENERGY EFFICIENT) குறைந்த அளவு மின்சாரத்தை உள்வாங்கி அதிகளவு வெப்பத்தைத் தரக்கூடியவை. எனவே பழைய அடுப்புகளைத் திருத்துவதைவிட புதிய சிறந்த அடுப்புகளை பிரதியீடு செய்வது பற்றியும் சிந்திக்கலாம்.
- அடுப்புச் சூடாக இருக்கும் போதே மேலதிக உணவுகளை தயார் செய்யலாம். அடிக்கடி அடுப்பைப் போடுவதைத்

தவிர்ப்பது நல்லது.

- சூடாக இருக்கும் போதே OVEN-ஐ சுத்தம் செய்வது நல்லது. இங்கு குறிப்பிடப்படுவது தானே சுத்தமாக்கும் அடுப்புகள். (SELF CLEANING OVEN)
- சமைக்கும் போது மூடிச் சமைத்தல் விரயத்தை தவிர்க்கக் கூடியது. அத்துடன் சூழலையும் பாதுகாக்கும்.
- அமுக்க முறையில் இயங்கும் பாத்திரங்கள் (Pressure Cookers) மிக இலாபகரமானது. நேரத்தையும், பணத்தையும் சேமிக்கக் கூடியவை.
- MICROWAVE-இன் பாவனையைக் கூட்டுவது இலாபகரமானது. சாதாரண MICROWAVE, 1.6 KW மின்சாரத்தை நுகர்ந்து 600W சக்தியை உருவாக்குகிறது. நேரத்தை மீதப்படுத்தும் அதேவேளை சாதாரண அடுப்புகளுடன் ஒப்பிடும் போது 50% - 75% வரை செலவைக் குறைக்கவல்லது என சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
- அடுப்பில் பாத்திரங்களை வைக்கும் போது பாத்திரத்தின் அளவுக்குத் தகுந்த மாதிரியான அளவான அடுப்பைப் பாவிப்பதும், அவை பொருந்தக்கூடிய விதத்தில் நடுவில் வைப்பதும் வீணான வெப்ப விரயத்தைத் தவிர்க்க வழிவகுக்கும். உதாரணமாக அப்பச் சட்டியை சாதாரண அடுப்பில் வைத்தால் நுகரப்படும் வெப்பத்தை விட விரயமாகும் வெப்பம் தான் அதிகமாக இருக்கும். புத்திசாலியான சிலர் அதற்கென சில உலோக வளையங்களைப் பாவிக்கிறார்கள்.

## வெளிப்புற விளக்குகள் (Exterior Lights):

**SOLAR LIGHTS (சூரியக்கதிரில் இயங்குபவை):**
வீட்டிற்கு வெளியே பாவிக்கக்கூடிய சூரிய ஒளியில் இயங்கக் கூடிய பூந்தோட்ட விளக்குகள் பிரபல்யம் அடைந்து வருகின்றன. பகலில் உள்வாங்கும் சூரிய ஒளியை சேமித்து இரவில் வெளிச்சம் தரும் இத்தகைய விளக்குகள் மிக இலாபகரமானவை. மிக அழகான பல்வேறு வடிவங்களில் இவை சந்தைப்படுத்தப்படுகின்றன. இவற்றைப் பொருத்துவதும் மிக இலகு. மாதிரிப்படங்களை கீழே காணலாம்.

**SENSOR LIGHTS / MORTION LIGHTS:**
அசைவுகளைக் கண்டதும் குறிப்பிட்ட நேரத்திற்கு தானே இயங்கி தானாக நிற்கும் மின்விளக்குகளும் பயன் உள்ளவை. வீட்டிற்கு வெளியிலும் வாசல் போன்ற பகுதிகளிலும் இவற்றைப் பயன்படுத்தலாம். இவை மின்சாரத்தைச் சேமிக்க உதவும் அதேவேளை பாதுகாப்பையும் (Security) தரவல்லவை. பொருத்தமான இடங்களில் வீட்டிற்கு உள்ளும் இவற்றைப் பயன் படுத்தலாம். குறிப்பாக நிலக்கீழ் அறைக்குச் செல்லும் படியில் உள்ள விளக்குகள் பல வீடுகளில் நீண்ட நேரம் எரிவதை அவதானிக்க முடியும். படியை அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் தானே on ஆகி சில நிமிடத்தில் தானே நிறுத்தப்படுமானால் அது காலப் போக்கில் குறிப்பிட்ட சேமிப்பிற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இரவு நேரத்தில் தானே on ஆகி சூரிய ஒளியைக் கண்டதும் நிறுத்தப்படும் விளக்குகளும் பாவனையில் உள்ளன. தானே இயங்கி, தானாக நிறுத்தப்படும் தன்மை வாய்ந்தவை. ஆனாலும் இரவு முழுவதும் தொடர்ந்து எரிவது அவசியமா என்பதையும் சிந்திக்க வேண்டும். சில பூந்தோட்ட விளக்குகள் இரவில் தானே on ஆகிய போதிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் நிறுத்தப்படக்கூடிய கட்டுப்பாட்டைக் கொண்டவை. (1மணி, 2மணி, 3மணி) இவற்றை உரிய முறையில் பாவித்தால் அதன் மூலம் பயன் பெறமுடியும்.





சில வீடுகளின் அமைப்பை உற்று நோக்கினால் மின் விளக்குகளை பாவிக்க வேண்டிய அவசியமே இல்லாத அளவு இயற்கையான வெளிச்சம் உள்ளவையாக இருக்கும். வீடுகள் அவ்வாறு அமைவது அவரவர் அதிஸ்டத்தைப் பொறுத்தது. மாறாக இருண்ட வீடுகளில் அதிகளவு நேரம் பாவிக்கப்படும் மின் விளக்குகளுக்கு, LED Blubs,Timer, Tube light போன்றவற்றைப் பாவிப்பது காலப் போக்கில் அதிக பலனைத் தர வல்லது. புதிய தொழில்நுட்பத்தில் சிறிது தொகைப்பணம் முதலீடு செய்வது என்பது இலாபகரமானது. சிலர் வீட்டில் விழிப்பாக இருக்கும் போது கூட இருட்டில் தான் இருப்பார்கள். சிலரது வீடுகளில் சிறியவர் தொடக்கம் முதியவர் வரை தேவையற்ற விளக்குகளை நிறுத்துவதில் மிகக் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். மாறாக வேறு சிலர் வீடுகளில் எப்போதும் ஏதோ கொண்டாட்டம் நடப்பது போல் ஒரே வெளிச்சமாக இருக்கும். சிலர் படுக்கைக்குச் செல்ல இரவு 1 மணிக்கு மேலாகும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பங்களைப் பாவிக்கும் போது ஏற்படக் கூடிய பலாபலன்களின் அளவுகள் எம்மவரின் பழக்க வழக்கத்திற்கு ஏற்றவாறு மாறுபடக் கூடியது.

## சேமிப்புக்கான மேலும் பல உபாயங்கள்:

- கதவுகளையும் யன்னல்களையும் முறையான அடைப்புகள் (Weather Stripe) கொண்டு இறுக்கமாக மூடுவதன் மூலம் 25% சக்தி வியரத்தைச் சேமிக்கலாம்.
- சூரிய வெளிச்சம் வீட்டிற்குள் வரும்விதத்தில் யன்னல் திரைச் சேலைகளை பகல் வேளைகளில் திறந்து வைப்பதன்மூலம் வீட்டினை இயற்கை முறையில் வெப்பமாக வைத்திருக்கலாம்.
- மரக்கட்டைகள் கொண்டு இயங்கும் தீவறை (Fire Place) இதமாக இருந்தாலும் அது பாவிக்கப்படாத நேரத்தில் அதன் உள்ளிருக்கும் கதவை (Flue Shut) இறுக்கமாக மூடி வைத்திருத்தல் வேண்டும். அல்லது வீட்டின் வெப்பம் விரயமாகி, வீடு குளிரடைய அதனை நிகர் செய்ய Furnace ம் மேலதிகமாக இயங்குவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.
- பண்டிகைக்கால விளக்குகளையும் வீட்டில் உள்ள மின்குமிழ்கள், மற்றும் விளக்குகளையும் LED க்கு மாற்றுவதன் மூலம் 75- 80% மின்சாரத்தை சேமிக்கலாம்.
- பாவிக்காத மின்சார உபகரணங்கள் அனைத்தையும் முற்



றாக நிறுத்திவிடவும், உறங்கு நிலையில் (sleep) வைக்கப்பட்டிருக்கும் உபகரணங்கள் சுமார் 10% மின்சாரத்தை விரயம் செய்வதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
- சலவை செய்யும் இயந்திரத்தை குளிர் தண்ணீரில் சலவை செய்யும் நிலைக்கு மாற்றுவதன்மூலம் 90% சக்தி விரயத்தைத் தவிர்க்கலாம்.
- எரிவாயுவினால் இயங்கும் அடுப்பினைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலமும் நடுத்தர அளவிலான சுவாலையை பாவிப் பதன் மூலமும் உச்ச பயனை அடையலாம்.
- 6 அங்குல விட்டமுள்ள பாத்திரத்தை 8 அங்குல விட்டமுள்ள அடுப்பில் உபயோகித்தல் 40% அடுப்பின் வெப்பத்தை விரயமாக்கக் கூடியது. பாத்திரத்தின் அளவுக் கேற்ற அடுப்பைப் பாவிப்பதே உத்தமமானது.
- சாதாரண அடுப்புகளுடன் ஒப்பிடுகையில் Microwave 75%-க்கும் குறைவான மின்சாரத்தையே பாவிக்கின்றது.
- மூடிய அடுப்பில் (Stove) வெதுப்பும் போது (Baking) அடிக்கடி திறந்து பார்த்தல் 20%-க்கு மேற்பட்ட வெப்பத்தை விரயமாக்கும்.
- பாத்திரத்தை மூடிச்சமைப்பதன் மூலம் 14% சக்தியை சேமிக்கலாம்.
- மின்சார உலர்த்திக்குப் பதிலாக, காற்றில் உலரும் விதத்தில் Dish Washer-ஐ பாவிப்பதன் மூலம் 15% சக்தியை சேமிக்கலாம்.
- முகட்டு காற்றாடியை (Ceiling Fan) பாவிப்பவர்கள் கோடைகாலத்தில் காற்றோட்டத்தை மேலிருந்து கீழ் நோக்கி வருமாறு திருப்பி விடுங்கள். Reversing the rotation of your ceiling fan to counter-clockwise during the summer is a small adjustment that yields significant benefits.
- மின்சார உபகரணங்களை ஒரு Power Bar ஐ இணைத்து, பாவனையற்ற காலங்களில் Power Bar-ஐ முற்றாக நிறுத்தி விடல் உசிதமானது.
- மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெப்பமாக்கியின் (Furnace) வடி கட்டியை (Air Filter) மாற்றிவிடுவது அதன் தொழிற்பாட்டின் திறனை அதிகரிக்கவும், சக்தி விரயத்தைச் சேமிக்கவும் வழி வகுக்கும்.
- Dimmer, Timer என்பவற்றை பாவிப்பதன் மூலம் அதிக ளவு மின்சாரத்தைச் சேமிக்கலாம்.
- விடுமுறைக் காலங்களில் வீட்டில் பலர் பிரசன்னமாக இருப்பதும் நீண்டநேரம் குளிப்பதும் பொதுவாகவே இருக்கும். Energy Star Shower Head களை பாவிப்பதன் மூலம் தண்ணீரை மட்டு மல்ல சுடுநீரையும் சேமிக்கலாம்.
- விடுமுறைக் காலங்களில் பலமுறை செய்யும் வெதுப்பும் வேலைகளைத் திட்டமிட்டு ஒரே தடவையில் செய்தல் பல விதத்திலும் சேமிப்பைத்தரும்.
- உங்கள் வீட்டின் வெப்பத்தின் அளவை Themostat-ல் 1 Degree குறைப்பதன் மூலம் உங்கள் வெப்பமாக்கல் செலவில் 3% ஐ சேமிக்க முடியும்.
- படுக்கை நேரத்தில் Themostat ஐ $18^c$ - $20^c$-க்கு மாற்றிவிடப் பழகுவதன் மூலம் வெப்பமாக்கல் செலவில் 10%-ஐ குறைக்க முடியும்.
- வீட்டுத் தேவைக்கு வாங்கும் மின் உபகரணங்கள் யாவும் Energy Star தரம் கொண்டவையானவையா ? என உறுதி செய்து கொள்ளுங்கள். புதிதாகக் கட்டப்படும் Energy Star வீடுகளுக்கு எல்லோராலும் மாறமுடியாது ஆனால் பாவிக்கும் உபகரணங்களை எல்லோராலும் Energy Star க்கு மாற்ற முடியும். அதனால் பாரிய அளவு பலனை அடையவும் முடியும். மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் எல்லோராலும் எந்த நேரத்திலும் செய்ய முடியாது. ஆனால் முடிந்தளவு ஒரு சிலவற்றைக் கவனத்தில் கொண்டாலே போதுமானது. சிறு துளி பெருவெள்ளம் அது சேமிப்பிற்கும் பொருந்தும்.

**உசாத்துணை:**
http://www.energy.gov.on.ca



velasubramaniam@thaiveedu.com




இந்த அகிலம் நொடிக்கு நொடி நாகரீக வளர்ச்சிப் படிகளை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது என்ற நிதர்சனத்தைப் போன்றே காலத்திற்குக் காலம் எம் மத்தியில் உலவும் சில மூட நம்பிக்கைகளும், பிரம்மைகளும் மனித சமூகத்தை ஊடறுத்தக் கொண்டே பயணிக்கின்றது என்பதும் மறுதலிக்கப்பட முடியாத உண்மையாகும். அந்த வகையில் மேற்குலக நாடுகளில் அதிகம் பிரபல்யமான காட்டேறி நம்பிக்கைகள் குறித்த ஓர் ஊடாடலாக இந்தப் பத்தி அமைகின்றது.

காட்டேறிகள் பற்றிய பதிவுகள் 18-ம் நூற்றாண்டின் இடைக் காலத்திலேயே தொடங்கியது. அக்காலப்பகுதியில் செர்பியாவில் மக்கள் அதிகளவில் மர்மமான முறையில் உயிரிழக்க தொடங்கினர். இந்த மரணங்கள் சம்பவித்தமைக்கு அயலவர்களின் ஆவிகளே காரணம் எனக் கருதப்பட்டது. உயிரிழந்தவர்கள் உயிரிழப்பதற்கு முன்னதாக மூச்சுத் திணறி அல்லது அதிகளவு சுவாசித்து உயிரிழந்திருந்தனர். குறிப்பாக இரண்டு கிராமங்களில் அதாவது சைபீரியாவின் வடபகுதியில் அமைந்துள்ள மெட்வெஜா மற்றும் ஈசான மூலையில் அமைந்துள்ள கிசிலேவா ஆகிய இரண்டு கிராமங்களிலும் இவ்வாறான மரணங்கள் பதிவானதாகத் தகவல்கள் வெளியாகின.

இந்த இரண்டு கிராமங்களும் ஒன்றிலிருந்து ஒன்று இருநூறு கிலோ மீட்டர் தொலைவில் காணப்பட்ட போதிலும் ஒரு தசாப்த காலத்தில் ஒரே விதமான முறையில் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலான சம்பவங்கள் இந்த இரண்டு கிராமங்களிலும் பதிவாகியிருந்தன. இதன்படி இந்த மரணங்களுக்குக் காரணமென்ன என்பது குறித்து ஆராய்வதற்காக ஆஸ்ட்ரியாவின் மருத்துவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் ஆய்வு மூலம் கண்டுபிடித்த விபரங்களை விரிவான அறிக்கையாக வெளியிட்டனர். இந்த அறிக்கை தொடர்பில் ஆஸ்ட்ரிய ஊடகங்கள் அறிந்து கொண்டதால், இது தொடர்பான பல்வேறு ஊடாடல்கள் அப்பொழுது எழுந்தன.

ஜெர்மனிய வரலாற்று ஆய்வாளர் தோமஸ் பொன் என்ற ஆய்வாளர், காட்டேறிகள்: உருவாக்கம் ஐரோப்பியக் கட்டுக் கதை (Vampires: The Origin of the European Myth) என்ற நூலை எழுதியிருந்தார். 1725-ம் ஆண்டு வெயினிரிச்சஸ் டியாரியும் (Wienerisches Diarium) என்ற ஆஸ்ட்ரிய நாளிதழில் வெம்பயர் அல்லது காட்டேறி என்ற சொல்லாடல் முதல் முதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை இந்நூல் உரைத்திருந்தது. வெம்பயர் அல்லது காட்டேறி மனிதர்களின் இரத்தத்தை உணவாக உட்கொள்ளும் ஓர் உயிரினமாக அடையாளப் படுத்தப்பட்டது. இது ஓர் கட்டுக்கதையாகக் குறிப்பிடப்படுகிறது. உலகம் முழுவதிலும் காணப்படும் கலாசாரங்களில் காட்டேறிகள் தொடர்பில் பல்வேறு சுவையான கதைகள் காணப்பட்டாலும், மேற்கு ஐரோப்பாவில் வெம்பயர் என்ற சொல்லாடல் 18-ம் நூற்றாண்டில் இடம்பெற்ற சம்பவங்களின் அடிப்படையில் உருவானது.

### பேயின் செயல்:

1725-ம் ஆண்டு கிஸ்லேவாப் பகுதியில் இரண்டு நாட்களுக்குள் ஒன்பது பேர் உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் உயிரிழப்பதற்கு முன்னதாக ஒரு அயலவர் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். இதற்கு முன்னர் உயிரிழந்த பீட்டர் ப்லோகோ-ஜெவிக் (Petar Blagojevic) என்ற நபர் கனவில் தோன்றித் தங்களது கழுத்தை நெரிக்க முற்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இந்த விடயம் பற்றி அறிந்துகொண்ட பிரதேச மக்கள் ப்லோகோஜெவிக்கின் உடல் அடக்கஞ் செய்யப்பட்டிருந்த புதைக்குழியைத் தோண்டினர், அழுகாத நிலையிலிருந்த குறித்த நபரின் சடலத்தை மீட்டெடுத்தனர். முகம், கண், கைகள் மற்றும் பாதமென அனைத்து உறுப்புகளும் ஒருசேர உயிருடன் இருப்பது போன்று காணப்பட்டதெனவும் இது பேயின் செயலாக இருக்குமெனவும் மக்கள் கருதினரென ஆஸ்ட்ரிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருந்தார். இந்தச் சடலத்தின் வாயைப் பார்த்தபோது தாம் அதிர்ச்சியடைந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார். அதில் புதிய ரத்தம் காணப்பட்டதாகவும் பொதுவான மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் அது குறித்த நபரினால், கொல்லப்பட்ட மக்களிடமிருந்து உறிஞ்சிய இரத்தமாக இருக்கலாம் எனவும் ஆஸ்ட்ரிய அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

டப்பளின் திருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் கிளமெண்ஸ் ருத்னெர் (Clemens Ruthner) இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். ஆஸ்ட்ரிய மருத்துவர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் ஆய்வு செய்யும்போது அவர் உள்ளூர் மொழிபெயர்ப்பாளர்களுடன் உரையாடிய சந்தர்ப்பத்தில் வெம்பயர் என்ற சொல் உருவானதாகத் தெரிவித்திருந்தார். மொழிபெயர்ப்பாளர் உபேர் (upir) போன்ற ஒரு வார்த்தையைக் கூறியிருக்கலாமெனவும் அது பேய்களைக்



குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஸ்லோவேக்கிய வார்த்தையென்பதைப் பிழையாக விளங்கிக் கொண்ட பேரா சிரியர் ருத்னெர், வெம்பயர் என்ற பெயரை பேய்கள் என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தினார். படித்தவர்களென அடை யாளப்படுத்தப்பட்ட ஆஸ்ட்ரிய அதிகாரிகளுக்கும், பாமரர்-களெனக் கருதப்பட்ட கிராமிய மக்களுக்கும் இடையிலான காலனித்துவச் சந்திப்பின்போது உருவான ஓர் உயிரினமாக இந்த வெம்பயர் கருதப்படுகிறதெனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

கிராமத்தில் இடம்பெற்ற கொலைகளைத் தடுக்கும் நோக் கில் பீடாரின் இருதயத்தைத் துளையிட்டு, அவரது உடலை எரித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் அந்தக் கிராமத்தில் வெம்பெயர்கள் தொடர்பான தகவல்கள் முடிவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்ட போதிலும், கட்டேரிகள் தொடர்பிலான எண்ணக்கரு சாதாரண பொதுமக்கள் மனங்க ளில் ஆழ ஊடறுத்துவிட்டதாகவும் அந்தளவிற்கு இந்த விட யம் பற்றி ஊடகங்களில் எழுதப்பட்டதாகவும் பேராசிரியர் பொன் தெரிவிக்கின்றார்.

இந்தக் காலப்பகுதியில் தர்க்க ரீதியாகத் தெளிவுபடுத்தப்பட முடியாத எந்தவொரு விடயத்தையும் கற்றறிந்த சமூகத்தினர் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இந்தச் சம்பவம் இடம் பெற்று ஏழு ஆண்டுகளின் பின்னர் 1732-ம் ஆண்டு ஜனவரி மாதம் மெட்வேஜா கிராமம் பீதியில் உறைந்தது. மூன்று மாத காலப் பகுதியில் 17 பேர் (அவர்களில் சிலர் இளையவர்கள் மற்றும் ஆரோக்கியமானவர்கள்) தெளிவான காரணங்க ளின்றி மர்மமான முறையில் உயிரிழந்தனர். கிஸ்லேவாவில் பதிவான மரணங்களைப் போன்ற மரணங்கள் மெட்வேஜா வில் பதிவாகியிருந்தன. அவர்களில் சிலர் மரணத்திற்கு முன் னர் மூச்சு திணறல் மற்றும் கடுமையான நெஞ்சு வலியினால் அவதியுற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு உயிரி ழந்தவர்களின் சடலங்களைத் தோண்டியெடுக்குமாறு அறிவு றுத்தல் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, டொக்டர் யொஹா-னஸ் இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

காட்டேறி என்ற பதத்தை பிரதான குற்றவாளியாகப் போர்ப் பயிற்சி பெற்ற நபரொருவருடன் தொடர்புபடுத்தி விளக்குவர். அவருடைய உடல் அழுகாமல் இருந்ததுடன் கண், காது, மூக்கு, வாய் போன்றவற்றில் புதிய ரத்தம் வழிந்து ஓடியது எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர் உண்மையிலேயே ஒரு காட்டேறியென மெட்வேஜா மக் கள் நம்பினர். இதன் காரணமாக அவர்கள் அந்த நபரின் இரு தயத்தைத் துளைத்து எரித்தனர். இந்த நபரின் வாழ்க்கை மற் றும் அவருக்கு என்ன நடந்தது என்பது குறித்த தகவல்கள் எதுவுமில்லாத அளவிற்குச் சடலத்தை எரித்துச் சாம்பலாக்கி னர். கீழே விழுந்து உயிரிழந்த இந்த நபர் ஏனையவர்களின் மரணத்திற்குக் காரணமானவரென ஊர் மக்கள் குற்றஞ் சுமத் தியதாகத் தோமஸ் பொன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். கொசோவாவிலிருந்து வந்த அல்பேனிய இனத்தைச் சேர்ந்த அனோட்டி பவ்லே என்பவரே இந்த நபரென நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

பீட்டர் பிலொகொவியெச் மற்றும் அனோட்டி ஆகிய இரண்டு நபர்களும் காட்டேறி குறித்து வரும் பிரதான பாத்திரங்கள் என்பதை இந்த நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார். அழுகாத சடலம் தொடர்பில் மக்கள் அச்சத்துடனிருந்த பின்னணியில் நவீன விஞ்ஞானிகள் இவ்வாறாக உயிரிழந்த சடலங்கள் கண்டுபிடிப்பது அல்லது காணப்படுவது அதிசயமான விடய மல்லவெனக் குறிப்பிடுகின்றனர்.

வியன்னாவின் முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவரான 'கிறிஸ் டியன் ரைட்டர் சித்தன்னோ' இந்த அனைத்துச் சம்பவங்க ளின் பின்னணியிலும் போர்க்காலப் பின்னணியிலும் சாதா ரண விடயமாகக் காணப்பட்ட அந்ராக்ஸ் தொற்று நோய் காணப்பட்டதெனத் தெரிவித்தார். அந்ராக்ஸ் என்பது ஒரு பாக்டீரியா நோயாகும். இந்த நோய்த் தொற்று மிருகங்களிட மிருந்து மனிதருக்குப் பரவக்கூடியது. அநேகமான சந்தர்ப் பங்களில் இந்த நோய்த்தொற்று மரணத்தை விளைவிக்கும். மரணத்திற்கு முன்னர் நிகழும் மூச்சுத் திணறல் நியூமோனி யாக் காய்ச்சல் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடுமெனப் பேரா சிரியர் ருத்னெர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நீங்கள் இந்த அறிக்கைகளைத் தெளிவாகப் படித்தால் எவ ரும் வெம்பயர் அல்லது காட்டேறி ஒன்றை நேரடியாகக் காண

வில்லையென்பது தெளிவாகும். இதன் காரணமாகவே காட்டேரிகள் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தல் என்ற எண்ணக்கரு, ஆஸ்ட்ரிய மருத்துவர்களால் இவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இரத்தம் உறிஞ்சிக் குடிப்பது தொடர்பான எண்ணக்கரு மேற்குலக மக்களினால் உருவாக்கப்பட்ட ஓர் கட்டுக் கதையெனப் பேராசிரியர் தோமஸ் பொன் தெரிவித்துள்ளார்.

இன்னமும் சமூகத்தில் காட்டேறிகள் தொடர்பான அச்சமும் பீதியும் நிலவி வருவதாக மெட்வெஜா நகர வரலாற்று ஆய்வாளர் ஈவன் நேசிக் தெரிவித்துள்ளார். பீட்டர் மற்றும் அனோட்டி ஆகியோர் உயிரிழந்து பல ஆண்டுகள் கடந்த பின்னரும் மக்கள் தாம் தனிப்பட்டரீதியில் காட்டேறிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள முயற்சித்தனரெனத் தெரிவித்துள்ளார்.

சைபீரியாவில், காட்டேறி ஒருவர், உடலில் ரத்தம் நிறைந்த கொப்புளமொன்றிற்கு நிகரானவரென நம்பப்படுகிறது. உடலில் எங்கேனும் ஓர் துளையேற்பட்டால் பலூனைப் போன்று ஆகிவிடுவார்களென அவர்கள் அச்சப்பட்டனர், எனவே மக்கள் தங்களது பாதுகாப்பிற்காக நுழைவாயில்கள், ஜன்னல்கள் மற்றும் கதவுகளில் கோனோத் மரங்களின் கிளைகளை வைத்தனர்.

நூற்றாண்டுகளாகக் காணப்பட்ட ஒட்டோமன் ஆட்சியின் பின்னர், கிஸிலேவா மற்றும் மெட்வெஜா ஆகிய இரண்டு கிராமங்களும் உருப்பெற்றன. 1700-களில் ஹப்ஸ்பெர்க் அரசாங்கத்திற்குக் கீழ் காணப்பட்ட எல்லைப் பகுதிகளில் இந்தக் கிராமங்கள் அமைந்திருந்தன. காட்டேறிகளைக் கண்டதாகக் கவனத்தை ஈர்த்த இந்த சம்பவங்கள் சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் பதிவாகியுள்ளனவெனப் பேராசிரியர் ருத்னெர் தெரிவித்துள்ளார்.

காட்டேறிகள் பற்றிய கதைகளைப் புரிந்துகொள்வதற்கு, ஒட்டாமன் ஆட்சியாளர்களுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையில் நிலவிய கடுமையான மோதல்களின்போது இடம்பெற்ற விடயங்களைத் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது எனத் தெரிவிக்கின்றார். 1683-ம் ஆண்டில் ஒட்டோமன் ஆட்சியாளர்களினால் வியன்னாவை இரண்டாவது தடவையாகவும் கைப்பற்ற முடியாது போனது. கிறிஸ்தவ மதத்திற்கெதிராக எழுந்த துருக்கி அழுத்தங்களுக்கு மாற்றீடாக இந்தக் காட்டேறிகள் பற்றிய கதைகள் உருவானதெனப் பேராசிரியர் சுட்டிக் காட்டுகின்றார்.

18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஹப்ஸ்பெர்க் ஆட்சிப் பரப்பில் காட்டேறிகளைக் கண்டதாகப் புதிய தகவல்கள் வெளியாகத் தொடங்கிய போதிலும் கட்டுக்கதை நம்பிக்கைகளை இல்லாதொழிப்பதற்காக இந்தக் கற்பனை உயிரினங்களுக்கெதிரான நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. எனினும் நீண்டகாலம் செல்வதற்கு முன்னதாகக் காட்டேறிகள் குறித்து கதைகள் வேறு வழியில் மீண்டும் உருவாகத் தொடங்கியது.

ரோமா யுகத்தில் அழகிய வெள்ளைத் தோலுடைய பிரபுத்துவத் தோற்றத்தைக் கொண்ட காட்டேறிகள் பற்றிய சித்தரிப்புகள் பிரபல்யம் பெறத் தொடங்கின. சைபீரிய மக்களைப் போன்று இந்தக் கட்டேரிகள் பற்றிய சித்தரிப்புகள் இருக்கவில்லையெனப் பேராசிரியர் ருத்னெர் தெரிவித்துள்ளார்.

நூதனக் கற்பனைப் பிரபந்தங்களில் காணக் கிடைக்கும் அழகிய நவீன காட்டேறிகள் பற்றி 1819-ம் ஆண்டு ஆங்கில இலக்கியவாதி ஜோன் போலிடோரி என்பவர், 'த வெம்பயர்' என்ற நூலில் குறிப்பிட்டார். 1897-ம் ஆண்டு உருவான ட்ராக்யுலா என்ற நாவல், முக்கியமான வெம்பயர் நாவலாகக் கருதப்படுகிறது. இந்த நாவலே தற்போதைய காட்டேறிகள் குறித்த கதைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்றால் மிகைப்படப் போவதில்லை.

கீழைத்தேய நாடுகளில் பேய்கள், பிசாசுகள் பற்றிய பல்வேறு கதைகள், சித்தரிப்புகளைப் போன்றே மேலைத்தேய நாடுகளிலும் இந்தக் கட்டேரிகள் பற்றிய சித்தரிப்புகளும் கதைகளும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஆயினும் உண்மையில் இவை உலாவியமைக்கான எந்தவொரு விஞ்ஞான பூர்வ அடிப்படைத் தகவல்களோ சான்றுகளோ வெளியிடப்படவில்லை.



jeyaseelan.s@thaiveedu.com





# இக்கிகாய் அல்லது வாழ்க்கை இலக்கு

குமார் புனிதவேல்

சென்ற மாதம் ‘ஆயுள் நீடிப்பதற்கு’ எனும் கட்டுரையில் ‘இக்கிகாய்’ எனும் யப்பானிய மொழிச் சொல்லைப் பிரயோகித்திருந்தேன். அச்சொல் பற்றி சில நண்பர்கள் கேட்டுக் கொண்டதால் இந்த மாதம் இக்கட்டுரையை எழுத முனைந்தேன்.

ஒக்கினாவா என்பது யப்பான் நாட்டின் தெற்கிலுள்ள ஒரு சிறு தீவின் பெயர். ஒக்கினாவாவில் தான் உலகிலேயே மிக அதிக விகிதம் நூறு வயதிற்குக் கூடிய மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் தமது நீண்ட ஆயுளுக்குக் காரணமாய் இக்கிகாய் எனக் குறிப்பிடுவார்கள்.

வாழ்க்கை என்பது ஒரு நெடும் பயணம். அதில் பல தடங்கல்களும் திருப்பங்களும் இயல்பாகும். இன்று புலம்பெயர் தேசங்களில் வசிக்கும் பெரும்பாலான தமிழ் முதியவர்கள், வாழ்க்கையை இலங்கையில் ஆரம்பித்து, இனக் கலவரத்தால் புலம்பெயர்ந்து, புதிய பூமியில் புது வாழ்க்கையை புதுத் திசையில் தொடர்ந்துள்ளார்கள்.

ஒரு கப்பல் இலக்கில்லாமல் பயணித்தால் அது விரைவிலே மூழ்கிவிடும். ஒரு பயணம் சிறக்க இலக்கு வேண்டும். அதனை யப்பானிய மொழியில் இக்குகாய் என்பர். தமிழில் ‘வாழ்வின் இலக்கு’ என்போம். எப்படிப் புலம்பெயர்ந்து வந்தார்களோ அதே போல் வேலையில், ஓய்வெடுக்கும் வேளையில், ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும். பொதுவாக ஒருவர் மட்டும் உழைத்துப் பணம் சம்பாதிக்கும் குடும்பங்களில் மற்றவர், உழைப்பவரைவிடக் கூடிய காலம் உயிர் வாழ்வதைக் கவனிக்கலாம். ஓய்வு பெறும் வேளையில் உழைப்பவருக்கு இலக்கு இல்லாதிருக்கும், எனினும் மற்றவருக்கு ஓர் இலக்கு இருக்கும். புலம்பெயர் தேசங்களில் வேலை செய்பவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் இருப்பதுடன் துணைக்கும் அந்த ஓய்வூதியத்தில் ஒரு பங்கு தரப்படும்.

ஒக்கினாவாத் தீவில் வசிப்பவர்கள் ஒருபோதும் ஓய்வெடுப்பதில்லை. அவர்கள் தொடர்ந்து இறக்கும்வரை தங்கள் இக்கிகாயைச் செய்வார்கள்.

நீண்ட காலம் வாழவிரும்பும் நாமும் தொடர்ந்தும் தொழிற்படுவோம். ஒக்கினாவா மக்கள் குறிப்பிடும் இக்கிகாய் என்பது என்னவென்று சற்று விளக்கமாகக் கவனிப்போம். மேலும் இக்கிகாய் எப்படி எமது ஓய்வுகாலத்தைக் பாதுகாக்கும் என்றும் கவனிப்போம். இக்கிகாய் எனும் வாழ்க்கை இலக்கு வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்திலும் கைகொடுப்பதைக் கவனிக்கலாம். அது உங்களின் வாழ்வில் மகிழ்ச்சியைத் தருவதுடன் ஒவ்வொரு காலையிலும் தூக்கத்திலிருந்து எழுவதற்கு ஓர் உந்து கோலாகவும் அமையும்.

இக்கிகாயை வரைபடமாகப் பிரதி செய்வதற்கு நான்கு வட்டங்கள் தேவை.




இந்த நான்கும் இணைந்துதான் உங்கள் வாழ்க்கையின் இலக்கை நிர்ணயிக்கும். இந்த நான்கும் சிறப்பாக அமைந்தால் வாழ்க்கைச் சிறப்பாயும் நெடியதாயும் அமையும்.

இதில் தரப்படும் ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனியாகக் கவனிப்போம்.

முதலாவதாகக் கவனிக்க வேண்டிய விடயம் நீங்கள் பயணிக்கப் போகும் பாதையில் உங்களுக்கு விருப்பம், மகிழ்ச்சி உண்டு என்பதாகும். பயணம் மகிழ்ச்சியல்லாமல் அமையுமானால் காலப்போக்கில் தடம்புரண்டு விடுவீர்கள். இதற்கு உலகப் புகழ்பெற்ற போல் கோக்ரன் எனும் ஓவியரைக் குறிப்பிடலாம். ஆரம்பத்தில் பெற்றோருடைய வற்புறுத்தலால் பண முதலீட்டுக் கலையில் தேர்ச்சி பெற்று ஒரு நிதி வல்லுனராக இயங்கி வந்தார். ஆனால் அவருக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. இந்நிலையில் அத்தொழிலை உதறிவிட்டுத் தேடிய செல்வத்துடன் ஓவியக் கலைக்குள் பிரவேசித்தார். அவரது

உலகப் பிரசித்திபெற்ற 'நாம் யார், எங்கிருந்து வந்தோம், எங்கு பயணிக்கிறோம்' என்ற பிரபல்யமான படத்தினால் அவர் எம்மிடையே இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்கி றார். எனவே ஒருவருடைய விருப்பம் மிக முக்கியமாகும்.

இரண்டாவதாகப் பயணிக்க விரும்பும் துறையில் உங்களுக் குத் திறமை அவசியமாகும். எனக்கு எவ்வளவு ஆர்வம் இருப் பினும் என்னால் பாட முடியாது. இந்த நிலையில் நான் பாடு வதைத் தொழிலாக எடுப்பின் அது குறை ஆயுளில் நின்று விடும். நீங்கள் உங்கள் வாழ்க்கைப் பாதையை நிர்ணயிக் கையில் அந்தச் செயற்பாட்டில் இயல்பான வல்லமை உள் ளதா எனக் கவனித்துக் கொள்ளுங்கள்.

மூன்றாவதாகக் அந்தச் செயற்பாட்டில் போதிய வருவாய் உள்ளதா எனக் கவனியுங்கள். திருவள்ளுவரே, பொருள் இல் லார்க்கு இவ்வுலகமே இல்லையென்று குறிப்பிட்டுள்ளார். எனவே செல்லும் பாதையில் போதிய வருவாய் உள்ளதா எனக் கவனித்துக் கொள்ளுங்கள். அல்லாதுவிடில் காலப் பேக்கில் பயணம் தடைப்பட்டு விடும்.

நான்காவதாகக் கவனிக்க வேண்டிய விடயம் நீங்கள் ஈடுப டும் பாதை உலகிற்குத் தேவையானதா என்பதாகும்.

நீங்கள் பயணிக்கும் அல்லது செய்யும் விடயத்தால் உல கிற்கு நன்மை இல்லையாயின் அந்தப் பயணம் நின்று விடும். வாழ்க்கையில் திருப்பங்கள் வரும் வேளைகளில் புது முயற்சி யில் இறங்குகையில் இதனால் உலகிற்கு என்ன பயன் எனக் கவனித்து ஈடுபடவேண்டும் அல்லாவிடில் அது காலப்போக் கில் நின்றுவிடும்.

ஒருவர் ஓய்வுபெறும் வேளையில் ஏற்படும் திருப்பு முனையில் எதற்காக இந்த வாழ்க்கையின் இலக்கு அவசியம் எனக் கேட் கலாம். அப்படி இலக்கு வைத்து செயற்படாவிட்டால் தாம் ஓய்வெடுப்பதாக கருதி வீட்டில் பொழுது போவதற்காகத் தொலைக்காட்சியில் நேரத்தைக் கழிப்பார்கள். பொழுது போக்குவதிலும் வாழ்வதாக இருப்பின் அது தொடரும். மேலும் செய்வதறியாது மற்றவர்களின் விடயங்களில் அநாவ சியமாகத் தலையிட்டு மற்றவர் வெறுப்பைச் சம்பாதிப்பார் கள். வாழ்க்கை சுவையாக இருக்க வேண்டுமேயல்லாமல் சுமையாக அமையக்கூடாது.

வேலையில் மாற்றங்கள் செய்கையில் வருவாயைக் கவனிக்க வேண்டும். ஆனால், ஓய்வூதியம் பெறும் வேளையில் வருவா யின் அவசியம் குறைகிறது. இந்நிலையில் மற்றைய மூன்று விடயங்களிலும் கவனத்தைச் செலுத்தலாம் ஓய்வூதியக் காலத்தில் உங்கள் மனதின் மகிழ்ச்சி முக்கிய இடம் வகிப்ப துடன், உங்களுக்கு அதனை செய்யும் திறமை உள்ளதா என் பதைக் கவனியுங்கள்.

மேற்படி விடயமாக எனது சொந்த அனுபவத்தை இங்கு பகிர் கிறேன். ரொறன்ரோவில் சில ஓய்வுபெற்ற முதியவர்கள் பாற் பைகளைக்கொண்டு பாய் பின்னுவதற்கு முன்வந்தார்கள். இதில் பத்து முதியவர்கள் போல் இணைந்து செயற்பட்டார் கள். இத்தொழிலில் வருவாய் இருக்கவில்லை மகிழ்ச்சி நிறை யவே இருந்தது. அவர்கள் நண்பர்களுடன் இணைவதனால் அவர்கள் வாழ்க்கைக்கு ஒரு இலக்கு இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் காலையில் எழும் வேளையில் ஆர்வமும்



உற்சாகமும் நிறையவே இருந்தது. 2021 கோவிட் தோன்றும் முன் ஐநூறு பால்பைப் பாய்களும் பல நூறு தலையணைக ளும் செய்து அவற்றை 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற வாக்கிற்கமைய உலகின் பல பாகங்களிலும் உள்ள வறிய மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். அவற்றைப் பெற்றுக்கொண் டவர்களின் மகிழ்ச்சியும் நன்றியும் இவர்கள் ஆயுளை வலுப் படுத்தியுள்ளது.

மேலும் இவர்களின் முயற்சியால் கனடாவின் குப்பைமேட்டில் குவியும் பிளாஸ்டிக் பைகள் பயனுள்ள பொருளாக மாற்றிய தன் மகிழ்ச்சியும் நிறைந்தது. அதன் மொத்த எடை இரண்டு தொன்களுக்கும் அதிகமாகும்.

கோவிட் காரணமாகத் தங்கள் செயற்பாட்டை நிறுத்திக் கொண்ட முதியவர்கள் தம் முன்னோடிகளின் சாம்பலிலி ருந்து மீண்டெழும் பினிக்ஸ் பறவையைப் போல மீண்டும் இம் முயற்சியைத் தொடர்கிறார்கள். இவர்களுடைய இக்கிகாய் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுத்துள்ளது. இவர்கள் நூறு ஆண்டுகள் வாழ்வார்கள்.

நீங்களும் உங்களுக்கு உகந்த இக்கிகாயினைத் தேர்ந்தெ டுத்து நூறாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

kumar.punithavel@thaiveedu.com






அண்மைய 15, 20 ஆண்டுகளாக தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் நூல் வெளியீட்டு விழாக்களும் நூல் அறிமுக விழாக்களும் பரவலாக இடம் பெற்று வருவது மகிழ்வுக்குரியது. காலம் செல்லச் செல்ல எமது வாழ்க்கைக் கோலமும் வேகமாகச் சுழல்கிறது. வேகமான உலகத்தில் வேகமாக வாழ, நாமும் நிகழ்வுகளை வேகமாக முடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு வந்துவிட்டோம். அவ்வாறு செய்தால்தான் நிகழ்வுகளுக்கு மக்களும் வந்து சிறப்பிப்பார்கள். அதனை உணர்ந்ததாக நாம் கலந்து கொள்ளும் விழாக்களும் நிகழ்வுகளும் அமைதல் வேண்டும். இந்த விழாக்களில் மேடையில் இருக்கும் பிரமுகர்கள், விருந்தினர்கள் எவ்வாறு உரையாற்றுதல் வேண்டுமென்பது குறித்து ஒரு வரையறை தேவை. இது குறித்த எனது நீண்ட கால அவதானிப்பை இங்கு தருகிறேன். இவ்வாறு அமைந்தால் சிறப்பானதாக இருக்குமென நம்புகிறேன்.

### தலைவரும் தலைமையுரையும்:

தலைமையுரை நிகழ்த்துபவர் இலக்கியம் குறித்த நீண்டகாலத் தேடலும், எழுத்து அனுபவமும், புத்தகம் வெளியிட்ட அனுபவமும், சபையோரைக் கவரக் கூடிய வகையில் சபையை வழிநடத்துபவராகவும் நேரமுகாமைத்துவத்தைக் கடைப்பிடிக்கும் தன்மையும் உடையவராகவும் இருத்தல் வேண்டும். அழைப்பிதழில் இல்லாத ஒருவரை எக்காரணம் கொண்டும் மேடையேற்றக் கூடாது. அது நிகழ்வுக்கு வருகை தரும் ஏனையோரை அவமதிப்பதாக அமையும். ஏனைய பேச்சாளர்களைக் கட்டுப்படுத்தி நிகழ்வை ஒருங்கிணைக்க வேண்டும். தலைமையுரையில் நிகழ்விற்கு விருந்தினர்களாக வந்திருப்போரை அவர்களது ஒழுங்கில் பெயர் கூறி அழைத்து வரவேற்றல் வேண்டும். அவையில் பார்வையாளராக வந்திருப்போரையும் கவரக்கூடிய வகையில் கண்ணியமாக அழைத்து உரையாற்ற வேண்டும். நூல் வெளியீடு அல்லது அறிமுகம் குறித்து தனது உரையைத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் உரையாற்ற வேண்டும். நூலாசிரியர் குறித்த அறிமுகத்தை அனைவரையும் கவரக்கூடிய கண்ணியம் மிக்க சொற்களைக் கொண்டு திறம்பட உரையாற்றுதல் வேண்டும். ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்ப கூறும் வகையில் உரையினை அமைத்தல் கூடாது. குறிப்பாகத் தலைவர் தற்புகழ்ச்சி கூறுதல் கூடவே கூடாது. நூலாசிரியரின் சிறப்பையும் கூறுதல் வேண்டும். யாரையும் புண்படுத்தக் கூடியதாக உரையாற்றாமல் நயமான கருத்துகளை மாத்திரமே கூறுதல் வேண்டும். தலைமையுரையை 15 நிமிடங்களுக்குள் நிறைவு செய்தல் நன்று. குறிப்பாக நூலின் வெளியீட்டுரை, நயப்புரை அல்லது விமர்சன உரை (மதிப்பீட்டு உரை) ஆற்ற வந்திருப்பவரின் வேலையை தலைவர் தன்கையில் எடுக்கவே கூடாது.

அவரவர் உரைக்குரிய கண்ணியத்தை மீறாமல் தலைவரது தலைமையுரை அமைதல் வேண்டும். பல இடங்களில் விழாத் தலைவர் இந்த வேலையைச் செய்து வெறுப்பைச் சம்பாதிப்பதையும் காண முடிகிறது. அறிவிப்பாளர் என்று ஒருவரை வைத்தல், நூல் வெளியீட்டின் தலைவரின் கௌரவத்தைக் குறைத்துவிடும். அதனால் தலைவர் தனது உரை ஆளுமையைச் சிறப்பாகச் செய்தல் வேண்டும். பேச்சாளர்கள் ஒவ்வொருவரையும் சுருக்கமாக விளித்து வரவழைத்து உரையாற்ற விடுதல் வேண்டும். ஒரு பிரமுகர் உரையாற்றிய பின்பாக அவரது உரையில் என்ன விடயம் இருந்தது எனப் பொருள் கூறல் கூடவே கூடாது. இவ்வாறு செய்வதால் விழாவின் நேர முகாமைத்துவம் பிழைத்து விடும். ஏனைய பேச்சாளர்கள் தலா எத்தனை நிமிடங்கள் உரையாற்ற எடுத்தல் வேண்டுமென்பதைத் தலைவர் தமது உரையில் கூறுவது நன்று. அத்துடன் அழைப்பிதழில் உள்ள விருந்தினர் பட்டியல் முழுவதையும் வாசித்து நேரத்தை விழுங்குதல் ஆகாதெனத் தலைவர் அறிவுறுத்த வேண்டும். எல்லோருக்கும் வணக்கம் என ஒரு சொல்லில் சொல்லும் வழக்கத்தைக் கடைப்பிடித்தல் நன்று.

### வரவேற்புரை:

நிகழ்வில் வந்திருக்கும் விருந்தினரை, நூலாசிரியரை, ஏனைய பிரமுகர்களை, பார்வையாளர்களை வரவேற்கும் வண்ணம் நயமான தமிழில் உரையாற்றுதல் வேண்டும். ஒவ்வொருவரையும் தனித்தனியாக விளித்து உரையாற்றுதல் நன்று. இந்த உரை 05 அல்லது 06 நிமிடத்தில் நிறைவு பெறுதல் கட்டாயமானது. நூலைப் பற்றியோ நூலாசிரியரைப் பற்றியோ கருத்துத் தெரிவித்தல் அழகல்ல. வெளியீட்டுரை, மதிப்புரை போன்ற விடயங்களில் வரவேற்புரை அமைதல் கூடாது,

### வாழ்த்துரைகள்:

நூலாசிரியரை அறிந்தவர்கள், சமூகத்தில் நன்மதிப்பு மிக்கவர்கள் வாழ்த்துரைகளைச் செய்வது வழமை. அது அழகும் கூட. வாழ்த்துரை வழங்க வருபவர்கள் அழைப்பிதழில் உள்ள முழுப்பேரையுமே அழைத்து ‘டாப்பு’க் கூப்பிடுதலைச் செய்யக் கூடாது. ஏனெனில் அழைப்பிதழில் உள்ள அனைவரின் பேரையும் திரும்பத் திரும்பக் கூறும்போது சபையோருக்குச் சலிப்புத்ததட்டும். நேரவிரயமும் ஏற்படும். அதனால் விழாவின் சிறப்பு கெட்டுவிடும். அத்துடன் ஏற்கனவே உரையாற்றியவர்கள் கூறிச் சென்ற விடயத்தை திரும்பவும் கூறக் கூடாது. பேச்சுத் தொடர்பான குறிப்பு இருக்குமாயின் அதனைத் தவிர்த்தல் நன்று. நூலாசிரியரின் சிறப்பான குணஇயல்

புகள், ஆளுமைகள் என்பவற்றைச் சபையினர் கவரக் கூடிய தாகச் செய்தல் நன்று. வெளியிட உள்ள நூலை கேட்டு வாங்கி அதனைப் பற்றி 'விளாசு விளாசு'வென விளாசுபவர்க ளைச் சில இடங்களில் காண்கின்றோம். அது தவறானது. வாழ்த்துவதுடன் மட்டுமே நிற்பது நன்று.

### வெளியீட்டுரை:

நூலாசிரியரே வெளியீட்டுரையை ஆற்றுதல் நன்று. நூலாசிரி யர் அல்லாமல் பிறர் நூலின் வெளியீட்டு உரையைச் செய்வ தைப் பெருமளவில் காண்கின்றோம். நூலாசிரியர் என்ன நோக்கத்திற்காக இந்த நூலை வெளியிடுகின்றாரென்பது அவருக்குத் தெரிந்தது. அவர் தற்புகழ்ச்சியைக் கூடுமான அளவு குறைத்து, தனது உரையைச் செய்தல் சாலச் சிறந் தது. வேறு ஒருவர் வெளியீட்டுரையை ஆற்றும் போது, புத்த கத்தில் உள்ள விடயங்கள் எவை? அவை எப்படி உள்ளன. அவற்றின் சரிபிழை எப்படியெனக் கூறுதல் ஆகாது. அது நூல் மதிப்பீட்டாளர், அல்லது நயப்புரை அல்லது விமர்சன உரை செய்ய வந்தவரின் பணியாகும். அதனால் வெளியீட் டுரை ஆற்ற வருபவர் நூலாசிரியர் யார், அவர் இந்த நூலின் வெளியீட்டின் மூலமாக எதனைக் கூற முன்வருகின்றார். இந்த நூல் வெளியீடு சமகாலச் சமூகத்திற்கு ஏன் தேவையானது போன்ற விடயங்களைக் கூறுதல் வேண்டும்.

நூல் ஒன்றின் வெளியீட்டு உரை எவ்வாறு அமைதல் வேண்டு மென்பது பலருக்குத் தெரிந்திருப்பதில்லை. நூல் பற்றிய நிறை குறைகளைக் கூறும் போக்கைப் பரவலாகச் செய்வது நிகழ்கின்றது. ஏனையோரின் உரைகளில் வந்த விடயங்க ளைத் தவிர்த்து உரையாற்றுதல் சிறப்பு. இந்த உரைக்கு 10 நிமிடங்கள் எடுத்தல் போதுமானது. நூல் ஒன்று ஏற்கனவே வெளியிட்டு இருந்தால் அதற்கு அறிமுகவிழாவே நடைபெ றும். அறிமுகவிழாவின்போது வெளியீட்டுரை இடம் பெறுவ தில்லை. நூலாசிரியரைப் பற்றிய அறிமுகம் மட்டுமே நடை பெறும். அப்போது அறிமுக உரையை ஆற்றுபவர் நூலாசிரி யரை அறிந்தவராக இருப்பது கட்டாயமானதாகும்.

### நயப்புரை:

நூல் ஒன்று தொடர்பாக நல்லவற்றை மட்டுமே கூறுதல் நயப் புரையாகும். விமர்சன உரையாற்ற வந்தவர்கள் தாறுமாறாக நூலைப் பற்றிக் கூறிச் சென்ற நிலைமை சில இடங்களில் நிகழ்ந்துள்ளது. அதனால் நயப்புரை என்ற ஒன்றை அறிமு கம் செய்தார்கள். இதன் மூலமாக நூலை வெளியிட்ட நூலாசி ரியர் நிகழ்வில் மனம் நோகும் நிலைமை தவிர்க்கப்படுகின் றது. சபை நாகரிகம் பேணப்படுகின்றது. நூலை நயப்புரை செய்ய வந்தவர் நூலின் உள் விடயங்களை வரிசைக் கிரமமா கச் சொல்வதைத் தவிர்த்தல் வேண்டும். ஒரு நூலில் 15 விட யங்கள் இருக்குமாயின் அவற்றை பொருள் ரீதியாக வகைப்ப டுத்திக் குறிப்பு எடுத்து உரையாற்றல் சிறப்பானது. எண் வரி சைக் கிரமமாக இல்லாது விடில், உதாரணமாக: ஒரு நாவலா யின் அதில் உள்ள அத்தியாயங்களை ஒவ்வொன்றாகச் சுருக்கமாகக் கூறிச் செல்லுதல் நன்று. நூலின் உள்ளடக்கம் முழுவதையும் நயப்புரையில் கூறுவது தவிர்க்கப்படவேண் டும். ஏனெனில் நூலை வாங்கிய வாசகர் வாசிக்காமல் அத னைக் கடந்து போவதற்குச் சாத்தியங்கள் உண்டு. அதனால் குறித்த விடயத்தின் சாராம்சத்தைக் கூறிச் செல்லுதல் கேட் போரது ரசனையையும் நிகழ்வின் நேர முகாமைத்துவத்தை யும் கடைப்பிடிக்க உதவும்.

### மதிப்பீட்டுரை அல்லது விமர்சன உரை:

கத்தி ஒன்றின் மீது அது வெட்டாமல் நடப்பது போன்றதே மதிப்பீட்டு உரை அல்லது விமர்சன உரை என்பதாகும். விமர் சனம் என்பது பயிரின் வேருக்கு நீரூற்றுவது போல இருக்க வேண்டும். மாறாக வெந்நீர் ஊற்றுவதாக இருக்கக் கூடாது. இந்த உரையை ஆற்ற வருபவர்கள் நூலில் உள்ள நல்ல விடயங்களைப் பக்குவமாக நயமாகக் கூறுதல் வேண்டும். அது போலத் தாம் காணும் குறைகளையும் நூலாசிரியரதோ சபையினரதோ மனம் நோகாமல் பக்குவமாகக் கூறவேண் டும். அதாவது, குறைகளைக் கூறும்போது நயத்தக்க நாகரி கம் வேண்டும். இந்த உரையை ஆற்ற வந்த சிலர் அறியாமை காரணமாகவோ அல்லது வேண்டுமென்றோ நூலைப் பற்றித் தாறுமாறாகக் கூறிய நிலைமை சில இடங்களில் சங்கடங்க ளையும் மனமுறிவுகளையும், உறவு முறிவுகளையும் ஏற்படுத்தி உள்ளது. மதிப்பீட்டு உரை அல்லது விமர்சன உரையை ஆற்ற வந்தோரும் மேலேநயப்புரையில் கூறப்பட்டது போல நூலின் உள்ளடக்கங்களை அணுகுவது சிறப்பானதாகும்.

### ஏற்புரையும் நன்றி உரையும்:

வழமையாக நூலாசிரியர் இந்த உரையை ஆற்றுவார். கிட்டத் தட்ட ஒரு நன்றி உரை போலவே இந்த உரை அமைந்து கொள்ளும். மேலே சொல்லப்பட்டது போல நூலை வெளி யிட்ட நூலாசிரியரே வெளியீட்டுரையைச் செய்வாராயின் நன்றி உரையை வேறு ஒருவர் செய்யலாம். அதாவது நூல் வெளியீட்டு விழாவை ஒழுங்கமைத்த அமைப்பின் பிரதானி ஆற்றலாம். பொதுவாக நூலை வெளியிட்டுப் பிரதிகளை மேடையிலும் சபையிலும் கொடுக்கத் தொடங்கி முடிந்ததும், சபையிலுள்ள பலர் எழுந்து செல்லுதல் ஒரு நயக்கத்தகாத வழமையாகி விட்டது. ஏற்புரை நிகழ்த்த நூலாசிரியர் வரும் போது சபை பெருமளவுக்கு வெறுமையாக இருப்பதனைக் காண முடிகிறது. நூலாசிரியர் ஏற்புரையைச் செய்யும்போது, தனது நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்த விருந்தினர் கள், பிரமுகர்கள், கலை இலக்கிய ரசிகர்கள் யாவருக்கும் நன்றி கூறுதல் வேண்டும். நூல் வெளியிட ஊக்குவிப்பைத் தந்தோருக்கும், விழாவைச் சிறப்புற நடத்தியோருக்கும், நூலை அச்சிட்ட அச்சகத்திற்கும் நன்றி கூறுதல் வேண்டும். தனது எழுத்துலக வாழ்க்கையின் ஆரம்பம், எழுதுவதற்குக் கிடைத்த ஊக்குவிப்புகள், தனது மறக்க முடியாத நினைவு கள் ஆகியவற்றை நன்றி உரையின் போது தேவைக்கேற்ப கூறலாம். நிகழ்வின் இறுதிக்கட்டம் ஆதலால் சபை சலிக்கா மல் சினக்காமக உரையை ஆற்றுதல் விரும்பத்தக்கது.

### நன்றி உரை:

நன்றி உரை தனியே இடம் பெறுமாயின் பின்வரும் ஒழுங்கில் செய்யலாம். நூல் வெளியீட்டு, விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்களை அழைப்பிதழில் உள்ளவாறாக அழைத்து நன்றி சொல்லுதல் வேண்டும். அத்துடன் நிகழ்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த யாவருக்கும் இயலுமானவரை பெயர் சொல்லி நன்றி கூறுதல் வேண்டும். யாரையாவது தவற விட்டி ருந்தால் அவர்களுக்கும் நன்றி எனக் கூறுதல் நன்று. இந்த உரைக்கு 05 முதல் 10 நிமிடங்கள் எடுப்பது நன்று. நூல் வெளியீடு, விமர்சனம் பற்றி யாதுமே கூறுதல் ஆகாது.



thabendran.v@thaiveedu.com




இம்முறை பாரிஸில் நடந்த கோடைகால ஒலிம்பிக் போட்டியில் பார்வையாளராகக் கலந்துகொள்ள எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. பொதுவாக தொழில் நிமித்தமும், சுற்றுலா காரணமாகவும் பல தடவைகள் பாரிஸ் சென்றிருந்தாலும், இம்முறை பார்வையாளராகப் பங்குபற்றி ஒலிம்பிக் போட்டியை நேரடியாகச் சென்று பார்ப்பதற்கு எனக்கு அனுமதிச் சீட்டுக் கிடைத்திருந்தது. அரைமணி நேரத்தில் இதற்கான அத்தனை சீட்டுக்களும் விற்பனையாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

34-வது கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் இம்முறை பிரான்ஸ் நாட்டில் நடைபெற்றது. யூலை மாதம் 26-ம் திகதி ஈபிள் கோபுர முன்றலில் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியபோது, கனடிய பிரபல பாடகி செலின் டி யான் மிகவும் இனிய குரலில் பாடி அனைவரையும் மெய்மறக்கச் செய்தார். இந்தப் போட்டியில் 206 நாடுகளைச் சேர்ந்த 10,672 வீரர்கள் கலந்து கொண்டனர். 329 விளையாட்டு நிகழ்ச்சிகள் இந்தப் போட்டியில் இடம்பெற்றிருந்தன. அனேகமான போட்டிகள் பரிஸ் நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள நகரங்களிலும் நடைபெற்றன. ஆரம்ப திறப்புவிழா செயின் நதிக்கரையில் நடைபெற்றது.



பாரிஸ் ஈபிள் கோபுரத்தில் ஒலிம்பிக் சின்னம் பெரிதாக இடம்பெற்று நியோன் விளக்குகளால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்ததால் அது பலரையும் கவர்ந்திருந்தது. வழமைக்கு மாறாக இம்முறை ஆரம்ப விழாவில் பங்குபற்றிய வீரர்கள் நடந்து செல்லாமல் படகுகளில் செயின் நதியில் ஊர்வலம் வந்தார்கள். இலங்கை மற்றும் சுவீடன் வீரர்கள் ஒரே படகில் சென்றார்கள். கால்பந்து, ரக்பிசெவின், கான்ட்போல், வில்வித்தை போன்ற சில போட்டிகள் 24-ம் திகதியே ஆரம்பமாகியிருந்தன. 19 நாட்களாக இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் பாரிஸில் தொடர்ந்து நடைபெற்றன.

கிரேக்கத்தில்தான் முதன் முதலாக ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகியிருந்ததால் ஒலிம்பிக் விளையாட்டு ஆரம்பிப்பதற்கு 100 நாட்களுக்கு முன் ஒலிம்பிக் தீபம் ஏப்ரல் மாதம் 16-ஆம் திகதியே கிரேக்கத்தில் ஏற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் ஆரம்பமானது. முதல் ஜோதியைக் கிரேக்க படகோட்டியான ஸ்டெப்னோஸ் டூஸ்-கோஸ் என்பவர் ஏந்திச் சென்றார். பிரான்ஸ் நாட்டில் உள்ள சுமார் 65 இடங்களில் உள்ள குடிமனைகளுக்கூடாக இந்த ஒலிம்பிக் தீபத்தைப் 10,000-ற்கு மேற்பட்டவர்கள் தொடர்ந்து எடுத்துச் சென்றார்கள். இவர்களில் இலங்கைத் தமிழரான செல்வராஜா தர்சன் என்பவரும் பாரிஸில் தீபத்தை ஏந்திச் சென்றிருந்தார்.

தடகள மற்றும் கள நிகழ்ச்சிகளில் அனேகமானவை ‘ஸ்டேட் டி பிரான்ஸ்’ மைதானத்தில் நடைபெற்றன. பெண்களுக்கான 100 மீட்டர் போட்டி 3-ம் திகதியும், ஆண்களுக்கான 100 மீட்டர் போட்டி 4-ம் திகதியும் இந்த மைதானத்தில் இடம்பெற்றன. இந்தப் போட்டியின் முதலாவது தங்கப் பதக்கம் யூலை 27-ம் திகதி துப்பாக்கி சுடுதலுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. குவாங் யூரிங் மற்றும் ஷெங் லிஹாவோ ஜோடி கொரியா அணியை வீழ்த்தி 10 மீற்ரர் ஏர் ரைபிள் கலப்பு போட்டியில் வென்றதன் மூலம் சீனா முதல் தங்கப் பதக்கத்தை வென்றது. ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்குக் இறுதிப் பதக்கம் வழங்கப்பட்டது. தங்கப் பதக்கம் பெற்றவர்களுக்கு சுமார் 50,000 டொலர்கள் வரை அன்பளிப்பாகக் கிடைக்கும்.

இந்தப் போட்டியில் இலங்கையில் இருந்து 6 வீரர்களும், இந்தியாவில் இருந்து 117 வீரர்களும், பாகிஸ்தானில் இருந்து 7 வீரர்களும், பங்களாதேசில் இருந்து 5 வீரர்களும் பங்குபற்றியிருந்தனர். அதிக அளவிலான வீரர்கள் (592 வீரர்கள்) அமெரிக்காவில் இருந்து பங்குபற்றியிருந்தனர். இரண்டாவதாக 573 வீரர்கள் பிரான்ஸில் இருந்தும், மூன்றாவதாக 460 வீரர்கள் அவுஸ்ரேலியாவில் இருந்தும் பங்குபற்றியிருந்தனர். சீனாவில் இருந்து 388 வீரர்கள் பங்குபற்றியிருந்தனர். இதுவரை நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில் அதிக பதக்கங்களை வென்ற

வராக அமெரிக்க நீச்சல் வீரரான மைக்கேல் பிரெட் பெல்ப்ஸ் (Michael Fred Phelps) 28 பதக்கங்களை வென்றிருக்கின்றார்.

கனடாவில் இருந்து 338 விளையாட்டு வீரர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தார்கள். இவர்களில் பதும வயதுப் பெண்கள் சுமார் 21 பேர் வரை அடங்குவர். இவர்களில் வயதில் குறைந்தவராக பேடி பார்சியோ ஈபார்ட் என்ற தடகள விளையாட்டு வீரர் ஸ்கேட்போர்டிங் (Skateboarding) என்ற விளையாட்டில் பங்குபற்றியிருந்தார். இவர் பான் அமெரிக்கன் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர். 16 வயதான ரூயன் மற்றும் யுன்ஜியா ஜாங், 18 வயதான நிக்



கோலஸ் ஜாங், 19 வயதான ஜெசிகா குவோ பென்ஸிங் முதலானவர்கள் வாள்வீச்சுப் போட்டியில் பங்கேற்றனர். 17 வயதான சம்மர் மெக்கின்டேஸ், 18 வயதான ஜானி நியூமன், யூலி புருசோ, லோர்ன் விக்கிங்டன், ஆட்ரி லமோதே, 19 வயதான எம்மா பின்லின், எல்லா ஜான்சன், இல்யா கரூன் ஆகியோர் நீச்சல் போட்டியிலும், 18 வயதான சைலா சவாட்ஸ், 19 வயதான கசாண்ட்ரே புரோஜ்பர் கூடைப் பந்தாட்டத்திலும், 18 வயதான காஸிலீ, ஆவா ஸ்டீவர்ட், ஆரேலி டிரான், ஜிம்னாஸ்டிக் உடற்பயிற்சியிலும், 19 வயதான இசபெலா ஹோல்ம்கிரென், சைக்கிள் ஓட்டத்திலும், கோல்ட் மில்லர் டைவிங் போட, 19 வயதான சனோவா டிம்பிள் ஒலின் சார்பிங் விளையாட்டிலும் பங்கேற்றிருந்தனர்.

1970-களில் நியூயோர்க் நகரத்தில் அறிமுகமாகி இருந்த ‘பிரேக்டான்ஸ்’ என்ற நடனத்தைப் பாரிஸில் இம்முறை புதிதாகப் போட்டி நடனமாக மாற்றியிருந்தார்கள். ஆகஸ்ட் 9-ம் திகதி பெண்களுக்கான நடனப் போட்டியும், ஆகஸ்ட் 10-ம் திகதி ஆண்களுக்கான நடனப் போட்டியும் இடம்பெற்றிருந்தன. இந்தப் போட்டியில் 16 ஆண்களும், 16 பெண்களும் பங்குபற்றி இருந்தனர். மென்பந்து பேஸ்போல், கராத்தே ஆகிய விளையாட்டுகள் முதன் முதலாக ரோக்கியோ போட்டியில் அறிமுகம் செய்யப்பட்டாலும், இம்முறை அவை இடம்பெறவில்லை. மேலதிகமாக படகோட்டம், ஆண்களுக்கான கலை நீச்சல் போன்ற விளையாட்டுகள் பாரிஸில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

பாரிஸ் நகரத்தையும் ஈபிள் கோபுரத்தையும் பிரதிபலிக்கும் வண்ணம் சுமார் 5,000 பதக்கங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. இந்தப் பதக்கங்களின் பின்புறத்தில் வெற்றியின் கிரேக்க தெய்வமான நைக்கின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. 85 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட, ஒவ்வொரு பதக்கமும் சராசரி 500 கிராம் எடையுள்ளதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இதற்கு முந்திய ஒலிம்பிக் போட்டி 2020-ம் ஆண்டு யப்பானின் ரோக்கியோவில் நடைபெற்றது. கோவிட் காலத்தில் நடந்ததால், பல நிகழ்ச்சிகள் அப்போது தடைப்பட்டிருந்தன. குளிர்கால ஒலிம்பிக் போட்டி 2022-ம் ஆண்டு சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்றது. அடுத்த கோடைகால ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சலில் 2028-ம் ஆண்டு நடைபெற இருக்கின்றது. ஒலிம்பிக் போட்டிகளைப் பொறுத்தவரையில், அமெரிக்காவுக்கு இதுவரை எட்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய அனுபவம் இருக்கிறது.

ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் சின்னங்கள் பிரான்சின் பாரம்பரிய தொப்பிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இந்தச் சின்னங்களில் ‘நாம் தனியாக வேகமாகச் செல்கிறோம், ஆனால் ஒன்றாக நாம் மேலும் செல்கிறோம்’ என்பதைக் குறிப்பதாக வாக்கியங்கள் அமைந்திருந்தன. 2022-ம் ஆண்டு உக்ரேன் மீதான படையெடுப்புக் காரணமாக தொடக்க விழாவில் ரஸ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளைப் பங்கேற்க அனுமதிக்கவில்லை. ஆனால் ரஸ்யா மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் நாட்டின் பெயர் இல்லாமல், தனிப்பட்ட முறையில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டார்கள்.

1984-ம் ஆண்டு லோஸ்ஏஞ்சலில் நடந்த ஒலிம்பிக் போட்டியைப் புறக்கணித்த சோவியத் யூனியனும் மற்ற எட்டு நாடுகளும் ஒன்று சேர்ந்து ஒலிப்பிக் போட்டிக்குச் சவாலாக ‘நல்லுறவுப் போட்டி’யை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தியுமிருந்தன.

ஒலிம்பிக் போட்டிகளில் 1900-ம் ஆண்டு பாரிஸில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 2 வீதமான பெண்களே பங்குபற்றியிருந்த நிலையில் இம்முறை நடந்த போட்டிகளில் 50 வீதமானவர்கள் பெண்களாக இருப்பது விளையாட்டுத் துறையில் பெண்கள் அடைந்த முன்னேற்றத்தையும் அவர்களின் கடின உழைப்பையும் உலகிற்கு எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது. இசைத்துறையை இரசிப்பவர்கள் போல விளையாட்டுத் துறையையும் இரசிப்பவர்கள் பலர் இருப்பதை ஒலிம்பிக் போட்டிகளின் போது அவதானித்தேன். பல நாடுகளில் இருந்தும் வருகை தந்தவர்கள் மிக ஆர்வமாகப் போட்டிகளைப் பார்த்து இரசிப்பதைக் காணமுடிந்தது. இதில் சிலர் ஒலிம்பிக் போட்டியின் கனவோடு இருந்திருக்கலாம், சிலர் முன்பு போட்டிகளில் பங்கு பற்றியிருக்கலாம், சிலருக்கு ஒலிம்பிக் வெறும் கனவாக நிறைவேறாமலே போயிருக்கலாம். எல்லோரும் தங்கள் மகிழ்ச்சியையும், மனக்குறைகளையும் கொட்டித் தீர்ப்பதை அங்கே அவதானிக்க முடிந்தது.

காற்பந்தாட்டம் போல தண்ணீரில் கைகளால் பந்தை எறிந்து கோல்போடும் போலோ பந்தாட்டத்தைப் பார்த்தேன். அதன்

பின் பெண்கள் கைப்பந்தாட்டப் போட்டிக்குச் சென்றிருந்தேன். இத்தாலியும் நெதர்லாந்தும் விளையாடினார்கள். விளையாட்டரங்கம் நிறைந்திருந்தது. ஐந்து ஆட்டத்தில் மூன்று ஆட்டத்திலாவது வெற்றி பெறவேண்டும், இத்தாலி தொடர்ச்சியாக மூன்று ஆட்டத்திலும் வெற்றி பெற்றதால் ஆட்டம் அத்துடன் முடிந்து விட்டது. ஆரஞ்சு நிற ஆடையணிந்து நெதர்லாந்து ரசிகர்கள் நிறையப்பேர் அரங்கத்தில் இருந்தார்கள், ஆனாலும் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. மறுநாள் டென்னிஸ் போட்டி நடைபெற்றது. தனியார் ஆட்டமும் இரட்டையர் ஆட்டமும் இடம் பெற்றிருந்தது. மரதன் சைக்கிள் ஓட்டப் போட்டிக்காக வீதிகளில் தடை போட்டிருந்தார்கள். வீதியோரத்தில் நின்று அதையும் பார்க்க முடிந்தது.



பாரிஸ் நகரில் இருந்து பிரான்ஸின் இரண்டாவது பெரிய நகரமான லியோன் நகரத்திற்கு காற்பந்தாட்டப் போட்டி பார்ப்பதற்காக மின்சாரத் தொடர்வண்டியில் சென்றிருந்தோம். பாரிஸில் இருந்து சுமார் 243 மைல் தென்கிழக்கே இருப்பதால் சுமார் 2 மணித்தியாலங்கள் பிரயாணத்திற்கு எடுத்திருந்தது. இதே தூரத்தை இலங்கையில் கடப்பதானால் குறைந்தது 8 மணித்தியாலங்கள் வேண்டும். லியோன் நகரத்தில் சுமார் ஐந்து லட்சம் மக்கள் வசிக்கின்றார்கள். இங்கே உள்ள குருபாமா விளையாட்டரங்கம் என்றழைக்கப்படும் பார்க் ஒலிம்பிக் லியோனைஸ் அரங்கம் சுமார் 59,000 இருக்கைகளைக் கொண்டது. இது பிரான்ஸ் நாட்டில் உள்ள மூன்றாவது பெரிய அரங்கமாகும்.

அங்கே நடந்த காற்பந்தாட்டப் போட்டியில் எகிப்தும் பிரான்சும் மோதிக்கொண்டன. பிரான்ஸ் நாட்டில் நடைபெற்றபடியால் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. பார்வையாளர்களில் அதிகம் பெண்கள் இருந்து உற்சாகமாகக் கைதட்டி ஊக்கமளித்ததைப் பார்த்தபோது விளையாட்டுத்துறையில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. போட்டிகளில் அதிகம் பெண்கள் பங்குபற்றிய ஒலிம்பிக்காகவும் பாரிஸ்-2024 ஒலிம்பிக் அமைந்திருந்தது. மறுபக்கம் ஸ்பெயினும் மொறக்கோவும் விளையாடியதில், ஸ்பெயின் வெற்றி பெற்றிருந்தது. ஸ்பெயினும் பிரான்சும் வெற்றிக் கிண்ணத்திற்காக மோதிக் கொண்டன. இதில் ஸ்பெயின் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

மீண்டும் பாரிஸ் வந்திருந்தேன். பெண்களின் உயரப் பாய்ச்சல், ஆண்களின் நீளப் பாய்ச்சல், பெண்களின் ஓட்டப் போட்டிகள், தடையோட்டம், குண்டு எறிதல் போன்ற போட்டிகளைப் பார்க்க முடிந்தது. பெண்களின் மரதன் ஓட்டம், நீச்சலில் டைவிங் என்று மேலும் சில போட்டிகளைப் பார்க்க முடிந்தது.

பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் 11-ம் திகதி முடிவடைந்தது. சுமார் 71,000 பார்வையாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். பங்குபற்றிய பார்வையாளர்கள் எல்லோருக்கும் ஒளிரும் நிறம் மாறும் கைப்பட்டிகள் வழங்கினார்கள். சுமார் 9,000 விளையாட்டு வீரர்கள் அணிவகுப்பில் கலந்து கொண்டனர். போட்டிகளின் முடிவில் அதிக பதக்கங்களை வென்ற முதல் 10 நாடுகள் என்று பார்த்தால், அமெரிக்கா - 126, சீனா - 91, பிரித்தானியா - 65, பிரான்ஸ் - 64, அவுஸ்ரேலியா - 53, ஜப்பான்- 45, இத்தாலி - 40, நெதர்லாந்து - 34, ஜெர்மனி - 33, தென்கொரியா - 32 ஆகிய நாடுகளைக் கூறலாம்.

2024 ஒலிம்பிக் போட்டியில் கனடா 9 தங்கப் பதக்கம் உட்பட மொத்தம் 27 பதக்கங்களைப் பெற்றிருந்தது. ஒவ்வொரு தங்கப் பதக்கங்களை Christa Deguchi, Ethan Katzberg, Katie Vincent, Phill Wizard ஆகியோரும், குண்டு எறிதல் போட்டியில் Camryn Rogers என்ற பெண்மணி ஒரு தங்கப் பதக்கத்தையும், நீச்சலில் Summer McIntosh தங்கப் பதக்கங்களைப் பெற்றார்.

நாங்கள் கனடா கொடியை வைத்திருந்ததால் எங்களையும் ஒரு விநாடி தொலைக்காட்சியில் காட்டினார்கள். எங்கள் இருக்கை வரிசையில் சற்றுத் தள்ளி ஒரு தமிழ் குடும்பம் பிரான்ஸ் நாட்டுக் கொடியுடன் இருந்தார்கள். எங்கள் வாழ்க்கையில் விதி விளையாடியதால், பிறந்த மண்ணின் கொடியை ஏந்தி மகிழ வேண்டிய நாங்கள் புகுந்த நாட்டின் கொடிகளோடு அங்கே அன்னியராய் அருகருகாய் உட்கார்ந்திருந்த பரிதாபத்தை யாரிடம் சொல்லி அழுவது ?

**உசாத்துணை:**
- https://olympics.com/en/news/paris-2024-opening-ceremony-celine-dion-edith-piaf
- https://olympics.com/en/paris-2024



kuruaravindan@thaiveedu.com




ஷோலே 1975-ல் வெளியானபோது நான் கல்லூரி மாணவன். இந்தியாவின் முதல் 70mm திரைப்படம் என்ற பர பரப்புடன் வெளியானதால், முதல் நாளே பலத்த எதிர்பார்ப்பு டன் மக்கள் கூட்டம் திரையரங்கில் கூடியிருந்தது. எங்கள் ஊரில் 35 mm தான். அதை நேர்மையாக டிலைட் தியேட்டர் முதலாளி பேனர், போஸ்டர் அனைத்திலும் குறிப்பிட்டு இடம் பெறச் செய்துவிட்டார். மக்கள் எதிர்பார்ப்பை ஷோலே சரி யாக நிறைவேற்றியது. இளைஞர் ரமேஷ் சிப்பி இயக் கம், சலீம் ஜாவேத் திரைக்கதை வசனம், ஆர்.டி. பர்மன் இசை, சஞ்சீவ் குமார், தர்மேந்திரா, அமிதாப் பச்சன், ஹேமா மாலினி, ஜெயா பாதுரி இவர்களுடன் வில்லனாக ஒரு புதிய நடிகர் அறிமுகம்... ஆனால் எத்தகைய அறிமுகம் அம்ஜத் கானுடையது!!! பழைய வில்லன் நடிகர்கள் ஜெயந்தின் மக னும், இம்தியாஸ் கானின் தம்பியுமான அம்ஜத் கானின் பிர வேசம் பெரும் வரவேற்பை பெற்றது! இந்தி எதிர்ப்பு பிரதேச மான தமிழ்நாட்டில் இந்திப் படங்கள் இப்படி இமாலய வெற்றி பெறுவது என்பது சும்மாவா!! முதல் நாள், 100-வது நாள், 150-வது நாள், 200-வது நாள் எல்லாம் விடாமல் பார்த்து விட்டு சென்னைக்கும் சென்று 70mm ஸ்டீரியோபோனிக் ஒலி யிலும் பார்த்து மகிழ்ந்தேன். இவ்வளவு பெரிய வெற்றி பெறும் அளவுக்கு அந்த படத்தில்தான் என்ன இருந்தது!!

ஒரு மலையோர கிராமத்துக்கு எப்போதுமே கொள்ளையன் கப்பர் சிங் குழுவினரால் தொல்லைகள் காத்திருக்கின்றன. கொலை, கொள்ளைகள் சாதாரணம். ஓய்வு பெற்ற காவல் அதிகாரி தாக்கூர் பலதேவ் சிங்கின் குடும்பத்தையே அழித்த கிராதகன் கப்பர். இப்போது மிச்சம் இருப்பவர்கள் இரண்டு கைகளையும் அவனால் இழந்த தாகூரும் அவருடைய விதவை மருமகளும்தான். கப்பரின் கொட்டத்தை அடக்க சிறையிலிருந்து விடுதலையான இரண்டு போக்கிரிகளின் உதவியை நாடுகிறார் தாக்கூர். அவர்கள் வந்து இறுதியில் அவனை வீழ்த்தி தாகூரிடம் ஒப்படைக்கிறார்கள். இருவ ரில் ஒருவன் தியாகியும் ஆகிறான். இந்த எளிமையான கதைக்கு சிறப்பு சேர்த்த விஷயங்கள் நிறைய. திரைக்கதை இதில் முக்கியமான ஒன்று, வில்லனின் கொடூரத்தை யும், அவனை அதே கொடூரத்துடன் அழிப்பதையும் மக்கள் ரசித்தனர். அம்ஜத் கான் புதுமுகம் என்பதால் புதிய வில் லனை பிரமிப்புடன் பார்த்தனர். திரைக்கதையுடன் வசனங்க ளும் மிகப் பிரபலமாயின. இந்தி தெரியாதவர்கள் கூட கப்பர் சிங்கின் வசனங்களை மனப்பாடம் செய்து பேசிக்கொண்டி ருந்த காலம் அது. நடிகர்கள் தேர்வு, வெற்றிக்கான இன் னொரு சிறப்பான அம்சம்.

தாக்கூராக சஞ்சீவ் குமார், கடமை உணர்ச்சி, கண்டிப்பு, பழி வாங்கும் வெறி, அனைத்தின் கலவையாக அற்புதமான நடிப்பை தந்திருப்பார். நகைச்சுவை காட்சிகளை சரிவிகிதத் தில் இயக்குனர் கலந்திருப்பார். சூர்மா போபாலியாக ஜெக தீப், ஜெய்லராக அஸ்ரானி, கோள்மூட்டி கைதியாக கெஷ்டோ முகர்ஜி போன்றோருடன் நாயகர்களில் ஒருவரான தர்மேந்திராவும் ஹேமாமாலினியும் கூட காமெடியில் கலக்கு வார்கள். சீரியஸ் காட்சிகளுடன் நகைச்சுவை காட்சிகளையும் கலந்து தருவது பழைய பார்முலா என்றாலும் சரியான பார்



முலா என்று நிரூபித்தார் இயக்குனர். அவசர நிலை காலத் தில் படம் வெளிவந்ததால் கடும் தணிக்கைக்கு உள்ளாகி பல வன்முறைக் காட்சிகள் வெட்டப்பட்டுதான் படம் திரைக்கு வந்தது. குறிப்பாக, இமாமின் மகன் அகமதை கொலை செய் யும் காட்சிகள், கை இழந்த தாக்கூர், கப்பர் சிங்கை இறுதிக் காட்சியில் சித்திரவதை செய்து கொல்வது போன்ற காட்சிகள் நீக்கப்பட்டன. அப்படி இருந்தும்கூட படம் பெரும் வெற்றி யைப் பெற்றது.

ஷோலேயின் கதை எங்கிருந்து வந்தது என்பதை திரைப்பட ஆர்வலர்கள் அனைவரும் அறிவார்கள். ஜப்பானை சேர்ந்த திரையுலக மேதை அகிரா குரசோவாவின் புகழ்பெற்ற திரைப் படமான 'செவன் சாமுராய்' 1954-ல் வெளிவந்தது. அதற்கு முன்னரேயே அவரது புகழ் பெற்ற திரைப்படங்களான 'ரோஷ மான்', 'இடியட்', 'இகுரு' எல்லாம் வெளிவந்திருந்தன. 'செவன் சாமுராயின்' கதை பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு



மலையோர கிராமத்தையும், அதன் ஒவ்வொரு அறுவடையின் போதும் வந்து கொள்ளையடிக்கும் ஒரு கும்பலையும் சுற்றி ஆரம்பிக்கிறது. கிராமத்தினர் எல்லாம் கூடி ஒரு முடிவெடுக் கின்றனர். சாமுராய் என்றழைக்கப்படும் வீரர்களை அழைத்து, தங்களை கொள்ளையர்களிடம் இருந்து மீட்டு, அவர்களையும் அழிக்கவேண்டும் என்று கோரவேண்டும். அதற்குரிய நிதி வச திகள் அவர்களிடம் இல்லை. சாமுராய்களுக்கு உணவு மட் டுமே தர முடியும். ஆகவே பசித்திருக்கும் சாமுராய்களை தேடிக் கண்டுபிடிக்கவேண்டும் என்று முடிவெடுத்து, கிராமத்



திலிருந்து ஒரு குழு அக்கம் பக்கம் ஊர்களுக்கு கிளம்புகி றது. இந்தத் தேடலில், ஒரு குழந்தையை மீட்கும் செயலில் வீரமும் விவேகமும் காட்டும் ஒரு மூத்த சாமுராயை காண நேர்கிறது. அவரை அணுகுகிறார்கள்!

ஷிமாடா என்றழைக்கப்படும் அவரும், ஒரு அணியை திரட் டும் பணியை தொடங்குகிறார். ஆறு வெவ்வேறு விதமான வீரர்கள் ஒன்றிணைகிறார்கள். இவர்களை ஆராதித்து பின் தொடரும் ஒரு இளைஞனும் இந்த அணியில் ஏழாவது வீர னாக சேர பல முயற்சிகள் செய்கிறான். விளையாட்டுத்தன மும் முரட்டுத்தனமும் நிறைந்த அரைகுறையான அவனை சேர்க்க முதலில் மறுத்தாலும், கிக்குச்சியோ எப்படியோ இணைந்துவிடுகிறான். இத்தனைக்கும் அவன் ஒரு சாமுராய் இல்லை. ஏழு வீரர்களும் அழைத்து வந்தவர்களுடன் கிரா மத்தை அடைகிறார்கள். கொள்ளைகள் நடக்கும் பாணியை பற்றி கேட்டு அறிகிறார்கள். கிராமத்தின் புவியியலை யும், அமைப்பையும் நன்கு ஆராய்கிறார்கள். கிராமத்தில் அதிகம் பெண்கள் கண்ணில் தட்டுப்படாதது குறித்தும் வின வுகிறார்கள். கிராமத்து மக்களுக்கு போர்க்கலையின் அரிச்சு வடியை கற்றுத்தரும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். ஒவ் வொரு சாமுராயும் ஒவ்வொரு விதம். ஒவ்வொரு திறனிலும் வல்லுநர்கள். அதில் ஓர் இளைஞன் அங்கு ஆண் வேடத்தில் இருக்கும் ஒரு இளம் பெண்ணிடம் ஈர்க்கப்படுகிறான். பெண்க ளுக்கு பாதுகாப்பில்லாத நிலை. சில இளம்பெண்கள் கடத் தப்பட்டு சீரழிக்கப்படுகிறார்கள். ஒரு சமயத்தில் கணவனை நேருக்கு நேர் சந்திக்க கூச்சப்படும் ஒருத்தி, எரியும் நெருப் பில் பாய்ந்துவிடும் கொடிய நிலை.

செவன் சாமுராய் திரைப்படம் இன்றும் உலகளாவிய சிறந்த திரைப்படங்களில் ஒன்றாக கருதப்படுவதற்கு கார ணம், அதன் உருவாக்கம்தான். 3 மணி நேரத்தையும் தாண்டி ஓடும் இந்த திரைப்படத்தின் ஒவ்வொரு சட்டகமும் நேர்த்தி யாக செதுக்கப்பட்டது என்று சொன்னால் மிகையில்லை. Crowd Management என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். முழுக்க வெளிப்புறக்காட்சிகளில் ஏராளமான நடிகர்கள் நடிக் கும் காட்சிகளில் ஒவ்வொரு நடிகரின் அசைவையும் ஒத் திகை செய்து திறம்பட படம் பிடிப்பது ஒரு அரிய திறன். இதன் போர்க்காட்சிகள் இன்றைய இயக்குனர்களுக்கு ஒரு பாடம். அந்த அளவுக்கு வெளிப்புறங்களில் கலையழகோடு சண்டைக் காட்சிகள் படமாக்கப்பட்டன. போரின் பரபரப்பு பார்வையாளர்களையும் தொற்றிக்கொண்டது!! இதைப் பின் தொடர்ந்துதான் லிஜோ ஜோஸ் பெல்லிசேரி போன்ற மலை யாள இயக்குனர்கள், ‘அங்கமாலி டயரீஸ்’, ‘ஜல்லிக்கட்டு’ போன்ற படங்களில் இந்த கூட்ட நிர்வாகக் கலையை பயன்ப டுத்தினார்கள் என்று நினைக்கிறேன். ‘செவன் சாமுராய்’ திரைப்படத்தில் ஒவ்வொரு நடிகரின் திறனும் பிரமிக்க வைக் கக் கூடியது. குரசோவாவின் அபிமான நடிகர் டொஷீரோ மிபி யுன், கிகுச்சியோ என்ற குறும்புத்தனமான இளைஞனாக வெகு வித்தியாசமான, துடிப்பான நடிப்பை வெளிப்படுத்தியி ருப்பார். அதில் மிகையிருந்தாலும், அவருடைய வேகத்தில் அனைத்தையும் மறந்துவிடுவோம்!!! இந்த கருப்பு வெள் ளைக் காவியம் ஹாலிவுட்டில் வண்ணத்தில் உருமாற்றம் செய்யப்பட்டது. இதன் பிறகுதான் கிளின்ட் ஈஸ்ட்வுட் நடித்த ‘எ பிஸ்ட் புல் ஆப் டாலர்ஸ்’ படத்தை செர்ஜியோ லியோனி குரசோவாவின் ‘யோஜிம்போ’ படத்திலிருந்து சுட் டார் என்று சொல்வார்கள். வழக்குகள் கூட நடந்தன என்பது



வரலாறு.

ஜான் ஸ்டர்ஜஸ் ஹாலிவுட் தந்த சிறந்த இயக்குனர்களில் ஒரு வர். பின்னர் ‘தி கிரேட் எஸ்கேப்’, ‘ஐஸ் ஸ்டேஷன் ஜீப்ரா’ போன்ற சிறந்த படங்களை தந்தவர். ‘செவன் சாமு-ராய்’ திரைப்படத்தை புதிய திரைக்கதையுடன், நீளத்தையும் சுருக்கி ‘தி மாக்னிபிஷியண்ட் செவன்’ என்ற பெயரில் உரு வாக்கினார். இப்போது கதை மெக்சிகோவில் நடைபெறுகி றது. சாமுராய்களுக்கு பதில் இப்போது ‘துப்பாக்கி வீரர் கள்’. நடிகர்களும் உலகெங்கும் பிரபலமானவர்கள். யூல் பிரின்னர், ஸ்டீவ் மெக்வின், சார்லஸ் பிரான்சன் , ராபர்ட் வான், ஜேம்ஸ் கபர்ன், பிரெட் டெக்ஸ்டர் மற்றும் டொஷீரோ மிப்யூன் நடித்த துடுக்கு இளைஞன் ரோலில் ஹோர்ஸ்ட் பூக் கலஸ் நடித்திருந்தார்கள். சாமுராய் படத்தில் கொள்ளையர் களின் தனிப்பட்ட முகங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரப்படவில்லை. ஓர் ஒட்டுமொத்த குழுவாகத்தான் காட்டப் பட்டது. ஆங்கிலப் படத்தில் கொள்ளையர்களின் தலைவன் பாத்திரத்துக்கு இன்னும் முக்கியத்துவமும், நல்ல வசனங்க ளும் தரப்பட்டிருந்தன. ஈலா வாவக் (Eli Wallach) கொள்ளை யர்களின் தலைவனாக அட்டகாசமாக நடித்திருந்தார். பின் னர் இவர் இதே பாணியை கொஞ்சம் மாற்றி ‘தி குட், தி பேட் அண்ட் தி அக்ளி ‘படத்தில் அக்ளியாக அழிச்சாட்டியம் செய் தது அனைவருக்கும் நினைவிருக்கும். ‘தி மாக்னிபிஷியண்ட் செவன்’ மீண்டும் இந்த நூற்றாண்டில் ஹாலிவுட்டிலேயே மறு ஆக்கமும் பெற்றது.

இந்த இரண்டு படங்களிலிருந்து ஷோலே எதை எடுத்துக் கொண்டது ? 7 வீரர்கள் இதில் இருவர் ஆனார்கள். சாமுராய் களும் துப்பாக்கி வீரர்களும், இங்கு விடுதலையான குற்றவா ளிகள். இவர்களை அழைத்து வருபவர், கிராமத்தை சேர்ந்த வர் என்றாலும் அவரும் ஒரு வீரர், காவல் அதிகாரி, ஆனால் கைகளை இழந்தவர்! ஷோலே, செவன் சாமுராயை விட தி மாக்னிபிஷியண்ட் செவன் படத்தையே பெரும்பாலும் பின்பற் றியது பல காட்சிகளில் தெரியும். குறிப்பாக கிராமத்து தொழி லாளர்களின் பட்டறைகள், கொள்ளைக்காரர்கள் வருகை, தலைவன் கிராமவாசிகளிடம் பேசுவது, திருவிழாக்காட்சி எல்லாமே ஹாலிவுட் இறக்குமதி. அமிதாப் பச்சன் - ஜெயா பாதுரியின் பரஸ்பர ஆழ்ந்த பார்வைகளுக்கு கூட அங்கே இருந்து சில காரண காரியங்கள், மூலமாக இருக்கலாம். ஏழு பேரின் குணாதிசயங்கள் கலவையாக இங்கே இருவரின் பாத் திரங்களில் கலந்து கிடைக்கும். தர்மேந்திராவின் வீரு கதா பாத்திரம் நகைச்சுவையும் வீரமும், ஹேமாமாலினியின் பஸந்தி பாத்திரத்தின் மீதான வழிந்தோடும் காதலும் நிறைந்து வழியும் ஒரு உயிர்ப்பான பாத்திரம். அமிதாப்பின் ஜெய், அமைதியும் ஆர்ப்பாட்டமும் இல்லாத ஒரு சீரியஸ் பேர்வழி. தனிமை விரும்பி. மௌத் ஆர்கன் (Mouthorgan) துணைகொண்டு இசையில் லயிப்பவன். மென்மையான காதல் உணர்வு கொண்டவன். மேலுக்கு தெரியாத நகைச் சுவை உணர்ச்சி கொண்டவன். பாஸந்தியை வீருவுக்காக பெண் கேட்டு அவளுடைய அத்தையை சந்திக்க அவன் செல்வது உச்சபட்ச நகைச்சுவை!

ஷோலே படத்தை காப்பி அடித்து இந்தியாவில் இந்தி உட் பட பல மொழிகளில் ஏராளமான திரைப்படங்கள் உருவா கின. பாலாஜி அதன் உரிமம் பெற்று தமிழில் தயாரிக்கப்போ வதாக ஒரு வதந்தி பரவியது. ஆனால் அது நடைபெற வில்லை. தமிழில் ‘முரட்டுக்கரங்கள்’ என்ற திரைப்படம் இப் படி பிரதியெடுக்கப்பட்ட படங்களில் ஒன்று. ஷோலே படத் தின் புகழ் பெற்ற கதாபாத்திரம், தன் குழுவில் உள்ளவர்க ளைக்கூட படுகொலை செய்யும் மனிதத்தன்மை சிறிதும் அற்ற கொடூரன் கப்பர் சிங் தான். பல விளம்பரங்களில் அந்த காலகட்டத்தில் இந்த வேடத்தில் அம்ஜத் கான் தோன்றினார். அதில் நகைமுரண் விளம்பரம் பார்லே பிஸ்கட் சம்பந்தப்பட் டது. கப்பர் இந்த பிஸ்கட்டை குழந்தை-களுக்கு பரிந்துரைப்பார்!



jeeva@thaiveedu.com



# வென்மேரி சர்வதேச விருதுகள்

– போல் ஜோசப் –



தொலைபேசியில்… வணக்கம், நான் அருள் அனுரா பேசுகிறேன், வென்மேரி அறக்கட்டளை நிறுவனர். ஞாயிற்றுக் கிழமை மாலையில் சர்வதேச விருது விழா நடைபெறுகிறது உங்களையும் அன்புடன் அழைக்கிறோம் என்றார். அவசியம் வந்து கலந்து கொள்கிறேன் என்று நானும் பதிலளிக்க, ஒரு சிறிய உரையாடலோடு விடைபெற்றுக் கொண்டோம்.

விழா சரியான நேரத்திற்கு தொடங்கியது. ஏஜக்ஸ் நகரின் அட்லி மண்டபம் மக்களால் நிறைந்திருந்தது. வழக்கமான விருது விழாக்கள் போலன்றி சற்று வித்தியாசமாக மக்கள் ஆர்வத்தோடு அமைதியாக அமர்ந்திருந்தார்கள். மிக நேர்த் தியாக நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

பொதுவாக இப்படியான விருது விழாக்களுக்கு பெரியவர் களே வந்து கலந்து கொள்வது வழக்கம், பிள்ளைகள் வரு வது இல்லை எனலாம். ஆனால், பெருமளவான இளையோ ரும் சிறுவர்களும் கலந்து கொண்டது சிறப்பான விடயம். கல்வி கற்பது, பணி செய்வது என்பதையும் தாண்டி, அவர்க ளையும் பல்துறை சாதனையாளர்களாக உருவாக்கும் உந்து தல் தரும் நிகழ்வாக இந்த விழா அமைந்திருந்தது.

இனி… இந்த அறக்கட்டளையின் பின்புலம், இதை உருவாக்கி யவர்கள், விருதுகள் போன்றவற்றைப் பற்றி மிகச் சுருக்கமா கப் பார்ப்போம்.

வென்மேரி என்ற பெயரின் தோற்றம் நாவாந்துறையில் வாழ்ந்த வென்சிலாஸ் - மேரியம்மா இணையரின் பெயரால், இருவரின் பெயரின் முதல் சில எழுத்துகளைக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். இவர்களின் பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த அறக்கட்ட ளையினை உருவாக்கி, அதன் நிறுவனராக அருளப்பு பென்-சிலாஸ் அனுரா அவர்கள் வழி நடத்தி வருகிறார். யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தமிழ் துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் தலைமையில் 45 பேரை உள் ளடக்கிய அமைப்பாக வென்மேரி அறக்கட்டளை செயற்பட்டு வருகிறது.

இந்த அமைப்பின் குறிக்கோளாக ‘தமிழின் ஆற்றல் மிகு ஆளுமைகளை அங்கீகரித்துக் கௌரவிக்கும் விருதுகள்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அருள் அனுரா அவர்கள் தனது உரையில் இவ்வுலகமானது சாதனையாளர்களை தினமும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. இருந்தும், திறமைகள் வெளிப்படுத்தப்படாமலும் வெளிக்கொணரப்படாமலும் மறைந்து விடுகிறது. தமிழ் இனத்திற்கும் மொழிக்கும் அரும்பணி ஆற் றிய ஆளுமைகளை இனங்கண்டு அவர்களுக்கு மதிப்ப ளித்து, பாராட்டி, கௌரவித்து ஏனையோர்க்கு முன்மாதிரியா கத் திகழும் அவர்களை மண்ணின் மாமணிகளாக வரலாற்






றில் பதிவு செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதே வென்மேரி அறக்கட்டளை என்று குறிப்பிட்டார்.

மேற்படி அறக்கட்டளையின் முதலாவது சர்வதேச விருது வழங்கும் விழா யாழ்ப்பாணத்திலும் இரண்டாவது சர்வதேச விருது வழங்கும் விழா பாரிசிலும் நடைபெற்றது.

மூன்றாவது சர்வதேச விருது வழங்கும் விழா கடந்த ஆகஸ்ட் மாதம் பதினொராம் நாள் கனடா - ஏஜெக்ஸ்-இல் நடைபெற்றது. இந்த ஆண்டு வென்மேரி அறக்கட்டளையினரால் தெரிவு செய்யப்பட்ட 19 ஆளுமைகள் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி மாண்பேற்றம் செய்யப்பட்டார்கள்.

- **பேராசிரியர் ஆ. சதாசிவம் ஞாபகார்த்த விருது:** பேராசிரியர் நாகராஜ ஐயர் சுப்பிரமணியன் (கனடா),
- **கவிஞர் நீலாவணன் ஞாபகார்த்த விருது:** பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் (கனடா),
- **தமிழ் தென்றல் தனிநாயகம் அடிகளார் ஞாபகார்த்த விருது:** பேராசிரியர், வண.பிதா அமுது ஜோசப் சந்திர காந்தன் (கனடா),
- **கலாபவணம் ஏரம்பு சுப்பையா ஞாபகார்த்த விருது:** நாட்டிய ஆச்சாரிய மணி சாந்தா பொன்னுத்துரை (கனடா),
- **இசைப்புலவர் தா.சண்முகரத்தினம் ஞாபகார்த்த விருது:** இசைக் கலைஞர் பொன் சுந்தரலிங்கம் (கனடா),
- **மாமனிதர் பேராசிரியர் இயற்பியலாளர் சி.ஜே எலியேசர் ஞாபகார்த்த விருது:** மருத்துவ இயற்பியலாளர், விஞ்ஞானி, கலாநிதி சரசாநந்தராஜா சிவானந்தன் (அவுஸ்திரேலியா)
- **பெண்ணோயியல் வைத்திய நிபுணர் சிவா சின்னத்தம்பி ஞாபகார்த்த விருது:** கதிரியக்கவியல் பேராசிரியர் மருத்துவர் குமரேசன் சந்திரசேகரன் (அமெரிக்கா),
- **எழுத்தாளர் க. சி குலரெத்தினம் ஞாபகார்த்த விருது:** உரையாளர், எழுத்தாளர் சிந்தனைப்பூக்கள் பத்மநாதன் (கனடா),
- **இலங்கை தேசிய உதைபந்தாட்ட வீரர் எஸ்.என்.ஜே. அந்தோனிப்பிள்ளை ஞாபகார்த்த விருது:** வீராங்கனை ஸ்ரீசயனந்தபவன் அகிலத்திருநாயகி (இலங்கை),
- **மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராஜா ஞாபகார்த்த விருது:** விஞ்ஞானி, பேராசிரியர் கலாநிதி நடேஸ் பழனியர் (கனடா),
- **தமிழ் பதிப்புத்துறையின் முன்னோடி சி.வை. தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த விருது:** எழுத்தாளர் கந்தையா சண்முகலிங்கம் (கனடா),
- **மூத்த ஒலிபரப்பாளர் சோ. சிவபாதசுந்தரம் ஞாபகார்த்த விருது:** ஒலிபரப்பாளர் வி.என் மதிஅழகன் (கனடா),
- **நாடகக் காவலர் கலையரசு சொர்ணலிங்கம் ஞாபகார்த்த விருது:** நாடக நேசர் மனுவேல்பிள்ளை அரியநாயகம் (பிரான்ஸ்)
- **இலங்கையர்கோன் த. சிவஞானசுந்தரம் ஞாபகார்த்த விருது:** எழுத்தாளர் விஸ்வலிங்கம் ஜீவகுமாரன் (டென்மார்க்),
- **ஈழத்துப் பூராடனார் க.தா. செல்வராசகோபால் ஞாபகார்த்த விருது:** எழுத்தாளர் முருகேசு நற்குணதயாளன் (பிரித்தானியா)
- **சமூகசேவையாளர் மில்க்வைற் கந்தையா கனகராஜா ஞாபகார்த்த விருது:** மனிதநேயப்பண்பாளர் செல்லராஜா முரளிதரன் (அவுஸ்திரேலியா)
- **எழுத்தாளர் ஏ.எம்.ஏ அஸீஸ் ஞாபகார்த்த விருது:** மொழிப்பெயர்ப்பாளர் பீர் முஹம்மது முஹம்மது இர்பான் (தாய்லாந்து)
- **மூத்த திரைப்பட கலைஞர் ஏ. ரகுநாதன் ஞாபகார்த்த விருது:** திரைப்பட இயக்குனர் சிபோ சிவகுமாரன் (ஜேர்மனி)

ஆகியோருக்கும்,

- **சமூக ஆர்வலர் சீமாட்டி லீலாவதி இராமநாதன் ஞாபகார்த்த விருது:** விழிப்புலனற்றோர் நல்வாழ்வு சேவைக்காக செயற்படும் வாழ்வகம் நிறுவனத்திற்கும்

வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

ஒரு மனநிறைவான நல்ல விருது விழாவிற்கு வருகை தந்தோம் என்ற உள்ளூர ஒரு மகிழ்வுடன் வென்மேரி அறக்கட்டளை அமைப்பிற்கும் அதன் நிறுவனர் அருள் பென்சிலாஸ் அனுராவிற்கும் என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

paul.joseph@thaiveedu.com





# கண்களைக் குளமாக்கிய கலைமாலை

ஜெயா குமாரசுவாமி

ஓகஸ்ட் மாதம் 11-ம் நாள் என் வாழ்வில் ஒரு மறக்க முடியாத நாளாக அமைந்திருந்தது. கோடை காலத்தின் வார இறுதி நாளான ஞாயிறுக்கிழமையன்று வழமை போன்று ரொறோன்ரோவின் பல பகுதிகளிலும் தமிழர் விழாக்களும் கொண்டாட்டங்களும் ஆங்காங்கே விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனாலும் எந்தவித பெரிய விளம்பரமும் இல்லாமலேயே தமிழிசைக் கலாமன்றத்தின் விழா மண்டபம் அன்று மக்களால் நிறைந்தே காணப்பட்டது. ஆம். அதற்குக் காரணம் அன்று நடைபெற்ற 'கலைமாலை' நிகழ்வே ஆகும்.



சரியாக 4.30 மணிக்கு 'தமிழர் நாட்டுப்புற கலை மன்றம்' எனும் அமைப்பினால் முதல் முறையாக நடத்தப்படும் 'கலைமாலை' நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. மாகாண நாடாளுமன்ற அமைச்சர் கௌரவ விஜய் தணிகாசலம், பேராசிரியர் கலாநிதி பிரெண்டா பெக் Brenda Beck, (UofT)அம்மையார் ஆகியோர் நிகழ்வில் கலந்து, நிகழ்விற்கு பெருமை சேர்த்தார்கள்.





முதல் நிகழ்வாக 'வீரன் வீரத்தம்பி' என்ற வில்லுப்பாட்டு நிகழ்வு நடைபெற்றது. பல மேடைகள் கண்ட கலைஞர்கள் நடத்தும் வில்லுப்பாட்டு போன்று சிறப்பாக இருந்தது. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தோட்டக் கூலிகளாக மக்கள் கொண்டுவரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவுகூருமுகமாக, தமிழகத்தில் நாட்டார் கதையாக வழங்கிவரும் ஒரு கதையே கருப்பொருளாக அமைந்திருந்தது. தரமாக அமைக்கப்பட்டிருந்த வில்லும் அந்த மேடையில் இளையோர் அமர்ந்திருந்த தன்மையும் மீண்டும் அரங்கத்தை சின்னமணி வில்லிசைக் குழுவின் முன் கொண்டு சென்று நிறுத்தியது. அந்த இளம் கலைஞர்கள் பாடிய பாட்டும் கதைக்கு ஏற்றாற்போல் அவர்கள் எடுத்து வைத்த நகைச்சுவையும் கேள்விகளும் மனத்துக்கு இதமாக இருந்தது. அந்த கதையை இன்றைய வாழ்வியலோடு இணைத்துப் பாடியமை சபையோரால் பெரிதும் வரவேற்கப்பட்டது. எதையெல் லாம் நாம் இழந்து கொண்டிருக்கின்றோம் என்ற கவலை யோடு இருந்தோமோ, அதை நிவர்த்தி செய்யுமுகமாக தமி ழும் கலையும் ஒருபோதும் அழியாது என்கின்ற துணிவு இரத்தத்தில் புதிதாக ஊற்றெடுத்ததுபோல் இருந்தது. அந்த இளம் கலைஞர்களின் தமிழ் உச்சரிப்பும் பாட்டின் தன்மையும் அவர்கள் தமிழை எவ்வளவு ஆழமாக விரும்பிக்




KALAI
AUGUST 2024






Tamils Folk Arts Forum - Canada





கற்றிருக்கின்றார்கள் என்பதை அங்கு வந்திருந்து கைதட்டிய சபையோரின் கரவோசையினைக் கொண்டு அறியக்கூடிய தாக இருந்தது. வில்லுப்பாட்டுக்கு ஏற்றாற்போல் மேடையில் வந்து நடித்துக் காட்டிய இளம் கலைஞர்களையும் நாம் வாழ்த்த வேண்டும். கரகாட்டக்காரனுக்கும் கழைக்கூத்தாடிக் கும் சபையோரின் கரவொலியே உற்சாகம் அளிக்கும் என்ப தற்கமைய, சபையோரினால் அந்த இளம் கலைஞர்களுக் கான அங்கீகாரம் கொடுக்கப்பட்டது மிகவும் பாராட்டக்கூடிய தாக இருந்தது.



அதனைத் தொடர்ந்து இரண்டாவதாக இடம்பெற்ற 'அஞ்சலி' என்கின்ற நகைச்சுவை கலந்த சமூக விழிப்புணர்வு நாடகம் இன்று நம்மிடையே நடக்கின்ற பல போலிகளின் முகத்திரை யைக் கிழிப்பதுபோல் இருந்தாலும், சில இடங்களில் சற்று சபையோரை சலசலக்க வைத்தது. கூற வந்த செய்தியை சுருக்கமாக முடித்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக் கும்.





சிறிது நேர இடைவேளையின் பின்னர் மூன்றாவது நிகழ்வாக 'காத்தவராயன்' நாட்டுக்கூத்து ஆரம்பமாகியது. சிறுவயதில் யாழ் பல்கலைக்கழகத்தில் பார்த்த காத்தவராயன் கூத்து என் மனக்கண்ணில் சிறிது எட்டிப்பார்த்தவண்ணம் இருந்தது.

ஆசிரியர் திரு ரமணிகரன் சண்முகநாதன் மேடையின் முன் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி இறை வணக்கம் செய்து, முறைப்படி கூத்துக் கலைஞர்களை அரங்கின் முன் வாசல் வழியாக மேடையை நோக்கி அழைத்து வந்தார். பாடல்கள் பாடியபடி அரங்கத்தை வந்தடைந்த கூத்துக் கலைஞர்க ளைப் பார்த்ததும் சபையோரின் கரகோசம் அலைமோதியது. அவர்களுக்கான ஆடை அலங்காரங்கள் மிகவும் நேர்த்தியா கவும் சிறப்பாகவும் செய்யப்பட்டிருந்தன.



அணிவகுத்து வந்த அனைத்துக் கலைஞர்களுமே சிறுவர்க ளும் இளைஞர்களும். ஆனால், அவர்களின் உடல்மொழி என்பது பழம் பெரும் கூத்துக் கலைஞர்களுக்கு ஏற்றாற் போல் தென்பட்டது. பின்னணிப்பாடலும் இசையும் ஒலிக்க கூத்து ஆரம்பமாகியது. அரங்கத்துக்கு வந்த ஒவ்வொரு கூத் துக் கலைஞர்களும் தங்களுக்கான பாடல்களை தாங்களே மேடையில் பாடி ஆடியது சபையோரை பெரிதும் வியக்க வைத்தது. பெரும் பெரும் கூத்தர்கள்கூட ஒலிப்பேழையை ஒலிக்கவிட்டு வாயசைத்துப் பவனிவர, கனடிய மண்ணிலே பல்கலாசார சமுத்திரத்தில் நீந்தும் இந்த இளம் குஞ்சுகள் தமிழ் கலை எனும் இந்த நீரோட்டத்தில் எவ்வாறு இவ்வளவு சிறப்பாக நீச்சல் அடிக்கின்றார்கள் என்று மெய்மறந்து பார்த் திருந்தார்கள். ஒவ்வொருவரின் நடிப்பும் யாரைப் போற்றுவது யாரைக் குறைப்பது என்று இல்லாமல் மிகவும் சிறப்பாக இருந்தது. அவர்கள் பாடும்போது எந்தவித தடுமாற்றமோ தமிழ் சொல் உச்சரிப்பில் தவறோ எந்த இடத்திலும் தென்ப டவில்லை. மெய்ப்புப் பார்ப்பவர்கள்கூட யாரும் இல்லை என் பது பெருமைப்படவேண்டிய விடயமாகும். பின்னர்தான் நான் அறிந்து கொண்டேன், அனைத்துக் கலைஞர்களுக்கும் மொத்த கூத்தின் அனைத்துப் பாடலும் மனப்பாடம் என்றும் யாரை, எந்தப் பாத்திரத்தை ஏற்றுப் பாடவிட்டாலும் சிறப்பாக பாடி, நடித்திருப்பார்கள் என்றும். உண்மையிலே இதைக் கேட்கும்போது, அதி சிறப்புப் பயிற்சி பெற்ற இராணுவக் கட் டமைப்பு எவ்வாறு இருக்குமோ அவ்வாறே அவர்களின் திற மைகள் இருந்தது.












சிறு வயதுக் காத்தான், தாய் மாரி அம்மன், சிவன், கிருஷ்ணன், நாரதர், காளி, காத்தவராயன், தோழன் சின்னான், ஆரியப்பூமாலை, அவளின் இரு தோழிகள் மற்றும் வேளாண்மைப் பொதுமக்களாக வந்த அனைவருமே மிகவும் சிறப்பாக தங்களின் கதா பாத்திரங்களை நடித்திருந்தார்கள்.

இறுதியாக காத்தவராயன் கழுமரம் ஏறும் பாடலுக்கான காட்சியும் சபையோர் கண்களைப் பனிக்கச் செய்தன. கூத்து முடிந்து 10 நிமிடங்கள் வரை சபையோர் அனைவரும் எழுந்து நின்று கைகைளைத் தட்டி அந்த இளம் கலைஞர்களை உற்சாகப்படுத்தியது அவர்களுக்கு பெரியதோர் பட்டமளிப்பை வழங்கியது போல் இருந்தது. அதற்கும் மேலாக, வந்திருந்த சபையோர் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள். சில விழாக்களில் கடமைக்காகக் கைகளை தட்டுவதை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால், இந்த சபையின் கரஒலியோ அவர்களின் ஆழ் மனதின் வெளிப்பாடாகத் தெரிந்தது.

ஒரு மரத்தின் அல்லது ஒரு கட்டடத்தின் அழகை ரசிக்கும் அளவிற்கு, அந்த அழகை எம் கண்களுக்கு தரக் காரணமாக இருக்கும் மரத்தின் வேரையோ அன்றி கட்டடத்தின் அத்திபாரத்தையோ கவனிப்பதில்லை. அவ்வாறல்லாமல், இந்த ‘கலைமாலை’ நிகழ்வின் ஆணிவேரை ஒருமுறை பார்த்திடுவோம். இரமணீகரன் சண்முகநாதன் அவர்கள் யாழ் பல்கலைகழகத்தில் தனது பட்டப்படிப்பைமுடித்து, ஆசிரியராகச் சேவையாற்றி, பின்னர் கனடிய மண்ணிலே வாழ்ந்து வருபவர். தனது சிறுவயது முதலே தமிழ் பாரம்பரியக் கலைகளான நாட்டுக் கூத்து, நாடகம், வில்லுப்பாட்டு மற்றும் தெருக்கூத்து என்பவற்றில் பெரும் ஆர்வம் கொண்டு விளங்கினார். இன்று தனது தீராத கலைத் தாகத்தால் ‘தமிழர் நாட்டுப்புறக் கலை மன்றம்’ என்ற அமைப்பை ஆரம்பித்து எதிர்கால தலைமுறைக்கு எமது பாரம்பரிய கலைகளை பயிற்றுவிக்கும் மாபெரும் பணியை ஆற்றிவருகின்றார். பண்டைய தமிழர் வரலாற்றிலே, பேரரசுகளால் அழிக்கப்பட்ட சிறு சிறு இனக்குழுக்கள் பாரி யின் பறம்பு மலையிலே தஞ்சமடைந்து, அங்கே தங்கள் கலைகளைக் கொற்றவைக் கூத்துகள் மூலம் தமது எதிர் காலத் தலைமுறைக்குக் கடத்தினார்கள் என்று, கபிலரின் பாடல்கள் அறியத்தருகின்றன. அதுபோல், புலம்பெயர்ந்த எமது தமிழ் சிறார்களுக்கு இவர் ஆற்றும் பணி மிகவும் போற் றப்பட வேண்டியது. நான் அறிந்த வகையில் இந்தச் சிறார்க ளின் நீண்டகால விடாமுயற்சியும் சளைக்காத பயிற்சியும் அவர்களிடையே காணப்பட்ட குழு ஒற்றுமையும் ஒரே குடும் பம் என்ற எண்ணப்பாங்குமே இந்த வெற்றிக்கு மிகவும் உறு துணையாக அமைந்தன. அத்தோடு அவர்களின் பெற்றோ ரும் பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளார்கள். பாடசாலை யில் பயிலும் சிறார்களின் இன்றைய கல்விச் சுமையோடு இந்த பெரும் கலைச் சுமையையும் சுமப்பதற்கு பெற்றோரின் பூரண ஆதரவு இருந்திருக்கின்றது என்பது வெளிப்படை. அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

எமது பாரம்பரிய கலைகளின் மேடையேற்றம் என்பது, எமது அனைத்து கலை நிகழ்வுகளிலும் மேடையேற்றப்பட்டு, மேன்மேலும் எமது நாட்டுப்புற கலைகள் வளர்வதற்கும் அதில் இன்னும் பல இளையோர் இணைந்து செயற்படுவதற்கும் நாம் ஒவ்வொருவரும் கைகோர்த்துச் செயற்படவேண்டும். இவர்கள் பணியை வலுப்பெறச் செய்வது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.



jeya.kumaraswamy@thaiveedu.com



# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி
# ‘சிறகிழந்த கிளிகள்’ தந்த
# தானா. மருதமுத்து

**50**

– மல்லியப்புசந்தி திலகர் –

‘தேயிலைப் புஷ்பங்கள்’ கவிதை நூலைத் தொடர்ந்து ‘என் கொல்லைப்புரத்து நதி’ எனும் தொகுதியையும் 2021-ம் ஆண்டு வெளியிட்டுள்ள கோவுஸ்ஸ ராம்ஜி உலகநாதன் போன்றே, பாடசாலை இடைவிலகளுடன் வெளிவந்த அல்லது அதே வழி வந்த இன்னும் ஒரு கவிஞர் தங்கையா மருதமுத்து. இவரும் ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் ஹாலி-எல - ரொசட் தோட்டத்தைச் சேர்ந்தவர்.

ரொசட் தோட்டப் பாடசாலையில் 1987 முதல் 1995 வரையான காலப்பகுதியில் வாசிப்பு, ஓரங்க நாடகம், பேச்சு, விவாதம், வில்லுப்பாட்டு போன்ற பல மேடை நிகழ்ச்சிகளில் இவர் பங்குபற்றியுள்ளார். அதிலும் வில்லுப்பாட்டுப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றதுடன், அதில் இடம்பெற்ற ஒரு பாடலில் ஒரு வரி கூட தான் எழுதியதை அப்படியே சேர்த்துக்கொண்ட தனது ஆசான் கந்தசாமியை அதிகம் நேசித்துள்ளார். தான் அதிகம் நேசித்த ஆசிரியர் கந்தசாமி அவர்களுக்கு எழுதியிருக்கும் கவிதை ஒன்று இவ்வாறு அமைகிறது.

***உள்ளத்தை உரம்படுத்தி நல்லெண்ணத்தை பயிரிட்டு***
***இருளிய கண்களை அறிவினில் ஒளியிடச் செய்து***
***சிறப்பான வழி சமைத்து சிற்பமாய் எனையாக்க***
***ஒளியாய் தான் இருந்த***
***உயர்திரு கந்தசாமி நாமம் உண்ட ஆசானே!***

கலைத்துறையில் தீவிர ஈடுபாடு காட்டிய இவர், ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்ற காலத்தில், குடும்ப சூழல் காரணமாக கல்வியை கைவிட நேர்ந்துள்ளது. நகர்ப்புறங்களுக்கு தொழிலுக்காக சென்று நடிப்பிலே அதிக ஆர்வம் கொண்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டபோதும் வெற்றிகளைவிட தோல்விகளையே அதிகம் கண்டதாகக் குறிப்பிட்டுள்ள அவர், என் பயணத்தில் பல பார்வைகளை பேனா வடித்தது. இதனையே இந்த ‘சிறகிழந்த கிளிகள்’ தொகுப்பின் ஊடாக உங்கள் முன்வைக்கிறேன் என, தனது கவிதை நூல் எழுதும் நோக்கத்தை குறிப்பிடுகின்றார்.

கடைச்சிப் பந்தியாக, ஓட்டல் ஊழியராக வேலை செய்து கொண்டே இவர் தனக்குள் புதைந்து கிடக்கும் மன எண்ணங்களை கவிதைகளாக எழுதியுள்ளார். பாக்யா பதிப்பகத்தின் முயற்சியால் அவரது கவிதைகள் தொகுப்பாக்கப்பட்டு ‘சிறகிழந்த கிளிகள்’ எனும் தலைப்பில் 2014-ம் ஆண்டு அவரது பிறந்த ஊரான ரொசட் தோட்டத்தில் வெளியிடப்பட்டது.

பொதுவாக மலையகத்திற்கு வெளியே ஒட்டுமொத்த மானிடத்தையும் நோக்கும் இவரது பார்வை, அவரது கல்விப் பின்புலத்தோடு பார்க்கின்ற போது பெரும் ஆச்சரியம் தருவதாக உள்ளது. இவரது கவிதைகள் குறித்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன் தனது கருத்துக்களை இவ்வாறு கூறுகிறார்:

‘சமுதாய உணர்வோடு தான் வாழ்ந்த சமூகத்தை பல கேள்விகள் கேட்கும் ஆதங்கங்களாகவும் உரிமையோடு வாழத் துடிக்கும் மானுடத்தின் குரலாகவும் மொழி இனக்காப்பு கோஷங்களாகவும் விடுதலை கீதங்கள் ஆகவும் மருதமுத்துவின் கவிதைகள் காணப்படுகின்றன’.

அதேபோல இலக்கியச் செயற்பாட்டாளரான மு. மயூரன் எழுதுகையில்:

‘கவிதை பற்றி வலிந்து திணிக்கப்படும் மனப்பதிவுகளையும் கவிதையின் உயிரை தொந்தரவு செய்யும் தேவையற்ற அலங்காரங்களையும் தாண்டி அற்புதமான கவிதைகளை படைக்க வல்லவராக தெரிகிறார்’.

‘சிறகிழந்த கிளிகள்’ நூலை வெளியிட்டிருக்கும் பாக்யா பதிப்பகத்தின் நிறுவனர் மல்லியப்புசந்தி திலகர் பதிப்புரையில் பின்வருமாறு எழுதுகிறார்:

பாடசாலை இடைவிலகல் வழிவந்த தங்கையா மருதமுத்து

எனும் இயற்பெயர் கொண்ட மனோ (வீட்டுப்பெயர்) தன்னை வெளிப்படுத்தும் விதம் வித்தியாசமானது. பாடசாலையிலி ருந்து இடை விலகி தலைநகர்க் கடைகளில் சிப்பந்தியாக



வாழ்வை ஆரம்பித்தவர், இளமைப் பருவத்தின் அத்தனை இச்சைகளுக்கும் அகப்பட்டவராக அடிமைப்பட்டவராக விளிம்பு நிலைக்குச் சென்று அதுவே வாழ்க்கை என நினைத்து விடாமல் தன்னை சுதாகரித்துக் கொண்டு தன்னை உணர்ந்து தன்னை மீண்டும் முன்னோக்கி நகர்த்தி நிலைநி றுத்திக்கொள்ள எடுக்கும் முயற்சியே இந்த கவிதை நூலின் வெளிவருகையாக இருக்கிறது என எண்ணுகிறேன். தாங்கள் படித்தவர்கள் என எழுந்து நிற்போர் மத்தியில் பாடசாலை யில் இடைவிலகி துவண்டு விழுந்து எழுந்து நிற்கத் துடிக்கும் ஒரு மலையக இளைஞனுக்கு கை கொடுக்கும் முயற்சியா கவே இந்த 'சிறகிழந்த கிளிகள்' நூலை வெளியிடுவதாகவும் கூறுகின்றார்.

மலையக மண்வாசனை வீசும் இவரது காதல் கவிதை ஒன்று இவ்வாறு அமைகிறது.

### 'என்னவர் காதல்'

**மண்வெட்டி கையெடுத்து மாடசாமி தட்டும் சத்தம்**
**ஊருக்கே ஒலி கேட்கும் சூரியனும் கண் விழிக்கும்**

**நீலச்சட்டை கை மடிச்சு நெத்தியிலே பொட்டு வச்சு**
**மெல்ல அடி வெச்சானே மெதுவா மலை(க்கு) போக**

**முதல் பிரட்டு தான் பிடிச்சு முந்தியடி வச்ச புள்ள**
**முந்தானைய ஒளிச்சுக்கிட்டா படங்கு கட்டும் கயிறுக்குள்ள**

**தாத்தாவின் வேட்டியிலே தலப்பா செய்த புள்ள**
**கூடையின் முடிவை குந்த வச்ச இடுப்புல**

**செருப்பில்லா கால் பார்த்து சிரிக்குது தாரு ரோட்டு**
**பிள்ளையார் சந்தி வந்து வச்சிகிட்டா நெத்தி பொட்டு**

**பத்தடி தூரத்தில் காத்திருந்த மாடசாமி**
**பழகுபுள்ள சத்தியமா பாத்துக்குவேன் பக்குவமா**

**கண்ணால கத்தி வச்சி கவ்வாத்து வெட்டாதே**
**நேத்தி வச்சு காத்திருக்கேன் என்னுயிரை கொய்யாதே**

**ஊரே தப்படிக்கும் மலையெல்லாம் சாடை பேசும்**
**மானங்கெட்ட பொழப்பு வேணாம்**
**எங்கப்பன் கிட்ட கேளு மச்சான்**

**சித்திரைக்கு முன்னால சேதி கேட்டு வருவேண்டி**
**செண்பகமே கொலுசு போல சிரிச்சதுவே போதுமடி**

**காமன் கூத்து பொட்டலிலே கத்தரிப்பு சேலை கட்டி**
**கடைசி வரை நின்னுக்கடி கண்ணாடி வளவிதாரேன்**

**பூனை கண்ணை மூடிகிட்டா பூலோகம் இருளாது**
**ஆத்தாவும் கூட வரும் அவச்சொல்லும் வேணாம் மச்சான்**

**மஞ்ச வெயில் மாறும் போது கொஞ்ச வரும் காத்தோடு**
**ஆத்தங்கரை வாபுள்ள ஆச முத்தம் நான் தாரேன்**

**கட்டபொம்மன் மீசை வச்சு கரும்பாட்டம் பேசும் மச்சான்**
**கட்டி தாலி கூப்பிடுங்க கட்டெறும்பா நானும் வாரேன்**

இவ்வாறு மலையக மக்களின் காதலை அதே மண்வாசனை மாறாது மலையக நாட்டுப்புற, தோட்டப்புற பாடல் வடிவங்க ளின் தாக்கத்தோடு சமகாலத்தில் எழுதக்கூடிய ஒரு கவிஞ ராக தானா. மருதமுத்துவை அடையாளம் காட்ட முடியும்.

வாழியவே எனும் தலைப்பில் அவர் எழுதிய கவிதை இவ்வாறு அமைகிறது:

***கருவிலே உன்னுருவாய் என செதுக்கி வைத்தேனே***
***என்னுயிர் என்ற சுவாசமாய் உன்னை உற்றி வைத்தேனே***
***இருதயத்தின் ஒளியில் உண்ணாமல் ரசித்தேனே***
***தமிழ் என்ற பதம் சொல்ல என் நா துடிக்கும் தேனே***
***குறையற்ற செல்வமாய் பவளத் தமிழ் வாழியவே***
***பண்பாடு போதித்த சங்கத்தமிழ் வாழியவே***
***ஆழி அழிந்தாலும் அமுதத் தமிழ் வாழியவே***
***சீர் நடக்கும் செம்மொழியே நின் சிறப்பு வாழியவே!***




தாய் எனும் தலைப்பில் அவர் எழுதிய கவிதையில் இப்படி ஒரு பந்தி வருகிறது.

***இருக்கும் உதிரமெல்லாம்***
***பாலின் பசி தீர்த்து***
***நாளைய பாலுக்கு***
***வியர்வையாய் உயரம் சிந்தி***
***உடலுருக்கி ஒளி தந்த***
***அன்னை அவளுக்கு***
***ஏழு உலகில்***
***ஏதும் உண்டோ!***

'சிறகிழந்த கிளிகள்' எனும் தலைப்பில் இவர் எழுதியுள்ள கவிதை இவ்வாறு அமைகிறது.

***இறைவனின் பேனையில்***
***எத்தனையோ படைப்புகள்***
***மனிதன் எனும் தலைப்பு***
***மரணிக்கும் விடுகதைகள்***
***...***
***எட்டி நடந்திடும்***
***இருகால் இழந்தோரும்***
***கட்டி அணைத்திடும் இருகரம்***
***பிரிந்து வரும்***
***என தொடர்ந்து சென்று***
***...***
***சிறகிழந்த கிளியாய்***
***நீ சிறை செய்த லட்சியத்தை***
***நம்பிக்கை சிறகடித்து***
***நடுவானில் பறக்க விடு***

என நம்பிக்கை தருவதாக அமைகிறது.

பாக்யா பதிப்பகம் வெளியிட்ட நூல்களில் மிக இளவயது எழுத்தாளரான தங்கையா மருதமுத்துவை 'தானா. மருத முத்து' என அறிமுகம் செய்து வைத்தது. அவரை அறிமுகம் செய்யும் பதிப்பாளர் இவ்வாறு எழுதுகிறார்.

'தானா. மருதமுத்து கடந்து வந்த வாழ்க்கை கசப்பானது. அதனை அவர் சொல்லும் விதம் சுவாரஷ்யமானது. ஒரு படைப்பாளியாக தன்னை வெளிக்காட்டும் இவர் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை தழுவிய சிறுகதைகள், நாவல் கள், ஏன் சுயசரிதையோகூட எழுதலாம். இன்று 'சிறகிழந்த கிளிகள்' எனும் இந்த படைப்பு வெளிவந்திருக்க வேண்டிய நியாயப்பாடுகள் அப்போது புலப்படும்'.

மல்லியப்புசந்தி திலகர் எழுதியுள்ள பதிப்புரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ள போதிலும் மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி ஆய்வுத் தொடருக்காக இந்தக் கட்டுரை எழுதப்படும் நாளில் 'சிறகிழந்த கிளிகள்' தந்த, தானா. மருதமுத்து தன் வாழ்வை முடித்துக் கொண்டுவிட்டார் எனும் மனது கனக்கும் துயரமான செய்தியையும் இங்கே பதிவு செய்ய வேண்டியுள்ளது. நிறைந்த ஆசைகள், கனவுகள் கொண்டிருந்த இளங்கவிஞர் தானா. மருதமுத்து கடந்த ஜூலை மாதம் (2024) காரணம் தெரியாமலே தலைநகர் கொழும்பில் காலமானார் எனும் செய்தி மனதை வருடுவதாகவே உள்ளது.

(தொடரும்...)



thilagar@thaiveedu.com



# தமிழறிஞர் கலாநிதி க. சொக்கன்

வே. விவேகானந்தன்

ஈழத்து இலக்கிய வானில் சொக்கன் என்னும் பெயருடன் வலம் வந்தவர், க. சொக்கலிங்கம் அவர்கள். இவர் அச்சு வேலி என்னும் பதியில் ஆவரங்கால் என்னும் ஊரைப் பூர்வீக மாகக் கொண்டவர். அங்கு வாழ்ந்து வந்த கந்தசாமிச்செட்டி -மீனாட்சி இணையருக்கு மகனாக 1930-ம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். இவர் பிறந்து ஒரு வருட மாக முன்பே தந்தையாரை இழந்தார். எனவே தாயாருடன் அங்கிருந்து இடம் பெயர்ந்து நீராவியடியில் ஒன்றுவிட்ட மாம னாருடன் வாழத்தொடங்கினார்.

சொக்கன் தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் கற்றார். பின்னர் வண்ணார் பண்ணை நாவலர் வித்தியாசாலையிலும், கனகரத்தினம் மத் திய மகாவித்தியாலயத்திலும் கற்று, 1946-ம் ஆண்டு சிரேஸ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையிலும் சித்தியடைந்தார். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றுத் தனது ஆங்கில அறிவையும் கூர்மையாக்கிக் கொண் டார்.

ஒருவர் சிறுவயதில் வாழும் சூழலும், இளவயதில் பழகும் நண் பர்களும் அவரது வாழ்க்கையில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும் ? என்பதற்கு சொக்கனின் வாழ்க்கை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சிறுவயதில் இவர் வாழ்ந்து வந்த மாம னார் எஸ்.பி. நாகரத்தினம் அவர்கள், அதிகம் வாசிக்கும் பழக்கம் உடையவராக இருந்ததனால், அவர் வீட்டில் பல்து றைப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் நிறை யவே காணப்பட்டன. இத்தகைய சூழலில் சொக்கனும் சிறுவ யதிலேயே பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாசிக்கும் பழக் கத்தை ஏற்படுத்திக்கொண்டார். அத்துடன் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் படிக்கும்போது, இலக்கியத் துறையிலும், எழுத்துத் துறையிலும் ஆர்வம் கொண்ட மதுர-கவி நாகராசன், சோ. இராமச்சந்திரஐயர், புரட்சிதாசன் என அழைக்கப்பட்ட த. இராசகோபாலன் ஆகியோரின் நெருங் கிய நட்பும், சொக்கன் அவர்கள் இலக்கியத் துறையிலும் எழுத்துத் துறையிலும் நாட்டம் கொள்ள உந்து சக்திகளாக அமைந்தன. பாடசாலை மாணவனாகப் படிக்கும் காலத்தி லேயே 1944-ம் ஆண்டு தனது பதினான்காம் வயதில், சொக்-கன் எழுதிய முதலாவது சிறுகதையான ‘தியாகம்’ வீரகேசரி வாரமலரில் வெளிவந்தது. பாடசாலை மாணவனாக இருந்த போதே அவர் எழுதிய ‘வள்ளி’, ‘குப்பையிலே மாணிக்கம்’ போன்ற சிறுகதைகள் ஈழகேசரி, மறுமலர்ச்சி, சுதந்திரன், வீர-கேசரி, தினகரன், மின்னொளி, போன்ற பத்திரிகைகளிலும் பிரசுரமாகின. 1946-ம் ஆண்டு மின்னொளி இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய ‘கடைசி ஆசை’ என்ற சிறுகதை முதற் பரிசைப் பெற்றது. நவீன தமிழ் இலக்கிய வர லாற்றில் புதிய அலையாக அமைந்த மறுமலர்ச்சிக் குழுவில் ஒருவராகக் காலடி எடுத்து வைத்த சொக்கன் அவர்கள் ஆரா வமுதன், அடியவன், வேனிலான், சுடலையூர்ச் சுந்தரன், பொய்யாம் மொழியார், சோனா, திரிபுராந்தகன், சட்டம்பியார், குறளன், ஜனனி, பாலன் எனப் பல புனைபெயர்களில் இலக் கியப் பணிகளை மேற்கொண்டார். கல்வியையும் கைவிடாது தொடர்ந்தார்.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆங்கில மொழி மூலம் கற்றுக்கொண்டிருந்தபோதே, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. 1950-ம் ஆண்டு ஆரம்பித்து 1952-ம் ஆண்டு பயிற்சியை நிறைவு செய்த அவர், பதுளை ஊவாக் கல்லூரியில் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். 1953-ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் வித்து வான் பட்டம் (Diploma in Tamil) பெறும் பயிற்சியில் இணைந்து கொண்டார். 1955-ம் ஆண்டு அப்பயிற்சியை நிறைவு செய்த சொக்கன், புத்தளம் சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியைத் தொடர்ந்தார். பின்னர், ஹற்றன் சென். யோன் பொஸ்க்கோ கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில், மாணவர்களினதும், சக ஆசிரியர்களி னதும் நன்மதிப்பைப் பெற்று, புகழ் மிக்க ஆசிரியராக விளங்

கினார். இவ்வாறு சொக்கன் பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராகவும், 1972-ம் ஆண்டு தொடக்கம் முல்லைத்தீவு மகா வித்தியாலயம், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம், கோண்



டாவில் இந்து மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் அதிபராகவும் பணியாற்றி 1990-ம் ஆண்டு ஓய்வு பெற்றார். இடைக்காலத்தில், 1977 முதல் 1979 வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், 1980 முதல் 1981 வரை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1991-ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

பதின்னான்கு வயதிலே சிறுகதைகள் எழுதத் தொடங்கிய சொக்கன் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். அவற்றுள். பொன்பூச்சு, வேதாந்தி, கனவுக்கோயில், தாமரையின் ஏக்கம், கற்பரசி, வினோத நண்பர், ஞாபகச் சின்னம், பிள்ளைப் பாசம், தீர்ப்பு, கூனல், பனித்துளி, ‘மணமுறிவு, மறுபிறப்பு’ என்பன மிகச்சிறந்த கதைகளாகும். இவரது சில கதைகள் அகில இலங்கைத் தரத்திலான போட்டிப் பரிசில்களைப் பெற்றுள்ளன. சிறுகதைத் தொகுப்பான ‘கடல்’, 1972-ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொடுத்தது.

பத்தொன்பது வயதில் நாவல் இலக்கியத்திலும் கால் பதித்து, சொக்கன் எழுதிய முதலாவது நாவலாகிய ‘மலர்ப்பலி’, 1949-ஆம் ஆண்டு ஈழகேசரிப் பத்திரிகையில் தொடராகப் பிரசுரமானது. இதனைத் தொடர்ந்து ‘முகங்கள், ஞானக் கவிஞன்’. ஆகிய நாவல்களும் வெளிவந்தன. ‘செல்லும் வழி இருட்டு’, ‘சீதா’ ஆகிய நாவல்கள் இவருக்குப் பெருமை சேர்த்த நாவல்களாகும். ‘சலதி’ என்னும் நாவல் சிலப்பதிகாரத்தைத் தழுவி இவரால் எழுதப்பட்டதாகும். புகழ்பெற்ற வங்கதேச திரைப்பட இயக்குனரான, சத்தியஜித் ரே வங்கமொழியில் எழுதிய ‘பத்திக் சந்த்’ என்னும் நாவலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். சிறுவர் முதல் பெரியோர் வரை விரும்பி வாசிக்கும் வகையில் மர்மச் சம்பவங்கள், வினோத அனுபவங்கள், வேடிக்கைக் காட்சிகள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்த மொழிபெயர்ப்பு நாவல் தமிழ் இலக்கியத்துக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது எனப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

நாடகத்துறையிலே ஆர்வம் கொண்ட சொக்கன் ‘கவிஞன் பலி’, ‘கவிஞன் பரிசு’, ‘தாய் உள்ளம்’, ‘புனிதவதி’, ‘பரீட்சைப் பிசாசு’ ஆகிய நாடகங்களையும் எழுதியுள்ளார். இவரது நாடகங்கள் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன. யாழ்பாடியின் கதையைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகமான ‘கவிஞன் பரிசு’, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மேடையேற்றப்பட்டு, பலரது பாராட்டையும் பெற்றது. ‘வேனிலான்’ என்னும் புனை பெயரில் எழுதிய ‘துரோகம் தந்த பரிசு’ என்னும் நாடகம் பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் தன்மை கொண்டது.

நாடகத் துறையிலே சொக்கன் ஆர்வம் கொள்ளக் காரணமாக இருந்தவர் இவரது தாயாரின் ஒன்றவிட்ட தம்பியார் எஸ்.பி. நாகரத்தினம் அவர்கள். நாடகங்களை எழுதுவது, நடிப்பது, மேடையேற்றுவது இவரது கலைப் பணியாகும். இவரது நாடகங்களில் நடித்துப் பயிற்சி பெற்றிருந்த சொக்கனுக்கு மேலும் ஊக்கமளித்தவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள். 1960-களின் தொடக்கத்தில் இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுத் தலைவராக அவர் பணியாற்றிய போது, நாடக இலக்கியத்தின் வளர்ச்சிக்காக, நாடக எழுத்துப் பிரதிப் போட்டி ஒன்றை அறிமுகம் செய்தார். அப்போட்டியில் முதல் இரு வருடங்களும் சொக்கன் தொடர்ந்து பங்குபற்றி, ‘சிலம்பு பிறந்தது’, ‘சிங்ககிரிக் காவலன்’, ஆகிய

இரு நாடகங்களையும் எழுதி முதற் பரிசைப் பெற்றுக் கொண்டார்.

1968-ம் ஆண்டு இளங்கலைமாணிப் பட்டப்படிப்பை நிறைவு செய்த சொக்கன், 1977-ம் ஆண்டு முதுகலை மாணிப்பட்ட ஆய்வுக்காகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் மேற்பார்வையில் 'ஈழத்துத் தமிழ் நாடகத்தின் ஐம்பதாண்டு கால வளர்ச்சி - ஓர் ஆய்வு' என்னும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டார். இந்த ஆய்வு பின்னர் 'ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலாக வெளிவந்து, இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக்கொண்டது.

கவிதை புனையும் ஆற்றல் கொண்ட சொக்கன், வீரத்தாய், நசிகேதன், நல்லூர் நான்மணி மாலை, அப்பரின் அன்புள்ளம், அரியாலை சித்திவிநாயகர் பாமாலை, பாரதி பாடிய பராசக்தி, அறநெறிப்பா மஞ்சரி, கவிதைக் கதம்பம், நெடும்பா - 3 ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார். சேந்தன் என்பவருடன் இணைந்து, 'நாவலர் நாவலரான கதை' என்ற பா நாடகத்தையும் படைத்துள்ளார்.

சிறந்த கட்டுரை ஆசிரியராக விளங்கிய சொக்கன் தமிழ், இலக்கியம், சமயம் சமூகம் தொடர்பாக ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். சைவம் வளர்த்த தையலர், நல்லை நகர் தந்த நாவலர், பைந்தமிழ் வளர்த்த பதின்மர், சைவ சித்தாந்த வளர்ச்சி, குமரகுருபரர் போற்றிய கோமகள், பஞ்ச சீலக் குறளும் பரிமேலழகியர் உரையும், எனப் பல தலைப்புகளில் கட்டுரைகளை எழுதிக் குவித்துள்ளார். இவரது எழுத்தாற்றலை வியந்த பேராசிரியர் நந்தி, வாரம் அல்லது மாதம் ஒரு புத்தகம் எழுதக் கூடிய ஆற்றல் படைத்தவர் இவர் எனவும், இரவில் நட்சத்திரங்களைப் பார்த்து ஆன்மீகக் கட்டுரைகளையும், பகலில் பூமியைப் பார்த்து முற்போக்குக் கட்டுரைகளையும் எழுதுபவர் எனப் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

சொக்கன் அவர்களின் சிறந்த பயண அனுபவ நூலாக அக்கரைச்சீமையின் அனுபவங்கள் என்னும் நூலும், சிறுவர்களுக்கான நூல்களாக முயலாரின் சாகசங்கள், படிப்பதெப்படி? என்பனவும் விளங்குகின்றன. வித்துவான் க. வேந்தனார், சேர். பொன். இராமநாதன், விபுலானந்த அடிகளார், சி.வை. தாமோதரம்பிள்ளை ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதிய சொக்கன் அவர்கள் தனது வாழ்க்கை வரலாற்றையும் 'பாலையும் சோலையும்' என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். காரைக்கால் அம்மையார் புராணம், திருக்குறள் என்பவற்றுக்கு உரை எழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்.

ஆசிரியராகப் பணியாற்றிய சொக்கன் கல்வி அமைச்சின் பாடநூல் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், இலங்கைக் கல்வி வெளியீட்டுத் திணைக்கள, பாடநூல் எழுத்தாளர் குழு உறுப்பினராகவும் இருந்து, தமிழ் மாணவர்களுக்கான தமிழ், இலக்கியம், இலக்கணம் மற்றும் சமயபாட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் மனோன்மணி, தமிழ் இலக்கிய வினா விடை(10 ஆம் வகுப்பு), திருக்குறள் - அறத்துப்பால் - இல்லறவியல் (1-10 அதிகாரங்கள்), தமிழ் இலக்கிய விளக்கம் - உரைநடைத் தொகுப்பும் செய்யுள் தொகுப்பும், இலக்கணத் தெளிவு, கட்டுரைக் கோவை 6-ம், 9-ம் வகுப்புகளுக்கு, இந்து சமய பாடம் என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

கல்வி, இலக்கியப் பணிகளுக்கப்பால் சொக்கன் அவர்கள் சமய, சமூக அமைப்புகளில் இணைந்து செயற்பட்டுள்ளார். யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கம், கம்பன் கழகம், அகில இலங்கை சேக்கிழார் மன்றம், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம், அகில இலங்கை திருக்குறள் மன்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், போன்ற அமைப்புகளில் ஈடுபட்டு அரும் பணியாற்றியுள்ளார்.

சொக்கன் அவர்களின் தமிழ், சமய, சமுகப் பணிகளைப் பாராட்டி பல்வேறு அமைப்புகள் விருதுகளை வழங்கி மதிப்பளித்துள்ளன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை 'தமிழ்மாமணி' பட்டத்தையும், இந்துக் கலாச்சார அமைச்சு 'இலக்கியச் செம்மல்' விருதினையும், இலங்கை அரசின் கலைக் கழகம் 'சாகித்திய இரத்தினா' விருதினையும், வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு 'ஆளுநர் விருதை'யும், 2001-ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ 'இலக்கியக் கலாநிதி' பட்டத்தையும் வழங்கிப் பெருமை கொண்டன.

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை, சமயம், வானொலி உரைச்சித்திரம் போன்ற பல்வேறு துறைகளிலும் கால்பதித்து, சிறந்த சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், நடிகர், நெறியாளர், பாடசாலை ஆசிரியர், அதிபர், பேச்சாளர், மொழிபெயர்ப்பாளர், உரை ஆசிரியர், கட்டுரையாளர், கல்வியாளர், நூல் வெளியீட்டாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட சொக்கன் அவர்கள் 2004-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் திகதி அமரத்துவம் அடைந்தார். ஆசிரிய உலகில் சொக்கலிங்கம் என்னும் பெயரில் புகழ் பெற்ற இவர், இலக்கிய உலகில் சொக்கன் என்னும் பெயரில் தனக்கென ஒரு தனி இடத்தை உருவாக்கிக் கொண்டார். அவரிடம் கல்வி கற்ற மாணவர்களாலும் இலக்கிய உலகில் இணைந்து பயணித்தவர்களாலும் அவரது படைப்புகளாலும் அவரது நாமம் நிலை பெற்றிருக்கும்.



vivekananthan.v@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***



# முருகேசு மாஸ்டரிலிருந்து திருலோகசங்கர் வரை - ஒரு நினைவு மீட்டல்

– மு. நித்தியானந்தன்

‘இலங்கையின் இன்றைய கல்வி நிலையானது ஒரு சில அரசியல்வாதிகளிடம் குரங்கின்கைப் பூமாலைபோல் ஆகிவிட்டது. ஆகவே, பெரிய கல்வி வல்லுநர்களாற்கூட வருங்காலத்தைப் பற்றித் திட்டமாகக் கூறமுடியாதிருக்கிறது. முந்நூற்றுக்கு மேற்பட்ட தோட்டப்பாடசாலை, உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிலுள்ள தமிழாசிரியர்களைக் கொண்ட இச்சங்கமானது நாட்டின் கல்வியையும் ஆசிரியர் உலகத்தையும் ஆபத்து எதிர்நோக்கியுள்ள இச்சமயத்தில், மிகக்குறைந்த அங்கத்தவர்களைப் பெற்றிருப்பது ஆசிரிய சமூகத்திற்கே பெரிய இழுக்காகும். ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’ என்பதற்கிணங்க தமிழாசிரியர்கள் முன்வந்து சங்கத்தில் சேர்ந்து உழைத்து, ஆசிரிய சமூகத்திற்கு சேவை செய்யும்படி தமிழன்னையின்மேல் ஆணையிட்டுக் கேட்டுக்கொள்கிறேன்’ (சுதந்திரன், 3.03.1957)

தோட்டப்பாடசாலை ஆசிரியர்களின் உரிமை குறித்து, பதுளையில் இந்த முழக்கத்தை எழுப்பியவர் அமரர் ஏ.கே. முருகேசு ஆவார். ஊவா மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் 6-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் பதுளை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் 16.02.1957 அன்று நடைபெற்றபோது, அக்கூட்டத்தில் தலைமையுரை ஆற்றுகையிலேயே முருகேசு அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்தக்கூட்டத்தில் அவர் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானங்கள் ஆசிரியர்களின் உரிமைக்கான அவரின் போராட்ட குணத்தை வெளிப்படுத்துகிறது. ஆங்கில ஆசிரியர்களுக்கு கூடிய சம்பளமும் தமிழ் ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமும் வழங்கப்பட்ட அக்காலகட்டத்தில், ஆசிரியர்களின் உரிமை குறித்து அவர் முன்மொழிந்த தீர்மானங்கள் முருகேசு அவர்களின் தீர்க்கதரிசனத்தைக் கோடி காட்டுகிறது.

வித்தியாபகுதியார் ஆசிரியர்களுக்குரிய உரிமைகளை அலட்சியஞ் செய்து, கல்விச் சட்ட ஒழுங்கிற்கு முரணான ஐந்தரை மணித்தியாலம் வேலை செய்யவேண்டும் என்ற தீர்மானம் அசாத்தியமானதென்பதைச் சுட்டிக் காட்டுவதுடன் இச்சங்கம் அதை வன்மையாகக் கண்டிக்கிறது என்பது அவர் முன்மொழிந்த முதல் தீர்மானம்.

தாய்மொழியில் சி.பா.த. பத்திரம் உடையோர் தொடர்ந்தும் வருங்காலத்திலும் சேவை செய்ய அனுமதிக்கப்படுவதுடன் மற்றும் ஆசிரியர்களைப்போல் சேவை உடையவர்களாகவும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறத் தகுதியுடையவர்களாகவும் இருக்க இவர்களுக்கு வாய்ப்பு வேண்டுமென்று அவர் முன்வைத்த இரண்டாவது தீர்மானம் கோருகிறது.

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களையும் உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்களைப்போல் கணித்து, அவர்களுக்குச் சகல உரிமைகளும் அளிக்கும்படி அவர் முன்வைத்திருக்கும் கோரிக்கை, தோட்டப்புறக் கல்விக்கு அவர் அளித்திருக்கும் முன்னுரிமையைக் காட்டுகிறது.

பதுளையில் சென்ட். பீட்ஸ் கல்லூரி, ஊவாக் கல்லூரி, தர்மதூதாக் கல்லூரி ஆகிய ஆண்கள் கல்லூரிகளும், ஊர்சுலாஸ் பெண்கள் கல்லூரியும் பிரபலம் மிக்க கல்லூரிகளாகத் திகழ்ந்த காலத்தில், பதுளை சரஸ்வதி வித்தியாசாலையும் முஸ்லிம் பாடசாலையும் பின் தங்கிய, விளிம்புநிலைப் பள்ளிகளாக அமைந்தன.

சரஸ்வதி வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டபோதே அது முரண்பாட்டில், கருத்துவேறுபாட்டில்தான் உற்பவம் பெற்றது. பதுளையில் இந்து சமயக் குழந்தைகளுக்கென்று பாடசாலை அமைக்கப்பட வேண்டும் என்று நல்லுள்ளம் கொண்ட பதுளைப் பெருமக்கள் முன்வந்தபோது, பாடசாலை தேவை இல்லை, கோயில் கட்டலாம் என்று சமயாபிமானிகள் வலியுறுத்த, மோதலில்தான் பாடசாலை உருப்பெற்றது. இதனால் தானோ என்னவோ, இப்பாடசாலை வரலாறு முழுவதும் போட்டாபோட்டிகளும், போராட்டங்களும், அரசியல் தலையீடுகளும் மலிந்த வண்ணமே இருந்துள்ளன. ஆயினும், எல்லா வசதியீனங்களுக்கு மத்தியிலும், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு இக்கல்லூரி பார்க்கப்பட்ட நிலையிலும் ஒளிவிளக்குகள்போல் ஒளிர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பில் இந்தக்கல்லூரி கண்டிருக்கும் இன்றைய வளர்ச்சி மகத்தானது என்பதில் ஐயமில்லை.

நான் இந்தக்கல்லூரியின் மாணவன் அல்லன் என்றாலும், பதுளைவாசி என்ற வகையிலும், பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில், விடுமுறைக்காலங்களில் இக்கல்லூரியில் பாடங்கள் நடத்தியவன் என்ற வகையிலும், இக்கல்லூரியுடன் எனக்கு நெருங்கிய பந்தம் உண்டு. இது எனது கல்லூரியும் மாதிரித்தான். இங்கு கல்வி பயிற்றுவித்த மிகப்பல ஆசிரியர்களை, பல அதிபர்களை நான் நன்கறிவேன் என்பதும் இந்தக்



























Mr. Thirulokasunthar-Krishna

கட்டுரையை எழுதுவதற்கு என க்கு மிகுந்த பலத்தைத் தருகிறது.

சைவ பரிபாலன சங்கத்தின் முயற்சியில் பதுளை தேவாலய வீதியில் 1934-ல் ஆரம்பம் கண்டு, பத்தாண்டுகளின் பின்னர் அரசின் அங்கீகாரம் பெற்று, 1959-ல் கிறகரி வீதிக்குப் புதிய வசதிகளுடன் சிரேஷ்ட மாணவர்களின் கல்லூரியாகப் பொலிவு பெற்று இக்கல்லூரி வளர்ந்த கதை வரலாற்றுக்குச் சொந்தம்.

பதுளை சரஸ்வதி கல்லூரி பாடசாலைக் கல்லூரியாக மட்டும் அமையவில்லை. 1983 ஜூலையில் பதுளை இனவன்முறையில் அமிழ்ந்து, எரிந்து கருகியபோது, வீதிகளும் வீட்டு முன்றில்களும் மயான பூமியாக மாறிய வேளைகளில், நாதியற்று, வெறும் உயிர்களை மட்டுமே கொண்டிருந்த பதுளை வாழ்த் தமிழ் மக்களுக்கு புகலிடமாக, காவலரணாக இந்தக் கல்லூரி தான் அபயம் தந்தது.

பதுளையின் அனைத்து தமிழ் கலாசார நடவடிக்கைகளின் மையமாக சரஸ்வதி மகா வித்தியாலயமே திகழ்ந்தது. குன்றக்குடி அடிகள், அருள்மிகு கிருபானந்தவாரியார், கி.வா. ஜெகநாதன், தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி, கு. அழகிரிசாமி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., இர. சிவலிங்கம், எஸ். பொன்னுத்துரை, சில்லையூர் செல்வராஜன், கலாநிதி செ.வே. காசிநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், பெனடிக்ற் பாலன் போன்ற எழுத்தாளர்களும் சமயப் பெரியார்களும், அறிஞர்களும் ஆற்றிய உரைகளை நான் இந்த சரஸ்வதி வித்தியாலயத்திலேயே கேட்டிருக்கிறேன்.

திரு க. திருலோகசங்கர் இக்கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில், எனது ‘கூலித்தமிழ்’ நூலின் வெளியீட்டு விழா இக்கல்லூரியில் நடந்ததை பெரு மகிழ்வோடு நினைவு கூர்கிறேன். அந்நூல் லண்டனில், பாரிசில், கனடாவில் எல்லாம் வெளியீடுகள் கண்டிருந்தாலும் பதுளையில், சரஸ்வதி வித்தியாலயத்தில் அந்த நூல் வெளியிடப்பட்டது என் பெரும் பேறென்பேன்.

சரஸ்வதி வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராக மிக நீண்ட காலப்பகுதியில், அக்கல்லூரியை வழிநடத்திய திரு.- ஏ.கே. முருகேசு அவர்கள் கறாரான மனிதர், கண்டிப்பானவர். எப்போதும் சர்ச்சைக்குரியவராகவே இருந்திருக்கிறார். அவர் யாழ்ப்பாணத்தவர் என்றாலும் பதுளைவாசியாகவே வாழ்ந்தவர். திட்டவட்டமான அரசியல் சார்பு கொண்டவர். பதுளை பட்டினசபைத் தேர்தலில் போட்டியிட்டு அவர் பொது மேடைகளில் கொச்சைச் சிங்களத்தில் உரையாற்றியதைக் கேட்டிருக்கிறேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதுளைப் பாராளுமன்றப் பிரதிநிதியான பி.எச்.கே. பண்டாரவின் நெருங்கிய ஆதரவாளராகத் திகழ்ந்தவர். அரசியல் செயற்பாடுகள் காரணமாகப் பதவி மாற்றம் செய்யப்பட்டவர். சற்றுக் குள்ளமான அவர், தூய

வெள்ளை வேஷ்டியில் கம்பீரமாகத் தோன்றுவார். விசுவாசம் மிக்க ஆசிரியர் அணியை அவர் எப்போதும் கொண்டிருந்தார்.

அவரின் காலத்தில் பணியாற்றியவர்கள் என்றதும் திரு வல்லிபுரம், யோகா டீச்சர், மிஸ். சீனித்தம்பி ஆகியோர் பட்டென்று நினைவில் வருகிறார்கள். வல்லிபுரம் அவர்கள் சமயப்பற்று மிக்கவர். நல்லாசிரியர். யோகா டீச்சரை காதல் மணம் செய்து கொண்டவர். ஆங்கில ஆசிரியையாக அக்கல்லூரியில் நீண்ட காலம் போதித்த மிஸ். சீனித்தம்பியிடமிருந்து ஜேன் ஆஸ்டனின் Emma என்ற ஆங்கில நாவலை வாங்கி வாசித்தது நினைவில் எழுகிறது.

1962-ம் ஆண்டு பதுளைப் பாடசாலைகளின் புனரமைப்பினைத் தொடர்ந்து, 1963-ல் இக்கல்லூரி சரஸ்வதி மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டபோது, கல்லூரியின் வளர்ச்சியும் துரிதமுற்றது. சென்னைப் பட்டதாரியான திரு வி.கே. நாகராஜா அவர்கள் இக்கல்லூரியின் அதிபராக இருந்த காலம் கல்லூரியின் வளர்ச்சிக் கட்டத்தைத் தொட்ட காலம் ஆகும். ‘சரஸ்வதியில் திரு வி.கே. நாகராஜா அவர்கள் அதிபராக இருக்கும்வரை அக்கல்லூரி பாதுகாப்பான, உறுதியான கரங்களில் இருக்கிறது என்பதை நான் வலியுறுத்தத் தேவை இல்லை. அவரிடம் கையளிக்கும் எந்தப் பணியையும் திறம்பட நிறைவேற்றுவதில் அவர் வல்லவர்’ என்று இலங்கையின் உயர் கல்விக்கான தேசியக் கவுன்சிலின் உதவிச் செயலாளர் ஜெரால்ட் டி அல்விஸ் அவர்கள் பாராட்டுத் தெரிவிக்கிறார்.

விளையாட்டுத் துறையில் சரஸ்வதி தனது முத்திரையைப் பதித்த காலம் இதுவாகும். ஹொக்கி நகர் எனப்படும் மாத்தளை ஹொக்கி நெசனல்ஸ் போட்டிக்கு, ஊவாப் பாடசாலைகளின் சார்பில் மூன்று ஹொக்கி வீரர்களை அனுப்பிப் பெருமை சேர்த்தது சரஸ்வதி மகா வித்தியாலயம். ஆர். ஈஸ்வரமூர்த்தி, எஸ். யோகச்சந்திரன், எஸ். மகாதேவன் ஆகிய விளையாட்டுத் துறை ஆசிரியர்களின் பங்கு பாராட்டத்தக்கது. கே. ஞானஜோதி, கே. மனோகரன் சகோதரர்களும் ஆ. ஜெகபாலனும் (மாங்காடு, புதுக்கோட்டை) சரஸ்வதியின் யாட்டுத்துறையின் மேன்மையை முன்னெடுத்துச் சென்றனர்.

1968-ல் ஊவாக் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகள் சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டபோது, அர்ப்பணிப்போடு கல்விச் சேவையாற்றிய ஆசிரியர் அணி இக்கல்லூரிக்குக் கிடைத்திருந்தது. எஸ். தம்பி-ஐயா, கே. ரங்கன், எஸ். ராமசாமி ஆகிய இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பதுளை மண்ணின் அறுவடைகள். முற்போக்குச் சிந்தனையும் மலையகக் கல்வி வளர்ச்சியின்பால் அக்கறை மிகக் கொண்டவர்களுமான இவர்கள் இணைந்து இக்கல்லூரியில் பணியாற்றிய காலம் குறித்து வைக்க வேண்டிய காலமாகும். வறிய தோட்டப் பகுதிச் சிறுவர்களுக்கு பாடசாலையில் தங்களின் சொந்தப் பணத்திலிருந்து பால் வழங்கியும் படிப்பித்தும் சேவையாற்றிய இவர்களை மறப்பதற்கில்லை. எஸ். தம்பிஐயா தமிழகம் சென்று, அங்கு உயர் வங்கி அதிகாரியாகப் பணியாற்றி, தமிழகத்தில் அமரரானார். ராமசாமி தொழில்முறைக் கணக்காளராக சாம்பியாவில் பணியாற்றி, பின்னர் கனடாவில் வாழ்ந்து அமரரானார். திரு ரங்கன் அவர்கள் நல்லாசிரியராகத் திகழ்ந்து, பசறை மகாவித்தியாலயத்தைத் தரமுயர்த்தி, கல்வித்துறை உயர் அதிகாரியாகத் திகழ்ந்து கொழும்பில் அமரரானார்.

இவர்களுடன் இந்தியப் பட்டதாரியான மிஸ். சின்னையா அவர்கள் கடும் பிரயாசை எடுத்துக் கல்வியூட்டிய ஆசிரியை ஆவார். அளவெட்டியைச் சேர்ந்த இவர் அரசியல் பாடத்தை நேர்த்தியாகப் படிப்பித்திருக்கிறார். கடமை உணர்வும் மாணவர்கள்பால் பரிவும் சக ஆசிரியர்கள் மீது நல்லன்பும் கொண்ட மாதரசி அவர்.

இக்கல்லூரியின் முதல் அணி மாணவராகப் பல்கலைக்கழகம் சென்ற எஸ். கணேசன், பின் இதே கல்லூரியில் ஆசிரியராகவும், பின்னர் மொனராகலை வலயத் தமிழ்ப் பிரிவின் பொறுப்பதிகாரியாகவும் பணியாற்றினார். இக்கல்லூரியிலிருந்து பின்னர் பல்கலைக்கழகம் சென்ற செல்வன் நைல்ஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் விரிவுரையாளராக நியமனம் பெற்று, இங்கேயும் பூ மலரும் என்று நிறுவினார். பின்வந்த காலங்களில் சரஸ்வதியிலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் எண்ணிக்கை உயர்ந்து சென்றது.

சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ். கணேசன், எஸ். நாகரத்தினம் ஆகியோர் அதிபராக இருந்த காலத்திலும் இக்கல்லூரி நல் வளர்ச்சியைக் கண்டது. வேதாந்தமூர்த்தி ஹாலி-எலயைச் சேர்ந்தவர். சரஸ்வதியின் அதிபராக இருந்த காலத்திலும் சரி, பின்னர் உயர்கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய காலத்திலும் சரி, பதவி ஓய்வு பெற்ற பின்னரும், ஓய்வறியாது கல்விப் பணியாற்றும் வேதாந்தமூர்த்தி போன்றோரின் கல்விப்பணி போற்றத்தக்கது.

சரஸ்வதி மகாவித்தியாலயம் தேசியக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்ட பின்னர், அக்கல்லூரி எதிர்நோக்கிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்ட திரு. க. திருலோகசங்கர் அதிபரின் மேன்மையைக் காத்த பெருமகனாவார். பதுளை மூன்றாம் கட்டையைச் சேர்ந்த இவர் பாரதி கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய அனுபவத்துடன் 90 ஆசிரியர்கள், 1500 மாணவர்கள் கொண்ட சரஸ்வதி தேசியக் கல்லூரியைக் கொண்டு நடத்துவதில் சாதனை புரிந்திருக்கிறார். தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்களை அணைத்தும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிப் போதனையை வெற்றிகரமாக மேற்கொண்டும் இதமாக இக்கல்லூரியை நடத்திச் சென்றிருக்கிறார். நேர்மையும் கண்டிப்பும் மிக்க இவர் கனிவானவராகவும், பிரச்சினைகளைக் காது கொடுத்துக் கேட்கும் பண்பினராகவும் இருந்தமை இவரது நிர்வாகத் திறனுக்கு அணி சேர்த்திருக்கிறது.

90 ஆண்டினை எட்டி நிற்கும் சரஸ்வதி தேசியக் கல்லூரியின் நீண்ட வரலாறு ஆழ்ந்த தேடலுக்குரியது. கல்வி ஆய்வாளர்கள் இக்கல்லூரியின் வரலாற்றை வரன்முறையில் ஆய்ந்து, ஓர் ஆவணப் பதிவை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். இக்கல் லூரியின் கல்விப்பணியில் அயராதுழைத்த சுடர் மணிகள் மறைந்துபோயுள்ளனர். விரிவான கள ஆய்வும் தேடலும் கொண்டு இக்கல்லூரியின் வரலாற்றை எழுதும் பணி நம் முன்னுள்ளது.



nithiyananthan.m@thaiveedu.com



# ‘கல்வி ஓர் அரசியல்’

## புலனறிவாதலும் புலப்பாட்டு நெறியும்

– அகமட் பிஸ்தாமி

இன்று கல்வித்துறையுடன் சம்பந்தமான மிகவும் தரமான நூல்கள் பலதையும் சந்திக்கின்றோம். மேற்படி நூல் இந்தியாவை மையப்படுத்தியும் தழுவியும் எழுதப்பட்டாலும் அகிலம் முழுக்க நிகழும் வகுப்பறை அக்கிரமங்களை அண்ட வெளிக்குக் கொண்டுவருவதாக உள்ளதை வாசகர்கள் நிச்சயம் உணர்ந்து கொள்வார்கள். அரசியலின் பெயரால் கல்வியும் கல்வியின் பெயரால் அரசியலும் எந்தளவு தூரம் பந்தாடப்படுகின்றது, வகுப்பறைகளில் நிகழ்த்தப்படுகின்ற அடக்குமுறைகளும் அநியாயங்களும் மேற்படி நூலின் வாயிலாகத் தோலுரிக்கப்படுகின்றது.

ஆசிரியர்கள், அதிபர்கள், பணிப்பாளர்கள், பேராசிரியர்கள் எல்லோரும் தன் பாட்டில் இயல்பிலேயே கல்வியியலாளர்களாகவோ ஆய்வாளர்களாகவோ ஆகிவிடுவதில்லை; மாறிவிடுவதில்லை. அடிப்படையில் அகன்ற, விரிந்த, சமூகப் பார்வையும் சுயசிந்தனையும் பரந்த வாசிப்பும் தேடலும் அவை தொடர்பான பதிவும் பகிர்வும் கொண்டவர்களே காத்திரமான பணியாற்றும் கல்வியியலாளர்கள் எனும் உயர் நிலையை அடைகின்றனர்.

அதற்குக் கல்வித்துறையினரைப் பொறுத்தவரை இலங்கையின் கல்வி வரலாறு, உலகக் கல்வி வரலாறு, கல்விக் கொள்கைகள், சீர் திருத்தங்கள், reforms அறிக்கைகள், அவ்வப்போது வெளியிடப்படுகின்ற reports நீதிமன்றத் தீர்ப்புகள், சட்டங்கள், சுற்றறிக்கைகள், circulars எதிர்ப்புகள், வாதப்பிரதிவாதங்கள் arguments, மாற்றுக் கருத்துகள், தீர்வுகள் போன்றன தேவை. மொத்தத்தில் தொடர் இற்றைப்படுத்தல் updation அவசியம்.

இந்த வகையில் நூலாசிரியர் பேராசிரியை வசந்திதேவி அவர்கள் எமக்கு மிகவும் அருகில் வாழும் - வசிக்கும் உயிர்த் துடிப்புள்ள அனுபவம் நிறைந்த ஒரு பெண் கல்வியியலாளர் (educationist) எனலாம் என்பதை நூலின் உஷ்ணமும் உரையாடலும் உடனே எமக்குச் சொல்லிவிடும். தான் தொடராக ஆற்றி வந்த உரைகள், கட்டுரைகள் போன்றவற்றின் தொகுப்பே இந்நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்வியின் மாண்பும் மகத்துவமும் மகிமையும் கடுமையாக உருச் சிதைக்கப்பட்ட, ஊதிப் பெருப்பிக்கப்பட்ட, விகாரமான, வியாபார வணிகமயப்பட்ட வர்த்தகப் பண்டமாக இன்று கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இலங்கையில்கூட பாரம்பரியமாக (traditional) இருந்து வந்த கல்வி முறைகளை methods முறைமைகளை methodologies எல்லாம் தவிடுபொடியாக்க முனைந்த காலனிய colonist கொடுமைகளிலிருந்து விடுதலைபெற்ற எமது சுதந்திர தேசத்தின் கல்வி இன்று தனியார்மயம், சர்வதேசப் பாடசாலைகள் என்ற ஆக்கிரமிப்புகளால் திசை திரும்பி கல்வியின் இலக்குகளை விட்டும் தூர விலகியுள்ளது. இது போன்றதும் இன்ன பிறவும் குறித்தான நுண்மையான ஊடுருவல்களைக் கல்விப் புலத்திலிருந்து அகற்றிக் கல்வியை எல்லை தாண்டிய அரசியல் கெடுபிடிகளை விட்டும் பரிசுத்தப்படுத்த முனைகிறது இந்நூல்.

சரியாக 27 தலைப்புகள், அத்தனையும் விறுவிறுப்பும் வெதுவெதுப்பும் கொண்ட உஷ்ணமான தலைப்புகளும் உள்ளடக்கமும் தான். புத்தகத்தை கீழே வைக்காமல் வாசிக்க தூண்டும் அளவுக்கான விடயங்கள் நூலில் நிறையவே உள்ளன. அதிர்ச்சியும் திகிலும் தரும் திடுக்கிடும் தகவல்களும் நூலெங்கிலும் காணப்படுகின்றன. நூலை வாசிக்கும்போது தாவித்தாவிச் செல்ல முடியாது. ஒவ்வொன்றையும் தாண்டித்தான் செல்ல வேண்டும். ஆனால் ஒவ்வொன்றையும் வெழுத்து வாங்கித் தக்க ஆதாரங்களுடன் தகர்த்து விடுகிறார் நூலாசிரியர். அவ்வளவு துணிவு அவரது எழுத்துகளுக்குள் வீரியத்துடன் நிமிர்ந்து நிற்கிறது. உண்மையில் அத்துணை தலைப்புகளுமே தனித்தனிக் கலந்துரையாடலுக்குரியவை. இக்கருத்துக்கள் சமூகமயப்படுத்தப்படவேண்டும். அமுலாக்கத்துக்குப் பொருத்தமான தீர்வுகளாக இவை அமையவேண்டும். சமூகம் அவற்றை ஏற்று அங்கீகரிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

கல்வி யாரால்? யாருக்கு? சக்தி பிறக்கும் கல்வி, காற்றில் பறக்கும் கல்வி எனும் வரிசை கல்விக் கொள்கையை அதன் இலக்குகளை நோக்கி எம்மை அழைத்துச் செல்கின்றது. அடுத்து 3H சிந்தனையை, ‘நயி தாலீம்’ முறைமையை முன்வைத்த காந்தியக் கல்விப் பார்வை எம்மை ஈர்க்கின்றது. அது சாத்தியமா அசாத்தியமா என்பது உரையாடப்படுகிறது. அதே நேரம் தாய் மொழியின் தனித்துவங்களை நிராகரித்து வேறு ஒரு மொழியில் கல்வியைப் புகுத்தலாமா? எனும் தலைப்பு அலசப்படுகிறது.

செயல்வழிக் கற்றல், திட்டமிடாமையின் விபரீதம், வகுப்பறை வன்முறைகள், violence, துவேஷம் மிக்க கல்வி வரலாறு, மாணவர் ஜனநாயகம் என்று நீண்டு செல்லும் தலைப்புகளை நோக்கின் குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்கள் ரூஸோ, பெஸ்டலோசி, மொண்டசூரி அம்மையார் போன்றோரின் கல்விச் சிந்தனைகளின் முகிழ்ப்பை அவதானிக்கலாம். இப்படி இப்படியாக அனைத்துமே அவதானம் செலுத்த வேண்டிய தலைப்புகள்.




நீங்களும் நூலை வாங்கி வாசித்துப் படித்துச் சுவைத்துப் பாருங்கள்.

ஒரு காலத்தில் கல்வி தடுக்கப்பட்டிருந்த நிலையில் கல்வி திறந்து விடப்பட்டிருக்கும் நிலை இப்போது தோன்றியுள்ளது. கல்வித் துறையில் நிகழும் அநீதத்தை தகர்க்கும் வீர உணர்வு நூலாசிரியரிடம் தெறிக்கிறது. அதே நேரம் மனித நேயமும் உள்ளூர வெளிப்படுகிறதை அறியலாம். ‘மாபெரும் சக்தி வாய்ந்த ஒரு பிடி விதிகளை எங்கள் சிறிய கரங்களில் எடுத்து இந்திய உபகண்டத்தின் மேல் வீசியுள்ளோம். அவை எங்கு விழுந்தாலும் முளைக்கும்’ என்று கவித்துவமாகச் சொல்வது எமக்கும் உணர்வூட்டுகிறது. இது எல்லா நாட்டுக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளமையும் விசேட அம்சமாகும்.

அதே நேரம் கடந்த காலக் கொவிட் பெருந்தொற்றுக் கல்வி முறைமையைப் பாருங்கள். இணைய வழியில் இணைந்து கொள்வதால் log on இயல்பான உலகை விட்டும் log off துண்டித்துக்கொண்டு போலியான உலகுடன் இணைந்து விடுகின்றன. அதே நேரம் வணிகமயப்பட்ட உலகில் உயர் கல்வி நிறுவனங்கள் தம்மைச் சுற்றிலும் பெரும் மதிற் சுவர்களை எழுப்பி வெளியுலகைப் பார்ப்பதற்குத் தடைகளை எழுப்பியுள்ளது. வெளியுலகைப் பார்க்க எந்தச் சாளரங்களும் அங்கு இல்லை. அவர்களது பார்வைக்கூடாகவே உலகைக் காணவேண்டும் அங்கு.

துயரத்தைக் கோபமாக உருமாற்றும் எத்தனையோ சம்பவங்களை, அசம்பாவிதங்களை நூலாசிரியர் அடுக்கடுக்காக முன்வைக்கிறார். ரோஹித் வெமுலாவின் மரணம் குறித்துப் பேசும் கடைசிக் கட்டுரை, ‘இந்து மதம் கொடூரங்களின் உறைவிடம்’ என்ற அம்பேத்கர் கூற்றை மீளவும் நினைவூட்டுகிறது. சாதிய முதலாளியக் கூட்டு அடக்குமுறைகளை எதிர்த்துத் தனது கோபத்தைக் கொப்பளித்துக் கொதிப்பை அடக்கிக்கொள்கிறார் நூலாசிரியர். அவசியமான கோபமாக அவிந்து கிடக்காத அனல் பறக்கும் கோபம் இது. நியாயமான கோபம். பாடசாலைகளில் நிகழும் பாலியல் வக்கிரங்களைப் படம் பிடித்துக் காட்டும் அநேக சம்பவங்கள் உள்ளன. கல்வி நிலையங்களின் கயமை இருள் எனும் தலைப்பில் இதனை வாசிக்கலாம். நீல வானில் எப்படிக் கார் முகில்கள் சூழ்ந்து இருள் கவிந்து இடியும் மின்னலும் வந்து கனமழையாகப் பொழிந்து விடுவது போல ஆபத்துகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பாலியல் வன்முறையாக வெளிப்படுகிறது இங்கு. பெற்றோர்கள் உஷாராக வேண்டிய இடம் இதுதான். ‘உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லை’, ‘அச்சம் தவிர்.. ஆண்மை தவறேல்’ பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ பயங்கொள்ளலாகாது பாப்பா... மோதி மிதித்து விடு பாப்பா... முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா! என்றெல்லாம் அடித்துச் சொன்னான் பாரதி. மேற்படி நிகழ்வுகளைக் கடக்கையில் இவை தான் எமக்கு நினைவு வரும்.

மொத்தத்தில் இந்த நூல் எங்கள் அறிவுக்கண்களை அகல நிச்சயம் திறந்து விடும். இலங்கைச் சூழலுக்கும் தற்காலப் போக்குடனும் ஒப்பிட்டு இணைத்துப் பார்க்கலாம்.

நூல், முழுக்க முழுக்கக் கல்வித் தளத்தை உசுப்பியெடுத்துப் புரட்டிப் போட்டுவிடும் புரட்சிகரமான, கொதிப்பான உரையாடல்களுக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. வகைதொகையற்ற வகையில் வன்முறைகளைக் கட்டவிழ்க்கும் சக்திகள், வகுப்பறைகளை ஆட்டிப் படைத்து அதிகாரத் துஷ்பிரயோகத்தால் அதிரவைக்கும் சக்திகள் மீதான பார்வையை எமக்குள் ஏற்படுத்தி எம் உணர்வுகளைத் தட்டியெழுப்பி விடுகிறது. உரிமைக்குரல் எழுப்ப, அழைப்பு விடுக்கிறது. பேதங்கள், பேதமைகள், போதாமைகள், பாகுபாடுகள், ஒடுக்குமுறைகள், ஒதுக்கி வைப்புகள், ஓரங் கட்டல்கள், அதிகார ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றால் சிக்கித் தவித்து மூச்சுத்திணறிச் சாகத் துடிக்கும் கல்விக்கு உயிர்ப்பிச்சை கொடுக்க வேண்டியுள்ளோம்.

இலங்கையைப் பொறுத்தளவில் இத்தகைய கல்வி அரசியலைக் குடைந்தெடுத்து வினாத் தொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். இதற்கு கூர்ந்த அவதானம், ஆழமான கல்வியியல் வரலாற்றுப் பின்புலம், ஆய்வு மரபு, விவாதத்திற்கும் எடுப்பதற்கான திறந்த களம் இருந்தால் இவை சாத்தியமாகும்.

குழந்தைகள் மென்மையானவர்கள். அவர்களை மிருதுவாக அணுகும் போதே மேன்மை நிலையை அடைவார்கள். ஆனால் இன்று புத்தகங்களைச் சுமந்தே பருவத்துக்கு முன் பூப்படைந்து முதுமையடைகின்றன. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பது பழமொழி ஆனால் coporal punishment-க்கு முன்னால் குழந்தைகள் வளைந்து

நெளிந்து சுருண்டு போகின்றனர். அதே போன்று கவிக்கோ கூறுவது போல 'புத்தகங்களே கவனம் குழந்தைகளைக் கிழித்து விடவேண்டாம்.

ஆனால் இன்று கட்டாயக் கல்வி, தாய்மொழியை நிராகரித்த சர்வதேச மொழிக்கல்வி, தற்கால இணையவழிக் கல்வி போன்றன கல்வி எனும் பெயரில் குழந்தைகளைக் கடுமையாகப் பிழிந்து சாறெடுத்து உறிஞ்சிக் குடிப்பதாக உள்ளமை, அவர்களை உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றது. (இரா. நடராசன் அவர்களின் வன்முறையில்லா வகுப்பறை நூலும் இது குறித்துப் பேசுகின்றது.)

ஆக மொத்தத்தில் பேராசிரியர் வசந்தி தேவியின் சொந்த வார்த்தையில் கூறுவதானால் இந்நூல் 'மனிதரை மனிதர் விழுங்கும் போட்டி உலகிற்குக் குழந்தைகள் பலியிடப்பட்ட வரலாறு' எனலாம்.



bisthamy.ahamed@thaiveedu.com


# சிந்தனைக் களம்
## (இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

**Zoom ID: 820 8933 7233   Passcode: 986 965**

15 செப்டெம்பர் 2024 (ஞாயிற்றுக்கிழமை ) 8:30am-10:30am (கனடா-ரொறன்ரோ )

(இலங்கை, இந்தியா - 15 செப்டெம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை 6:00pm-8:00pm
(சிட்னி - 15 செப்டெம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை 10.30pm-12:30am)

**உரைத்தொடர் - 43**

**உரைப் பொருள்**
*'வயலின் இசைமரபில் பரூர்பாணி'*

**உரையாளர்**
*பரூர் ஸ்ரீ M.A.சுந்தரேஸ்வரன்*
*(Son & disciple of Parur Shri M.S.Anantharaman)*



Website: www.chinthanaikkalam.org    E-mail: chinthanaikkalam@gmail.com

## இளவாலை விஜயேந்திரன் கவிதைகள்:

# எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது?

– எஸ். கே. விக்னேஸ்வரன்



கிட்டத்தட்ட எண்பதுகளின் நடுப்பகுதி என்று நினைக்கிறேன். புதுசு இதழை நடத்திவந்த நண்பர்களுடனான தொடர்பு கிடைத்திருந்த காலம் அது. அவர்கள் கவிதை, சிறுகதை, நாடகம், சஞ்சிகை என்று கவனத்துக்குரிய இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். மஹாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்களான சபேசன், பாலசூரியன், இளவாலை விஜயேந்திரன் ஆகியோர் கவிதை எழுதுவதிலும், ரவி சிறுகதை எழுதுவதிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர். கவிஞர் சேரன் அவர்களின் மூத்த தோழனாகவும் ஒருவகையில் வழிகாட்டியாகவும் இயங்கிக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். அவர்களது ஒவ்வொரு எழுத்துகளையும் தொடர்ச்சியாகச் 'சுடச்சுட' வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தது. அவர்களுடனான சந்திப்புகளும் இலக்கிய விவாதங்களும், அன்றைய தமிழ் மக்களுக்கான தேசிய விடுதலை சம்பந்தப்பட்ட அரசியல் உரையாடல்களும் மிகவும் மகிழ்ச்சியைத் தருவனவாக அமைந்திருந்தன. கவிஞர் சேரன் இவர்களது மூத்த சகோதரர் போன்ற நெருக்கத்துடன் ஒரு வழிகாட்டிக்குரிய நட்புறவோடு இருந்ததாக எனது புரிதல் இருந்தது. அந்தவகையில் எமது தமிழ் மக்களது அரசியலின் போக்கையே தலைகீழாகப் புரட்டிய 80-களின் முக்கிய அரசியல் மாற்றங்களின் சாட்சிகளாக இருந்த படைப்பாளிகளின் பரம்பரையைச் சேர்ந்த கவிஞர்களில் ஒருவர் இவர்!

இளவாலை விஜயேந்திரன் எழுதிய கவிதைகளின் முதலாவது தொகுப்பான 'நிறமற்றுப்போன கனவுகள்' மூன்று பதிப்புகள் கண்ட தொகுப்பு. கனடாவில் காலம் செல்வம் அவர்களாலும் அந்நூல் பதிப்பிக்கப்பட்டிருந்தது. இந்நூல் யோர்க் பல்கலைக்கழகத்தில் புலம்பெயர் இலக்கியம் என்ற பிரிவிற்கான ஒரு பாடநூலாகவும் சேர்க்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். கூடவே தற்போது 2023-ம் ஆண்டுக்கான கனடிய இலக்கியத் தோட்டத்தின் கவிதை நூலுக்கான விருதும் 'எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது?' நூலுக்கு கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநூல்த் தொகுப்பில் வந்த கவிதைகளையும், அதனுள் அடக்கப்படாததும், அதன் பின்னரும் முன்னரும் அவரால் இதுவரை எழுதப்பட்டு, கைக்குக் கிடைக்காமற் போய்விட்ட சில கவிதைகள் தவிர்ந்த ஏனைய கவிதைகளையும் இணைத்ததாக வெளிவந்துள்ளதால் இதுவே அவரது முழுக் கவிதைகளையும் கொண்டுள்ள தொகுப்பு எனலாம். அந்தவகையில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதிகளில் எழுதப்பட்ட அவரது கவிதைகள் தாங்கிய, இந்தத் தொகுப்பு கடந்த நான்கு தசாப்த காலத்தில் இலங்கையிலும் அவரது புலம்பெயர் தேசமான நோர்வேயிலும் எழுதப்பட்ட கவிதைகளைக் கொண்டமைந்தது. கவிஞரது வாழ்வின் அனுபவங்களின் வெளிப்பாடாக இத்தொகுப்பு அமைகிறது. நூலின் தலைப்பான 'எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது' என்ற வரிகள் அநுராதபுரத்தில் 146 அப்பாவிச் சிங்களப் பொதுமக்கள், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் பேரால் கொல்லப்பட்டதற்கான கண்டனக் குரலாக அவர் எழுதிய 'சொல்லப்படாத ஒரு செய்தி' என்ற மிக முக்கியமான கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட வரிகள். அன்று இப்படியான குரலை உரத்து ஒலிக்க முடியாத கையறு நிலையில் நிலையில் விடுதலையின் பேரால் வடக்குக் கிழக்கு வாழ் படைப்பாளிகளும் கவிஞர்களும் கட்டுண்டிருந்த காலத்தில் தமிழ் மக்களது குரலாக யாழிலிருந்து ஒலித்த ஒற்றைக் குரலாக இந்தக் கவிதை வெளிவந்தது. பின்னொரு சந்தர்ப்பத்தில் இக்கவிதையைச் சரிநிகரில் அட்டைப்படக் கவிதையாக நாங்கள் மறுபிரசுரமும் செய்திருந்தோம். அந்தவகையில் அவரது கவிதைகள் தொடர்பாகவும் அவரை ஒரு கவிஞராக நிலைநிறுத்தும் முயற்சியாகவும் விஜயேந்திரன் கவிதைகளின் சிறப்பான தன்மை பற்றியுமான ஒரு சிறு குறிப்பாகவும் எனது இந்தச் சிறிய குறிப்பு அமையும்.

இந்த நூலின் தொகுப்பாளர்கள் தமது தொகுப்புரையில் அவரது முன்னைய நூலான 'நிறமற்றுப் போன கனவுகள்' குறித்து இப்படிச் சொல்கிறார்கள்: அவரது 'கவிதைகள் வெளிப்படுத்துகின்ற பேசுபொருள், படிமங்கள், சொல்லாடல்கள், அரசியல், சமூக வாழ்வியல் பிரதிபலிப்புகள், விமர்சனங்கள், உணர்வுகள் பல்பரிமாணமுடையவை. ஒட்டுமொத்தமாக அவருடைய கவிதைகள் கூர்மையான சமூக அரசியல் விமர்சனங்களை, துன்பமும் இன்பமுமான வாழ்வனுபவங்களை, போரை, விடுதலைப் போராட்டத்தை, அதன் அரசி

யலை, நினைவுகளைக் காலத்தோடொட்டிப் பிரதிபலிப் பவை. புலம்பெயர் வாழ்வினையும், அதன் துயரங்களையும் மன உளைச்சல்களையும் பேசுபவை,' உண்மையில் முன் னைய தொகுப்புக்கு மேலதிகமாக இப்போது இணைக்கப் பட்ட கவிதைகளையும் உள்ளடக்கிய இந்தத் தொகுப்பும் பெருமளவில் மேற்குறித்த கருத்துகளுக்கு முற்றிலும் பொருந்துவதாகவே இருக்கின்றது. கூடவே அவர்கள் இன்




னொன்றையும் சொல்கிறார்கள். அதாவது 'விஜயேந்திரனது கவிதைகளில் அலங்காரங்கள் இருக்காது. ஆனால் கவித் துவ அழகியல் நிறைந்திருக்கும். அற்புதமான படிமங்களைத் தரிசிக்கலாம். பேசுபொருள், சிந்தனை கடத்தப்படுகின்ற உணர்வு, கவிதைகளின் சமூக அரசியல். வாழ்வியல் மற்றும் காலப் பிரதிபலிப்பு என்பவை காலங் கடந்து நிற்கின்ற செழு மையைக் கொடுத்திருக்கின்றன.'

இவையெல்லாம் எனக்கும் தெரிந்த விடயங்கள் தான். நூலின் தொகுப்புரையில் இப்படி நூல் பற்றிய எல்லா விடயங்களும் சொல்லப்பட்டபின் எதைத்தான் நூலறிமுகம் செய்பவரால் புதிதாகச் சொல்லிவிட முடியும் என்கிற ஒரு நெருக்கடி, நூலை அறிமுகம் செய்யும் ஒருவருக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஆயினும் அப்படியான ஒரு நிலையில் அதையும் தாண்டிச் சொல்ல வேறேதாவது உள்ளதா என்பது, அறிமுகம் செய்ப வருக்கு உருவாகுவது நியாயம்தான், இல்லையா? ஆகவே நான் இந்த நூலிலுள்ள கவிதைகளை வரலாற்று ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சமூக வாழ்வியல் ரீதியாகவும் நோக்க லாம் என்று நினைக்கிறேன்.

விஜயேந்திரன் எழுதத் தொடங்கிய எழுபதுகளின் பின்னரைக் காலம், பொதுவாக எல்லா இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர் களையும் போல அவரும் கவிதைகளை எழுதத் தொடங்கிய காலம் என்று நினைக்கிறேன். கிட்டத்தட்ட நானும் எழுதத் தொடங்கிய காலமும் கூட அதுதான். குறிப்பாக, அன்றைய கால கலை இலக்கியம் சார்ந்து அறிவும் ஈடுபாடும் எனக்கு மிருந்தது. அன்றைய யாழ் குடாநாட்டு இளைஞர்களது எண் ணங்களிலிருந்து வந்த படைப்புகள் எப்படி அமைந்திருந்தன என்பதையும் நான் அறிவேன். அதிலும் குறிப்பாக, அளவெட் டியைச் சூழவுள்ள பிரதேசங்களின் இலக்கிய செயற்பாடுக ளையும், மஹாஜனக் கல்லூரியின் கலை இலக்கியம் சம்பந்த மான ஈடுபாட்டையும் நான் அப்போது அறிந்திருந்தேன். இயற்கையை, காதலை, தங்களது நிகழ்கால வாழ்க்கையை, அந்தக் கிராமங்களது வாழ்க்கை முறையுடன் இணைத்துச் சிந்திக்கவும் அவை பற்றி எழுதவுமான சூழல் அப்பிரதேசத் தில் பலமாக வளர்ந்திருந்தது.

மஹாகவியின்,

***'இன்னவை தாம் கவி எழுத***
***ஏற்றபொருள் என்று பிறர்***
***சொன்னவற்றை நீர் திருப்பிச்***
***சொல்லாதீர், சோலை, கடல்***
***மின்னல், முகில், தென்றலினை***
***மறவுங்கள்! மீந்திருக்கும்***
***இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு***
***என்பவற்றைப் பாடுங்கள்'***

என்ற கவிதை இளங் கவிஞர்களுக்கான ஒரு அற்புதமான வழிகாட்டியாகவும் அமைந்த கவிதை. எனக்கு மஹாகவியின் கவிதைகள் கைக்குக் கிட்டியகாலம் அவரது மறைவுக்குப் பின்னான காலமாக இருந்தபோதும் அளவெட்டியைச் சூழவி ருந்த, குறிப்பாக மஹாஜனாவின் மாணவர்களுக்கு அவர்க ளது ஆரம்பகட்டக் கவிதை முயற்சிகளுக்கு இக்கவிதை ஒரு வழிகாட்டற் கவிதையாகத் தெரிந்திருக்கும் என்பதில் ஐய மில்லை. தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வம் கொண்டிருந்த விஜயேந்திரனின் ஆரம்பகாலக் கவிதைகள் பெரிதும் ஓசைந யம் கொண்ட கவிதைகளாக அமைந்ததுடன் மஹாகவியின் மேற்சொன்ன வழிகாட்டலை அவர் சிக்கெனப் பிடித்திருப் பதை இலகுவாகவே அடையாளங் காணமுடியும்.

இந்தத் தொகுதியிலுள்ள அவரது, 1979ல் ஈழநாடு பத்திரி கையில் வெளிவந்த 'எதிர்பார்ப்புகள்' என்ற தலைப்புடன் எழு தப்பட்டுள்ள கவிதையின் ஓசை நயமும் அதன் கருப்பொரு ளும் மேற்சொன்ன மஹாகவியின் கவிதையின் வழிநின்று எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். நூலின் 34-35-ம் பக்கங்க ளில் வந்துள்ள இந்தக் கவிதை இப்படி ஆரம்பிக்கிறது,

*‘வானம் இருண்டிருக்கு*
*நீலம் மறைஞ்சிருக்கு*
*நாளை மழை வரணும்*
*வந்தாலே*

*வீட்டை மறந்து வயல்*
*மேட்டை அடைந்து உயிர்*
*போட்டு உழைக்கவெனப்*
*போவோமே - இந்த*
*நாட்டைத் தலைநிமிரச்*
*செய்வோமே’*

என்று தொடரும் இக்கவிதை,

*‘ஆழக் கிணறுகளும்*
*அடியில் வறண்டிருக்கும்*
*நாளை மழைவரணும்*
*வந்தாலே ஊற்றுக் கண்திறக்கும்*
*ஓடி நீர் பெருகும்*
*வயற் காட்டில் மகிழ்வு*
*நாம் கொள்வோமே*
*வாழ்க்கை வென்றதெனச்*
*சொல்வோமே’*

என்று முடிகிறது.

எண்பதுகள் வரை மஹாகவி சொன்ன இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு என்பவை பற்றி மண்வாசனையுடன் கவிதைகளை எழுதிவந்த விஜயேந்திரன் எண்பதுகளுக்குப் பின்னர் இதிலிருந்து விலகி காலத்தின் தேவை உணர்ந்து கவிதைகளை எழுதினார். அவரும் அவரது நண்பர்களுமாக இணைந்து தொடங்கிய புதுசு என்ற சஞ்சிகையின் முதலாவது இதழில் (1980-ல்) அவர் எழுதிய ‘நாளைய நாளும் நேற்றைய நேற்றும்’ என்ற கவிதை, உழைக்கும் மக்களின் குரலாய் வெளிப்படுவதோடு தம்மை ஏதேதோ காரணங்காட்டி ஒடுக்குபவர்களைச் சவாலுக்கு அழைக்கும் தார்மீகக் குரலாகவும் ஒலித்தது.

*‘... ... ...*
*‘அவர்கள்’ தாமே மனிதரென்றார்*
*நாங்கள் நாமும் நாமுமென்றோம்*
*சுவர்கள்*
*சுற்றி எழுந்திருந்தன*
*தகர்த்தெறிந்தோம்*

*சுவர்கள் தகர்க்கப்படும் போதில்*
*கற்களெம்மீதில் விழுந்தனதான்*
*ஓய்வுக்குள்*
*தலை புதைக்க மறுத்துவிட்டு*
*தொடர்ந்தார்த்தோம் தகர்த்தோம்*
*எமக்கென நிலவு பால் வீசும்*
*எத்தனை பொழுதுகள் செத்திருக்கும்...!*
*நினைக்க வியர்க்கும் - எனினும்*
*முனைப்பு முடிவிடத்தில் சுவர்கள் வீழ்ந்தன’*

தொடரும் கவிதை இப்படி முடிகிறது:

*‘தோள்கள் மலையெனத்*
*தொடுத்து வைத்திருக்கிறோம்*
*நாளைய நிகழ்விற்காய்...’*

1981உம் அதன் பின்பான காலங்களும் தமிழ் மக்களது அரசியல் உரிமைகள் தொடர்பான பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட காலம். இது குறித்த பதிவாக 4-வது புதுசு இதழில் ‘சுதந்திர நாட்டின் பிரஜைகள்’ என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதை காணப்படுகிறது. தமது நிலை பற்றிய துயரையும் ஏக்கத்தையும் வெளிப்படுத்தும் இவ்வரிகள் மிகச் சிறப்பாக அன்றைய நாட்களின் நிலையைப் படம்பிடிக்கின்றன.

*‘நேற்றும் தலையுயர்த்தி*
*நடந்த தெருக்கள் தான்*
*இப்போது நெஞ்சிடிக்க*
*எவனெவனோ*
*கைகொண்டு கழுத்தை நெரிக்கும் கனவுகள்*
*நேற்றல்ல இன்றல்ல*
*நாளைக்கென் வீட்டில்*
*அறையும் என்றுய்த்த பறை*
*செவிக்குள் அதிர்கிறது*
*மலங்க விழித்தபடி*
*இருண்ட கண்களினால்*
*எதுவோ தேடும்*
*நாங்களும் எங்கள் பொழுதும்’*

இந்தப் போக்கின் இடையே கவிஞர் இயற்கையை, நண்பர்களுடனான பயணங்களை, காதலின் உத்வேகத்தை, காதலின் தோல்வியை துயரத்தை தம் வயதுக்கேயுரிய கவிதைகளாக வடித்திருந்தார். ஆயினும், இவர் இக்காலப்பகுதியில் மனித வாழ்வு, அவர்களது உரிமை, உழைப்பு, இன்னல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கவிதைகளை எழுதினார். 1983 இனக் கலவரத்தின் பின்னான இந்திய ஆயுதப் பயிற்சியின் ஆரம்பத்தோடு உருவான பல்வேறு விடுதலை இயக்கங்களது நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதிக கவனஞ் செலுத்தினார். இதனைக் கவிதையாகவும் எழுதினார். 1985-ல் வெளியான அவரது கவிதைகள் அன்றைய கால விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைளைத் தனக்கேயுரிய பாணியில் விமர்சிக்கும் கவிதைகளாக அமைந்தன. உதாரணமாக அவரது ‘ஒரு கவிதை’ அன்றைய காலம் பற்றிய அச்சொட்டான அவரது விமர்சனமாக அமைந்தது.

*‘தோழரே,*
*துப்பாக்கியை உயர்த்தும்*
*வலது தோளில்*
*உதைப்பை வாங்க ஏதுவாக*
*நடுவில் உள்ள கோட்டிடை வெளியில்*
*நேரே, நேராக மட்டும்*
*பாரும்*
*எதிரி தானே அது?*
*வலது ஆட்காட்டி விரலைப் பின்னோக்கி இழும்*
*சரியாகக் குறிபார்த்தால்*
*ஒரே குண்டே போதும்.*

*சமயத்தில்*
*எதிரி கிடைக்காவிட்டால்*
*ஊரில் மனிதர்களும்*
*மின்சாரக் கம்பங்களும் உண்டு.*

*அதுவும் கிடையாத போது*
*நெறிபிறழாத ஒரு தோழனை...*

*துப்பாக்கி சூடாறக் கூடாது பாரும்.*
*நியாயப்படுத்தத் தலைமைப் பீடமும்*
*பிரசுரம் அடிக்க வெளியீட்டுப் பிரிவும்*
*உள்ளன தோழரே*
*விடுதலைப் பாதையில்*
*வீறுநடை போடும்'*

அன்றைய நாட்களின் நிலைமைகளைப் பற்றிய மிகத் துல்லியமான ஒரு காட்சியை விரிக்கும் இந்தக் கவிதையொன்றே போதும் அன்றைய வரலாற்றைப் புரிந்துகொள்ள.

1985-ம் ஆண்டு மே மாதம் 14-ம் நாளில் அநுராதபுரத்தில் நடந்த அப்பாவிச் சிங்கள மக்கள் மீதான படுகொலையைப் பற்றிய, இந்த நூலின் தலைப்புக்குரிய வரிகளைக் கொண்ட நீண்ட கவிதை மிக முக்கியமான ஒரு வரலாற்று ஆவணம் என்று சொல்லலாம். மனிதப் படுகொலைகளுக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் இடையேயான சம்பந்தம் என்ன என்று கேள்வியெழுப்பிய இந்தக் கவிதை, உண்மையில் ஒட்டுமொத்த சாதாரண தமிழ் மக்களதும் மனசாட்சியின் குரலாக வெளிவந்தது. நடந்துமுடிந்த மன்னிக்கமுடியாத அந்த அநியாயத்துக்காகப் பாதிக்கப்பட்ட மக்களிடம் பேசுகிறார் கவிஞர்:

' எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது ?' என்று கேட்கும் கவிஞரின் குரல் தழதழத்து ஒலிக்கிறது.

*'... ... ...*
*எல்லோரும் தலைகளைக் குனிவோம்*
*தொலைவில்*
*நூறு வீடுகளின் அழுகைகளில்*
*வானை எட்டுகிற ஓலத்தில்*
*எமது துயரத்தைப்*
*பாதி கலக்க வைப்போம்*

*புல் படர்ந்த நிலத்தில்*
*வெள்ளையாய் நிமிர்ந்த விகாரைகளில்*
*ஆயிரம் வருடம் கழிந்தும்*
*மண்ணையே நம்பியோரின்*
*கண்களில் இப்போது இரத்தம்...'*

என்று தொடரும் கவிதையில் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களைப் பார்த்து, இப்படிச் சொல்கிறார்:

*'எப்படி உங்கள் முகத்தை*
*நோக்க நிமிருவோம்?*
*அழாதீர்!*
*எம் மேலே அனலை வீசாதீர்*
*காத்திருக்கிறோம்*
*மனித நேயமற்றுப் போன*
*ஒவ்வொரு நாயையும்*
*வாலிலே கட்டித் தூக்கிலிடுவோம்*
*வெறியில் திரியும்*
*ஒவ்வொரு முகத்திலும்*
*காறி உமிழ்வோம்*
*மண்ணை மனிதரை விட*
*மேலாகிவிட்ட துவக்குகளை*
*வீசி எறிவோம் கடலுக்குள்*
*நாங்கள்*
*பகலுக்காகக் காத்திருக்கிறோம்'*

ஈழத் தமிழர்கள் வாழும் பிரதேசம் முழுவதும், இதன் பின்னான கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுகாலம் பெரும் யுத்தங்களினதும் மனிதப் பேரழிவுகளின் காலமாக நீண்டதை நாம் அறிவோம். கவிஞர் வெறும் யுத்தத்தை மட்டுமல்ல, அதன் விளைவுகளையும், அவற்றால் மக்கள் படும் பாடுகளையும் தனது பாணியில் விபரித்துச் செல்கிறார். இந்தியப்படை களத்திலிருந்த 1987ல் நிலவிய சூழலைக் 'கேள்விகளைக் கேட்காதே' என்ற கவிதை மிக அருமையாக வெளிப்படுத்துகிறது. விடுதலைக்காகப் புறப்பட்டு 'சொல்லாமல் போகும் புதல்வர்களை' தந்த நாட்டின் நிலை இந்தக் கவிஞரை இப்படிச் சொல்ல வைக்கிறது.

*'மகனே*
*இதயம் வெடித்தே இறந்துபோன*
*எத்தனையோ மனிதர்களில்*
*இவனும் ஒருவன்*

*எப்பொழுதாவது*
*யுத்தம் இப்புறம்*
*ஓய்ந்துபோயிருக்கையில் இனிப்பும் கையுமாய்*
*உன்னிடம் வருகிற*
*மாமா*
*எங்கு போனார் எனக் கேளாதே*

*யேசுநாதர்*
*சிலுவையில் அறையப்பட்டதுபோல்*
*உனது மாமனைச்*
*சுவரில் அறைந்தனர்*

*விலா எலும்புகளை நொருக்கி*
*இதயம் துளைத்துச்*
*சுவரையும் சிதறவைத்த*
*இயந்திரத் துப்பாக்கிகளின்*
*சன்னங்களைக் கேள்*
*'அவனை யார் கொன்றனர்?'*

*நான் அறிவேன் தான்*
*எனக்கவரைத் தெரியும் தான், ஆனாலும்*
*என்னைக் கேளாதே*
*நான் உனக்குப் பதில் சொன்னால்*
*எனது குருதியை*
*இன்னொரு சுவரில்*
*நீ காண நேரிடும்'*

இப்படிப் பலபத்து உதாரணங்களோடு அவர் தனது கடந்த காலத்தைக் கடந்தமையோடொட்டிய அனுபவங்களை அன்பு, இரக்கம், கோபம், ஆற்றாமை, ஆறுதல், நம்பிக்கை என்று பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் எழுதிய கவிதைகள் விரவிக்கிடக்கும் ஒரு நூல் இது. இன்னும் விரிவாகப் பேச எத்தனையோ முக்கியமான கவிதைகள் இருப்பினும், விரிவஞ்சி, இத்துடன் முடிக்கிறேன். அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல் இது.

இறுதியாக அவர் எழுதிய 'மறுபடி எழல்' (91) என்ற கவிதை

யின் சில பகுதிகளை வாசிப்பதுடன் எனது இந்தக் குறிப்பை முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

*‘வீழ்ந்தோம் தான்*
*வேதனையில் கை கால்கள்*
*துடித்தனதான்*
*என்றாலும் எழுந்து நிற்போம்*

*இனியாதல்*
*நிழலுடன் போராடாது*
*நிஜத்துக்கு முகம் கொடுப்போம்*
*எம்தோளில் மகரந்தம் தூவுதற்குக்*
*காலம் இசையவில்லை*
*சரிதான்*
*இனியென்ன?*
*மகரந்தம் வேண்டுமென்று மரத்தை உலுப்புவதா?*
*பூ உதிர்ந்து போய்விடும்*
*இன்னோர் சந்ததியின்*
*விதை எரிக்கப்பட்டுவிடும்*

*எம்மைப் போல்*
*இன்னும் எவர்க்கெவர்க்கோ*
*விதி இவ்வாறு நேர்ந்துளது*

*தெருவெலாம் பிணம் கிடந்து*
*எரிகின்ற நாளும்*
*இரவெலாம் அழுகுரலே*
*எழுகின்ற நாளும்*
*பூமித்தாய் பயத்தோடு*
*நடுங்குகிற நாளும்*
*இனியாதல் வேண்டாம்.*

*கோமணத்தை அறுத்துக் கொடியாகப்*
*பறக்கவிட்டால்*
*யாருக்கு லாபம்*
*எல்லா மாடுகளும் நலமடிக்கப்*
*பட்டுவிட்டால்*
*இயந்திரம் வந்தா*
*கன்று தருவது*

*இயற்கை நியதிகளை ஏற்று*
*வாழ்க்கையினைச்*
*செப்பனிடாது விட்டால்*
*சிலை வைக்கக் கூட*
*ஓரிடமும் எஞ்சாது*

*காற்றடிப்பில் என்ன*
*கடல் வற்றிப் போயிற்றா?*
*கோடிக்குள் எங்கள்*
*கலப்பை தொங்குகிறது*
*தூசுதட்டு அதையெடுத்து*
*வலையெல்லாம் மணலுக்குள்*
*புதையுண்டு கிடக்கிறது*
*எடுத்ததனைப் படுக்கவிடு கடலுக்குள்*
*இத்தனை குண்டுகளின் பின்னும்*
*எங்கள் பனைமரங்களைப் பார்*
*எழுந்தபடி நிற்கிறது’*

இந்த வரிகள் உங்களை, அவரது நான் மேற்சொன்ன முதலாவது கவிதையை - எதிர்பார்ப்புகள் என்ற கவிதையை - நினைவுக்குக் கொண்டுவரவில்லையா? வந்திருக்கும் நிச்சியமாக! இப்படித்தான் வாழ்க்கை நகர்கிறது மஹாகவி சொன்னதுபோல் ‘அப்பனே மகனாக’ இன்னொன்றையும் சொல்லவேண்டும்.

நம் காலத்தின் அடையாளங்களைத் தனக்கேயுரிய அற்புத



மான மொழியில் எழுதிவந்த கவிஞர் இப்போதெல்லாம் எழுதுவதைத் தான் நிறுத்திவிட்டதாகச் சொல்கிறார். அவர் கவனம் பாடல்கள், நாடக அரங்க நிகழ்வுகள் என்று பரந்து விரிந்தும் சென்றது மட்டுமல்ல இதற்கான காரணம் என்ற எனது கணிப்பை மறுத்து, இல்லை இப்போதெல்லாம் கவியெழுதும் உள்மன உந்துதல் எனக்குள் ஏனோ வருவதில்லை. வரும் போது நான் எழுதக்கூடும் என்று குறிப்பிடுகிறார்...
அவர் இப்படிச் சொல்லும் போது மீண்டும் மஹாகவியின் வரிகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. மஹாகவி கவிஞர்கள் பற்றி இப்படி எழுதினார்:

*‘ஏதும் எழுதிட வேண்டுமென்று*
*சில எச்சங்கள் சொச்சங்கள் நோண்டிவந்து*
*பேதமுடன் தரும் பண்டங்களால் என்ன பயன்*
*அட, போதும் விடும்!’*

நண்பர் விஜயேந்திரன் ஒருபோதும் ஏதும் எழுதிட வேணுமென்று எழுதியவரல்ல. ஆகவே எழுதும் உந்துதல் அவர் உள்ளத்தில் எழும்போது அவர் மீண்டும் எழுதுவார், எழுத வேண்டும் என்று நம்புகிறேன்.



vickneaswaran.sk@thaiveedu.com




# ‘பொருளாதாரம் பற்றி என் மகளுக்கு அளித்த விளக்கம்’ எனும் நூலை முன்வைத்து...

– நவஜோதி ஜோகரட்னம்

*தேடுதலிலிருந்து நாம் ஓயமாட்டோம்*
*தேடுதலின் இறுதி என்பது*
*எங்கிருந்து தொடங்கினோமோ*
*அங்கு வந்து சேர்ந்து*
*அதை முதல் முறையாக*
*அறிவது போல அறிவதுதான்.*

- டி.எஸ். இலியட்

கிரேக்க இடதுசாரிப் பொருளியலாளர் யானிஸ் வருஃபாகிஸ் என்பவரால் எழுதப்பட்ட ‘பொருளாதாரம் பற்றி என் மகளுக்கு அளித்த விளக்கம்’ என்ற நூலினை எஸ்.வி. ராஜதுரை தமிழில் மிகச் செழுமையாக மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இந்நூல் க்ரியா வெளியீடாக 2020-ல் வெளிவந்தது. 203 பக்கங்களை உள்ளடக்கிய இந்நூல் மிக நேர்த்தியான அடிக்குறிப்புகளோடு அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளமை வாசகரை வாசிப்பில் ஆவல்கொள்ளச் செய்கிறது.

பொருளாதாரம் பற்றிய புத்தகம் என்ற தலைப்பைப் பார்த்த போது சிரத்தையெடுத்துப் படிக்க முடியாத வகையில் மிகவும் கடினமாக இருக்குமோ அல்லது சலிப்பைத் தரக்கூடிய விதமாக இருக்குமோ என்று எண்ணினேன். பொருளாதாரத் துறை சார்ந்த வல்லுநர்கள்தான் அதனை வாசித்து விளங்குவார்கள் என்று நினைத்துக் குழப்பிக் கொண்டிருந்தேன். சாதாரண நடைமுறை விஷயங்களிலிருந்து மிக உன்னதமான விஷயங்கள் வரை எல்லாவற்றையும் பொருளாதார முடிவுகள் தான் தீர்மானிக்கின்றன என்பதை இப்புத்தகத்தை வாசித்தபோது அறிந்துகொண்டேன். இந்நூலில் வாழ்க்கைச் சம்பவங்களோடும் கலைச் சொற்களோடும் யானிஸ் அவர்கள் தன் மகள் ஸீனியாவுக்கு அளிக்கும் விளக்கம் அற்புதமானது. மகளுக்கு அவர் பொருளாதாரம் பற்றி விளக்குவது போல் அன்றாட வாழ்க்கையின் நிகழ்வுகளைச் சுவையாக விவரிப்பது விநோதமான முயற்சியாகவும் எனக்குத் தென்பட்டது.

யானிஸ் அவர்கள் பொருளாதாரம் பற்றிய விளக்கங்களை இந்நூலில் எட்டு அத்தியாயங்களாக்கி முன்வைக்கின்றார். ‘ஏன் இவ்வளவு ஏற்றத் தாழ்வுகள்?’ என்ற கேள்வியோடு முதலாவது அத்தியாயத்தை ஆரம்பிக்கின்றார். ‘அப்பா இந்த உலகில் ஏன் இந்தளவுக்கு ஏற்றத்தாழ்வு இருக்கிறது? மனித குலம் அத்தனை அறிவற்றதா?’ என்ற மகள் ஸீனியாவின் கேள்விக்கான பதிலை அவுஸ்திரேலியாவின் பூர்வீககுடிகளின் வாழ்விலிருந்து விளக்குகிறார் யானிஸ். பூர்வீக குடி மக்களுக்கு வெள்ளை அவுஸ்திரேலியர் இழைத்த கொடூரமான அநீதிகளையும் அந்தப் பூர்வ குடி மக்களின் நிலத்தைக் கைப்பற்றிய வரலாற்றையும் அவர்கள் இன்னமும் வறுமையில் சிக்குண்டே அவுஸ்ரேலியாவில் வாழ்வதையும் விபரிக்கின்றார். இது போன்ற நிலைமையில் பூர்வ குடிப் போர் வீரர்கள் டோவர் துறைமுகத்துக்கு வந்து லண்டனுக்கு முன்னேறிச் சென்ற சம்பவத்தை மகளுக்கு எடுத்துக் கூறுகிறார். லண்டனுக்குச் சென்ற அந்தப் பூர்வீக குடிமக்கள் அங்குள்ள பிரிட்டிஷாரையும் அவர்களது அரசியையும் கொலை செய்யவில்லை என்பதையும் துணிவுடன் இந்நூலில் பதிவுசெய்கிறார்.

தொழில் நுட்பத்தின் அடிமைகளாக இருந்துகொண்டிருக்கும் மனிதர்களை அடிமைகளாக்கி - கண்ணுக்குத் தெரியாத முதலாளிகள் எப்படி உருவாகின்றார்கள் என்பதையும் இந்நூலில் கோடிட்டுக் காட்டுகிறார் யானிஸ். அந்த வகையில் இது பற்றிய சிந்தனைகளின் மேதையர்களாகக் கருதப்படும் கார்ல் மார்க்ஸையும் ஜோன் மேய்னார்ட் கெயின்ஸையும் பெர்டோல்ட் ப்ரெஹ்ட்டினையும் போன்றோரையும் சுட்டிச் செல்கின்றார். இந்நூலில் வழமையாகக் கையாளப்படும் மூலதனம் அல்லது முதலாளியம் என்ற சொற்களுக்குப் பதிலாக யானிஸ் சாதாரணமான இயந்திரங்கள் உற்பத்திக்கான உற்பத்திச் சாதனங்கள் போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறார்.

ஏறத்தாழ எண்பத்திரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் குரல் நரம்புகளைப் பயன்படுத்திப் பேசவும் ஒலிகளை எழுப்பவும் முடிந்தது. அதன் பின்னர் எழுபதாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் கத்தி ஒலி எழுப்புதலுக்கூடாகத் தொடர்பாடலை மேற்கொண்ட மனிதர் சுற்றுச் சூழலில் இயற்கையாகவே கிடைக்கும் காட்டு விலங்குகள், பறவைகள், கொட்டைகள், காய்கள், மீன் போன்றவற்றை நுகர்வதற்கு ஆரம்பித்தான் எனக் கூறும் யானிஸ் மனிதர் பேசுவதற்கும் உணவு உற்பத்தி செய்வதற்கும் அடைந்த ஆற்றல்தான் பொருளாதாரத்தைத் தோற்றுவித்தது என்கின்றார். எழுத்தின் முதல் வடிவம் மெசொப்பொத்தேமியாவில் தோன்றின எனத் தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அவுஸ்திரேலிய, தென்னமெரிக்கப் பூர்வ குடிகளுக்குக் காட்டு விலங்குகள், கொட்டைகள், காய்கனிகள் குறைவில்லாமல் கிடைத்து வந்தமையால் அவர்களுக்கு வேளாண்மைச் சாகுபடிக்கான தேவை இருக்கவில்லை. அவர்கள் இசையிலும் ஓவியம் தீட்டுவதிலும் கவனஞ் செலுத்தினரேயன்றி எழுத்து முறையை உருவாக்கவில்லை என்பதையும் இந்நூலில் யானிஸ் சுட்டிக் காட்டுவார்.

உன்னுடைய உலகத்திலும் சரி, என்னுடைய உலகத்திலும் சரி, ஏன் சிலர் ஏழைகளாகவும், மற்றவர்கள் செல்வம் கொழித்

தவர்களாகவும் இருக்கிறார்கள் என்ற நிலையை மகள் ஸீனி யாவுக்கு நுட்பமாக விளக்குகிறார். இந்த நிலை ஏற்பட்ட இடங்களில்தான் வேளாண்மை நிலைபெற்றது என்று விளக்கம் தருகின்றார். அதாவது உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகளை மேம்படுத்தியபோது மனித சமுதாயம் பெரும் மாற்றத்தையடைந்து பொருளாதாரம் என்று அழைக்கப்படுவதன் அடிப்படை அம்சத்தை வேளாண்மை உற்பத்தி உருவாக்கியது. அதுதான் உபரி என்கின்றார். எதிர்காலப் பயன்பாட்டிற்கு உதவுகிற வகையில் மிச்சம் மீதி உள்ளவைதான் உபரி என்பர். அதாவது அடுத்த ஆண்டில் கூடுதலாக விதைப்பதற்கோ கையிருப்பை அதிகரிப்பதற்கோ பயன்படுத்துவதற்கான சேமிப்புவகை என இதனைக் கொள்ளலாம். இதனை நான் வாசித்துக்கொண்டிருந்தவேளை ‘வால்




காவிலிருந்து கங்கைவரை’ என்ற ராகுல சாங்கிருத்தியாயனின் நூலை எமது வீட்டுப் புத்தக அடுக்கிலிருந்து நான் வாசித்த நினைவுகள் காட்சிகளாக்கி மனதுள் என்னை நிறுத்தியது.

சந்தைச் சமுதாயத்தின் பிறப்பினை எடுத்துக்கொண்டால் உலக வாணிபம் எவ்வாறு தோன்றியது என்பது ஒரு நீண்ட கதை. சீனர்கள் தான் முதன் முதலில் திசைகாட்டியைக் கண்டுபிடித்தார்கள். அதன் பின்னர் திசைகாட்டியின் பயன்பாடு தொடங்கியது. ஐரோப்பாவில் கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்தது. கடலில் கப்பல்களைச் செலுத்தும் திறனில் முன்னேற்றங்கள் காணப்பட்டன. ஐரோப்பியக் கடலோடிகள் புதிய கடல் தடங்களைக் கண்டுபிடித்துப் பயணித்தனர். அத்தகைய கடல் தடங்கள் தாம் தம் பங்குக்கு உலக வாணிபத்தைத் தூண்டிவிட்டன.

அதன்பின்னர் இங்கிலாந்து, ஹொலந்து, ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற நாடுகளில் வணிகர்கள் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து நாடுகளிலுள்ள கம்பளி நூல்களைக் கப்பல்களில் ஏற்றிச் சென்று கப்பல் பரிவர்த்தனை மூலம் வணிக முயற்சியில் ஈடுபட்டனர். பம்பாய்த் துறைமுகத்தில் உணவுக்கான வாசனைப் பொருட்களுக்குக் கம்பளி நூலினைப் பரிவர்த்தனைச் செய்யும் நிகழ் முறையை மீண்டும் மீண்டும் மேற்கொண்டனர். வணிகரீதியான இத்தகைய நிபந்தனைகள் பரிவர்த்தனை மதிப்புகள் என்ற வடிவத்தை எடுத்தன. இவை பணம் என்ற வடிவத்திலே வெளிப்பட்டன. இறுதியில் நிலமும் பரிவர்த்தனை மதிப்பைப் பெற்றது. நடைமுறை யதார்த்தத்தின் பிற்புலத்தில் இவற்றை யானிஸ் வெளிப்படுத்தி நிற்கிறார்.

அடுத்து, கடன் என்பது மக்களிடம் எப்போதும் இருந்தது. ஒருவர் தன் அண்டை வீட்டுக்காரருக்குத் தேவையான தருணத்தில் உதவினால், அண்டை வீட்டுக்காரர் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் ஏதோ வேறு வடிவத்தில் தார்மீகக் கடனைத் திருப்பிச் செலுத்துவார். கடன் புரிதலைப்பொறுத்து இரு வகைகளில் வேறுபட்டிருக்கிறது. ஒன்று ஒப்பந்தம் செய்து கொள்ளுதல். மற்றொன்று வட்டி என்ற விடயத்தில் திருப்பிச் செலுத்துதல்.

அன்றைய நிலப் பிரபுத்துவ அமைப்பில் செல்வமும் போட்டியும் தலைகாட்ட ஆரம்பித்தன. நில உடைமையாளர் தன் பங்கை எடுத்துக்கொண்டது போக மீதியை வைத்துக் கொண்டு மேற்பார்வையின்றி உற்பத்தி செய்தனர். கூலி கொடுத்தல் என்பதோ அப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. பெரும்பான்மையான மக்களுக்குக் கடன் என்பது முக்கியமான பிரச்சினையாக இருக்கவில்லை. லாபம் ஈட்டுதல் என்பதும் உயிர் பிழைப்பதற்கான விஷயமாகவும் இருக்கவில்லை. அதன் விளைவாகச் செல்வம் நில உடைமையாளர்களின் மாளிகைகளிலும் கோட்டைகளிலும் குவிந்தது. அதிகாரம் படைத்தவர்கள் பிற நிலப் பிரபுக்களையும் மக்களையும் கொள்ளையடித்தும், தாங்கள் அரசரின் உள்வட்டத்திற்குள் போவதற்கான சதிவேலைகளில் ஈடுபட்டும், வெளிநாட்டுப் போர்களில் பங்கேற்றும், இன்னும் வெவ்வேறு வகைகளிலும் செல்வத்தைத் திரட்டிக் கொண்டனர். இப்படித்தான் தாங்கள் கனவு கண்டுவந்த அதிகாரத்தையும் புகழையும் பெற்றனர்.

நிலத்திலிருந்து உணவைக் கொண்டுவரும் திறமை எம்மிடம் இருந்தாலும் பசித்தவர்களுக்கு உணவு வழங்கக்கூடிய சமூக அமைப்பை உருவாக்க நம்மால் முடியவில்லை. இவைகளின் பிரதிபலிப்பே புகழ் பெற்ற அமெரிக்க நாவலாசிரியர் John Steinbeck அவர்கள் ‘வெஞ்சினத்தின் திராட்சைகள்’ (The Grapes of Wrath) என்ற சிறந்த நாவலை எழுதத் தூண்டியதாகக் கூறுகின்றார். இப்படிப்பட்ட அமைப்பை உருவாக்கத் தவறியது, ‘ஒரு மாபெரும் துயரமாக அரசைக் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது’ என்றும், அதேவேளை உணவில்லாமல் போன மக்களின் சினம் திராட்சைக் கொடிகளிலுள்ள திராட்சைகளைப் போல வளர்ந்துகொண்டிருக்கிறது என்றும் எழுதுகிறார். ‘மக்களின் ஆன்மாக்கள் சினம் என்ற திராட்சைகளால் நிரம்பி பழுப்பதால் அவை கனத்துக் கொண்டிருக்கின்றன’ என்கின்றார்.

இவையெல்லாம் நடப்பதற்கு உனக்குப் பரிச்சயமான நபர் எனக்கூறி 'வங்கியாளர்களை' யானிஸ் தன் மகளுக்கு அறிமுகப்படுத்துகிறார். மத்திய வங்கி என்ற ஒன்றைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். ஒவ்வொரு நாட்டுக்கும் - அதாவது துல்லியமாகச் சொல்வதென்றால் ஒவ்வொரு நாணயத்துக்கும் - ஒரு மத்திய வங்கி உள்ளது. மத்திய வங்கிகளுக்கு ஒவ்வொரு நாட்டிலும் தனிதனிப் பெயர்கள் உள்ளன. பிரிட்டனில் பாங் ஒஃப் இங்கிலாந்து, அமெரிக்காவில் ஃபெடெரல் வங்கி, ஆஸ்திரேலியாவில் ரிசர்வ் வங்கி, இங்கிலாந்து தவிர்ந்த பிற பகுதிகளில் ஐரோப்பிய மத்திய வங்கி என்றே அறியப்படுகிறது. பெயர் எதுவாக இருந்தாலும் மத்திய வங்கி என்பது அரசு உடமையிலுள்ள ஒரு வங்கி. மற்ற எல்லா வங்கிகளும் இதன் வாடிக்கையாளர்கள். இந்த மத்திய வங்கியிலிருந்துதான் அவற்றுக்கு பெருமளவில் பணம் வந்து சேர்கிறது.

பொருளாதாரம் நல்ல நிலையில் இருக்கும்போது வங்கியாளர்கள் தொழில் முனைவோர்கள் - செல்வந்தர்கள் - அரசாங்கத்தை எதிர்க்கும் போக்குடையவர்களாக இருப்பார்கள். வரிவிதிப்பின் மூலம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒட்டுண்ணியே அரசாங்கம் என்று சுட்டுகிறார். கிளிஞ்சல்களுக்கும் ஒரு மத்திய வங்கி வழங்கும் பணத்துக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை எனக்கூறும் யானிஸ், செல்வந்தர்களுக்கு அரசு எப்போதுமே மிக அருமையான ஆயுள் காப்பீட்டை வழங்கி வந்திருக்கிறது எனவும் கூறுவார். அரசு செய்யும் உதவிக்குக் கைமாறாக, அந்தச் செல்வந்தர்கள் தங்கள் காப்பீட்டுத் தவணையைக் கட்டாமல் இருப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து வந்தனர் என்பதையும் விளக்குகிறார். வேறு சொத்துகள் எல்லாவற்றிலும் பார்க்கப் பத்திரங்கள்தான் மிக எளிதாகப் பணமாக மாற்றப்படக்கூடிய சொத்தாகும். வங்கியமைப்பு என்னும் சக்கரத்தையும் அதன் பற்களையும் உராய்வின்றிச் சுழல வைப்பவைதான் பத்திரங்கள் எனக் கூறி, நவீனத்தின் வங்கிச் செயற்பாடுகளை மிகச் சிறப்பாக விளக்குகின்றார் யானிஸ். 'ஆரூடச் சக்தியின் கீழுள்ள இரு சந்தைகள்', 'பேய் இயந்திரங்கள்', 'அரசியற் தன்மையற்ற பணம் என்ற அபாயகரமான அதிக கற்பனை', 'முட்டாள் வைரஸ்கள்?' என்ற சுவையான தலைப்புகளோடும் நூல் இனிதாக நகர்கிறது. யானிஸ் பொருளாதார விளக்கங்களை, வெற்றி என்பது ஒவ்வொரு தனிமனிதரும் மற்றவர்களுடன் ஒத்துழைப்பதை மட்டுமல்ல, மாறாக ஒவ்வொரு தனிநபரும் மற்றவர்கள் ஒவ்வொருவரும் தன்னைப் போலவே செயற்படுவர் என்று நம்புவதையே முதன்மையாகச் சார்ந்துள்ளது என்கின்றார். ஒரு மனிதருக்கு நேரக்கூடிய மிக மோசமான விஷயம் என்னவென்றால், விரக்தியில் அவர் தன் ஆன்மாவைப் பிசாசுக்கு விற்க முடிவு செய்யும் போது, பிசாசு அதை வாங்கத் தயாராக இல்லை? என்பது தான். தமது தகுதிக்கேற்ற வேலை வாய்ப்புகளற்ற நிலைமைகள், கணினியால் உருவாக்கப்படும் மெய்நிகர் யதார்த்த உலகம், மனிதர்களுக்கு மாற்றீடாக இயந்திரங்களின் புதிய வருகை எனப் புதிய தளத்தில் இயங்கும் இந்நூல், இயந்திரம் நிலைபெறும் கணத்தில் மனிதர் இறந்துவிடுவார் என்ற விடயத்தையும் உணர்த்தி நிற்கிறது. உண்மைதான் மனிதர் இறந்துவிடுவார், ஆனால் இயந்திரங்கள் இருக்கும் தானே? என்ற குறிப்பு மனிதரைச் சிந்திக்கவும் செயற்படவும் வைக்கின்றன.

'உண்மை என்னவென்றால் சில வைரஸ்கள் அவை எந்த செல்களில் உயிர்வாழ்கின்றனவோ அந்தச் செல்களை அழிப்பதில்லை. ஆனால் மனிதர்களாகிய நாமோ, நமக்கு இடந்தரும் சுற்றுச் சூழலை முற்றிலுமாக நாசப்படுத்த உறுதிபூண்டவர்களாக இருக்கிறோம். என்பதை 'த மெட்ரிக்ஸ்' என்ற திரைப்படத்தில் வரும் ஏஜென்ட் ஸ்மித் என்ற மானுட வடிவத்திலுள்ள பாத்திரத்தினூடாகக் காட்சிகளை விஸ்தரிக்கிறார் யானிஸ். ஏஜென்ட் ஸ்மித், மனிதர்கள் தனக்கு அருவருப்பூட்டுகிறார்கள் என்று கூறி அதற்கான விளக்கத்தைத் தருகிறான்... 'இந்தக் கோளத்தில் உங்களைப் பின்பற்றக்கூடிய இன்னொரு உயிர் இருக்கிறது. அது என்னவென்று உனக்குத் தெரியுமா? வைரஸ்தான் அது. மானுட ஜீவிகள் ஒரு வைரஸ் என்கின்றார் யானிஸ்.

தாவரங்கள், விலங்குகளை பெருந்திரளாக அழிந்தொழியும் படி செய்துள்ளோம், புவிக்கோளத்தில் காடுகளில் மூன்றில் இரண்டு பகுதியை அழித்துள்ளோம், அமில மழையை உருவாக்கிக் கோளத்தின் ஏரிகளை நச்சுத்தன்மை உள்ளனவாக ஆக்கியுள்ளோம், மண்ணரிப்பை உண்டாக்கியுள்ளோம், ஆறுகளின் நீரை முற்றிலுமாக வற்றச் செய்துள்ளோம், வளிமண்டலத்தை கரியமில வாயுவால் நிரப்பியதுடன் நமது கடல்கள் அமிலத்தன்மை அடையும்படியும், பவளப் பாறைகள் ஒழித்துக் கட்டப்படும் படியும், பனிக்கட்டிகள் உருகும் படியும், கடல் மட்டம் உயரும் படியும், பருவநிலை சீர்குலையும் படியும், பல்வேறு பகுதிகளில் வாழும் பல்வேறு மக்கள் சமூகங்கள் அனைவரது வாழ்க்கையையும் அபாயத்துக்குள்ளாகும் படியும் செய்துள்ளோம். நமது ஒரே புகலிடமாகவுள்ள உயிர்க் கோளத்தைக் கடுமையான ஆபத்துக்குள்ளாக்கிய தன் மூலம் நாம் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒட்சிசனை நாங்களே நச்சுப்படுத்துகிறோம். உண்மையில் நாம் அப்படிப்பட்டவர்களாகவே இருக்கிறோம். ஏஜெண்ட் ஸ்மித் கூறியது தவறு என்று யாரால் சந்தேகிக்க முடியும்? என்று ஒரு அருமையான கேள்வியைத் தொடுக்கிறார் யானிஸ் இந்த நூலில்.

கற்பனையில் உதித்த ஓர் உருவம்தான் என்று, ஏஜெண்ட் ஸ்மித்தை நீ கூறலாம். எமக்கு உரிமையும் உண்டு, ஆனால் மனசாட்சிகளைத் தட்டியெழுப்பி நமக்கு அபாய எச்சரிக்கை விடுப்பதற்காக Christopher Marlowe, Mary Shelley, Frankenstein படைத்தது போல நாம் இந்த உலகத்தை அச்சுறுத்தும் வைரஸோ, புற்றுநோயோ அல்ல. சுயவிமர்சனம் செய்து கொள்கிற நமது செயல்களைச் சிந்தித்துப் பார்க்கின்ற ஆற்றல் கொண்ட மனசாட்சியுடைய ஒரு ஜீவராசியே என்பதை ஏஜெண்ட் ஸ்மித் என்ற கற்பனைப் பாத்திரம் நிருபிக்கின்றது'.

மனித வாழ்வின் பரிணாம வளர்ச்சியைக் காரண காரியத் தொடர்புடன் விளக்கும் இந்நூலை யாவரும் படித்துணர வேண்டும் என்ற நோக்கிலேயே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. நூலைப் படிக்கும் வாசகருக்கு வருஃபாகிஸின் விளக்கங்கள் வாழ்வைத் திட்டமிட்டு நடத்துவதற்கு உந்து சக்தியாக அமைவதோடு, வரலாற்றில் நிகழ்ந்தேறிய அபத்தங்களைக் கண்டறிந்து, சீர்மையான பாதையில் மனித இனம் தொடர்ந்து பயணிக்க உதவும் என்பது வெளிப்படை.



navajothy@thaiveedu.com




# மாபெரும் துயர்க்கிண்ணம்

- கருணாகரன்

சாதாரண மனிதர்களை அரசியல் எப்படியெல்லாம் பாதிக்கிறது? அரசுகளும் ஆட்சித் தரப்புகளும் அதிகார வர்க்கமும் எப்படிச் சமானியர்களைப் படுத்துகின்றன? அரசுகள், ஆட்சித்தரப்புகள் மட்டுமல்ல, சமூகத்திலுள்ள மேலாதிக்கச்



சக்திகள் இனம், மதம், மொழி, நிறம், பிரதேசம், பால் என்ற அடிப்படையில் எளிய மக்களின் வாழ்க்கையை எப்படி நெருக்கடிக்குள்ளாக்கின்றன? இதிலிருந்து மீள்வதற்கு சாமானியமானவர்கள் எப்படியெல்லாம் போராட வேண்டியிருக்கிறது? என்பதை அரசியற் சொல்லாடல்களையும் விடக் கலையும் இலக்கியமுமே மிகக் கூர்மையாக வெளிப்படுத்தியுள்ளன. நவீன கலை, இலக்கிய வெளிப்பாட்டின் பிரதான அடிப்படை இதுவாகும். பின் நவீனத்துவம் இதை இன்னும் விரிவாக்கி அடுத்த தளத்துக்கு - விளிம்பு நிலைக்கும் நகர்த்தியிருக்கிறது.

இந்த அடிப்படையில் கலையில் உச்சத்தைத் தொட்டவை ஓவியங்கள், நாடகங்கள், திரைப்படங்கள். சினிமா இதில் இன்னும் பலமாகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளது. தன்னுடைய பங்களிப்பைச் செய்திருக்கிறது. அது பிந்திய அறிவியல் விளைவின் கலைச் சாதனம் என்பதால், ஏனையவற்றை விடக் கூடுதலாகப் பங்களிக்கவும் வெளிப்பாட்டைச் செய்யவும் சாத்தியமாகிறது. உலகெங்கும் உள்ள பல திரைப்படங்கள் இதற்கு ஆதாரம். ஸ்பைக் லீயின் ‘மால்கம் X, ஸ்டீவ்’ மெக்வீனின் ‘12 இயர்ஸ் ஸ்லேவ்’ (12Years a Slave) ராவுல் பெக்கின் ‘லுலும்பா’ (Lulumba), லார்ஸ் வான் ட்ரையர் (Lars Von trier)இயக்கிய 'Dancer in the Dark' போன்ற பல நூற்றுக்கணக்கான படங்கள் மற்றும் ஆபிரிக்கச் சினிமாவின் முகம் என்று சொல்லப்படும் ஒஸ்மான் செம்பேன், பிரான்ஸின் புதிய அலையின் பிதா என்று கூறப்படுகின்ற மூான்லுக் கோதார்த், பாலஸ்தீனத்தின் எலையா சுலைமான், சிங்களச் சினிமாவின் புதிய வரவுகளான பிரசன்ன விதானகே, அசோக கந்தகம, கிரேக்கத்தின் தியோ ஆஞ்சலோபெலோஸ், கோஸ்டா காவ்ரஸ், உருகுவேயின் ஆன்மா என்று கருதத்தக்க அல்வேரோ ப்ரெக்னர், இங்கிலாந்தின் ஆலன் பார்க்கர், ஆஸ்திரியாவின் மைக்கேல் ஹெனகே போன்ற பல நூறு இயக்குநர்களின் பங்களிப்புகள் இதிலுண்டு.

இதில் இன்னொரு வகையானவை ஆவணப்படங்கள் (Documentaty Film). ஆவணப்படங்கள் என்றாலே, அநேகமாக அவை பிரச்சினையின் சுவடுகளைத் தேடிச் செல்பவை, அல்லது வாழ்க்கையின் வேர்களைப் பிரதிபலிப்பவை. இரண்டின் வழியாகவும் வரலாற்றையும் வாழ்க்கையும் பதிவாக்கி வெளிப்படுத்துகிறது. ஆவணப்படம். இலக்கியத்தில் கவிதை, சிறுகதை, நாவல் எனப் புனைவுசார் படைப்புகள் (எழுத்துகள்) ஒடுக்குமுறை அடக்குமுறை இரண்டையும் மிகச் செம்மையான முறையில் பதிவு செய்துள்ளன. பதிவென்றால் வெறுமனே, மேலோட்டமான டயறிக் குறிப்புகளோ பதிவேட்டி

லிருக்கும் தட்டையான ஆவணங்களோ அல்ல. பதிலாக அவற்றின் சாரத்தை உள்ளெடுத்து, மனதை - உலகத்தை உலுக்கும் விதமாகப் பன்முகப் பரிமாணத்தோடு வெளிப்படுத்துகின்றன. அப்படித்தான் ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிரான படைப்புகள் - எழுத்துகளும். இதற்கெல்லாம் சான்றாக உலகெங்கும் விளைந்து கிடக்கின்றன, பல்லாயிரம் கவிதைகளும் கதைகளும் நாவல்களும். ஒரு பாலஸ்தீனக் கவிதைபோதும் பாலஸ்தீன மக்களின் அவலத்தையும் துயரத்தையும் புரிந்து கொள்வதற்கு. அவர்கள் பக்கமாக நம்மைக் கொண்டு செல்வதற்கு. பாலஸ்தீனக் கவிதை என்றாலே நமக்குள் விழுகின்ற படிமம் (Image), இஸ்ரேலினால் பாலஸ்தீனியர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியும் அதை எதிர்கொண்டு போராடும் அந்த மக்களின் போராட்டமுமே. அதற்காகப் பாலஸ்தீனத்தில் காதற்கவிதையோ இயற்கையைப் பற்றிய, உறவைப்பற்றிய கதைகளோ இல்லாமலில்லை. அதையெல்லாம் கடந்து அங்கே அரசியல் நின்றாடுகிறது. அதனால், தவிர்க்க முடியாமல் அவர்களுக்கு அதையே எழுதவும் பேசவும் வேண்டியுள்ளது. அப்படித்தான் ஆபிரிக்கக் கவிதைகளும். 'கறுப்புக் கவிதைகள்' என்று இவற்றைக் குறிப்பிடுவதே, ஆபிரிக்கர்களின் துயரத்தையும் இருண்ட வாழ்விலிருந்து ஒளியைத் தேடும் அவர்களுடைய ஆன்மாவையும் அவை வெளிப்படுத்துவதனால் - பிரதிபலிப்பதனால்தான்.

தமிழில் பூமணியின் 'வெக்கை', இமயத்தின் 'கோவேறு கழுதைகள்', டானியலின் 'பஞ்சமர்', அருளரின் 'லங்கா ராணி', ரஞ்சகுமாரின் 'கோசலை', ஷோபாசக்தியின் 'மிக உள்ளக விசாரணை', யோ. கர்ணனின் 'தஸ்யுக்களின் பாடல்' எனப் பெரும் பரப்புண்டு. தொடர்ந்து இந்த விளைச்சல் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. சனங்கள் சிந்துகின்ற கண்ணீரின் அளவுக்கு இவற்றின் பிரதிபலிப்பும் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். சனங்களின் துயரத்துக்கு எப்பொழுது முடிவு கிட்டுகிறதோ அப்பொழுது இவற்றின் சாரமும் முகமும் மாறும்.

இலங்கையின் இன ஒடுக்குமுறையையும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் சொல்கின்ற ஏராளமான கவிதைகளும் கதைகளும் உண்டு. தினமும் ஒரு தொகையானோர் இதை வெளிப்படுத்திக் கொண்டேயுள்ளனர். ஆகவே இது தொடர்ந்து படைப்பிலக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டே வருகிறது. ஒடுக்குமுறையும் அடக்குமுறையும் தொடரும் வரையிலும் இந்த வெளிப்படுத்தலும் நிகழும். ஏன் இவை முடிந்தாலும் கூட அவை உண்டாக்கிய வலியின் நினைவுகள் அதை வெளிபடுத்தத் தூண்டும். அதைத் தவிர்க்க முடியாது. உலகப்போர்கள் முடிந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும் இன்னும் அந்தக் காலத்தைப் பிரதிபலிக்கும் இலக்கியமும் சினிமாவும் வந்து கொண்டேயுள்ளன. படிப்பினைகளுக்காக, ஆற்றுப்படுத்தல் களுக்காக, வணிகத் தேவைகளுக்காக இவை தொடர்ந்து வெளிப்படுத்தப்படும் நிலை உண்டு என்பதால் நிகழ்காலத்தில் மட்டுமல்ல, எதிர் காலத்திலும் அடக்குமுறையைப் பற்றியும் ஒடுக்குமுறையைப் பற்றியுதுமான செய்திகள் வெளிப்படுத்தப்பட்டவாறே இருக்கும். வலியும் அறச்சீற்றமும் நீதி கோருதலுமே இதற்கான அடிப்படையாகும்.

இவையெல்லாம் அடிப்படையான கேள்விகளை எழுப்புகின்றன. அந்தக் கேள்விகள் இலங்கை அரசை, அதை ஆதரித்து நிற்போரை, சர்வதேச உலகை, வரலாற்றை நோக்கியவையாகின்றன. ஆனால், இவையெல்லாம் சமானியர்களுக்கான நீதியை வழங்கி விடப்போவதில்லை. பதிலாக இவை மக்களின் (வாசகர்களிடத்திலும் பார்வையாளர்களிடத்திலும்) எழுப்புகின்ற கேள்விகள், அரசை நோக்கி, அதை ஆதரித்து நிற்போரை நோக்கி, சர்வதேச சமூகத்தை நோக்கி, வரலாற்றை நோக்கியதாக மாறுகின்றன. அதுதான் பின்னர் எதிர் அரசியல் விளைவுகளை உண்டாக்குவது. கலையினதும்




இலக்கியத்தினதும் அடிப்படைத் தொழிற்பாடும் பெறுமானமும் அதுதான். அகத்திறப்பை நிகழ்த்துவது.

இந்தப் பண்பில் எழுதப்பட்டிருக்கும் கதைகளில் முக்கியமான ஒன்று ஜிஃப்ரி ஹாசனின் 'மே புதுன்கே தேசய'. பல பரிமாணங்களில் வாசிக்கக் கூடிய கதை. அல்லது பல பரிமாணங்களில் வாசக மனங்களைத் திறக்கக் கூடியது. சிங்களவரல்லாதவர்கள் இலங்கையில் படுகின்ற வாழ்க்கைச் சிரமமும் அது உண்டாக்குகின்ற உளநிலையும் சாதாரணமானதல்ல. இது இந்தக் கதையில் மிகச் சிறப்பாக வெளிப்படுகிறது. கிழக்கிலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் இளைஞன் மம்மலி, அதிகம் படிக்காதவன். காட்டில் விறகு வெட்டி நடத்துவதே அவனுடைய வாழ்க்கை. ஆனால், அதற்கு காட்டு எல்லையிலிருக்கும் இராணுவத்தினர் பிரச்சினையாக இருக்கின்றனர். அவர்களோடு கதைத்துத் தன்னுடைய நிலைமையைச்

சொல்வதற்கு மம்மலிக்குச் சிங்களம் தெரியாது. காட்டுக்குப் போவதற்கு மட்டுமல்ல, மருத்துவமனைக்கு, பொலிஸ் நிலையத்துக்கு, பஸ்ஸில் ஏறிப் பயணிப்பதற்கு, தலைநகர் கொழும்பில் ஒரு காரியத்தைப் பார்ப்பதற்கு, விமான நிலையத்திற்குப் போய் ஒருவரை அழைத்து வருவதற்கு என இப்படியே எல்லாத்துக்கும் சிங்களம் தேவைப்படுகிறது. சிங்களம் தெரியாமலிருந்தால் எல்லாத்துக்குமே பிரச்சினை என்று படுகிறது மம்மலிக்கு. சிங்களத்தைத் தெரிந்து விட்டால் அதொரு சர்வரோக நிவாரணியாகி விடும் என்று அவனுக்குத் தோன்றுகிறது. ஆகவே அவன் சிங்களத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பல வழிகளிலும் முயற்சிக்கிறான். இறுதியில், ஆரிய தம்மா ஹாமதுரு என்ற ஒரு சிங்களப் பௌத்த மதகுருவிடம் போய்ச் சேருகிறான். அங்கே சிங்களம் படிப்பதற்காக மம்மலிக்கும் ஆரியதம்மா ஹாமதுருவுக்கும் நடக்கின்ற உரையாடல் கதையின் உச்சமான பகுதியாகும். அதில் ஒரு கட்டத்தில் மம்மலி, தனக்குத் தெரிந்த அரைகுறைச் சிங்களத்திலும் தமிழிலுமாகச் சொல்லுவான், 'அரசாங்கக் கடிதமெல்லாம் கொழும்பிலிருந்து சிங்களத்திலதான் வரும். அரசாங்கத்துக்குத் தமிழ் தெரியாதுதானே ஹாமதுரு. அத வாசிக்கிறதுக்குச் சிங்களம் தெரிஞ்ச ஆக்களத் தேடிக் கண்டுபிடிக்கிறதுக்குள்ள கடிதம் காலாவதியாகிடும் ஹாமதுரு'.

மிகச் சாதாரணமாக நடக்கின்ற இந்த உரையாடல், இலங்கையின் யதார்த்த நிலையையும் சிங்கள மேலாதிக்கத்தையும் அப்படியே காட்டுகிறது. மட்டுமல்ல, அரசின் மொழிக்கொள்கையையும் இலங்கையின் ஆட்சி நடைமுறையையும் கேலி செய்கிறது. இலக்கியத்தின் பெறுமானம் இதுதான். சில சொற்களில் மிகப் பெரிய அரசியற் சேதியை, பல லட்சம் பேரின் துயரத்தை, வரலாற்றின் அவலத்தை, சாதாணர்களின் நிலைமையைத் துல்லியப்படுத்துவது. இலக்கியத்தில் அரசியலுக்கு இடமேயில்லை. அதற்கு அழகியலே முக்கியமானது. அதுவே அதனுடைய கலைப்பெறுமானமாகும் என்ற வாதம் இன்னும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அதேவேளை இலக்கியத்தை பிடிவாதமாக அரசியலுக்குப் பலியிடும் செயற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இரண்டுக்கும் அப்பால் இலக்கியம் அரசியலைத் தன்னளவில் பேசிக் கொண்டும் உள்ளெடுத்துக் கொண்டும் தானிருக்கிறது. உணவில் உப்புச் சுவை இணைந்திருப்பதைப்போல. ஜஃப்ரியின் இந்தக் கதை அதற்குச் சான்று. கதையின் இறுதியில், என்னதான் மம்மலி போன்ற சிங்களமல்லாத சமூகத்தினர் சிங்களத்தைப் படித்தோ, பழகியோ தெரிந்து கொண்டாலும் அவர்களுக்கு இந்தத் தேசம் உரியதல்ல. அது நமக்கே உரியது (மே புதுன்கே தேசய). நீங்கள் சிங்களம் படித்துத்தான் ஆக வேணும் - வாழ வேணும். அதற்காக நாங்கள் தமிழ் படிக்க வேண்டுமென்றில்லை என்ற தொனியில் ஹாமதுரு மம்மலிக்குச் சொல்லும் பதில், இலங்கையின் யதார்த்ததை, அதன் இன்றைய நிலையை, அதனுடைய உண்மையான முகத்தை அப்படியே காட்டுகிறது. 'இப்படி எழுதுவது நாட்டின் அமைதியைக் குலைக்கும் சிந்தனை, எதிர்மறையான எண்ணம்' எனச் சிலர் இந்தக் கதைக்கு எதிரான குற்றச்சாட்டைக் கொள்ளலாம். ஆனால். அதை நிராகரிக்கும் வகையில் எளிய மனிதனொருவனின் வாழ்க்கையும் சமகால நிலவரக் காட்சிகளும் சான்றாக, சாட்சியமாக அடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கடந்து செல்லவோ மூடி மறைக்கவே முடியாது. ஏனென்றால் அவை இலகுவில் அணைத்து விடமுடியாத உண்மையின் கனல்கள். இந்தக் கனல்களில்தான் இலங்கை வெந்து கொண்டிருக்கிறது. இலங்கை மட்டுமல்ல, உலகின் பல திசைகளிலும் உள்ள பெரும்பாலானோர். இலக்கியம் அவர்களுடைய துயரை ஏந்துகின்ற மாபெரும் துயரக் கிண்ணமாகவே உள்ளது.




ஜிஃப்ரியின் மே புதுன்கே தேசய கதை அது சொல்லும் உண்மையினாலும் பல்லாயிரம்பேர் எதிர்கொள்ளும் பொதுத் துயரத்தினாலும் சர்வதேசத் தன்மையைப் பெறுகிறது. மொழி மாற்றம், மதமாற்றம், நிறமாற்றம் என அதிகாரம் கட்டமைத்திருக்கும் சட்டகங்களுக்குள் சிக்கிக் கொள்ளும் மக்களின் யதார்த்தத்தைச் சொல்வதன் மூலமாக வரலாற்றின் முன்னும் பின்னுமாக தன்னை நிறுத்துகிறது. காலம் முன்னகர்ந்து சென்றாலும் அதிகாரத் தரப்பின் இவ்வாறான குணாம்சம் - மனநிலை மாறவில்லை என்பதைச் சொல்லி வரலாற்றைக் கேள்விப்படுத்துகிறது. இந்தக் கேள்வியே இலக்கியத்தின் இன்னொரு பலமான ஆயுதமாகும். எந்த வகையான அரசியற் சொல்லாடல்களுக்கும் அப்பால், எத்தகைய வரலாற்றுச் சித்தரிப்புகளையும் தாண்டி, இலக்கியமும் கலையும் கொண்டிருக்கும் ஆற்றலிது.



karunagaran@thaiveedu.com




# சேரனின் 'காஞ்சி' கவிதைத் திரட்டு மீதான ஒரு சிறு கண்ணோட்டம்

– க. நவம்

மிக நீண்டகால வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்க் கவிதை மரபில், கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில், ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர், பாரதி.

தமிழுக்குக் கிடைத்த அரும்பெருஞ் சொத்து என்பதைத் தமிழினம் உணரத்தவறியிருந்த காலத்தினைக் கடந்து, மறைந்து போன பாரதியை, கற்றோரும் மற்றோரும் இனங்காணக்கூடிய வகையில், சரிவர அறிமுகம் செய்தவர்களில் ஈழத்து அறிஞர்கள் இருவர் முக்கியமானவர்கள்.

ஒருவர் சுவாமி விபுலானந்த அடிகள்; மற்றவர் பேராசிரியர் கைலாசபதி.

தமிழ்க் கவிதை இலக்கியம் நவீன தமிழ்க் கவிதை எனும் வடிவத்தினைக் கண்டடைந்த போது, அதன் பிதாமகராக இன்றும் நன்றியோடு நினைவு கூரப்படுபவர், திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட, இன்னொரு ஈழத்தவரான 'பிரமிள்' எனப்படும் தருமு சிவராம் (தருமலிங்கம் சிவராமலிங்கம்).

தமிழ்ப் புதுக்கவிதையினை, ஈழத்தில் பிறிதொரு தளத்தில் நின்று, பரிசோதித்து, வெற்றி கண்டவர், உருத்திரமூர்த்தி என்ற இயற்பெயரைக் கொண்ட மஹாகவி. இவரது வழிநடந்து, கவிதை படைத்து, ஈழத் தமிழ்ப் புதுக்கவிதை மரபின் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்களில் சண்முகம் சிவலிங்கம், நுஃமான், வில்வரட்ணம் ஆகியோர் முக்கியமானவர்கள்.

இன்று, சேரன், ஜெயபாலன் உட்பட, எண்ணிறந்த நவீன தமிழ்க் கவிஞர்கள் பலரும் ஈழத்திலும் சரி, புலம்பெயர் தேசங்களிலும் சரி காத்திரமான ஒரு நவீன தமிழ்க் கவிஞர் பரம்பரையினராகத் தோற்றம் பெறுவதற்கு, இவர்கள் காரணர்களாக அமைந்திருந்தனர் எனத் துணிந்து கூறலாம்.

அதுமட்டுமன்றி, 'சேரன் இன்றி, நவீன தமிழ்க் கவிதை இல்லை' என்ற ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிகின்றோம்' என்பது நமக்கெல்லாம் பெருமை தரும் ஒரு விடயமாகும்.

'ஓர் எழுத்தாளர், புத்தியாளர் எனும் வகையில், சேரனது கவிதைப் பணியின் தொடர்ச்சியான அக்கறைகளாக, பல ஆண்டுகளாக வெளிப்பட்ட கருப் பொருட்களாவன: அவரது மண்ணினதும் - மக்களினதும் தலைவிதி, உள்நாட்டுப் போரின் கொடூரங்களும் வன்முறையும், ஈழவிடுதலைப் போரின் கதை சொல்லப்பட வேண்டும் என்ற நம்பிக்கையும் தொடர்ச்சியான வலியுறுத்தலும் ஆகும்.'

இவ்வாறு சேரனது கவிதைகள் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய ஆய்வு ஒன்றில், சிகாகோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைத் தலைவர், பேராசிரியர் சாஷா எப்லிங்ஸ் (Saascha Ebling) குறிப்பிடுகின்றார்.

'ஆயினும் சேரனை வெறுமனே 'ஒரு போர்க் கவிஞர்' என்று கருதுவது, அவரைக் குறைத்து மதிப்பிடுவதாக இருக்கும்; அத்தகைய வகைப்படுத்தல் அவரது கவிதை முயற்சிகளின் ஆழ, அகலத்திற்கு நியாயம் செய்யாது; அவர் இலங்கைப் போரின் சாட்சியாக வந்தமைந்த ஒரு கவிஞர்தான்.

ஆனால், அவரைக் கவிஞராக்கியது, போர் மட்டுல்ல. அவரது பெரும்பாலான கவிதைகள், பாரிய மனிதப் பிரச்சினைகள் - மானுட வாழ்க்கையினதும், நாகரிகத்தினதும் விழுமியங்கள் என்பவற்றுடன் - அன்பு, நெருக்கமான உறவு என்பவற்றிலும் கரிசனை காட்டுகின்றன எனவும், அவரது கவிதைகளில் வெளிப்படும் மிக முக்கியமான, கருப்பொருட்களான காதல், வன்செயல், இலங்கையில் யுத்தம், கடல் போன்றனவும் அவற்றுள் அடங்கும்' எனவும் பேராசிரியர் எப்லிங்ஸ் கூறுகின்றார்.

மேலும், எழுத்தாளர் சுந்தர ராமசாமி 'சேரனது கவிதைகளில் ஆண்களையும் பெண்களையும் நாம் அடிக்கடி காண்கின்றோம். ஆனால் அவர்கள் அனைவரும் மறைக்கப்பட்டும், நிழற்படமாக்கப்பட்டும் உள்ளார்கள். அவற்றை வெளிக்கொணர எங்களால் முடிந்தவரை நாங்கள் முயற்சி செய்கின்றோம், ஆனால் அது எங்களால் முடியாது. அந்த முயற்சியில் நாங்கள் விரக்தியடைகின்றோம். அந்த விரக்தியே ஒரு கவிஞரின் மாபெரும் வெற்றி' என, சேரனின் கவிதைகள் குறித்து, தமது கட்டுரை ஒன்றில் கூறுகின்றார்.

இவ்வாறாக, சேரனது கவிதைகள் பற்றி, ஏனைய கவிஞர்கள், கல்வியாளர்கள், புத்தியாளர்கள், விமர்சகர்கள் போன்ற பெருந்தொகையானோர் சொன்ன கருத்துகள் ஏராளம் உண்டு. அவையனைத்தையும் பகிர்ந்துகொள்ள, இக்கட்டுரைக் களம் எனக்கு இடந்தரமாட்டாது.

இருப்பினும், மிக முக்கியமான இன்னொருவரது வாக்குமூலத்தினையும் உங்களோடு பகிர்ந்துகொள்ளல் பயன்தரும் என நான் நம்புகிறேன்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், அந்த இன்னொருவர் எழுதிய கவிதைத் திரட்டு ஒன்றில் இது வெளிவந்திருந்தது.

அதற்கு முன்னர், இது நண்பர் காலம் செல்வம் அவர்கள் 99-ஆம் ஆண்டு வெளியிட்ட 12-வது 'காலம்' இதழின் 55-ம் பக்கத்திலும் காணப்படும் ஒரு கவிதையாகும்; 'கவிதை பற்றிய காதலர்களின் உரையாடலின் ஒரு பகுதி.' இதில், காதலி கேட்கின்றாள் -

***'உனது கவிதையைப்பற்றிக் கேட்கலாமல்லவா?***
***இப்போது உனது கவிதையின் இயல்பு என்ன?***
***இலக்கு என்ன?'***

காதலன் கூறுகின்றான் -

***'எனது கவிதை சிக்கலற்றது***
***ஆழமான உணர்ச்சிச் சுழிப்புகளில் அது***
***தன்னுடைய ஆழத்தை இழக்கவில்லை***
***அதற்குப் பல அர்த்தங்கள் கிடையாது***
***நான் எல்லா நேரங்களிலும் அதனை எழுதிவிடலாம்***
***அது தயக்கமற்றது; துணிவில் உரம் பெறுவது***
***பாடபேதம் அற்றது***

***அதனைப் பக்கம் பக்கமாக எழுதிவிடத் தேவையில்லை***
***மலைக்கும் கடலுக்கும் அது உறவற்றது***
***காற்றைப் புணராதது***

***நீ கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும் -***
***சில சிக்கலானவை,***
***சில நகைப்புக்கிடமானவை***
***சில என் இருப்பையே குலைப்பன***
***சில ஒருவருக்குமே புரியாதவை***
***சில பொறாமையால் விளைவன***
***சில என்னைப் புறம் காண்பவை***

***அது தரும் மறுமொழி: ஒரு மெல்லிய முறுவல்***

***என்றாலும்***
***அதன் ஆயிரக் கணக்கான வார்த்தைகளையும்***
***எண்ணற்ற படிமங்களையும்***
***அளவற்ற சந்தத்தையும்***
***எல்லாவற்றிற்கும் மேலாக, அதன் பொழிப்பையும்***
***நான் உனக்குத் தரமுடியும்:***

***உன் நேசத்தில் உருகும் என் நெஞ்சு'***
என்று முடிவடைகின்ற கவிதை, அது.

இது வேறுயாரும் எழுதிய கவிதையல்ல - சேரன் தொண்ணூறுகளில் எழுதிய கவிதை. இக்கவிதையிலிருந்து இரண்டு முக்கிய விடயங்களை ஊகிக்க முடிகின்றது.

முதலாவது, சேரன் மீதும் அவரது கவிதைகள் மீதும் அவ்வப்போது முன்வைக்கப்படும் விமர்சனங்களையும், கண்டனங்களையும் கடந்துசெல்லவென, பொதுவாகவே அவர் பயன்படுத்தும் அந்தப் புன்முறுவல் அல்லது புன்னகை; இரண்டாவது, அத்தகைய விமர்சனங்கள், கண்டனங்களுக்கும் மத்தியிலும், தமது கவிதைகள் மீதான அவரது தன்னம்பிக்கையுடன் கூடிய சுயமதிப்பீடு.

மொத்தம் 102 கவிதைகளை உள்ளடக்கியிருக்கும் 'காஞ்சி' என்ற இக்கவிதைத் திரட்டின் முதலாவது கவிதை, கடைசிக் கவிதை என்பன உட்பட, ஆங்காங்கே பல கவிதைகளும் கவிஞரின் புன்னகையையே காவலரண்களாகக் காவி வந்துள்ளன.

உதாரணமாக ஒரு கவிதை:

***பார்சிலோனாவில் ஒரு சிறிய அழகிய***
***புத்தக நிலையம்***
***கவிதை நிகழ்த்திய பின்***
***இறங்குகிறேன்.***
***காலடி தளர்கிறது.***

***'உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?'***
***மூன்று ஆண்டுகள் முன்பு என்பதால்***
***கேட்டவரின் முகம் முற்றாக நினைவில் இல்லை***
***அவரின் வாசனை மட்டும் தெரியும் -***

***'கேளுங்கோ'***

***இவ்வளவு அவலம்,***
***இனப்படுகொலை,***
***சொற்கள் தாங்காத துயரம்***
***இவற்றின் நடுவே***
***எங்கிருந்து வருகிறது புன்சிரிப்பு?***

ஆமாம்... ஆயிரம் வலிகளை உள்ளடக்கியவாறு, நகைத்துக்கொண்டே நகர்வது அவ்வளவு எளிதல்ல. இன்னல்களையும் இழிமொழிகளையும் புன்னகையுடன் கடந்து செல்ல, நண்பர் சேரன் எப்படிப் பழகிக்கொண்டுள்ளார் என நான் அடிக்கடி எண்ணி வியப்பதுண்டு.

உண்மையில் பிறரைக் காயப்படுத்தாத புன்னகையும், தன் காயத்தை மறைக்கும் புன்னகையும் பேரழகுதான்!

அதேவேளை, சேரனின் கவிதைகளிலும் சரி, தனிப்பட்ட வாழ்விலும் சரி, இப்புன்னகையே அவரது பலமும் பலவீனமும் என, சில தருணங்களில் நான் எண்ணுவதுண்டு!

புதுக்கவிதையின் பிதாமகர் என மதிக்கப்பட்டு வரும் எஸ்ரா பவுண்டு, புதுக்கவிதையின் 4 பொதுத்தன்மைகளைச் சொல்லி வைத்திருக்கின்றார். அதில் ஒன்று படிமங்களைப் பயன்படுத்தல். ஆனால் கவிதைகளிலும் சரி, கட்டுரைகளிலும் சரி, இப்போதெல்லாம் வலிந்து புகுத்தப்படும் இப்படிமங்கள் கடைச்சரக்காக மலிந்துபோய், நாறிக் கிடக்கின்றன.

இதனையே சேரன் தனது 'மொழி' என்ற 42-வது கவிதையில் -

***இதுவரையும் நான் அறியாத சொல்***
***எனக்குச் சொல்லியது***
***படிமத்தால் என்னைக் கொல்லாதே***
***மொழிக்குத் திரும்பு***
***'மொழி'***

மனமும் மொழியும் உச்சநிலையைச் சென்றடைவதுதான் கவித்துவம். கவிதைக்கு அடிப்படை வளமாகவும் வாகனமாகவும் இருப்பது மொழி. எனவே 'மொழிக்குத் திரும்பு' எனச்

சேரன் கூறுவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

இதைக்கூட, நவீன கவிதையினது வளர்ச்சியின், இன்னோர் படிநிலை எனலாமல்லவா?

இனி, இந்த நூலின் 3-வது கவிதையிது -

**கார்த்திகை**

***எந்தத் தீப்பெட்டியாலும்***
***எல்லா நெருப்புப் பொறிகளாலும்***
***ஏற்றிவைக்க முடியாத ஒரு விளக்கை***
***அம்மா கடவுளிடம் கொண்டு சென்றாள்***

***அவர் சொன்னார்:***

***மகளே,***
***குருதியில் எரியும் கனவுக்கு***
***விளக்கேற்ற வேண்டாம்;***
***இறப்பும் நினைவும் ஒளியில் அல்ல***
***'அறத்தில்'***

என் இதயத்தை வருடிச் சென்ற இன்னொரு கவிதை இந்த நூலின் 17-வது கவிதை -

**படையாள் பாடல் –1**

***வீழும் மலர்களின் இதழ்கள் எல்லாம் நிலத்துக்கு***
***ஒன்று மட்டும் தனித்துப் பறக்கிறது***
***அதுதான்***
***சாவின் மணத்தைக் காவிச் செல்லும்***
***காற்றின் குரலோசை***

இவ்வாறாக, 'காஞ்சி' சேரனின் 102 பிற்காலக் கவிதைகளை 147 பக்கங்களுக்குள் உள்ளடக்கியிருக்கும் நூல்; சுமார் 2 மணி நேரத்துள் படித்து முடிக்கக்கூடிய நூல்; முடித்த பின் மீண்டும் மீண்டும் படிக்கவேண்டுமென்ற ஆவலைத் தூண்டும் நூல்.

இந்நூல் தரும் அழகியல் விழுமியங்களும் மகிழ்வின்பமும், அலாதியானவை.

பசுவையா எனும் பெயரில் சுந்த ரராமசாமி, முன்னர் ஒரு முறை தமது கவிதை ஒன்றின் வழியாக -

***'எழுது***
***உன் கவிதையை நீ எழுது***
***உன் காதல் பற்றி***
***கோபங்கள் பற்றி***
***உன் ரகசிய ஆசைகள் பற்றி.... '***

என விடுத்திருந்த வேண்டுகோள் போல,

சேரன் தனது சொந்த அனுபவங்களையும் கதைகளையும் கற்பனைகளையும் காதல்களையும் மோதல்களையும் மோகங்களையும் கோப-தாபங்களையும் உறவுகளையும் பிரிவுகளையும் நாம் இதுவரை கண்டும் கேட்டும் அறியாத ஏனைய பல புதிய கருப்பொருட்களையும் கூட - மிகுந்த தன்னம்பிக்கையுடனும் சுயமதிப்பீட்டுடனும், புதுமையான உத்திமுறைகளைப் பயன்படுத்தி, இத்திரட்டினைக் 'காஞ்சி' என்ற பேரில் எமக்கு ஆக்கி அளித்திருக்கின்றார்.

சேரனின் கவிதை நூல்களென, இரண்டாவது சூரிய உதயம், யமன், கானல் வரி, எலும்புக்கூடுகளின் ஊர்வலம், எரிந்து கொண்டிருக்கும் நேரம், நீ இப்பொழுது இறங்கும் ஆறு, மீண்டும் கடலுக்கு, காடாற்று என 8 நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. இது அவரது 9-வது நூலென நம்புகிறேன்.

அவரது கவிதைகள், சிங்களம், கன்னடம், மலையாளம், ஸ்வீடிஷ், டென்னிஷ், ஜேர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.




நானறிந்தவரை, சுமார் 7-க்கும் மேற்பட்ட வேற்று மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட தமிழ்க் கவிதைகளின் சொந்தக்காரன் சேரனாகவே இருக்க முடியும்.

எனவேதான், சேரன், தமிழ் இனத்துக்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் மட்டுமல்ல - முழு உலகுக்கும் கிடைக்கப்பெற்ற விலை மதிப்பற்ற சொத்து எனக் கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமும் கிடையாது!



navam.k@thaiveedu.com

# ‘ஆரையூர் அருள்’

## சிறப்புப் பக்கம்



# கூத்துக்கலைக் காவலர்

## கூத்திலக்கியம் பற்றிய பார்வை

– ம. கேதீஸ்வரன்

ஈழத்திருநாட்டின் கிழக்குத் தமிழகத்தில் தொன்மையும் பழமையும் பண்பாடும் மங்காது மரபுடமை காக்கின்ற மட்டக்களப்பு மண்ணின் மைந்தன்; ஆரையம்பதி தந்த அருளாளன்; ஆரையூர் அருள் என்று சிறப்பித்து அழைக் கப்படும் மூ. அருளம்பலம், அன்னைத்தமிழ் மீது கொண்ட அடங்காத தாகத்தால் அவர் தந்த படைப்புக்கள் அத் தனையும் அற்புதமே. அதிபராக, ஆசிரியராக, கலைஞ னாக, கவிஞனாக பக்தி பாவலராக, அண்ணாவியாராக என்று பல தளங்களில் நின்று தமிழ் காக்கும் காவலனாக மிளிர்கின்றார், எனில் அது மிகையாகது. ‘தில்லைக்கூத்தனே’ என்று மாணிக்கவாசகப்பெருமான் சிவபுராணத்தில் இறைவ னைச் சிறப்பித்து பாடுகின்றார். ‘கூத்து’ எனும் சொல் புராண, இதிகாச, சங்க இலக்கியங்களில் ஆடற்கலைக்கு கொடுக்கப்பட்ட பழந்தமிழ்ப்பெயராகும். இறை வன் உலக உயிர்களை உய்விக்கும் பொருட்டு எழு வகைக் கூத் துக்களை ஆடியதால் ‘கூத்தன்’ என அழைக்கப்படு கின்றார். இவ்வாறு தொன்மையும் பழமையும், கொண்டு

விளங்கும் கூத்துக்கலையின் காவலனாக நின்று மிளிர்கின்றார் அருளம்பலம். இவர் கூத்துக்களை ஆடியும் அவற்றை பழக்கியும் வந்துள்ள அதேவேளை, கூத்துக்கள் எழுதியும் தன்பணி செய்து வருகின்றார்.

இவர் எழுதிய கூத்துக்களை கதை நிகழும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு புராண காலம், இதிகாச காலம், காப்பிய காலம், நவீன காலம் எனப் பிரித்து நோக்கலாம். அந்தந்த காலத்திற்கு பிசகாத வகையில் கூத்துக்களின் கதையோட்டத்தைக் கச்சிதமாக கையாண்டுள்ளார். அதனடிப்படையில்,

### புராண காலக்கதைகள்:

இறைவனும் புலவனும், இராவண சொரூபம், இரணிய சங்காரம், சூரசங்காரம், சத்தியவான் சாவித்திரி, மானீன்ற வள்ளி, மறலியை வென்ற மங்கை, காத்தவராயன், அரிசந்திர காண்டம், அரிச்சந்திர மயான காண்டம்.

### இதிகாச காலக்கதைகள்:

இடும்பன் வதம், குருதட்சணை, மாதுசா பட்டாபிசேகம், லவகுசா காப்பிய காலக்கதைகள், கண்ணகி சபதம் நவீன காலக் கதைகள், பணச்செருக்கு, மங்கள தீபம், மட்டக்களப்பு மகிமை, மனிதம் மாறியதால், கல்யாணப்பரிசு, ஞானம் பிறந்தது, குருபக்தி, நாகரிகமோகம், உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களும் முதலானவற்றைக் கூறலாம். ஆரையூர் அருள் தனது கலையுலகப் பயணத்தில் மொத்தம் 26 கூத்துக்களை எழுதியுள்ளார். இது ஈழத்து கூத்துக் கலைக்கு கிடைக்கப்பெற்ற பெருங்கொடையாகும். இவர் எழுதிய கூத்துக்களில் 11 வடமோடிக்கூத்துக்களும் 09 தென்மோடிக்கூத்துக்களும் 03 சிந்துநடைக்கூத்துக்களும், மூன்று இசை நாடகமும் அடங்குகின்றன. இவற்றுள் வடமோடி, தென்மோடி, சிந்துநடை கூத்துக்களுள் பணச்செருக்கு, மங்களதீபன், மனிதம் மாறியதால், கல்யாணப்பரிசு, ஞானம் பிறந்தது, நாகரீக மோகம், உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களும் போன்ற கூத்துக்கள் சமூகப்பிரச்சினை, சமூக எழுச்சியை பறைசாற்றுவனவாக அமைந்துள்ளது.

கூத்துக்கலையின்பால் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அருள், 'இறைவனும் புலவனும்', 'இராவண சொரூபம்' எனும் இரு தென்மோடிக் கூத்துக்கள் அடங்கிய நூலைத் 'தமிழ் கூத்தியல்' எனும் நாமத்தோடு 2020-ஆண்டு வெளியிட்டமையும் குறிப் பிடத்தக்கதாகும். 1962-ஆம் ஆண்டு பேராசிரியர் சு. வித்தியானந்தன் 'அலங்காரரூபன்' எனும் தென்மோடிக்கூத்தை தொகுப்பித்து நூலுருவாக்கினார். 1969-ஆம் ஆண்டு பண்டிதர் வி.சீ. கந்தையா 'அனுருத்திரன்' தென்மோடிக்கூத்தும் 'இராமநாடகம்' வடமோடிக்கூத்தும் தொகுப்பித்து நூலுருவாக்கினார். ஆனால், ஆரையூர் அருள் தனது

**இப்போதும் இவர் தனது வயதுக்குச் சவால்விடும் வகையில், துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து கூத்துக்களைப் பார்வையிட்டு வருகிறார். அதேசமயம் தான் எழுதிய கூத்துக்களைப் பழகியும் கூத்தைச் செம்மையாக்கம் செய்தும் மரபு மாறாத வகையில் கூத்து நிகழ்த்தப்பட வேண்டும் எனும் முனைப்போடும் செயற்பட்டு வருகின்றார்.**

புலமையால் எழுதி வெளியிட்ட கூத்திலக்கியம் என்பதோடு, இதுவே கிழக்கிலங்கையின் முதலாவது தென்மோடிக்கூத்து நூல் எனவும் கருதலாம்.

1997-ஆம் ஆண்டு வெளியாகிய தினக்குரல் பத்திரிகையில் சண். தவராசா புலவரை இவ்வாறு விழிக்கின்றார். 'நாட்டுக் கூத்து அருகி விடாமல் காக்கும் அருளம்பலம், தன் இரத்தத்தில் ஊறிய இக்கலையை நவீனப்படுத்தி நவீன நாட்டுக் கூத்தாக மாற்றி, நாடக மேடைகளில் அவற்றை மேடையேற்றி, அதனை ஜனரஞ்சகப்படுத்தி வரும் வல்லோன். மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராக இவர் கடமையாற்றியபோது, இவருடைய 'சுந்தரி விடுதூது' எனும் நாட்டுக் கூத்து தமிழ்த்தினப் போட்டியில் முதலிடத்தினைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது' எனப் பதிவு செய்கின்றார்.

1994-ஆம் ஆண்டு வெளியாகிய தினக்குரல் பத்திரிகை, ஆரையூர் அமரனின் வித்தாரத்தை இவ்வாறு குறிப்பிடுகின்றது. 'நாட்டுக்கூத்து வளர்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்த அருளம்பலம் எனவும், ஆரையம்பதியில் வாழையடி வாழையாக கலைத்தொண்டு புரிந்துவரும் ஒரு கலைஞர் எனவும் 1974-ஆம் ஆண்டு பொலநறுவை முத்துக்கல் தமிழ் வித்தியாலய மாணவர்களைக் கொண்டு 'வள்ளி திருமணம்' எனும் வடமோடிக்கூத்தை ஆடி அரங்கேற்றம் செய்து பொதுமக்களின் பெரும் பாராட்டினைப் பெற்றவர்' எனவும் குறிப்பிடுகின்றது.

1992-ஆம் ஆண்டு 'வழிதவறிய வஞ்சி' எனும் வடமோடி நவீன நாட்டுக்கூத்தை தயாரித்து நெறியாள்கை செய்ததுடன் வஞ்சியின் தாயாக பாத்திரமேற்று ஆடி அரங்கேற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கூத்தானது மட்டக்களப்பில் பல பகுதிகளில் ஆடப்பெற்று மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. 1993-இல் 'அனுமன் கண்ட சீதை' என்ற இதிகாச வடமோடிக் நாட்டுக் கூத்தை தயாரித்து நெறியாள்கை செய்து, சீதையாக பாத்திரமேற்று நடித்து அரங்கேற்றம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. 1994-ஆம் ஆண்டு 'மங்களதீபம்' என்ற வடமோடி என்ற நவீன நாட்டுக்கூத்தை எழுதி நெறியாள்கை செய்து தருமசொருபி எனும் தந்தையின் பாத்திரமேற்று ஆடி அரங்கேற்றம் செய்து, தனக்கே ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தியுள்ளார்.

1997-ஆம் ஆண்டு மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் முதன்முதலாக பிரதேச சாகித்தியவிழா நடத்தப்பட்டபோது நாட்டுக் கூத்துப் போட்டியும் சேர்க்கப்பட்டது. அப்போட்டியில் ஆரையம்பதியில் பண்டுதொட்டு நாட்டுக்கூத்து ஆடப்பட்டு வந்தபோதிலும் அப்போட்டியில் பங்குபற்ற எந்த கலைஞர்களோ குழுக்களோ விண்ணப்பிக்காத துர்ப்பாக்கிய நிலை இருந்தது. மண்ணின் பெருமை காக்க 'மறிலியை வென்ற மங்கை' எனும் தென் மோடிக் கூத்தை எழுதி ஆரையம்பதி கலைஞர்களைக் கொண்டு அதனை நெறியாள்கை செய்து 'சாவித்திரி' எனும் பெண் பாத்திரத்தை தாமே ஏற்று நடித்து, நடுவர்கள்,



பார்வையாளர்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டார். சாகித்திய விழாவிலே மீண்டும் அக்கூத்து ஆடப்பட்டு அமோக வரவேற்பை பெற்றது.

ஆரையூர் அருள் கூத்துப்பனுவலோடு மட்டும் நின்றுவிடாது கூத்துச் சார்ந்த ஆய்வுக்கட்டுரைகளை எழுதுவதிலும் பின் நிற்வில்லை. அந்தவகையில் 'மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி கூத்துப்பிரதிகள்' என்னும் கட்டுரையில், கூத்துக் கையெழுத்துப் பற்றிய தெளிவான விளக்கம், கூத்து கையெ ழுத்துப்பிரதிகளைக் கையாளும் விதம், வாய்மொழி எழுத்துரு மரபின் தாளக்கட்டுக்கள் முதலானவற்றை விளக்குகிறார். அத்துடன் இக்கட்டுரையில், இரு வகையான கூத்துப்பாணி களும் கூத்துப்பிரதிகளும், அச்சுவாகனத்தின் செல்வாக்கும் கூத்துப்பிரதிகளும், சமூகச்சூழலின் போக்கும் கூத்துப்பிரதி களும், கூத்துப்பிரதிகளும் கையோட்ட சீராக்கமும் போன்ற தலைப்பின் கீழ் மட்டக்களப்பு கூத்து குறித்து விரிவாக ஆய்வு செய்கின்றது. இவ்வாய்வுக்கட்டுரையில் மட்டக்களப்பு தமிழகத்தில் 132 வடமோடிக் கூத்துக்களும் 50 தென்மோடிக் கூத்துக்களும் இருந்தமையையும் எடுத்துக்காட்டுகின்றார்.

2018-ஆம் ஆண்டு வெளிவந்த தேறல் சஞ்சிகையில் தென் மோடிக்கூத்தில் சிருங்கார இரசனை எனும் கட்டுரையில், தலைவன் தலைவிக்கிடையிலான, தலைவி தோழிக்கிடை யிலான தர்க்க தருவில் சிருங்காரசுவை மேலோங்கியுள் ளமையை இவ்வாறு விபரிக்கினறார்.

தரு

***'நன்ன நன்ன நான நன்ன நானா -***
***நன்ன நான நன்ன நான நன்ன நானா பாங்கியரே***
***நானுரைக்கச் கேளும் -***
***இரவு தூங்கு மஞ்சும் மீதிலுறங்கும் போது***
***வாங்குசிலை மதனைப் போலொருவன் -***
***எந்தன் வீங்குதனம் பிடித்திடக்கண்டேன்***
***முக்தோடே முகத்தை வைத்துக் கொஞ்சி -***
***முலை அகத்தோடே நகத்தை வைத்துக் கெஞ்சி - வெகு***
***அகத்தோடே அனைந்தாரடி வஞ்சி...'***

'மண்முனைப் பற்று பிரதேசத்தில் ஆரையம்பதியில் கூத் துக்கலை' எனும் ஆய்வுக்கட்டுரையில் ஆரையம்பதிக் கிரா மத்தின் நாட்டுக்கூத்துக்கலைகளையும் அங்கிருந்த அண் ணாவிமார்களையும் மத்தாளக் கலைஞர்களையும் எடுத்து ரைக்கின்றார். 'முத்திரைப்பல்லவி' எனும் கட்டுரையில் அனு ருத்திரன், இந்திரன், பூங்காவனம், சாம்பேந்திரன், அலாங்க ரூபன், வாளவீமன் போன்ற கூத்துக்களின் முத்திரைப்பல்ல வியின் தாக்கம் பற்றி விபரிக்கின்றார்.

2014-ஆம் ஆண்டு தேசிய பல்சுவை குடும்பச் சஞ்சிகையான தென்றல் சஞ்சிகையில் 'மட்டுநகர் மறவா நாட்டுக்கூத்து நாயகன் த. நல்லலிங்கம்' எனும் கட்டுரையில் த. நல்ல லிங்கம் நாட்டுக்கூத்து கலைஞர் பற்றி இவ்வாறு பதிவு செய் கின்றார். '05.10.1938 ஆண்டு மட்டுநகரின் வடபாலுள்ள வாகரையில் பிறந்து சென் செபஸ்தியார் பாடசாலையில் கற்று எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்தி பெற்று ஆசிரியர் பணிக்கு அமர்த்தப்பட்டார். தான் கல்வி கற்கும் ஏழாவது வய திலிருந்தே கலையுலகில் கால் வைத்தார். செல்லத்தம்பி அண்ணாவியார், வந்தாறுமூலை செல்லையா அண்ணாவி மார்களின் 'கற்பலங்காரி', 'வாளவீமன்' கூத்துக்களில் முறையே சிவதருமன், வாளவீமன் பாத்திரமேற்று கூத்தாடி யவர். இவரின் பாத்திரப்பொருத்தம் ஆடல், பாடல் என்பன அனைவராலும் பாராட்டப்பட்டன. 1965-இல் கர்ணன் போரில், கர்ணனாக பாத்திரமேற்று நடித்த இவர், 1970-களில் மார்கண் டேயர் எனும் கூத்தைப் பழக்கி, அதில் பரிகாரி பாத்திரமேற்று நடித்தார். இக்கூத்து மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பிரிவில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டதும் நினை வுகூரத்தக்கது.

கலையுலகின் பல்துறைப்பட்ட நாயகனான ஆரையூர் அருள் கலைகாத்த கலைஞர்களை மதித்து அவர்களுக்கு மகுடம் சூட்டுவதிலும் பின்னிற்காதவர். தற்போது இவர் தனது வய துக்குச் சவால்விடும் வகையில், துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து கூத்துக்களைப் பார்வையிட்டு வருகிறார். அதேசமயம் தான் எழுதிய கூத்துக்களைப் பழகியும் கூத்தைச் செம்மையாக்கம் செய்தும் மரபு மாறாத வகையில் கூத்து நிகழ்த்தப்படவேண்டும் எனும் முனைப்போடும் செயற் பட்டு வருகின்றார். இயங்கியல்வாதியாகவும் கூத்துக்கலை காக்கும் காவலராகவும் விளங்கும் இவர் மட்டக்களப்பின் தனித்துவம் வாய்ந்த கூத்துக் கலைஞராகவும் சிறப்பிக்கப்ப டுகிறார்.



kethees.m@thaiveedu.com




# தமிழ் இலக்கணத்தை நன்கு கற்றறிந்த மரபுவழிக் கவிஞர்

*– வெல்லவூர்க் கோபால்*

மட்டக்களப்புத் தேசத்தில், தளம்பலற்ற ஒரு பல்சமூகக் கட்டமைப்பை உள்ளடக்கிய தனித்துவத்தை நீண்டகால வரலாறாக கொண்ட ஒரு பழந்தமிழ் கிராமமே ஆரையம்பதி. இங்கு வாழுகின்ற சமூகங்கள் வாழ்வியலிலும் வழிபாட்டிலிலும் தங்கள் தங்கள் மரபுவழிப்பட்ட பண்பாடுகளைத் தொடர்ந்தாற்போல் பேணிவந்த நிலையிலும் சமூக ஒற்றுமையினையும் கட்டிக்காக்கவே செய்தனர். ஒப்பீட்டளவில் சிறந்த கல்வியாளர்களையும் பல்துறைசார் கலைஞர்களையும் பெருமளவு கொண்ட கிராமமாகவே இன்றும் ஆரையம்பதி திகழ்கின்றது.

இக்கிராமம் தந்த தனித்துவம் மிக்க பல்துறைக் கலைஞரே மூத்ததம்பி அருளம்பலம் எனும் இயற்பெயர் கொண்ட 'ஆரையூர் அருள்' அவர்கள். ஓய்வுநிலை அதிபரான இவர் ஒரு நற்றமிழ் அறிஞருமாவார்.

பாவினத்தை மூன்றாக வகைப்படுத்துவர். பாடல், செய்யுள், கவிதை என்பனவே அவை. முற்காலத்தில் பாடல்கள் யாவும் இறையருளாலேயே பாடப்பட்டவையென்றும் கூறுவதுண்டு. பொதுவாகப் பார்க்கும் தன்மையில் ஆரையூர் அருளின் படைப்புகள் பெரும்பாலும் பாடல் வகையுள் உள்ளடங்குவதை அவதானிக்க முடியும். அவரது நூல்களில் மிக முக்கியமாக 742 பக்கங்களை உள்ளடக்கிய இறையின்பப் பாவாரம் மற்றும் வில்லடிப் பாட்டு, பத்தாலய பாவாரங்கள் போன்ற நூல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுபவை. சிறந்த இறைபக்தரான இவரது பாடல்களில் அனேகமானவை பக்தி இலக்கியம் சார்ந்தவையாகவேயுள்ளன. இவரது இறையின்பப் பாவாரம் மற்றும் பத்தாலய பாவாரங்கள் பொதுவாகப் பிரதேசத்தின் வழிபாட்டுத் தலங்களை மையப்படுத்தியவையாகும். மூவாயிரத்துக்கும் அதிகமான பாடல்களைக் கொண்டமைந்த இறையின்பப் பாவாரம் ஒரு வரலாற்றுச் சாதனை எனலாம். கிழக்கிலங்கையின் பல்வேறு சைவத் திருத்தலங்கள் குறித்துப் பாடுகின்ற தன்மையில் அவற்றின் முழுமையான வரலாற்றுப் பின்னணியை நம்மால் இலகுவில் புரிந்துகொள்ளவும் முடிகின்றது.

தமிழ் இலக்கணத்தை நன்கு கற்றறிந்த மரபுவழிக் கவிஞரான ஆரையூர் அருள், தனது பாடல்களில் பொதுவாக யாப்பு, எதுகை, சீர், தளை என்பவற்றுக்கும் மேலாக எளிய தமிழில் சிந்து, பள்ளு, தாலாட்டு, கும்மி போன்ற கிராமிய மெட்டுகளையும் சந்தங்களையும் தனது கவித்துவ வெளிப்பாட்டின் மையமாகக் கொண்டிருப்பதை அவரது அனேக பாடல்களில் தெரியவரும். நமது முன்னவரான மகாகவி பாரதி சாமானியரும் புரிந்துணரும் தன்மையில் கவிதையின் தேவைகளாக இவற்றைக் கையாண்டமையும் அது பின்னர் தொடருவதையும் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமானதாகும். கவித்துவம் மிக்கது கவிதை எனும் வரைவிலக்கணத்தோடு 'உள்ளத்துள்ளது கவிதை... இன்ப ஊற்றெடுப்பது கவிதை' எனும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் கூற்றினையும் ஆரையூர் அருளின் படைப்புகளில் பொருத்திப் பார்ப்பது மிக முக்கியமானதாகும்.

'கவிதை எழுத மிக முக்கியமானது உணர்ச்சி. ஒரு கவிஞர் எதனை இலக்காகக் கொள்கின்றாரோ அதுவே இலக்கிய அறிவாக அவருக்கு மாறிவிடுகின்றது. வாழ்க்கையில் கிட்டும் அனுபவமே அவருக்கு இலக்கிய அறிவைப் புகட்டுகின்றது. கவிஞர் எதையும் கூர்ந்து நோக்கும் இயல்புடையவர். கவிதையானது உணர்ச்சிகளை இதமாக வெளிப்படுத்துவதோடு பிறர் மனதில் நன்கு பதியும் வண்ணம் நயமிகு சொற்களில் அவை அமையவேண்டுமென்பதால் இலக்கியங்களைச் சுவைப்பதன் மூலம் அதற்கான மொழியறிவை நிச்சயம் ஒரு சிறந்த கவிஞரால் பெருக்கிக்கொள்ளமுடியும்' என்ற கோட்பாடு முழுக்க முழுக்க ஆரையூர் அருளுக்குப் பொருந்தி வருதை நம்மால் நிச்சயிக்க முடிகின்றது.

ஆரையூர் அருளின் பாடல்கள் தொடர்பில் ஒரு கணிப்பீடு செய்வதாயின் அவரது உள்ளார்ந்த சிந்தனைகளும் தெளிவான நோக்கமும் சாமானியர்களைச் சென்றடையும் வண்ணம் அவரது கவித்துவம் முன்னிறுத்தப்படுவதை நிச்சயம் உறுதி செய்யலாம். அவரது பணிகள் தொடர்ந்தும் நிலைபெற இறையருள் கிட்டுவதாக!



vlavoorkopal@thaiveedu.com




# ஆரையூர் அருளின் இலக்கியப் பணிகள்

## ஒரு பன்முகப் பார்வை



- இ. குகநாதன்

ஈழத்து இலக்கிய எழுத்து வெளியென்பது நீண்ட வரலாற்று தொடரும், தொடர்ச்சியும் கொண்டது. காலத்திற்கு காலம் குறித்த காலத்தின் பிரதிபலிப்பை அடிப்படையாக வைத்துப் பல இலக்கியங்களும் உருவாகியிருக்கின்றன. இவை வாய் மொழிகளில் இருந்து ஏட்டுப் பிரதிகளாக மாறி பின் அவை அச்சிடல்களாகப் பதிப்புரிமை பெற்று பரிணமித்தன. இன்று இன்னுமொரு படி உயர்ந்து சமூக வலைத்தளங்களும், இணை யத்தளங்களும் இலக்கிய ஆக்கங்களைப் பரவலாக்கம் செய் கின்றன. இவை சார்ந்து சாதக, பாதக நிலைகளும் மற்றுமொரு புறத்தில் அவதானிப்புக்குரியவையாகினாலும் இலக்கிய உரு வாக்குநர்களின் ஆக்கங்களை வெகுஜனப்படுத்தலென்பது இன்றைய சூழலில் இலகுத்தன்மை அடைந்துள்ளது எனலாம். மேலும் தற்காலத்தில் உருவாகும் இலக்கிய படைப்புகளின் தரம், தரமின்மை இலக்கியம் ஒன்று உருவாக்குவதற்கான தேடல், வாசிப்பு, அது சம்மந்தமான ஆய்வுப் புலமை பற்றி யதான வினாக்களையும் முன்வைத்தல் ஆக்கபூர்வமான எழுத் துகளை உருவாக்குவதற்கான ஊக்கியாகக்கூட அமையலாம்.

இக்கட்டுரை யாவரும் அறிந்த, அறிந்தும் இன்றைய பாகுப டுத்தல் கல்விப்புலம் பார்க்கத்தவறிய ஒரு ஆளுமை; இலக் கியவாதி; பன்மை இலக்கியங்களை ஆக்கியோன். ஆழமான அறிவும் அனுபவமுள்ள ஆரையூர் அருளம்பலம் அவர்களின் இலக்கியப் பணி தொடர்பாக ஆராய்கிறது. பன்மைத் தன்மையான ஆளுமையுடைய ஆரையூர் அருளின் இலக் கியம், அவரது எழுத்துகள் இன்றைய உலக இலக்கியங்க ளுக்கு சமதையாக ஒப்பீட்டு பார்க்கக் கூடிய வகையில் பொருத்தலாம். இதற்கு எடுத்துக்காட்டு இவரால் எழுதப்பட்ட 'இறையின்ப பாவாரம்' எனும் நூலாகும். 742 பக்கங்களையும் 3010 பாடல்களையும் கொண்டு ஆக்கப்பட்ட இந்நூல் ஒரு வரலாற்று ஆவணமாக திகழ்கின்றது. இந்நூல் பற்றி தமிழ்த் தந்தி பத்திரிகையில் அறிமுக உரை குறிப்பு ஒன்றினை எழுதிய கவிஞர் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார் '742 பக்கங்களைக் கொண்ட பெரும் கவிதை நூலான இந்நூல் இந்த நூற்றாண்டில் ஈழத்தில் வெளிவந்த மிகப்பெரிய கவிதை நூல் என்ற பெருமையை பெறுகிறது'. (தமிழ்த்தந்தி 25.08.2019).

ஆறு வயதில் சுவாமி விபுலானந்தர் பற்றி கவிதை எழுதி தன்னை ஓர் எழுத்தாளராக வெளி உலகிற்கு காட்டிய ஆரையூர் அருள், பவளவிழா காணும் வயது வரையும் எழுத் துப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் ஒருவராக அனுபவ ஆளுமையாக ஈழத்து இலக்கிய வெளியில் தன்னை அடையாளப்படுத்துகிறார். இவரால் எழுதப்பட்ட இலக்கி யங்களை கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

- சிறுகதைகள்.
- கட்டுரைகள்.
- கவிதைகள்.
- நாடகப் பனுவல்கள்.
- கூத்துப் பனுவல்கள்.
- வில்லுப்பாட்டு பனுவல்கள்.
- பதிப்பித்த நூல்கள்.

இதில் ஒவ்வொன்றும் ஆழமாக பார்க்கப்பட வேண்டியவை. இவர் ஒரு சிறுகதை எழுத்தாளர். பத்தொன்பதுக்கும் மேற் பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவை ஒவ்வொன்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், மலர்கள் மற்றும் போட்டிகளுக் காகவென எழுதப்பட்டவை. அவற்றில் அவள்(1986), சமூதாய தராசு(2000 தினக்கதிர்), மாணவர் மையக் கல்வி(2023 குருகுலம் சஞ்சிகை), பாரம்குறைந்தது(2010 சிகரம் நினைவலைகள்), நினைவலைகள்(2012), ஒற்றுமையே உயர்வு தரும்(2012), பொறாமை வேண்டுமா(2014), தப்புக்கான தண்டனை(2014), தந்திரம் மருந்தால் மந்திரம் வேண்டாம்(2016), அந்த நினைவு (2016), நன்றிக் கடன்(2019), உயர்ந்த உள்ளம்(2019) மன மாற்றம்(2020) மூர்க்கனும் முதலையும்(2022), நன்றும் தீதும் பிறர் தர வாரா(2021), நெஞ்சக நினைவுகள்(2021), வாழ்வளித்த தொழிற்கல்வி(2021), கடுகு சிறிது காரம் பெரிது, அகத்தே அழிந்த ஆசை போன்றவையாகும்.

அதுபோன்று 1998-ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை நாற் பத்தியெட்டிற்கு மேலான கட்டுரைகளை எழுதி வெளியிட் டுள்ளார். இக்கட்டுரைகள் சமூகம் சார்ந்த பிரச்சினைகள், நாட்டாரியல்சார் விடயங்கள், கல்வி சார் விடயங்கள், ஆன்மீகம் மற்றும் பக்தி சார்ந்த விடயப் பொருட்கள், தமிழ் துறவிகளின் பெருமைகள், கலைகள், தொழில்நுட்பம் சார் விட யங்கள், திறனாய்வு என்பவற்றைப் பேசுபொருளாகக் கொண்டவை. இதற்கு சில எடுத்துக்காட்டுகள் மனித சமூகத்திற்கு கணினியின் பங் களிப்பு(2000), கணிதத்துறைக்கு இராமானுஜரின் பங்களிப்பு(2001), இந்து ஆலய அமைப்பும் கிரியை முறைகளும்(2001),அருளாட்சி செய் யும் ஆரையூர்க் கண்ணகை (2003), சைவ சமயத்தில் கண்ணகிவழிபாடு (2004), சைவ சமயத்தில் கணபதி வழிபாடு(2004), விநாயக விரதங்கள்(2005), ஆரையம்பதி ஆகாயப் பேச்சி(2006), முதி யோரைப் புறக்கணிப்பர் சமுதாய விரோதிகள்(2007), சமூதாய முன்னேற்றத்தில் இளைஞரின் பங்கு(2008), அமரர் நல்லையா ஆற்றிய சமூக, பொருளாதார பணிகளும் பயன் களும்(2011), மண்முனைபற்று கிராமிய கலைகள்(2012), நாட்டார் கலை கற்றல் போட்டி(2013), நாட்டார் கலை கள்(2013), மண்முனைப் பற்றுப் பிரதேச பெண் தெய்வ வழிபாடு(2013), நாட்டார் பாடல்கள்(2014), மட்டுநகர் மறவா நாட்டுக்கூத்து நாயகன் த.நல்லலிங்கம்(2014), தென்றல் மாந்திரிக செயல்முறைகள்(2014), இலக்கிய விபரணப் போட்டி(2014), ஏற்ற இறக்கம்(2014), விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூகப்பணி(2018), ஆரையம்பதியில் வீரத்தமிழன் இராவணன்(2018), மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துப்பிரதிகள்(2018), கணபதிப்பிள்ளை அதிபர் அவர் களின் நினைவுப் பாரம்பரியம், தும்புக் கைத்தொழில் (2018), எமது பிரதேச மரபுக் கலைகள்(2020) போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

**ஆறு வயதில் சுவாமி விபுலானந்தர் பற்றி கவிதை எழுதி தன்னை ஓர் எழுத்தாளராக வெளி உலகிற்கு காட்டிய ஆரையூர் அருள், பவளவிழா காணும் வயது வரையும் எழுத்துப் பணியில் தன்னை ஈடுப டுத்திக் கொள்ளும் ஒருவராக அனுபவ ஆளுமையாக ஈழத்து இலக்கிய வெளியில் தன்னை அடையாளப்படுத்துகிறார்**

சிறு வயதிலிருந்து இவரது கவிதையாக்க பணி தொடர்ந் தாலும் புலமைசார் எழுத்துகள் பொதுவெளி வெளியிடல் களாக, இவரை ஒரு கவிஞராக தமிழ் இலக்கிய உலகுக்கு அடையாளம் காட்டிய சஞ்சிகையாக 1992-ஆம் ஆண்டு வெளிவந்த 'கிழக்கொளி'யைக் கூறலாம். இம்மலரில் இவர் எழுதிய 'பாரதி நீ மீண்டும் பிறந்திருப்பது நன்று' எனும் கவிதையே இவரை ஒரு கவிஞராக இலக்கிய உலகுக்கு அடையாளம் காட்டியது. இவ்வாறு நாற்பதுக்கு மேற்பட்ட கவிதைகள் இவரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் பல போட்டிகளில் வெற்றியீட்டிய கவிதைகளாகவும் இவை உள்ளன. சமூகம், கலை, ஆன்மீகம், பக்தி, தமிழறி ஞர்கள் எனப் பல்வேறு பாடுபொருள்களை இக்கவிதை உட் கொண்டுள்ளன. அவற்றில் சில கவிதைகள் கீழ் வருகின்றன: ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும்(1996), வித்தகன் விபுலா னந்தன்(1999), மண்முனைப் பற்றெழிலாள்(2003), தாயவள் ஏங்கி நிற்கிறாள்(2006), கவி(2009), மண்முனைப்பற்றுச் சிறப்பு(2009), சிறுவர் உரிமை (கும்மி பாடல் -2010) ஆரையூர் அமரன்(2010), தென்றல் பேசுது(2011), கவிஞர் திரு.க.அன்ப முகன் பாராட்டுப் பாவோலை(2011).

இவர் நாடக பனுவல்கள் எழுதுவதில் சிறந்தவர். 19 நாட கங்களை எழுதியதாக அறியமுடிகின்றது. 1970-களில் இதிகாச. புராண, சமூக நாடக ஆக்கத்தின் ஊடாக தன்னை ஒரு நாடக பனுவல் ஆசிரியராக அடையாளப் படுத்திக் கொண்ட இவர் கீழ்வரும் நாடகங்களை எழுதியுள்ளார் இவை சமூகம், வரலாறு, பக்தி, புராண மென பல கருப்பொருட்களைப் பனுவலின் உட்கிடைக்கைகளாகக் கொண்டவை. இவற் றில் சமர்ப் பணம்(2019), நல்லதம்பி (1973), ஒரே தாய் பிள்ளை(1975), புதிய விதி சமைப்போம்(1979), குந்தி யின்வரம்(1981), சிலைகளும் சிரிக்க வைக்கும்(1981), அளவான குடும்பம் (1982), திருநாவுக்கரசர்(1986), பெரி யோரை கனம் பண்ணுவோம், மரம் வளர்ப்போம்(1990), தியாக தீபம் (1991), கல்வியே கலங்கரை விளக்கு(1991), ஊர்வசி பெற்ற சாபம்(1993), முயற்சி திருவினையாக்கும்(1999) போன்றவற் றை எடுத்துக் காட்டலாம்.

இவரது இலக்கிய முயற்சியில் அடுத்து கூத்து பனுவலாக்கச் செயற்பாடுகளையும் எடுத்துக் கூற வேண்டும். குறிப்பாக மட் டக்களப்பின் தனித்துவமான கலை அடையாளமாக காணப் படும் வடமோடி, தென்மோடி கூத்துகளை எழுதும் வாண்மையும் இவரிடம் உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் 17-ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இருந்து ஆடப்பட்டு வரும் கூத்து இற்றைக்கு வரை தொடர்கிறது. மட்டக்களப்பில் 200-இற்கும் மேற்பட்ட வடமோடி, தென்மோடி கூத்துப் பனு வல்கள் ஆற்றுகைத் தளத்தில் காணப்படுகின்றன. பலமான அரங்காகவும் மக்களிடம் எளிமையாக தொடர்பு கொள்ளும் கலை வடிவமாகவும் காணப்படும் கூத்து அதன் பனு வல்களை ஏட்டு பிரதிகளாகவும், கையெழுத்து பிரதிகளா கவுமே பின்வருவோருக்கு பரிமாற்றம் செய்து வந்தன. இப்பரி மாற்றத்துக்கான நுட்ப முறைகளும் காணப்படுகிறன. கூத்துப் பனுவல்களை எழுதி பதிப்பித்தோர் மிகக் குறைவு. தாமே எழுதி அதனை நூலாக வெளியீட்ட புலவர் ஒரு சிலருள் இவர் முக்கியமானவராகக் கொள்ளப்படுகிறார். இவரால் இருபத் தியாறு கூத்துப் பனுவல்கள் எழுதப்பட்டுள்ளன.

ஆரையூர் அருளம்பலம் அவர்களின் இலக்கிய ஆளுமையை மேலும் விரிவுபடுத்த இவரால் எழுதப்பட்ட வில்லுப்பாட்டு பனுவல்களையும் இங்கு சுட்டிக் காட்டலாம் 22 வில்லுப்பாட்டுகள் இவரால் எழுதப்பட்டன. இவ்வில்லுப்பாட்டுக்கள் தேசிய, மாகாணமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. 1975-ஆம் ஆண்டு இவர் எழுதிய 'வித்தகர் விபுலானந்தர்' எனும் வில்லுப்பாட்டுடன் இவரது இலக்கிய பணி தொடர்ந்தது எனலாம். 2021-ஆம் ஆண்டு ஆரையூர் அருளின் உருவாக்கத்தில் முனைக்காடு நாகசக்தி கலைமன்றத்தினரால் வெளியிடப்பட்ட 'வில்லடிப்பாட்டு' மிக முக்கியமான ஒரு நூலாக அமைகின்றது. இதுவரை மாவட்ட, மாகாண, தேசிய ரீதியாக போட்டிகளில் கலந்துகொண்ட 20 வில்லுப்பாட்டுகளைத் தொகுத்து இந்நூல் ஆக்கம் பெற்றிருக்கின்றது. பேராசிரியர் யோகராசா அணிந்துரையினை வழங்கியுள்ளார். மதிப்பீட்டுரையினைச் சிரேஸ்ட விரிவுரையாளர் ரூபி வலன்ரினா பிரான்சிஸ் எழுதியுள்ளார். இதில் வில்லுப்பாட்டுக்கான விதிகள் எனும் ஒரு இயலும் ஆசிரியரால் இணைக்கப்பட்டுள்ளது. இப்பாடல்கள் சமகால வாழ்வியலுக்குரியவை. அத்துடன் வரலாற்று விடயங்களை சமகாலத்திற்கு பொருத்திப் பார்க்கவும் பொருத்தப்பாடு உடையவை.

அதன் அடிப்படையில் மேற்கூறப்பட்ட இலக்கிய படைப்புகள் பல புத்தகங்களாக நூலுருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டாலும் பல பிரதிகள் இன்னும் அச்சிடலுக்கு உட்படாதவையாக உள்ளன. இவர் எழுதி பதினொரு நூல்கள் இன்றைவரை வெளிவந்துள்ளன. கல்லடி உப்போடை பேச்சியம்பாள் பாடல்கள்(2001), மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகி அம்பாள் பாடல்கள்(2002) புன்னச்சோலை பத்திரகாளியம்பாள் பாடல்கள்(2006), கல்லடி உப்போடை நொச்சிமுனை சித்தி விநாயகர் பேச்சியம்மன் ஆலய பாடல்கள்(2010) ஓங்காரானந்த சரஸ்வதி சரிதம்(2010) பேச்சியம்பாள் அவதாரமும், ஆலயமும்(2012) கிராமத்து உள்ளங்கள்(2013), இறையின்ப பாவாரம்(2016), தமிழ் கூத்தியல் (2020), வில்லடிப்பாட்டு(2021), பத்தாலய பாவரங்கள்(2022) முதலானவற்றைக் இவ்வகையில் கூறலாம். கல்லடி உப்போடை நொச்சிமுனை சித்திவிநாயகர், பேச்சியம்பாள் பாடல்கள் எனும் நூல் 2001-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. கும்மி, காவடி, தாலாட்டு என 178 பாடல்களைக் கொண்டு 72 பக்கம் உடையதாக இந்நுநூல் ஆக்கம் பெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகி அம்மன் பாடல்கள் எனும் நூல் 2002-ஆம் ஆண்டு நூலுருப் பெற்றது. 32 பக்கங்களைக் கொண்ட இந்நூல் காவடிப் பாடல்கள்-10, கும்மிப் பாடல்கள்-27, தாலாட்டு பாடல்-34, புதுப்பாடல்கள்-6 என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. எளிமையான கிராமிய மெட்டுக்களில் அழகுத் தமிழில் இவை எழுதப்பட்டிருக்கின்றன.

புன்னைச்சோலை பத்திரகாளி அம்பாள் பாடல்கள் எனும் நூல் 2006-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. கும்மி, தாலாட்டு, காவடி, வேறு பாடல்கள் என்ற வரையறைக்குள் இந்நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது. 28 பக்கங்களை கொண்டவையாக இந்நூல் அமைகின்றது. அதே போன்று கல்லடி உப்போடை பேச்சியம்மாள் பாடல்கள் எனும் நூல் 2019-ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலிலும் கும்மி, காவடி, தாலாட்டு, பக்திப் பாடல்கள் என்பன காணப்படுகின்றன. அத்துடன் இவரது 'ஓங்காரானந்த சரஸ்வதி சபதம்' என்னும் நூல் திருப்பள்ளியெழுச்சி, கும்மி, காவடி, பக்திப் பாடல் மற்றும் பஜனை பாடல்கள் போன்றவற்றை கொண்டுள்ளன.

35 பக்கங்களைக் கொண்டதாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இவரது முக்கியமான ஒரு நூலான பேச்சியம்பாளின் அவதாரமும் ஆலயமும் எனும் நூல் 2012-ஆம் ஆண்டு நூலுருப் பெற்றது. இதில் ஆலய அமைப்பு, பேச்சியம்மன் அவதாரம், ஆலய வரலாறு, பூசை முறைகள் என்பன காணப்படுகின்றன. இந்நூல் பேச்சியம்மன் பற்றிய காவடி, கும்மி, தாலாட்டு போன்றனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இவரால் 2012-ஆம் ஆண்டு நூலூருவாக்கப்பெறும் 'கிராமத்து உள்ளங்கள்' எனும் நூல் முழுக்க முழுக்க பக்தியிலிருந்து விடுபட்டு நாட்டாரியல் சார்ந்ததாக விளங்குகிறது. புரவலர் புத்தக பூங்கா இதனை வெளியீடு செய்துள்ளது. இந்நூல் ஈழத்து நாட்டார் பாடல்களையும், நாட்டார் இலக்கியங்களையும் விரிவாக ஆராய்கின்றது. இந்நூலிற்கு மறைந்த பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். அடுத்து 'இறையின்பாவாரம்' மேலே குறிப்பிட்ட அடிப்படையில் சிறந்த ஒரு நூலாக கருதப்படுகிறது. அத்துடன் ஈழத்தில் வெளிவந்த பெரும் இலக்கியங்களில் ஒன்றாகவும் இதனைக் கருதலாம். மேலும் 2019-ஆம் ஆண்டு வெளிவந்த 'தமிழ் கூத்தியல்' எனும் நூல் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. 98 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 'இறைவனும் புலவனும்', 'இராவண சொரூபம்' எனும் தலைப்பில் அமைந்த தென்மோடி கூத்துப் பனுவல்களைக் கொண்டது. இதற்கான நயவுரையை சாம்பசிவம் சிவாச்சாரியார் அவர்கள் வழங்குகிறார். மதிப்புரையினை மூனாக்கானா அவர்களும், மதிப்பீட்டுரையினை கா. மோகனதாசன் அவர்களும் வழங்கியும் உள்ளனர்.

2021-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இவருடைய 'பத்தாலய பாவரங்கள்' எனும் நூலும் பத்து ஆலயங்களின் வரலாறுகளை தாங்கிய ஆவணமாக அமைகின்றன. இவ்வாறு பதினொரு நூல்களை எழுதி ஈழத்து இலக்கிய வெளிக்குரிய தாக்கியுமுள்ளார். மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் இலக்கிய விருதுனை இவரது கூத்தியல், வில்லடிப்பாட்டு, பத்தாலய பாவரங்கள் முதலான நூல்கள் பெற்றுக்கொண்டன. இவ்வாறு ஆரையூர் அருளம்பலம் அவர்களின் இலக்கியப் பணிகள் அமைகின்றன. இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆய்வுகளுக்கு உட்படுத்த வேண்டியவை. அத்துடன் பல்வேறு தளங்களில் பரவலாக்கம் செய்யப்பட வேண்டியவை. இவரது ஒரு சில இலக்கியங்களைப் பற்றி பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஆய்வு செய்தாலும் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தி எதிர்கால சந்ததிக்கு கையளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது உயர்கல்வி நிறுவனங்கள், திணைக்களங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் கடமையாகவுள்ளது. ஏனெனில் புலமைகளைத் திருடிப், பண்பாடுகளை தமக்கானதாக மாற்றிக் கொள்ளும் இலங்கைச் சூழலில் இவருடைய பாடல்கள் வரலாறுகளைச் சுமந்து நிற்கின்றன. இவை இன்னுமொரு நூற்றாண்டுகளுக்கு பின்னால் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யக் கூட உதவலாம்.



kuganathan.e@thaiveedu.com




# ஆரையூர் அருளரும் நாடகத் துறையும்

*– சிவப்பிரியா வில்வரத்னம்*

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு நகரில் இருந்து தென் பால் அமைந்துள்ள இயற்கை வனப்புடன் கூடிய பழம் பெரும் கிராமம் ஆரையம்பதி. இக்கிராமம் மட்டக்களப்பிலுள்ள ஏனைய கிராமங்களுக்கு முன்னுதாரணமாகவும் பண்பாட்டின் தொட்டியாகவும் கலைகளின் இருப்பிடமாகவும் விளங்குகின்றது. இக்கிராமம் தனக்கென்றொரு பண்பாட்டு பாரம்பரிய கலா சார விழுமியங்களை கொண்டு விளங்குவதுடன் பாரம்பரிய கலை வடிவங்களான கூத்து, மகிடிக்கூத்து எனப் பல பாரம் பரிய கலை வடிவங்களையும் எமக்குத் தந்துள்ளது. நவீன நாடக வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்குகின்ற கிராம மாகவும் ஆரையம்பதி காணப்படுகின்றது. இவ்வாறாக முன் னெடுப்பிற்கு, பல ஆளுமைகளின் தொடர்ச்சியான இருப்பும் செயற்பாடுகளுமே காரணமாகும். இவர்களில் முதன்மைச் சாதனையாளர்களுள் குறிப்பிட்டுச் சொல்லப்படும் ஒருவரா கவே ஆரையூர் அருள் அவர்கள் விளங்குகின்றார். இவருடைய கலைப் பயணங்களில் குறிப்பாக நாடகச் செயற்பாடுகளின் தனித்துவங்களை சான்றுபகர முடியும்.

இன்று மேலைத்தேய கோட்பாடுகளையும் அவர்களது சிந் தனைகளையும் தெரிந்து வைத்திருக்கின்ற அளவிற்கு எமது மாவட்டத்தில் இன்றும் கண்முன்னே வாழ்ந்து கொண்டிருக் கின்ற கலை, இலக்கிய செயற்பாட்டாளரான ஆரையூர் அருள் பற்றிய புரிதலும் அவர் பற்றிய தேடல்களும் குறைவாகவே காணப்படுகின்றது. பன்முக ஆளுமையாளரான அருள் பற்றிய பல தரப்பட்ட ஆய்வுகள் வெளிவர வேண்டும். வெளிவரும்போ துதான் அருளம்பலத்தின் கலை இலக்கிய செயற்பாடுகள் அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தப்படும் என்பது திண்ணம்.

காத்திரமான பல்வேறு கலை இலக்கிய செயற்பாடுகளுக்கும் சொந்தக்காரரான ஆரையூர் அருள் அவர்களின் நாடகச் செயற்பாடுகள் பற்றி எடுத்து நோக்குவது இன்றியமையாத தாகும். இவர் ஆரம்ப காலத்தில் நாடகங்களில் நடிகராக இணைந்து செயற்பட்டு பல நாடகங்களில், பாத்திரங்கள் பல வற்றைத் தாங்கி நடித்து பார்வையாளர்களின் பாராட்டுக்க ளையும் பெற்றவர். தனது நடிப்பாற்றல் திறமையை வெளிக் கொண்டுவந்த ஆரையூர் அருள், நாடகங்களைத் தானே எழு துகின்ற நாடக ஆசிரியராகவும் மிளிரத் தொடங்கினார்.

இவரது நாடகங்களை சமூக நாடகம், சிறுவர் நாடகம், இதி காச நாடகம், புராண நாடகம், நகைச்சுவை நாடகம், வரலாற்று நாடகங்கள் என வகைப்படுத்தி நோக்கலாம்.

ஆரையூர் அருள் அவர்களால் எழுதப்பட்ட சமூக நாடகங்கள் இவரது காலப் பகுதயில் சமூகங்களில் காணப்படுகின்ற பிரச் சினைகளையும் மக்கள் எதிர்கொள்கின்ற சவால்களையும் மையப்படுத்தியதாகவே அமைகின்றன. இவரால் எழுதப்பட்ட சமூக நாடகங்களாக 'சமர்ப்பணம்', 'நல்லதம்பி', 'புதியவிதி சமைப்போம்', 'அளவான குடும்பம்', 'பெரியோரை கனம் பண்ணுவோம்', 'தியாக தீபம்', 'இணைந்த இதயங்கள்' போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம்.

சிறுவர் நாடகங்களையும் சிறுவர்களது மனநிலைக்கேற்ப அவர்களது கற்பனைத் திறனுக்கேற்ப நாடகங்களை எழுத வேண்டும். சிறுவர் நாடகம் எழுதுவதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. அவற்றைச் சவாலாக ஏற்று சிறுவர்களுக்கு உரிய வகையில் சிறுவர்களுக்கு சிறந்த கருத்துகளை எடுத் துக் கூறுகின்ற நாடகங்களை இவர் எழுதினார். இவரால் எழு தப்பட்ட சிறுவர் நாடகங்களாக 'ஒரே தாய்பிள்ளை', 'மரவளம் வளர்ப்போம்', 'கல்வியே கலங்கரை விளக்கு', 'முயற்சியே இருவி னையாக்கும்', 'கல்வியே அழகே அழகு', 'உண்மை விளக்கு' போன்றவற்றைக் கூறலாம்.

இதிகாச மற்றும் புராண நாடகங்களும் இவரால் எழுதப் பட்டன. 'குந்தியின் வரம்', 'ஊர்வசி பெற்ற சாபம்', 'இறைநம் பிக்கை' போன்ற இதிகாச புராண நாடகங்களை இவர் எழுதி யுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமன்றி நகைச் சுவை மற்றும் வரலாற்று நாடகங்களையும் இவர் எழுதி யுள்ளார். 'சிலைகளும் சிரிக்க வைக்கும்' என்ற நகைச்சுவை நாடகமும், 'மாயவேட மன்னன்' என்ற வரலாற்று நாடகமும் இவருக்குப் பேரையும் புகழையும் ஈட்டித் தந்தது.

ஆரையூர் அருள் அவர்களது மேற்கூறப்பட்ட நாடகச் செயற் பாடுகளை வைத்துப் பார்க்கின்ற போது ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை அவர் வழங்கி வருகின்ற மையைக் காணமுடிகின்றது. இவரது நாடகப் பிரதிகள் ஒவ் வொன்றும் கற்றலுக்கும் ஆய்வுக்கும் உரியவை. இப்பிரதிகள் பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை தொகுத்து நோக்கு கின்ற போது ஆரையூர் அருள் அவர்கள் ஈழத்தமிழர்களின் பண்பாட்டு நடைமுறைகளுக்கும் அப்பண்பாடு இன்றும் உயிர்நாடியாக இருப்பதற்கும் உரிய செயற்பாட்டினை தனது கலை இலக்கியச் செயற்பாட்டின் ஊடாகவும் நாடகச் செயற் பாட்டிற்கூடாகவும் புரிந்துள்ளார் என்பதோடு, பன்முக ஆளு மையாளராகவும் இன்று வரையும் தொடர் செயற்பாட்டாளரா கவும் பயணித்துக் கொண்டிருக்கின்றார். இவரது செயற்பா டுகள் அனைத்தும் வருங்கால தலைமுறைகளுக்கு ஒரு படிப் பினையாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

கிழக்கு மாகாணத்தின் முதன்மை சாதனையாளரான ஆரையூர் அருள் அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு செயற்பா டுகள் மேலும் தொடரட்டும்.



sivapriya.v@thaiveedu.com






### ஆரையூர் அருள் அவர்களின்

# வில்லடிப்பாட்டு

## நூல் மதிப்பீடு

*க. மோகனதாசன்*

வில்லுப்பாட்டானது மக்களின் அகத்திலெழும் உணர்வு களோடு ஒன்றி வளரும் கலையாகக் காணப்படுகிறது. நாட கத்தன்மை மிகுந்த நிலையில் கதை கூறலில் இது உரு வாக்கித் தரும் பயன்பாடுகள் பலவாகும். மரபு வழிக்க தைகள் முதல் இன்றைய அறிவியல் வளர்ச்சி நிலைகள் வரை வாழ்வியலை, அதன் தத்துவத்தை எளிதாகக் கூறும் வல்லபம் வாய்ந்தது வில்லுப்பாட்டு. தமிழுக்குத் தனித்துவம் வாய்ந்த இலக்கிய வடிவமாகவும் ஆற்றுகை வடிவமாகவும் இது துலங்குகின்றது. இதனால் மிகச்சிறந்த கதைக் கூற்ற ரங்கு (Narrative Theatre) என்ற நிலையை வில்லுப்பாட்டுப் பெறுகிறது. மக்களையும் கதையின் போக்கினூடே ஒன்ற வைத்துக் கதை கூறும் வடிவமாக, எந்தக் கால அளவுக் குள்ளும் ஒரு கதையினைப் படைத்துக்காட்ட ஏற்ற வடிவமாக இது திகழ்கிறது.

ஆக, நம்மோடு இயல்பாக உரையாடக்கூடிய தன்மை வில் லுப்பாட்டுக்குள்ளது. இந்த சாத்தியங்களைக் கருத்திற் கொண்டே, தமிழின் மகத்துவங்களைப் பண்பாட்டின் நடுவ ழியில் தவறவிடப்பட்ட வாழ்வை மீளக்கொணரும் வேட்கையில் பல்கலை வித்தகர் மூ.அருளம்பலம் அவர்களால் காலத்தின் தேவைகருதி உருவாக்கப்பட்டிருக்கிறது. 'வில்லடிப்பாட்டு' எனும் நூலாகும். இந்த நூல் ஆ.மு.சி. வேலழகன் ஐயா அவர் களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த நூல் முழுவதுமாக படித்து முடித்தவுடன் விடுபட்ட நமது வாழ்வு பற்றிய ஏக்கம் பிறக்கிறது. மனதில் ஏற்படும் வெறுமையை நிரப்ப கண்களும் மனதும் புற உலகை தீராத ஏக்கத்துடன் பார்க்கிறது. நூலாசிரியரின் எழுத்தும் அவர் எடுத்துத்தரும் அர்த்தமும் அதன் தத்துவமும் ஒரு கனவினை ஓர் அழகிய வாழ்வினை வாழும்படி கை நீட்டி அழைக்கிறது.

'வில்லுப்பாட்டு' எப்படி உருவானது? பாண்டிய மன்னர் வில்லுடன் வேட்டைக்குப் போனார். பல விலங்குகளை வேட்டையாடினார். மாலை நேரம் வந்ததும், மன்னர் மனதில் கலக்கம். அமைச்சரிடம் 'இந்த உயிர்களை இப்படிக் கொல்லுகிறோமே, நமக்கு சந்தோஷம், அவற்றுக்கோ துன்பம். மானைக் கொன்ற பின், அதன் குட்டி எப்படித் தவிக்கிறது பார்த்தீர்களா? என்றார். சரி, இதற்கெல்லாம் பரிகாரம் உண்டா? 'உண்டு ராஜா. இறைவன் மீது மனமுருகப்பாடி பாவமன்னிப்புக் கோருங்கள். இசை ஒன்றுக்குத் தான் இசைவான்' என்றார் அமைச்சர். உடனே காட்டிலேயே கச்சேரி நடத்த முடிவானது. ஆனால் பக்க வாத்தியங்கள் இல்லை. கொண்டு வந்த பொருட்களை இசைக்கருவிகளாக்கினர். வில்லைத் தரையில் வைத்து அம்பால் தட்டி இசை எழுப்பினார் மன்னர். அப்படி தட்டும் போது வில் சரிவர நிற்காததால். தண்ணீர் கொண்டு போயிருந்த மண் குடத்தைக் கட்டித் தட்டினார். ஓம் ஓம் என்று நாதம் பிறந்துவிட்டது. ராஜா பாட்டைத் துவங்கும் முன், 'தந்தனத்தோம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார் அமைச்சர். மன்னர் பாடும் போது, ஆமோதிக்க வேண்டாமா? அதனால் மன்னரின் உதவியாட்கள் 'ஆமாம்' போட ஆரம்பித்தனர்... என, அதன் வரலாற்றை வில்லுப்பாட்டு பிறந்த கதையாகத் தருகிறார் நூலாசிரியர்.




வில்லின் தத்துவம், வில்லிசையில் உடுக்கின் சிறப்பு, குடத்திற்குக் கிடைத்த இடம், வில்லுப்பாட்டின் முதன்மை துணைக்கருவிகள், வில்லுப்பாட்டு அன்றும் இன்றும், இறைவணக்கப் பாடலில் ஏற்பட்ட மாற்றங்கள், வில்லுப்பாட்டின் அமைப்பு எனும் உபதலைப்புக்களில் வில்லுப்பாட்டின் மகத்துவம் ஆய்வு நோக்கில் தரப்பட்டிருக்கின்றன. 'உடுக்கெடுத்துப் பிடித்த கைக்குப் பேர்தான் சொல்லு, ஓங்கியே அறைந்த கையின் உருவம் சொல்லு...' என்பதான பாடல் உடுக்கின் தெய்வீகத் தன்மையினை எடுத்தியம்புகின்றது. அந்த தெய்வீக இணைப்பின் முக்கியத்துவம் வில்லிசையில் உணரப்படுகின்றது.

வில்லுப்பாட்டு அன்றும் இன்றும் எனும் பகுதியில் அக்கால நிலைமைகள், இக்காலத்தில் ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், வில்லிசைக்கு உயிர் கொடுத்த கலைஞர்கள் போன்ற விடயங்களைத் தருகிறார். வில்லுப்பாட்டின் கட்டமைப்பு பெரும்பாலும் ஏழுவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இறைவணக்கமாக அமையும் காப்பு விருத்தம், குறிப்பிட்ட கதையை இன்று வில்லில் கூறப்போவதாக ஆசிரியர் முன்கூட்டியே குறிப்பிடும் நுதலிப்பாடுதல் எனும் வருபொருள் உரைத்தல், தனக்கு ஆசிரியராக இருந்தவரை நினைத்து வணங்கி நலம் உண்டாக உதவுமாறு கோரும் குருவடி பாடுதல், கதை கூறுவோர் தன்னை எளியோனாகவும், கேட்போரைச் சான்றோராகவும் கருதி கூறப்பெறும் அவையடக்கம், நாட்டு வளத்தைக்காட்டும் நாட்டு வளம், கதை முழுமையாகக் கூறப்பெறும் கதைக்கூறு, கதை கேட்போர், கதை மாந்தர், கதை கூறுவோர் என அனைவரும் நலம்பெற வாழ்த்துவதாகப் பாடும் வாழிபாடுதல் என்பன வில்லுப்பாட்டின் முக்கிய அங்கங்களாகும்.

வித்தகர் விபுலானந்தர், ஜீவ சேவையே சிவசேவை, ஞானவிளக்கு, சுத்தம் சுகம் தரும். ஒன்றே குலம் ஒருவனே தேவன், அல்லற்காலை நில்லலன் மன்னே, சமநீதியே சரிநீதி, சித்திர புத்திரன், அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும், நோதலும் தணிதலும் அவற்றோர் என்ன, தேறற்க யாரையும் தேறாது, தானே வரும் தன்கேடு, மகளீர் நிறை காக்கும் காப்பே தலை, சினம் சினந்தாரைக்கொல்லும், மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம், புலித்தலைமை நாய் மோத்தல் இல், குறைப்பர் தம்மே வீழப்பனை, மயிர் நீப்பின் வாழாக் கவரிமான், யாகாவராயினும் நா காக்க, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என இருபது பிரதிகள் இத்தொகுப்பிலுள்ளன.

புராண இதிகாசக்கதைகளாகவும் அதன் கிளைக்கதைகளாகவும் தமிழர்களின் விழுமியங்கள் பற்றிப் பேசுவனவாகவும் அடியார்கள் புகழ் உரைப்பதாகவும், அரசர்கள், புலவர்கள், முனிவர்கள், பெரியோர்கள் பற்றிய கதைகளாகவும் கல்வி, சுகாதாரம் பற்றியனவாகவும் இவ்வில்லடிப்பாட்டுக்கள் அமைகின்றன. இந்நூலிலுள்ள 20 வில்லுப்பாட்டுகளும் வில்லுப்பாட்டுக்குரிய கட்டமைப்புகளைக் கொண்டதாக உள்ளன. ஒரு கதை வில்லடிப்பாட்டாக விரிக்கையில் அங்கு படரும் வார்த்தைகளின் அர்த்தங்கள் கேட்போரை மெய்மறக்கச் செய்கின்றன. தெம்மாங்கு, சிந்து, கண்ணி இசை மெட்டுக்களைக் கொண்டனவாக இவை விளங்குகின்றன. இலகுவான உள்நுழைவினைத் தரவல்ல எளிமைத் தன்மை வாய்ந்தவைகளாகக் காணப்படுகின்றன. எடுத்த கருத்தினை தெளிவாக சொல்லும் ஆழமிக்கவைகளாகவும் சமகாலப் பதிவேற்றங்களையும் இட்டு நிரப்பும் தன்மை வாய்ந்தவைகளாகவும் நகைச்சுவைத் தன்மை நிரம்பப் பெற்றவையாகவும் காணப்படுகின்றன.

வாழ்க்கை எப்போதுமே கையருகில் உள்ள பேரதிசயம். அந்தப் பேரதிசயத்தை, வாழ்வின் அர்த்தங்களைத் தன்னுள் புதைத்து வைத்திருக்கும் ஓர் அழகிய வாழ்வை அழித்துவிடத்துடிக்கும் பல்தேசியக் கம்பனிகளின் கீழ்த்தரமான உத்திகளின் கிராதிகளின் இடைவெளியில் சிக்கித் தவிக்கும் வாழ்வொன்றிலிருந்து விடுவிக்கத் துடிக்கும் அழைப்பாக பல்கலை வித்தகர் ஆரையூர் அருள் ஐயா அவர்களின் குரல் நம்மைத் தொடுகிறது. அன்பைப் பிரவகிக்கும் நாட்டுப்புறத் தமிழிலக்கியப் பக்கத்தின் பெருங்கடல், மெல்லிய அலையாக முதுகில் தொட்டு, தன்னை உணர்த் தும் மென்மை, எல்லோரையும் கைகோத்துக்கொள்ளும் பேரன்பு. இவையே அவரின் அடையாளமாகிறது.



mohanathasan@thaiveedu.com






# பக்தி இலக்கியப் படைப்புகள்

## ஒரு விமர்சனப்பார்வை

– பிரியதர்ஷனி ஜெதீஸ்வரன்

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச சபைப்பிரிவுக்கு உட்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்த ஓய்வு நிலை அதிபரும் கவிஞரும் எழுத்தாளருமாகிய செம்மொழிப் புலவர் ஆரையூர் மூ. அருளம்பலம் அவர்கள் ஓர் கலை இலக்கியச் செயற்பாட்டாளராவார். தனது வாழ்நாளில் கல்விப்பணியைச் சிரமேற்கொண்ட அவர் தன் பிரதேசமாகிய மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைபண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதோடு மட்டுமன்றி அதன் மரபுமாறா புதிய ஆக்கங்களைப் படைக்கும் ஓர் படைப்பாளியுமாவார். இயல், இசை, நாடகம் என பல்துறை சார்ந்த அவரது படைப்புகள் கவிதை, சிறுகதை, கட்டுரைகள், நாடகங்கள், வில்லுப்பாட்டுகள், கூத்துகள், பக்தி இலக்கியங்கள் என கலை இலக்கியப் பணிகள் விரிந்துசெல்வன.

இலக்கியங்களைக் காலக்கண்ணாடி என்பர். தன் வரலாறு தெரியாத அல்லது போற்றிப் பாதுகாக்கத் தவறிய சமூகம் தன்னைத் தக்கவைக்க முடியாத ஓர் நிலையில்லா சமூகமாகும். அந்தவகையில் நம் தொல் தழிழ்க்குடிகள் தீர்க்கதரிசனம் மிக்க சமூகமாக வாழ்ந்திருப்பதும் தம் வரலாற்றின் செழுமையினை இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் ஓலைச்சுவடி களிலும் கட்டடங்களிலும் பதித்துச் சென்றிருப்பதையும் நாம் காணலாம். இன்று எம் வரலாற்றை அறியவும் அதன் தனித்துவங் களைக் கண்டுணரவும் இவை வழிகோலுகின்றன. பிற சமூகங்களிலிருந்து நாம் கொண்டவற்றையும் கொடுத்தவற்றையும் கண்டறியவும் இவை வழி சமைத்துள்ளன.

இலங்கையின் கிழக்குப்பிரதேசம் மானிடவியலாளர்களின் ஓர் ஆய்வுச்சுரங்கம். அதனைத் தவிர்த்து இலங்கையின் வரலாற்றை குறிப்பாக தமிழர் வரலாற்றை எழுதிவிட முடியாது. இங்கு காலத்திற்குக்காலம் வந்தேறிய இந்திய குடிகளும் பட்டாணிகளும் மேலைநாட்டவரும் கிழக்கின் பூர்வீக குடிகளுடன் பண்பாட்டாலும் இனக்கலப்பினாலும் விட்டுச் சென்ற தொன்மங்கள் இன்றுவரை இனங்களாகவும் மதங்களாகவும் காணப்படுகிறன. அந்தவகையில் கிழக்கு பிரதேச சமூகம் ஒரு பன்மைத்துவ பண்பாட்டைக் கொண்ட சமூகமாகும். இங்கு வாழும் சைவமக்கள் ஆகமவழிபாடுகளைப் பின்பற்றினாலும் தம் வழிபாட்டுமுறைகளிலும் வாழ்வியல் நெறிகளிலும் பூர்வீக மக்களின் பண்பாடுகளைச் சடங்குகளாக இன்றுவரை நம்பிக்கையுடன் பேணிப்பாதுகாத்து வருவதை கண்கூடாகக் காணலாம். இங்கு வாழும் வேடர்கள் எனும் பழங்குடிமக்கள் தம் வாழ்வியலில் தமக்கென குமாரத்தன், புள்ளிக்காரன், பொல்லுக்காரன், மாநீலி, குடாநீலி, தெவுத்தன், மாறா, மறுமுந்தநாச்சி எனப்பல தெய்வங்களை அவர்களுக்கான குறித்த சடங்குகளை இயற்றி பாடல்களைப்பாடி

கொட்டு எனும் வாத்தியத்தை வாசித்து மிகுந்த பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர்.

மேலும் ஏனைய மக்கள் பிராமணர்களாலும் சைவக் குருக்கள்மார்களாலும் மந்திரம் ஓத ஆகம விதிக்கமைவான வழிபாடேற்கும் பிள்ளையார், முருகன், சிவன், அம்பாள், கிருஷ்ணன் போன்ற பெருந்தெய்வங்களை வணங்கும் மக்களாக காணப்படுவதுடன் தம் பூர்வீக கிராமியத்தெய்வங்களான காளியம்மன், கண்ணகையம்மன், மாரியம்மன், பேச்சியம்மன், கடல்நாச்சியம்மன், திரௌபதையம்மன், வீரமாகாளி, நரசிங்கவைரவர், நாகதம்பிரான், வீரபத்திரர், நாகம்மை, வாசுகியம்மன் போன்ற ஆகமம் சாராத சடங்கு வழிபாடு என்னும் பத்ததி விதிமுறைக்கிணங்க நடைபெறும் வழிபாட்டினை ஏற்கும் தெய்வங்களையும் மிகுந்த பயபக்தியுடன் சடங்காற்றி வழிபடுகின்றனர். வருடம் ஒருமுறை இம்மடாலயங்களின் கதவுகள் திறக்கப்பட்டு குறித்த மூன்று அல்லது ஐந்து நாட்கள் இச்சடங்குகள் தேவாதிகளின் ஆடலுடனும் பாடலுடனும் மந்திர உச்சாடனங்களுடனும் நடைபெறும். அக்காலங்களில் அவ்வூரே கோலாகலமாகக் காட்சியளிக்கும். எங்கும் சடங்குப்பாடல்கள் கேட்டவண்ணம் இருக்கும். அக்காலங்களில் அம்மக்களின் நடைமுறை வாழ்க்கையின் அனைத்து விடயங்களும் சடங்கை நோக்கியதாகவே காணப்படும். இன்று காலமாற்றங்களால் சிலகோயில்கள் ஆகமமுறைக்கேற்ப தினப்பூசைகள் நடைபெறும் கோயில்களாக காணப்பட்டாலும் குறித்த காலங்களில் அவற்றிற்கான சடங்குகளும் நடைபெறக்காணலாம்.

இத்தகைய பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆரையம்பதி என்னும் ஊர் ஏராளமான கோயில்களைத் தன்னகத்தே கொண்டது. இவ்வூரில் பிறந்து வளர்ந்த திரு. மூ. அருளம்பலம் அவர்கள் தன் இயல்பான நற் குணாம்சங்களாலும் இறைபக்தியினாலும் இவ்விருவழிபாடுகளிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். அவரது பல்திறப்பட்திறன்கள் கிராமியக் கலைகளிலும் இலக்கியங்களிலும் பரிணமித்தன. சடங்கு வழிபாட்டினைப் பிரதான வழிபாடாகக் கொண்ட இம்மக்களிடையே காணப்படும் பக்தி இலக்கியங்கள் பலவும் அக்கோயில்களின் வரலாறு கூறும் நூல்களாகவும் அத்தெய்வங்களின் மேல் பாடப்பட்ட பாடல்களாகவும் காணப்படுகின்றன. இவை பெருந்தெய்வக் கோயில்கள், அவற்றின் தெய்வங்கள், சடங்குவழிபாட்டை ஏற்கும் கிராமியத் தெய்வங்கள் எனப் பலதிறப்பட்டன. இங்குதான் தெய்வங்கள் மீது பாடப்பட்ட மூ. அருளம்பலம் அவர்களின் பக்தி இலக்கியங்களும் விதந்துரைக்கப்படுகின்றன. இவரது பக்திசார்ந்த படைப்புக்கள் ஏராளம். அவை கட்டுரைகள், நாடகப்பிரதிகள், கூத்துப்பிரதிகள், வில்லுப்பாட்டுகள், பக்திப்பாடல்கள் எனப் பல துறைப்பட்டன. அந்த வகையில் இவரது படைப்புக்களில் பெரும்பகுதியாக காணப்படுபவை இறையின்பம் பயக்கும் பக்திப் பாடல்களாகும்.

அவர்களது பக்தி இலக்கிய வெளியீடுகளை நாம் மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். ஒன்று எழுத்துருப் பெற்று ஆற்றுகை செய்யப்பட்ட இலக்கிய வகை. மற்றயவை எழுத்துருப் பெற்ற பக்திப்பாக்கள். ஏனையவை இசை இறுவட்டுகள். அந்தவகையில் ஆற்றுகை செய்யப்பட்ட இலக்கிய வடிவங்களில் அவர் 20 வில்லுப்பாட்டுகளை இயற்றி பயிற்றுவித்திருக்கிறார். அவற்றுள் சித்திரபுத்திரர்(1987), இளையான் குடிமாறநாயனார்(2013), போன்றவை பக்திசார்ந்தன. அவர் இயற்றிய 20 நாடகங்களுள் 'குந்தியின் வரம்(1981), திருநாவுக்கரசர்(1986), ஊர்வசி பெற்ற சாபம்(1998), குந்தியின் மடியில்(1994), இறைநம்பிக்கை(2004)', போன்றன இதிகாச, புராண நாடகங்களாகும். அவர் எழுதி ஆற்றுகைசெய்த 18 வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் பலவும் பக்தி சார்ந்தவை. இவை ஒருவகை.

அவர் பல பக்திப் பாடல்களை நூல்களாக வெளியிட்டிருக்கின்றார். 'ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம் சிதானந்த தபோவனம் ஸ்தாபகர் ஓம்காரானந்த சரஸ்வதி சரிதம்(2010), பேச்சியம்மன் அவதாரம் ஆலயமும்(2012) என்பவை சரித்திரம் கூறும் நூல்களாகவும் 'கிராமத்து உள்ளங்கள்'(2013) என்னும் நூல் நாட்டார் இலக்கியமாகவும் காணப்படுகின்றது. மேலும் சிவநேசனார் ஆலயம்(1992-காவடி, ஊஞ்சல்), செல்வாநகர் சிவன்மேல் காவடிப் பாட்டு(1992) ஆரையம்பதி பேச்சியம்மாள்(1993-காவடி, கும்மி, தாலாட்டு கரகம், காவியம்), செல்வாநகர் காளிகோயில்(1995- தாலாட்டு, கும்மி, ஆக்கப் பாடல்கள்), வம்மிக்கோணி மாரியம்மாள்(1996-காவடி, கரகம். தாலாட்டு, ஆக்கப்பாடல்கள்), கோளாவில் மாரியம்மன் கோயில் (1997-காவடி, கும்மி, ஆக்கப்பாடல்கள்), கல்லடி உப்போடை பேய்ச்சியம்மாள் பாடல்கள்(2001), கல்லடி திருச்செந்தூர் முருகன்(கும்மி, காவடி, பக்திப்பாடல்கள், திருப்பள்ளியெழுச்சி) ஆகிய புத்தகங்களையும் வெளியிட்டு மட்டக்களப்புக்கு பெருமை சேர்த்தார். மேலும், கல்லடி உப்போடை பேச்சியம்பாள்(2001) காவடி, கும்மி, தாலாட்டு, பக்திப்பாடல்), மட்/ புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகி அம்பாள் பாடல்கள்(2002) மஞ்சந்தொடுவாய் வீரபத்திரர் காவியம் (2002), ஆலயடி வீரபத்திரர் காவியம்(2003), திமிலதீவு கிருஷ்ணர்(2004-காவடி, ஆக்கப்பாடல்கள்), புன்னைச்சோலைக் காளி(2006-காவடி, கும்மி, ஆக்கப்பாடல்கள், பக்தி பாடல்கள்), புன்னைச்சோலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் பாடல்கள்(2006), ஆனைப்பந்தி பிள்ளையார் (2008- காவடிப் பாடல்கள்), கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீசித்திவிநாயகர், ஸ்ரீபேச்சியம்மன் பாடல்கள் (2010), கல்லடி உப்போடை பேச்சியம்மாள் பாடல்கள் (2010) என ஏராளமான பக்திப் பாக்களை எழுதியுள்ளார்.

பெரும் பக்தி இலக்கியமாகக் கொள்ளப்படும் அவரது பாடல்கள் 'இறையின்பப் பாவாரம்' என்னும் பெயரில் நூலுருப்பெற்றுள்ளது. இந்நூல் 714 பக்கங்களையுடைய மிகப் பெரும் கவிதை நூல் என்ற பெருமையைப் பெறுகிறது. மொத்தம் 3010 பாடல்களைக் கொண்ட இந்நூலே ஈழத்தின் பக்திப் பாடல் வரிசையில் மிகப்பெரிய நூலாகும். பக்திப் பாடல்கள், பஜனைப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்ள், தெம்மாங்குப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், கும்மிப்பாடல்கள், காவடிப்பாடல்கள், காவியம், திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் என பல வகைக் கிராமியப் பாடல்களை இந்நூல் கொண்டமைந்துள்ளது. இவை கிழக்கு மாகாணத்திலே கோவில் கொண்டுள்ள விநாயகர், சிவன், முருகன், விஷ்ணு, வைரவர், வீரபத்திரர், அனுமன், நரசிங்கர், நாகலிங்கேஸ்வரர் ஆகிய ஆண் தெய்வங்களின் மீதும் கண்ணகை, பேச்சி, மாரி, காளி, கடலாச்சி, காமாட்சி ஆகிய பெண் தெய்வங்களின் மீதும் பாடப்பட்டுள்ளன. இப்பாடல்களைத் தங்கள் ஆலய வரலாறு, தெய்வ முகூர்த்தங்களின் அவதாரம், அற்புதம், பூசை சடங்கு முறைகள், ஆலய அமைவிடங்கள் என்பவற்றை வைத்து அமைத்து தரும்படி அவ்வவ் ஆலய பரிபாலன சபைகள், ஊரவர், அன்பர்கள் கேட்டுக்கொண்டதற்கு அமையவே பாடல்கள் எழுத்துருப் பெற்றன. இப்பாடல்கள் 1980 முதல் 2016 வரை இயற்றப்பட்ட பாடல்கள் ஆகும். பெரும்பாலும்



ஒவ்வொரு பாடல்களின் கீழும் அப்பாடல்கள் ஆக்கப்பட்ட ஆண்டு, மாதம், திகதி குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வக்காலங்களில் நடைபெற்ற சமகாலச் சம்பவங்களும் பாடல்கள் பலவற்றில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது எதிர்கால சந்ததியினர் உண்மைகளை கண்டறிவதற்கு உதவும்.

விநாயகர் துதியுடன் ஆரம்பித்து தொடர்ந்து நாமகள்துதி பாடி தனது தாய்க்கு அந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறார். தொடர்ந்து விநாயகர் மீது 28 கும்மிப்பாடல்களைப் பாடி தன் கும்மிப் பாடலை ஆரம்பிக்கிறார். இதனை விநாயகரது பிரதாபங்களை கூறி ஓர் காப்புக் கும்மியாக பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவரது கும்மிப்பாடல்கள் மாமாங்கப் பிள்ளையார், களுதாவளைப்பிள்ளையார், கல்லடி உப்போடை சித்திவிநாயகர், கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரர், திருமலை திருக்கோணேஸ்வரர், சித்தாண்டி சித்திரவேலாயுதர், ஆரைநகர் கந்தன். தாந்தாமலை முருகன், ஈழத்து திருச்செந்தூர் முருகன், தில்லை மண்டூர் முருகன், ஆரைநகர் விஷ்ணு, தாழங்குடா நிசப்த ஸ்ரீகிருஷ்ணன், ஐயப்பன், முனைக்காடு ஸ்ரீநாகலிங்கேஸ்வரர், ஆரைநகர் கண்ணகியம்பாள் (இரு கும்மிப்பாடல்கள்) செட்டிபாளையம் கண்ணகியம்பாள், புதுக்குடியிருப்பு கண்ணகியம்பாள், மகிழடித்தீவு கண்ணகியம்பாள், ஆரைநகர் பேச்சியம்பாள் கல்லடி உப்போடை பேச்சியம்பாள், ஆரைநகர் வம்மிக்கேணி முத்துமாரி, கோளாவில் முத்துமாரி, நாவற்குடா ஸ்ரீமாரி, ஆரைநகர் செங்குந்தார் வீதி முத்துமாரி, காளியம்பாள், செல்வநகர் பத்திரகாளி, ஆரைநகர் பத்திரகாளி, திருகோணமலை பத்திரகாளி, மட்/வேலூர் பத்திரகாளி, புன்னைச்சோலை ஸ்ரீபத்திரகாளி பெரிய போரதீவு பத்திரகாளி, ஏற்றம் புல்லுமலை நாககன்னி, மயிலம்பாவெளி ஸ்ரீகாமாட்சி, போன்ற கோயில் களிலும் மடாலயங்களிலும் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் தெய்வங்கள் மீது இயற்றிப்பாடியிருக்கின்றார். இக் கும்மிப்பாடல்களை மட்டக்களப்பில் பயில்நிலையிலுள்ள கும்மிப்பாடல்களின் பாரம்பரிய தருவுக்கமைவாக இயற்றியிருக்கின்றார்.

மேலும் ஒவ்வொரு கும்மிகளும் ஏறத்தாழ 20 பாடல்களிலிருந்து 66 பாடல்களைக் கொண்டதாகக் காணப்படுவதோடு காப்புப் பாடலுடன் ஆரம்பிப்பது சிறப்பு. இறைபக்தி விஞ்சிடும் இறைப்பாக்களாக அவை காணப்படுகின்றன. இவர் இயற்றிய காவடிப்பாடல்கள் மிகச் சிறப்பானவை. விநாயகர் (13 பாடல்கள்), ஆனைப்பந்தி சித்திவிநாயகர்(32 பாடல்கள்), ஆரையம்பதி அரசடிப் பிள்ளையார்(16 பாடல்கள்), நாவற்குடா கண்காணிப் பிள்ளையார்(27 பாடல்கள்), கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர்(25 பாடல்கள்), சிவன்(24 பாடல்கள்), கந்தன்(29 பாடல்கள்), ஈழத்து திருச்செந்தூர்(14 பாடல்கள்), தில்லை மண்டூர் முருகன்(21 பாடல்கள்), ஆரைநகர் ஐயப்பன் (21 பாடல்கள்), கண்ணன்(29 பாடல்கள்), முனைக்காடு நாகலிங்கேஸ்வரர்(23 பாடல்கள்), கண்ணகை அம்பாள்(37 பாடல்கள்), புதுக்குடியிருப்பு கண்ணகை அம்பாள்(29 பாடல்கள்), ஆரைநகர் பேச்சியம்மன்(24 படல்கள்), கல்லடி பேச்சியம்மன்(28 பாடல்கள்), கோளாவில் முத்துமாரி (20 பாடல்கள்), வம்மிக்கேணி முத்துமாரி(13 பாடல்கள்), நாவற்குடா ஸ்ரீமாரி(27 பாடல்கள்), பட பத்திரகாளி(26 பாடல்கள்), வேலூர் பத்திரகாளி(31 பாடல்கள்), புன்னைச்சோலைக் காளி(22 பாடல்கள்), போரதீவு பத்திரகாளி(22 பாடல்கள்), ஸ்ரீகாமாட்சி அம்பாள்(30 பாடல்கள்) என அவருடைய காவடிப் பாடல்கள் காணப்படுகின்றன. அத்தனை பாடல்களும் எட்டு அடிகளைக் கொண்ட நடைக்காவடி அமைப்பில் மட்டக்களப்பில் பயில்நிலையிலுள்ள கழுகுமலைப் பத்தின் இசைக்கமைவாகவே காணப்படுகின்றன. இப்பாடல்களில் வரும் சில சொற்களுக்கான ஒத்த சொற்களை இவற்றின்பின்னர் வரும் 335-ஆம்

**மட்டக்களப்பு மாவட்டத்திலே அதிக ஒலிப்பேழைகளுக்கு வரியெழுதி வெளியிட்ட பெருமை ஆரையூர் அருள் அவர்களைச் சேரும். கலைப் பணியுடன் இசைப்பணியும் செய்து வரும் ஆரையூர் மூ. அருளம்பலம் அவர்கள் தண்டமிழால் மட்டக்களப்பு மண்ணையும் மண்ணைக் காத்து வரும் எம்மிறையையும் பெருமைப்படுத்துகிறார்.**

பக்கத்தில் கொடுத்திருக்கின்றார். ஒட்டாரம் - பிடிவாதம், ஊதவனம் - கடல், குறுகலர் - பகைவர், குச்சிதம் - இழிவு, கெழுவுடை - நட்பு, கெழுதகை - உரிமை, கேசரர் - கந்தரூபர், கையர் - வஞ்சகர் போன்ற 28 சொற்களுக்கான ஒத்த விளக்கச் சொல்லினைத் தந்தள்ளமை பாடல்களை மேலும் புரிந்துகொள்ள இலகுவாக உள்ளது. இவை பெருந்தெய்வங் களின்மீதும் கிராமியத் தெய்வங்களின் மீதும் பாடப்பட் டுள்ளன. காவடி எடுத்தல் என்பது இங்கு இரு வழிபாட்டிற்கும் பொதுவானதென்பதைக் குறிக்கின்றது.

கிழக்குப்பிரதேசத்தில் சடங்கு வழிபாட்டின் பிரதான இசைவ டிவம் தாலாட்டு. அருள் அவர்கள் தன் இறையின்பப் பாவா ரத்தில் கண்ணகையம்மன்(53 ஈரடிப்பாடல்), புதுக்குடியிருப் புக்கண்ணகையம்மன்(34 நான்கடிப்பாடல்), பேச்சியம்மன் தாலாட்டு (33 ஈரடிப்பாடல்), ஆரைநகர் பேச்சியம்மன் (32 ஈர டிப்பாடல்), கல்லடி உப்போடை பேச்சியம்மன்(31 நான்கடிப் பாடல்), ஆரைநகர் வம்மிக்கேணி மாரியம்மன்(44 ஈரடிப்பா டல்கள்), காளியம்மன் தாலாட்டு(33 ஈரடிப்பாடல்), புன்னைச் சோலைகாளி(28 நான்கடிப் பாடல்), புல்லுமலை அன்னை யர்கள் தாலாட்டு(நாக கன்னித் தாயார் மீது 12 பாடல்கள், காளிகாம்பாமீது 5 பாடல்கள், மாரியம்மன்மீது 5 பாடல்கள், பேச்சியம்மன்மீது 10 பாடல்கள் என அனைத்தும் நான்கடிப் பாடல்கள்) முதலான கிராமியத் தெய்வங்களின்மீது தாலாட் டுப்பாடல்களைப் பாடியுள்ளார்.

கிழக்கிலங்கையின் கிராமியத் தெய்வவழிபாட்டில் இன்றிய மையாதது காவியம். இவ்விசை வடிவமே அனைத்துத் தெய் வங்கள் மீதும் பாடப்பட்ட இசைவடிவமாகும். அதுமட்டுமன்றி ஒரே தருவினையும் மெட்டினையும் உடையது. அருள் அவர் களும் இம்மரபிலிருந்து வழுவாது தன் காவியப் பாடல் களைப் படைத்திருக்கின்றார். பைரவர் காவியம்(12பாடல்கள்), மஞ்சந்தொடுவாய் வீரபத்திரர்(10 பாடல்கள்), நரசிங்கரூபன் (11பாடல்கள்), ஆஞ்சநேயர்(11 பாடல்கள்), முனை க்காடு நாகலிங்கேஸ்வரர்(11பாடல்கள்), ஆரைநகர் கண்ணகை அம் பாள்(11பாடல்கள்), பேச்சியம்பாள்(11பாடல்கள்), நாவலடி கடலாட்சி(13 பாடல்கள்), ஆரைநகர் பட பத்திரகாளி(17பா டல்கள்), ஏற்றம் புல்லுமலை நாககன்னி(12 பாடல்கள்), மாவி லங்கத்துறை ஸ்ரீகாமாட்சி அம்மாள்(12 பாடல்கள்) என இவரது இறையின்பக் காவியங்கள் என்றும் நிலைத்திருக்கும் தன்மை கொண்டவை.

அருள் அவர்களது இந்நூலில் பேச்சியம்மன் மீதும் முத்துமா ரியம்மன் மீதும் இரு கரகப்பாடல்கள் உள்ளன. இரண்டும் வெவ்வேறு மெட்டுக்களில் அமைந்துள்ளன. அருள் அவர்கள் தம் இறையின்பப்பாவாரம் நூலில் ஆரையம்பதி எள்ளுச் சேனை ஸ்ரீசித்திவிநாயகர் மீதும் செல்வாநகர் சிவனேஸ்வரர் மீதும் ஊஞ்சல்ப் பாடல்களையும் பாடியுள்ளார். இவரது ஊஞ்சல் பாடல்கள் காப்புடன் ஆரம்பித்து 11 ஊஞ்சல் பாடல்களின் பின் வாழி பாடி தொடர்ந்து எச்சரிக்கை, பாராக்கு, லாலி எனும் இசைவடிவங்கள் முறையே அமைந்து மங்க ளத்தில் முடிவுறுகிறது.

மேலும் பக்தி இலக்கியப் பாடல் வகையில் திருப்பள்ளியெ ழுச்சி ஓர் வகை. தெய்வத்தை புலரும்பொழுதில் சயனத்திவி ருந்து எழும்புமாறு வேண்டிப் பாடும் பாடல்களாகும். இதனை முதன் முதலில் மணிக்கவாசகரின் திருவாசகத்தில் காண லாம் அவை 'போற்றியென் வாழ்முதலாகிய பொருளே' என்று தொடங்கி நான்கு சீர்கள், எட்டடிகள் கொண்ட பத்துப் பாடல் களைக் கொண்டுள்ளது. அப்பாடல்கள் ஒவ்வொன்றும் 'எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே' என முடிவுறுகிறது. அந்த வகையில் அருள் அவர்கள் மூன்று திருப்பள்ளியெழுச்சிகளை இயற்றியிருக்கிறார். ஆரையம்பதி எள்ளுச்சேனை ஸ்ரீசித்தி விநாயகர், ஈழத்து திருச்செந்தூர் முருகன், நிசப்த ஸ்ரீகிருஷ்ணன் ஆகிய தெய்வங்களின்மேல் பாடப்பட்ட இவரது பள்ளியெழுச்சிகள் பெரும்பாலும் அத்தெய்வத்தின் வரலாற் றையும் சூழலையும் பிரதாபங்களையும் கூறி இறைவனைத் துயில் எழுப்புவதாக காணப்படுகிறது.

மேலும் ஏராளமான பக்திப் பாசுரங்கள், பஜனைப் பாடல்கள், ஆக்கப்பாடல்கள் போன்றவற்றை இறையின்பப் பாவாரத்திற் காணலாம். சில தருக்களுடன் காணப்படுகின்றன. சில பாடல்கள் தொகையறாவுடன் ஆரம்பித்து பல்லவி, அனு பல்லவி, சரணம் என கீர்த்தனை அமைப்பில் காணப்படு கின்றன. அவற்றில் சிலவற்றிற்கு சுருட்டி, மோகனம், ரஞ்சனி என ராகங்களையும் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தவகையில் இவர் நாட்டார் இசை வடிவங்களில் மட்டுமல்ல கர்நாடக இசையிலும் பரிச்சயமுடையவராக தெரிகின்றார்.

இவர் 'பத்தாலயப் பாவாரங்கள்' என்னும் நூலை 2022-இல் வெளியிட்டிருக்கின்றார். இந்நூல் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெவ்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கோயில் கொண் டெழுந்தருளிய தெய்வத்தின் சிறப்புக்கள், அக்கோயில் வர லாறு, சடங்கு, வழிபாட்டுமுறைகள் போன்றவற்றை உள் நின் றுருகிப் பாடியிருக்கின்றார். பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம், ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் ஆலயம், இருத யபுரம் மேற்கு வாசுகியம்மாள் ஆலயம், பருத்திச் சேனை மீனாட்சி அம்பாள் ஆலயம், முனைக்காடு முத்து மாரி அம்பாள், முனைக்காடு வீரபத்திர்ஆலயம், மஞ்சந்தொ டுவாய் விநாயகர் கண்ணகை ஆஞ்சநேயர் ஆலயம், குமா ரத்தன் ஆலயம், கொல்லைநுலை பேச்சியம்மன் ஆலயம், விளா

வட்டுவான் வீரமாகாளி ஆலயம் ஆகிய பத்து ஆலயங்கள் மீது அவர் இயற்றிய பாடல்களே பத்தாலயப் பாவாரங்கள் என்னும் பக்தி இலக்கியமாகும். இந்நூலிலும் கும்மி, காவியம், காவடி, தாலாட்டு, பஜனை, போற்றி, அர்ச்சனை போன்ற இசைவடிவங்களே காணப்படுகின்றன. அருள்அவர் களது பக்திப்பாக்கள் பக்திப்பெருக்கு நிறைந்தவையாக மக் களுக்கு பக்தி உணர்வை ஊட்டுவதுடன் அவை சமகாலப் பிரச்சனைகளையும் பேசுகிறது.

இவரது பாடல்கள் நமது சமூகம் சார்ந்த வழிபாட்டு முறைகள், சடங்கு முறைகள், தெய்வங்களின் பால் நிகழ்ந்த அதிசயங்கள் வரலாறுகள், சமுக நம்பிக்கைகள், பண்பா டுகள், கலைகள், வழக்காறுகள், என்பனவற்றை பதிவு செய் கின்றன. அவை வரும் காலத்திற்கான இந்த சமுகத்தின் செய் தியாகும்.

மட்டுநகரின் கிராமங்களது இயற்கை எழிலை ஆங்காங்கு கூறி மகிழ்கிறார் 'கார்பொழி மஞ்சு கொஞ்சு மஞ்சந்தெ டுவாய், வங்கக் கடல் ஒலிக்கும் கிழக்கே, மட்டு வாவி மீனின மிசைக்கும் மேற்கே, தேனூறும் தேற்றாத்தீவு', இவ்வாறு பல இடங்களில் காணலாம். இலங்கையில் நடந்த இனக்கலவ ரங்கள், அழிவுகள், சூறாவளி, ஆழிப்பேரலையால் வந்த அழிவுகள் போன்றவற்றையும் இப் பாடல்களில் ஆங்காங்கு பதிவு செய்திருப்பதைக் காணலாம். இவரது கண்ணகை யம்மன் பாடல்கள் ஈழமக்களின் பார்வையில் கண்ணகியம் மனின் முக்கியத்துவம் பற்றியும் வரலாறுபற்றியும் கூறுகிறது. கிழக்குப் பிரதேசத்தின் சடங்கு வழிபாட்டில் முக்கியம் பெறும் பாடல்களின் தொகுப்பு அடங்கிய சீமான் கணபதிப்பிள்ளை அவர்கள் ஏடுகளிலிருந்து தேடித் தொகுத்தளித்த 'மகாமா ரித்தேவி திவ்யகரணி' என்னும் தொகுப்பு நூல்களிலுள்ள காவியம் போன்ற பாடல்களை தனது காவிய அமைப்பிலும் மரபுமாறாது பேணியிருப்பதுடன் பல பாடல்களில் தனித்தும் வேறுபட்டும் தன்னைப் பதிவு செய்திருக்கிறார் .

அருள் அவர்களது நூல் வடிவில் காணப்படும் பக்தி இலக்கி யங்களின் சிறப்புக்கள் காலத்தால் அழியா நம் கிழக்குப் பிர தேசத்து மக்களது பண்பாட்டின் பொக்கிஷங்கள் எனலாம். ஆரையூர். மூ. அருளம்பலம் அவர்களின் இன்னுமொரு பரி ணாமத்தின் தோற்றம் ஒலிப்பேழைகள். அவரது இறையிசைப் பாக்கள் ஒலிப்பதிவுகளாகும். அவை ஆரம்பகாலத்தில் ஒலி நாடாக்களாகவும் பின்னர் ஏனையவை இறுவட்டுக்களாகவும் வெளிவந்துள்ளன. அவை இறையின்பப் பாவாரம், பத்தாலய பாவாரங்கள் ஆகிய அவரது நூலிலிருந்து தெரிவு செய்யப் பட்ட பாடல்களாகும். இவரது கலை முயற்சியானது தனியே பாடல்கள் எழுதுவதோடு நில்லாது ஒலிப்பேழை(இறுவட்டு) வெளியிடுதல் வரை சென்றிருக்கின்றது. அவரது பாடல்கள் அடங்கிய மொத்தம் 30 ஒலிப்பேளைகள் இதுவரை வெளிவந் துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலே அதிக ஒலிப்பேழைக ளுக்கு வரியெழுதி வெளியிட்ட பெருமை ஆரையூர் அருள் அவர்களைச் சேரும். கலைப்பணியுடன் இசைப்பணியும் செய்து வரும் ஆரையூர் மூ. அருளம்பலம் அவர்கள் தண்ட மிழால் மட்டக்களப்பு மண்ணையும் மண்ணைக் காத்து வரும் எம்மிறையையும் பெருமைப்படுத்துகிறார்.

ஆரையூர் மூ. அருளம்பலம் அவர்கள் 30-க்கு மேற்பட்ட ஒலிப்பேழைகள் (குறுந்தகடுகள்) வெளியிட்டுள்ளார். அவர்க ளுடைய ஒலிப்பேழைகளில் உள்ளடக்கப்பட்ட பாடல்கள் பல வற்றுக்கு பலர் இசையமைத்துள்ளனர். சென்னையைச் சேர்ந்த சதீஷ் அவர்களும் இசையமைத்திருக்கின்றார். மேலும் நம்நாட்டு பாடகர்கள் பலர் அவருடைய பாடல் களைப் பாடியிருப்பதோடு இந்தியக் கலைஞர்களும் பாடியி ருப்பது குறிப்பிடத்தக்கது. சதீஸ், ஜனனி, ஜூட் நிரோஷன், பிரதீபன், சிவா, மோகன், அமுதசாகரன், ஏ. செல்வக்குமார் போன்ற பலர் கும்மி, காவியம் போன்ற பாரம்பரிய இசைமெட் டுக்களுக்கு இசை அமைப்புச் செய்ததுடன் ஏனைய பாடல்க ளுக்கும் இசையமைத்தும் உள்ளனர் . மேலும் திரு. பத்மஸ்ரீ, அகலியா, கு. சபேஷ்காந், சாந்தினி, தருமநாதன், மு. நமசி வாயம், பு. காயத்திரி, பு. டிலக்ஷி, ராஜ், சர்வேஸ்வரன், லிங் கேஸ்வரராஜா, ஸ்ரீரம்யா, இரா. தெய்வராஜன், கேமா, சுவா, காயத்திரி, சாயிசங்கர், நீரஜா, விகாஷ், டிலாணி, சபேசன், ரிஷிகேசவன், போன்ற இலங்கைக் கலைஞர்களும் திரு. மாணிக்கவினாயகம், கிருஷ்ணராஜ், மார்ட்டின், ஆனந்து, முகேஷ், தெய்வராஜன், உசாராஜ், ரேணுகா, தீபா, சோபியா போன்ற தென்னிந்தியக் கலைஞர்களும் பாடியுள்ளனர். இப்பெருமை ஆரையூர் அருள் அவர்களைச் சாரும்.

ஆரையூர் அருள் அவர்கள் இயற்றிய சடங்கு பாடல்கள் பல வற்றிற்கு அவரே இசையமைத்துள்ளார். அவரது கண்ணகை அம்மனின் கூறைதாலிப் பாடல், ஊஞ்சல் பாடல் என்பன புதிய இசை மெட்டில் காணப்படுகின்றன. தற்கால இலத்தி ரனியல் சாதனங்களின் வளர்ச்சி அவரது சடங்கு பாடல்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இப்பாடல்கள் நவீன வாத்தியங்களுடன் பாடப்பட்டு ஒலி, ஒளிப்பதிவுகள் செய்யப் படுகின்றன. இதனையும் ஒரு வளர்ச்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அந்தவகையில் அவர் இக்காலத்தோடு ஒட்டியும் பயணிப்பதை அவதானிக்க முடிகிறது. மேலும் அவர் இன்றுவரை தன் செயற்பாடுகளில் ஓய்வொழிச்சலின்றி பயணித்துக்கொண்டே இருக்கும் செயல்வீரர். முத்தமிழ் வித்தகன் வாழ்ந்த மண்ணில் இயல் இசை நாடகம் மூன்றிலும் குறையாப் பணியாற்றிவரும் மூ. அருளம்பலம் அவர்களுக்கு கிழக்கு மண் பெருங் கடமைப்பட்டிருக்கின்றது.

**வாசிக்கப்பட்டவை**


**உசாத்துணை:**

- ஆரையூர் அருளம்பலம், இறையின்பப் பாவாரம், 2016, A.E.T.Printers, திருகோணமலை.
- ஆரையூர் அருளம்பலம், பத்தாலயப் பாவாரங்கள், 2022, ஸ்ரீமுருகன் இந்துமாமன்றம் வெளியீடு, மட்டக்களப்பு.
- செல்வாநகர் சிவன்மேல் காவடிப்பாட்டு, பிரதி, 1992.
- க. நிலாணி, கவாபூஷணம் மட்டக்களப்பு ஆரையம்பதி மூ. அருளம் பலம் அவர்களின் கோயில் சடங்குப்பாடல்களில் இசை பற்றிய ஆய்வு, ஆய்வுக்கட்டுரை, 2017, இசைத்துறை, கலைப்பீடம், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம்.
- நேர்காணல்: அருளம்பலம். மூ. ஆரையம்பதி, வயது 75, ஓய்வுபெற்ற அதிபர், தேசியக் கலைஞர்.
- தகவல்கள்: ஒலிநாடாக்கள், இறுவட்டுக்கள், you Tube, இணையத் தளம்.





priya.jetheeswaran@thaiveedu.com



'ஆரையூர் அருள்'
சிறப்பு பக்கம்

## ஆரையூர் அருள் அவர்களின் நினைவுப் பதிவுகளிற் சில...






















# "கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார்கள் இருக்கும் வரை அவர்களே கூத்தின் இரட்சகர்கள்"

– மூத்ததம்பி அருளம்பலம்

## நேர்காணல்:

– பிரசாத் சொக்கலிங்கம்

► **உங்களைக் கலைஞர், புலவர் என்றே பலர் அறிவார்கள், இருப்பினும் நீங்கள் ஒரு நல்லாசான் என்பது பொது வெளியில் பெரிதாகத் தெரிவதில்லை. உங்கள் ஆசிரியர் பணி பற்றிக் கூறுங்கள்?**

ஆசிரியரகவும் அதிபராகவும் 31 வருடங்கள் கடமையாற்றியிருந்தேன், 1973-இல் எனது முதல் நியமனமான ஒணாகம முஸ்லிம் வித்தியாலயம் தொடக்கம், 2004-இல் ஒய்வுபெறும் வரையில், பொத்துவில் முஸ்லிம் மகாவித்தியாலயம், மற்றும் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை, வாழைச்சேனை மகாவித்தியாலயம், குருக்கள் மடம் தமிழ் வித்தியாலயம், முதலைக்குடா கோபால் வித்தியாலயம், மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம், ஆரையம்பதி மகா வித்தியாலயம் மற்றும் சுப்பிரமணிய வித்தியாலயம், தாழங்குடா மெதடிஸ்த மிஷன் பாடசாலை, மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கடமையாற்றியிருந்தேன். என்னிடம் கற்ற பெரும்பான்மை மாணவர்கள் உயர்கல்வி கற்று, பல்கலைக்கழக பட்டப் படிப்பை முடித்து இன்று சமூத்தில் நல்ல நிலையில் பல பிரதேசகளிலும் வாழ்கின்றனர். ஆகவே நான் ஆசிரியராக அறியப்படாமல் இருந்திருக்க முடியாது அல்லவா?

இருப்பினும், சில வேளைகளில் இன்றைய தலைமுறையினருக்கு எனது ஆசிரியர் பணிபற்றி தெரியாமல் இருக்க வாய்ப்புகள் உள்ளதுதான்.

▸ **உங்களுக்கு ஆசிரியராகப் பணியாற்றும் போது ஆத்ம திருப்தி கிடைத்ததா? அதிபராகப் பணியாற்றும் போது ஆத்ம திருப்தி கிடைத்ததா? உங்களின் அனுபவங் களைப் பகிருங்கள்?**

ஆசிரியராக இருந்து அதிபராவதிலேதான் திருப்தி. ஓர் ஆசிரி யராக இருந்தபோது மாணவர்களின் வேறுபாடறிந்து கற்பிக்க வேண்டும். எனது நியமனம் கணித ஆசிரியராகும். மாண வர்கள் சிலரின் ஆரம்ப மனப்பதிவே கணிதமென்பது ஒரு வெறுப்பான, கஷ்டமான பாடமென்பது. ஆனால், கணித பாட மென்பதே கல்வியென்ற உடம்புக்கு உயிராக அமைகின்றது. கணிதம் சித்தியடையாதவிடத்து, உயிரற்ற உடலாக, சுவை யற்ற பாலாக அமைந்து விடும். கணிதத்தை, மாணவர் மனப் பாங்கை புரிந்து, அவர்களின் வேறுபாட்டுக்கேற்ப கற்பிக்க வேண்டும். கணிதத்தை வேம்பு எனக் கருதும் மாணவர்க ளுக்கு அது இனிப்பு என உணரக் கற்பிப்பதே சிறந்த ஆசிரி யரின் ஆளுமையாகும். அந்த வகையில் பல பாடசாலை களில் கணிதபாடம் கற்பித்து, பல மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையிலும் உயர்தரங்களிலும் நல்ல பெறுபேறு களைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிச் சென்றுள்ளார்கள். விஞ்ஞான, கலைப் பிரிவுகளிலும் மாண வர்கள் பட்டங்கள் பெற்று உயர்ந்திருப்பதால் அந்தந்த மாண வர்கள், பாடசாலைச் சமூகங்கள், பெற்றோர்கள் மனதில் என்றும் மறவாத ஆசிரியராக இடம் பிடித்திருக்கின்றேன்.

எத்தனையோ மறக்க முடியாத விடயங்கள் நெஞ்சக நினைவு களாக, அழியாத கோலங்காக அகமெனும் ஆழ்மனதில் அவை ஆழ்ந்து கிடக்கின்றன. அவற்றுள் சில: குருக்கள்மட சரஸ்வதி வித்தியாலயத்தில் கற்ற தொண்ணூறு வீதமான மாணவர்கள் கணித பாடத்தில் மிகச்சிறந்த சித்தி பெற்று பல் துறைகளில் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று பல உயர் தொழில்களிலும், ஆசிரியர் தொழில்களிலும் நிய மனங்கள் பெற்று, காணுமிடங்கள், சேவையாற்றுமிடங்க ளெல்லாம் அருளையாவிடம் கணிதம் கற்றே சிறந்த இடங்க ளிலிருக்குகிறோமென்று மனம் விட்டுக் கூறுவதை அறியும் போது அவர்களின் உயர்வே எனது மனமகிழ்ச்சியாகும். தரம் 05-இல் கல்வி பயிலும் மாணவர் பலரைப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு கற்பித்து அவர்களைச் சித்தி பெறச் செய் துள்ளேன். ஆனால் 1999-இல் ஆரைப்பற்றை சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய போது தரம் 05-இல் கற்பிக்க வேண்டிய ஆசிரியை தரம் 04-இல் கற் பித்துக் கொண்டிருந்த இறுதி நேரத்தில் சுகவீனமுற்ற தரு ணத்தில் தரம் 05-இற்கு கற்பித்து மண்முனைப்பற்று பிரதே சத்தில் எம் பாடசாலை மாணவர்கள் 162, 160, 156 புள்ளி களைப் பெறச் செய்தேன். அவர்கள் முதல் மூன்று இடங்க ளையும் இப்பாடசாலையே பெற்றதற்காக, கற்பித்த எனக்கு மட்டக்களப்பு கல்வித்திணைக்களம் சான்றிதழ் தந்து பாராட் டியது. முதலைக்குடாவில் கற்பித்த போது அங்கு உயர்த ரத்தில் இந்து நாகரிகம், இந்து சமயம் கற்பித்த ஆசிரியை கலவரம் காரணமாக மட்டக்களப்புக்கு தற்காலிக நியமனம் பெற்றுச்செல்ல, கற்ற மாணவர்கள் அறுவரும் பெற்றோரும் வந்து அதிபருடன் பிரச்சினைப்பட, பிள்ளைகள் நகரத்துக் குப்போய் கற்க முடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் இயக் கத்தில் சேர்ந்து விடுவார்கள் என அதிபருடன் சண்டையிட, நான் அவ்விரு பாடங்களையும் கற்பித்து அறுவரும் 'B' சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்கள். அன்றியும், ஆசிரியராயிருந்து கற்பித்தலில் பெற்ற அனுபவமே, அதிபராகி பாடசாலையில் கல்வி அபிவிருத்தி, பௌதிகவள அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வாய்ப்பாக அமைந்தது. எனது ஆசிரிய ஆளணியில் இருந்த ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்திகளைப் பெற உதவியமையாலும் பாடசாலைச் சமூகத் துக்கு உதவியமையாலும் அவர்கள் என்றென்றும் என்னிடம் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளனர்.

▸ **முழுநேர ஆசிரியர் பணி உங்களின் கலை வெளிப் பாடுகளுக்கு இடையூறாக அமையவில்லையா?**

நான் குருக்கள் மடம் தமிழ் வித்தியாலயத்தில் கற்பித் தபோது, அதிகமான மாணவர்கள் உயர்கல்விகற்று பல்க லைக்கழகம் சென்றனர், ஒரு தடவை ஒரு கூலித் தொழிலா ளியின் மகள் கணித, விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்குத் தகுதி யுடையவராயிருக்க, அத்தொழிலாளி பிள்ளையை தொடர்ந்து கல்விகற்க வசதியில்லையெனத் தடுத்திருந்தார். பின்னர் ஒருவாறாக அவர் தனது மகளைக் கலைத்துறையில் கற்ப தற்கு வழிசமைத்திருந்தார். அதேவேளை ஒரு போடியாரின் மகள் கலைப் பிரிவிற்கே தகுதி பெற்றும், போடியார் பணவலி மையால் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்க வழிசமைத்துக் கொடுத்திருந்தார். பாடசாலை கல்வி முடிவடைந்ததும் கூலித் தொழிலாளியின் மகள் கலைத்துறையில் பட்டப்ப டிப்பை முடித்து ஆசிரியையாக நியமனம்பெற, விஞ்ஞானப் பிரிவில் கற்ற போடியாரின் மகள் மூன்று வருடங்களில் படிப்பைப் பற்றிப்பிடிக்க முடியாமல் இடைநடுவே நிறுத்தி விட்டார். இச்செயற்பாடு என் மனதில் ஆழப்பதிந்து, பிற்கா லத்தில் 'வழிதவறிய வஞ்சி' எனும் கூத்தை உருவாக்கியது. மாணவர்கள் தங்களால் தூக்கக் கூடிய சுமையைத் தூக்க பெற்றோர் வழிகாட்ட வேண்டுமென்ற கதைக்கருவால் பழக் கிய கூத்து பட்டிதொட்டியெலாம் பாராட்டைப் பெற்றுப் பல உயர்தரப் பாடசாலைகளில் கலைப் பிரிவில் கற்க வழிகாட்டி மாணவர்களைப் பட்டம் பெற இக்கூத்தும் வழிவகுத்ததனை மறக்க முடியாது.

முதலைக்குடா மகாவித்தியாலயத்தில் பணியாற்றும் வேளையிலே கல்வியை இடைநடுவில் நிறுத்தி சில வரு டங்கள் சென்ற நிலையில் ஒரு மாணவனைச் சந்தித்தேன். அவனைப் பகீரதப் பிரயத்தன முயற்சியால் பாடசாலையில் மீண்டும் சேர்த்தேன். வகுப்பில் பயிலும் மாணவர்களை விட இம்மாணவனுக்கு வயது அதிகம் என்பதால் சக மாணவரி டத்தில் பழகுவதில் பல்வேறு இடர்பாடுகள், தாழ்வுச் சிக் கல்களை இம்மாணவன் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந் நிலையில் அவனை எவ்விதமெல்லாம் ஆற்றுப்படுத்த முடி யுமோ அவ்விதமெல்லாம் ஆற்றுப்படுத்தி, வகுப்பு மாணவ தலைவனாக்கி, அவனது நல்ல தலைமைத்துவப் பண்பி னையும் வளர்க்க முயன்று அதிலும் வெற்றி பெற்றேன். பின்னர் அவனையும் ஏனைய மாணவர்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதான நிலையையும் உருவாக்கினேன். அதன் பின், 'தியா கதீபம்' எனும் சமூக நாடகத்தில் கதாநாயகனாக அவனை நெறிப்படுத்திப் பட்டிப்பளைப் பிரதேச பாடசாலை மட்ட நாடகப் போட்டியிலே பங்குபெறச் செய்தேன். பதினான்கு நாடகங்களில் இந்நாடகம் முதலாமிடத்தைப் பெற்றது. அவனின் கூடுதலான நடிப்பின் திறமை கண்டு நடுவர்கள், ஏனைய பாடசாலைகள், ஊர்மக்கள் பாராட்டினார்கள். தயாரித்து நெறிப்படுத்திய என்னையும் பாராட்டி காணுமிடங் களெல்லாம் மரியாதையோடு அணுகினார்கள். அம்மா ணவன் பல்கலைக்கழக வாய்ப்பினைப் பெற்று இன்று

பட்டதாரி ஆசிரியராகவும் திகழ்வது மட்டுமன்றி, நன்றியுணர்வோடு என்னை நினைவுகூருகிறான். ஆசிரியத் தொழில் என் வாழ்வில் நெஞ்சம் நிறைந்த பணியாகிறது. 'ஆசிரியப்பணி அறப்பணி அதற்கு உன்னை அற்பணி' அதற்கேற்றாற்போல கணித எண்ணக்கருக்களைக் கவர்ச்சியுறு வகையில் மாணவரிடத்தே பதியவைக்கும் முயற்சியில் நாடகக் கலையைப் பயன்படுத்தி மாணவர்களை வழிப்படுத்திய சம்பவங்களும் என் ஆசிரிய வாழ்வில் அற்புதமானதாகும். கணித வினாவிடைப் போட்டிகளில் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என்ற மட்டங்களில் மாணவர்கள் தடம் பதித்து இடம் பிடிக்கத் தக்க துணையாய் நானிருந்த காலங்கள் இன்றும் என் மனதில் இளமையாகவே இனிக்கின்றன. கணித பாட ஆசிரியராக மட்டுமல்லாது அப்பாற் சென்று கல்விப்புல இணைப்பாட செயற்பாடுகளுள் ஒன்றான தமிழ்த்தினப் போட்டிகளில் வடமோடி, தென்மோடி, சிந்துநடை, இசைநாடகம் முதலானவற்றை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து அம்மாணவர்கள் மாகாணமட்டம் வரை முதன்மை நிலையினைப் பெற்றுக்கொள்ள வழி சமைத்தேன். அம்மாணவர்களை அத்தோடு விடாது ஒரு தலைமுறை அண்ணாவிமார்களாக உருவாக்கி, அவர்கள் இன்று கூத்துகளைப் பழக்கி அரங்கேற்றுவதற்கும், தமிழ்த் தினப் போட்டிகளில் பங்குபற்றி முதலிடங்களைப் பெறுவதற்கும் உந்து சக்தியாகவும் இருந்தேன். இன்று அவர்கள் இதற்கெல்லாம் காரணம் எங்கள் குரு அண்ணாவியார் அருளம்பலமையாவே எனக் கூறுவதை நினைக்கும் தோறும் பசுமையாக இனிக்கிறது. ஆசிரியர் பணியினையும் எனது கலை இலக்கியச் செயற்பாடுகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டேன் என நினைக்கின்றேன்.

**▶ உங்கள் இளமைக்கால வாழ்வு பற்றி?**

எனது வாழ்வு எனது ஊரான ஆரையம்பதியிலே பெரும்பாலும் அமைந்துவிட்டது. அன்று தொட்டு இன்று வரை இங்கே வாழும் மக்கள் ஆன்மீகம், மரபுரீதியான கல்வி, கலை கலாசாரம், விழுமியங்களைக் கட்டிக்காக்கும் சுட்டித்தனமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அறிஞர்கள், ஆர்வலர்கள், கலைஞர்கள், நிறைந்த கலைகளின் தொட்டிலென ஆரையம்பதியைக் கூறுவார்கள். அதன்படியே எனக்கும் ஆரையம்பதி அன்னை ஊட்டி வளர்த்த ஆன்மீகம், மரபுக்கலைகள் கைகூடிற்று. கல்வி கற்றலிலும் எனக்கு இளமைக்காலத்தில் ஆர்வமிருந்தது. எமது ஊர் கலைஞர்கள், புலவர்கள், விவேகிகள், அறிஞர்கள், ஆர்வலர்களே எனது நண்பர்களாகவும் இருந்தார்கள்; இருக்கிறார்கள். அதுவே எனது வாழ்வுமாகிற்று.

**▶ நாட்டுக்கூத்தில் உங்களுக்கு இவ்வளவு ஆர்வம் வரக் காரணமென்ன ?**

எனது தந்தை ஆரையம்பதி கண்ணகை அம்பாளின் உதவிக் கட்டாடியார் ஆக இருந்தவர். அவரைச் சிறந்த மந்திரவாதி என்பார்கள். இவர் அக்கால பூசாரிமார்கள், மந்திரவாதிகளுடன் நட்பாக இருந்து பல மந்திர, தந்திர, யந்திர ஏடுகளைப் பெற்றுப் படித்து பல வைத்திய முறைகளையும் கைக்கொண்டவர். இதனால் இவரிறந்த பின் நான் வளர்ந்து வரும்போது ஊரவர் உன்னப்பன் சிறந்த மந்திரவாதியென்று கூறி அம்முறையை விடாது மேற்கொள்ளும்படி என்னைத் தூண்டுவார்கள். ஆனால் எனது தாயார் அன்னம்மா, மந்திர விடயங்களில் என்னைத் தடுத்து இளமையிலிருந்தே பாரதம், இராமாயணம், இதிகாசக் கதைகளை கூறி, ஆலயத்திலே படிக்கும் கும்மி, தாலாட்டு, காவடி, காவியப் பாடல்களைக் கேட்கவும் மனனம் பண்ணவும் பழக்கியதுடன், அக்காலத்திலிருந்தே ஆடும் கூத்துக்களைப் பார்க்கவும் மட்டுமே அனுமதியளிப்பார். நானும் கூத்து பழகும் போதும், கூத்து ஆடும் போதும் கலரியின் முன்பாக அமர்ந்து தொடக்கம் முதல் முடியும் வரை பார்த்து, அக்கூத்துக்களின் பாடல்களைப் பாடி வீட்டில் சென்று ஆடிக்காட்டி மகிழ்வேன். இவ்வாறு தொடர்ந்து ஆரையம்பதியில், முகத்துவாரத் தெருவில்

இராம நாடகம், பப்பரவாக நாடகம், குசலவ நாடகம், ஆரைப்பற்றைத் தெருவில் ஆடிய இராமாயணம், தர்மவைகுந்தம், வள்ளி திருமணம், குருக்கேத்திரன் போர், அல்லி நாடகம், சயிந்தவன் நாடகம், நடுத்தெருவிலாடிய வாளவீமன், பப்பரவாகன், அலங்காரரூபன் கூத்துக்கள் வேளாள தெருவில் சுபத்திரை கல்யாணம், 17-ஆம் 18-ஆம் போர், மார்க்கண்டேயர், பேச்சியம்பாள் கோவிலடியில் சிறுத்தொண்டர் நாடகம், கோவில்குளம் லவகுசா நாடகம் என்றும், திருவிழாக் காலங்களில்



கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆடிய கூத்துக்களைப் பார்த்திருக்கிறேன். தர்மர் வைகுந்தம் பழக்கிய போது கோளாவில் அண்ணாவியார் எனது ஆர்வத்தையறிந்து என்னை அழைத்து ஏடு(கொப்பி) பார்ப்பதற்கு அனுமதியளித்ததோடு அன்று சமூகமளிக்காத கூத்தர்களின் பாத்திரத்தில் என்னை ஆடச் சொல்லி ஊக்கப்படுத்தியும் தட்டிக்கொடுத்தார். அதேபோல இராமநாடகத்தில் பரதன் பாத்திரத்தில் ஆடவைத்தார். எமது ஊர் அண்ணாவியார்களான கோவிந்தன், பரிசாரி பொன்னன், பாலியப்பா, காசியர், கணபதியர், செல்லத்தம்பி, இராசையா, கோணலிங்கம் போன்றோருடன் நல்ல உறவினைப் பேணினேன். மத்தாள அண்ணாவிமாராக இளையப்பா(தென்மோடி), நல்லதம்பி(வடமோடி), செல்லத்தம்பி(வடமோடி), பூபாலப்பிள்ளை(வடமோடி), சிவபாதம்(வடமோடி) போன்றோரும் எனக்கு உறுதுணையாக இருந்தனர். அக்காலத்தில் இரு மறலியை வென்ற மங்கை(தென்மோடி), அனுமன் கண்ட சீதை(வடமோடி), வழிதவறிய வஞ்சி(வடமோடி), குரு தட்சணை(வடமோடி) போன்ற கூத்துக்களை எழுதி பாத்திரமேற்று ஆரையம்பதி கந்தசுவாமி ஆலயத்தில் அரங்கேற்றியுமுள்ளேன்.

- **நாட்டுக்கூத்துக் கலை மக்களிடையே இரசனை இழந்து, இல்லாமல் போய்விடும் என்கிற கருத்து உள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

இது தவறான கருத்தாகவே நான் கருதுகின்றேன். ஏனெனில் மட்டக்களப்பு படுவான் கரையில் கன்னங்குடா, மங்கியட்டு, பாவற்கொடிச்சேனை, பருத்திச்சேனை போன்ற அங்குள்ள கிராமங்கள் தோறும், பட்டிப்பளை, அரசடித்தீவு, மகிழடித்தீவு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, முனைக்காடு போன்ற ஊர்களில் ஆண்டு தோறும் கூத்துகள் ஆடி அரங்கேற்றம் செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. ஆனால் யுத்தகாலம், கொரோனா காலத்தில் கொஞ்சம் குறைவாகவேயிருந்தது உண்மைதான். ஆனால், தற்போது தொடர்ந்து மரபுமாறாமையில் வடமோடி, தென்மோடிக் கூத்துகள் ஆடப்பட்டு இளைஞர்களிடமும் கையளிக்கப்பட்டு வருகின்றது. அன்றியும் பாடசாலை மட்ட, பல்கலைக்கழக மட்டத்திலும் கூத்துகள் ஆடப்பட்டு வருகின்றது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**தாங்கள் கலாநிதிப் பட்டம் பெற, ஊரூராகக் கூத்தாடும் அண்ணாவிமார்களிடமும், கூத்தர்களிடமும் சென்று வடமோடி, தென்மோடிக் கூத்துகளை அரைகுறையாக பயின்று பட்டம் பெற்றபின், அவர்கள் தான் கூத்தின் சொந்தக்காரர்கள் எனக் கூறிக்கொண்டு, அந்த அண்ணாவிமார்களையும், கூத்தர்களையும் குறைகூறிக் கொள்ளுகின்றனர். ஆனால், கூத்து கைமாறவில்லை; அதனைக் கைப்பற்ற எத்தனிக்கின்றனர்**

- **மக்களிடம் இருந்த நாட்டுக்கூத்துக்கலை பல்கலைக் கழகங்களுக்கு கைமாறி இருப்பதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

பல்கலைக்கழகங்களில் அண்மைக் காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறியான ‘நாடகமும் அரங்கியலும்’ என்னும் பாடத்திட்டதிற்கமைய கூத்துகளையும் தமதாக்கிக் கொண்டுள்ளனர். இவர்கள் தாங்கள் கலாநிதிப் பட்டம் பெற ஊரூராகக் கூத்தாடும் அண்ணாவிமார்களிடமும், கூத்தர்களிடமும் சென்று வடமோடி, தென்மோடிக் கூத்துகளை அரைகுறையாக பயின்று பட்டம் பெற்றபின், அவர்கள் தான் கூத்தின் சொந்தக்காரர்கள் எனக் கூறிக்கொண்டு, அந்த அண்ணாவிமார்களையும், கூத்தர்களையும் குறைகூறிக் கொள்ளுகின்றனர். ஆனால், கூத்து கைமாறவில்லை; அதனைக் கைப்பற்ற எத்தனிக்கின்றனர். ஆனால் முறைப்படியான மரபுமுறை அல்லது பாரம்பரிய கூத்துமுறைகளை இவர்களால் என்றும் முழுமையாக கைப்பற்ற முடியாது.

- **‘பல்கலைக்கழகம் சார்ந்தவர்களே கூத்தின் இரட்சகர்களாகத் தங்களைக் கட்டமைத்துக் கொண்டிருக்கிறார்கள்’ இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இசை நடனக் கல்லூரியை கட்டுவித்த அமைச்சராயிருந்தவர் இதனை ஆரம்பித்த நோக்கம் பரம்பரையான மரபுக்கலைகள், மரபு மாறாமல் படிக்கின்ற மாணவர்களுக்குக் கையளிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் இதனை முற்று முழுதாகப் பயின்று சென்று மற்றைய வருங்காலச் சந்ததிகளுக்கு மரபு மாறாமல் கையளிக்கவேண்டும்; பல்கலைக்கழகத்திலே கூத்துக்கலையை முறையாகக் கட்டிக்காத்து வரவேண்டுமெனில் வித்தகமுடைய அண்ணாவிமார்கள் விரிவுரையாளர்களாக வரவேண்டும். இவர்களுக்குப் பயிற்றுவித்தலைச் செய்து கற்பிக்க வழிப்படுத்துவதுடன், விரிவுரையாளராக வருபவர்களும் கூத்தை முற்றாக துறைபோகக் கற்றபின்னே விரிவுரை செய்ய வேண்டும்.ஆனால் இவ்வாறான நிலை இன்றில்லை. இன்றைய பல்கலைக்கழகச் செயற்பாடுகள் குரங்கு கைப் பூமாலை போல ஆகியுள்ளதை நினைத்து வேனைப்படுக்கிறேன். கோழியொரு முட்டையைப் போட்டு விட்டுக்கொக்ரிப்பது போலவே கொக்கரிப்பதும், ஆயிரம் முட்டைகளையிட்ட ஆமை போல் மரபு மாறாத கூத்தின் அண்ணாவிமார்கள் அவமானப்படுத்தப்படுவதும் கவலையைத் தருகிறது. பொய்மையாக விரிவுரையாளர்கள் தங்களைக் கூத்தின் சூத்திரதாரியாகக் கட்டமைக்க எத்தனித்தாலும் கிராமங்களில் கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார்கள் இருக்கும் வரை அவர்களே கூத்தின் இரட்சகர்கள். இதை எவரும் மறுக்கவோ மறுதலிக்கவோ முடியாது. கூத்துக்கலையின் பூரணத்துவம் அறியாத அப்பாவிகள். வால் புடியர்கள் அவர்களை ஆதரிக்கலாம். காலக்கண்ணாடி காட்டும் உண் மையை. ஏனெனில், கூத்துக்கலையானது, கூத்து இறையாண்மைத் தொடர்பின் உறவுப்பாலம், கூத்து மரபுவழி ஊடகம், கூத்து அறிவியல் தொழில்நுட்பம், கூத்து வரலாற்றின் குறிகாட்டி, கூத்து தமிழ் இலக்கண, இலக்கியக் காப்பேடு, கூத்து முகாமைத்துவ அடித்தளம், கூத்து பாரம்பரியத்தின் புகலிடம், கூத்து ஒற்றுமையின் தத்துவம், கூத்து இறைதந்த பெருங்கொடை, கூத்து திறமைக்கு ஒரு களம், கூத்து அறிவுக்கு ஒரு பாடம், கூத்து முத்தமிழ் வித்தகம், கூத்து தமிழர் கலை காக்கும் காவலரண், கூத்து கிராமிய பல்கலைக்கழகம், கூத்து ஈழத்தின் தனித்துவம், கூத்து புலவனின் புத்தகம், கூத்து தனிநபர் அடையாளம், கூத்து ஊருக்குப் பெருமிதம்.

**▶ கூத்து மீளுருவாக்கம், புத்தாக்கம், மீள்கண்டுபிடிப்பு என்கிற கோட்பாட்டைப் பற்றி உங்களது கருத்து?**

மட்டக்களப்பு கூத்துக்கலை 1947 வரை புராண, இதிகாசக் கதைகளைக் கதைக்கருவாகக் கொண்டும், 1947-இல் சமூகக் கதைகளைக் கருப்பொருளாகக் கொண்டும் (லெட்சுமி கல்யாணம்) ஆடப்பட்டன. 1960-இல் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், சிவத்தம்பி அவர்களால் ஆட்டம், பாட்டு, மத்தளம் எனத் தாளங்களில் மாற்றமின்றி 'படச்சட்ட' முறையில் மாத்திரம் மாற்றம் செய்யப்பட்டு ஆடப்பட்டது. இம்முறை பட்டணங்களில், பாடசாலைகளில் (தமிழ்த்தினப் போட்டிகளில்) ஆடப்பட்டாலும் கிராமப்புற மக்கள் இம்மாற்றத்தை நிராகரித்தனர். பரம்பரையான (மரபு மாறாத) ஆட்டத்தை மாற்றம் செய்வது பொருத்தமற்றது என இடித்துரைத்து மறுத்தனர்.

அண்மைக்கால பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிலர் 'கூத்துக்கலை மீளுருவாக்கம்' என்ற பெயரில் இக்கலைகளைக் 'கண்டபாவனையில் கொண்டை முடித்தல்' என்பது போல, நாடகத்தைப்போல காட்சியமைப்பு, திரைகள், வாத்தியங்கள் என்பவற்றை புகுத்தி கூத்துக்களை விலாச நாடமாக மாற்றினர். ஆனால் மட்டக்களப்பு கூத்தானது மத்தளம், தாளம், சலங்கையின் ஒருங்கிசைவு என்பதை அறியாதவர்கள் என்பதையே நாங்கள் உணர வேண்டும். 'கூத்தும் மத்தளம் போல் கூடி வாழ்க' என மணமக்களை மட்டக்களப்பில் வாழ்த்துகின்ற வழமையுண்டு. கூத்தையும் மத்தளத்தையும் பிரிக்க முடியாது. அதுபோல் மணவாளனும், மணவாட்டியும் பிரிக்க முடியாதபடி கூடி வாழ்க என்பதாகும்.

சிங்கள பாரம்பரிய கலைகளான கண்டிய நடனம், சோக்கரி, யக்கா முதலிய நடனங்கள் மாற்றமின்றி அவ்வாறே தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றன. அதே உடை, அதே ஆட்டம், அதே 'பெர' வாத்தியம் அதில் எவ்விதமாற்றமும் செய்ததில்லை. அவ்வாறே 'சோக்கரி', 'யக்கர்' ஆட்டங்களிலும் எவ்விதமாற்றமும் செய்யப்படவில்லை. கண்டிய நடனக்காரர்கள் அணியும் ஆடைகள் அப்படியே மாற்றமின்றியிருக்கின்றன. 'பெர' என்ற மத்தள வாத்தியத்தை தவிர வேறெந்த வாத்தியங்களும் பயன்படுத்தப்படுவதில்லை. ஆட்டமுறை, தாளக்கட்டு என்பதிலும் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. இவைகளை நாமேன் சிந்திக்க கூடாது. இந்தியாவிலும் கதகளி, யட்சகானம், தெருக்கூத்து அனைத்தும் பழைய முறைகளிலே பாரம்பரிய கலைகளாகவே ஆடப்படுகின்றன. உடைகள், ஒப்பனைகள் எவற்றிலும் மாற்றமில்லை. ஆட்டங்கள், பாட்டுக்களிலும் எவ்வித மாற்றங்களுமில்லை. யப்பானின் 'கபுக்கி' நடனம், சீனாவின் 'ட்றேகன்' நடனம் அதே பழைய உடை, ஒப்பனை, ஆட்டம் எனத் தொடர்கின்றன. எத்தனையோ தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் போதும் தங்களின் பாரம்பரிய கலைகளில் அவர்கள் கைவைக்கவில்லை. அவ்வாறே நாமும் மரபுவழிக் கலைகளை மாயவலைக்குள் மறைக்க முயற்சிக்காது, நமது பாரம்பரிய கலையான கூத்துக் கலையையும் பேணவேண்டியதும் வருங்கால சந்ததியினரிடமும் மரபு மாறாது கையளிக்கப்பட வேண்டியதும் கட்டாய கடமையாகும். ஏனெனில் பாரம்பரிய கிராமியக் கலைகள் அதன்மூல வடிவத்திலே இருக்கவேண்டும். மாற்றம் செய்வதனால் அதன் தனித்துவத்தை இழந்து, போலி (பொய்) முகத்துடன் காட்சியளிக்கும் எந்த நாட்டிலும் பாரம்பரியக் கலைகளை இவ்வாறு மாசுபடுத்துவதில்லை. நவீனப்படுத்தப்படவில்லை. பாரம்பரிய கலைகள் ஒரு சமூகத்தின் வரலாற்று பதிவுகள் ஆகவும், நாகரிகப் பதிவாகவும் அமைகின்றன. பாரம்பரிய கலைகள் நமது பரம்பரைச் சொத்து. முதுசம். அதில் எவ்வித மாற்றமும் தேவையில்லை. மாற்றம் வேண்டி நிற்பன: நேரமாற்றம், தற்கால நடைமுறைக் கதைக்கரு, தற்கால கூத்தர்களின் ஒப்பனை போன்றவைகள்.



▸ **நீங்கள் பேணிப் பாதுகாத்து வரும் 'நிகண்டு' ஏட்டுப் பிரதியின் கதை என்ன?**

மற்றைய இடங்கள் போலவே எனது ஊரான ஆரையம்பதியிலும் பழைய தலைமுறையினர் ஏட்டுச் சுவடிகளையும் பேணிப்பாதுகாத்து வந்தனர். இன்றும் சிலரிடம் வைத்தியம், மாந்திரீகம் போன்ற ஏட்டுப் பிரதிகள் உள்ளதையும் அறிய முடிகின்றது. அது போலத்தான் எனது தந்தையின் ஏடுகள் ஒரு பொட்டகத்தினுள் கட்டுக்கட்டாக இருக்க, அவர் மறைவின் பின் எல்லா ஏடுகளையும் தனது சகோதரனான இளைய தம்பி, எனது மாமாவின் உதவியுடன் எரியூட்டிய போது, அவற்றில் சில ஏடுகளை பாய்ச்சுற்று அசவுகளில் எடுத்து மறைத்து வைத்து, தமக்கையாருக்குத் தெரியாமல் தன் வீட்டில் பொட்டத்திற்குள் வைத்து, எமது தாயின் மறைவின் பின் எனக்கு அம்மாவின் ஆதங்கங்ளைக் கூறி கையளித்து, மந்திரங்களை மறந்தும் கற்றுவிடாதே தம்பியென்று கூறினார். அவ்வாறு கையளித்த 22 ஏட்டுச் சுவடிகளில் ஒன்றுதான் இந்த அரும்பொக்கிஷமான 'சிந்தாமணி நிகண்டு' ஆகும். இவற்றை பல வகைகளில் பழுதடையா வண்ணம் பச்சிலைகளால் துடைத்து பாதுகாத்து வந்த வேளை முதலில் திருகோணமலை வளாக அரும்பொருட்காட்சியக திறப்பு விழாவின் போது காட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் 'சிந்தாமணி நிகண்டு' ஏட்டினைப் பற்றிப் பரவலான விமர்சனம் வந்தது. ஏட்டுப் பிரதிகளையெல்லாம் மட்டக்களப்பு ஆவணக் காப்பகமான அரசடி நூலகம் பேணிப் பாதுகாத்து வருகிறது. இந்நூலகத்தில் பணிபுரியும் காப்பக ஆய்வு இளைஞர்கள் எமது ஏடுகளையும் பெற்று 'படி'யெடுத்து ஆவணப்படுத்தியதோடு எமது ஏடுகளையும் சுத்தப்படுத்தி பாதுகாப்பாக இருக்கும் வகையில் தேப்பன்தைலதால் சுத்தப்படுத்தி மீண்டும் கையளித்தனர். கிழக்குப் பல்கலைக்கழகமும் அண்மையில் ஏட்டுக் காப்பக பிரிவைத் தொடங்கி எனது ஏட்டுப் பிரதிகள் சிலவற்றையும் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். ஆனால் இந்த நிகண்டு எமது இல்லத்தில் ஏனைய ஏட்டுப் பிரதிகளுடன் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

▸ **உங்கள் செயற்பாடுகளுக்கு உங்கள் குடும்பம் தரும் ஆதரவு பற்றிச் சொல்லுங்கள்?**

***'என்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
***செய்நன்றி கொண்ட மகற்று'***

எனும் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவப்பெருமானின் திருக்குறள் படி, 'வாயும் வகிறுமானாலும் தாயும் பிள்ளையும் வேறு' என்பார்கள். அந்த வகையில் இந்தக் கேள்வி மிகவும் பொருத்தமானது. எனது நன்றிக் கடன்களை நவின்று விட சந்தர்ப்ப மளித்த உங்களுக்கு முதல் நன்றி. எனது அனைத்து கலையிலக்கிய செயற்பாடுகளுக்கும், எப்பொழுதும் கைகொடுத்து, மெய்வருத்தம் பாராது, எதுவும் சொல்லாது குறிப்பறிந்து உதவுபவர் எனது மனையாள். எந்த எந்த மாதிரியான பங்களிப்புகளை எப்வெப்போது செய்ய வேண்டுமோ அவ்வப்போது செய்வார். கூத்து, நாடகம் பழக்கும் போதும், பயிலும் போதும் வரும் அத்தனை கலைஞர்களையும் ஆதரித்துக் காப்பார். வேளைக்கு வேளை தேநீர், குளிர்பானங்கள், சிற்றுண்டிகளை அவரவர் தேவைகளையறிந்து கொடுத்து உபசரிப்பார். எனது நாடக, கூத்து பாத்திரங்களுக்கான சேலை, சட்டை மற்றும் ஒப்பனைப் பொருட்களை அவரே வாங்கி ஒப்பனை செய்வதும், நான் இலக்கிய எழுத்துக்களில் மூழ்கி எழுதும் பொழுதெல்லாம் விழித்திருந்து நேரத்துக்கு நேரம் கண்டிப்புடன் ஆகாரங்களையளித்து உண்ணக், குடிக்க வைப்பார். இன்னும் எனது கலை, இலக்கிய செயற்பாடுகளுக்கு தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்பதை எனது கலையுலகப் பயணத்தில் நான் கண்டு கொண்டேன். எனது ஒரே மகன் பூஸிதன் எனது எழுத்தாங்கங்கள் அத்தனையும் நேரம், காலம் பார்க்காது கண்விழித்து தட்டச்சு செய்து, ஒழுங்குபடுத்தி உரிய உரிய முறைப்படி பிரதிகள் எடுத்து சரிபார்ப்பதற்குக் கொடுப்பார்; எனக்கு அவ்வப்போது தேவை யான தரவுகளை எவ்வகையிலும் பெற்று உடனுக்குடன் உதவுவார். எனது கலையாக்கச் செயற்பாடுகளுக்கு தனது உழைப்பு, நேரம் என்பவைகளை முதலீடு செய்து எனது கலைப் பயணத்தைத் தடையின்றி நான் நிறைவேற்ற முன்னின்று உதவும் திறன், ஆற்றல், மனப்பாங்கினைக் கொண்டுள்ளார்.

▸ **நமது பாரம்பரியக் கலைகள் மற்றும் இலக்கிய முயற்சிகளில் ஈடுபடும் இன்றைய தலைமுறையினருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

கலையென்பது மனநிறைவைத் தரும் சாதனம். கலையானது அதனைப் பயில்வோருக்கும் நுகர்வோருக்கும் மனநிறைவைத் தருகின்ற ஒரு திறனாகும். கலையானது மனிதரைச் செம்மைப்படுத்துவது. பாரம்பரியக் கலை, இலக்கியங்கள் மக்கள் மனம் கொள்ளும் தெய்வீகக் கலைகளாக மிளிர்கின்றவை. கலைகளைக் கலைகளாக மதிக்கவேண்டும். கலைப் பயணத்தில் எத்தனையோ தடைக்கற்களைச் சந்திக்க வேண்டி வரும். அவற்றையெல்லாம் பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, செவிமடுத்தல், நம்பிக்கையாயுதங்களால் படிக்கற்களாக மாற்றி இலக்கையடையப் பயணிக்க வேண்டும். கலையிலக்கியங்களைச் சரியான செம்மையான முறைகளில் கைப்பற்ற கலைஞர்களுக்கிடையே போட்டி இருக்க வேண்டும். அதனைத் தப்பிதமாக விளங்கி பொறாமையாக மாற்றி விடக்கூடாது. உண்மைக் கலைஞர்களை கலையுணர்வுள்ள உண்மை இரசிகர்களே மதித்துப் போற்றி வாழ்த்த வேண்டும். கலைகளின் உண்மை நுட்பங்களையறியாது, கலைஞரென்று தம்மைத்தாமே பீற்றிக்கொள்ளுபவர்களை ஏற்றுக் கொள்ள முடியாது. சரிசம நீதிகளோடு திறமைகளை மதித்தால், உண்மைக் கலைஞர்களாக உயர்ந்து மிளிரலாம் என்பதே நிதர்சனம். இவற்றை ஏற்றுக்கொள்வதோ மறுதலிப்பதோ அவரவர் மனநிலையைப் பொறுத்ததாகும். எனினும், பாரம்பரியக் கலைகளைப் பாரம்பரிய முறைப்படி, பேணிப் பாதுகாப்பதோடு வளர்ந்து வரும் இன்றைய தலைமுறையினர் அதனை முறையாகக் கைக்கொண்டால், உண்மைக் கலையிலக்கியங்களுக்கு உயிரூட்ட முடியும். இதனை உணர்ந்து செயற்படுவார்களாயின் உயர்வைப் பெறமுடியும்.



prasad.s@thaiveedu.com






# அருளின் கவிதைகள்! தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளுள் சிலவற்றின் மீதான பார்வை

– த. கி. ஷர்மிதன்

ஈழத்து இலக்கியப் பரப்பில் பாரறிந்த தமிழ் எழுத்தாளருள் ஒருவர் ஆரையூர் அருளர். தனது உரையாலும் எழுத்தாலும் தமிழ் வளர்த்துவரும் இவரது பணி போற்றத்தக்கது. அடக்கம், பணிவு, விட்டுக் கொடுப்பு, அர்ப்பணிப்பு, சேவை என்பன மிக்க வித்தகக் கலைஞர் இவரென்பது சாலப் பொருந்தும். கிழக்கிலங்கையில் மட்டக்களப்புத் தமிழகத்தில் நன்னகராம் ஆரையம்பதியில் வசித்துவரும் மூத்ததம்பி அருளம்பலம், 'ஆரையூர் அருள்' எனும் பெயரில் தனது எழுத்துப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

கவிதை, கட்டுரை, செய்யுள், பாடல் எனப் பல்வகைமைகளில் சமூகம், சமயம், வாழ்வியல் எனப் பல பொருள்களிலும் ஆக்கங்களை ஆக்கி அளித்துவருகிறார். நவீன கவிதை, மரபுக்கவிதை, கரகம், கும்மி, பின்னல் கும்மி, நாட்டார் பாடல், கிராமியப் பாடல், வாழ்த்துப் பாக்கள், இறையின்பப் பாவாரங்கள், கூத்துப் பாடல்கள், கொம்புமுறிப் பாடல்கள், நவீன கூத்துப் பாடல்கள் என இவர் இதுவரை 10,758 பாடல்களை எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் வீரகேசரி, சிந்தாமணி, தினகரன், தினக்குரல், தினக்கதிர், தினமணி, கதிர், தளிர், கதிரவன், விடிவானம், ஒளி, சிகரம், கீழ்வானம் எனப் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. அவை இவரது தமிழ் ஆளுமைக்குச் சான்று பகர்வனவாய்த் திகழ்கின்றன.

மாவட்ட முதன்மை வாழ்நாள் சாதனையாளர், தேசிய கலைஞர் எனத் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆரையூர் அருள் எழுதிய கவிதைப் படைப்புகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகளில் வெளிப்படும் சிந்தனைகளை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

### தாயவள் ஏங்கி நிற்கிறாள்:

தாய்நாட்டின் (இலங்கையின்) நிலைமையை எடுத்தியம்பும் கவிதையாக இது திகழ்கின்றது. நம்மை ஈன்ற, நம்மைத் தாங்கும் தாய் மண்ணை நமது சுய இலாபத்திற்காய் கவனியாது இருக்கும் நிலைமையை நன்கு எடுத்து விளக்கும் கவிதையாக இக்கவிதை காணப்படுகிறது. எளிமையான சொல்லாடல் மூலம் சொல்லவந்த உயர் பொருளை நன்கு எடுத்துரைக்கும் இவருடைய பாங்கு சிறப்புக்குரியதாகும். பெற்ற தாயையே விலைபேசி விற்கும் ஈனச் செயலைச் சாடிடும் கவிஞரின் ஆதங்கம் எம்மில் சாட்டையாக வந்து விழுகின்றது.

***'சுகபோகச் சாக்கடையில் வீழ்ந்து***
***தம்மினம் விற்க விலை பேசும் - சொந்த***
***மைந்தர்கள் மனநிலை யறியாத***
***மாதா ஏங்கி நிற்கிறாள்...'***

'ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும்' இலங்கையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறும் கவிதை. இலங்கையில் பிரிவினைவாதம் தலைதூக்குவதற்கான காரணம், அதனைச் சரிசெய்யும் முறைமை, இன ஐக்கியத்தால் ஏற்படும் நன்மை என்பவற்றை கவிஞர் கவிதையூடாக வெளிப்படுத்துகிறார்.

இன ஐக்கியத்திற்குத் தடை 'சாதியம்' தான் என்பதை,

***'பேசிடின் ஜாதிகள் பற்றி - மன***
***அந்தகாரம் தினம் முற்றி,..'***

எனப் பாடுகின்றார்.

இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை,

***'சங்கிலி பிணைந்திட்டால் வலிமை - இன***
***சங்கம இணைப்பினால் பெருமை,..'***

எனப் பாடி நன்கு வலியுறுத்துகிறார்.

இலங்கைத் தீவில் மகிழ்ச்சி மலரும் வழியையும் நன்கு வலியு றுத்தியுள்ளார்.

***'மதத்தினை ஒன்றாய் மதிப்போம் - மற்ற***
***இனத்தினைச் சேர்த்தே அணைப்போம்***
***குணத்தினால் கூடி இருப்போம் - தேசிய***
***உணர்வினால் ஒன்றி உழைப்போம்...'***

என்ற வரிகள் இன ஒற்றுமைக்கான பாதையைக் காட்டி நிற் கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஔடதங்கள். ஔவை யாரின் இலக்கியங்கள் மானிட குலத்திற்கு மருந்து போன் றவை என்பதை இக்கவிதை கூறுகிறது. ஔவையாரின் நூல்களை வரிசைப்படுத்திக் கூறி, அவரின் தமிழ்ப் புலமை யையும் அவரின் இலக்கியங்களில் காணப்படும் செழுமை யையும் எடுத்துரைக்கின்றார். அத்துடன் இக்கவிதை ஔவை இலக்கியங்கள் போற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலி யுறுத்தி நிற்கிறது.

***'நெறிதவறா நீதிவாழ்வை நிதம் நேரில்காட்டி***
***அறநெறியாமிவ் விலக்கியங்கள் வாழ்வின் வழிகாட்டி***
***அத்தனையும் மானிடமுன்னேற்ற நல்வழித் திசைகாட்டி***
***அறியுள்ளங்கை நெல்லிக்கனியென நெஞ்சில்***
***நிலைநாட்டி...'***

எனும் வரிகள் ஔவை இலக்கியங்களின் பயனை நன்கு எடுத்துக் கூறுகின்றன.

வாழ்வு மலர்ந்தது வாழ்வு எவற்றால் மலர்கிறது என்பதைக் கூறும் கவிதையும் இது. கூட்டுறவில்தான் வாழ்வின் மலர்ச்சி என்பதையும் இக்கவிதை அடித்துச் சொல்கிறது. கவிஞரின் தமிழ் ஆற்றலும் கற்பனை வளமும் மிகுந்திருக்கும் எளிமை யான இக்கவிதை மனதிற்கு இதத்தைத் தரும் கவிதையா கவும் உள்ளது. சமூகப் புரட்சி சிந்தனைகளையும் இக் கவிதை நன்கு வெளிப்படுத்துகிறது.

***'நல்லுறவாம் கூட்டுறவில் நன்மை விளைந்தது***
***கூட்டாளியாகக் கூடி உழைத்ததால்***
***பாட்டாளி வாழ்வு மலர்ந்தது...'***

எனும் வரிகளில் தொழிலாளர் ஒற்றுமையும் வலியுறுத்தப்படு கிறது.

சமூகத்தில் காணப்படும் பழுதுகள் சரிசெய்யப்படும் போது தான் மனிதம் மாண்பு பெறும் என்பதையும் இக்கவிதை வெளிப்படுத்துகிறது. சமூகத்திலுள்ள மனித மாண்புக்கு எதிரான விடயங்களைப் பட்டியலிட்டு, அத்தகு தீங்குகள் இல் லாதொழியும் போது மனித சமுதாயம் மென்மேலும் மேன்மை பெறும் என்பதையும் எடுத்தியம்புகின்றது.

***'பாலியற் கொடுமைகள் பட்டிட வேண்டும் - அந்த***
***பாவிகள் நொந்தே செத்திட வேண்டும்***
***பெண்ணியம் கண்ணாகப் பேணிட வேண்டும் - அதற்கு***
***திண்ணிய நெஞ்சோடு செயற்பட வேண்டும்'***

எனும் வரிகள் எமது சமூகத்திலுள்ள பெண்கள்சார் கொடு மைகள் அழிய வேண்டியதன் அவசியத்தையும் அத் தகு கொடுமைகள் அழிந்து பாலின சமத்துவம் வளரும்போ துதான் மனிதம் மாண்பு பெறும் என்பதும் வலியுறுத்தப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

விலைபேச முடியாதது அன்பு. அவ்வன்பின் ஆழ, அகலத்தை எடுத்தியம்பும் இக்கவிதை, அன்பு விலை மதிப் பற்றது என்பதையும் அகிலத்தின் ஆணிவேர் அது என்ப தையும் வரலாற்றின் துணையுடன் எடுத்துவிளக்குகிறது.

***'பின்ன மில்லா***
***உயருண்மை***
***அன்புதான்***
***உருவமற்ற மொழிகளிலே சிறந்த***
***தன்புதான் - என்றும்***
***பருவமாற்ற பாதிப் படையாததும்***
***அன்புதான்***
***சமயமனைத்தும் போதிக்கும் தத்துவம்***
***அன்புதான்...'***

எனும் வரிகளில் எம்மை அன்பால் கட்டிப்போட்டுவிடுகிறார் கவிஞர்.

'பாரதி நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று' என்று, பாரதியின் சிந்தனைகளுக்கு முரணாகச் சமூகம் மாறி யுள்ளதை வெளிக்காட்டுகிறது இப்படைப்பு. சமூகத்தின் போக்குப் பற்றியதான தனது ஆற்றாமையைப் பாரதியைத் துணையாக்கி கவிஞர் வெளிப்படுத்திய பாங்கு சிறப்பிற்கு ரியது. பாரதி இனி மண்ணில் பிறக்காமல் இருப்பதுதான் பாரதிக்கு நல்லுது என்பதற்கான காரணங்களைப் பட்டியல் படுத்துவதனூடாகச் சமூகம் பிறழ்வான போக்கில் போய்க் கொண்டிருக்கும் தன்மையை எடுத்துக்காட்டுகிறார்.

***'தீண்டாமை ஒழித்திடு என்றாய் - இன்று***
***வேண்டாமை பேசிடும் வீணர் வாழ்கிறார் நன்றாய்***
***வேற்றுமை முரசெங்கும் முழங்கும்***
***ஆற்றாமை கண்டு நீ அழுதிட வேண்டும் - அதனால்***
***பாரதி! நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று'***

என்ற வரிகள் கவிஞரின் மனநிலை நமக்குத் தெட்டத்தெளி வாகப் புலப்படுத்தி நிற்கின்றது.

என்னென்று சொல்வது நாட்டில் நடக்கும் குழப்பங்களைப் பார்த்துப் புலம்புவதாக இக்கவிதை திகழ்கிறது. மனதிற்கு

ஒவ்வாத, நீதிக்குப் புறம்பான பல்வேறு விடயங்கள் நாட்டில் நடந்தேறுகின்றன. அதனை எதிர்த்துக் கேட்பதும் குற்றம், எழுத்தில் கேட்பதும் குற்றம். வாய்பேசாமல் மக்கள் புலம்பும் தன்மையை எதுகை, மோனைச் சுவைபட எளிய சொற்களால் வடித்துத் தந்திருக்கின்றார் கவிஞர். நாட்டில் என்னதான் நடந்தேறினாலும் எதிர்த்துக் கேட்கமுடியாத கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படும் தன்மையை,

***'என்ன? ஏது? நடக்குதிந்த நாட்டில - என்று***
***சொல்ல முடியாதிருக்கு பாட்டில***
***எல்லாத்தையும் மெழுதிவிட்டா - ஏட்டில***
***எம்மப் பிடிச்சடைப்பா கூட்டில***

எனும் வரிகள் நன்கு புலப்படுத்தி நிற்கின்றன.

## மண்முனைப்பற்று எழிலாள்:

இலங்கையின் கிழக்குமாகாணத்தில் அமைந்துள்ள மண்முனைப்பற்று எனும் பிரதேசத்தின் புகழ்கூறும் கவிதை இதுவாகும். மரபு பா வகையில் கலித்துறையில் அமைந்த இப் பா மண்முனை பிரதேசத்தைப் பெண்ணாக உருவகித்து அதன் வளத்தையும் வரலாற்றையும் கூறி மண்வாசனையைத் தூண்டி மனதை நிறைத்துவிடுகிறது. உலகநாச்சியால் ஆளப்பட்ட சிறப்பிற்குரிய பிரதேசம் மண்முனைப்பற்று என்பதை,

***'மண்முனைப்பற்று இராட்சியம்***
***இளவரசி உலகநாச்சி கோலதோட்சி***
***திண்ணமுடன் சிகரம் சிறப்புற்று விளங்கிய மாட்சி'***

எனும் வரியில் கவிஞர் பதிவுசெய்துள்ளார். நெய்தல், மருதம், குறிஞ்சி, முல்லை நானில வளமும் கொண்ட நற்பூமி என்றும் பல்லின மதத்தவரும் பண்புடன் வாழ்ந்திருக்கும் பிரதேசம் என்றும் மண்முனைப்பற்றின் வளங்கூறி மண்முனைப்பற்றின் எழில் முகத்தை எமது கண்முன்னே கொண்டு நிறுத்தும் பாங்கு சிறப்பிற்குரியது.

***'பாலோடு தயிர் நெய்யளிக்கும்***
***கறவையினம் பல்கிப் பெருகும்***
***தேனோடு முக்கனி முந்திரி***
***நற்கனித்தருக்கள் தழைத்து வளரம்***
***தெங்கோடு நுங்குநிறை பனைகள்***
***செறிந்துசெழித்து விளையும்***
***எங்கும் எத்தொழிலும்***
***செய்திடுதீரர்கள் நிறைந்து விளங்கும்***
***செந்தமிழர் இஸ்லாமியர் தாய்மொழியாலொன்றி***
***சமத்துவமாயிருக்க தன்மடிவிரித்தாள்***
***இந்திஸ்லாம் கிருஸ்தவம் இன்சுவை***
***முக்கனியாயிருக்க வுயர்வளித்தாள்'***

என்ற வரிகள் மும்முனை எழிலாளிடம் எம்மை அழைத்துச் செல்கின்றமை மறுக்கமுடியாத உண்மை.

மட்டக்களப்பின் மண்வாசம் வீசும் மற்றுமொரு கவிப் படைப்பு இதுவாகும். கணவன், மனைவி இருவருக்கிடையிலான உரையாடலாய் அமைந்த இக்கவிதையில், மட்டக்களப்பு பிரதேச வழக்குச் சொற்கள் மிக இலாவகமாகக் கையாளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. கணவன் பல்வேறு தொழில்களுக்குச் செல்லும் போது மனைவி கூறும் வார்த்தைகளை வரிகளாக்கி மட்டக்களப்பு மண்ணின் பண்பாட்டை நமது கண் முன்னே காட்சியாகப் பதிவு செய்துள்ளார். மட்டக்களப்பிலுள்ள ஆண்கள் புரியும் தொழில்களாக பட்டியில் பால்கறக்கப் போதல், காலைப் பாதுகாப்பு, உரமெறியப் போதல், பாயிழைத்தல், கதிரறுத்தல், வீசுதல், விறகு வெட்டல், தோட்டவேலை போன்ற தொழில்களைப் பட்டியல் இடுகிறார் கவிஞர்.

***'பாயிழைக்கப் பன்னறுக்கக் கிரான்குளம் போறமச்சான்***
***திராய்கிடக்கும் புடுங்கிவாங்க சுண்டி வெகுநாளாச்சிது'***

எனவும்

***'புதுக்குடியிருப்பு பொன்விளையும் வயலுக்குள்ள***
***கதிரறுக்க போறநீங்க புதுருக்கதிர் கொண்டுவாங்க'***

எனவும் வரும் கவி வரிகள் ஆடவர் புரியும் தொழில்களைச் சுட்டி நிற்கின்றன எனலாம்.

மட்டக்களப்புப் பாரம்பரிய உணவு முறைகள் பலவற்றையும் இக்கவிதையில் கவிஞர் பதிவுசெய்துள்ளமை சிறப்பம்சமாகும். கொழுக்கட்டை, திராய்ச் சுண்டல், கண்ணாக்கடியன் மீன், மட்டுறால் குழம்பு, மண்டுப்புட்டு, சீலாமீன் பொரியல், தாமரைக் கிழங்கு போன்ற உணவு வகைகளைக் கவிஞர் கூறியுள்ளார்.

***'பாலன்முனை கடற்கரைக்கு வெள்ளாப்போடபோ மச்சான்***
***சீலாமீன் வாங்கிவாங்க கீலமாக வெட்டி பொரிச்சுத்தாறன்'***

எனும் வரிகள் மண்வாசனையை மணக்கச் செய்கின்றன. ஊருக்குள் கோயில் கதவு திறந்தால் மச்சம் விடுதல், பேய் பார்வையாதல், குறிகேட்டல், புதுக்கதிர் எடுத்து வீட்டில் கட்டுதல் முதலான மட்டக்களப்பு மரபுவழிப் பழக்கவழக்கங்களைப் பதிவு செய்துள்ளார்.

***'செல்வாநகர் கிழக்குக் காளிகோயில் திறந்திருக்கு***
***எல்லையெங்கும் மச்சமில்ல'***

என்ற வரிகள் இதனை வெளிக்காட்டி நிற்கின்றன.

கிராமியவாசம் வீசும் மட்டக்களப்புப் பிரதேச வழக்குச் சொற்கள் பல இக்கவிதையில் கையாளப்பட்டுள்ளன.

***'உமலுக்க ஒருதுண்டு ஓட்டு கொழுக்கட்ட இருக்கு***
***மறவாம தின்னுமச்சான் மதியம்வர பசியெடுக்கா'***

எனும் வரிகளில் வரும் உமல் எனும் பிரதேசக் கிளைமொழி குறிப்பிடத்தக்கதாகும். (உமல் என்பது பனை ஓலையால் செய்யப்பட்ட பொருட்களைக் காவுவதற்குப் பயன்படும் ஒரு பையாகும்) இவ்வாறாகச் சமூகத்தின் மரபுகளைப் படம் பிடித்துக்காட்டும் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவும் பல கவிதைகளை ஆக்கி அளித்த ஆரையூர் அருளின் தமிழ் ஆளுமைப் பண்பு நயந்து போற்றுதற்குரியது என்றால் மறுப்பதற்கில்லை.



sharmithan.k@thaiveedu.com

# ஆனையூர் அருள்

– மு. சிவகுமாரன்

எழுசீர் விருத்தம்
விளம் மா விளம் மா
விளம் விளம் மா

முத்தமிழ் செழித்துச் சொத்தெனக் காக்க
முயல்கிறாய் திறனுடன் தோன்றி
வித்தகம் நிறைந்த வளமிகு முத்தாய்
வியனுல குய்யவே வந்தாய்
சத்தியம் காத்தே நித்தமும் வாழ
சகலரும் இன்புற என்றே
இத்தரை சிறக்க அருளுடன் எழுந்த
இன்முகம் இன்புற வாழ்க !

மகத்துவம் பெற்ற குறைகளை ஆசான்
மாணவர் கற்றனர் உன்னால்.
இகத்தினில் வயதும் தடையில்லை என்றே
இணைந்துநீ பெற்றனை பட்டம்
அகமது நிறைய அதிபராய்த் தேர்ந்
ஆண்டனை அனைவரும் போற்ற
முகமது மலர்ந்த செழிப்புறு தமிழே
முழுவுல கும்தொழும் உன்னை!

எழுபது கடந்த போதிலும் நீயோர்
எழிலுறு இளையவன் தானே
எழுத்திலும் ஆக்க மொழிமுறைப் பேசும்
எங்கணும் அருளொளி அன்பாய்
முழுமதி யுடைய புலவனாய் ஆனாய்
முதல்நிலை இலக்கியத் தாலே
பழுதிலாப் பாவ லனாகியே பாரில்
பனிச்சென ஒளிர்ந்திரு முத்தே

வில்லிசை கூத்தும் கும்மியும் நன்றாய்
விளையுதே செழிப்புடன் ஓங்கி
பல்திறப் பாக்கள் காவடிச் சிந்தும்
பரமனைப் புகழ்ந்துமே பாடும்
தொல்தமிழ் காக்கும் புலவனும் ஆக
தோன்றுதே காவியப் பாடல்

sivakumaran.m@thaiveedu.com








# ஆரையூர் அருளும் சிறுகதையும்

– வ. துஷாந்தன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பழம்பெரும் கிராமங்களில் ஒன்றே ஆரையம்பதி. இக்கிராமம் ஆரம்ப காலத்தில் ஆரைப்பற்றை என அழைக்கப்பட்டது. இக்கிரா மத்தில் கலை, இலக்கிய ஈடுபாடு கொண்டு மிளிந்தவர்கள் பலர். அவ்வரிசையில் இதே கிராமத்தில் பிறந்து, வளர்ந்து வசித்துக்கொண்டிருப்பவர்தான் ஆரையூர் அருள் என அறி யப்படும் மூத்ததம்பி அருளம்பலம். சிறுவயதில் இருந்து கலை, இலக்கியத்தில் ஆர்வம் செலுத்தியதினால் இன்று ஆக்க இலக்கியங்கள் பலவற்றை ஈர்ந்தளித்துள்ளார்.

இவரால் எழுதப்பட்ட ஆக்க இலக்கியங்களில் சிறுகதையும் ஒன்றாகும். தரம் 5-இல் கற்கும் போதே சிறுகதை எழுதுவதில் ஆர்வம் செலுத்தியுள்ளார். அவ்வருடத்தில் அவர் எழுதிய 'அவள்' என்ற சிறுகதை சான்றளிக்கின்றது. இச்சிறுகதை பாடசாலை மட்டப் போட்டியில் முதலிடத்தினையும் பெற்றது. இதைத் தொடர்ந்து பல சிறுகதைகளைச் சிற்றிதழ்கள், பத்தி ரிகைகள், போட்டி நிகழ்ச்சிகளுக்காக எழுதியுள்ளார். அவ்வ கையில் இவரால் எழுதப்பட்ட சிறுகதைகளாக 'அவள்' (1986), சமுதாய தராசு(2000), மாணவர் மையக் கல்வி(2003), பாரம் குறைந்தது(2010), நினைவலைகள்(2012), ஒற்றுமையே உயர்வு தரும்(2012), பொறாமை வேண்டாம்(2014), தப்புக் கான தண்டனை(2014), தந்திரம் இருந்தால் மந்திரம் வேண்டாம் (2016), அந்த நினைவு(2016), நாட்டார் பாடல்(2016), நாட்டார் கலை கற்றல்(2018), நன்றி கடன்(2019), உயர்ந்த உள்ளம் (2019), கசமுகாசூரனின் கர்வம் அடக்கிய கணபதி, மனமாற் றம், மூர்க்கனும் முதலையும்(2022), நன்றும் தீதும் பிறர்தர வாரா(2021), நெஞ்சக நினைவுகள்(2021), வாழ்வளித்த தொழிற் கல்வி(2021), கடுகு சிறிது காரம் பெரிது, அகத்தே அழிந்த ஆசை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இச்சிறுகதைகளில் பெரும்பான்மையானவை, சமூகத்தின் பண்பாட்டினையும் விழுமியங்களையும் இறைவனின் பெரு மைகளையும் வாழ்வியல் அம்சங்களையும், தற்கால கல்வி முறைமையினையும் சித்தரிப்பதாக அமைந்துள்ளன. சமுதா யத்தின் தேவை அறிந்து செயற்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துவதாக இவரின் 'அந்த நினைவு', 'மனமாற்றம்' போன்ற சிறுகதைகள் அமையப்பெற்றுள்ளன. துன்ப துய ரங்களை அனுபவித்து முதன்நிலையை பெற வேண்டும் என துடிக்கும் மாணவர்களைத் தட்டிக்கொடுக்க வேண்டும் என்ப

**இவரின் சிறுகதைகளில் பேச்சு வழக்கு கையாளப்பட்டிருக்கின்றது. வரலாற்று செய்திகள் உள்ளன. குறைந்தளவிலான பாத்திரங்களுடன் கதை நகர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. நகர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. உணர்வு தூண்டல், எளிய வசன நடை என்பன இவரின் சிறுகதைகளில் காணப்படுகின்றது.**

தனையும் அத்தட்டிக்கொடுப்பால் மாணவர்கள் வெற்றியை நிலை நாட்ட வேண்டும் என்பதனையும் உள்ளார்ந்த அர்த்தமாக கொண்டு அந்த நினைவு என்ற சிறுகதை நகர்கின்றது. இதனை இக்கதையில் வருகின்ற பாத்திரங்களும் சம்பவங்களும் உணரச்செய்கின்றன. கோரத்தாண்டவத்தில் சிக்கிச் சிதைக்கப்பட்டு, மொட்டிலே கருகும் மலர்களாக மாணவர்கள் இருக்கிறார்கள் என்னும் நிதர்சனமான உண்மையினை சுரேசின் வாழ்வுக்கூடாக இச்சிறுகதை விளக்கிச் செல்கிறது. சமூகத்தினை விழிப்பூட்டுவதாக இவரின் 'கசமுகாசூரனின் கர்வமடக்கிய கணபதி' என்ற சிறுகதை அமைந்துள்ளது. இச்சிறுகதையின் மூலமாக அதர்மம் அழிவைக் கொடுக்கும் என்பதனை கூறி சமூகத்தினை விழிப்பூட்டுகிறார் ஆசிரியர்.

ஆரையூர் அருள் வசிக்கின்ற பிரதேசம் இஸ்லாமிய சமூகத்தினர் அருகில் வாழ்கின்ற பிரதேசமாகும். இம்மக்களின் கலை, இலக்கியத்தோடு இணைந்து கொள்பவர் மட்டுமல்லாது தனது இலக்கிய வட்டத்தினையும் இவர்களோடு இணைத்து கொண்டவர் என்றதனடிப்படையிலும் இவரின் சிறுகதைகளிலும் அச்சமூகத்தின் பேச்சு நடைகள் கலந்திருப்பதனையும் கண்டு கொள்ள முடிகிறது. இதனால் இவரின் சிறுகதைகள் இன நல்லுறவை வெளிப்படுத்தும் சிறுகதைகளாக அமைகின்றன. இவரின் 'நெஞ்சக நினைவுகள்' என்ற சிறுகதையில் கீழ்வரும் சம்பவம் ஊடாக இன நல்லுறவை காணமுடிகின்றது.

*'பைபிளின் கருத்தை பலீல்மௌலானா பற்றுடனே கூறுவதும், கீதை சொட்டும் போதனையை கீஸ்தோபர் பேசுவதும், இயேசு காவியந்தன்னை காசியானந்தன் கதை கதையாய் கதைப்பதையும், கண்ணகையம்பாள் சடங்கு காலத்தில் காசீம்காக்கா குடும்பம் நேர்த்திகள் கொடுப்பதும், வேதாந்த ஆராதனை காண வேல்முருகு குடும்பம் செல்வதுவும், கந்தூரி காலத்தில் கைலாயநாதர் குடும்பம் கலந்து கொள்வதுவும், சீனிமுகம்மது மகன் சுன்னத்துக்கு கிறிஸ்தவ, இந்து குடும்பங்களும், இந்துக்கள், கிருஷ்தவர்கள் திருமணத்தை முஸ்லிம்கள் முன்நின்று நடத்துவதும், எல்லோரினதும் மரணக்கிரியைகளில் எல்லா மதத்தவரும் பொறுப்புடனே பங்கு கொள்வதும் பண்பாட்டு, கலாசார, பாரம்பரியங்கள் பேணிக் காப்பதுவும் எல்லோரும் ஒரே தாய் மக்கள் என்று வாழ்ந்து வந்ததுவும், அந்தக் கிராம பாடசாலையில் நான்காம் தரம் வரை அனைவரும் சாதிமத பேதமின்றிச் சமத்துவமாய் கற்றதுவும் உள்ளமது குதூகலிக்க ஒன்றாயிருந்து உணவுகளை பகிர்ந்துண்டு மகிழ்ந்ததுவும் நினைவலைகளாகயெழுந்து நெஞ்சை நெருடி மணம் பரப்பின'.*

இவரின் 'நன்றிக்கடன்' என்னும் சிறுகதை கடந்த கால போர்ச் சூழலில் ஏற்பட்ட இழப்பை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய உபாயங்களை எடுத்துரைப்பதுடன், நன்றி மறவாமை உள்ளவர்களாகவும் மக்கள் வாழ வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகிறது.

கல்வி புலத்தில் நீண்ட காலம் சேவையாற்றியவர் என்றதனடிப்படையில், சமகாலக் கல்வி தொடர்பிலும் ஆரையூர் அருள் அதிக கவனஞ் செலுத்தி வருகிறார். எதிர்கால மாணவர்களின் நிலை தொடர்பிலான வெளிப்படுத்தலை ஆரையூர் அருளின் சிறுகதைகளில் கண்டு கொள்ளலாம். அதாவது தற்காலத்தில் இருக்கின்ற புத்தகக்கல்வி முறையால் தொழிற்சந்தையில் வேலைகளை பெற்றுக்கொள்ள முடியாமல் பட்டதாரிகள் தொடர்ந்து போராடி வருவதையும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதையும் சுட்டிக்காட்டி தொழில்மையக் கல்வி முறையின் அவசியத்தினை 'வாழ்வளித்த தொழில்கல்வி' என்ற சிறுகதையின் ஊடாக வெளிக்காட்டுகின்றார். இதே போன்று 'மாணவர் மையக் கல்வி' என்ற சிறுகதையின் ஊடாக ஆசிரியர் மையக்கல்வியில் இருந்து மாணவர் மையக் கல்விக்கு மாற வேண்டும் என்பதனையும் வெளிப்படுத்துகின்றார். அதாவது, மாணவர் மையக்கல்வி முறை என்று சொல்லப்பட்டாலும் ஆசிரியர்கள் இன்னும் இதிலிருந்து விடுபடவில்லை. ஆசிரியர் மையத்திலேயே நின்று கொண்டிருக்கின்றனர். இது மாற்றமுற வேண்டும். என்பதனை இதன்மூலம் கூற விளைகின்றார்.

ஆரையூர் அருளின் சிறுகதைகள் இவ்வாறு அமைந்துள்ள அதேவேளை, சிறுகதைகள் சிறந்த கதைகளாக மிளர்வதற்கு அதில் கையாளப்படும் உத்தி முறைகளும் பெரும்பங்கு வகிக்கின்றது. அவ்வகையில் இவரின் சிறுகதைகளில் பேச்சு வழக்கு கையாளப்பட்டிருக்கின்றது. வரலாற்று செய்திகள் உள்ளன. குறைந்தளவிலான பாத்திரங்களுடன் கதை நகர்ந்து செல்வதைக் காணமுடிகின்றது. உணர்வு தூண்டல், எளிய வசன நடை என்பன இவரின் சிறுகதைகளில் காணப்படுகின்றது. சமூக உணர்வும் இவரின் கதைகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. பொருத்தமான தலைப்பு, சுருக்கமான வெளிப்படுத்தல், போன்றன சிறப்பாக அமைந்திருப்பதனையும் காணலாம். சிறந்த சிறுகதைகளை சமூகத்திற்கு வழங்கிய எழுத்தாளர் என்ற வகையில் ஆரையூர் அருள் சிறப்பிடம் பெறுகின்றார்.



thusanthan.v@thaiveedu.com




# ஆரையூர் அருளின் கட்டுரைகள்
## நோக்கும் போக்கும்

– மா. உலககேஸ்பரம்

தமிழ் இலக்கியத்துறையில் தன்னை நிலைநிறுத்தி சாதனைகளைப் புரிந்து பல விருதுகளுக்கும் பாராட்டுக ளுக்கும் சொந்தக்காரனாக விளங்கும் ஆரையூர் அருளம்ப லத்தின் சிறப்புகள் எண்ணிலடங்காதவை. கவிஞராக, எழுத் தாளராக நடிகராக, இலக்கிய விற்பன்னராகத் திகழும் இவரின் கலைப்பணியானது என்றென்றும் எச்சமூகத்தின ராலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டியதொன்றாகும். தற்போது அருகி வரும் எமது பாரம்பரியக் கலைகளுக்கு உர மூட்டுவதாக இவருடைய கலை, இலக்கியச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதற்கு இவரால் எழுதி அளிக்கைச் செய் யப்பட்ட கூத்து, வில்லுப்பாட்டு, கும்மி, கரகாட்டம் என்பன சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். ஆரையூர் அருள் கலை, இலக்கியத்துறை வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்புக்க ளுக்காக கலாசார அமைச்சு 'கலாபூஷணம்' விருது வழங்கி அவரைக் கௌரவித்தது. மேலும் இவரால் வெளியிடப்பட்ட 'கிராமத்து உள்ளங்கள்', 'இறையின்பபாவாரம்' போன்ற நூல் களுக்கு விருதுகளும் கிடைக்கப் பெற்றமை இவரது திற மைக்குச் சான்றாகும். இவரது எளிமையான போக்கிற்குப் பெருமை சேர்ப்பதுபோல 'செம்மொழிப் புலவர்' பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களை ஆரையூர் அரும் பலம் சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம், வில்லுப்பாட்டு, சடங்குப் பாடல்கள், கூத்து எனப் பல வடிவங்களில் எடுத்தி யம்பியுள்ளார். முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட இவருடைய கட் டுரைகள் உள்வாங்கி இவ்வாய்வுக்கட்டுரை எழுதப்படுகிறது. ஆரையூர் அரும்பலத்தின் கட்டுரைகளை வரலாறு சார்ந்த கட்டுரைகள், நிகழ்கால கதைகள், அறிஞர்களின் சிந் தனைகள், இந்து மத வழிபாட்டு முறைகள், இலக்கியத்தோடு தொடர்புபட்ட கல்வி முறைகள் என வகைப்படுத்தி ஆராயலாம். இலக்கியம் சார்ந்த கட்டுரைகளில் கலை இலக் கியமும் கல்விச் செயற்பாடும், சிறுவர் இலக்கியமும், இலக்கிய விபரணமும், கவிதை அமைப்பு போன்றனவும் விரவி நிற்கின்றன. கலை இலக்கியமும் கல்வி செயற்பாடும் என்னும் இவருடைய கட்டுரை கலை இலக்கியங்களைக் கல்வி செயற்பாட்டுடன் எவ்வகையில் தொடர்புபடுத்தலாம் என்பதை ஆராய்கின்றது. இவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு மனிதநேய பண்புகள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக திரட்டி தருவது கலையும் இலக்கியமுமே என் கின்றார். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் இக்கட்டு ரையில் குறிப்பிட்டு இலக்கியமே கலைகளுக்குள் தலையாய கலையாகும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களில் மனித வாழ்வியலில் ஒழுக்க அற நெறிகள் வெளிக்காட்டப்படுவதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. கலை, இலக்கியம் என்பன ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என இக்கட்டுரையில் கூறுமிவர் இலக்கி யங்கள் கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்கப் பயன்படும் தளங்கள் எனவும் விளக்கியுள்ளார். அத்துடன் கலை இலக்கி யங்களைக் கல்வி செயற்பாட்டுடன் இணைப்பதற்கான வழிக ளையும் கூறுகின்றார். முறைசார் கல்வித் திட்டமிடலில் இலக் கியங்கள் தொடர்பாக புதிய செல்நெறிகள் இணைக்கப் படும்போது கலை இலக்கியங்களைப் பாதுகாக்க முடியும் என்பதையும் உணர்த்தியுள்ளார்.

சிறுவர் இலக்கியம் எனும் கட்டுரையானது சிறுவர் பாடல்கள் எனும் தலைப்பிலுள்ள நூலுக்கு எழுதிய விமர்சனமாக அமைந்துள்ளது. இதில் சிறுவர் இலக்கியமும் நவீன இலக்கி யங்களில் ஒன்றென வலியுறுத்தும் இவர் சிறுவர் இலக்கி யங்களை எழுதுகின்ற பலரும் சிறுவர் உளவியல் தொடர்பான அறிவியல் சார்ந்து சிந்திக்காமலும் சிறுவர்களாக மாறாமலும் பெரியவர்களாக நின்று எழுதுகின்றார்கள் என்பதையும் சுட் டிக்காட்டியுள்ளார். இதில் சூழலியல் தொடர்பான விடயங்க ளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு குறிப்பிட்ட சமூ கத்தின் வாழ்க்கை முறைகளை உதாரணங்கள் மூலம் விளக் கியிருப்பதையும் காணமுடிகின்றது.

மூ. அருளம்பலத்தின் 'இலக்கிய விபரணம்' எனும் கட்டுரை 'சிறுகதை' குறித்துப் பேசுகிறது. விபரணத்தில் வரும் சொற்பி ரயோகங்கள், மொழிநடை, சிறுகதையின் உட்பொருளுக்கு கொடுக்கும் விளக்கம் என்பன மற்றவர் மனதைப் பண்படுத் துவதாகவும் சுவைமிக்கவும் அமைந்துள்ளது எனக்கூறுகிறார். மேலும் கனவுலகம் எனும் நூல் பற்றி குறிப்பிடும் போது சமகால விடயங்கள் மட்டுமின்றி ஏனைய எழுத்தாளர்களின் கவனத்துக் கெட்டாத புதிய விடயங்களையும் பேசுகிறது.

விபரணத்தின் மகுடமாக 'மகரதோரணம்' பற்றி நோக்கு கின்றார். இதில் நகைப்புக்குரிய மொழிப்பிரயோகங்களை ஆழமாகப் பார்க்கின்றார். மொழிபெயர்ப்பாளர் சுவாமிநா தனுக்கு சிங்கள இலக்கியங்களில் உள்ள பாண்டித்தியத்தி னையும் எடுத்துக்காட்டுவதாகவும் இக்கட்டுரை அமைகிறது. கட்டுரைகளின் வசன நடை, உட்பொருள் என்பன அருளம்ப லத்தின் ஆற்றலையும் திறனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

விபுலானந்தர், இராமானுஜர், சுவாமி விவேகானந்தர் முதலான அறிஞர்களின் கருத்துக்களையும் சமூகப் பணிக ளையும் கட்டுரைகள் பலவற்றில் எடுத்தாண்டுள்ளார். 'விபுலா னந்தரின் சமரச சமத்துவ சமூக பணி' எனும் கட்டுரையின் தலைப்பிலேயே கட்டுரையின் மையக்கருத்துகள் உள்வாங்

கப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். விபுலானந்தர் பற்றிய சகல விடயங்களும் வாசகர் மனதில் ஊற்றெடுக்கும் வகையில் கட்டுரையின் வசனநடை அமைந்துள்ளது. இக்கட்டுரையில் விபுலானந்தரின் சிறப்புகளை கூறுமிவர், குறிப்பிட்ட ஓர் இனத்திற்கு மாத்திரமின்றி அனைத்து சமூகத்திற்கும் கிடைத்த மாபெரும் பண்பாட்டு கலைப் பொக்கிஷமாக விபு லாநந்தரைக் காணுகின்றார். சமரச சமத்துவ சமூகப் பணிகளின் ஊடாக தூங்கிக்கிடந்த சமுதாயத்தினை விபுலா நந்தர் வீறு கொள்ளச் செய்வதையும் இக்கட்டுரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். சாதிக் கொடுமையைத் தகர்த்தெறியவும், தாழ்ந்த சமுதாயத்தினை மேம்படுத்தவும் கல்விதான் முக்கியம் என்பதை உணர்த்தி இதற்கு மட்/சிவா னந்தா பாடசாலை சான்றாக அமைந்துள்ளதையும் தெளிவுப டுத்தியுள்ளார். சமூகத்திற்கு தேவையான சமரச நோக்குக்கு வித்திட்ட ஆரம்ப கர்த்தா விபுலாநந்தர் என்பதை இக்கட்டுரை நிறுவிச் செல்கிறது.

இராமானுஜர் கணிதத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பைச் சுபீட்சம் சஞ்சிகையில் எழுதிய கட்டுரை உணர்த்தி நிற்கிறது. இராமானுஜர் வாழ்க்கையைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு சில கணித துணுக்குகளையும் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே சுவாமி விவேகானந்தர் பற்றிய கட்டுரையில் விவே கானந்தரின் சமூக மற்றும் சமத்துவம் சார்ந்த சிந்தனைக ளையும் அவருடைய ஆன்மீகப் பணிகளையும் விளக்கி யுள்ளார். குறிப்பாக சாதி வேற்றுமையைக் கண்டித்து அதன் கொடூரத் தன்மையிலிருந்து விடுபட விவேகானந்தர் கையா ண்ட முறைகளையும் இக்கட்டுரையில் அருளம்பலம் சுருக்க மாகக் கூறியுள்ளார். சாதி வேற்றுமை, சமய, சமூக முன்னேற் றத்திற்கும் ஒரு தடைக்கல் என்பதை இக்கட்டுரையில் ஆழ மாக வலியுறுத்தி உள்ளார். விவேகானந்தர் கல்வி தொடர் பாகக் கூறியவற்றைச் சுருக்கமாகக் கூறி கல்வியின் இறுதி நோக்கு மனிதத்தன்மையைத் தருவதாக இருக்க வேண்டு மென்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார்.

அருளம்பலம் அவர்களின் இலக்கிய படைப்புக்களில் இந்து மதத்துடன் தொடர்புபட்ட கட்டுரைகளும் உள்ளடங்கு கின்றன. இவற்றுள் மண்முனை பிரதேச பெண் தெய்வ வழிபாடு, காட்சி தந்த பேச்சியம்மன், இந்து ஆலய அமைப்பு, இந்து மதத்தின் சிறப்பம்சம், சைவ சமயத்தில் கண்ணகி வழிபாடு, விநாயக விரதம், நான் கண்ட நாகசக்தி போன்ற சமயக் கட்டுரைகள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை. 'மண் முனைப் பிரதேசப் பெண் தெய்வ வழிபாடு' எனும் கட்டு ரையில் சக்தி வழிபாட்டின் தத்துவம் விரிவாக விளக்கப்பட் டுள்ளது. இப்பிரபஞ்ச தோற்றத்திற்கு மூலாதார சக்தி ஆதிப ராசக்தி என்பது சாக்த மதத்தின் முடிந்த முடிவென்பதை இக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. பெண் தெய்வ வழிபாட்டின் பத்தாசி முறை பற்றியும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மேலும் 'கணபதி வழிபாடு', 'விநாயக விரதங்கள்' போன்ற கட்டுரை களில் விநாயக தத்துவம், விரதம் அனுஷ்டிக்கும் முறைகள் என்பன சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் 'காட்சி தந்த பேச்சியம்மன்', 'சிறப்பு மிகு சிவராத்திரி', 'நான் கண்ட நாகசக்தி' என்பவற்றில் தெய்வத்தின் மகிமைகளும் பெருமைகளும் எளிமையானமுறையில் விளக்கப்பட்டுள்ளன.

இவருடைய 'மட்/வடமோடித், தென்மோடி கூத்துக்கள்', 'எமது பிரதேச மரபுக் கலைகள்' (நிகழ்கலைகள்) என்பன கலைகள் தொடர்பான கட்டுரைகளுக்கு சான்று பகிர்கின்றன. மட் / வடமோடி தென்மோடி கூத்துக்கள் எனும் கட்டுரையானது எமது சமூகப் பாரம்பரியத்தில் பின்பற்றப்படும் வட, தென் மோடி கூத்துப் பிரதிகள் பற்றிய விளக்கத்தை தருகிறது. இதில் கூத்தின் அடிப்படைத் தன்மைகள் விளக்கப்படுவ துடன், அண்ணாவியார் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாகவும் கூறப்படுகிறது. அண்ணா விமாரின் ஆடல், பாடல், அவர்களின் திறன், இரசனை மற்றும் மத்தளம் அடிக்கும் வித்தகத்தன்மை என்பனவற்றை இம்மியும் பிழையில்லாமல் இகட்டுரை கூறிநிற்கிறது. கூத்தினை வழி நடத்திச் செல்பவராக அண்ணாவிமார் அமைதல் வேண்டு மென்பதையும் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். எமது பிரதேசக் கூத்துகளின் கையெழுத்துப் பிரதிகளின் பாடு பொருளாக 'மகாபாரதம்', 'இராமாயணம்' ஆகிய இதிகாசக் கதைகள் எழுத்தாளப்படுகின்றன. கடந்த சில தசாப்தங் களில் கூத்து மீளுருவாக்கம் நவீன மயமாக்கல் உருவாக்கத் தின்போது சமகாலச் சம்பவங்களும் கூத்துப் பிரதிகளில் உள்வாங்கப்பட்டிருப்பது ஆரோக்கியமானது.

அடுத்து பிரதேச மரபுக் கலைகள் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையானது தற்கால சமூகத்திற்கு எமது பிரதேசத்திற் குரிய பாரம்பரிய மரபுக் கலைகள் தொடர்பான விடயங்களை வெளிக்கொணர்கின்றது. மரபுக் கலைகளுக்குள் காவடி, கும்மி, வில்லுப்பாட்டு, கரகம், இசை நாடகம், தெருக்கூத்து, பொம்மலாட்டம் என்பவற்றை உள்ளடக்கி அவற்றின் சிறப்பம் சங்களையும் விளக்கியுள்ளார். காவடி, கும்மி, கரகம் என்பன ஆலய சடங்குகள், திருவிழாக்களின் நடந்தேறுகின்ற கலைநி கழ்வுகளாகும். எமது பிரதேசத்தின் பண்பாட்டு அடித்த ளத்தினை நிலை நிறுத்திய கூத்துக்கலை பற்றியும் விரிவாக விளக்க முயன்றுள்ளார். கூத்தின் வகைகளைக் குறிப்பிட்டு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் கட்டு ரையில் விளக்கி உள்ளார்.

பொதுவாக அருளம்பலம் அவர்களின் கட்டுரைகளின் வசன நடை, படித்தவர் மட்டுமின்றி பாமர மக்களும் வாசித்து பயன் பெறக்கூடிய வகையில் அமைந்துள்ளன. வரலாற்றுக் கதைக ளைச் சித்தரிக்கும்போது இலகுவான வசன நடை கையாளப் படுகிறது. கட்டுரையின் தன்மைகளுக்கேற்ப அணிப் பயன்பாடு களும் கையாளப்பட்டுள்ளன.

'ஆரையூர் அருள்' என அழைக்கப்படும் மூ. அருளம்பலம் ஐயா அவர்கள் பல்துறை சார்ந்த கலையாக்கச் செயற்பாடு களைப் படைத்து வருபவர். 'பல்கலை வித்தகர்' என மட்டக்க ளப்பு மக்களால் போற்றப்படுபவர். 'அறன் வலியுறுத்தல்' எனும் அதிகாரத்தில் உள்ள குறள்பாக்களை மரபுக்கவிதை முறையில் எடுத்துக் கூறி உலக சாதனையை ஒன்றையும் மட் டக்களப்பில் நிகழ்த்தி உள்ளார் என்பதையும் அறியமுடி கின்றது. இவருக்கு கிடைக்கப்பெற்ற பட்டங்களும் பாராட்டுக் களும் விருதுகளும் எண்ணிலடங்காதவை. இவற்றையெல் லாம் ஒரு தனி மனிதரால் பெற்றுக்கொள்ள முடியும் எனின் இவரின் திறமை, ஆற்றல், புலமை என்பவற்றை நம்மைப் போன்ற சாதாரண மக்களால் மதிப்பிட முடியாது என்றால் அது மிகையாகாது.



ulakakēsparam.m@thaiveedu.com




# ஆரையூர் அருளம்பலத்தின் பன்முக ஆளுமையும் சிறப்புகளும்

– சு. சந்திரகுமார்



கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆரையூர் அருளம்பலம் அவர்கள், தமது வாழ்நாள் முழுவதையும் பிரதேசத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு அர்ப்பணித்தவர். இவர் தமது சிறுவயதிலேயே தமக்கான கலைப் பயணத்தைத் தொடங்கியவர். தமது பிரதேச வாழ்வியலினூடாக, கூத்துக் கலையினூடாக, சடங்கினூடாக தம் கலைப்பணியை முன்னெடுத்தவர். அருளம்பலம் அவர்கள் பாடசாலையின் அதிபராக் கடமையாற்றி, சமூகத்தின் தேவைக்கேற்ப இயங்கி வருபவர். படைப்பாற்றலும் ஆக்கத்திறனும் நிறைந்த இவர், சமூக நலனுக்காகவும் கலைக்காகவும் தம் படைப்புகளை ஆக்கியளித்தவர். இந்நிலையில் அவரது அயராத கலை வழிப்பணிகளுக்கு வழங்கப்பட்ட விருதுகள், பட்டங்கள், பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள் எண்ணிலடங்காதவையாகும். 'ஆரையூர் அருளர்' எனும் புனைபெயரில் தனது கலை, இலக்கியப் பயணத்தை வெவ்வேறு துறைகளில் முன்னெடுத்தவர். சமூகம், பொருளாதாரம், சமகால அரசியல் போக்குகள் முதலியவற்றை சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், வில்லுப்பாட்டு, நாடகங்கள் என வெவ்வேறு தளங்களில் வெளியிட்டவர். அத்துடன், மட்டக்களப்பின் கூத்தரங்க மரபிலும் தனது இடையறாத பணியினை ஆற்றி வருபவர். வடமோடி கூத்து, தென்மோடி கூத்து, வசந்தன் கூத்து, சமூகக் கூத்து போன்ற கூத்து வடிவங்களைத் தம் புலமைத்துவத்தைப் பயன்படுத்தி எழுதி, ஊருக்குள் உள்ள அண்ணாவிமாருடன் இணைந்து அவற்றைப் பயிற்றுவித்தும் வருகின்றார். கூத்தரங்கின் ஆட்ட, தாளங்கள், கதைக் கட்டமைப்புகள், பாத்திர வார்ப்புகள் முதலானவற்றைச் செவ்வனே தமது எழுத்துகளில் பிரயோகித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரின் பாரம்பரிய அரங்கவிழா மாமாங்கத்தில் நடைபெற்ற பொழுது ஜூலை 31, 2024 அன்று ஆற்றுகை செய்யப்பட்ட 'இறைவனும் புலவனும்' எனும் தென்மோடிக் கூத்து இவரவால் எழுதப்பட்டது.

படைப்பாற்றலும் செயற்றிறனும் நிறையப் பெற்ற ஆரையூராருக்கு பல விருதுகளும் கௌரவிப்புகளும் வந்து குவிந்துள்ளன. வாழும் பொழுது ஓர் ஆளுமையை வாழ்த்துவதும், பாராட்டுவதும் அவரது வாழ்நாளை அதிகரிப்பதோடு, அவரைப் போல் மற்றவர்களும் உருவாகுவதற்கும் வழிப்படுத்தும். காலத்திற்குக் காலம் தமது எழுத்துப்பணிக்காகவும் சமூகப்பணிக்காவும் கலைப்பணிக்காகவும் பல வழிகளிலும், பல நிலைகளிலும், பல விழாக்களிலும் அரசுசார்ந்த, அரசுசாரா நிறுவனங்கள், ஊரின் கலைக்கழகங்கள் ஊடாகவும் விருதுகள், பாராட்டுகள், கௌரவிப்புகளைப் பெற்றுள்ளார். ஒரு கலைஞரின் சமூகப் பணிக்கு, சேவைக்குக் கொடுக்கும் மதிப்பும் சிறப்பும் பாராட்டும் அவரை மேலும் ஊக்கப்படுத்தும். ஆரையூர் அருளம்பலத்திற்குக் கிடைத்த பட்டங்களும் விருதுகளும் அவரின் சேவையை எமக்குணர்த்தி நிற்கின்றன. 1997-ஆம் ஆண்டு அரச அதிபரால் கொடுக்கப்பட்ட சிறந்த 'கூத்துக்கலைஞர்' விருது தொடங்கி 2023-ஆம் ஆண்டில் அனாமிகா பண்பாட்டு மையத்தால் கொடுக்கப்பட்ட 'தலைக்கோல்' விருது ஈறாக ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக ஏதோ ஒரு வகையில் அவரது திறமைக்குப் பட்டங்களும் விருதுகளும் கிடைத்தே வந்துள்ளன. ஆரையூர் அருளம்பலம் அவர்கள் ஒரே ஆண்டில் அதிகமான விருதுகளையும் பெற்றுள்ளார். 2009, 2014, 2019, 2023 ஆண்டுகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதில் அரசாங்கத்தினால் தேசிய ரீதியாக வழங்கப்படும் 'கீர்த்திஸ்ரீ' விருது(2009), 'கலாபூசணம்' விருது(2010) ஆகியனவும் உள்ளடங்கும். இவ்விருதுகள் அரசினால் வழங்கப்படும் முதன்மை விருதுகளாகும்.

இவருக்கு கலாசார அமைச்சால் தேசிய கலைஞர் விருது 2019-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. உள்ளூர் மட்டம் தொடங்கி; பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியாகவும் விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவராக ஆரையூர் அருளம்பலம் திகழ்கின்றார். இவரது விருதுகளின் வகை களைப் பார்க்க உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கின்றது. கலைஞர், கலைச்செம்மல், கவியரசர், பல்கலைமாணி, கலைமுத்து, பல்கலைவித்தகர், இலக்கிய வேந்தர், மரபுக் கலை மன்னன் போன்ற குறிப்பிடத்தக்க பட்டங்களையும் இவர் பெற்றிருந்தமையும் இவ்விடத்தில் நினைவுகூரத் தக்கது. இதனை நோக்கும் பொழுது, அருளம்பலம் கலையால் வாழ்த்தப்படும் ஒருவராக வெளிப்படுகின்றார். சமூக சேவைக் காக இறைஞான தேசிகர், இறைகவிமாமணி, சமூக தீபம், செம் மொழிப் புலவர் ஆகிய பட்டங்களும் இவருக்கு கிடைத்துள்ளன.

**பட்டங்களும் விருதுகளும்:**

- 1997 - கூத்து கலைஞர்
  (முன்னாள் அரசாங்க அதிபர் திரு. சண்முகம்)
- 1997 - அண்ணாவியார்
  (மண்முனைப் பற்று சாகித்திய விழா)
- 2002 - நாட்டுக் கூத்து கலைஞர்
  (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப்பரராஜசிங்கம்)
- 2004 - சமாதான நீதவான்
  (நீதி அமைச்சர்)
- 2009 - கீர்த்திஸ்ரீ தேசிய விருது
  (முன்னாள் பிரதி நீதி அமைச்சர் புத்திரசிகாமணி)
- 2009 - கலைஞர் கௌரவிப்பு
  (மண்முனைப் பற்று பிரதேச கலாச்சார பேரவை)
- 2009 - கலைஞானி
  (ஆரையம்பதி மகாவித்தியாலய நட்புறவு குழு)
- 2010 - முதலமைச்சர் விருது
  (கிழக்கு மாகாண சபை - முதலமைச்சர்)
- 2010 - கலாபூசணம் தேசிய விருது
  (இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம்)
- 2011 - இறைஞான தேசிகர்
  (நாவற்குடா ஸ்ரீ முத்துமாரியம்மன் அறங்காவலர் சபை)
- 2012 - சாதனையாளர் விருது
  (ஆரையம்பதி சமூக அபிவிருத்தி சபை)
- 2013 - இறைகவிமாமணி
  (ஆரையம்பதி வடபத்திர காளியம்மாள் நிர்வாக சபை)
- 2013 - கலைச் செம்மல்
  (மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை)
- 2014 - பல்கலைமாமணி
  (கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ பேச்சியம்மாள் ஆலய நிர்வாகிகள்)
- 2014 - கவியரசர்
  (புல்லுமலை நாக கன்னியம்பாள் ஆலய நிர்வாக சபை)
- 2015 - திறமைக்கான தேடல் விருது, 'கிராமத்து உள்ளங்கள்'
  (லக்டோ மீடியா நெட்வெர்க் ஸ்ரீலங்கா)
- 2015 - சமூக தீபம்
  (ஒற்றுமைக்கான உறவு பாலம்)
- 2015 - செம்மொழிப் புலவர்
  (முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபை)
- 2017 - இலக்கிய விருது
  (கிழக்கு மாகாணம் - இறையின்பப் பாவாரம்)
- 2017 - இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் கலைஞர் விருது
- 2018 - கலை முத்து கலைதீபம் பட்டமும் தேசாபிமானி விருதும்
  (லக்டோ மீடியா)
- 2018 - சாமஸ்ரீ தேசாபிமானி விருது
  (அகில இன நல்லுறவு ஒன்றியம்)
- 2019 - பல்கலைவித்தவர்
  (ஆர்.கே.மீடியா, இலங்கை)
- 2019 - இலக்கிய வேந்தர்
  (ஒற்றுமைக்கான உறவு பாலம்)
- 2019 - தேசிய கலைஞர்
  (கலாசார அமைச்சு)
- 2020 - மரபுக்கலை மன்னன்
  (கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு)
- 2021 - வில்லிசை வித்தகர்
  (நாகசக்தி கலா மன்றம்)
- 2021 - தேனக தீபம், அறிவுப் பொக்கிசம்
  (லக்டோ மீடியா)
- 2022 - கலை அருவி
  ('அ' கலையரங்கம்)
- 2022 - வில்லுடிப்பாட்டு
  'கிழக்கு மாகாண இலக்கிய விருது'
- 2023 - கலைப்பாவரசு
  (லக்டோ மீடியா)
- 2023 - வீசுதென்றல் வீசுது
  (தென்றல் சஞ்சிகை குழு)
- 2023 - 'தலைக்கோல்' விருது
  (அனாமிகா பண்பாட்டு மையம்)

ஆரையூர் அருளம்பலத்திற்குக் கிடைத்த பாராட்டுகளும் கௌரவிப்புகளும் அவரது கலைச்சேவைக்கு கிடைத்த அங் கீகாரங்களாகும். கலை, இலக்கியச்செயற்பாட்டாளருக்குக் கொடுக்கவேண்டிய 'புகழ்ச்சியையும் மரியாதையையும்' மக்கள் அவருக்கு கொடுக்க வேண்டிய முறையில் கொடுத்து அவரைக் கௌரவப்படுத்தி உள்ளனர். கலைஞரை அவர் வாழும் காலத்திலேயே வாழ்த்திக் கௌரவிப்பது சிறப் பானது. கலைஞர் ஒருவருக்கு கொடுக்கும் பாராட்டுக்களும் கௌரவிப்புக்களும் அவரை புத்துணர்சியுடன் மீள இயங்கச் செய்கின்றன. அவரை மீளமீள புதிது புதிதாகப் பிறக்க வைத்து, புதிதாகக் கலைகளையும் படைக்கச் செய்கின்றன. ஆரையூர் அருளம்பலத்தின் கலை, இலக்கிய, சமூகப் பணிகள் காலத்தால் அழியாதவை. அவர் தன் படைப்பாக்க முறைமையாலும் வினைத்திறனாலும் தனது படைப்பாக்க வெளியை அகலப்படுத்தியுள்ளார். அதுவே அவரைக் கலை ஞராக என்றைக்கும் நிலைகொள்ளச் செய்கிறது.



chandrakumar.s@thaiveedu.com



# ஈழத்தவரின் சமகால நூல் வெளியீடுகள் :
## ஒரு நூலியல் சார்ந்த பார்வை 7

– என். செல்வராஜா

ஆறுமுக நாவலரும், உ.வே. சாமிநாதையரும் ஏட்டுருவில் கிடந்த சுவடிகளை அப்படியே நூலுருவில் மாற்றிவிட வில்லை. செல்லரித்து மறைந்துபோன சொற்களையும், வரிக ளையும், பக்கங்களையும் மீட்டெடுக்கப் படாதபாடு பட்டுள் ளனர் என்பதை அவர்களது அனுபவ வாயிலாகவே வாசித்த றிய முடிகின்றது. தமது நுண்ணறிவின் மூலம் இடைவெளி களை மீள இட்டு நிரப்ப வேண்டியும் இருந்து வந்துள்ளதை இவர்களின் வாழ்க்கை வரலாறுகள் எமக்குச் சொல்லியிருக் கின்றன.

ஒரு நூலின் மூல ஆசிரியர் முன்னைய நூற்றாண்டுகளில் வாழ்ந்து மறைந்தவராக இருந்திருப்பார். அவரைக் கரைத் துக் குடித்த ஒருவரால்தான் அவரது படைப்புகளையும், அவ ரது நடையினையும் சிந்தித்து உருவகப்படுத்தியும் பரிசோ தித்தும் நூலுருவில் அவற்றைக் கொண்டுவர முடிந்திருக்கி றது. தாம் தேடிப் பதிப்பித்த நூல்களுக்கு அதன் மூல நூலா சிரியரையே தேடிக் கண்டுபிடித்து அவரைப் பிரதான ஆசிரி யராகப் பதிவு செய்து பெருமைப்படுத்தும் பண்பு அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்திருந்த அறிஞர்களிடம் இருந்துள்ளது.

அந்த வழமை மாறாமல் நாவலரும் பிறரும் ஏட்டுப் பிரதிக ளைத் தேடிக் கண்டெடுத்து அதனைப் பார்வையிடும் போது தம் கண்ணுறக்கத்தைத் தொலைத்து, நீண்டநாள் பரிசோ தித்து, மற்றைய அறிஞர்களுடன் கலந்துரையாடி, விவாதித்து வரலாற்றுத் தவறேதும் இழைத்துவிடாமல் உள்ளது உள்ளப டியே பதிவு செய்வதில் பெரும்பகுதிக் காலத்தைக் கழித்தி ருக்கிறார்கள். புதியதொரு ஊடகமாக அன்று அவர்களுக்கு அறிமுகமாகியிருந்த அச்சூடகத்தின் வழியாகப் பத்திரிகைத் தாள்களைப் பயன்படுத்தி, அதுவரை அவர்கள் வாசித்துப் பழகியிருந்த நூற்றாண்டுப் பழமைமிக்க ஏட்டுச் சுவடிகளை நூலுருவில் கொண்டுவர நிறையவே உழைத்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் தம்மை மூல நூலைப் பரிசோதித்தவர்களா கவே சித்தரித்து, உலகிற்கு அடையாளங் காட்டியிருந்தார் கள். ‘பதிப்பாசிரியர்கள்’ என்ற பதம் பின்னாளிலேயே வழக் கில் வந்திருக்கிறது.

ஆனால் அக்காலத்திலும் பதிப்பாளர்களாக ஒருசாரார் இருந் துள்ளனர். அந்தப் பதிப்பாளர் என்ற பெயரடியிலிருந்தே பதிப்பகங்கள் என்ற சொல் உருவாகி, பின்னாளில் அச்சகங் களுக்குப் பிரதியீடாக அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம். அந்தப் பதிப்பாளர்கள் மூலநூலின் பங்காளர்களா கவோ, அதனைப் பரிசோதித்து நூலுருவில் கொண்டு வந்த வர்களுக்கு இணையானவர்களாகவோ காட்டப்படவில்லை. அவர்களது பணி நூலை அச்சிட்டு வழங்குவதாகவே இருந்து வந்துள்ளது. இந்தப் பதிப்பாளர்கள் பதிப்பகங்களின் உரி மையாளர்களாகவோ, அவற்றின் முகாமையாளர்களாகவோ, நூலின் அச்சிடலுக்கு நிதிக்கொடை வழங்குவோராகவோ தான் இருந்திருக்கிறார்கள்.

இதனை 1820-1940 காலகட்டத்தில் அச்சுவாகனமேறிய ஏடுக ளின் அச்சுப் பிரதிகளின் தலைப்புப் பக்கத்தில் காணப்படும் தகவல்களிலிருந்து கண்டறிந்துகொள்ளலாம். ஆறுமுக நாவ லரவர்களின் பெரும்பாலான நூல்களில் இதனை எளிதில் கண்டறியலாம்.

இங்கு உதாரணத்திற்குத் தந்துள்ள தலைப்புப் பக்கம், 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் வழங்கிய கந்தபுராணத்தின் நூல் வடிவத்துக்குரியது. கந்தபுராணத்தின் மூல நூலாசிரியராக ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கச்சியப்பச் சிவாச்சாரியாரையே ‘சுப்பிரமணியசு வாமி வரப்பிரசாதியாயும் குமரக்கோட்டத்து அர்ச்சகராயும் காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருந்த கச்சியப்பச் சிவாச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்தது’ என்று குறிப்பிட்டுள்ளனர். இதி லிருந்து மூல நூலாசிரியரான கச்சியப்ப சுவாமிகள், குமரக் கோட்டத் திருத்தலத்தின் அர்ச்சகராக இருந்தவரும் காஞ்சிபு ரத்தைச் சேர்ந்தவருமாவார் என்ற அறிமுகம் மூல நூலாசிரி யரின் பின்புலத்தை நமக்குத் தலைப்புப் பக்கத்திலேயே வழங்குகின்றது.

அடுத்துவரும் ‘இது யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோ தித்து’ என்ற குறிப்பு எமக்கு ஆறுமுக நாவலரைப் பதிப்பாசிரி யராகக் குறிப்பிடாதுவிட்டாலும், இன்றைய காலகட்டச் சொற் பதத்தின் படி அவரையே ‘பதிப்பாசிரியராக’ அறிமுகப்படுத் துகின்றது.

தலைப்புப் பக்கத்தின் மூன்றாவது பிரிவில் கூறப்பட்டுள்ள

‘சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமப் பரிபாலகர் பொன்னம்பலப்பிள்ளை அவர்களால், சென்னைப் பட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது’ என்ற குறிப்பிலிருந்து நாவலரின் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் ‘தருமப் பரிபாலகர்’ பதவியை வகிக்கும் பொன்னம்பலப்பிள்ளை அவர்களே இதனை வித்தியாநுபாலன யந்திரசாலையில் பதிப்பித்துள்ளார் என்று அறியமுடிகின்றது. ஆக, இங்கு பதிப்பாளர் என்பது அச்சிடுவோர் அல்லது அச்சிடத் துணை நின்றோர் (அதாவது அச்சகத்தார்) என்று குறிப்பிடப்படுவதைக் கூர்ந்து அவதானிக்கலாம். இது மூல நூலின் ஐந்தாவது பதிப்பாகும். இதன் ஆறாவது பதிப்பு 1924-ல் விசுவநாதப்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்டதாகக் கண்டறியலாம். இந்த நிலைப்பாடே காலக்கிரமத்தில் மருவி அச்சகங்களைப் பதிப்பகங்கள் என்றும் அச்சக உரிமையாளர்களை பதிப்பாளர்கள் என்றும் அழைக்கக் காரணமாகி இருக்கின்றது.







வெளியீட்டகங்களுக்கும் (வெளியீட்டாளர்களுக்கும்), பதிப்பகங்களுக்கும் (பதிப்பாளர்கள், அச்சிடுவோர்) இடையில் இன்றுள்ள வேறுபாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அச்சகங்களும் பதிப்பகங்களும் நீங்கள் கொடுக்கும் கையெழுத்துப் பிரதிகளை கேட்கும் எண்ணிக்கையில் பிரதிகளை அச்சிட்டு நூலுருவில் உங்களிடம் மீள வழங்கி அதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்வதுடன் உங்களுக்கான தமது பணியினை முடிவுக்குக் கொண்டுவருகின்றன. அவர்களுக்கு உங்கள் நூல்கள் விற்பனையாவது பற்றியோ, விநியோகித்து உதவுவது பற்றியோ அக்கறையிராது.

வெளியீட்டகங்கள் உங்கள் கையெழுத்துப் பிரதியைப் பெற்று, அதனை ஆராய்ந்து, அதில் தாங்கள் முதலிடுவது இலாபகரமானதா எனக் கண்டறிந்து, அதில் முதலிடத் தீர்மானித்தால், பொருத்தமான மாற்றங்களை உங்கள் அனுமதியுடன் மூலப் பிரதியில் மேற்கொண்டு, உங்களுடன் ‘எழுத்தாளர்-வெளியீட்டாளர் ஒப்பந்தம்’ ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு, அதில் ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் அக் கையெழுத்துப் பிரதியை உங்களிடமிருந்து பெற்று அதற்காக நிர்ணயிக்கப்பட்ட பணத் தொகையை அல்லது விற்பனையாகும் நூல்களுக்கான உரிமத் தொகையை (ரோயல்டி) உங்களுக்கு வழங்கி உங்களிடமிருந்து நூலுருவாக்கும் பொறுப்பையும், அதனை விநியோகிக்கும் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்கின்றது. அந்த நூலை விற்று வரும் பணத்தில் தன் முதலீடு போக எஞ்சிய இலாபத்தை ஈட்டிக்கொள்கின்றது. மேலைத்தேய நாடுகளைப் போலல்லாது, துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் இத்தகைய வெளியீட்டகங்கள் எதுவும் தமிழ்ப் பதிப்புச் சூழலில் காணப்படுவதில்லை.

இலங்கையில் இயங்கும் ‘தமிழ் நூல் வெளியீட்டகங்கள்’, இன்று பதிப்பகங்களாகவும் (அச்சகங்களாகவும்), வெளியீட்டகங்களாகவும், நூல் விற்பனையாளர்களாகவும் மும்முனைச் செயற்பாட்டில் வசதிக்கேற்ப ஈடுபட்டு வருகின்றன. உங்கள் நூலை அச்சிட்டு வழங்கும் அச்சகப் பணிகளைச் செய்வதுடன், நீங்கள் விரும்பினால் அதற்கான விற்பனையிலும் உங்களுக்கு உதவுகின்றன. நூலுக்கான முதலீட்டை எழுத்தாளரே பெரும்பாலும் வழங்கவேண்டிய நிலை இங்கே காணப்படுகின்றன. இது நேரடியாகவோ, அல்லது கணிசமான பிரதிகளைக் கொள்வனவு செய்யவேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ அமையலாம்.

இலங்கையில் எழுத்தாளர்களை ஆசிரிய-வெளியீட்டாளர்கள் (Author Publishers) என்று அழைக்கின்றோம்.

மேற்கண்ட தகவல்களிலிருந்து ஒரு எழுத்தாளருக்கு, வெளியீட்டகங்களுக்கும் பதிப்பகங்கள் / அச்சகங்களுக்கும் இடையிலான வேறுபாடு என்னவென்று ஓரளவு புரிந்திருக்கும்.

எதிர்காலத்தில் ஒரு நூலை மீள்பதிப்புச் செய்யும் வேளையிலோ, ஒரு நிறுவனத்திற்காக நூலொன்றைத் தொகுத்துத் தரும் வேளையிலோ தம்மை அந்த நூல் வெளியீட்டுடன் எவ்வகையில் தொடர்புபடுத்தலாம், அதனை எவ்வாறு தலைப்புப் பக்கத்தில் குறிப்பிடலாம் என்பதைப் ‘பதிப்பாசிரியர்கள்’ மீளச் சிந்திக்க வேண்டும்.

இனி அடுத்த இதழில் நூலியல் தரவுகளில் முக்கிய அம்சங்களிலொன்றான நூலின் ‘பதிப்பு’ தொடர்பான குறிப்பு நூலில் எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் என்பதை ஆராய்வோம்.



selvarajah.n@thaiveedu.com




ஜூலை 15, 2024 அன்று, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஸ்காார்பரோ வளாகத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவும், 1974-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் பொன்விழாவை நினைவுகூரும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்த நூற்றாண்டு மற்றும் பொன்விழா மைல்கல் நிகழ்வுகள் ஈர்க்கக் கூடியதாகவும், தகவல் தருவதாகவும், மறக்கமுடியாத தாகவும் இருந்தன. நூற்றாண்டு விழா பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பொன்னான நினைவுகளைத் தந்ததுடன், உலக ஆராய்ச்சி மாநாட்டின் பொன்விழா வலிமிகுந்த நினைவுகளையும் தந்தது. இந்த நிகழ்வைப் பலனடையச் செய்யும் வண்ணம் பல உரைகள் அமைந்திருந்தன. இவ்வுரைகளைக் கேட்கும்போது மனத்தில் இனிப்பும், கசப்புமாக நினைவுகள் வந்து போயின.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் மற்றும் நான்காவது சர்வதேச தமிழாராய்ச்சி மாநாடு குறித்த நினைவுகள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக தமிழ் மக்களின் கல்வி மற்றும் போராட்டத்தை வடிவமைத்த சாதனைகள், சவால்கள் மற்றும் முக்கிய தருணங்களை எடுத்துக்காட்டுகின்றன. இந்நிகழ்வு தமிழ் மக்களின் சவால்கள், வளர்ச்சி, பரிணாமம் மற்றும் பின்னடைவு முதலானவற்றை வெளிப்படுத்தியது.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் (8 மே 1924 - 22 ஜனவரி 1989) ஓர் எழுத்தாளர், கல்வியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர், மற்றும் மிக முக்கியமாக, ஏராளமான தமிழ் அறிஞர்களை உருவாக்கியவர். இது அவரது ஆழ்ந்த செல்வாக்கிற்கு ஒரு சான்றாகும். பெரும்பாலான பேச்சாளர்கள் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மற்றும் நான்காவது சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் பதினொரு பேர் இலங்கை காவல்துறையினரின் துப்பாக்கிச் சூடு உட்பட பல்வேறு அத்துமீறல்களாலும் அரச அடக்குமுறை முறைகளாலும் ஏற்பட்ட குழப்பங்க





ளினாலும் உயிரிழந்தனர். இலங்கை அரசின் காவல்துறை யின் துப்பாக்கிச் சூட்டில் மின் கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தன. ஆயிரக்கணக்கான ஆண் கள், பெண்கள், குழந்தைகள் என பொதுமக்கள் மீது கண் ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. இரவு நேரத்தில் ஏற்பட்ட இந்த குழப்பத்தால் வாகன விபத்துகள் நடந்தன. அதிர்ச்சி சில பெரியவர்களுக்கு மாரடைப்பை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இன்றைய இந்த நிகழ்வு கடந்த காலத்தின் வலிமிகுந்த நினை வுகளை தந்தது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் கனடிய தமிழர் பேரவையின் முன்னாள் தலைவர் சிவன் இளங்கோ அவர்கள் தொடக்கவு ரையாற்றினார். பேராசிரியர் தி. கமலநாதனுடனான தொடர் புக்குப் பிறகு கனடாவில் இந்நிகழ்வை நடத்த வேண்டிய அவ சியம் எப்படி ஏற்பட்டது என்பதை அவர் தனது உரையில் விளக்கினார்.



பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மாணவரான பேராசிரியர் தி. கமலநாதனின் அர்ப்பணிப்பும் கடின உழைப்பின் பின்ன ணியில் 'பல்கலைத் தமிழ்ப் பெருநிதியம்' (பல தமிழ்க் கலை களின் கொடை) என்ற பெருநூல் தொகுக்கப்பட்டு வெளியி டப்பட்டது. இந்த நிகழ்வில் பேராசிரியர் சித்தார்த்தன் மௌன குரு அவர்கள் பேராசிரியர் எஸ். வித்தியானந்தனின் நூற் றாண்டு நினைவுகள் நூலை வெளியிட்டார், இதை அங்கு வந் திருந்த அனைவரும் மனதாரப் பாராட்டவும் மதிக்கவும் செய் தார்கள்.



சிவன் இளங்கோ தனது உரையில், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்வதற்காகவும் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது என்றார். பின்னர், பேச்சாளர் களை மேடைக்கு வரவழைத்து, அவர்களின் உரைகளைப் பார்வையாளர்கள் கேட்க வழி செய்தார்.

நினைவுப் பகிர்வில் பேராசிரியர் நா. சுப்ரமணியன் தனது பாராட்டுரையை சிறப்பாக வழங்கினார். உலகத் தமிழா ராய்ச்சி மாநாட்டை கொழும்பில் நடத்த அரசு அழுத்தம் கொடுத்த போதிலும், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பல சவால்களுடன் 1974 ஜனவரியில் அதைத் துணிச்சலாக யாழ்ப்பாணத்தில் நடத்தினார் என்றார். நான் அவரை உன் னிப்பாக கவனித்ததால் இதை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இலங்கை முழுவதிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு மூன்று மதங்களின் ஒற்றுமையும் கூட்டுப் பணியும் அவசியம் என்பதை உணர்ந்த வித்தியானந்தன் அவர்கள், பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும் ஆராய்ச்சி வழிகாட்டியாகவும் துணைவேந்தராகவும் பணி யாற்றினார். சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய பாரம்பரிய கலை வடிவங்களை இணைத்து இலங்கையின் பல பகுதிகளில் மேடை நிகழ்வுகளை ஏற்பாடு செய்தார்.



அடுத்து, ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாகத் தில் தமிழ் மொழியின் ஆர்வலரும் அறிஞருமான பேராசிரியர் பிரெண்டா பெக் தனது அனுபவங்களை சிறப்பாகப் பகிர்ந்து கொண்டார். 1974-ம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்





டில் ஒரு கட்டுரையைப் படித்ததாக அவர் தனது உரையில் ஆர்வத்துடன் கூறினார். பல நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து, கலாசாரத்தின் பண்புகளை நன்கு புரிந்துகொண்டு தாய்நாட்டிற்குத் திரும்பியதாகவும் மேலும் அவர் கூறினார். தமிழர்கள், பேராசிரியர் பிரெண்டா பெக் மாநாட்டில் அணிந்த அதே ஆடைகளை (சேலை & மேலங்கி) அணிந்து, யாழ்ப்பாணத்தில் 50 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த அனைத்து புகைப்படங்களையும் வீடியோக்களையும் காட்சிப்படுத்தினார் என்பது நம்பமுடியாத அளவிற்கு மனதைத் தொட்டது.

தொடர்ந்து, பேராசிரியர் பாலசுந்தரம், பேராசிரியர் சந்திரகாந்தன், பேராசிரியர் சேரன் உருத்திரமூர்த்தி ஆகியோரும் சிறப்புரையாற்றினர். உரைகளுக்கு இடையில், இளம் இசைக்கலைஞரும் ரொறன்ரோ பல்கலைக்கழக மாணவியுமான திரு-மதி யாதவி பிரசன்னா, தனது புல்லாங்குழல் இசையில் தமிழ்ப் பாடல்களைப் பார்வையாளர்களுக்கு வழங்கினார்.

1974-ம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பதினொரு தமிழர்கள் உயிரிழக்கக் காரணமான குழப்பங்களுக்கு வழிவகுத்த நிகழ்வுகளை பேராசிரியர் சேரன் உருத்திரமூர்த்தி கண்முன்னே கொண்டுவந்தார். பேராசிரியர் வித்தியானந்தனின் தனித்துவமான பண்புகளை எடுத்துரைத்த அவர், கற்பித்தல் மட்டுமன்றி நாட்டார் பாடல்கள், நாட்டுக் கூத்து போன்ற கலை வடிவங்கள் மக்களைச் சென்றடைய அவர் எவ்வாறு பணியாற்றினார் என்பதையும் எடுத்து விளக்கினார்.

பேராசிரியர் வித்தியானந்தனின் மகன் நம்பி வித்தியானந்தன் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையில், தனது தந்தை மற்றும் அவரது குடும்பத்தின் சிறப்புகள் பற்றிப் பேசினார். நம்பி வித்தியானந்தனின் உணர்வு பொங்கிய பேச்சு முழு வீச்சில் இருந்தது. அவர் தனது உரையில், 'எனது தந்தை பேராசிரியர் சு.வித்தியானந்தன் தனது மாணவர்களுக்கு இராணுவத் தலைவராக பணியாற்றினார்.' அவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்தார். மாணவர்களுக்கு கல்வி கற்பித்து அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கினார். மேலும், தனது ஒவ்வொரு மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை குறித்தும் தனது தந்தைக்கு அக்கறை இருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து, பேராசிரியர் கமலநாதன் தொகுத்து அச்சிட்ட நூற்றாண்டு நினைவு நூல் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது. ஸ்காபரோ வளாகத்தில் தற்போது உள்வரும் 'தமிழ் இருக்கை' பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுருவிடம் இருந்து கலந்து கொண்டவர்கள் பிரதிகளைப் பெற்றனர். மேற்படி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் இறுதிவரை அனைத்து உரைகளையும் கேட்டு மகிழ்ந்து வியந்தனர் என்றால் மிகையாகாது.

thurairajah.u@thaiveedu.com





# பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் என்னும் பேராளுமை

– நா. சுப்பிரமணியன்

## தோற்றுவாய்:

இலங்கையின் தமிழ்ப் பேரறிஞர்களில் ஒருவராகவும் ஈழத்தின் தமிழ்ப் பண்பாட்டுமரபுக்கு ஒரு பொது அடையாளத்தை வழங்கிய சமூக மனிதர்களில் முதல் வரிசைக் கணிப்பைப் பெற்ற ஒருவராகவும் திகழ்ந்து நிறைவு பெற்றவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் (1924-1989). தமிழ்ப் பேராசிரியராகவும் துணைவேந்தராகவும் திகழ்ந்த கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் தமது காலப்பகுதியின் தமிழியல் ஆய்வு வரலாற்றை இயக்கி நின்ற முக்கிய ஆளுமைகளுள் ஒருவருமாவார். முப்பத்தைந்து ஆண்டுகளின் முன் நிறைவு பெற்றுவிட்ட அப்பெருமகனாரின் ஆளுமையம்சங்கள் பற்றி இன்றைய தலைமுறையினர் உரியவாறு தெரிந்து தெளிவதற்கான ஒரு சுருக்கமான வரலாற்றுப் பதிவாக எனது இக்கட்டுரை அமைகிறது.

அவரின் விருப்பத்துக்குரிய மாணவர்களுள் நானும் ஒருவன். அவராலேயே தமிழ் ஆய்வுலகுக்கு நான் அறிமுகமானேன் என்பதையும் இங்கு முதலில் நன்றியுணர்வுடன் பதிவுசெய்து கொள்கிறேன். அவ்வகையில் இக்கட்டுரை அவருக்கு நான் செலுத்தும் நன்றிக் கடப்பாடும் ஆகும்.

இவ்வகையில் முதலில் அவரைப்பற்றிய பொதுவான அறிமுக நிலைக் குறிப்புகளைப் பதிவுசெய்ய முற்படுகிறேன். அதனையடுத்து அவருடைய ‘ஆளுமையம்சங்கள்’ மற்றும் ‘தமிழியல் வரலாற்றில் அவருக்குரிய முக்கியத்துவம்’ ஆகியன பற்றிய எனது அவதானிப்புகளை இங்கு சுருக்கமாக முன்வைக்கிறேன்.

## அறிமுகநிலைக் குறிப்புகள்:

யாழ்ப்பாணம் தெல்லிப்பழைக் கிராமத்தைச் சேர்ந்தவரான திரு. சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் 1940-களில் கொழும்பிலிருந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். அங்கு இளங்கலைப் பட்டத்திற்காகத் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று 1944-ல் சிறப்புக் கலைமாணி என்ற பட்டத்தைப் பெற்றவர். அதனைத் தொடர்ந்து அதே பல்கலைக் கழகத்தில் 1946-ல் முதுகலைமாணி பட்டத்தையும் அவர் பெற்றார். அப்பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையிலே துணை விரிவுரையாளராகப் பணியேற்ற அவர், அப்பணிக்காலத்திலே கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக 1948-ல் ஐக்கிய ராச்சியம் சென்றார்.

அங்கு அவர் இலண்டன் பல்கலைக்கழகத்தின் ‘School of Oriental Studies’ எனப்படும் ‘கீழைத்தேயக் கல்விச் சாலை’ யிலே Alfred Master என்ற பேராசிரியரின் வழிகாட்டலிலே ‘பத்துப்பாட்டு: வரலாற்று, சமூக, மொழியியல் நோக்கு’ என்ற தலைப்பிலான ஆய்வை மேற்கொண்டு 1950-ல் அதனை நிறைவு செய்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் இலங்கை மீண்டபின் தாம் முன்னரே பணியாற்றிய இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையிலே விரிவுரையாளர் என்ற பணி நிலைக்கு உயர்ந்தார்.

அப்பணியிலே படிப்படியாக உயர்நிலைகளை எய்திய அவர் 1970-ல் பேராசிரியர் ஆனார். 1977-ல் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராக நியமனம் பெற்ற இவர், அவ்வளாகமானது 1979-ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகப் புதிய பரிமாணத்தை எய்தியபோது அதன் முதலாவது துணைவேந்தராகவும் பதவியேற்றார். தாம் இயற்கை எய்தும் வரை - ஏறத்தாழப் பத்தாண்டுகள் வரை - அப்பணியை அவர் தொடர்ந்துள்ளார்.

இதுவரை பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களைப் பற்றிய பொதுவான அறிமுகநிலைச் செய்திகள் இங்கு சுருக்கமாக முன்வைக்கப்பட்டன. அடுத்து அவரது ‘ஆளுமையம்சங்கள்’ இங்கு கவனத்துக்கு வருகின்றன.

## வித்தியானந்தனவர்களின் ஆளுமையம்சங்கள் – தொகுநிலை நோக்கு:

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனவர்களின் ஆளுமயம்சங்கள் என்ற வகையில் நான் அவதானித்து வந்தவற்றை

இரு வகைப்படுத்தலாம். முதலாவது வகையானது அவர், ‘பல்கலைக்கழகக் கல்விச் சூழல்கள் சார்ந்து அவர் இயங்கி



ஓவியம்: ஆசை இராசையா

நின்ற முறைமை’ ஆகும். அதாவது, விரிவுரையாளர், பேராசிரியர், வளாகத் தலைவர் மற்றும் துணைவேந்தர் ஆகிய நிலைகளில் அவர் செயற்பட்டு நின்ற முறைமைகளே இம் முதலாவது வகையில் நமது கவனிப்புக்குரிய அம்சங்களாகும்.

வித்தியானந்தனவர்களின் இரண்டாவது வகை இயங்குநிலை என இங்கு குறிப்பிடப்படுவது, ‘பல்கலைக்கழக நிர்வாகச் சூழல்களுக்கு அப்பால் அவர் தன்னை ஒரு சமூக மனிதராக அடையாளங்காட்டிச் செயற்பட்டுநின்ற நிலை’யேயாகும்..’ ஈழத்தின் நாட்டுக்கூத்து மரபுகள், நாடக மரபு என்பனவற்றின் மீது அவர் புலப்படுத்தி நின்ற ஈடுபாடு மற்றும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் என்ற அமைப்பு சார்ந்து அவர் நிகழ்த்திய மாநாடுகள் ஆகியன இந்த இரண்டாவது இயங்குநிலைக்கான முக்கிய சான்றுகளாகத் திகழ்வனவாகும்.

இவ்வாறான இருவகைசார் இயங்குநிலைகள் பற்றிய குறிப்புகளே இங்கு தொகுநிலையில் சுருக்கமாக முன்வைக்கப்படுகின்றன.

மேற்படி முதல் வகைசார் இயங்குநிலையிலே இங்கு அழுத்திப் பேசப்படவேண்டிய விடயம், அவர், ‘ஒரு நல்லாசிரியராகவும் ஆய்வாளராகவும் ஆய்வு வழிகாட்டியாகவும் திகழ்ந்ததோடு மட்டுமன்றி பல்கலைக்கழக நிறுவன அமைப்பின் நிர்வாகியாகவும் கூடச் சிறப்புற இயங்கி நின்றவராவார்.’ என்பதாகும்.

அவர் மாணவர்களின் விருப்பத்துக்குரிய நல்லாசிரியராகத் திகழ்ந்தவர். தமிழை ஒரு பாடமாகப் பயிலாத மாணவர்களுங்கூட அவருடைய தமிழ்ப்பாட வகுப்புக்கு வந்து அவருடைய இலக்கிய-இலக்கண விரிவுரைகளைச் சுவைப்பதில் ஆர்வங்காட்டினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க முக்கிய செய்தியாகும். நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை பயின்ற காலப் பகுதியில் (1966-69) இவ்வாறான காட்சிகளை நேரிலேயே தரிசித்துள்ளேன்.

வித்தியானந்தன் அவர்கள் ஒரு ஆய்வாளர் என்ற வகையில் தமிழின் பண்பாட்டு மரபுகள் மீது தனிக்கவனம் செலுத்தி நின்றவராவார். ‘இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதான தொடர்ச்சியான வரலாறு கொண்டவர்களான தமிழரின் பண்பாட்டு வளங்களை ஆய்வு நிலைகளில் உரியவாறு இனங்கண்டு வெளிக்கொணர்ந்தார். அவற்றைக் காலச் சூழலுக்கேற்பப் பேணிக்கொள்ளவும் வளர்த்தெடுக்கவும் வேண்டும்’ என்ற மன உந்துதலுடன் தமது வாழ்நாள் முழுவதையும் ஆய்வுத் துறையில் செலவழித்தார்.

தமது ஆய்வுசார் இயங்குநிலையின் ஆரம்ப ஆண்டுகளில் தமிழின் தொல்லிலக்கியங்களான சங்கப் பாடல்கள் புலப்படுத்திநிற்கும் பண்பாட்டுக் கோலங்கள்’ பற்றி ஆராய்வதில் அவர் தனிக்கவனம் செலுத்தி நின்றுள்ளார். தமது கலாநிதிப் பட்ட ஆய்வுக்கு பத்துப்பாட்டு என்ற சங்கப் பாடல் தொகுப்பை ஆராய்ந்துள்ளார் என்பதை மேலே நோக்கினோம். இவ்வாய்வுப் பார்வையை அவர் தொடர்ந்து வளர்த்து வந்துள்ளமையை 1954-ல் அவர் வெளியிட்ட ‘தமிழர் சால்பு’ என்ற நூலாக்கம் நமக்குத் தெளிவாக உணர்த்தி நிற்கிறது. பதினான்கு இயல்களில் முந்நூறுக்கு மேற்பட்ட பக்கங்களிலமைந்துள்ள இந்நூல் சங்ககாலத்தின் அரசியல், போர்முறைகள், சமயநம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், தத்துவ நிலைகள், சமூக அமைப்பு, தொழில்கள், பெண்களின் நிலை, கல்வியும் கலைகளும் ஆகிய பல்வேறு அம்சங்கள் சார்ந்த தகவல்களைப் பொருள் வாரியாக வகைப்படுத்தித் தொகுத்தளித்துள்ளது. அத்துடன் அவ்வவ் தரவுகளைப் பொருட்பொருத்தமுறப் பொருத்திக் காட்டியுமுள்ளது. மேலும் அவற்றுக்கான பொருள் விளக்கங்கள், வரலாற்றுச் செல்நெறிசார் குறிப்புகள் ஆகியவற்றையும் கூட உள்ளடக்கியதாக இவ்வாக்கம் கட்டமைதி பெற்றுள்ளது. இவ்வாறான கட்டமைப்புச்

சிறப்பினால் இவ்வாக்கமானது பண்டைத் தமிழர் பண்பாட்டை ஆராய முற்படுவோருக்கு மிகு பயன்தரவல்ல ஒரு ஆய்வாதார நூலாகத் திகழ்ந்து வருகிறது என்பது நமது கவனத்துக்குரிய செய்தியாகும்.

இவ்வாறு தமது ஆய்வுசார் இயங்குநிலையின் ஆரம்ப ஆண்டுகளில் தமிழின் தொல்லிலக்கியங்களான சங்கப் பாடல்கள் மீது தனிக்கவனம் செலுத்திநின்ற கலாநிதி வித்தியானந்தனவர்கள் பின்னர் தமிழர் பண்பாட்டின் ஏனைய வரலாற்றுக் கட்டங்களின் வாழ்வியல் அம்சங்கள் மற்றும் கலை மரபுகள் ஆகியவற்றையும் நோக்கித் தனது பார்வையை விரிவுபடுத்திக் கொள்ளலானார். குறிப்பாக, ஈழத்தின் பல்வேறு பிரதேசங்கள்சார் கலை மரபுகளைப் பேணிக்கொள்வதில் தனிக்கவனம் செலுத்தவும் தொடங்கினார். மேலே நாம் நோக்கிய 'தமிழர் சால்பு' தவிர்ந்த அவருடைய ஏனைய ஆய்வுநிலை சார் எழுத்துகள் மற்றும் பதிப்பாக்கங்கள் ஆகியன நமக்கு உணர்த்திநிற்கும் முக்கிய செய்திகள், இவை.

இவரின் ஏனைய ஆய்வுநிலை எழுத்துகள் இலக்கியத் தென்றல் (1953), கலையும் பண்பும்(1961), தமிழியற் சிந்தனைகள் (1979), வித்தியானந்தம்(1984) ஆகிய தலைப்புகளில் நூல்வடிவம் எய்தியுள்ளன.

இலக்கியத் தென்றல் முதலான நான்கு நூலாக்கங்களும் அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழரின் கலை இலக்கிய மரபுகள் மற்றும் இலக்கண மரபு ஆகியன தொடர்பாக எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுப்புகளாக அமைந்தவையாகும். இக்கட்டுரைகள் ஒருவகையின மாணவர்களையும் பொது வாசகரையும் கருத்துள் கொண்டு அவ்வப்போது எழுதப்பட்டவையாகும். கட்டுரைகளில் இன்னொரு வகையின ஆய்வரங்கச் சூழல்களை மையப்படுத்தி எழுதப்பட்டவையாகும். இவற்றுள் இலக்கியத் தென்றல் என்ற தொகுப்பானது தமிழர் சால்பு நூலுக்கு முன்பாக 1953-ல் வெளிவந்ததாகும். இதிலே, 'தமிழ் இலக்கியப் பரப்பு', 'தமிழ் இலக்கண நூல்கள்', 'ஐம்பெருங் காப்பியங்கள்', 'இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு', 'ஈழநாட்டுப் பெரியார் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு', 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை' ஆகிய தலைப்புகளிலமைந்த ஆறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் இலக்கிய வரலாறு மற்றும் இலக்கண வரலாறு ஆகிய பாடப்பரப்புகள் சார்ந்தவை என்பது வெளிப்படை. இவை குறிப்பாக, பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகளிலும் பயிலும் மாணவர்கள் மற்றும் பொது வாசகர்கள் ஆகியோரின் பார்வைகளை அகலப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்டவை எனலாம்.

கலையும் பண்பும் என்ற நூலாக்கமானது இஸ்லாமியருடைய கலை இலக்கிய மரபுகள் பற்றிப் பேசுவது. இலக்கியத் தென்றல் என்ற நூலிலே 'இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு' பற்றி எடுத்துரைத்துள்ள வித்தியானந்தனவர்கள் இந்நூலிலே அத்தொண்டுக்குப் பின்புலமான இஸ்லாமியப் பண்பாட்டை விரிவாக அறிமுகம் செய்துள்ளார்.

'பிறையன்பன்' என்ற புனைபெயரில் அவரால் எழுதப்பட்ட இவ்வாக்கமானது மேற்படி பொருண்மை சார்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மாணவர் மன்றத்தின் வெளியீடான University Majlis என்ற இதழில் 1953 முதல் 1959 வரையான காலப்பகுதியில் அவரால் எழுதிவந்த கட்டுரைகளின் ஒழுங்கமைக்கப்பட்ட நூல் வடிவமாகும்.

1979-ல் வெளிவந்தான தமிழியற் சிந்தனைகள் என்ற தொகுப்பிலே ஏழு தமிழ்க் கட்டுரைகளும் இரு ஆங்கிலக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. தமிழ்க் கட்டுரைகள்: 'நாவலரும் தமிழகமும்', 'நாவலரிருவர்', 'ஈழமும் தமிழிலக்கணமும்', 'ஈழத்தின் கிராமிய நாடகங்கள்', 'ஈழத்திலே சமயமும் கல்வியும்', 'ஈழத்திலே தமிழ்க் கல்வியும் பல்கலைக்கழகமும்', இஸ்லாமியரும் தமிழிற் புதிய பிரபந்த வகைகளும்' ஆகிய தலைப்புகளிலமைந்தவையாகும். ஆங்கிலக் கட்டுரைகள்: 'Tamil Influences on Sinhalese', 'Tamil Studies in English in Ceylon' ஆகிய தலைப்புகளிலமைந்துள்ளன.

வித்தியானந்தனவர்களின் மணிவிழாச் சூழலையொட்டி 1984 வெளிவந்ததான வித்தியானந்தம் என்ற தொகுப்பாக்கமானது, 'ஈழத்து நாட்டுக்கூத்து மரபு' முதல் 'நான்காம் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தலைமையுரை' வரையான பத்துக் கட்டுரைகளைக் கொண்டதாகும்.

இவருடைய பதிப்புச் செயற்பாட்டினூடாக ஏழு நூல்கள் வெளிவந்துள்ளன. அவை: மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்(1960), அலங்காரரூபன் நாடகம்(1962), மன்னார் நாட்டுப் பாடல்கள்(1964), என்டிறீக்கு எம்பரதோர் நாடகம்(1964), மூவிராசாக்கள் நாடகம்(1967), ஞானசவுந்தரி நாடகம்(1967), கஞ்சன் அம்மானை(1976) இவையாவும் ஈழத்தின் நாடகம் மற்றும் நாட்டுக்கூத்து மரபுகள் சார்ந்த பண்டைய எழுத்துப் பிரதிகளிலிருந்து அச்சேற்றம் பெற்றவையாகும்.

இவ்வாறாக ஆய்வாளராகவும் பதிப்பாளராகவும் செயற்பட்டு நின்ற அவர் சிறந்த ஓர் ஆய்வு வழிகாட்டியாகவும் திகழ்ந்தவராவார். இவ்வகையில் அவருடைய இயங்கு திறனின் சிறப்புக்கு நானே சிறந்த உதாரணமாவேன். எனது முதுகலை மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வுகளை அவரே வழிநடத்தியவராவார். முதுகலை ஆய்வேட்டுக்கு, 'ஈழத்தில் தமிழ் நாவல்கள்' என்ற தலைப்பையும் கலாநிதிப் பட்ட ஆய்வேட்டுக்கு, 'தமிழ் யாப்பு வளர்ச்சி' என்ற தலைப்பையும் நான் தேர்ந்துகொண்டிருந்தேன். அவ்வவ்வாய்வேடுகளுக்கான எனது கையெழுத்துப்படிகளை அவர் இரவிரவாக விழித்திருந்து வாசித்துத் திருத்திய அந்நாள்கள் இங்கு என் நினைவில் மீள்கின்றன.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராகவும் துணைவேந்தராகவும் விளங்கியதைக் கருத்தில் கொண்டு நிர்வாகப்பணியைச் சுட்டிக் காட்ட விளைகிறேன். மேற்படி யாழ்ப்பாண வளாகமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக வளர்ச்சியெய்திய வரலாற்றுக்கட்டத்தில் அவ்வரலாற்றை இயக்கி நின்ற நிர்வாகப் பொறுப்பாளராகத் திகழ்ந்தவர் அவர் என்பது இங்கு நமது கவனத்துக்குரிய செய்தியாகும்.

இவ்வகையில் 1977 தொடங்கி 1989 வரை 12 வருட காலப்பகுதியில் அந்நிறுவனமானது கல்வித்துறைசார் நிலைகளிலும் கட்டமைப்புசார் நிலைகளிலும் பலநிலை வளர்ச்சிகளை எய்தியுள்ளது. குறிப்பாக, அப்பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் இவருடைய காலகட்டத்தில் உருவாக்கப்பட்டது என்பது இங்கு நமது கவனத்துக்குரிய முக்கிய வரலாற்றுச் செய்தியாகும். இவ்வாறாக அவரது நிர்வாகக் காலகட்டத்தின் ஏனைய வளர்ச்சி நிலைகள் தனித்தனியாக விரிவாக எடுத்துரைக்கப்பட வேண்டியவையாகும்.

கலாநிதி வித்தியானந்தனவர்கள் 'பல்கலைக்கழக நிர்வாகச் சூழல்களுக்கு அப்பால் அவர் தன்னை ஒரு சமூக நோக்குடைய கல்வியாளராக அடையாளப்படுத்திக் கொண்டு இயங்கி நின்ற முறைமைகளுக்குப் பல சான்றுகளை இங்கு சுட்டலாம். பொது மேடைகளில் பேருரைகள் நிகழ்த்துதல், கலை இலக்கிய விழாக்களுக்குத் தலைமை வகித்தல் முதலான செயற்பாடுகள் மூலம் அவர் தன்னை ஒரு 'சமூக மனித'ராகவும் 'கலை இலக்கியப் புரவல'ராகவும் அடையாளங்காட்டி நின்றவராவார்.

இவ்வாறான அவருடைய இயங்குநிலைகளின் தொடர்ச்சியான செயற்பாடுகளிலொருவகையானவையே ஈழத்தின் நாடக மரபு மற்றும் நாட்டுக் கூத்து மரபுகள் மீது அவர் புலப்படுத்தி நின்ற ஈடுபாடுகள் ஆகும்: இன்னொரு வகையான இயங்கு நிலையையே 'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்' என்ற அமைப்பு சார்ந்து அவர் நிகழ்த்திய மாநாடுகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

ஈழத்தின் நாடக மரபு மற்றும் நாட்டுக் கூத்து மரபுகள் மீது அவர் புலப்படுத்திநின்ற ஈடுபாடுகளின் முக்கிய சான்றுகளாக அமைவன அவ்வம்மரபுசார் ஆக்கங்களை அவர் மேடையேற்றிய செயற்பாடுகளாகும். பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்கள் எழுதிய முருகன் திருகுதாளம், சங்கிலியன், உடையார் மிடுக்கு முதலிய நாடகங்களையும் கர்ணன் போர், இராவணேசன், வாலிவதை முதலிய கூத்துகளையும் அவர் மேடையேற்றியுள்ளார். கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் முதலிய நகரங்களில் மேடையேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 1950-கள் முதல் ஏறத்தாழ 1970-கள் வரையிலான காலப்பகுதியில் இவ்வாறான மேடையேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இவற்றுள் குறிப்பாக நாட்டுக் கூத்துகளை மேடையேற்றுவதில் அவர் நவீன உத்திகளைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறான அவருடைய செயற்பாடுகள் உயர் கல்விச்சூழல் சார்ந்தவர்களும் நகரமயப்பட்டவர்களுமான சமூகத்தினர் மத்தியில் அக்கூத்து மரபுகளுக்குப் பெரு வரவேற்பைத் தந்தன என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய செய்தியாகும். அவ்வகையில் ஈழத்து நாட்டுக்கூத்து மரபுக்குப் புது இரத்தம் பாய்ச்சிய கலைப் புரவலர் என்ற கணிப்புக்குரியவராக இவர் திகழ்ந்துள்ளார்.

'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்' என்ற அமைப்பு சார்ந்த அவருடைய இயங்குநிலை என்ற வகையில் இங்கு குறிப்பிடப்படுபவை அவர் யாழ்ப்பாணத்திலும் (1974) மட்டக்களப்பிலும் (1976) வன்னியிலும் (1983) நிகழ்த்திய மாநாடுகளாகும். இவற்றுள் முதலாவது மாநாடானது உலகு தழுவிய நிலையிலமைந்ததாகும். பின்னைய இரண்டும் பிராந்திய மாநாடுகளாகும். இவற்றுள் மேற்படி முதலாவது மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்துவதில் பேராசிரியர் புலப்படுத்தி நின்ற உறுதிப்பாடே இங்கு நமது தனிக் கவனத்துக்குரிய செய்தியாகிறது.

1964-ல் உருவான 'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்' என்ற உலகு தழுவிய அமைப்பானது தனது முதல் மூன்று மாநாடுகளை முறையே மலேசியா, தமிழகம்(இந்தியா) மற்றும் பிரான்சு ஆகியவற்றில் நிகழ்த்தியிருந்தது. பிரான்சு மாநாட்டின் நிறைவிலே அடுத்த நான்காவது மாநாட்டினை இலங்கையில் நிகழ்த்துவது என்பதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்துக்கமையவே இலங்கையில் 1974 சனவரியில் இம்மாநாட்டை நடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின. இம்மாநாட்டைக் கொழும்பிலேயே நடத்த வேண்டும் என அன்றைய ஆட்சியாளர்கள் வலியுறுத்தி நின்றனர். அதனை ஒப்புக்கொள்ள மறுத்து யாழ்ப்பாண மாநகரிலேயே அதனை நடத்திக் காட்டியமையே பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் முக்கிய சாதனையாகும். அவருடைய இச்செயற்பாட்டில் அவருடன் நான் சேர்ந்தியங்கிய அனுபவங்கள் இங்கு நினைவில் மீள்கின்றன.

மேற்சுட்டியவாறான அவருடைய ஆளுமையம்சங்கள்சார் செய்திகளை முழு நிலையில் விரித்துரைப்பது எனது நோக்கமன்று. அது இத்தகு கட்டுரையில் சாத்தியமுமன்று. இவ்வாறான அவருடைய ஆளுமையம்சங்களுக்கு உந்து சக்தியாக அமைந்த உணர்வுநிலை மற்றும் தமிழியல் ஆய்வின் வரலாற்றில் இவை பெறக்கூடிய முக்கியத்துவம் ஆகியனவே கவனத்துக்குரிய வாகின்றன. முதலில் உந்துசக்தியாக அமைந்த உணர்வுநிலை பற்றி நோக்குவோம்.

## உந்து சக்தியாக அமைந்த உணர்வு நிலையும் அதன் வரலாற்றுப் பின்புலமும்:

இவ்வாறான அவருடைய உணர்வு நிலையைத் 'தமிழுணர்வு' எனவும் வழங்குவர். அவரிடம் நிலவிய இத் தமிழுணர்வை உரியவாறு புரிந்துகொள்வதற்கு அவருடைய காலகட்ட தமிழியல் ஆய்வுச் சூழல்கள் மற்றும் அரசியற் சூழல்கள் பற்றியும் அவற்றுடன் அவர் சார்ந்தியங்கிய முறைமையையும் நாம் இங்கு கவனத்துள் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தமிழுணர்வு முனைப்பாக வெளிப்படத் தொடங்கிய காலகட்டத்திலேயே-1940-50-களிலேயே வித்தியானந்தனவர்கள் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று, பல்கலைக்கழக ஆசிரியப் பணியில் அடிபதித்துத் தனது ஆளுமையம்சங்களை வளர்த்து வந்தவர் என்பது இங்கு நமது முதற்கவனத்துக்குரிய செய்தியாகிறது. தமிழகக் கல்வியாளர்கள் பலரும் தமிழ்மொழியின் தொன்மை மற்றும்

பண்பாட்டுத் தனித்தன்மை ஆகியவற்றை ஆதாரங்களுடன் நிறுவும் நோக்கிலான ஆய்வுகளில் தனிக்கவனம் செலுத்தி வந்த காலம், அது. அவர்களுள் ஒரு சாரார் அக்காலகட்டத்தின் சமூக இயக்கங்களாக உருப்பெற்று வளர்ச்சியடைந்து வந்தவையான, 'தனித்தமிழியக்கம்', 'திராவிட இயக்கம்' முதலானவற்றுடன் இணைந்து செயற்பட்டு நின்றவர்கள் என்பதும் இங்கு நினைவில் இருத்தவேண்டிய செய்தியாகிறது.

இவ்வாறான வரலாற்றுச் சூழல் ஈழத்தின் தமிழ்க் கல்வியாளரான வித்தியானந்தன் என்ற இளைஞரின் சிந்தனையிலும் செயற்பாங்குகளிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தியது. ஈழத்திலே அக்காலகட்டத்திலே, பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராகத் தமிழர், அரசியல் தளத்தில் எழுச்சியுறத் தொடங்கியிருந்தனர் என்பது நாமறிந்த செய்தியேயாம். அவ்வாறான எழுச்சியை மொழி, இலக்கியம், கலைகள் முதலான பண்பாட்டுத்தளங்களை நோக்கியும் அகலப்படுத்தி வளர்த்தெடுப்பது தமது கடமை என அவர் உணர்ந்தார். அந்நிலையில் தமிழகத்தில் சமகாலத்தில் உருவாகி வளர்ந்த மேற்சுட்டிய வகையான தமிழுணர்வுசார் கருத்துக்களைத் தமது எழுத்துகளிலும் மேடைப் பேச்சுகளிலும் வெளிப்படுத்தி வந்துள்ளார். வித்தியானந்தனவர்கள் ஒரு 'தமிழுணர்வாளராக' எய்திவந்த ஆளுமை வளர்ச்சியின் பின்புல அம்சங்கள் இவையே.

## தமிழியல் வரலாற்றில் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக்கான இடம்:

இவ்விடயமானது ஒரு தனிக் கட்டுரையாக எழுதப்படவேண்டிய, விரிவான பொருட்பரப்புடையதாகும். இப்பொருட்பரப்பில் முக்கியமானவையாகக் கருதப்படும் இரு விடயங்கள் மட்டுமே இங்கு சுருக்கமாகச் சுட்டப்படவுள்ளன. இவற்றுளொன்று அவருடைய தமிழர் சால்பு என்ற ஆய்வு நூலின் வரலாற்று முக்கியத்துவம் பற்றியது. இன்னொன்று அவர் இஸ்லாமியப் பண்பாட்டில் கொண்டிருந்த ஈடுபாடு பற்றியதாகும்.

அவற்றையடுத்து பேராசிரியர் வித்தியானந்தனவர்களின் மாணவர்களுள் முதல் வரிசைக் கணிப்புக்குரியவர்களில் ஒருவரான பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்கள் பேராசிரியர் வித்தியானந்தனவர்களைப் பற்றி முன்வைத்துள்ள முக்கிய மதிப்பீட்டுக் குறிப்புகள் சில இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன.

## தமிழர் சால்பு என்ற ஆய்வு நூல் தொடர்பாக:

'பத்துப்பாட்டு: வரலாற்று, சமூக, மொழியியல் நோக்கு' என்ற தலைப்பிலான அவருடைய கலாநிதிப்பட்ட ஆய்வும் அதனைத் தொடர்ந்து அவர் எழுதியதான தமிழர் சால்பு நூலும் சங்ககாலம் தொடர்பான அவருடைய கவனக்குவிப்பின் முக்கிய அடையாளங்களாகத் திகழ்வனவாகும். இந்நூலாக்கத்தில் அவரை உந்தி நின்ற 'தமிழுணர்வு' என்ற அம்சம் தொடர்பாக - குறிப்பாக, அந்நூலின் தலைப்பிலமைந்த 'சால்பு' என்ற சொல்லாட்சி தொடர்பாக - அவருடைய மாணவர்களிலொருவரான பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையவர்கள் முன்வைத்துள்ள ஓர் அவதானிப்பு இங்கு பதிவுபெறவேண்டிய முக்கியத்துவமுடையதாகும்.

'சால்பு என்ற பெயரிலேகூடத் தனிச்சிறப்பு உண்டு. வித்தியானந்தன் பண்பாடு என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. ஆங்கிலத்தில் 'Culture' என்பதற்கு மாற்றீடாக உருவாக்கப்பட்ட வார்த்தை 'பண்பாடு' ஆகும். வித்தியானந்தன் ஆய்வு செய்த காலத்திலே தமிழ்ப் பண்பாடு என்றால் சைவப் பண்பாடு அல்லது இந்துப் பண்பாடு என்ற குறுகிய பொருளும் வழங்கியது. வித்தியானந்தன் கண்டுகொண்ட சங்ககாலத் தமிழர் பண்பாடு இக்குறுகிய வட்டத்தைக் கடந்ததென வித்தியானந்தன் கருதினார். சங்ககாலத் தமிழிலே வழங்கிய சான்றோர் என்ற சொல் வித்தியானந்தனைக் கவர்ந்திருக்கிறது. சால்பு உடையவரே சான்றோராவர். சங்கச் சான்றோர் என்று மட்டுமல்லாது பிற்சான்றோர் என்ற வழக்கும் உரையாசிரியர்களாலே பயன்படுத்தப்பட்டு வந்தது. எனவே சால்பு என்ற வார்த்தையை இவர் வழக்கிற்குக் கொண்டுவந்தார். தமிழர்களுக்குச் சிறப்பாக உரிய சால்பு சங்ககாலச் சால்பே என்ற கோட்பாட்டையுடைய இவர் நூலுக்குத் தமிழர் சால்பு என்று பெயரிட்டார்.[1] (பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை. நினைவுப் பேருரை- பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலம் கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு, கொழும்பு. 1989.)

மேற்சுட்டிய பொருண்மைசார் பார்வைகளுக்கான முக்கிய தொடக்கநிலைச் சான்றாக நமக்குக் கிடைக்கும் முக்கியமான முதலாவது ஆக்கம் தமிழகத்தில் வாழ்ந்த ஈழத்தவரான மல்லாகம் விசுவநாதபிள்ளை கனகசபைப்பிள்ளையவர்கள் எழுதிய The Tamils Eighteen Hundred Years Ago என்ற ஆய்வு நூலாகும். இது Madras Review என்ற ஆங்கில இதழில் 1895 முதல் 1901 வரை தொடராகப் பதிவாகி வந்து பின்னர் 1905-இல் நூல்வடிவம் பெற்றதாகும். 1892-ல் உ.வே. சாமிநாதையரவர்களால் பதிப்பிக்கப்பட்டதான சிலப்பதிகாரமே இவ்வாக்கத்துக்கான முக்கிய ஆதார நூலாக அமைந்ததென்பது நாம் மனங்கொள்ளவேண்டிய முக்கிய செய்தியாகும். (கனகசபைப்பிள்ளையவர்களின் இந்த ஆங்கில மொழி ஆக்கமானது பின்னாளில் தமிழறிஞர் திரு. கா. அப்பாத்துரை (1907-1989) அவர்களால் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்யப்பட்டு நூலுருவம் எய்தியுள்ளது.

இவ்வாறு, தமிழர் பண்பாடு தொடர்பாக திரு. வி. கனகசபைப்பிள்ளையவர்களாலும் (அவரைப் போன்ற அக்காலகட்டச் சிந்தனையாளர்களாலுங்கூட) தொடக்கி வைக்கப்பட்ட ஆய்வுப் பார்வையானது பின்வந்த காலப்பகுதிகளில் பல கட்டங்களாக விரிவும் வளர்ச்சியும் பெற்றுவந்துள்ளது. இப்பொருண்மை சார்ந்து பேராசிரியர்கள் கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், எஸ். வையாபுரிப்பிள்ளை மற்றும் மயிலை சீனி வேங்கடசாமி முதலிய தமிழக அறிஞர் பெருமக்கள் பலர் நூல்களும் கட்டுரைகளும் எழுதிவந்துள்ளனர். இவ்வாறாகத் தமிழக அறிஞர் பலரால் கவனம் செலுத்தப்பட்ட ஒரு ஆய்வுப் பொருண்-

மையைத் தேர்ந்து, எழுதப்பட்ட ஒரு ஆக்கம் என்ற வகையி-லேயே வித்தியானந்தனவர்களுடைய தமிழர் சால்பு என்ற ஆக்கம்' விளங்குகிறது. ஆய்வுத் தேடல்களின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமான சிந்தனைத் தேறறே இந்நூலாகும்.

இவ்வாறு நோக்கும்போது ஆய்வுநூல் என்ற வகையில் தமிழர் சால்பு பேராசிரியர் வித்தியனந்தன் அவர்களுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்தது என்பது தமிழக அறிஞர் சமூகத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு முடிபேயாகும். குறிப்பாக, நாம் மேலே நோக்கிய தமிழகப் பேராசிரியர்களில கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இருவரும் வேறு சில தமிழக அறிஞர்களுங்கூட வித்தியானந்தனுடைய இந்நூலைப் பாராட்டியுள்ளனர் என்பதை பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அறியத் தருகிறார்[2]. இவ்வாறு அறியத்தரும் அவர் தன்னுடைய கூற்றாக முன்வைத்துள்ள ஒரு மதிப்பீட்டுக் குறிப்பின் ஒரு பகுதியையும் இங்கு பதிவு செய்ய விழைகிறேன். இதுபோன்ற இன்னொரு சிறந்த நூல் சங்ககாலத் தமிழ்ப் பண்பாட்டை விளக்குவதற்குத் தமிழ்நாட்டிலே தோன்றவில்லை. வித்தியானந்தனுடைய 30-வது வயதில் வெளிவந்த இந்த ஒரு நூலே தமிழியல் ஆய்விலே, அவருக்கு ஒரு நிரந்தர இடத்தைப்பெற்றுத்தந்தது[3]. பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையவர்களின் இம்மதிப்பீடானது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட காலகட்ட - அதாவது 1989-ம் ஆண்டின் ஆய்வுநிலை பற்றியதாகும். இந்த இடைக்காலத்தில் ஏற்பட்டுள்ள ஆய்வுநிலை வளர்ச்சிகளை உள்ளடக்கிய மதிப்பீடு இனித்தான் மேற்கொள்ளப்படவேண்டும்.

## இஸ்லாமிய பண்பாட்டம்சங்கள் மீதான ஈடுபாடு தொடர்பாக...

வித்தியானந்தனவர்களால் பிறையன்பன் என்ற புனைபெயரில் எழுதப்பட்டதான 'கலையும் பண்பும்' என்ற நூலானது இஸ்லாமியப் பண்பாட்டைப் பேசுவதென்பதை மேலே நோக்கியுள்ளோம். தமிழரின் பண்பாட்டு மரபு பற்றிய பார்வையை இந்துப்பண்பாடு என்ற பொது எல்லைக்கு அப்பால் அகலப்படுத்திச் சென்றுள்ள ஒரு ஆக்கம் இது என்பது வெளிப்படை. அவ்வகையில் இது வித்தியானந்தனின் மனவிரிவைத் தெளிவாகவே அடையாளங்காட்டும் முக்கிய சான்றாக் கொள்ளற்கரியதாகும். இந்நூலின் உருவாக்கப் பின்புலம் தொடர்பானதாக இங்கு குறிப்பிடப்படவேண்டிய வரலாற்றுச் செய்தி பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்களுடன் வித்தியானந்தனவர்கள் கொண்டிருந்த புலமைசார் நெருக்கமாகும்.

ஜனாப் ம.மு. உவைஸ் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே 'முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு' என்ற தலைப்பில் தமிழ் முதுகலை ஆய்வை மேற்கொண்டிருந்த காலப்பகுதியில் (1950-களின் ஆரம்பத்தில்) அவ்வாய்வுக்கு ஆலோசனை வழங்கும் வாய்ப்பு வித்தியானந்தனவர்களுக்குக் கிடைத்தது. இதுவே அவ்விருவருக்குமிடையிலான புலமைசார் நெருக்கமாகும். இந்நெருக்கமே வித்தியானந்தனவர்களுக்குப் 'பிறையன்பன்' என்ற அடையாளத்தையும் தந்தது. இது பற்றிய விரிவான குறிப்பொன்றை பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் பேராசிரியர் சு. வித்தியானந்தன் என்ற நூலிலே பதிவுசெய்துள்ளார்.[4]

## பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்கள் முன்வைத்துள்ள மதிப்பீட்டுக் குறிப்புகள்:

'ஈழத்துத் தமிழ்பேசும் மக்கள் சகலரையும் உள்ளடக்கும் வகையிலும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் அமையும் பண்பாட்டுக் கோலத்தை விவரிப்பதும் அந்த விவரண அடிப்படையில் ஈழத்துத் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒரு மீள் வரைவிலக்கணம் வழங்குவதுமே வித்தியானந்தன் அவர்களின் பணிகளின் உட்கிடையாகும்' [5].

'சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களும் ஈழத்துத் தமிழிலக்கியத்தினை வளம்படுத்தியதை ஏற்றுக் கொண்டு அக்கருத்தைப் பரப்பியதன் மூலம் ஈழத்துத் தமிழிலக்கியப் பண்பாட்டினை ஒரு 'விரிந்த' கருதுகோளாக்கினார்.

இதே போன்ற முக்கியத்துவமுடைய இன்னொரு பண்பாட்டு அகற்சி, இலக்கியம் பற்றியதாகும். உயரிலக்கியங்களையே உண்மையான இலக்கியங்களாகக் கருதிவந்த ஒரு பண்பாட்டு வட்டத்தினுள் எழுதாக் கிளவியான நாட்டுப் பாடலையும் நமது இலக்கியப் பாரம்பரியத்தின் பிரிக்கமுடியாத அங்கமாகக் கொண்டாடியோருள் வித்தியானந்தனும் முக்கியமானவர்.'[6]

பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்களின் இம்மதிப்பீட்டுக் குறிப்புகளுடன் இக்கட்டுரை நிறைவுக்கு வருகிறது.

பேராசிரியர் சு. வித்தியானந்தனவர்களின் அவருடைய 100-வது ஆண்டு நினைவாக கலாநிதி திருநாவுக்கரசு சண்முக-நாதன் என்பவரால் 'பல்கலைத் தமிழ்ப் பெருநிதியம்' என்ற மலரொன்று வெளியிடப்பட்டுள்ளது என்ற தகவலையும் இந்நிறைவுப்பகுதியில் முன்வைக்கிறேன்.

## குறிப்புகளும் சான்றுகளும்:


1. பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை. பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலம் - நினைவுப்பேருரை - கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு, கொழும்பு. 1989. ப.8

2. மேற்படி. ப. 9.

3. மேற்படி,

4. பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குமரன் புத்தக இல்லம். (கொழும்பு, சென்னை.) 2013. பக். 33-35

5-6. பேராசிரியர் கா. சிவத்தம்பி, ஈழத்தின் தமிழிலக்கியச் சுடர்கள், குமரன் புத்தக இல்லம். (கொழும்பு, சென்னை,) 2010. ப. 214, ப. 216.




subramanian.n@thaiveedu.com



# ஆய்வு முயற்சிகளில் ஊவாவின் மைந்தன் தெளிவத்தை ஜோசப்

– அ. லெட்சுமணன்

புனைக்கதை இலக்கியத்தில் படைப்பாளியாக ஆழத்தடம் பதித்த தெளிவத்தை ஜோசப், ஊவா மாகாணத்திலுள்ள பதுளை மாவட்டத்தில் தெளிவத்தை எனும் ஊரில் பிறந்தவர். ஊர் மீது கொண்ட பற்றினால் ஜோசப் என்ற தன் பெயரோடு தனது ஊரையும் இணைத்து தெளிவத்தை ஜோசப் என அறியப்பட்டார். மண் மீதும் சமூகம் மீதும் கொண்ட தீரா காதலை உணர்த்துவதாக அவருடைய முன் நகர்வுகள் அமைகின்றன. சிறுகதையாசிரியராகவும் நாவலாசிரியராகவும் பத்தி எழுத்தாளராகவும் விளங்கிய தெளிவத்தை ஜோசப், மலையகத்தின் முக்கிய ஆளுமைகளில் ஒருவர். தன் படைப்புகளுக்கூடாகத் தான் சார்ந்த சமூகத்தின் வரலாற்றையும் அதன் வாழ்வியல் முறைகளையும் மலையக மக்களின் துன்பியல் நிகழ்வுகளையும் அவலங்களையும் அவர்கள் எதிர்நோக்கிய இன்னோரன்ன பிரச்சினைகளையும் வெளிப்படுத்தியவர். இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வையும் மனிதாபிமான அம்சங்களையும் தன் புனைவுகளுக்கூடாக எடுத்துரைத்தவர். தன்னனுபவத் தேட்டங்களை மேடைப்பேச்சுக்கூடாக மக்களிடம் கையளித்தவர்.

ஜோசப் குறித்தான ஆய்வுகள் பேரளவில் கூட இற்றைவரை இடம்பெறாத நிலையில் இலக்கிய உலகில் அவர் குறித்த அவதானிப்பில் ஒரு தேக்க நிலையே நிலவுகிறது. அவருடைய படைப்புகள், படைப்பார்வம் தொடர்பில் தொடர் அவதானத்தை செலுத்தியவர்களாலேயே அவர் இற்றைவரைக் கொண்டாடப்படுகிறார். அவ்வாறானவர்களின் தூண்டுதலின் பேரிலும் அவரின் எழுத்துக்களால் உந்தப்பட்டவன் என்ற வகையிலும் அவரின் ஆய்வு முயற்சிகளை ஆவணப்படுத்த முனைவதாக இக்கட்டுரை அமைகிறது.

மலையகம் என்பது புவியியல் நோக்கில் மட்டும் அர்த்தம் கொண்டு ஒரு குறுகிய பிரதேசவாதத்துக்குள் மட்டும் முடங்கும் சொல்லன்று. குறிப்பிட்ட எல்லையைக் கடந்து பெருந்தோட்டத்துறை என்னும் உற்பத்தி முறையைச் சார்ந்து வாழ்கின்ற மக்கள் குழுவின் இருத்தலைப் பிரக்ஞைபூர்வமான சமூக உணர்வுக்கூடாகக் காட்சிப்படுத்தும் சொல். தெளிவத்தை ஜோசப்பின் 'உழைக்கப்பிறந்தவர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பின் முன்னுரை இதனைத் தெளிவுபடுத்தி நிற்கிறது. சமூகம்சார் உந்துதலோடு இலக்கியம் படைத்த மலையகத்தின் முன்னோடி ஆளுமையாக தெளிவத்தை ஜோசப் கொள்ளப்படுகிறார். இவர் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக மலையக இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளதை அறிய முடிகிறது. இவருடைய எழுத்துக்கள் சிறுகதை, குறுநாவல் என்ற புனைவுகளோடு மட்டுப்படுபவையல்ல. விமர்சனம் மற்றும் பத்தி எழுத்துக்கள் வாயிலாகவும் தன்னை நிலைப்பெறச் செய்யும் எழுத்துக்களாக இவை அமைகின்றன.

தான் வாழ்ந்த சமூக நிலைப்பட்டை நன்கறிந்தவராகவும் மலையக மக்கள் எதிர் கொண்ட சமூக அவலங்களை நன்கு புரிந்து கொண்டராகவும் ஜோசப் காணப்பட்டார். அதாவது அந்த பண்பாட்டு வட்டத்தினுள் அதன் சிசுவாக வாழுகின்றவொருவராக இவர் இருந்தமையால் அந்த பண்பாட்டின் அடிநிலை வேர்களை இவர் இனங்காண்பது இவருக்குச் சுலபமாயிற்று. இதனால் 'தெளிவத்தை ஜோசப்பின் எழுதுகள் மலையகத்தின் உள்ளக வாழ்க்கை நிலையில் ஏற்படும் உயிர்ப்புகளையும் மேல் நிலைப்பாட்டு அசைவியக்கத்தையும் நன்கு விளக்குகின்றன' என்பார், பேராசிரியர் கா. சிவத்தம்பி. 'சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர் மேடைப்பேச்சாளர் என்று தெளிவத்தை ஜோசப் பரவலாக அறியப்பட்ட அளவிற்கு ஆய்வாளர், இரசனைக் கட்டுரையாளர் எனத் தெளிவத்தை ஜோசப்பை அணுகியவர்கள் மிகக் குறைவே', எனப் பேராசிரியர் செ. யோகராசா அவர்களின் ஆதங்கவரிகளும் கவனிக்கத்தக்கதாகும். படைப்புலகில் படைப்பாளியாக முனைப்பு பெறுகின்ற தெளிவத்தை ஜோசப், ஏனையவர்களின் படைப்புகளை ஆராய்ந்தறிந்து ஆவணப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டவர்.

தன் சமூகம் சார்ந்த வரலாற்று தடங்களோடும் ஒப்பிட்டே தன் ஆய்வுகளை நகர்த்தியுள்ளமையை அறிய முடிகிறது. இவ்வாறமைந்த அவரது ஆய்வு முயற்சிகளின் வகிபங்கினைத் தெளிவுபடுத்தும் நோக்கிலும் ஆய்வரங்கில் அவரது நிலைப்பாட்டையும் அவரது பங்குபற்றலையும் ஆவணப்படுத்தும் வகையிலேயே இக்கட்டுரையின் உள்ளடக்கம் அமையப்பெற்றுள்ளது. மலையக இலக்கியத்தின் எழுச்சிக் காலமான அறுபதுகளுக்கு முன்பே எழுத்துலகில் உள்நுழைந்தவர் என்ற வகையில் தெளிவத்தை ஜோசப் அதிக கவனம் பெறுகிறார். அன்று தொடக்கம் இன்று வரையில் படைப்பாளி என்பதற்கப்பால் கலை இலக்கிய செயற்பாட்டாளர் என்ற பன்முகத்தன்மையையும் இக் கட்டுரை தொடர்ந்து பேச விளைகிறது.

மலையக இலக்கிய செல்நெறியில் படைப்புகள் பற்றியும், படைப்பாளர்கள் பற்றியும் ஆய்வு நோக்கோடு ஆவணப்படுத்திய அன்னாரின் முயற்சியை இலக்கிய உலகம் இற்றை வரை விதந்துரைக்கிறது.

அறுபது தொடக்கம் மூன்று தசாப்த காலங்களாகப் படைப்புகளுக்குள் முழுதாய்க் கவனத்தைச் செலுத்திய ஜோசப் அவர்கள் தொண்ணூறுகளின் பிற்பகுதியில் இருந்து ஓர்



இலக்கிய ஆய்வாளராகத் தொடர்ந்து செயற்பட்டார். மலையகம் ஆய்வுத்துறையில் ஆழத்தடம் பதித்தது எண்பதுகளுக்கு பின்னரே ஆகும். குறிப்பாக சாரல் நாடன், மு. நித்தியானந்தன், சாந்திக்குமார், ஜோதிக்குமார் ஆகியோரது ஆய்வு ரீதியான முயற்சிகள் இங்கு குறிப்பிடத்தக்கவைகளாகும். தொடர்ந்து தொண்ணூறுகளின் பிற்பகுதியில் (1997) மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சராகவிருந்த திரு. வீ. புத்திரசிகாமணி தலைமையில் இடம்பெற்ற மலையக தமிழாராய்ச்சி மாநாட்டு முயற்சி, ஆய்வுத்துறையில் மலையகம் மேலும் தடம்பதித்துக்கொள்வதற்கு உந்துசக்தியாக அமைந்தது எனலாம்.

மலையக தமிழாராய்ச்சி மாநாட்டின் முன்னோடி நிகழ்வாக கண்டி, மாத்தளை, ஹட்டன், நாவலப்பிட்டி ஆகிய நகரங்களில் ஆய்வரங்குகள் இடம்பெற்றன. அவ்வாய்வரங்குகள் மலையக கலை, இலக்கியப் போக்குகளை மீட்டிப் பார்க்கும் அரங்குகளாக அமைந்தமை சிறப்பம்சமாகும். அவ்வரங்கொன்றில் தெளிவத்தை ஜோசப் அவர்களின் ஆய்வு முகத்தை தரிசிக்க முடிந்தமையும் குறிப்பிடதக்கதாகும். ‘மலையக இலக்கியத்திற்கு கிறிஸ்த்தவர்களின் பங்களிப்பு’ எனும் தலைப்பில் தனது ஆய்வுரையை அவர் அங்கு நிகழ்த்தினார். கிறிஸ்தவ வாதத்தோடு தலைப்பு தொடங்குகிறதே என்ற விமர்சனத்தோடு அரங்கினுள் நுழைந்தவர்கள், தெளிவத்தை ஜோசப் அவர்களின் உரையின் பின்னர் தெளிந்த முடிவோடு அரங்கை விட்டுச் சென்றிருப்பார்கள் என்பது திண்ணம். ‘செந்தமிழ் கற்றோம்பிய சீர்சால் கிறிஸ்த்தவர்கள் பைபிளைத் தமிழில் மொழிப்பெயர்த்து தமிழ் மொழிக்கு இத்தனை சக்தி இருந்தமையை நிருபித்துக் காட்டியுள்ளனர்’. என்பதை தெளிவத்தையார் அன்று ஆய்வு பூர்வமாக எடுத்துக் காட்டினார். உலக வரலாற்றில் அச்சு இயந்திரம் கண்டுப்பிடித்த காலத்தில் இருந்து உலக மொழிகள் தாக்கம் செலுத்தியமை குறித்தும் அவருடைய பேச்சு அமைந்திருந்தது. உலக மொழிகளின் ஆற்றுகையை நிரூபணம் செய்கின்ற முனைப்புகளுடன் அன்று கருத்துகள் பகிரப்பட்டன. தமிழிலே செய்யுள் வடிவங்கள் உரைநடையாக மாறுகின்ற நிலைப்பற்றிய ஆழமான பார்வை இவரிடத்தில் அமைந்திருந்தது.

1860-களில் இலங்கையின் முதலாவது மலையக எழுத்தாவணமாக ஆப்ரகாம் ஜோசப்பின் ‘கோப்பிக்காட்டுக்கும்மி’ கொள்ளப்படுகிறது. இது பெருந்தோட்டப் பொறிமுறையில் முதலாளிகளின் பக்கம் சார்ந்த பரப்புரையாக அமைந்தாலும் கூட இதுவே முதல் பதிவாக அறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆப்ரகாம் ஜோசப்பின் இந்நூலில்

***‘ஓ கோப்பி பயிரே<br>உலகின் விந்தை நீ<br>உனக்குரிய எசமானர்களை நாடி<br>பொற்குவை மிகுந்தோரைக்<br>கொணர்ந்திங்கு சேர்த்தாய்<br>ஓ கோப்பிப் பயிரே ...’***

எனத் தொடங்கும் இப்பாடல் கோப்பியின் சிறப்பையும், உழைப்பவர்களின் வகிபங்கினையும் சுட்டிநிற்கிறது. மலையகத்தின் முதலாவது நாவலான ‘மலையகத்தின் சுந்தரமீனாள் அல்லது காதலின் வெற்றி’ முப்பதுகளில் வெளிவருகிறது. அதனை எழுதியவர் ஏ. போல் என்ற கிறிஸ்தவரே. அன்று கிறிஸ்தவ இலக்கிய ஆளுமைகளைப் பதிவு செய்வதை நோக்காகக் கொண்ட இவராய்வு பின்னர் பரந்துபட்ட ஒன்றாகப் பரிணாமம் பெற்றது.

மலையக இலக்கியப் பரப்பினுள் துரைவியினுடைய பிரசன்னம் தெளிவத்தை ஜோசப்பினுடைய ஆய்வு முயற்சிகளுக்கு தூண்டுதலை ஏற்படுத்தியதனையும் அறிய முடிகிறது. மலையக இலக்கியம் வெளியீட்டுத்துறையில் துரை விஸ்வநாதன் அவர்களின் பிரவேசம் எண்பதுகளில் இடம்பெற்றது. படைப்புகளை நூலாக்கும் அவரது பணி தொண்ணூறுகளில் தீவிரமடைகிறது. தொண்ணூறுகளின் இறுதியில் மலையக சிறுகதைகள் இரண்டு நூல்களாக தொகுக்கப்படுகின்றன.

- மலையக சிறுகதைகள்
- உழைக்கப் பிறந்தவர்கள்

இவ்விரு நூல்களின் தொகுப்பிற்கு பிரதான செயற்பாட்டளரா கத் தெளிவத்தை ஜோசப்பைத் துரை விஸ்வநாதன் அவர் கள் தெரிவு செய்தார். உண்மையிலும் இந்தப் பணிக்குத் தெளிவத்தை ஜோசப்பை தெரிவு செய்திருக்காவிட்டால் இப் பணி இவ்வாறு முழுமையை அடைந்திருக்குமா ? என்பது சந் தேகமே! மலையகத்தைப் பேசுபொருளாக கொண்ட இத்தொ குப்பிலுள்ள கதைகள் காலவரிசையில் வகைப்படுத்தப்பட்ட தோடு கதை அமைத்தவர்களும் ஆவணப்படுத்தப்பட்டுள் ளார்கள். இந்த அனுபவங்களோடு மலையக சிறுகதை வர லாற்றை ஆய்விற்குட்படுத்தி ஆவணமாக்குகின்ற பணியைத் தெளிவத்தையார் தொடர்ந்தார். தினகரன் வாரமஞ்சரியில் இந்த வரலாற்றைத் தொடராக எழுதினார். இதுவே பின்னா ளில் 'மலையக சிறுகதை வரலாறு' எனும் பெயரில் துரைவி வெளியீடாக வெளிவந்தது. தினகரன் பிரதம ஆசிரியர் ராஜ ஸ்ரீகாந்தா இவ்வாய்வு குறித்துப் பின்வருமாறு கூறுவார். 'ஓர் இனம் இன்றேல் இனக்குழுமம் தனது வரலாற்றைத் தானே எழுதும்போது மட்டுந்தான் வரலாற்று வழுக்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியும். இந்தவகையில் தெளிவத்தை ஜோசப் அவர்களால் எழுதப்பட்ட மலையக சிறுகதை வரலாறு பல உண்மைகளை வெளிக்கொணர்ந்து ஆவணப்படுத்தியுள் ளது. இது வெறுமனே ஓர் வரட்டுத்தனமான வரலாறாக அமை யாது நடைமுறை நிகழ்வுகளோடு கூடிய நெகிழ்ச்சியான வாசிப்புக்குதவும் சுவையான படைப்பாக அமைந்துள்ளது. இந்த சிரமமான பணியினைப் பூர்த்தி செய்வதற்கு இவர் பல் வேறு தேடல்களையும் ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண் டியிருந்தது.

1920 – 1960 வரையுள்ள காலப்பகுதியை மலையக சிறுகதை களின் ஆரம்ப காலமாகக் கொள்வர். இதனை முன்னோடிக ளின் காலம் எனவும் வரையறுப்பர். மலையக சிறுகதைகளை கால அடிப்படையில் வகைப்படுத்தி ஆய்வுகளை முன்னெ டுத்தவர் தெளிவத்தை ஜோசப்பை அச்சிறுகதைகளை மலை யக வரலாற்றுடன் தொடர்புபடுத்தியும் திறனாய்வுகளைச் செய்தவர். வாக்குமூலங்களின் அடிப்படையில் தகவல்க ளைத் திரட்டியும் தெளிவத்தையார் இவ்வாய்வினைச் செய்த மையால் இவரின் இவ்வாய்வு தனித்துவமாக விளங்குகிறது. பின்னாளில் மலையக சிறுகதைகள் தொடர்பில் ஆய்வுகள் பல வெளிவந்திருந்தாலும் கூட இவரின் பார்வையை விடுத்து அல்லது தவிர்த்து எதுவும் எழுதப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. மலையக சிறுகதைகளை ஆய்வு செய்வதற்கு துணியும்போது இவரின் பதிவுகளை விடுத்து இவ்வாய்வை மேற்கொள்ளமுடியாது என்பது திண்ணம். தெளிவத்தை ஜோசப் பத்தி எழுத்துக்களிலேயே அதிக ஆர்வம் காட்டியவ ராகவும் விளங்கினார். அதன் பரிமாணாமாகவே இவரைப் பார்க்க முடியும் என இவரின் பத்தி எழுத்துக்கள் பற்றிய பார் வையை செலுத்திய மல்லிகைப்பூ சந்தி திலகரின் கூற்றும் இங்கு கவனிக்கதக்கது. படைப்பிலக்கியத்தில் தான் ஈடுபாடு கொண்ட துறை மீது அவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் சாட்சி யங்களாகவே அவரது வாக்குமூலங்கள் அமைந்துள்ளமை இதற்குத் தக்க சான்றாகும்.

புனைவுவிலக்கியத்தில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக நாவல் எழுத வந்தவர். 'காலங்கள் சாவதில்லை' நாவலூடா கவே தன் முதல் பிரசவத்தை நிகழ்த்தியவர். பின்னர் வெளி வந்த இவரின் பாலாயி தொகுப்பில் மூன்று நாவல்கள் இடம் பெற்றன. இதனை அடுத்து இவர் எழுதிய 'குடை நிழல்', 'நாங் கள் பாவிகளாக இருக்கின்றோம்' அல்லது 1983 நாவல்களி லும் தன் அடையாளத்தை தக்க வைத்துக்கொண்டவர். இவ ருடைய நாவல்கள் இலங்கையின் பிரதான இதழ்களிலும் பிர சுரம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். நாவல்த் துறை பங்களிப்போடு நில்லாது நாவல் இலக்கிய வளர்ச்சி குறித்த தேடலிலும் தீவிரமாக ஈடுபட்டார். தான் பெற்ற தரவுக ளைக் கொண்டு ஆய்வுகளையும் நிகழ்த்தி உள்ளார். இதன் வெளிப்பாடே நாவல் பற்றிய 2005-துரைவி நினைவுப் பேருரை.

வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமே தமிழில் தோன்றிய முதல் நாவலாகும். அதுபோல இலங்கை யில் 1885-ல் உருவான சித்திலெவ்வையின் 'அசன்பே சரித்தி ரம்' முதல் நாவலாகவும் கொள்ளப்படுகிறது. இலங்கையிலி ருந்து வெளியான 'காவலப்பன்' நாவலே இலங்கையில் எழுந்த முதல் நாவலென 'செங்கை ஆழியான்' நிறுவ விளைந்தார். மலையக நாவல் துறையின் முன்னோடிகளாக ஏ.போல், நெல்லையா, நடேசய்யர் போன்றோர் விளங்குகிறார் கள், 1924 தொடக்கம் 2010 வருடம் வரையில் வெளிவந்த 51 மலையக நாவல்களை பட்டியல் படுத்தி அவற்றின் படிமுறை வளர்ச்சியினை நோக்குகின்ற வகையில் அமைந்த இவரது ஆய்வுகள் கூடிய கவனம் பெறுவதைக் காணலாம். மலையக நாவல்கள் தொடர்பில் பேராசிரியர் க.அருணாசலம், பேராசிரி யர் செ. யோகராசா ஆகியோரின் பார்வைகள் குறிப்பிடத்தக் கவைகளாகும். நாவல் இலக்கியம் தொடர்பில் பொதுப் பார் வையில் விஞ்சி நிற்கின்ற பேராசிரியர் கைலாசபதியின் அணு குமுறையோடு இவரது எழுத்துக்களும் இணைந்து போகின் றன.

இதழ்களில் வெளிவந்த புனைவுகள் குறித்த ஆய்வினை மேற்கொள்ளும்போது இலங்கையின் சஞ்சிகைகள் குறித் துக் கூடிய கவனம் செலுத்தினார். அதனை தெளிவத்தை ஜோசப் எழுத்துருவாக்கங்களாகவும் கொண்டு வந்தார். இத ழியல் பற்றிய அவரது எழுத்துருக்களை பின்வரும் அடிப்ப டையில் நோக்கலாம்.

- மலையக இலக்கியமும் இதழியலும்.
- இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும்.

### மலையக இலக்கியமும் இதழியலும்:

மலையகத்திலிருந்து வெளிவந்த முதலாவது இதழ் லாரி கிருஸ்ணாவினுடைய ஜனமித்ரன் எனச் சாரல்நாடன் குறிப்பி டுவார். அதைத் தொடர்ந்து 1960 வரையில் மலையகத்தில் 85-ற்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் 'தேசநேசன், தேசபக்தன்' போன்றன நடேசய்யரின் இதழ்களா கும். மலையக நாவல் இலக்கியத்திலும் முன்னோடியாக இனங்காணப்பட்ட எச்.நெல்லையாவின் 'ஜனநீதிகள்'(1928) இதழும் குறிப்பிடத்தக்கது. பின்னர் 1930-ல் எச். நல்லையா அவர்களைக் கொண்டே வீரகேசரி பத்திரிகை தனது பய ணத்தை ஆரம்பித்தது. அவ்வாறே தினகரன் இதழும் மயில் வாகனம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தனது பய

ணத்தை 1932-ல் தொடங்குகியது. மலையக இதழ்களைப் பட்டியல் படுத்தும் பொறுப்பில் சாரல் நாடன் அவர்களின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவ்வாறே 'மலையக தமிழ்ச் சஞ்சிகைகள்' எனும் தலைப்பில் இரா. சர்மிளாதேவியின் ஆய்வுத் தொகுப்பு நூலும் கடிய கவனம் பெறுகிறது. மலையக இதழியல் துறையில் முக்கிய ஆவணமாகத் திகழும் இந்நூலில் ஈழத்து இதழியல் தொடர்பிலான பதிவுகளையும் உள்ளடக்கியிருப்பது சிறப்பம்சமாகும். தெளிவத்தை ஜோசப் அவர்கள் இதழ்களைப் பட்டியல்படுத்தும் அதே வேளை 60-களின் பின்னர் மலையக இலக்கியத்தின் எழுச்சிக்கு துணை நின்ற இதழ்கள் மீது அதீத கவனம் செலுத்தியிருந்தார். இந்த இதழ்களோடு தான் கொண்டிருந்த தொடர்புகளையும் அனுபவப் பதிவுகளாகத் தன்னாய்வில் தெளி-வத்தை ஜோசப் தந்திருந்தார்.

இலங்கையில் இருந்து வெளிவரும் வீரகேசரிப் பத்திரிகை மலையக விடயங்களை வெளிப்படுத்தும் நோக்கில் தோட்ட மஞ்சரி, குறிஞ்சி பரல்கள் முதலான பகுதிகளை ஒதுக்கியதையும், பின்னாளில் தினகரன் இதழ் மலையகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்ததையும் இவரது வாக்குமூல வரிகள் கொண்டு அறியலாம். மலையக புனைக்கதை வளர்ச்சியில் 'மலைமுரசு' இதழின் வருகை குறித்தும் கூடிய கவனஞ் செலுத்தினார். மலையகம் குறித்த நேசப்பார்வையை 'மல்லிகை' கொண்டிருந்ததையும் மலையகம் குறித்த அனுபவ பார்வையை 'ஞானம்' இதழ் கொண்டிருந்தமையையும் இவரது ஆய்வுகள் வெளிப்படுத்தி இருந்தது. 'தாய்வீடு' இதழின் ஊடாக மலையகம் குறித்த பதிவுகளை ஆவணப்படுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும்:

இலங்கையின் இலக்கிய வளர்ச்சியில் இதழ்களின் வகிபங்கினை ஆழமாக எழுதியவர் தெளிவத்தை ஜோசப். கதைச் சொல்லி என்பதற்கப்பால் வரலாற்று ஆய்வாளராகவும் தெளிவத்தையார் விளங்குகிறார். இருபதாம் நூற்றாண்டின் 'ஈழத்து இதழியலும் இலக்கியமும்' எனும் தலைப்பில் இவரின் ஆய்வுகளை நூலாக்கும் முயற்சியில் மூன்றாவது மனிதன் என்ற அமைப்பு ஈடுபட்டுள்ளமையும் வாசகருக்கு மகிழ்வைத் தருகின்ற விடயமாகும். நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், பருவகால இதழ்கள், சிறப்பிதழ்கள், என்ற வகையில் இலக்கியத்திற்கு இவ்விதழ்களின் பங்களிப்புகள் தொடர்பான பதிவுகள் தொடர்கின்றன. அவ்வாறே அண்மைக்கால தினக்குரல், நவமணி போன்ற இதழ்களின் பங்களிப்புகள் குறித்தும் விதந்து பேசுகிறார். இத்தொடரை இவர் நிறுத்திய தன் பின்னர் அண்மைக் கால இதழியல் பதிவுகளுக்குரிய ஆவணப்படுத்தல் வெற்றிடமாகவே உள்ளது.

புனைவுகள், இதழ்கள் தொடர்பிலான ஈடுபாட்டின் காரணமாகவே இத்துறைசார் நிபுணத்துவத்தை இவர் வளர்த்துக் கொண்டார். இதன் விளைவாக இத் துறைகளோடு தொடர்புபட்ட இவரது கட்டுரைகள் மற்றும் உரைகள் மிகக் கவனத்தை பெறுகின்றன.

- அமரர் இரா.சிவலிங்கம் அவர்களின் நினைவுப் பேருரை; 'மலையகம் எனும் அடையாளம் - மலையக இலக்கியத்தின் வகிபங்கு'.
- சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு - 2011 (இலங்கை) - சிற்றிதழ் அரங்கு; 'இலங்கையில் சிற்றிதழ்கள் வரலாறும் வளர்ச்சியும்'.
- காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம் - இந்தியா, அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாளர் சங்கம் - சிட்னி, மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் - இலங்கை இணைந்து நடாத்திய மாநாடு; 'இலங்கை மலையகத் தமிழ் இலக்கியங்களும் கலைப் பண்பாட்டு வடிவங்களும்'
- 2017 உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை ஆய்வுரை; 'சிறுகதை, நாவல் பரவலான இலக்கியங்கள்'
- 'இலக்கிய சந்திப்பு47' பன்னாட்டு நிகழ்வில் இதழியல் அரங்கின் தலைமை உரை
- 2003 காலச்சுவடு தமிழினி மாநாடு; இந்திய விஜய உரை
- 2013 விஸ்ணுபுரம் விருது பெற்றுக்கொண்ட அரங்கில் ஆற்றிய உரை
- 2000-ம் வருடம் கனடா, லண்டன் போன்ற ஐரோப்பிய நாடுகளில் இலக்கிய அரங்குகளில் கலந்து கொண்டாற்றிய உரை
- நீர்வை பொன்னையன் 'விபவி' நிகழ்வில் ஆற்றிய உரை; 'மலையக எழுத்தாளர்களின் பங்கு'
- பன்னாட்டு கருத்தரங்கு - மலையக சிறுகதை அரங்கு; 'மலையக புனைக்கதை இலக்கியத்தின் செல்நெறிகள்'

மேற்குறித்த உரைகள் தெளிவத்தையாரின் ஆய்வுத்திறனுக்கு தக்க சான்று, அவ்வாறே இவ்விடயங்களை ஒட்டி இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் பின்வருமாறு

- டொமினிக் ஜீவாவும் மலையக இலக்கியமும்
- ஞானம் பத்து இதழ்கள் ஓர் பார்வை
- ஞானம் 100-வது இதழில் வெளிவந்த மலையக இலக்கியம் எனும் கட்டுரை
- கனடாவில் வாழும் தமிழ்
- நானும் ஜீவாவும்.

அறுபதுகளில் எழுத்துலகில் பிரவேசித்து தெளிவத்தை ஜோசப் அவர்கள் தன்னை படைப்பாளியாக, பத்தி எழுத்தாளராக, ஆய்வாளராக தகவமைத்துக் கொண்டதோடு நில்லாது தன்னை இலக்கியச் செயற்பாட்டாளராகவும் நிலைநிறுத்திக் கொண்டார். அதன் வாயிலாக தன் இலக்கியப் பணியை, இலக்கிய ஆளுமையை வாசகர்களிடத்தில் ஊடுகடத்துவதிலும் வல்லவராகக் காணப்பட்டார். அந்த வகையில் அமைப்புகள் பலவற்றோடு தொடர்பை பேணியதோடு நில்லாது நிர்வாகியாக அமைப்பு சார் தொழிற்பாடுகளிலும் ஈடுபட்டார்.

இதழியல் நண்பர்களுடன் கொண்டிருந்த நேச நட்பு சமகால இலக்கியப் போக்கினை அறிய அவருக்குதவியது. நட்பு வட்டம் விரிவடைந்த நிலையில் வயது வித்தியாசத்தைக் கடந்து, மொழி, இனங்களைக் கடந்து, நாடுகளைக் கடந்து நேசத்தோடு அனைவரோடும் பழகினார். மிக நீண்ட காலமாக மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைமைப் பொறுப்பை அலங்கரித்த அன்னார், தான் இறக்கும் வரையில் இப்பதவி

யில் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1967ல் அம்மன்றத்தின் செயலாளராகப் பதவியிலிருந்த போது நாகலிங்கம் (கண்டிச் செய்தி) தலைவராகச் செயற்பட்டுள்ளார். இக்காலத்தில் கண்டியில் புதுமைப்பித்தன் விழாவை முன்னின்று நடத்தினார். இந்நிகழ்வில் சிறுகதையாளர் கு.அழகிரிசாமி கலந்துக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு எழுத்தாளர் சங்கத்துடனும் மலையக கலை இலக்கிய பேரவையுடனும் தன் தொடர்பை பேணி வந்தார். அவ்வாறே கொடகே நிறுவனத்துடன் இவர் இணைந்து செயற்படுவதும் தமிழ், சிங்கள எழுத்தாளர்களுடன் இவர் இணைந்து செயற்படுவதும் தெளிவத்தையாரை இனம், மதங்களைக் கடந்து பழகும் தன்மையுடையவராகக் காட்டியது.

மலையக சேவை, லக்கிலேண்ட் முத்தையா இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டி, துரைவி-தினகரன் சிறுகதைப் போட்டி போன்றவற்றின் பிரதான நடுவராகக் கடமையாற்றிய தெளிவத்தை ஜோசப் சிறுகதை ஆளுமைகளை இனங்காணபதிலும் வல்லவர். அவர்களைத் துலக்கமாக இனங்கண்டு இலக்கிய உலகுக்கு அடையாளங் காட்டியும் இருந்தார். கடல் கடந்த நாடுகளில் புலம் பெயர் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் அமைப்புகளுடனான தொடர்புகளும் குறிப்பாக தாய் வீடு, மூன்றாவது மனிதன் போன்றவற்றுடனான தொடர்புகளும் குறிப்பிடதக்கவைகளாகும்.

சமகாலத்து எழுத்தாளர்களையும், வளர்ந்துவரும் எழுத்தாளர்களையும் தன்னுடைய முன்னுரை, அணிந்துரை எழுத்துக்கள் ஊடாக தூண்டிய பணியும் மிக முக்கியத்துவம் பெற்றதாகும். எழுத்தாளர்களின் நம்பிக்கையை விரிவுப்படுத்தி, அவர்களைப் பக்குவப்படுத்தி, வலிமைப்படுத்தும் வண்ணம் எழுதப்பட்ட எழுத்துக்கள் நாற்பத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களில் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அம்முன்னுரைகள், அணிந்துரைகள் ஆய்வார்ந்த நோக்கில் அமையப்பெற்றிருப்பதும் சிறப்பம்சமாகும். சிறுகதை, நாவல், இதழியல் ஆகிய துறைகளோடு கவிதை, பத்தி, வரலாறு, சிறுவர் இலக்கியம், மொழிப்பெயர்ப்பு போன்ற நூல்களுக்கு வழங்கிய அணிந்துரைகள் அவ்வவ்துறைகளில் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டையும், புலமையையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. சி.வே.ராவின் 'மலைமேகம்' கனிவுமதியின் 'அப்புறமென்ன' ஆகிய கவிதைத் தொகுப்புகளும் அகளங்கனின் 'முற்றத்து கரடி' போன்ற சிறுவர் இலக்கியமும், லெனின் மதிவானத்தின் 'ஊற்றுக்களும் ஓடங்களும்' என்ற திறனாய்வு கட்டுரைத் தொகுப்புக்கும் இவருடைய அணிந்துரைகளைத் தாங்கி வெளிவந்தன. இதுமாத்திரமன்றி ஆய்வுக் கட்டுரை, மொழிப்பெயர்ப்பு, மற்றும் புனைகதை இலக்கியங்களுக்கும் அணிந்துரைகளை எழுதியுள்ளார்.

தமிழகனின் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பான 'மலையகமும் மறுவாழ்வும்' வரலாற்று மொழிப்பெயர்ப்பு நூலான 'கசந்த கோப்பி' திக்குவலை கமால் மொழிப்பெயர்த்த சுனில் சாந்தவின் சிறுகதைகள், 'சுடுமணல்' பியதாச வெளிக்கன்னகேயின் மூலத்தில் உருவான 'அவன் ஒரு அபூர்வ சிறுவன்' மலரன்பனின் மொழிப்பெயர்ப்பு நாவல், வடபுலத்து எழுத்தாளர்களான இராஜநாயகத்தின் 'சொந்தமண்' இரத்தினவேலோனின் 'புதிய பயணம், நிலாக்காலம்' இஸ்லாமிய எழுத்தாளர்களான ஜின்னா ஷரிப்புத்தீனின் 'கருகாத பசுமை', அஷ்ரப் சிஹாப்தீனின் 'விரல்களின் பிரார்த்தனை', அல்அஸூமத்தின் 'அறுவடைக் கனவுகள்' முதலான நூல்களுக்கான முன்னுரைகள், அணிந்துரைகள் இலக்கிய உலகில் அன்னாரின் பணியை நினைவுகூர்கின்றன. பத்தி எழுத்து நூல்களான மல்லியப்பூ சந்தி திலகரின் 'மலைகளைப் பேச விடுங்கள்' மற்றும் ஜீவா சதாசிவத்தின் 'அலசல்' போன்ற நூல்களுக்கு எழுதிய அணிந்துரைகளும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

தெளிவத்தை ஜோசப் மலையக இலக்கியத்தின் செல்நெறியை அதன் கனதியை அளவிடுவதற்கு ஏற்றாற் போல் அதனை ஆவணப்படுத்தியும் இருக்கிறார். அவருடைய எழுத்துக்கள் ஆய்வு நெறிமுறைகளை ஒத்ததாகவோ, ஆய்வு நியமத்தை அனுசரித்து எழுதப்பட்டதாகவோ இல்லாது இருந்தாலும் இவைகள் அவரைப் பலவீனப்படுத்தி விடமுடியாது. நியமத்தின் அடிப்படையில் ஆய்வை மேற்கொள்கின்ற நியம ஆய்வாளர்கள் இவரது எழுத்துக்களைத் தவிரத்தும் செல்ல முடியாது. ஏனெனில் இவரின் எழுத்துகள் உள்ளதை உள்ளவாறு கூறுபவை. வரலாற்றுப் பிழையின்றி எழுதப்பட்டவை. ஆய்வுத்துறை வளர்ச்சியடைந்து வரும் துறை என்ற வகையில் அதன் படிமுறைகளில் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆதலால் அவரின் எழுத்துக்கள் ஆய்வாளர்களால் ஓர் நாள் கொண்டாடப்படும் என்பது திண்ணம். ஆய்வடிப்படையில் அவரால் உருவான எழுத்துக்கள் சில மாத்திரமே நூலுருப் பெற்றுள்ளன. அவரது உரைகள், இதழ்களில் வந்துள்ள எழுத்துக்கள் தொகுக்கப்பட்டு நூல்களாக்கப்படல் வேண்டும். அதனூடாக மலையக இலக்கியம், சமூகம் தொடர்பிலான ஆய்வுச் செல்நெறியை இலகுப்படுத்தி அணுகவும், வலிமைப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமையும் எனலாம்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராக நீண்ட காலம் இருந்து மன்றத்தின் இலக்கிய சமூகச் செயற்பாட்டை வழிநடத்திய இவரது பணி தனித்து மதிப்பிடக்கூடியதாகும். இம் மன்றத்தின் வெளியீடுகள் மலையக இலக்கியத்தின் காத்திரதன்மைக்குச் சான்று பகர்கின்றன. 2017-ம் வருடம் இவரது தலைமையில் தமிழகத்தில் இடம்பெற்ற மலையக இலக்கியம் தொடர்பான பன்னாட்டு ஆய்வரங்க நிகழ்வில் மலையக ஆய்வாளர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. திண்டுக்கல் காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழக தமிழ்த்துறை அதன் தலைவர் பா. ஆனந்தகுமார் தலைமையில் மேற்படி ஆய்வரங்கம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கு வெளியே குறிப்பாக தமிழகத்தில் முதலாவதாக இடம்பெற்ற நிகழ்வாக இந்நிகழ்வு காணப்படுகிறது. மலையக சமூக பொருளாதார, கல்வி, கலை இலக்கியம் தொடர்பிலான விடயங்களை மீட்டிப்பார்க்கும் வகையில் அமைந்த நிகழ்வாக இந்நிகழ்வு காணப்படுகிறது எனலாம்.

இவரது தலைமையில் மு. சிவலிங்கம், பதுளை சேனாதி-ராஜா, மல்லிகைப்பூ சந்தி திலகர், அந்தனி ஜீவா, கே. பொன்னுத்துரை, வே. இராமர், சதாசிவம், அ. லெட்சுமணன் ஆகியோர் பங்கேற்றார்கள். இந்நிகழ்வின் பின்னணியில் மாத்-தளை சோமுவின் பங்கேற்பும் முக்கியமானது. அவ்வாறே தாயகம் திரும்பிய மு.சி. கந்தையா, சி. பன்னீர்செல்வம், தவ முதல்வன், பேனா மனோகரன் உட்பட்டவர்களின் பங்கேற்பும் கவனிக்கத்தக்கது. தி. ஞானசேகரனுடைய மலையக நாவல்களை அமெரிக்கன் கல்லூரியில் முதன்முதலாக உசாத்துணை நூல்களாக வைத்திருந்த பேராசிரியர் பேர்த்தி ரெட்டி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அயல் நாட்டு கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் குறிஞ்சிவேந்தன் உட்பட மலையக இலக்கியத்தை ஆதர்சிக்கும் பேராசிரியர்களும் ஆய்வு

மாணவர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றமையும் முக்கிய விடயங்களாகும்.

மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த 'மலையக இலக்கியம்' பன்னாட்டு ஆய்வரங்கிலும் தெளிவத்தை ஜோசப் அவர்களின் தலைமையிலான அணி பங்கேற்றது. மலையக சமூகம் குறித்த ஆய்வுக் களத்தில் இவ்வாய்வரங்



கம் முக்கியத்துவம் வாய்ந்தது. அக்காலத்தில் கடமையிலிருந்த உலகத் தமிழ்ச்சங்க இயக்குநர் இரா. சேகர் அவர்களது தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. மலையக இலக்கியத்தின் முக்கிய விடயங்கள் குறித்து தெளிவத்தை ஜோசப் தலைமையிலான அணியினர் ஒவ்வொருவரும் ஆய்வுரைகளை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பங்கேற்ற பேராளர்கள் இவ்வுரைகளைக் கேட்டுப் புதுவித அனுபவமாக இருக்கிறது என கருத்துக்கூறினார்கள்.

இந்நிகழ்வில் கருத்துரை வழங்கிய பேராசிரியர் இரா. மோகன் (அமரர்) இந்நிகழ்வை மிகவும் சிலாகித்துப் பேசியதோடு நில்லாது பதிவொன்றினையும் எழுதினார். இந்நிகழ்வின் பின்னணி ஏற்பாட்டில் மாத்தளை சோமுவின் பங்கும் குறிப்பிடத்தக்கது. நிகர் சமூக கலை இலக்கிய அரங்கின் தூண்டுதலில் அந்தனி ஜீவா மீள்பதிப்பு செய்த கோ. நடேசய்யரின் தொழிலாளர்களின் அந்திரப் பிழைப்பு நாடக நூலும் காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழக ஆய்வரங்கில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

'மலையகம் 200' பற்றிய அவதானம் 2022-ம் வருடம் தொடங்கப்பெற்றக் காலமாக விளங்குகிறது. ஏற்கனவே தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் குறிஞ்சிவேந்தன் காந்தி கிராம பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற 'மலையக இலக்கியம்' பன்னாட்டு கருத்தரங்கத்தில் பங்கேற்றிருந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஸ்ட விரிவுரையாளர்களான பெ.சரவணகுமார், எம்.ஜெயசீலன் ஆகியோர் கலாநிதி பட்ட ஆய்வை தஞ்சை பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டிருந்த நிலையில் கோ. நடேசய்யரின் படைப்புகளை மீள்பதிப்பு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். தஞ்சையைப் பூர்வீகமாக கொண்ட கோ.நடேசய்யர் தொடர்பான அவதானத்தில் இரண்டு விரிவுரையாளர்களின் தேடலும் ஆவணப்படுத்தலும் முக்கியத்துவம் வாய்ந்தது. மலையகம் 200 (1823-2023) தொடர்பான அவதானமே இதற்கு காரணம்.

இத்தூண்டுதல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் குறிஞ்சிவேந்தன் ஊடாக முனைப்பு பெற்றமையும் இங்கு கவனிக்கத்தக்கது. இந்நிலையில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் தெளிவத்தை ஜோசப் அவர்களுடன் இணைந்து மலையகம் 200 ஆய்வரங்கு தஞ்சை பல்கலைக்கழகத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை விரிவுபடுத்தும் நோக்கில் பேராசிரியர் குறிஞ்சிவேந்தன் மலையகத்துக்கு வருகைத்தந்து ஆரம்பக்கட்ட முயற்சிகளை தொடங்கி வைத்தார். இந்நிலையில் தெளிவத்தை ஜோசப் சுகவீனமடைந்தார். மன்றத்தின் உப தலைவர் மு. சிவலிங்கம் தலைமையில் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. மலையகத்தில் இருந்து இருபத்தைத்துக்கு மேற்பட்ட ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரைகளைத் தஞ்சை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் பங்கேற்கவிருந்த மலையக குழுவினருக்கு தெரியாமல் மலையக அரசியல்வாதி ஒருவரை மாத்திரம் அழைத்து மலையகம் 200 நிகழ்வை பேராசிரியர் குறிஞ்சிவேந்தன் தலைமையில் நடத்தியமை கவலைக்குரியது. திட்டமிட்டு ஆய்வரங்கிற்கு அனுப்பிய கட்டுரைகளுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இற்றைவரை கட்டுரையாளர்களுக்கு தெரியாத சங்கதி.

இந்நிலையில் மலையகம் 200 தொடர்பான விடயத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் ஸ்ரீபிரசாந்தன் அதிக கவனம் எடுத்துக் கொண்டார். அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக அவர் தலைமையில் இடம் பெற்ற 'மலையகம் 200' ஆய்வரங்கம் பெரும் கவனத்தைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் கடந்த வருடம் நடத்தப்பட்ட அரச சாகித்திய விருது வழங்கல் 2023 நிகழ்வில் பேராதனைப் பல்கலைக் கழக ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளை ஸ்ரீ பிரசாந்தன் அவர்கள் தொகுத்து நூலாகவும் வெளியிட்டார். இவ்வாய்வரங்கு இடம்பெற்ற காலத்தில் தெளிவத்தை ஜோசப் அமரத்துவம் அடைந்திருந்தார். இந்நிகழ்வுக்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்த தெளிவத்தையாரின் வகிபங்கும் குறித்தும் இவ்வாய்வரங்கில் பேசப்பட்டமையும் இங்கு கவனிக்கத்தக்கது. அவ்வாறே மலைகம் 200 தொடர்பிலான அவதானத்தில் 'தாய்-வீடு' இதழும் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டது. மலையகச் சமூகம் குறித்த அக்கறையில் தாய்வீடு 'மலையக மாருதம் 200' எனும் தலைப்பில் ஆவண இதழொன்றைத் தயாரித்து

வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விதழாக்க முயற்சியின் பின்னணியில் மல்லியப்பூ சந்தி திலகரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்விதழ் மலையக ஆளுமைகளை ஆவணப்படுத்தி இருந்தமையும் நினைவுகூரத்தக்கது. அதன் முக்கிய அம்சமாக தெளி வத்தை ஜோசப்பின் 'மலையக இலக்கியமும் இதழியலும்' என்ற ஆய்வுக் கட்டுரை பிரசுரமாகியுள்ளமையும் கவனிக்கத் தக்கது. மலையகம் 200 தொடர்பான அவதானத்தில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் டிசம்பர் 2023-ல் ஸ்ரீ பாத தேசியக் கல்லூரி மண்டபத்தில் மலையக நாட்டாரியல் ஆய் வரங்கை நடத்தியதுடன் சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிட் டமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே சமூக அபிவிருத்தி நிறு வகம் பிரமாண்ட முறையில் இந்நிகழ்வை ஏற்பாடு செய்தமை யும் இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு, யாழ்ப்பாணம், கிளி நொச்சி போன்ற இடங்களில் மலையகம் 200 தொடர்பிலான கவனயீர்ப்பு நிகழ்வுகளும் நடந்தேறியமையும் கவனத்திற்குரி யதாகும்.

நிகர் சமூக கலை இலக்கிய அமைப்பு வருடாந்த மரநடுகை வாரத்தை மே 14 தொடக்கம் 21 என கடந்த வருடம் பிரகட னப்படுத்தி இருந்ததைப்போல் ஐக்கிய நாடுகள் அவை மே 21-ம் திகதியை சர்வதேச தேயிலை தினமாக பிரகடனப்படுத் தியது. அவ்வாறே நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் இலங்கைத் தபால் திணைக்களத்துடன் இணைந்து மலைய கம் 200 தபால் முத்திரைகளை வெளியிட்டுள்ளமையும் கவ னத்திற்குரியது.

தெளிவத்தை ஜோசப்பின் எழுத்துலக வாழ்வை மீட்டிப் பார்க் கும் நிகழ்வுகளில் ஒன்றாக நிகர் சமூக கலை இலக்கிய அரங் கம் 2021ஒக்டோபர் 22-ம் 29-ம் திகதிகளில் நடாத்திய 'எழுத் துலக வாழ்வில் தெளிவத்தை ஜோசப்' எனும் நிகழ்நிலை நிகழ்வைக் கூறலாம் இந்நிகழ்வு. அவரின் எழுத்துக்களினதும் கலை, இலக்கிய செயற்பாடுகளினதும் வீச்சினையும் எல்லா கோணங்களிலும் ஆய்வுக்குட்படுத்தியது. இந்நிகழ்வில் தெளிவத்தை ஜோசப்பாருடைய ஏற்புரை எல்லோரினதும் கவ னத்தை வென்றதாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கதா கும். பதுளை மண்ணின் மைந்தன் பதுளை சேனாதிராஜா, தி. ஞானசேகரன் ஆகியோரின தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தெளிவத்தை ஜோசப்பின் படைப்புகள் பற்றி அ.வசந்தா ரஞ்சனி, வே. இராமர், ஜெ. சற்குருநாதன், இரா. நித்தியானந்தன், மல்லியப்பூ சந்தி திலகர், சு. தவச்செல்வன், அ. லெட்சுமணன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்தினார்கள்.

நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில் அவருடைய திடீர் இறப்பு என்பது அவர் நேசித்த, அவரை நேசித்த உறவுகளுக்கும் மலையக இலக்கியத்திற்கும் பேரிழப்பாகும். மறைவின் பின் னர் தெளிவத்தை ஜோசப் ஆவணாக்கம் அமைக்குப்பட்டுள் ளமையும் குறிப்பிடத்தக்கது. இம்முயற்சியில் தெளிவத்தை ஜோசப்பிடம் அன்று தொடக்கம் இற்றைவரை ஆழ்ந்த ஈடு பாடு கொண்ட மல்லியப்பூ சந்தி திலகரின் பணி விதந்துரைக் கத்தக்கது. அவ்வாறே தாய்வீடு இயக்கத்தோடு திலகரின் பாக்கியா பதிப்பகமும் இணைந்து தாய்வீடு இதழில் தொட ராக பிரசுரமான 'மாறுதல்கள்' என்ற தொடர்கதையை நாவ லாக வெளிக்கொணர்ந்துள்ளமையும் சிறப்பம்சமாகும். தெளி வத்தை ஜோசப்பின் சிறுகதைகள் பலவற்றைத் தொகுத்து மல்லியப்பூ சந்தி திலகர் ஏலவே 'தெளிவத்தை ஜோசப் சிறுக தைகள்' என்ற பெயரில் சிறுகதைத் தொகுப்பொன்றை வெளி யிட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியி லும் திலகர், மு. நித்தியானந்தன், எச். விக்ரமசிங்க ஆகியோ ரின் உள்ளார்ந்த ஈடுபாடு போற்றுதற்குரியதாகும். இந்நிலை யில் அவர் தலைமையேற்றிருந்த மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் அவர் குறித்து போதிய அக்கறை செலுத்தவில்லை என்ற ஆதங்கமும் மலைய மக்களிடத்தில் இற்றைவரை தொடர்ந்தும் நிலவி வருகிறது.

தெளிவத்தை ஜோசப் என்பது மலையக இருப்பின் ஓர் அடை யாளத்திற்குரிய நாமமாகவே உற்று நோக்கப்படுகிறது. தெளி வத்தை ஜோசப் பதுளை, தெளிவத்தை, ஊவா, மலையகம், இலங்கை, இந்தியா, சர்வதேசம் என்ற ரீதியில் தன் ஆய்வு களை முன்னெடுத்துச் சென்றதில் ஜோசப் அவர்களுக்குத் தனித்துவமான அடையாளம் உள்ளது. மலையகத்தின் ஓர் குறியீடாகவே தெளிவத்தை ஜோசப் அவர்களை என்றும் இனங்காணலாம். அவரின் ஆய்வுப் புலமையும், ஆய்வுத் தளத்திற்கு அவர் விட்டுச் சென்ற தடங்களும் இலக்கிய உல கில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகவே உணரப்படுகின்றன. மலையக சமூக அசைவியக்கத்திற்கு தெளிவத்தையாரின் எழுத்துக்களும் சாட்சி ஆவணங்களாகவே விளங்குகின்றன. அவ்வாறே அவருடைய படைப்புக்களும் ஆய்வுகளும் ஆவண எழுத்துக்களும் மற்றொரு தளத்தில் அவருடைய இலக்கிய முக்கியத்துவத்தை உலகறியச் செய்வதாகவே அமைகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**உசாத்துணை நூல்கள்:**


- துரை விஸ்வநாதன் (1997)' உழைக்கப் பிறந்தவர்கள்; துரைவி வெளியீட்டகம்.
- துரை விஸவநாதன் (1997); மலையக சிறுகதைகள்; துரைவி வெளியீட்டகம்.
- துரைவி நினைவு பேருரைகள் (2016); துரைவி வெளியீட்டகம்.
- தெளிவத்தை ஜோசப். (2000) மலையக சிறுகதை வரலாறு. துரைவி வெளியீட்டகம்.
- தை.தனராஜ் (2017) மலையகம் பல்பக்க பார்வை, அமரர் இரா.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு.
- அருணாசலம். க (1990) மலையக தமிழ் நாவல்கள்; குமரன் புத்தக இல்லம்.
- மலையக தமிழாராய்ச்சி மாநாடு ஆய்வுக்கட்டுரைகள் (1997); இந்து கலாசார தமிழ்க் கல்வி அமைச்சு; மத்திய மாகாணம். கண்டி.
- சாரல் நாடன் (1990) மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும்; சாரல் வெளியீட்டகம்.
- மதிவானம் லெனின் (2012) ஊற்றுக்களும் ஓடங்களும்; பாக்கியா பதிப்பகம்.
- முரளிதரன். சு (2000) மலையக இலக்கிய தளங்கள்; சாரல் வெளியீட்டகம்.
- நித்தியானந்தன். மு (2014); கூலித்தமிழ்; க்ரியா பதிப்பகம்.
- ஞானசேகரன். தி (2008); ஞானம் 100-வது சஞ்சிகை.




letsumanan.a@thaiveedu.com




**பெண் ஆளுமை விருத்தியும்**
**மகளிர் அபிவிருத்தி திட்டங்களும்:**

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் வகையிலும் பெண்களின் ஆளுமை விருத்தியைத் தூண்டி அவர்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கிலும் உருவாக்கப்பட்ட 'யாழ் மகளிர் அபிவிருத்தி நிலையம்' மூன்று தசாப்தங்களை கடந்து பெண்கள் தொடர்பான அபிவிருத்திப் பணிகளை ஆற்றி வந்தது. இப்பணியகத்தின் நிர்வாகப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரனை ஆசிரியராகக் கொண்டு இவ்வமைப்பு இயங்கியது. 1990களில்




ஆரோக்கியமாக இயங்கிய இப்பெண்கள் அமைப்பு 'நங்கை' என்ற பெயரில் சிற்றிதழ் ஒன்றையும் வெளியிட்டது. யாழ் மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்ந்து தம் செயற்பாடுகளை வினைத்திறன் வாய்ந்த செயற்பாடுகளின் ஊடாக முன்னெடுத்து வந்தது. கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், பயிலரங்குகளைத் தொடர்ந்தும் பெண்களுக்கு நடத்தி வந்த இவ்வமைப்பு பெண்களின் அறிவாற்றுகையைப் பேணுவதிலும் அக்கறை காட்டி வந்தது. 1992 நவம்பர் 16-ம் திகதி நெல்லியடி மகாவித்தியாலயத்தில் 'சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாகப் பெண்கள்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடத்தியது. நவம்பர் 19-ம் திகதி மல்லாகம் மகாவித்தியாலயத்தில் 'பெண்களும் போசாக்கும்' என்ற தலைப்பில் பிறிதொரு கருத்தரங்கும் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்குகள் தொடர்ச்சியாக வெவ்வேறு தலைப்புகளில் பொம்மை வெளி மாதர் சங்கம் (பெண்களுக்கான சுயதொழில் வேலை வாய்ப்பு - 1.1.1993), கோப்பாய் சரஸ்வதி சனசமூக நிலையம் (கிராமியத் தலைமையில் பெண்கள் பங்கு -1.4.1993), சைவப் பிரகாசா வித்தியாலயம் ஒட்டிசுட்டான் (கிராமியப் பொருளாதார மேம்பாடும் பெண்களும் - 22.5.1993), திருநெல்வேலி செங்குந்தா மகாவித்தியாலயம் (ஆரம்ப சுகாதார முறைகளும் சுற்றாடல் பாதுகாப்பும் - 16.6.1993), சண்டிலிப்பாய் மகா வித்தியாலயம் (ஆக்கத் திறன் அபிவிருத்தியும் பெண்களும் - 1.07.1993) முதலான இடங்களில் நடைபெற்றன.

குழந்தைகள், பிரசவ தாய்மார்களுக்கு போஷாக்குகளை வழங்கும் தாய், சேய் நலன்பாட்டு செயற்றிட்டங்ளையும் இவ்வமைப்பு முன்னெடுத்தது. இது தவிர வறுமையில் வாடும் பெண்களுக்கான பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தியும் வந்தது. அவ்வகையில் கொய்யாத் தோட்டத்தில் மகளிர் இணைப்புக் குழுவினால் வாழைநார் பயிற்சி வேலைத்திட்டம் 1987-ம் ஆண்டு மார்ச் 3-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதேயாண்டு மார்ச் 18-ம் திகதி காந்தியூர் கிராமத்தில் பனம் பொருள் வேலைப் பயிற்சியும் வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் இக்கிராமத்தில் 20 பெண்களுக்கே இப்பயிற்சி வழங்கப்பட்டது. பெண்களின் உரிமைகளுக்காகவும் அவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுக்கும் இவ்வமைப்பு மனித உரிமை மீறல்கள் குறித்தான தகவல்களைச் சேகரித்து, அது தொடர்பான முறைப்பாடுகளை உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து, சமூக நீதிக்கான போராட்டங்களைத் தொடர்ந்தும் நடத்தி வந்தது. சிவனேஸ்வரன் ரெஜினா பாலியல் வதைகளுக்குட்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யூன் 29, 2018 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றையும் இவ்வமைப்பு முன்னெடுத்தது. பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பெண்களுக்கான தொழில்நுட்பம், ஊடக பயிற்சி நெறிகளையும் வழங்கி வந்தது. யூன் 20, 2019-ஆம் ஆண்டு யாழ்ப்பாண மகளிர் அபிவிருத்தி நிலையமும் 'நிலைமாறு காலநீதி' தொடர்பான குறுகிய பயிற்சிநெறி ஒன்றினை ஊடகவியலாளர்களுக்கு வழங்கியது.



1994-ம் ஆண்டு இலங்கையில் சந்திரிகா பண்டாரநாயக-குமாரதுங்க அவர்கள் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைத்து அதனை வழிநடத்திய சந்திரிகா பண்டாரநாயக்க, அதனூடாக சட்டமன்ற தேர்தல்களில் வெற்றி பலவற்றையும் கண்டார். 1995-ல் பீஜிங் ஹெய்றோவில் நடைபெற்ற பெண்கள் பற்றிய நான்காவது மாநாட்டை ஒட்டி அமைக்கப்பட்ட 'இலங்கைப் பெண்களின் அரச சார்பற்ற அமைப்புகளின் அரங்கு' (SLWNGOF) வன்முறையும் யுத்தமும் அற்ற சுபீட்சமான வாழ்வைப் பெறும் நோக்கோடு உருவாக்கப்பட்டது. ஆனால் அம்மாநாடு இலங்கையில் எத்தகைய அதிர்வுகளையும் ஏற்படுத்தியதாக அறிய முடியவில்லை. இம்மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அம்மாநாடு குறித்து ஒரு சில கட்டுரைகளை எழுதியதோடு தம் செயற்பாட்டை நிறுத்திக்கொண்டார்கள். இம்மாநாடு அன்றைய போராளிகள் மத்தியிலும் எவ்வித தாக்கத்தையும் செலுத்தவில்லை.

யாழ். குடா நாட்டில் பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினால் 1998-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மகளிருக்கான இலவச சட்ட உதவிப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்டவரை முன்னேற்றுவதையும் பெண்களின் உரிமையைப் பாதுகாப்பதையும் நோக்காகக் கொண்டு இவ்வமைப்பு இயங்கியது. பெண்களுக்கான சட்டத்தரணி சரோஜினி இளங்கோவனின் வழிகாட்டலின் கீழ் இலவச சட்ட ஆலாசனைகளையும் இந்நிறுவனம் வழங்கியது. 2000 ஆண்டளவில் தூர இடங்களில் இருந்து கல்வி கற்கும் பெண்களுக்காக மகளிர் விடுதி ஒன்றும் இந்நிறுவனத்தால் அமைக்கப்பட்டது. குடும்பச் சிதைவினால் கல்வியை இழந்து தவிக்கும் மாணவருக்காக கல்வி ஊக்குவிக்கும் நிதியத்தின் மூலம் இந்நிறுவனம் கல்வியையும் வழங்கி வந்தது.

2002 பெப்ரவரி மாதம் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட காலப்பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தையில் பெண்களையும் ஈடுபடுத்துவதற்கான பத்துப் பெண்கள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. இக்குழுவில் ஐந்து பெண்கள் அரசாங்க சார்பிலும் ஐந்து பெண்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சார்பிலும் அங்கம் வகித்தனர். தமிழினி சுப்பிரமணியம், காயா சோமசுந்தரம், பிரேமிலா சோமசுந்தரம், சுதாமதி சண்முகராஜா, யாழிசை பாலசிங்கம் ஆகியோர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சார்பில் அங்கம் வகித்தனர். அரச தரப்பில் சார்ப்பில் குமாரி ஜெயவர்த்தன, கலாநிதி தீபிகா உடகம், குமுதினி சாமுவேல், பைசூன் சக்கரியா, கலாநிதி பசீலா நியாஸ் ஆகியோர் அங்கம் வகித்தனர். சமாதானப் பேச்சுவார்த்தை காலப் பகுதியில் நிகழவிருக்கும் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை மேற்கொள்வதற்கும் அக்காலப்பகுதியில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தெளிவுபடுத்துவதற்காகவே இவர்கள் நியமிக்கப்பட்டனர். இம்மாநாடு ஆக்கபூர்வமான எந்த செயற்பாட்டையும் முன்னெடுக்க உதவவில்லை.

ஒக்ரோபர் 2, 2003-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் வீரசிங்கம் மண்டபத்தில் ''யாழ் மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கமம்'' என்ற நிகழ்வு இடம்பெற்றது. போர்ச்சூழலில் பாதிக்கப்பட்ட அனைத்துப் பெண்களையும் ஒன்று திரட்டி இம்மாநாடு நடைபெற்றது. பெண்களின் ஆளுமை விருத்திக்கு தடையாகவுள்ள காரணிகள் கண்டறியப்பட்டு, அதற்கான தீர்வுகளை எவ்வாறு முன்னெடுப்பது



என்பது தொடர்பாகவும் இந்நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது. அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இலங்கையில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சகத்துடன் இணைந்து இலங்கை மகளிர் பணியகம், தேசிய மகளிர் குழு போன்ற அரச நிறுவனங்கள் பெண்கள் நலன்சார் செயற்பாடுகளில் கவனம் செலுத்தி வரும் இன்றைய நிலையில் இலங்கையில் பெண்களின் மேம்பாடு மற்றும் உரிமைகளை வலுப்படுத்தும் வகையில் தேசிய பெண்கள் ஆணையகம் ஒன்றை அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருந்தது. சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார, இது தொடர்பாக முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஈழத்தில் சமூக விடுதலையைக் கருத்திற் கொண்டு தோன்றிய பெண்கள் அமைப்பானது வெகுசன மட்டத்தில் வினைதிறனும் செயற்றிறனும் கொண்ட அமைப்பாக இயங்கியதுடன் பெண்நிலைவாத உணர்வு நிலையையும் வளர்த்து எடுத்தது. பெண்நிலைவாத சிந்தனையை உள்வாங்கி குடும்பம், தொழில் வாய்ப்பில் சமமின்மை, சமூக ஒடுக்குமுறை என்பவற்றுக்கெதிராகக் குரல் கொடுத்த இவ்வமைப்புக்களானது பெண்நிலைவாதம் பற்றிய விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

வன்னியில் பெண்களுக்கான வாழ்வாதாரங்களை முன்னேற்றும் வகையில் 'பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்' தொடங்கப்பட்டது. செயற்றிறன் வாய்ந்த வேலைத்திட்டங்களை உருவாக்கி அவ்வமைப்பு சிறப்பாகவே செயற்பட்டது எனலாம். வறுமைக்குட்பட்ட பெண்களை இனங்கண்டு வாழ்வாதார தொழிற் பயிற்சிகளை வழங்கியது. ஆரம்பத்தில் புதுக்குடியிருப்பில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் பின்னர் தன் பணியை 11 ஏப்பிரல், 2002 ஆண்டு தொடக்கம் கிளிநொச்சியில் விஸ்தரித்தது. இந்நிறுவனத்தால் தையல் இயந்திரங்களைத் திருத்துதல், தையல், தையல் பயிற்சி, தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தட்டச்சுத் திருத்தம், கேக் ஐசிங், தலையலங்காரம் முதலான பயிற்சிகள் வழங்கப்பட்டன. பதினாறு வயதுக்கு மேற்பட்டு கல்வியை இடை நிறுத்திய பெண்களே இப்பயிற்சி வகுப்புக்கு தேர்வு செய்யப்பட்டார்கள். பயிற்சியை முடித்த பெண்களுக்கு இந்நிறுவனமே தகுந்த வேலையையும் பெற்றுக் கொடுத்தது. பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதை இந்நிறுவனம் பாரிய செயற்திட்டமாகக் கொண்டு இயங்கியது. இதற்கான வேலைத்திட்டத்தை இந்நிறுவனம் உருத்திரபுரத்திலிருந்து முன்னெடுத்தது. 2002 யூன் மாதம் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று உருத்திரபுரத்தில் தொடங்கப்பட்டது. பெண்கள் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக பயிற்சியை முடித்த பெண்களுக்கு 'ஒளிர் தையலகம்' என்ற பெயரில் கடைகள் திறக்கப்பட்டு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டது. பாரிய இச்செயற்திட்டம் நாலாங் கட்ட இறுதி போரைத் தொடர்ந்து முடிவுக்கு வந்தது.

## போராளிகளாக இருந்து சமூகத்திற்குத் திரும்பி வந்தவர்களுக்கான செயற்பாடுகள்:

கிழக்கில், கல்வியை இடைநிறுத்தி போராளிகளாக இணைந்து கொண்ட பெண் - ஆண் இருபாலாருக்கும் கல்வியைத் தொடர்வதற்கான நிதியுதவியையும், வழிகாட்டல்களையும் சில உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும், UNICEF நிறுவனமும் செய்து வந்தன. 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கும் வாழ்வாதார உதவிகள், தொழில் பயிற்சிகள் போன்றன சில நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன. 2005-ம் ஆண்டு காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிப்புற்ற பெண்போராளிகளுக்கு உளவள ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெண்கள் அமைப்புகள் சில பயிற்சிகளை வழங்கின. செயல்வாதப் பெண்நிலைவாதிகள் பெண் போராளிகளது உரிமை தொடர்பான விடயத்தில் அக்கறை காட்டின. போராளிகளாக இருந்து திரும்பி வந்த பெண்கள் மீதான உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை பாரிய அளவில், அரசோ அல்லது மாற்றுக்குழுக்களோ, ஆயுதப் படையினரோ முன்னெடுக்கவில்லை.

போராளிகளாக இருந்தபோது இந்தப் பெண்களுக்குச் சமூகத்தால் வழங்கப்பட்ட மரியாதையும் அந்தஸ்தும், அவர்கள் திரும்பி வந்தபோது சாதாரண பெண்களை விடக் குறைவாகவே கிடைத்தன. சாதாரண பெண்களுக்கான திருமண ஏற்பாடுகளைச் செய்வதைப்போல இவர்களுக்கான திருமணம் ஏற்பாடுகளைச் செய்வதில் பெற்றோர் பெருஞ் சிரமங்களை எதிர்கொண்டனர். சமூகம் மற்றும் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக இவர்களது திருமண ஏற்பாடுகள் பாதியில் நின்று போனதையும் நாம் காணலாம். பெரும் பிரயாசையின் மத்தியில் திருமணங்கள் பல நிகழ்தேறியதும் உண்டு. போராளிகளாக வாழ்ந்த பெண்களில் பலர் இன்றும் திருமணம் ஆகாது வீட்டோடு முடங்கி இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. வாழ்ந்து கழிதலே கடன் எனக்கருதி அவர்கள் வாழ்வது சமூகம் இன்னமும் முன்னேற்றகரமாகச் சிந்திக்கத் தலைப்படவில்லை என்பதையே எமக்குணர்த்தி நிற்கிறது. சமூக நீரோட்டத்துக்குள் பெண்போராளிகள் கலந்தபோது அவர்கள் ஆணாதிக்கக் கட்டமைப்புக்களுக்குள் இணைந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள், நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். போராளிகளாக இருந்தபோது மதிக்கப்பட்ட இவர்கள் குடும்பப் பெண்களாக மாறியபோது சமூகத்தால் நிராகரிக்கப்பட்டனர் (யாவருமல்ல ஒரு சில விதிவிலக்குகளும் உண்டு).இவர்களில் பெரும்பாலோர் குடும்பத்தில் ஆண்களுக்கு அடங்கி வாழ்ந்து, தமது கடமைகளச் செய்பவர்களாகவே இன்றும் காணப்படுகின்றனர்.

போராளிகளாக இருந்து திரும்பிய பெண்களது பிரத்தியேகமான பிரச்சினைகளைக் கையாள்வதற்கான செயற்திட்டங்கள் அரசாலோ பெண்கள் நிறுவனங்களாலோ வடிவமைக்கப்படவில்லை. ஆயினும் இப்பெண் போராளிகளது உளவளத்தைப் பேணும் வகையில் நிறுவனங்கள் சில வடக்கிலும் கிழக்கிலும் மிகவும் குறுகிய அளவிலான செயல்வாதங்களை முன்னெடுத்தன. உதாரணமாக 'யுவசக்தி' மற்றும் 'மாசக்தி' பெண்கள் அமைப்புகள் இப்பணியைச் செவ்வனே ஆற்றி வந்தன. யுத்தத்திற்குப் பின் தடுப்பிலிருந்து திரும்பிய பெண்களுக்கு உளவள ஆற்றுப்படுத்தல் பயிற்சியை வழங்கிய இவ்வமைப்புகள் விவசாய நடவடிக்கைகளில் இவர்களை ஈடுபடுத்தியது. அதாவது நாற்று மேடை அமைத்து பயிர் வகைகளை உருவாக்கி பின்னர் அவற்றை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் இவர்களை ஈடுபடச் செய்தது.

முஸ்லிம், தமிழ்ப் பெண்ணிலைவாதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்திய 'வலைப் பின்னல் அமைப்பு' இது குறித்து கூடிய கவனம் எடுத்தது. பயிற்சிப் பட்டறைகளை நடத்தி, பெண்களது தொழில் முயற்சிகளுக்கு நிதியுவியும் வழங்கியது. 2011-ஆம் ஆண்டில் 'மீள்திரும்பிய போராளிப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் கட்புல ஆவணம் ஒன்றினையும் தயாரித்து சர்வதேச நிறுவனங்களுக்கு அறிக்கை ஒன்றினையும் சமர்ப்பித்தது. இக்காலப்பகுதியில் இப்பெண்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களைச், சர்வதேச புலம் பெயர்ந்தோருக்கான நிறுவனம் - ஐ.ஓ.எம் அமுல்படுத்தியது. 2009-ம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளை அரசாங்கத்துடன் இணைந்து ஐ.ஓ.எம் நிறுவனம் செய்தது. இத்திட்டங்கள் பெண் போராளிகளுக்கு ஓரளவுக்கு நிவாரணமாக அமைந்தா

லும் இப்பெண் போராளிகள் தாம் விரும்பிய தொழில்களைத் தெரிவு செய்வதற்கோ விரும்பிய தொழிற் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கோ அடித்தளம் அமைக்கவில்லை. அதேசமயம் ஐ.ஓ.எம் நிறுவனம் இலங்கை அரசுடன் இணைந்து வழங்கிய விசேட அடையாள அட்டை, இப்பெண்கள் தடுப்பில் இருந்தமையை அடையாளப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. ஐ.ஓ.எம்-இன் இந்நடவடிக்கைகள் அதன் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலேயே காணப்பட்டன.

சுனாமி மற்றும் போருக்குப் பின்னரான மீள் குடியேற்றத் திட்டங்களில் பெண்களது காணியுரிமை மற்றும் சொத்துரிமையை நிலைநிறுத்துவதற்கான முன்னெடுப்புகள் பெண்கள் அமைப்புகளால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் போராளிகளாக இருந்து வீடு திரும்பிய பெண்களின் நிலை குறித்த செயல்வாதங்கள் நாடளாவிய நிலையில் பரந்த அளவில் முன்னெடுக்கப்படவில்லை. பெண்நிலைவாதிகளாகத் தம்மை உணர்வோர் எதிர்காலச் சந்ததியினருக்கு விழிப்புணர்வை ஊட்டி பெண்கள் உரிமைகளுக்கான வலுவான செயல்வாதங்களை வினைத்திறனுடன் முன்னெடுக்க வேண்டும். நீண்டகால அடைவுகளை முன்னிறுத்தி திட்டமிட்டு செய்வாதங்கள் செயற்படுத்தப்படுமேயானால் அத னால் நிறைந்த பயனுண்டு. ஆனால், அந்நிலையை எய்த முடியாத சூழ்நிலையே ஈழத்தில் காணப்படுகிறது. பெண்ணானவள் சமூகத்தில் மேம்பட்ட நிலையை அடைவதற்கான செயற்றிட்டங்களை வகுப்பதோடு நில்லாது ஆணின் மனவுணர்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவேண்டும்.

## ஈழத்து நவீன தமிழ்க் கவிதையில் பெண்நிலைவாதச் சிந்தனைகள்:

இக்காலப்பகுதியில் சமூகபேதங்களை மையமாகக் கொண்டும் பெண்ணடிமையின் பரிமாணங்களை விளக்கும் பொருட்டும் சமூக தரிசனங்களுக்கூடாக அவலங்களை வெளிக்கொணரும் வகையிலும் பெண்நிலைவாத எழுத்தாளர்கள் பலர் ஆக்க இலக்கியங்களைப் படைத்தனர். சமூக மதிப்பில் பெண்களின் இழிநிலை, சமய தத்துவ நோக்கில் வெறுத்து ஒதுக்கப்பட்ட பெண்களின் இன்றைய நிலை, கல்வியுரிமை மறுக்கப்பட்ட பண்களின் அவலநிலை, அறியாமையிலும் மூடத்தனத்திலும் அமிழ்ந்திருன்கும் பேதைமை, பெண்சிசுக் கொலை, பால்ய விவாகம், பெண் தனிமையாக்கப்படல், ஆண்களின் பலதாரத் திருமணம், தேவதாசி திருமணம் (பொட்டுக்கட்டல்), கைம்பெண் மறுமணமறுப்பு, உடன்கட்டை ஏறல், பெண் உரிமை மறுப்பு போன்ற பிரச்சினைகள் பலவற்றை உள்வாங்கி, பெண் எழுத்துகள் உருவாகின. பெண்ணுரிமையை வலியுறுத்தி எழுந்த இவ்வெழுத்துகள் சமூகப் பிரக்ஞைமிக்க உயிர்த்துடிப்புள்ள இலக்கியங்களாகவும் பரிணமித்தன. இவ்விலக்கிய முயற்சிகள் கண்ணீரினூடே துயர் படிந்த அனுபவத்தை கலாபூர்வமாக எளிய மொழியில் வெளிப்படுத்தின. அனுபவச் சூட்டில் மிளிரும் உணர்வுகளை ஆத்ம சுத்தியுடன் உரத்த குரலாக வெளிப்படுத்த கவிதையே முக்கிய ஊடகம் என்பதைப் பெண்கள் கண்டுணர்ந்தனர்.

பெண்ணின் நுண்ணுணர்வுத் தளத்தில் எழும் அன்பு, கருணை, வேட்கை, வலி, கனவு போன்ற இன்னோரன்ன அகநிகழ்வுகள், கவிதை அழகியல் சார்ந்து பெண் சொல்லாடலுக்கூடாக வெளிப்படும்போது, நவீன கவிதை பெண்ணுக்கேயான பிரத்தியேக மனப்படிமங்களை உள்வாங்கிப் பெண்மொழியைச் சாத்தியப்படுத்துகிறது. இவ்வகையில் நுட்பமான அந்தரங்க வெளிப் பாடுகளை மொழியிசைவுடன் புனைவாக நடப்பியலுக்கேற்ப வாசகருக்கு எடுத்துரைக்கும் ஈழத்துப் பெண் கவிதைகள், 1980-களுக்குப் பின் அமைப்பாலும், அனுபவ வெளிப்பாட்டாலும், மொழி நடையாலும் மாற்றம் கண்டன. இம்மாற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களாக ஆயுதப் போராட்டம், தமிழ்த் தேசியத்தின் எழுச்சி, பெண்நிலைவாதச் சிந்தனைக்கூடாக ஏற்பட்ட விழிப்புணர்வு, பெண்கள் ஊடகங்களைக் கையாளும் தன்மை, கல்வித் தகைமைக்கூடான தொழில்சார் நிலையின் மீள் உருவாக்கம் போன்றவற்றைக் கூறலாம். இக்காலகட்டத்தில் ‘பெண் விடுதலை’, ‘தாகம்’, ‘தோழி’, ‘விளக்கு’, ‘செந்தழல்’, ‘சுதந்திரப் பறவைகள்’, ‘நங்கை’, ‘மருதாணி’, ‘பெண்’, ‘நிவேதினி’ முதலான பெண்நிலை சார்ந்து வெளிவந்த ஈழத்துச் சஞ்சிகைகளும், ‘நமது குரல்’ (ஜேர்மனி), ‘கண்’ (பிரான்ஸ்), ‘சக்தி’ (நோர்வே)



போன்ற பெண்நிலைவாதப் புகலிட சஞ்சிகைகளும் ஆளுமைமிக்க பெண்ணிலக்கியப் படைப்பாளிகளை ஈழத்திலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்தன.

## ஈழத்துக் கவிதைப் புலத்தில் ஆரம்பகாலத் தமிழ்ப் பெண் கவிஞர்கள்:

இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துக் கவிதை மரபு பொருள்மரபிலும் உணர்த்தும் முறையிலும் மாற்றத்துக்குள்ளானபோதும்கூட மரபுவழி நின்று கவி பாடிய முதற் பெண் கவிஞராக பத்மாசனி அம்பாள் காணப்படுகிறார். மதுரைத் தமிழ்ச் சங்கத்து முதல் ஐந்து பண்டிதர்களுள் ஒருவரான புலோலியைச் சேர்ந்த பத்மாசனி அம்பாளால் ‘பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி’ முதலான நூல்கள் எழுதப்பட்டன. 1925-ல் வெளிவந்த ‘பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி’ புலோலியிலே கோயில் கொண்டுள்ள பசுபதீஸ்வரர் மீது அந்தாதித் தொடையில் பாடப்பெற்ற நூற்று ஆறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பத்துப் பாடலும் ஒவ்வொரு வகைப் பா வடிவத்தில் அமைந்துள்ளது. Thomas Gray என்பவரால் எழுதப்பட்ட ‘Elegy Written in a country’ என்ற பாடல் பகுதியும் பத்மாசனி அம்பாளால் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதுவும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் ஈழத்தின் முதல் தமிழ்ப் பெண் மொழிபெயர்ப்பாளரும் இவரேயாவார்.

மலையக அரசியல்வாதியும், தமிழறிஞரும், பதிப்பாளருமான கோ. நடேசய்யரின் மனைவியரான மீனாட்சியம்மாள் நடேசய்

யர் மலையகத்தின் விடிவெள்ளி எனச் சிறப்பிக்கப்பட்டவர். சமூக சீர்த்திருத்தக் கருத்துகளை மக்கள் மனத்தில் விதைக்கும் வண்ணம் கவிதைகளைப் பாடிய சமூகச் செயற்பாட்டாளர். தமிழர்களின் அரசியல், பொருளாதார, வாழ்வியல் சிக்கல்களை கவிதைகளில் பாடிய மலையகத்தின் முதல் பெண் கவிஞரும் இவரேயாவர். மலையக மக்களை தமது உரிமைகளுக்காகப் போராடும்படி தூண்டிய முதல் பெண் போராளியான மீனாட்சியம்மாள் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக விழிப்புணர்வைத் தூண்டும் முயற்சியில் பாடல்களைப் புனைந்தார். மீனாட்சியம்மாள் மலையக மக்களை அணிதிரட்டவும் போராடச் செய்யவும் தம் கவிதைகளைச் செயற்பாட்டு வடிவமாகப் பயன்படுத்தினார்.

மீனாட்சியம்மாளின் 'இந்தியத் தொழிலாளர்களது இலங்கை



வாழ்க்கையின் நிலைமை', தொழிலாளர் சட்டக்கும்மி', 'இலங்கையில் இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு' (இரண்டு பாகம்) முதலான நூல்கள் தொழிலாளர் அடக்குமுறைக்கு எதிராகவும் மலையக மக்களின் வாழ்வியல் கொடுமைக்கு எதிராகவும் பாடப்பட்டன. 1937-ம் ஆண்டு காலிமுகத்திடலில் பிரேஸ் கிரேடிலிக்கு ஆதாரவான கூட்டத்தில் மீனாட்சியம்மாள் பாடிய பாடல்கள் பெற்ற வரவேற்பே அவருடைய அரசியல் வாழ்க்கைக்கு அத்திபாரமிட்டது என ஜெயசீலன் கூறுவார். 'இந்தியத் தொழிலாளர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை' என்ற தொகுதி ஒன்பது பாடல்களை உள்ளடக்கி வெளிவந்தது. 'இந்தியர்கள் இடர்தனையே இயம்பு மிந்தப் பாசுரம்' எனத் தொடங்கும் நூலின் காப்பு வெண்பா கணபதியின் அருளை வேண்டி எழுதப்பட்டது. பாரததேவியை நித்தம் பாடி சித்தி பெறுவோம் எனத் தொடங்கும் முதலாவது பாடல் நான்கு பகுதிகளைக் கொண்டது. ஏழைகள் துயரப்படுவதையோ கண்ணீர் விடுவதையோ, கோழையாக வாழ்வதையோ நாம் பார்த்துகொண்டிருக்க முடியாது எனத் தொடங்கும் பாடல், உழுது பயிர் செய்வோம், ராட்டினம் சுற்றுவோம், பழைய கொள்கையைப் பின்பற்றி நடப்போம் என மக்கள் எடுக்கப் போகும் முயற்சிகளைக் கோடிட்டுக் காட்டுகிறது. 'பொதுஜன வாழ்க்கையே புனித வாழ்க்கை' என்றும் 'உடல் பொருள் ஆவியை உலகுக்களிப்பதே உண்மையான தியாகம்' என்றும், 'தேச விடுதலைக்குச் சேவகம் செய்து வாழ்தல் வேண்டும்' என்றும் மீனாட்சியம்மாள் கூறும் விடயங்கள் சித்திரலேக மௌனகுரு கூறுவதைப் போல காந்தியக் கொள்கைகளையே தமது ஆதர்ஷமாகக் கொண்டதையே எடுத்துக்காட்டுகின்றது.

அவருடைய மூன்றாவது பாடல் இந்தியத் தமிழர்களை இந்தியாவுக்கு விரட்டவேண்டும் என்று சொல்லும் இலங்கையர்களை சாடும் பாடல்களாகக் காணப்படுகிறது. இலங்கை மாதா தாய் என்றும் நாம் எல்லோரும் அவருடைய சேய் எனக் கூறும் மீனாட்சியம்மாள், பங்களாக்காரர்களைப் பேய் எனக் கூறி, மலையக மக்கள் இலங்கைக்கு வரும் வழியில் எதிர்நோக்கிய இன்னல்களைக் கூறுகிறார்.

***'பாய்க்கப்பல் ஏறியே வந்தோம் - அந்நாள்***
***பலபேர்கள் உயிரினை யிடைவழி தந்தோம்.***
***தாய் நாடென்றெண்ணியிருந்தோம் - இவர்கள்***
***தகாத செய்கையைக் கண்டு மனமிகநொந்தோம்'***

புலிகள் வாழுகின்ற காடுகளாக இருந்த பகுதிகளை சோலைகளாக்க உயிர்ப்பலி செய்த தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பைப் பாடும் மீனாட்சியம்மாள் 'அஞ்சா தெதிர்த்துமே நின்று - நமக்கிங்கே அதிக சுதந்திரம் தரவேண்டுமென்று' கூறுகிறார். நான்காவது பாடலில் 'மந்திரிகளும் மகா தந்திரிகளும் இந்தியர் இலங்கையில் இருக்கக் கூடாதாம், அவர்களுக்கு சுதந்திரம் கூடாதாம்' எனக் கூறுவதைக் கண்டிக்கிறார். நீதியற்ற முறையில் இலங்கையின் அரசியல்வாதிகள் செயற்பட்டதையும் நியாயமற்ற விதத்தில் அவர்கள் நடந்து கொண்டதையும் கண்டிக்கிறார். மந்திரிமார்களின் பகட்டான ஆடம்பர வாழ்க்கையை ஆழமாக விமர்சிக்கிறார்.

பின்னைய பாடல்களில் இந்திய தொழிலாளர்களுக்கு விளிப்புணர்வை ஊட்டி போராட்டத்துக்கு அவர்களை ஒன்று திரட்டுகிறார். இந்தியர்கள் இலங்கையை வளமாக்க உழைத்த கதையையும் கூறிய மீனாட்சியம்மாள் நூறு வருசமாக இலங்கையிலே வேலை செய்த தொழிலாளர்களுக்கு இலங்கையர்கள் இழைத்த பாதகச் செயல்களை எடுத்துரைக்கிறார். நன்றி கெட்ட இலங்கைச் சமூகத்தின் செயலைக் கண்டிக்கும் மீனாட்சியம்மாள் அகிம்சை வழியிலும் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் வாயிலாகவும் உரிமைகளை இந்தியர்கள் வென்றெடுக்கலாம் எனக் கூறுகிறார். பெண்ணாக இருந்து கொண்டு அக்கால அரசியலை உன்னிப்பாக அவதானித்த மீனாட்சியம்மாள் திட்டவட்டமான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார் என்பதனை அவரது பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

இவரைப் போலவே தாமரைச் செல்வி (ஈழகேசரி.4.3.51.பக்.03), பண்டிதை த. வேதநாயகி அம்மாள், பண்டிதை பாக்கியம் பொன்னுத்துரை, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முதலானோரும் ஆரம்ப கால பெண் கவிஞர்களாக அறியப்படுகின்றனர். யாழ்ப்பாணம் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலையால் வருடாவருடம் வெளியிடப்படும் 'கலைமலர்' சஞ்சிகைக்கூடாக ஞானசகோதரி எம். யூலியா, ரூபாவதி கிருஷ்ணபாலா, மிதி

லாதேவி சிவசுப்பிரதாஸ், என்ரனெற் மணிவாசகம், சுகுணா சின்னையா முதலானோர் கவிஞர்களாக உருவாகினர். இவர்களில் பெரும்பாலானோர் யாப்பை உள்வாங்கிய மரபுக் கவிதைகளையே படைத்தனர். இளங்கலைஞர் மன்றத்தால் வருடாவருடம் வெளியிடப்பட்ட 'இசைவிழா' மலரும் பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்தது. திருவளர் செல்வி ஆறுமுகம், அம்பிகை சுப்பிரமணியம், பண்டிதை மரகதவல்லி சரவணமுத்து முதலான பலர் இவ்வகையில் ஈழத்திலக்கிய உலகுக்கு அறிமுக மாயினர். இக்கவிதைகளில் பெரும்பாலானவை இசையை முக்கியத்துவப்படுத்தியே வெளிவந்தன.

பெண்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும், கருத்துகளையும் 1980-களில் ஈழத்தில் முதன்முதலில் வெளிப்படுத்திய கவிதைத் தொகுப்பாகச் 'சொல்லாத சேதிகள்' காணப்படுகிறது.




பெண்கள் ஆய்வு வட்டத்தால் வெளியிடப்பட்ட இத்தொகுதி சன்மார்க்கா, ரங்கா, ஔவை, செல்வி, பிரேமி, மைத்ரேயி, மசூறா ஏ. மஜித், அ. சங்கரி, சி. சிவரமணி, ஊர்வசி உள்ளிட்ட பத்துப் பெண் கவிஞர்களின் இருபத்துநான்கு கவிதைகளை உள்ளடக்கி வெளிவந்தது. பெண்கள் தொடர்பான சிந்தனைகள் குறித்த ஆய்வை நவீன தமிழுலகு வேண்டி நின்ற காலத்தில் காத்திரமான கவிதை மொழிக்கூடாகப் பெண்களின் உணர்வுகளை நிதர்சனமாக வெளிப்படுத்திய தொகுப்பு இது எனலாம். அதேசமயம் இக்காலப்பகுதியில் ஊடகங்களின் வாயிலாக உலகமானது சுருங்கிக் கொண்டது. பெண்ணியற் சிந்தனைகள், கருத்துகள் முதன்மை பெற்ற நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்று அப்போராட்டத்தில் பெண்களும் உள்வாங்கப்பட்டனர். எனவே இச்சூழ்நிலையில் பெண்கள் தமது உள்ளத்து உணர்வுகளை, சிந்தனைகளை, ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கும் தமது திறன்களை வளர்த்தெடுப்பதற்கும் பெண் கவிதையை ஊடக பெறுமானமாக்கியதை அடுத்து எழுந்த தொகுப்பே 'சொல்லாத சேதிகள்'. அடக்குமுறைக்கு எதிரான தம் உணர்வுகளை, அவலப்பட்ட வாழ்வினைத் தன் பெண்நிலைவாதச் சிந்தனைகளுக்கூடாக பெண்கள் இத்தொகுப்பின் வாயிலாக வெளிப்படுத்தி நின்றனர். 'பெண்மொழி', 'பெண்களுக்கான கலை இலக்கியக் கோட்பாடுகள்' எனும் சிந்தனா நெறிகள் வளர்ச்சி கண்ட காலத்தில் பெண்கள் மனித நேயத் தளத்தில் நின்று கொண்டு சீதனக் கொடுமைகளுக்கு எதிராகவும் அடக்கு முறைக்கு எதிராகவும் குரல் கொடுத்தனர். பெண்களின் சம வாழ்வுக்கான குரலாக சொல்லாத சேதிகள் தொகுப்பு வெளிவந்தது. சமூக அடக்கு முறைக்குள் சிக்கி நின்ற உணர்வுகளை, மரபுக்குள் கட்டுண்டு மறுக்கப்பட்ட உரிமைகளை சமதர்மப் பெண்ணிய நிலை நின்று வெளிப்படுத்திய இத்தொகுப்பு இழிவானவர்களாக, ஆற்றலற்றவராக பெண்களைப் பார்க்கும் சமூகப் பார்வையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதையும் சுட்டிநின்றது.

காத்திரமான கவிதைகளைத் தந்த சிற்றிதழ்களில் ஒன்றான 'அலை', ஊர்வசி, மைத்திரேயி போன்ற பெண் கவிஞர்களை அறிமுகம் செய்தது. இக்காலப் பகுதியில் வெளிவந்த 'புதுசு' சஞ்சிகையில் ஔவையுடன் அலையில் எழுதிய ஊர்வசி, மைத்திரேயி முதலானோரும் தொடர்ந்தும் எழுதினார்கள். 1980-களின் பிற்பகுதியில் வெளிவந்த திசை சிவரமணி, மைதிலி அருளையா போன்றோரையும் அறிமுகம் செய்தது. 1990-களில் வெளிவந்த 'கவிதை' இதழ் சமூகப் பிரக்ஞை மிக்க கவிதைகளை ஈழத்திலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியது. ஆதிலட்சுமி சிவகுமார், மீசாலையூர் கமலா, கு.-மணிமேகலை, சந்திரா தனபாலசிங்கம், சி. இரத்தினேஸ்வரி, தே.குயீன் சயிலா ஆகிய கவிஞர்களை அறிமுகம் செய்தது. இக்காலப்பகுதியில் வெளிவந்த சஞ்சிகைகளில் பெண்ணுணர்வுகளையும் பெண் அனுபவங்களையும் நேர்த்தியாக வெளிப்படுத்திய சஞ்சிகை 'பெண்' ஆகும். இச்சஞ்சிகையில் வாசுகி குணரத்தினம், சே. விஜயலட்சுமி, ஜெயந்தி தனபாலசிங்கம், லோகநாயகி அப்புராமன், பிலிசியா மியூரின், வி.பி. வினித்தா, கே. சுதாயினி, தே. அருட்கவிதா, தில்லை, சுதா-கினி, அருள்ஜோதி இராமையா, மல்லிகா செல்லத்துரை, அமுதா இராஜசிங்கம், சதாசிவம் உதயராணி, யாழினி பழனி-வேல், அனா ப்ளாண்டியானா போன்ற பலர் எழுதினார். நவீன இலக்கியத்தில் இஸ்லாமியக் கவிஞர்களையும் கவிதைகளையும் வெளிக்கொணர்வதில் 'யாத்ரா' ஆற்றிய பங்கு அளப்பரியது. ஃபஹீமா, சுல்பிகா, ஷர்மிளா போன்ற பெண் கவிஞர்களின் செயற்பாட்டுக் களமாக இக்கவிதைச் சஞ்சிகை விளங்கியது.



ramesh.s@thaiveedu.com

# பொருள்கோடலியல் : டில்தே மற்றும் ஹடமர் சிந்தனைகள்

ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட

தமிழில் : சுந்தையா சண்முகலிங்கம்

'தாய்வீடு' ஒகஸ்ட் 2024 இதழில் பொருள்கோடலியல் மெய்யியல் குறித்த அறிமுகம் ஒன்றைத் தந்திருந்தோம். இவ் விதழில் பொருள்கோடலியல் சிந்தனையைச் செழுமைப்ப டுத்தியவர்களான வில்கெம் டில்தே (Wilhelm Dilthey), ஜோர்ஜ் ஹடமர் (Georg Gadamar) ஆகிய இரு சிந்தனையா ளர்களின் கருத்துக்களை அறிமுகம் செய்யவுள்ளோம். இவ் விருவரும் ஜேர்மனி தேசத்து மெய்யியலாளர்களாவர். ஜய-தேவ உயன்கொட அவர்களின் 'Social Research Philosophical and Methodological Foundations' என்னும் நூலின் 9-வது அத்தியாயம் பொருள்கோடலியல் மெய்யியல் பற்றியது. 40 பக்கங்களில் அமைந்த இக்கட்டுரையின் (பக். 147 – 186) 153 முதல் 164 வரையான பக்கங்களில் டில்தே, ஹடமர் ஆகிய இருவர் பற்றியும் ஜயதேவ உயன்கொட விரிவான விளக்க மொன்றைத் தந்துள்ளார். ஆழமும் அகலமும் மிக்க அவரது ஆய்வுரையின் சாரம்சமே இத்தமிழ்க் கட்டுரையில் தரப்பட் டுள்ளது. ஆகையால் வாசகர்கள் மூலநூலின் குறித்த பக் கங்களின் சுருக்க அறிமுகமாக இத்தமிழ் கட்டுரையைக் கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

## மனிதப் பண்பியல் விஞ்ஞானங்களுக்கான முறையியலின் தோற்றம்:

மனிதப் பண்பியல் துறையினை (Humanities) விஞ்ஞானபூர் வமான ஆய்வாக வளர்த்தெடுப்பதற்குரிய முறையாகப் பொருள்கோடலியலை அறிமுகம் செய்தவர் வில்கெம் டில்தே (1833-1911) ஆவர். இவர் ஓர் இறையியலாளராகவும், மெய்யியலாளராகவும் விளங்கினார். இவர் ஜேர்மனியின் பெர் லின் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் பேராசிரியராகப் பணி யாற்றினார். டில்தே அவர்களுக்கு முன்னரே ஜேர்மனியில் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான (1768 – 1834) 'Schleiermacher' என்பவர், கிறிஸ்தவ சமயப் பனுவல்களை விளக்கியு ரைத்தல் தொடர்பாகப் புதியதொரு முறையினைப் புகுத்தி னார். சமயப் பனுவல்களின் பொருள்கோடலில் பழமையான இலக்கண - மொழியியல் அர்த்தங்களுக்குப் (Grammatical – Linguistic Meanings) பதிலீடாக 'உளவியல் புரிதல்' (Psychological Understanding) என்னும் முறையை இவர் அறிமு கம் செய்தார். பெர்லின் பல்கலைக்கழகத்தில் டில்தே மெய்யி யலைக் கற்றபோது 'Schleirmacher' அவர்களின் மாணவர்க ளான மெய்யியலாளர்கள், டில்தேயின் ஆசிரியர்களாக இருந் தனர். இதனால் டில்தேயின் சிந்தனையில் 'உளவியல் புரிதல்' கோட்பாட்டின் தாக்கம் பெருமளவில் இருந்தது.

## 'மனிதச் செயல்' – அதன் அர்த்தம்:

டில்தே பொருள்கோடலியலை ஒரு முறையியலாக முன்மொ ழிந்த காலத்தின் அறிவுச் சூழலை நாம் விளங்கிக் கொள்ளு தல் அவசியம். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ம் நூற் றாண்டின் முற்பகுதியிலும் ஐரோப்பாவின் மெய்யியலாளர் கள், 'மனிதச் செயலின் அர்த்தம்' (Meaning of Human Action) என்னும் விடயம், அறிவு குறித்த மெய்யியலின் பிரதான பிரச்சினை எனக் கருதி அது குறித்து விரிவாக விவாதித்த னர்.

டில்தே மனிதச் செயலின் அர்த்தம் பற்றிய நேர்க்காட்சிவாத விளக்கத்தை நிராகரித்தார். நேர்க்காட்சிவாதம் மனிதச் செய லிற்கான விளக்கத்தை புறத்தேயுள்ளதான புறவுலகத் தரவு கள் (Data) கொண்டு விளக்க முனைந்தது. தரவுகளோடு கோட்பாடு (Theory) மூலமும் மனிதச் செயல்களை நேர்க் காட்சிவாதிகள் விளக்க முயன்றனர். இவ்வாறான புறநிலை விளக்கத்திற்கு மாறான அகநிலை விளக்கத்தை (Subjectivist Interpretation) டில்தே முன்மொழிந்தார்.

நேர்க்காட்சிவாதிகளின் புறநிலை விளக்கம் மனிதர்களின் சமூக உலகம் (Social World), இயற்கை உலகம் (Natural World) போன்று புறநிலை இருப்பை உடையது என்னும் அனு மானத்தை அடிப்படையாகக் கொண்டது. சமூக உலகமும், இயற்கை உலகமும் ஒத்த இயல்புகளை உடையவை. ஆகை யால் இயற்கை உலகத்தை ஆராய்வதற்குப் பிரயோகிக்கப்ப டும் ஆய்வு முறையான அனுபவவாத முறையை (Empiricist Method) சமூக உலகம் பற்றிய அறிவைப் பெறுவதற்கும் உப யோகிக்கலாம் என நேர்க்காட்சிவாதிகள் கூறினர். 'இயற்கை உலகமும், சமூக உலகமும் மனித அகநிலையில் இருந்து வேறுபட்ட சுதந்திரமான புறநிலை இருப்பை உடையவை. அவையிரண்டும் தனித்தனியான விதிகளின்படி சுதந்திரமாக இயங்குகின்றன. அவை 'புறநிலை விதிகளாகும்' (Objective Laws). மனிதரின் சித்தம் அல்லது தலையீடு (Human will or intervention) இல்லாது அப்புறநிலை விதிகள் செயற்படு கின்றன. நேர்க்காட்சிவாதத்தின் இந்த விளக்கத்தை 'இயற் கையியல் நிலைப்பாடு' (Naturalist Position) எனக் குறிப்பி

டும் ஜயதேவ உயன்கொட பொருள்கோடலியல், தோற்றப் பாட்டியல் ஆகிய மனிதாயவாத மெய்யியல் மரபைச் சார்ந்த வர்கள், நேர்க்காட்சிவாதத்தின் 'இயற்கையியல் நிலைப் பாட்டை' கடுமையான விமர்சனத்திற்கு உட்படுத்தினர் எனக் கூறுகிறார். இவ்விமர்சனம் எதிர்விமர்சனம் என்பனவற்றின் பயனாக ஐரோப்பிய சமூகச் சிந்தனையில் மனிதாயவாதம் (Humanism) இயற்கையியல் (Naturalism) என்னும் இரு சிந் தனை மரபுகள் வளர்ச்சியுற்றன. இவையிரண்டும் ஒன்றை மற் றது நிராகரிப்பதான எதிர் எதிரான நிலைப்பாட்டினை உடை யன.

## மனிதாய வாதம்:

இயற்கை விஞ்ஞானங்களான தாவரவியல், உயிரியல், போன் றவற்றில் ஆராய்ச்சியாளர்கள் கையாளும் இயற்கை விஞ் ஞான முறை (Natural Science Method) மொழி, இலக்கியம், சமயம், மெய்யியல் வரலாறு போன்ற மனிதப்பண்பியல் கற் கைத் துறைகளின் ஆய்வுக்குப் பொருத்தமற்றது. மனிதப் பண்பியல் துறைகளின் ஆராய்ச்சிக்குரிய முறை, இயற்கை



விஞ்ஞான முறையில் இருந்து வேறுபட்டதாக இருத்தல் வேண்டும், மனித சமூகம் பற்றிய கல்வி இயற்கை உல கில் இருந்து வேறுபட்ட சமூக உலகம் (Social World) பற்றிது. இயற்கை உலகத்தைக் காரண - காரிய விதிகள் (Casual Laws) கொண்டு விளக்குவது போன்று சமூக உல கத்தை விளக்க முடியாது. இவ்வாறு சமூக உலகம் பற்றிய ஆய்வின் ஆடிப்படைகளை விளக்கிய மனிதாயவாதம் (Hu- manism), ஜேர்மனியின் தத்துவஞானிகளான டில்தே, மக்ஸ் வெபர் போன்றவர்களால் முன்வைக்கப்பட்டது. அவர்கள் இயற்கை (Nature) பற்றிய ஆய்வு வேறு, பண்பாடு (Culture) பற்றிய ஆய்வு வேறு எனக் கூறினர். காரண - காரிய ஆய்வு விதிகள் (Casual Laws) மூலம் மனித சமூகத்தையும், சமூக உலகத்தையும் விளக்க முடியாது. சமூகமும் வரலாறும் மனித உணர்வு நிலையின் விளைபொருட்கள் (Society and History were products of Human Consciousness) ஆகை யால் காரண - காரிய விதிகளின் படியான விளக்கங்கள் யாந் திரீகமானவையாக (Mechanistic Explanations) அமைந்துவி டக் கூடியன என மனிதாயவாதிகள் வாதிட்டனர். யேர்மனியில் மனிதாயவாத ஆய்வு மரபு பேராதரவு பெற்றது. டில்தேயின் மாணவரான மக்ஸ் வெபர் யேர்மனியின் மனிதாயவாத மரபில் ஊறித் திளைத்த ஒருவரே. ஆயினும் மக்ஸ் வெபர் தனது ஆசிரியரான டில்தேயின் அளவுக்கு 'அகநிலைவாதத்தைத்' (Subjectivism) தழுவியவர் எனக் கொள்ள முடியாது.

## டில்தே (1833 – 1911):

மனித சமூகம், சமூகமும் பண்பாடும் ஆகியன பற்றிய கல் வியை ஒரு விஞ்ஞானபூர்வமான கல்வியாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற இலக்கினை உடையவராகச் செயற்பட்ட டில்தே பொருள்கோடலியலை (Hermeneutics) மனிதப்பண் பியல், சமூகவியல், பண்பாட்டுக் கல்வி என்பனவற்றின் கல் வியின் அடித்தளத்தின் பிரதான கூறாக உருவாக்க வேண்டு மெனக் கருதினார். அவரது திட்டம் சமூகம், பண்பாடு என்பன வற்றின் கல்வியில் உளவியலையும் உட்படுத்துவதாக அமைந்தது. நேர்க்காட்சிவாதம் மனிதர்களின் பௌதீக வடி விலான புறச் செயல்களின் மீது (External Physical Actions) கவனம் குவிப்பது. இதற்கு மாறாக டில்தேயின் உளவியல் நோக்கு மனிதர்களின் 'உள்ளக' (Internal) உளவியல் செயல் முறைகளின் மீது கவனம் குவிப்பதாகும். ஆகையால் டில்தே முன்வைத்த வினாக்கள் வித்தியாசமானவை. அர்த்தமுள்ள அனுபவத்தை (Meaningful Experience) எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்? இயற்கையில் புறநிலையாக உள்ள சடப் பொருட்களை (Natural Objects) மனிதமனம் அறிந்து கொள் வதும், மனிதச் செயலை (Human Action) அறிந்து கொள்வ தும் வேறு வேறான தன்மை உடையவை. மனிதச் செயல்க ளுக்கு மனிதர்களான செயலிகளே (Human Actors) அர்த்தத் தையும் கொடுக்கிறார்கள். ஆகையால் 'மனிதச் செயல்' என் பது தனித்தன்மை வாய்ந்த ஒரு வகைமை (Category); அது மனித சமூகத்திற்கு, மனித உலகத்திற்கு மட்டுமே உரியதான விசேட பண்புக்கூறு. மனிதரின் சமூக உலகத்தை மனிதச் செயல்களின் ஊடாகப் புரிதல் என்பது அச்செயல்களின் 'உள்ளக', 'அகநிலை' அர்த்தங்களைப் புரிந்து கொள்வதா கும் (To understand the 'Inner' and 'Subjective' Meanings of Human Action). இக்காரணத்தால் இயற்கை விஞ்ஞானங்க ளுக்குப் பொருத்தமானதான புறநிலை, அனுபவவாத நோக் குமுறையிலிருந்து வேறுபட்ட அணுகுமுறையை டில்தே முன் வைத்தார். அவர் புறநிலை பற்றிய புதிய அர்த்தத்தை (A New Meaning of Objectivity) 'வெர்ஸ்ரெ ஹென்' (Ver- stehen) என்ற எண்ணக்கரு மூலம் அறிமுகம் செய்தார். 'Ver- stehen' என்ற ஜேர்மன் மொழிச் சொல்லின் பொருள் 'புரிதல்' (Understanding) என்பதாகும். 'புரிதல்' என்னும் கருத்து 'விளக்கி உரைத்தல்' (Explanation) என்பதில் இருந்து வேறா னது. 'விளக்கி உரைத்தல்' என்பதை ஜேர்மன் மொழியில் 'Erklarung' எனக் குறிப்பிடுவர். நேர்க்காட்சிவாதம் மனிதச் செயல்களை புறநிலையில் வைத்து 'விளக்கியுரைப்பதை' நோக்காகக் கொண்டது. இதற்கு மாறாக மனிதர்களின் செயல்களுக்கு பின்னால் மறைந்துள்ள மனித அகநிலை, மனிதர்களின் நோக்கம், அர்த்தம், விழுமியங்கள், கருத்துக்

கள் என மனித அகம் சார்ந்த விடயங்கள் 'புரிதல்' வழியாக அறியப்படுகின்றன. புரிதல் அனுதாப உணர்வுடன் கூடியது ஆதலால், விஞ்ஞானங்களில் உபயோகிக்கப்படும் அகச்சார் பற்ற 'விளக்கியுரைத்தலில்' இருந்து வேறான பண்புடையது




('The key word for human Studies, as Dilthey believed, was 'Understanding', 'Explaining' is for the sciences, But the Approach to Phenomena That Unite the inner and outer is understanding. The Sciences Explain Nature, and Human Studies understand expressions of Life - Palmer 1969 – 106).

ஜயதேவ உயன்கொட அவர்களின் நூலின் பக்கம் 157-ல் தரப்பட்டுள்ள மேற்தரப்பட்ட மேற்கோள் டில்தேயின் கருத்துக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறுகிறது.

## ஹடமர் (Gadamar):

ஹன்ஸ் ஜோர்ஜ் ஹடமர் (Hans - Georg Gadamer 1900 - 2002) ஜேர்மன் நாட்டினர். இவர் 102-ஆவது வயது வரை வாழ்ந்த மெய்யியலாளர். மார்டின் ஹைடேக்கர் (Martin Heidegger) என்றும் மெய்யியலாளரின் மாணவரான ஹடமர் பொருள்கோடலியலை ஒரு மெய்யியலாக வளர்ப்பதற்குப் பெரும் பங்களிப்பைச் செய்தார்.

டில்தே பொருள்கோடலியலை ஒரு முறையியலாக (Methodology) வளர்ப்பதற்குப் பெருமுயற்சி மேற்கொண்டார் என்பதை மேலே விளக்கிக் கூறினோம். ஹடமரின் திட்டம் வேறாக இருந்தது. அவர் பொருள்கோடலியலை 'உள்ளதன் இயல்' (Ontology) என்ற நிலைக்கு மாற்றினார். மனிதச் செயலை விளக்குதலை மனித இருப்புடன் (Human Existence) இணைப்பதன் மூலமாக ஹடமர் பொருள்கோடலியலை உள்ளதன் இயலுடன் பிணைப்புடையதாக்கினார். இதனால் ஹடமரின் சிந்தனைகள் உள்ளதன் இயல் பொருள்கோடலியல் (Ontological Hermeneutics) என அழைக்கப்படுகிறது.

எமது இருப்பு என்பது நாம் அன்றாம் எதிர்கொள்வனவற்றை 'விளக்கிப் புரிந்து கொள்வதும்' உலகோடு தொடர்பில் இருப்பதும் ஆகும். ஆகையால் விளக்கிப் பொருள் கொள்ளுதல் என்பதே உலகில் இருத்தலாகும் (Existence in the World), பொருள்கோடலியல் ஒரு முறையியல் மட்டுமல்ல, அது உள்ளதன் இயல் சார்ந்த விடயமாகும். ஹடமரின் பொருள்கோடலியலை விளங்கிக் கொள்வதற்கு மார்டின் ஹைடேக்கர் (Martin Heidegger) அவர்களின் 'விளக்க முறைப்புரிதல்' பற்றி அறிந்து கொள்ளுதல் பயன் உடையது.

'உலகில் மனிதனின் இருப்பு' (Man's Being in the World) என்பது மார்டின் ஹைடேக்கர் தனது மெய்யியல் எழுத்துக்கள் மூலம் விளக்க முயன்ற எண்ணக் கருவாகும். 1927-ம் ஆண்டு அவர் பிரசுரித்த 'Being and Time' (இருப்பும் காலமும்) என்ற நூலில் ஜேர்மன் மொழியில் சாதாரண உபயோகத்தில் இருந்து வந்த 'Dasein' என்னும் சொல்லை 'உலகில் இருத்தல்' என்ற கருத்தை விளக்குவதற்கு உபயோகித்தார். அறிபவர் - அறியப்படுபொருள் (Subject - Object) என்ற இரண்டும் ஒன்றல்ல என்னும் கான்ட் கருத்துக்கு மாறாக அவை இரண்டும் ஒன்று என ஹைடேக்கர் குறிப்பிட்டார். கான்ட் அவர்களும் அவரைப் பின்பற்றிய டில்தேயும் அறிபவர் அறியப்படு பொருள் என்பன இரண்டும் வேறு எனும் இருமைக் கொள்கை (Dualism) உடையவர்கள். அறிபவர் அறியப்படு பொருள் வேறுபாட்டை அழுத்திக் கூறிய இவர்களுக்கு, அறிபவருக்கு அறியப்படுபொருள் பற்றிய அறிவைப் பெறுதல் எவ்வாறு, என்ன நிபந்தனைகளின் படி சாத்தியமாகிறது என்பதை விளக்க வேண்டிய தேவை எழுந்தது. ஹைடேக்கர் முன்வைத்த பிரச்சினை வேறு. அவர் விளக்கமுறைப் புரிதலை ஒரு முறையியலாக (Methodology) மட்டும் பார்க்கவில்லை விளக்கமுறைப் புரிதலே மனித இருப்பின் அடையாளம் என அவர் குறிப்பிட்டார். உதாரணமாக நாம் சக மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் போது என்ன நிகழ்கிறது? என்ற வினாவை அவர் எழுப்பினார். சகமனிதர்களுடன் நாம் தொடர்புகொள்ளும் போது, பிறர் வாயில் இருந்து வெளிப்படும் சொற்கள், அவர்களது முகபாவம், சைகைகள் என்பன வற்றை நாம் விளக்கிப் பொருள்கொள்கிறோம். அவர்களது செயல்கள் (Actions), அவர்களது செய்யாமைகள் (non-actions) என்பனவற்றையும் நாம் விளக்கிப் பொருள் கொள்கிறோம். இவ்வாறு விளக்கிப் பொருள்கொள்ளுதல் (Interpretation) அன்றாடம் தொடரும் ஒரு செயல்முறையாகும். ஆகவே

வாழ்தல் அல்லது எமது இருப்பு (Being) என்பதே விளக்கமுறைப் புரிதலாக அல்லவா அமைந்துள்ளது? நான் எனது அயலவருடன் கோபம் கொள்கிறேன் எனக் கொள்வோம். அப்போது அவர் கூறும் ஒவ்வொரு சொற்களையும், செயல்களையும், செய்யாமைகளையும், சைகைகளையும் நான் விளக்கிப் பொருள் கொள்கிறேன். எனது அயலவரை நான் இவ்வாறுதான் புரிந்து கொள்கிறேன். ஹைடேக்கர் வழி வந்த மெய்யியலாளர்கள் எடுத்துக் கூறிய இந்தச் சாதாரண உண்மையைக் ஹடமர் பொருள்கோடலியலின் ஆதாரமான கருத்தாகக் கொண்டார்.

ஒரு பிரதியை (Text) அல்லது ஒரு பழமையான ஒரு பொருளை (Artefact) பொருள் விளக்கம் செய்வதில் ஹடமரும் டில்தேயும் எவ்வாறு வேறுபாடுகின்றனர் என்பதை அடுத்து நோக்குவோம். கடந்த காலத்தின் பிரதியொன்றைப் பொருள் விளக்கம் செய்யும் போது ஆய்வாளர் பிரதிக்கும் தனக்கும் இடையிலான கால இடைவெளியை நீக்க வேண்டும் என டில்தே கருதினார். அதாவது ஆய்வாளர் நிகழ்காலத்தில் (Present) இருந்தவாறே, கடந்த காலப் பிரதியை வாசிக்கும் போது, நிகழ்காலத்தின் முற்சாய்வுகளுடன் (Prejudices) வாசிப்பதைத் தவிர்க்க வேண்டும். இதற்காக நிகழ்காலத்தில் இருந்து தப்பிச் செல்லுதல் (Escaping from the Present) என்னும் ஆய்வு உத்தியை உபயோகித்தல் வேண்டும். நிகழ்காலத்தில் பெற்றுக் கொள்ளும் அறிவுடன் கடந்த காலப் பிரதியை வாசிக்கும்போது அப்பிரதியின் மூலக் கருத்தின் சூழமைவினை (context) அறிய முடியாது போய்விடலாம்.

ஆகையால் நிகழ்காலத்தைக் கடத்தல் (Transcending the Present) மூலமே கடந்த காலப் பிரதியில் பொதிந்திருக்கும் உண்மையை அறியலாம். இவ்வாறான முறையை வரலாற்றுப் புரிதல் (Historical Understanding) என டில்தே குறிப்பிட்டார். பிரதியை ஆக்கியவரின் அகநிலையைப் புரிவதற்கு அதனை ஆக்கியவரின் காலத்திற்கும் பயணிக்க வேண்டும். நிகழ்காலத்தின் முற்சாய்வுகளில் இருந்து விடுவித்துக் கொள்வதற்கான வழி இதுவே, டில்தேயும், அவருக்கு முன்னர் வாழ்ந்தவர்களுமான மெய்யியலாளர்கள் சிலரும், மேற்குறித்தவாறு அறிபவர் (Knower) நிகழ்காலத்தில் இருந்து தன்னை விடுவித்து கொள்ளவேண்டும் என்பதைப் பொருள்கோடலியலின் மையக் கருத்தாகக் குறிப்பிட்டனர்.

அறிபவர் நிகழ்காலத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளுதல் அல்லது பிரித்துக்கொள்ளுதல் சாத்தியமானதா? அப்படியானால் நிகழ்காலம் என்பது வெறும் வரலாற்றுத் தற்செயல் என்பதா? என்ற வினாவை ஹடமர் எழுப்பினார். நிகழ்காலத்தில் நாம் இருப்புக் கொண்டிருத்தல் எமது இருப்பின் அடிப்படையான நிபந்தனை. ஆகையால் நிகழ்காலத்தில் இருந்து நம்மை நாம் விடுவித்துக் கொள்ளுதல் என்பது சாத்தியமற்ற விடயம். நிகழ்காலம் என்பது உள்ளதன் இயல் யதார்த்தமாகும் (Ontological Reality) என ஹடமர் குறிப்பிட்டார். கடந்த காலத்தை நாம் விளக்கிப் புரிந்து கொள்ளுதல் என்பது நிகழ்காலத்துடன் பின்னிப் பிணைந்துள்ள விடயம். பிரதிக்கும் அறிபவருக்கும் இடையிலான கால இடைவெளி (Temporal Distance) விளக்கமுறைப் புரிதலுக்கான தடையெனக் கருதுவது தவறு, நிகழ்காலம் புரிதல் செயல்முறையின் பிரிக்கமுடியாத கூறாக அமைகிறது. 'முற்சாய்வுகளுடன் இருத்தலே வாழ்தல் ஆகும்' (It is our Prejudices that Constitute our Being) என்பது ஹடமர் கருத்தாகும்.

ஹடமரின் பொருள்கோடலியல் மெய்யியலில் புறநிலைப் புரிதல் (Objective Understanding) என்பதற்கு இடமில்லை. மனிதர்களின் புரிதல் செயல்முறையில் அகநிலை (Subjectivity) அடிப்படை ஆதாரத் தளமாக உள்ளது. அது வரலாற்றுத் தளமுமாகும். வரலாற்றின் தளத்தில் இருந்து வெளியே அல்லது அப்பால் செல்வது (To a Position outside or above the floor of History) சாத்தியமற்றது. எமது புரிதல் முழுமையும் அகநிலை சார்ந்ததே என்பது ஹடமரின் கருத்தாகும்.

## தொகுப்புரை:

இக்கட்டுரையில் இரு சிந்தனையாளர்களின் கருத்துக்கள் விளக்கிக் கூறப்பட்டன. முதலாவதாக மனிதச் செயலின் 'உள்ளக', 'அகநிலை' அர்த்தத்தை ('Inner' and 'Subjective' Meaning of Human Action) புரிந்து கொள்வதற்கான விஞ்ஞான முறையை முன்மொழிந்த டில்தே பற்றிக் கூறப்பட்டது. மனிதப்பண்பியல் துறைகளிலும் சமூக விஞ்ஞானங்களிலும் ஆய்வுக்குரிய விஞ்ஞான முறையியலாக (Methodology) பொருள்கோடலியலை வளர்ப்பதற்கு அவர் முயற்சி செய்தார். 'Verstehen' அல்லது விளக்கமுறைப் புரிதல் இவரது பொருள்கோடலியல் மெய்யியலின் அடிப்படைக் கருத்தாகும். 'வெர்ஸ்ரெஹென்' எனப்படும் இவ்விளக்கமுறைப் புரிதல் நேர்க்காட்சி வாதத்தின் நிகழ்வுகளைக் காரண - காரிய முறையில் விளக்கியுரைக்கும் (Explanation) முறைக்கு மாறானதாகும். டில்தே பொருள்கோடலியலின் முறையியலுக்கு முக்கியத்துவம் அளித்தார். இதனால் இவரது சிந்தனை முறையியல் பொருள்கோடலியல் (Methodological Hermeneutics) எனப்படும்.

அடுத்ததாக ஜோர்ஜ் ஹடமரின் சிந்தனைகள் எடுத்துக் கூறப்பட்டன. ஹடமர் 20-ம் நூற்றாண்டின் பொருள்கோடலியல் இயக்கத்தின் மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்திய மெய்யியலாளராகக் கருதப்படுகிறார். மார்டின் ஹைடேக்கரின் செல்வாக்குக்கு உட்பட்ட ஹடமர் விளக்கமுறைப் புரிதல் என்பது மனித இருப்பின் அடிப்படையான இயல்பு (Essential Quality of Human Existence) எனக் கருதினார். ஆகையால், விளக்கமுறைப் புரிதல் வெறுமனே ஒரு முறையியல் மட்டுமல்ல, அது மனித இருப்பின் சாராம்சமான அம்சம் எனக் குறிப்பிட்டார். அவரது நோக்கில் விளக்கமுறைப் புரிதல் உள்ளதன் இயலின் ஒரு கூறாகும். (An Aspect of Ontology), டில்தேயின் முறையியலை, உள்ளதன் இயல் ஆக மெய்யியல் என்ற நிலைக்கு மாற்றிய ஹடமரின் சிந்தனை உள்ளதன் இயல் பொருள்கோடலியல் (Ontological Hermeneutics) என அழைக்கப்படுகிறது.



shanmugalingam@thaiveedu.com

# வவுனியா மாவட்டத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள்

நெடுங்கேணி சாருஜன்

தமிழகத்தில் வட்டெழுத்துகள் பிராமி எழுத்து முறையிலிருந்து தோற்றம் பெற்று பொ.ஆ.பி. 03 - பொ.ஆ.பி. 10-ம் நூற்றாண்டு வரை புழக்கத்திலிருந்ததாகக் கருதப்படுகிறது. பிராமி எழுத்துகளை ஓலைச் சுவடிகளில் எழுதுவதற்கிணங்க அதை மாற்றியதால் வட்டெழுத்துத் தோன்றியது எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. பிராமி எழுத்துகள் கோடுகளாக இருப்பதால் கோடுகளை ஓலைச் சுவடியில் எழுதினால் அவை கிழிந்துவிடும். ஓலைச் சுவடியில் எழுதும் பொருட்டு அவற்றை வட்ட வடிவில் மாற்றி எழுதப்பட்டதால் வட்டெழுத்து உருவானதாகக் கருதலாம். பொ.ஆ.பி. 08-ம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து கிரந்த எழுத்துகளுடன் மணிப்பிரவாளத்தை எழுதப் பயன்படுத்தப்பட்டது. பொ.ஆ.பி. 11-ம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து தமிழ் நாட்டில் வழக்கொழிந்து கிரந்த எழுத்துகள் புழக்கத்திற்கு வந்தன. இவ்வெழுத்துகள் தற்காலத் தமிழ் எழுத்துகளை ஒத்த முறையாகும். அந்தவகையில் இதுவரை வவுனியா மாவட்டத்தில் மூன்று இடங்களில் நான்கு தமிழ்க் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. அவை வவுனியாப் பெரிய புளியங்குளம்(01), ஆறுமுகத்தான் புதுக்குளம்(02), பெரியமடு(01) போன்ற இடங்களிலாகும். இங்கு கிடைக்கப் பெற்ற கல்வெட்டுகள் தொடர்பாக விரிவாக ஆராயும்போது,

**வவுனியா பெரிய புளியங்குளம்**
**இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டு:**

வவுனியாவில் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் தலைமையில் தொல்லியல் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்கள் திரு. கபிலன், திரு. மணிமாறன் ஆகியோர் இணைந்து மேற்கொண்டுவரும் தொல்லியல் ஆய்வின் போது வவுனியா மரையடித்த குளத்திற்கருகே பெரிய புளியங்குளம் என்ற இடத்தில், பொ.ஆ.பி. 12-13-ம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டொன்று அடையாளங் காணப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு அப்பிரதேச மக்களால் அங்குள்ள வயல்வெளியிலிருந்து எடுத்துவரப்பட்டு அங்குள்ள வைரவர் ஆலயத்தில் தெய்வச் சிலைகளை வைப்பதற்கான பீடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அக்கல்லிலுள்ள எழுத்துகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த வவுனியாப் பிரதேசசபை ஆய்வு உத்தியோகத்தர் திரு ஜெயதீபன் இது பற்றிய செய்தியைத் திரு. மணிமாறனுக்குத் தெரியப்படுத்தியதன் பேரில் இக்கல்வெட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவினரின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. பல வரிகளில் எழுதப்பட்டிருந்த இக்கல்வெட்டின் உடைந்த கீழ்ப்பாகமே தற்போது கிடைத்துள்ளது. அதில் ஐந்து வரிகள் காணப்படு

பெரிய புளியங்குளம் தமிழ்க் கல்வெட்டு



கின்றன. அதன் முதலாவது வரியிலுள்ள எழுத்துகள் பல பெருமளவு சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. அதனால் அவ்வரியில் சொல்லப்பட்ட பெயர்களை அல்லது செய்திகளை அறியமுடியவில்லை. ஏனைய நான்கு வரிகளையும் தெளிவாக வாசிக்க முடிகிறது. அவற்றைத் தமிழகக் கல்வெட்டு அறிஞர் பேராசிரியர் சுப்பராயலு பின்வருமாறு வாசித்துள்ளார்.

**ஆஞ்ஞை மூன்று த**
**(ன்ம) ஆஞ்ஞைவல்ல**
**வரையன் சத்தியம் இ**
**து அழிப்பார் நர(கம்) புகுவார்**

ஒரு ஆலயத்திற்குக் கொடுக்கப்பட்ட தானத்தை, அல்லது அரசால் அல்லது ஒரு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி நடப்போர் அழிந்து நரகத்திற்குப் போவது நிச்சயம் என்ற செய்தியைச் சொல்வதே இக்கல்வெட்டை எழுதிய தன் நோக்கமாகும். இதில் வரும் 'மூன்று த(ன்ம)' என்ற சொல் பொ.ஆ.பி. 12-13-ம் நூற்றாண்டில் வன்னியில் செயற்பட்ட தமிழ் வணிகக் கணங்களை (வணிகக் குழு) அல்லது வேளக்



பெரியமடு கோடாலி பறிச்சான் கல்வெட்டு

காரர், இடங்கை, வலங்கை ஆகிய தமிழ்ப் படையமைப்புகளைக் குறிக்கலாம். வல்லவராயன் என்ற பெயர் வன்னியில் ஆட்சிபுரிந்த அரசரை அல்லது விநாயகக் (கணபதி) கடவுளைக் குறித்திருக்கலாம். தமிழகத்தில் பொ.ஆ.பி. 11-12-ம் நூற்றாண்டு காலத்திற்குரிய கல்வெட்டுகளில் வரும் வல்லவராயன் என்ற பெயர் விநாயகரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. ஆயினும் இக்கல்வெட்டின் எஞ்சியபாகம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் ஊகமாகச் சொல்லப்பட்ட விளக்கம் உறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கலாம்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தற்போது கிடைத்த இக்கல்வெட்டு, அங்குள்ள காட்டுப்பகுதியில் ஒரு கட்டட அழிபாடுகளிடையே இருந்து எடுக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது. இதனால் இக்கல்வெட்டின் மிகுதிப் பாகம் அக்கட்டட அழிபாடுகளுக்கிடையே இருக்குமென எதிர்பார்க்கலாம். தொடர்ந்தும் இங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கல்வெட்டின் எஞ்சிய பாகமும், வேறு கல்வெட்டுகளும் அங்கு கிடைக்க வாய்ப்புண்டு. எவ்வாறாயினும் வன்னிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட முதலாவது இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டென்ற வகையில் வன்னி பற்றிய ஆய்வில் இக்கல்வெட்டுக்குத் தனி முக்கியத்துவம் உண்டு என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

### வவுனியா ஆறுமுகத்தான் புதுக்குளம் தமிழ்க் கல்வெட்டுகள்:

வவுனியா மாவட்டத்தில் சேமமடுவுக்கு அருகில் ஆறுமுகத்தான் புதுக்குளம் என்னும் புராதன ஊர் உள்ளது. இங்கிருக்கும் பழமையான முருகன் ஆலயம் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் புராதன இடிபாடுகளை ஆலயச் சூழலில் காணலாம். 2022-ம் ஆண்டளவில் கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை மாணவரான நெடுங்கேணி சானுஜன் என்பவரால் முருகன் ஆலயத்திற்கு மிக அருகிலிருக்கும் புங்கங்குளத்தின் அலைகரைப் பகுதியில் உடைந்து சிதைவடைந்த கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டின் புகைப்படங்களைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேரடியாக இவ்விடத்திற்கு வருகைதந்த பேராசிரியர் ப. புஷ்பரட்ணம், தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர் இக்கல்வெட்டைப் பிரதிசெய்து ஆய்வு செய்த





ஆறுமுகத்தான் புதுக்குளக் கல்வெட்டு

னர். நான்கு பக்கமும் எழுத்துகள் கொண்ட இக்கல்வெட்டானது. ஏறத்தாள 800 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது எனப் பேராசிரியர் உறுதிப்படுத்தினார். இக்கல்வெட்டு தற்போது ஆலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றது. இக்

கல்வெட்டின் ஆய்வு முடிவுகள் இன்னும் வெளியிடப்பட வில்லை. இக்கல்வெட்டு ஆய்வு செய்யப்பட்ட அதே நாளில் அவ்வூர் மக்கள் கோயில் வளாகத்தில் இன்னுமோர் கல் வெட்டு உள்ளது எனக் கூறினார்கள். அக்கல்வெட்டானது முருகன் ஆலயத்தின் கிணற்றடியில் 6 அடி உயரமான நான்கு பக்கமும் எழுத்துகளுடைய தூண் கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் எழுத்துகள் பெரும்பாலும் தேய்வடைந்தி ருப்பினும் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் இதிலுள்ள எழுத்து கள் தமிழ் எழுத்துகள்தான் என உறுதிப்படுத்தியதுடன், இங்கு கிடைக்கப்பெற்ற இரண்டு கல்வெட்டுகளுமே அங்கி ருக்கும் கோயில் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும் கல்வெட் டுகளாக இருக்கக்கூடுமெனக் கூறியிருந்தார்.

**வவுனியா பெரியமடு –**
**கோடாலி பறிச்சான் தமிழ்க் கல்வெட்டு:**

இக்கல்வெட்டு வவுனியா வடக்கில் நெடுங்கேணியின் தென் னெல்லையிலுள்ள பெரியமடு பிரதேசத்தின் நயினாமடு கிரா மசேவகர் பிரிவுக்குட்பட்ட கோடலி பறிச்சான் என்ற காட்டுப் பகுதியில் காணப்படுகின்றது. இவ்விடத்தை இங்குள்ள சிறிய நடைபாதையிலிருந்து அடர்ந்த காடுகள் ஊடாக நீண்டநேரக் கால்நடைப் பயணத்தின் பின்னரே அடைய முடியும். இவ்வி டத்திற்கு மிக அருகில் பாழடைந்த சிறிய கேணியொன்று காணப்படுகின்றது. அக்கேணியைச் சுற்றிப் பொழிந்த வெள் ளைக் கருங்கற் தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை இங்கி ருக்கும் கேணியின் தொன்மையையும், அதன் வரலாற்று முக் கியத்துவத்தையும் புலப்படுத்துவதாக இருக்கின்றது. இவ்வி டத்தின் சுற்றாடலில் பழடைந்த சில குளங்களும், சிறிய மண் மேடுகளும், அடர்ந்த காட்டுமரங்களுடன் சில புளியமரங்க ளும், இலுப்பை மரங்களும் காணப்படுகின்றன. அவற்றி டையே அரிதாகச் சில செங்கட்டிகளும், சிலவகை மட்பாண்ட ஓடுகளும் காணப்பட்டன. இவை முன்பொரு காலத்தில் இவ் விடங்களில் செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததற்குச் சான்றாகும். ஆகவே இவ்வாதாரங்களின் பின்னணியிலேயே இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

இக்கல்வெட்டு ஒரே வெள்ளைக் கருங்கல்லில் பீடத்துடன் இணைந்ததாகச் செதுக்கப்பட்டு இங்கிருக்கும் கேணிக்கு அருகில் நாட்டப்பட்டிருந்துள்ளது. ஆயினும் தற்போது அக் கல்வெட்டுப் பாகம் மூன்று துண்டங்களாக உடைந்து கேணிக்கு அருகிலேயே காணப்படுகின்றன. அவற்றுள் 70 செ.மீ உயரமும், 24 செ.மீ அகலமும் கொண்ட கல்வெட்டின் பீடம் தனித் துண்டாகக் காணப்படுகின்றது. இதற்கருகில் 164 செ.மீ உயரமும், 20 செ.மீ அகலமும் கொண்ட எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள கல்லின் பாகமும் இன்னொரு துண்டமா கக் காணப்படுகின்றது. இக்கல்வெட்டில் மேற்பாகத்தில் மங் கலச் சொல்லுடன் தொடங்கியிருக்க வேண்டிய இரண்டு அல் லது மூன்று வரிகள் கொண்ட கல்வெட்டின் பாகம் உடைந்த அல்லது உடைக்கப்பட்ட நிலையிலுள்ளது. ஆயினும் அப்பா கத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. 164 செ.மீ உயரம் கொண்ட கல்லின் நான்கு பக்கங்களில் ஏறத்தாழ 63 வரிகளில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. 16 வரி கள் கொண்ட நான்காவது பக்கச் சாசனத்தின் (எழுத்துப் பொறிப்புகளில்) சில வரிகளின் எழுத்துகள் தேய்வடைந்து காணப்படுவதால் அவற்றைச் சரியாக வாசிக்க முடியவில்லை. அவ்வரிகளை மீண்டும் முறையாகப் படியெடுக்கும் போது இக்கல்வெட்டின் நான்கு பக்கச் சாசனங்களின் வாசிப்பும் முழுமை பெறலாம்.

இக்கல்வெட்டானது அண்மையில் பேராசிரியர் ப. புஷ்பரட்- ணம் தலைமையில் ஆய்வு செய்யப்பட்டுக் கல்வெட்டுப் படி யெடுக்கப்பட்டது. இவ்வாறு படியெடுக்கப்பட்டவற்றின் புகைப்படங்களைப் படிப்பதற்கும், அது பற்றிய கருத்து களை அறிவதற்கும் வெளிநாடுகளில் வசிக்கும் பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி, கலாநிதி. இராஜகோபால் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அக்கல்வெட்டுப் படிகளைப் பேரா சிரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் பொ. இரகுபதி ஆகி யோர் தனித் தனியாகப் படித்தனர். அவர்களின் வாசிப்பை யிட்டுப் பேராசிரியர் இந்திரபாலா அவர்களும் தனது திருப் தியை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்தியிருந்தார். அவர்களின் வாசிப்பின் முக்கிய அம்சங்களை இவ்விடத்தில் சுருக்கமா கக் குறிப்பிடலாம்.

ஜெயபாகு தேவரது பன்னிரண்டாவது ஆட்சியாண்டின் போது வடகரை நாட்டு மூன்று கை திரு வேளைக்காரர் பிரிவைச் சேர்ந்த மதிமான் பஞ்சரத் தெரிந்த வில்லிகள் என்ற படைப் பிரிவு வீரர்கள் இங்கிருந்த கோயிலின் அம்பலம் (மடம்), பொகொறெளணி (சிறுகுளம்), கிணறு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர் என்பதும், இவற்றைச் செய்த வன் மூவேந்த வேளான் என்ற பட்டங்கொண்ட அதிகாரி என்ப தும் தெரிய வருகின்றது. மேலும் இக்கல்வெட்டின் இரண்டாம், மூன்றாம் பக்கங்களில் இப்படைப் பிரிவிலிருந்த படை வீரர்க ளின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒரே பெயர் பல படை வீரர்களுக்குரிய பெயர்களாகக் காணப்படுகின்றது.

அப்பெயர்களாக:
1. இர...
2. க்கன்
3. இரக்கன்
4. பெரியான்
5. இரக்கன்
6. புத்தை
7. நெட்டூர்
8. ஆதித்தந்
9. கொடி
10. சோழன்
11. சாத்தன்
12. கண்டந்
13. கூத்தந்
14. ஏறன் சு
15. ந்தன்
16. சாத்தன்
17. சாத்தி
18. சாத்தன்
19. அம்மணி
20. சாத்தன்
21. இரக்கந்
22. கண்டந்
23. அம்பலம்
24. சோழன் அ
25. மூதி

ஆகிய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டிலிருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் இடைக்கால வட இலங்கையின் வரலாறு பொறுத்தும், தமிழர் வரலாறு பொறுத்தும் எழும் கேள்விகளுக்கு விடை கூறும் புதிய செய்திகளைத் தருவதாக இருக்கும். இக்கல்வெட்டில் வரும் ஜெயபாகு என்ற பெயரில் பொலநறுவை இராசதானி காலத்தில் மூன்று சிங்கள மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட ஆறு கல்வெட்டுகள் இதுவரை கிடைத்துள்ளன. இதே வேளை ஜெயபாகு என்ற பெயர் கொண்ட ஒருவரைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் தமிழ் மன்னன், தமிழ் சிற்றரசன், பொலநறுவையில் கலிங்க மாகனுடன் இணைந்து ஆட்சி புரிந்த துணையரசன் எனவும், அவனிடம் நாற்பதாயிரம் படைவீரர்கள் இருந்ததாகவும் கூறுகின்றன. ஆயினும் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறும் ஜெயபாகுவும் கல்வெட்டில் வரும் ஜெயபாகு மன்னரும் ஒருவரா என்பது கல்வெட்டின் காலத்தைச் சரிவர வரையறுத்ததன் பின்னரே கூற முடியும். இக்கல்வெட்டில் வடகரை நாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. சிங்களக் கல்வெட்டுகளிலும் பாளி, சிங்கள இலக்கியங்களிலும் வட இலங்கை வடகர (வடகரை), படகர என அழைக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழகக் கல்வெட்டுகளில் வடகரை நாடு பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. இதனால் இக்கல்வெட்டில் வரும் வடகரை நாடு என்பது எந்த நாட்டைக் குறிக்கின்றதென்பது ஆராயப்படவேண்டியதொன்றாகும்.

இக்கல்வெட்டு மதிமான் பஞ்சரத் தெரிந்த வில்லிகள் என்ற படைப் பிரிவு வீரர்கள் பற்றிக் கூறுகின்றது. மதிமான் பஞ்சரன் பற்றிய சில சான்றுகள் இடைக்கால இலங்கைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆயினும் பேராசிரியர் சுப்பராயலு அவர்கள் இப்பெயர் கொண்ட படைப்பிரிவு தமிழகத்திலிருந்ததற்குச் சான்றுகள் இல்லையெனக் கூறுகின்றார். இதனால் இப்படைப் பிரிவை இலங்கைக்குரியதாகப் பார்க்க இடமுண்டு. இதை எதிர்கால ஆய்வுகள் மூலம் மேலும் உறுதிப்படுத்த வேண்டும். இன்று காடாகக் காணப்படும் கோடலி பறிச்சான் இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னரும் காடாக இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. ஏனெனில் இக்கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் கோயில் மடம், சிறுகுளம், கிணறு இருந்தன என்ற புதிய செய்தியைத் தருகின்றது. இவற்றிலிருந்து இங்கு சைவ ஆலயம் இருந்துள்ளமை உறுதியாகத் தெரிகின்றது. இக்கூற்றைத் தற்போது அழிவடைந்து காணப்படும் கேணியும் அதைச் சுற்றிப் பரவலாகக் காணப்படும் பொழிந்த வெள்ளைக் கருங்கற் தூண்களும், அருகிலே காணப்படும் உயர்ந்த மண் மேடுகளும் உறுதிசெய்கின்றன. அவ்விடங்களில் அகழ்வாய்வுகள் செய்யப்படுமானால் அந்த உண்மை மேலும் உறுதி செய்யப்படலாம்.

இங்கிருந்த ஆலய மடம், சிறுகுளம், கிணறு என்பன தமிழ்ப் படை வீரர்களுக்கு ஜீவிதமாக வழங்கப்பட்டமையும், அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை அப்படை வீரர்கள் ஏற்றுக் கொண்டமை பற்றியும் இக்கல்வெட்டுக் கூறுவது அதி முக்கிய வரலாற்றுச் செய்தியாகவுள்ளது. இவற்றிலிருந்து சோழர் ஆட்சியின் முடிவோடு வட இலங்கை பொலநறுவையின் பண்பாட்டு வட்டத்திலிருந்து படிப்படியாக விடுபட்டு வருவதை இச்செய்தி உணர்த்துவதாகவுள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கைத் தமிழர் தொடர்பாக வெளிவந்த வரலாற்று நூல்களும், கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புகளும் 1070-ல் சோழரின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரின் அரசியல், பண்பாட்டு வரலாறு தனிப் போக்குடன் தமிழ்ப் பிரதேசங்களில் படிப்படியாக வலுப்பெற்று வந்ததை வெளிப்படுத்துவதாகவுள்ளன. இதற்கு உதாரணமாகச் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட சில சம்பவங்களை இவ்விடத்தில் குறிப்பிடலாம்.

சோழரை வெற்றிகொண்ட முதலாம் விஜயபாகு தனது அரசையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்கச் சோழர் காலப் படை வீரர்களிலேயே தங்கியிருந்தான். ஆயினும் அவன் சோழ நாட்டின் மீது படையெடுக்குமாறு அப்படை வீரர்களை வேண்டியபோது அதை ஏற்க மறுத்த தமிழ்ப் படை வீரர்கள் பொலநறுவை அரசின் மீது படையெடுத்து அவ்வரசை வெற்றி கொண்டனர். சூளவம்சம் இப்படை வீரர்கள் வட இலங்கையிலுள்ள மகா தீர்த்த, மட்டிகாவட்ட தீர்த்த ஆகிய இடங்களில் தங்கியிருந்தே இப்படையெடுப்புகளை மேற்கொண்டதாகக் கூறுகின்றது. அவற்றுள் மகா தீர்த்த என்ற இடம் மாதோட்டத் துறைமுகத்தைக் குறிக்கின்றது. மட்டிகாவட்ட தீர்த்த என்ற இடம் பாளி இலக்கியத்தில் முதன் முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விடம் மாதோட்டத்திற்கு வடக்கே பூநகரிப் பிராந்தியத்திலுள்ள மட்டுவில் நாடு என்ற இடமாக இருக்கலாம். இரண்டாம் இராஜாதிராஜ சோழனது பல்லவராயன் பேட்டை மற்றும் திருவாலங்காடு சோழக் கல்வெட்டுகள் வட இலங்கையில் மாதோட்டம், புலச்சேரி முதலான இடங்களுடன் மட்டிவால் என்ற இடத்தையும் சோழப் படைகள் வெற்றிகொண்டதாகக் கூறுகின்றது. கல்வெட்டில் கூறப்படும் மட்டிவால் தற்போது பேச்சுவழக்கிலுள்ள மட்டுவில் நாடாக இருக்கலாம். இவ்விடத்திலும் போத்துக்கேயர் காலக் கோட்டை கட்டப்பட்டதற்கு, இவ்விடம் துறைமுக நகராக இருந்ததே முக்கிய காரணமாகும்.

மேலே கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகள் கோடலி பறிச்சான் காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய சிறு அறிமுகமாகும். இக்கல்வெட்டு இலங்கைத் தமிழரின், அதிலும் குறிப்பாக வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழரின் இருப்பு, இடைக்கால அரசியல், வரலாறு, தமிழ் அரச உருவாக்கம், பண்பாடு மற்றும் இடப்பெயர் பற்றி ஆய்வில் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. ஆகவே இக்கல்வெட்டை ஆராய்வதற்குப் பல துறைசார்ந்த புலமையாளரின் பங்களிப்பு மிக அவசியமாகும். இவற்றைக் கருத்திற் கொண்டே இக்கல்வெட்டின் நான்காவது பக்கத்தில் தெளிவற்றுக் காணப்படும் சில வரிகளை மீண்டும் படியெடுத்ததன் பின்னர் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சுப்பராயலு, பேராசிரியர் இரகுபதி மற்றும் கலாநிதி இராஜகோபால் ஆகியோருடன் இணைந்து இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை முழுமையாகப் பதிவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றின் பெறுபேறுகள் இனிவரும் காலங்களில் இரு மொழிகளில் வெளியிடப்படும்.



shanujan@thaiveedu.com

# திருகோணமலை

## த. ஜீவராஜ்

23

மௌனமாக உட்கார்ந்திருந்த நால்வரையும் சுமந்தபடி மாட்டு வண்டில் பரபரப்பு நிறைந்த திருகோணமலை நகரப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கியது. மாதவர் அடிக்கடி மாடுகளை உற்சாகப்படுத்தி வண்டிலை விரைவாகச் செலுத்திக் கொண்டிருந்த பெருந்தெரு மிகவும் அகன்றதாகவும், நன்கு செப்பனிடப்பட்டதாகவும் இருந்தது.

மலையும், காடுகளும், கடலும் மாறி மாறி அமைந்திருக்கும் நிலப் பிரதேசம் அதுவென்று அறிவாட்டி முன்னம் சொல்லியது ஆதினியின் ஞாபகத்திற்கு வந்தது. வண்டிலிற்குள் இருந்தவர்களுக்கு ஒரு சிறிய ஏற்றத்தில் ஏறுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. பெருந்தெருவின் இருமரங்கிலும் வானுயர்ந்த மரங்கள் வளர்ந்திருந்தன. மதிய நேரத்தின் சூரிய ஒளி வீதியில் விழாதவாறு சில இடங்களில் அவை கிளை பரப்பி நிழல் தந்தன. வழிநெடுக அவர்களைக் கடந்து போகும் வணிகர்களையும், போர் வீரர்களையும், சாதாரண மனிதர்களையும் பார்த்தவாறு அவர்களது பயணம் தொடர்ந்தது.

மலைப்பாங்கான இடத்திலிருந்து இறங்கிய சில நாழிகை நேரத்தில் ஒரு பெருவெளியை நோக்கி நகர்வது போல இருந்தது. இரண்டு பக்கமும் கடல் தெரிய உற்சாகமாக மூவரும் தலைநீட்டி வெளியே பார்த்தனர். இடது பக்கம் இருப்பது பெருங்கடல் என்றும் வலது பக்கம் இருப்பது குடாக்கடல் என்றும் அறிவாட்டி விளக்கம் சொன்னார். இடது பக்கப் பெருங்கடலில் தூரத்தில் மூன்று பெரிய மரக்கலங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. அகன்று விரிந்த கண்களோடு மரக்கலங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த கோதையை பார்த்துச் சிரித்த அறிவாட்டி நாம் பெருங்கடல் ஓரமாகத்தான் பயணிக்க போகிறோம் அப்போது இன்னும் மரக்கலங்களை அருகில் பார்க்கலாம் என்றார். அவர் கூறியது போலவே நடந்தது. அவர்கள் அதுவரை பயணித்து வந்த பெரு நிலப்பகுதியில் இருந்து இரு பக்கமும் கடல் அலைகள் மோதும் ஒரு சிறிய நிலப்பரப்பின் ஊடாக தொடர்புபட்டிருக்கும் கடலுக்குள் நீண்டிருக்கும் திருகோணமலை நகரத்திற்குள் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். கோணமலையில் இருந்து பார்த்தால் கடலுக்குள் நீண்டிருக்கும் ஒரு சிறு விரல் போன்றது திருகோணமலை நகரம் என்று அறிவாட்டி சொன்னதை மூவரும் ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களது பயணம் பெருங்கடலின் ஓரமாக அமைக்கப்பட்டிருந்த பாதை வழியாக போய்க் கொண்டிருந்தது. அப்பொழுது பல நெல்லேற்றிய மாட்டு வண்டில்கள் அவர்களைத் தாண்டி செல்வதைக் கண்டார்கள். அறிவாட்டி அவை திருகோணமலைக்கு வடக்கே ஒரு காத தூரத்தில் இருக்கும் உர கிரிகாமம், கிரிகண்ட காமம் போன்ற ஊர்களில் இருந்து திருக்கோணேச்சரத்திற்கு கொண்டுவரப்படும் நெல்லும், ஏனைய விளை பொருட்களும் என்று விளக்கம் சொன்னார். அவர்கள் பேசிக்கொண்டு வரும்போதே தூரத்தில் கடலுக்குள் நீண்டிருக்கும் கோணமாமலையில் குடியிருக்கும் கோணேசப் பெருமானின் மிக உயர்ந்த கோபுரத்தின் கலசங்கள் சூரிய ஒளியில் அவர்களுக்கு தரிசனம் தந்தன. வண்டிலில் இருந்த அனைவரும் ஒரு கணம் தலைக்கு மேல் கைகூப்பி வணங்கிக் கொண்டார்கள். இரவின் நிலவொளியில் கடலில் வரும் மரக்கலங்களுக்கு கோயில் கோபுர கலசங்கள் கலங்கரை விளக்கம்போல் இருக்குமாம் என்பதை மாலுமிகளிடமிருந்து தான் அறிந்து கொண்டதாக அறிவாட்டி கூறினார்.

வீதியில் தோன்றிய அதிக அளவிலான மனிதர்களின் நடமாட்டமும், ஆங்காங்கே சிறியதும், பெரியதுமாக அமைக்கப்பட்டிருந்த அங்காடிகளும் அவர்கள் திருகோணமலை நகரின் வணிகப் பகுதிக்குள் நுழைந்து விட்டதை உறுதிப்படுத்தின. தூரத்தில் தாங்கள் வரும்போது பார்த்தது பெரிய மரக்கலங்களை மட்டும்தான் என்பதை இப்போது அவர்கள் புரிந்து கொண்டார்கள். நிறைய மரக்கலங்கள் கடலில் நங்கூரம் இடப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் இருந்த வணிகப் பொருட்கள் சிறிய வள்ளங்கள் மூலம் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தன. வீதியின் இரு மரங்கிலும் இருந்த அங்காடிகளில் உடைகள், அலங்காரப் பொருட்கள், நகைகள், சிப்பிகள், சங்குகள், வாசனைத் திரவியங்கள், உணவுப் பொருட்கள், மீன், கருவாடு என்று பல்வேறு வகையான பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. அறிவாட்டியை தவிர்த்து மூவருக்கும் உடல் மட்டும்தான் வண்டிலுக்குள் இருந்தது.

இவர்கள் யார் பாட்டி உடலெல்லாம் வெள்ளை நிறமாக இருக்கிறார்கள்? என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் கோதை.

அவர்கள் வெளி தேசத்தவர் யவனர் என்று அவர்களை அழைப்பார்கள். அவர்களுக்கு நமது மொழி தெரியாது. யவன மொழி தெரிந்த ஒருவரை வைத்துக்கொண்டு வணிகம் செய்கிறார்கள். பல தேசத்தவர் கூடுகின்ற வணிகத் தெரு இது என்றார் அறிவாட்டி. இந்த வணிகத் தெருவுக்கு அப்பால் இருக்கும் நிலப்பகுதியில் திருகோணமலை நகரத்தார் வாழ்கிறார்கள். குடியிருப்புகளின் முடிவில் பெருங்கடல் இருக்கிறது என்று விளக்கிக் கூறினார் அறிவாட்டி.



குடிதனை நெருங்கிப் பெருக்கம் ஆய்த் தோன்றும் கோண-மாமலை அமர்ந்தாரே என்று திருஞானசம்பந்தப் பெருமான் மனம் உருகிப் பாடியதை இப்போதுதான் நேரில் பார்க்கி றேன் என்றாள் கோதை.

திருக்கோணேச்சரத்தில் எல்லா நாளும் திருவிழா போலத் தான் இருக்கும் என்று நீங்கள் கூறியது அப்போது விளங்க வில்லை எனக்கு இப்போது புரிந்து கொள்கிறேன் என்றாள் ஆதினி.

புகழ்பெற்ற திருக்கோணநாயகரைத் தரிசிக்க உலகெல்லாம் இருந்து பக்தர்கள் வருவார்கள். பல நாட்டு அரசர்கள் வணங்கி திருப்பணிகள் செய்து பொன்னும், மணியும் கொடுப்பார்கள். எழில் கொஞ்சும் துறைமுகத்தில் பலர் வணி கம் செய்ய வருவார்கள். சோழப் பெருமன்னர் காலத்தில் ஸ்ரீவிஜயம், கடாரம் போன்ற நாடுகளுக்கு இங்கே இருந்து தான் சோழர் கடற்படை சண்டைக்குப் போனதாகச் சொல்லு வாங்க. ஆயிரம் ஆயிரம் வருஷமா பரபரப்பாக இருக்கிற துறைமுகம். முதன் முதலாக பாக்குறீங்க இல்ல அதுதான் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது என்றாள் அறிவாட்டி.

அவர்கள் கோணமாமலை அடிவாரத்தை வந்தடைந்தபோது குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் உரு கிப் பாடியதை ஆமோதிப்பதுபோல் கடலலைகள் மலை மீது மோதி பெருமொலி எழுப்பிக்கொண்டிருந்தது.

மூட்டை முடிச்சுக்களை வண்டியில விட்டிட்டு இறங்கி நடங்க. கோணமாமலை மண்ணில கால் பட குடுத்து வச்சிருக்கணும் என்றாள் அறிவாட்டி. எப்போது என்று காத்திருந்தவர்கள் போல அறிவாட்டியின் அழைப்பு வந்ததும் மூவரும் குதித்துக் கீழ் இறங்கினார்கள். மாதவர் வண்டிலுடன் முன் செல்ல நால் வரும் அதுவரை அவர்கள் கடந்து வந்த சமதரைப் பிரதேசத் தில் இருந்து கோணமாமலைக் காட்டின் வானுயர்ந்த மரங்க ளுக்கு நடுவில் அமைக்கப்பட்டிருந்த சிறிய பாதையில் நடக் கத் தொடங்கினார்கள்.

புன்னை மரங்களும், வேங்கை மரங்களும், செண்பக மரங்க ளும், முல்லை மரங்களும் ஓங்கி வளர்ந்திருக்கும் மலைக் காடு அது. பறவைகளின் ஒலிகளையும், வண்டுகளின் ரீங்கா ரத்தையும் வழியில் இடை இடையிடையே துள்ளிக் குதித்தோ டும் மான்களின் அழகையும் இரசித்துக் கொண்டு அறிவாட்டி யின் தூண்டுதலால் விரைவாக மலையேறிக் கொண்டிருந்தார் கள் அவர்கள். திருஞானசம்பந்தரின் திருக்கோணேச்சரப் பதி கத்தினைப் பாடியபடி தலயாத்திரை வந்த பக்தர்கள் அவர் கள் முன்னால் போய்க் கொண்டிருப்பதை கண்டார்கள்.

இவர்கள் யார் பாட்டி? எங்கிருந்து வருகிறார்கள்? என்றாள் கோதை.

பார்ப்பதற்கு சோழ தேசத்தவர் போல் இருக்கிறார்கள் என் றார் அறிவாட்டி.

ஞானசம்பந்தரின் பதிகத்தைப் பாடியபடி மலையேறினால் சோர்விருக்காது சேர்ந்து பாடுங்கள் என்றாள் அறிவாட்டி.

எத்தனை பாடல்கள் பாட்டி என்று கேட்டாள் கோதையின் தாய்.

பதிகம் என்றாலே பத்துப் பாட்டுத்தானே அம்மா என்றாள் சிரித்தபடி கோதை.

திருக்கோணேச்சர பதிகத்தில் ஒரு பாட்டு இல்லை. ஒன்பது பாடல்கள்தான் கிடைத்தது என்றாள் அறிவாட்டி.

எத்தனையாவது பாடல் இல்லாமல் போனது என்று ஆச்சரி யத்தோடு கேட்டாள் கோதையின் தாய்.

ஏழாவது பாடல். சோழப்பெரு மன்னர் இராஜராஜ சோழன் மீட் டெடுத்த ஓலைச் சுவடிகளில் ஏழாவது பாடல் அழிந்து போய் விட்டிருந்தது என்றாள் ஆதினி.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com


அன்புநெறி
Anpuneri
பெருமையுடன் வழங்கும்
FIVE STAR
111 Vinyl Court, Woodbridge
905-265-7530
www.fivestarplastic.com
Killi Chelliah
416.624.7562
மன்னாரில் அமையவிருக்கும் மாற்றுத்திறனாளிகளின்
மேம்பாட்டுக்கான பல்நோக்கு மைய நிர்மாணிப்பு நிதிக்காக
2024
நாத சங்கமம்
BY N.S.WAGESHAN
SEP
22
5:00 PM
ARMENIAN COMMUNITY CENTER
50 HALLCROWN PL,
NORTH YORK, ON M2J 1P6
647-800-8724


ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணையவழிக் கலந்துரையாடல்
நாள் : 13 செப்டம்பர் வெள்ளிக்கிழமை 2024
நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)
நாள் : 14 செப்டம்பர் சனிக்கிழமை 2024
காலை 1:00 - 3:00 மணி (இலண்டன்)
காலை 5:30 - 7:30 மணி (இலங்கை, இந்திய)
காலை 10:00 - 12:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)
“சங்ககாலச் சமூக உருவாக்கம்
- மானிடவியல் நோக்கு”
உரை நிகழ்த்துபவர் : திரு . க. சண்முகலிங்கம்
Join Zoom Meeting
Meeting ID: 847 7725 7162
Passcode: 554268

# இனப்படுகொலையின் அரசியல்-5

## இனப்படுகொலை : 2
## தத்துவார்த்தக் கேள்விகள்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### அறிமுகக் குறிப்புகள்:

இனப்படுகொலைகளுக்கு ஒரு சர்வதேச பரிமாணம் உண்டு. பல சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தது இனப்படுகொலையா இல்லையா என்பதைக் கூடத் தீர்மானிக்கும் ஒன்றாக அது இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் இனப்படுகொலைக்கும் சர்வதேச உறவுகளுக்கும் இடையிலான தொடர்பை தத்துவார்த்த ரீதியாக நோக்குவது முக்கியமானது.

1900 முதல் இனப்படுகொலை குறைந்தது 84 மில்லியன் பொதுமக்களைக் கொன்றுள்ளது, மேலும் பெரும்பாலான நிகழ்வுகள் பெரிய அளவிலான சர்வதேச தாக்கங்களைக் கொண்டுள்ளன. பல சந்தர்ப்பங்களில், அந்நிய அரங்காடிகள் குற்றவாளிகளுக்கு வெகுஜன வன்முறையை நிகழ்த்துவதற்கான அவர்களின் திறனுக்கு முக்கியமான ஆதரவையும் அதன்பின் தண்டனையிலிருந்து பாதுகாப்பையும் வழங்கியுள்ளனர். இனப்படுகொலைக்கான சாத்தியக்கூறுகளை அந்நிய அரங்காடிகள் எவ்வாறு பாதிக்கிறார்கள் என்பது பற்றிய நமது புரிதல் ஆய்வுக்கு உட்பட்டது. குறிப்பாக இலங்கையில் இறுதிப் போரில் நடந்தது என்ன என்பதைப் புரிந்து கொள்ளவும், இனப்படுகொலையைப் புரிந்துகொள்வதற்கு அந்நிய ஆதரவு முக்கியமானது. குறிப்பாக அந்நிய அரங்காடிகளின் நலன்கள் அவர்களை ‘கொடுப்போராகவும்’ உள்நாட்டு அரங்காடிகளைப் ‘பெறுவோராகவும்’ மாற்றுகிறது. இதனால் இனப்படுகொலைகளில் கொடுப்போர்-பெறுவோர் உறவிற்கு ஒரு முக்கிய பாத்திரமுண்டு. கொடுப்போர், முதன்மையாக தங்கள் சுயநலத்தால் தூண்டப்பட்டு, இராணுவ உதவியை வழங்குவதன் மூலம் இனப்படுகொலையை அனுமதிக்கலாம் அல்லது தடுக்கலாம். ஆதரவு என்பது ‘உதவிபெறும்’ நாட்டிற்கு வழங்கப்படும் குறிப்பிடத்தக்க பொருள் ஆதரவைக் குறிக்கிறது. சமமற்ற வளங்களைக் கொண்டிருக்கக்கூடிய இரண்டு நாடுகளுக்கிடையே பரஸ்பரத் தேவைகளுக்காகவோ அல்லது பொது நோக்கொன்றிற்காக பரஸ்பர சேவைகளை வழங்குவதற்கோ ஏற்பட்டுள்ள பிணைப்பினை வெளிப்புற ஆதரவாகக் கொள்ளலாம்.

இந்த உறவு பெரும்பாலும் வரலாற்று கொலனித்துவ உறவுகள், இன-மத அல்லது மொழி சார்ந்த உறவு, தற்போதைய பொருளாதார, இராணுவ உறவுகள் மூலம் பெறப்படுகிறது. இராணுவ உதவியானது, இனப்படுகொலைக்கு நேரடியாக உதவுவதாகவும், பொதுமக்களுக்கு எதிரான பெரிய அளவிலான வன்முறைக்கான திறனை வழங்குவதாகவும், பெறுவோர் அரசின் மற்ற இலக்குகளுக்கு இது முக்கியமானதாக இருக்கும் அளவிற்கு சாத்தியமான தடையாகவும் செயற்படுகிறது. பெரும்பாலான கொடுப்போர்-பெறுவோர் உறவுகளில், இராணுவ உதவியை நிறுத்தி வைப்பது அல்லது தொடர்வது, கொடுக்கும் அரசின் ஆதரவிற்காக சக்திவாய்ந்த சமிக்ஞையாக செயற்படுகிறது. இனப்படுகொலையின் வெளிப்புற இயக்கவியல் பற்றிய புரிதல் அவசியமானதும் தவிர்க்கவியலாததும். இலங்கைச் சூழலில் தமிழர் நீதியை வேண்டி நிற்கும் தரப்புகளின் இறுதிப் போரின் போதான பாத்திரமென்ன என்ற வினாவை தவிர்த்துவிட்டு நீதி குறித்துப் பேசுவது பயனற்றது.

இனப்படுகொலை பற்றிய விளக்கத்திற்கு உதவக்கூடிய பல காரணிகள் உள்ளன. சர்வதேச காரணிகள் மோதலின் இயக்கவியலை எந்த அளவிற்கு பாதிக்கின்றன என்பதை மிகைப்படுத்துவது எளிது. அட்டூழியங்களையே மூலோபாயங்களாகத் தீர்மானித்ததன் பின்னர் குற்றம் செய்யும் அரங்காடிகளை நிராகரிப்பது கடினம், மேலும் உள்நாட்டு மோதல்கள் மற்றும் அரசியல் இயக்கவியல் ஆகியவை வெளிப்புறங்களை விட அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. எவ்வாறாயினும், கொடுப்போரின் புவிசார் அரசியல் நலன்களை ஊக்குவிப்பது, கட்டுப்படுத்துவது அல்லது அனுமதிக்கும் நிலைகள் அதிக ஆபத்துள்ள நிகழ்வுகளில் விளைவுகளின் மாறுபாட்டை விளக்குவதில் ஒரு முக்கிய பகுதியாகும்.

இனப்படுகொலைக்கான காரணங்கள் பல, அவற்றில் பல சர்ச்சைக்குரியவை. இனப்படுகொலை முதன்மையாக உள்நாட்டு நிகழ்வு என்றபோதும் சர்வதேச பரிமாணங்களைக் கொண்டுள்ளது. புரட்சி, போர் அல்லது வேறு சில குறிப்பிடத்தக்க இடையூறு வடிவில் எழுச்சி என்பது இனப்படுகொலைக்கான அவசியமான நிபந்தனைக்கு மிக நெருக்கமானதாகத் தோன்றுகிறது. பல சந்தர்ப்பங்களில் சாத்தியமான குற்றவாளிகளுக்கு அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பின் உணர்வை அதிகரிப்பதில் கருத்தியல் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆயினும்கூட, கோட்பாட்டளவில் இனப்படுகொலைக்கான அபா



யத்தை அதிகரிக்கும் இந்தக் காரணிகள் பல இருக்கும் சந்தர்ப்பங்களில், அது நிகழாது. இனப்படுகொலையைப் புரிந்துகொள்வதில் சர்வதேச உறவுகளில் கவனம் செலுத்தினால் இருபதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய இனப்படுகொலைகளில் அதன் பங்கை விரிவாக நோக்கலாம். உலகளாவிய வல்லரசுகளின் உறவுகளை நாம் பார்த்தால் அவை இனப்படுகொலைக்கு 'பதிலளிப்பு' என்பதன் அடிப்படையில் மட்டுமல்ல, அவர்கள் இனப்படுகொலை உற்பத்தியில் எப்படி நுழைகிறார்கள் என்பதன் அடிப்படையிலும் நோக்க வேண்டியுள்ளது. முக்கியமாக பல நூற்றாண்டுகளாக சர்வதேச அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் எவ்வாறு இனப்படுகொலையை பாதித்தன என்பது முக்கியமானது. இனப்படுகொலைக்கான சாத்தியங்கள் குறித்த பரந்த பகுப்பாய்வுகளில் வெளிப்புற இயக்கவியல் குறித்து சீரிய கவனமின்மை முக்கியமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. இது உள்நோக்கியே கவனம் செலுத்துவதால் இது இடர் பகுப்பாய்வுக்கான முக்கியமான தகவல்களைத் தவிர்த்துவிடும் வாய்ப்பு இருப்பதுடன் விலக்கப்படும் ஆபத்தில் உள்ள நாடுகளில் மட்டுமே கவனம் செலுத்தும் செயல்களுக்கு தலையீடு செய்வதற்கான விருப்பங்களை கட்டுப்படுத்துகிறது. அத்தகைய வன்முறையை அனுமதிக்கும் அல்லது கட்டுப்படுத்தும் சக்தியாக அந்நிய அரங்காடிகள் இருக்கிறார்கள். கெடுபிடிப்போர் காலம் முழுவதும் இந்தோனேசியா, கிழக்கு பாகிஸ்தான் மற்றும் குவாத்தமாலாவில் இனப்படுகொலை ஆட்சிகளுக்கு அமெரிக்க ஆதரவு கிடைத்தமையும் கெடுபிடிப்போருக்குப் பின்னர் இலங்கை, மியான்மருக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு ஆகியவை அடங்கும்.

இனப்படுகொலை என்பது சர்வதேச சட்டத்தில் 'குற்றங்களின் குற்றமாக' கருதப்படுகிறது, ஆனால் 'குறைந்த குற்றங்களை' விட மிகக் குறைவான அரசியல் எடையைக் கொண்டுள்ளது. உதாரணமாக, சர்வதேச பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் சர்வதேச அளவில் கடற்கொள்ளையர் போன்ற குற்றங்களை தடுக்க முயற்சிக்கும் போது நீண்டகால கூட்டுப் பாதுகாப்பு உத்திகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால் இனப்படுகொலை தடுப்பு என்று வரும்போது அத்தகைய நீண்ட கால கூட்டு பாதுகாப்பு உத்தி எதுவும் இல்லை. அடிப்படையில், இது போன்ற குற்றங்கள் - போதைப் பொருள் கடத்தல் - ஒரு சர்வதேச அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறது, இதன் மூலம் இதுபோன்ற குற்றங்கள், இந்த பாதுகாப்பு பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கூட்டாக செயற்படும் அரசுகளின் தனிப்பட்ட பாதுகாப்பு திறனை விட அதிகமாக இருக்கும். அதன்படி, அத்தகைய குறிப்பிட்ட சூழல்களுக்குள் கூட்டு நலன் தேசிய நலனை மேம்படுத்துகிறது என்பதை கொள்கை வகுப்பாளர்கள் உணர்கிறார்கள். இனப்படுகொலையை நோக்கிய எந்தவொரு நீண்டகால கூட்டுப் பாதுகாப்பு மூலோபாயமும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்கூறிய குற்றங்களைப் போலவே இனப்படுகொலையும் ஒரு சர்வதேச அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்பதை சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் உணரவில்லை. அவர்கள் இனப்படுகொலையின் பயங்கரத்தை சந்தேகத்திற்கு இடமின்றி உணர்ந்து, இனப்படுகொலை வெகுஜன இடம்பெயர்வை ஏற்படுத்தக்கூடும் என்பதை ஏற்றுக்கொள்வார்கள், இது உறுதியற்ற பிராந்தியத் தன்மையை ஏற்படுத்துகிறது, வெகுஜன இடம்பெயர்வு என்பது இனப்படுகொலைக்கு பிரத்தியேகமானது அல்ல, இது குறைந்த முன்னுரிமை பிரச்சினையாகவே உள்ளது. இத்தகைய புரிதல், இனப்படுகொலைத் தடுப்பு என்று வரும்போது, அவர்கள் அதைக் கண்டுகொள்வதில்லை, அதன் விளைவாக இனப்படுகொலையைத் தடுப்பதை பொதுநலன் சார்ந்த விஷயமாகவோ சர்வதேச பாதுகாப்புப் பிரச்சினையாகவோ கருதுவதில்லை.

## இனப்படுகொலையும் சர்வதேச அங்கீகாரமும்:

உலக அரசியல் அரங்கில் அங்கீகாரத்துக்கு முக்கிய இடமுண்டு. நியாயம்-அநியாயம் என்ற அளவுகோலைத் தீர்மா

னிப்பதாக சர்வதேச அங்கீகாரம் என்பது இருக்கிறது. கெடுபிடிப்போரின் முடிவும் 9/11 போன்ற நிகழ்வுகளும் சர்வதேச அங்கீகாரம் குறித்த வினாக்களை எழுப்பத் தொடங்கின. இவை 9/11-க்குப் பிறகும் அதற்கு அமெரிக்கா தலைமையிலான பதிலளிப்பிலும் மிகச் சரியாக விளக்கப்பட்டது. முதன்மையாக, 2003-ல் ஈராக் மீதான அமெரிக்கத் தலைமையிலான ஆக்கிரமிப்பு சர்வதேச உறவுகளின் மையத்திற்கு சட்டபூர்வமான அதிகாரம் மற்றும் முறையான நடத்தை பற்றிய கேள்விகளைக் கொண்டு வந்தது. 1999-ல் கொசோவோ நெருக்கடியைச் சுற்றியுள்ள விவாதங்களில், 9/11-க்குப் பிந்தைய பல கேள்விகள், சட்டபூர்வமான நடத்தை மற்றும் முறையான அதிகாரம் தொடர்பாக எழுப்பப்பட்டன. குறிப்பாக கொசோவோ மீதான நேட்டோவின் தாக்குதலானது 'சட்டவிரோதமானது ஆனால் நியாயமானது' என்று விளக்கப்பட்டது. இது அமெரிக்கா தலைமையிலான ஒற்றைமைய உலக ஒழுங்கில் அமெரிக்காவினதும் அவர்தம் கூட்டாளிகளினதும் செயல்களுக்கும் - அவை சர்வதேச சட்டத்திற்கு முரணானதாக இருந்த போதும் - சர்வதேச அங்கீகாரத்தை அளித்தன. அங்கீகாரத்துக்கும் சட்டபூர்வமான தன்மைக்கும் இடையிலான இந்த வெளிப்படையான மோதல் சர்வதேச சட்டம் எப்படியோ குறைபாடுடையது என்பதைக் குறிக்கிறது. சர்வதேச சட்டம் மீறப்பட்டால், அதை எவ்வாறு சரி செய்வது என்ற கேள்விக்குப் பதில் இல்லை. அனைத்தும் சர்வதேச அங்கீகாரம் என்ற ஒற்றைப் புள்ளியில் மையங்கொண்டது.

சர்வதேச அங்கீகாரத்துடனான சட்டபூர்வமான செயல் என்றால் என்ன என்ற விவாதம் வெறுமனே ஒரு தத்துவ விவாதம் அல்ல. ஏனெனில் சர்வதேச அங்கீகாரத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் சட்டபூர்வமான தன்மையை உலகம் விவாதிக்கும் போது போர்கள் நடத்தப்பட்டன, மக்கள் இறந்து கொண்டிருந்தனர். 9/11-ன் நிகழ்வுகளும் அதைத் தொடர்ந்து நடந்த 'பயங்கரவாதத்தின் மீதான போர்' எந்த அடிப்படைகளையும் கொண்டிருக்கவில்லை. ஆயினும் சர்வதேச அங்கீகாரம் அனைத்துச் செயல்களையும் செய்வதற்கான கடவுச்சீட்டாக இருக்கிறது என்பது புலனானது.

சர்வதேச அங்கீகாரம் என்பது இனப்படுகொலையுடன் ஒரு சிறப்பு உறவைக் கொண்டுள்ளது. இதை விளங்கிக் கொள்ள அறநெறி, சட்டப்பூர்வத்தன்மை மற்றும் அரசியலமைப்பு ஆகிய மூன்று விதிமுறைகளுக்கும் இனப்படுகொலைக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்வது முக்கியம். ஏனெனில், சர்வதேச அங்கீகாரமானது இந்த மூன்று விதிமுறைகளிலிருந்து அதன் மதிப்பைப் பெறுகிறது. இது காலப்போக்கில் மாறலாம் மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஒருவருக்கொருவர் மோதலாம். எனவே, சட்ட மற்றும் தார்மீகக் கண்ணோட்டத்தில் இனப்படுகொலை என்பது சர்வதேச அளவில் 'குற்றங்களின் குற்றமாக' கருதப்பட்டாலும், இனப்படுகொலைக்கும் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் இடையே உள்ள பிரச்சினைக்குரிய உறவை உயர்த்திக் காட்டும் கொள்கை வகுப்பதில் விமர்சன ரீதியாக குறைந்த முன்னுரிமையாகவே உள்ளது என்பதை இங்கு நோக்குவது அவசியம். இதையொட்டி, அரசியல் எதிர்பார்ப்புகள் சர்வதேச சமூகத்தின் சட்ட மற்றும் தார்மீக எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை என்பதும் கவனிப்புக்குரியது.

மேற்குறிப்பிட்ட மூன்றில் முதலாவதான அறநெறி என்பதைக் கருத்தில் கொள்ளும்போது, இனப்படுகொலை ஒழுக்கக்கேடானது என்ற எண்ணம் தெளிவாகத் தெரிகிறது. உண்மையில், இனப்படுகொலை ஏன் மோசமானது என்பதை ஒருவர் நியாயப்படுத்த வேண்டும் என்று சிந்திப்பது கூட ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் ஒருவர் அதைச் செய்ய வேண்டும்



என்பது தெளிவாகிறது. இருபதாம் நூற்றாண்டில் அறநெறியின் அதிகாரம் மற்றும் தார்மீக முன்னேற்றம் குறித்த ஒரு நெருக்கடி வெளிப்பட்டது. பிரட்ரிக் நீட்ஷேவின் கருத்துகளாலும் அவரது 'கடவுளின் மரணம்' என்ற அறிவிப்பு மிகுந்த செல்வாக்கான ஒன்றான நிலைபெற்ற நிலையில், ஹோப்ஸ்-பாம் விளக்கிய 'தீவிரங்களின் யுகம் (Age of Extremes) என்பது எவ்வளவு சரியானது என்று புலனாகிறது. இது அறநெறி என்பது அவசியமானதுதானா என்ற வினாவை எழுப்பியது. இருபதாம் நூற்றாண்டின் இயங்கியல் இவ்வினா எவ்வளவு பொருத்தமானது என்பதைக் காட்டி நிற்கின்றது.

இனப்படுகொலைகளில் அறம் சார்ந்து பேசுகிற போது, கவனிப்புக்குள்ளாகும் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், விருப்பமுள்ள பங்கேற்பாளர்கள் மற்றும் விரும்பாத பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய நடைமுறைகளுக்கு இடையிலான வேறுபாடு. எஸ்கிமோக்கள் தங்கள் பெரியவர்களை வெளியே உறைந்து இறக்கும் வரை விட்டுச் செல்வதாரிது நன்கு அறியப்பட்ட உதாரணமாகும். முதலில், இது மிகவும் ஒழுக்கக்கேடானதாகத் தோன்றினாலும், இந்த நடைமுறையில் பெரியவர்கள் விருப்பமுள்ள பங்கேற்பாளர்கள் என்பதை ஒருவர் அறிந்தால், இது ஒரு ஒழுக்கக்கேடான நடைமுறை என்று தீர்ப்பது கடினமாகிறது. இப்போது வெளிப்படையாக, அத்தகைய சூழல்களுக்குள் விருப்பமான பங்கேற்பு பிரச்சினையை மேலும் விவாதிக்க நேர்மறை மற்றும் எதிர்மறை சுதந்திரம் போன்ற கருத்துக்களை ஒருவர் தூண்டலாம். இனப்படுகொலையின் சூழலில் விருப்பமில்லாத பங்கேற்பாளர்கள் நிச்சயமாக பாதிக்கப்பட்டவர்களாகத் தகுதி பெற்றிருப்பதால், இந்தப் பிந்தைய சூழலில் 'பங்கேற்பாளர்' என்ற



சொல் ஓரளவு தவறாகத் தெரிகிறது. வெறும் போர்க் கோட்பாட்டில் காணக்கூடிய பல உணர்வுகளை வரைந்து, (இராணுவ ரீதியாகவோ அல்லது வேறுவிதமாகவோ) தலையிட்டு, சம்பந்தப்பட்ட துன்பங்களின் அளவைக் குறைக்கும் திறன் நமக்கு இருந்தால், அதைச் செய்வதற்கான தார்மீகக் கடமை நமக்கு இல்லையா ?

சர்வதேச சமூகத்தில் இறையாண்மையின் சட்டபூர்வமான தன்மையை மீறக்கூடிய ஒரு தார்மீக வரம்பு உள்ளதா என்ற விவாதம் தொடர்ந்தவண்ணம் இருக்கிறது. 'மனிதாபிமான தலையீடு' (Humanitarian Intervention) குறித்த விவாதத்தில் இந்த சிந்தனைப் போக்கு நன்கு தெரிந்ததே. 'நாம் தலையிடுவதற்கு முன்பு எவ்வளவு மனித துன்பங்களைப் பார்க்கத் தயாராக இருக்கிறோம் ?' என்ற வினாவே இந்தக் கருத்துருவாக்கத்தின் மையம். 1994-ல் நடந்த ருவாண்டா இனப்படுகொலை, சர்வதேச சமூகம் ஓர் இனப்படுகொலை நிகழ்வதைப் பார்க்க மிகவும் தயாராக உள்ளது என்பதை நிரூபித்தது. தார்மீக சார்பியல்வாதிகளின் கூற்றுகளை நிராகரிக்க ஒழுக்கத்தை விட அதிகமாக நாம் முறையிடலாம் என்பது தெளிவாக இருப்பதால் ஒருமித்த பங்கு சர்வதேச அங்கீகாரம் என்ற விடயத்துக்கு நம்மை மீண்டும் கொண்டுவருகிறது. தார்மீக சார்பியல்வாதத்தை விஞ்ஞான முறையில் நிரூபிப்பது சாத்தியமில்லை என்றாலும், தார்மீக சார்பியல்வாதம், குறைந்தபட்சம் இனப்படுகொலையின் பின்னணியில், சட்டத்திற்குப் புறம்பானது மற்றும் பொதுவானது அல்ல என்பதை நிரூபிக்க, மேலே வழங்கப்பட்ட சர்வதேச அங்கீகாரம் பற்றிய புரிதலுடன் மீண்டும் ஈடுபட முடியும். இது மிகக்குறைவான எதிர்பார்ப்பாக இருந்தாலும்கூட இனப்படுகொலையின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது சர்வதேச அங்கீகாரத்தின் வகிபாகத்தின் அரசியற்தன்மை தெளிவாகிறது.

இனப்படுகொலையைப் புரிந்து கொள்வது தொடர்பில் தார்மீக தத்துவவாதிகள் உலகளாவிய தார்மீகத்தன்மையின் குறைந்தபட்சத் தேவை பற்றிய புரிதலை உருவாக்கியது போல, சர்வதேச வழக்கறிஞர்கள் உலகளாவிய சட்டத்தின் குறைந்தபட்சத் தேவை பற்றிய புரிதலை உருவாக்கியுள்ளனர். இனப்படுகொலை என்பது அனைத்துக்கும் மேலான அத்துமீறலாக சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுதான் இங்கு பொருத்தமாக இருக்கிறது. இனப்படுகொலை பற்றிய சர்வதேச சமூகத்தின் பார்வையை சட்ட கண்ணோட்டத்தில் அளவிட, இனப்படுகொலை ஒப்பந்தத்தின் வரைவுக்குத் திரும்புவது அவசியம். சுவாரஸ்யமாக, தார்மீகத்திற்கும் சட்டத்திற்கும் இடையிலான மேற்கூறிய உறவு இனப்படுகொலை தொடர்பான வரைவின் நடைமுறைக்குள் வைக்கப்பட்டது. உதாரணமாக, 1946-ல், இனப்படுகொலை குற்றத்திற்கான ஐ.நா பொதுச் சபை தீர்மானம், இனப்படுகொலை 'மனிதகுலத்தின் உணர்வை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது' என்று கூறியது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, இனப்படுகொலை என்பது சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு குற்றம் என்பதை உறுதிப்படுத்துகிறது. 'இதை நாகரிக உலகம் கண்டிக்கிறது' என்றது. சர்வதேச சட்ட இயக்கத்தின் மையத்தில் இருக்கும் நாஜி இனப்படுகொலையை நோக்கிய தார்மீக வெறுப்புணர்ச்சி இது என்பதை இந்த அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. 1946 பொதுச் சபை தீர்மானத்தில் வெளிப்படுத்தப்பட்ட உலகளாவிய தார்மீக வெறுப்பு, குற்றத்தை கண்டிக்கும் போது அரசுகளின் பிரதிநிதிகள் உலகளாவிய தார்மீக மொழியுடன் தொடர்ந்து பேசியதால், அடுத்தடுத்த வரைவு செயல்முறை முழுவதும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இனப்படுகொலைக்கான சர்வதேச சட்ட முன்னோக்குகள், இனப்படுகொலையை தவறான நடத்தை என்று வெறுமனே அங்கீகரிப்பதை விட, சர்வதேச சட்டத்தில் 'குற்றங்களின் குற்றமாக' இனப்படுகொலையை நிறுவ முற்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

இனப்படுகொலை என்பது சர்வதேச அளவில் 'குற்றங்களின் குற்றமாக' கருதப்பட்டால், ஏன் அரசுகள் இனப்படுகொலைக் குற்றத்தை எதிர்கொள்ளத் தவறுகின்றன என்ற கேள்வியை இந்த இடத்தில் கேட்பது பொருத்தம். அரசியல் கண்ணோட்டத்தில் இனப்படுகொலை என்பது சர்வதேச அளவில் 'குற்றங்களுக்கெல்லாம் தலையாய குற்றமாக' கருதப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிந்ததால், இந்தக் கேள்வியில் இயல்பாக எழுப்பப்பட்ட உணர்வுக்கு நம்மைத் திரும்பக் கொண்டு வருகிறது. 9/11 நிகழ்வுகளிலிருந்து, சர்வதேச பயங்கரவாதம் இனப்படுகொலையை விட முன்னுரிமை அளிக்கப்படும் ஒன்றாக மாறியது. இனப்படுகொலையை விட சர்வதேச பயங்கரவாதம் போன்ற பிற குற்றங்களுக்கு முன்னுரிமை அளிப்பது, மனிதாபிமான முன்னேற்றத்தின் பாதையில் பின்தங்கிய படியை பிரதிபலிக்கிறது, சர்வதேச பயங்கரவாதம் சர்வதேச

உறவுகளில் ஒரு தீவிரமான சிக்கலை ஏற்படுத்தும் அதே வேளையில், பயங்கரவாதிகள் அணு ஆயுதங்களை வாங்காத வரையில், நிராயுதபாணியான அப்பாவி குழுக்களுக்கு அரசுகள் செய்யக்கூடிய அழிவின் அளவை அவர்களால் கொண்டு வர முடியாது என்பது தெளிவாக இருப்பதால், அத்தகைய தர்க்கம் முற்றிலும் புரிந்துகொள்ளக்கூடியது. மிக எளிமையாக, பயங்கரவாதிகளை விட அரசுகள் அதிக அதிகாரத்தை வைத்திருக்கின்றன. இது போன்ற நியாயத்தை மனதில் கொண்டுதான் நாம் இனப்படுகொலையில் சர்வதேச அங்கீகாரத்தின் முக்கியத்துவத்தை நோக்க வேண்டியுள்ளது.

இனப்படுகொலையை தடைசெய்யும் ஒரு நெறிமுறையில் பரவலான உலகளாவிய உடன்பாட்டை இன்றுவரை எம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது உண்மையில் அவமானகரமானது. இன்று உள்ள சர்வதேச சட்டத்தால் இனப்படுகொலை குற்றத்தை எதிர்கொள்ள முடியாவிட்டால், சர்வதேச சமூகம் எவ்வாறு நெறிமுறைகளை உள்ளடக்கிய ஒரு சர்வதேச சட்ட அமைப்பைக் கொண்டிருக்க முடியும் என்ற கேள்வியின் தீவிரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இருப்பினும், ஒரு முக்கியமான புள்ளியைத் தொடுவது இங்கே முக்கியமானது. இனப்படுகொலைகள் தடுக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச எதிர்பார்ப்பு நிலவுகின்ற அதேவேளை, இனப்படுகொலை தடுக்கப்படமாட்டாது என்ற சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதும் தெளிவாகின்றது. இதை விளக்குவதற்கு, இனப்படுகொலை தடுப்புக்கான தேசிய மற்றும் சர்வதேச அரசியல் எதிர்பார்ப்புகளை வேறுபடுத்துவது அவசியம். இனப்படுகொலை தடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இந்த சொற்றொடர் ஒத்ததாக மாறியுள்ளதால், இந்த வேறுபாட்டை விளக்குவதற்கு, 'இனி ஒருபோதும் இல்லை' என்ற அரசியல் சொல்லாட்சியை இந்த பகுப்பாய்வு பயன்படுத்துகிறது. இனப்படுகொலை ஆய்வுகள் பற்றிய கருத்தாடல்கள் 'இனி ஒருபோதும் இல்லை' என்ற சொற்றொடரால் நிரம்பியுள்ளது. இது சர்வதேச சமூகத்தின் (இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு செய்யப்பட்ட) சர்வதேச உறவுகளில் 'இனி ஒருபோதும்' இனப்படுகொலை ஏற்பட அனுமதிக்கப்படாது என்ற உறுதிமொழியைக் குறிக்கிறது. முக்கியமாக, நாஜிகளால் குறிவைக்கப்பட்டவர்களை பாதுகாப்பதில் சர்வதேச சமூகம் அதன் பொறுப்புகளில் தோல்வியடைந்ததையும் இந்தத் தோல்விக்கு இனப்படுகொலை மாநாடு ஒரு தீர்வை வழங்கியது என்ற புரிதலின் அடிப்படையிலும் 'இனி ஒருபோதும்' என்ற சொல்லாட்சி கட்டப்பட்டது. அதன்படி, சர்வதேச உறவுகளில் இனப்படுகொலை தடுக்கப்பட வேண்டும் என்ற தெளிவான சர்வதேச எதிர்பார்ப்பு இருந்தது. சர்வதேச சமூகம் இனப்படுகொலையை அனுமதிக்கவில்லை என்றாலும், அது நடக்க அனுமதிக்கின்றது. இனப்படுகொலை நிகழக் கூடாது என்ற இந்த சர்வதேச எதிர்பார்ப்பு, இத்தகைய 'சிக்கலான மற்றும் ஆபத்தான' அயலுறவுக் கொள்கை நிகழ்ச்சி நிரல்களில் அரசுகள் தலையிடக் கூடாது என்ற தேசிய எதிர்பார்ப்பில் சோகமாக சரிந்தது.

கடந்த ஒரு நூற்றாண்டுகால அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கைகளின் வரலாறானது இனப்படுகொலைக்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் இடையிலான உறவு தொடர்பான விஷயத்தின் மையத்திற்குச் செல்கிறது. மிக எளிமையாக, மற்ற எல்லா அரசுகளையும் போலவே அமெரிக்காவும், சர்வதேச சமூகம் இனப்படுகொலையைத் தடுக்க வேண்டும் என்ற சர்வதேச எதிர்பார்ப்புக்கு 'உதட்டு சேவை' செலுத்துகிறது. ஆனால், இனப்படுகொலையைத் தடுப்பது அரசுகளின் தேசிய நலனுக்கு உட்பட்டது அல்ல என்ற யதார்த்தமான அயலுறவுக் கொள்கை நெறிமுறையை அது நிலைநிறுத்துகிறது. இனப்படுகொலையைத் தடுப்பது தொடர்பாக அரசுகளிடையே நீண்டகால கூட்டுப் பாதுகாப்பு உத்திகள் எதுவும் உருவாக்கப்படவில்லை என்ற புரிதலுக்கு இது நம்மைத் திரும்பக் கொண்டுவருகிறது. இதுதான் உண்மையான பிரச்சினை. இனப்படுகொலையைத் தடுக்க வேண்டுமானால், இனப்படுகொலையைத் தடுப்பதை மட்டும் எந்த அரசும் மேற்பார்வையிட முடியாது என்பதால், நீண்ட கால கூட்டு முயற்சியை உருவாக்க வேண்டும். தற்போது, எந்த ஒரு சர்வதேச கூட்டு முயற்சியும் இல்லாதது, இனப்படுகொலையின் தாக்கம் உலகளாவிய கொள்கை வகுப்பாளர்களிடையே உணரப்படவில்லை என்ற உண்மையைப் பிரதிபலிக்கிறது. இனப்படுகொலை தார்மீக ரீதியாக வெறுக்கத்தக்கது என்பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள், ஆனால் இனப்படுகொலையை தீர்க்க முடியாத பல பிரச்சினைகளில் ஒன்றாக பார்க்கிறார்கள்.

கடந்த கால சர்வதேச அரசியல் சில விடயங்களைத் தெளிவாகக் காட்டுகிறது. சர்வதேச உறவுகளில் தொடர்புடைய அனைத்து அரங்காடிகளும் (அவர்கள் யாராக இருந்தாலும்) ஓர் இனப்படுகொலையை தார்மீக ரீதியாகவும், சட்ட ரீதியாகவும், அரசியலமைப்பு ரீதியாகவும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே அது இனப்படுகொலையாகவும் அதற்கெதிரான நடைமுறைகளுக்கெதிரான முறைகளுக்கான சாத்தியப்பாடுகளையும் உருவாக்கும் என்பதே யதார்த்தம். இது ஏமாற்றமளிப்பதாக இருந்தாலும் உண்மை அதுதான். முதலாவதாக, சர்வதேச சமூகம் கடைபிடிக்க வேண்டிய தார்மீகக் கோரிக்கையை எந்த உலக அரசாங்கமும் வழங்காத நிலையில், சர்வதேச அங்கீகாரத்தை ஆணையிட போட்டியிடும் ஒழுக்கங்கள் அனுமதிக்கப்படாமல் இருப்பது கட்டாயமாகும். குறிப்பாக பல்மைய உலக ஒழுங்கில் இனப்படுகொலைக்கான சர்வதேச அங்கீகாரம் என்பது மிகவும் சவாலானது. அரசியல் கண்ணோட்டத்தில் ஒரே வெளிச்சத்தில் கருதப்படாவிட்டாலும், சட்டரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் சர்வதேச அளவில் 'குற்றங்களின் குற்றமாக' கருதப்படுவதால், இனப்படுகொலையானது சர்வதேச சட்டபூர்வமான தன்மையுடன் ஒரு சிறப்பு உறவைக் கொண்டுள்ளது. இக்கண்ணோட்டத்தில், இனப்படுகொலை மற்றும் சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச அங்கீகாரத்தின் முதன்மை நிறுவனங்களுக்கு இடையேயான உறவைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கெடுபிடிப்போரின் முடிவு சர்வதேச சமூகத்தை மூடிமறைத்த அதிகாரச் சமநிலை குறித்த தடுமாற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. அதிகாரச் சமநிலையில் அடுத்தடுத்து ஏற்பட்ட தீவிர மாற்றம், சர்வதேச சமூகத்தின் சட்ட, தார்மீக மற்றும் அரசியலமைப்பு எதிர்பார்ப்புகளை மாற்றிய புதிய சகாப்தத்தை முன்னறிவித்தது. பிரச்சினைக்குரிய வகையில், அமெரிக்கா தலைமையிலான 'புதிய உலக ஒழுங்கு' தெளிவின்றி இருந்ததுடன் கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் சரியான நடத்தை என்பது என்ன என்பது பற்றிய அடிப்படை கேள்விகளுக்கு பதிலளிக்கப்படவும் இல்லை. ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலத்திற்குள், சர்வதேச உறவுகளில் ஒரு சட்டபூர்வமான நெருக்கடி ஏன் ஏற்பட்டது என்பதை இது விளக்க உதவுகிறது. கொசோவோ மற்றும் ஈராக்கில் தலையீ

டுகள் தொடர்பாக எழுந்த சட்டப்பூர்வ நெருக்கடி பற்றி அதிகம் எழுதப்பட்டிருந்தாலும், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் இனப்படுகொலை நிகழ்வது சட்டபூர்வமான செயற்பாட்டில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு இறையாண்மை தேசத்தின் மீதான தலையீடு பற்றிய அதிகார சங்கடம் எழுந்தது. இந்த இக்கட்டான நிலையைத் தீர்ப்பதில் சர்வதேச சமூகத்தின் தோல்விதான், கொசோவோவின் சூழலில் சட்டப்பூர்வ நெருக்கடி வெளிப்பட்டு இறுதியில் ஈராக்கிற்குள் பரவியது. இந்தக் கண்ணோட்டத்தில், சட்டபூர்வ நெருக்கடியைத் தீர்ப்பதற்கான சர்வதேச சமூகத்தின் திறனின்மை வெளிப்பட்டது. ஆயினும்கூட, இனப்படுகொலையின் சட்டப்பூர்வ செயல்முறையின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்வதற்கு முன், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய 'புதிய உலக ஒழுங்கில்' பொதிந்துள்ள பிரச்சினைகள் முக்கியமானவை.

சட்டபூர்வ செயல்முறைக்குள் பதட்டங்கள் எவ்வாறு எழுந்தன என்பதைப் புரிந்துகொள்வதற்கு, சரியான நடத்தையின் (Rightful Conduct) சூழலில் இறையாண்மை-தலையீடு விவாதத்தை முதலில் கருத்தில் கொள்வோம். முதன்மையாக, கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் மனிதாபிமானத் தலையீட்டிற்கான சாத்தியமான பாத்திரத்தின் மீது சர்வதேச சமூகம் பிளவுபட்டதால் ஒரு பதற்றம் எழுந்தது. குறிப்பாக சோவியத் ஒன்றியத்தின் முடிவையடுத்த காலப்பகுதியில் ஒரு நாட்டின் மீதான இராணுவத் தலையீடு என்ற கருத்துக்கு சர்வதேச அங்கீகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையில் கோருவது தொடர்பில் வீட்டோ அதிகாரமிக்க நாடுகளின் செயற்பாடுகள் கவனிப்புக்குரியன. ஒருபுறம், சீனாவும் ரஷ்யாவும் முழுமையான இறையாண்மை மற்றும் சர்வதேச உறவுகளில் பலத்தைப் பயன்படுத்தாது பன்மைத்துவ உறுதிப்பாட்டை ஏற்றுக்கொண்டன. எனவே இறையாண்மையின் சட்டப்பூர்வ உரிமை முழுமையானதாகக் காணப்பட்டது. மறுபுறம், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை நிபந்தனைக்குட்பட்ட இறையாண்மை மற்றும் மனிதாபிமான தலையீட்டின் தார்மீகத்திற்கு மிகவும் உறுதியான உறுதிப்பாட்டை ஆதரிக்க முனைகின்றன. எனவே, இறையாண்மையின் சட்டபூர்வ தன்மை தலையீட்டின் தார்மீகத்துடன் மோதியதால், சட்டபூர்வ செயல்முறைக்குள் விதிமுறைகளின் மோதல் ஏற்பட்டது. அதே நேரத்தில், நாடுகளுக்குள் அதிகரித்து வரும் மோதல்களைப் பற்றி ஏதாவது செய்ய வேண்டும் என்பது தெளிவாகத் தெரிந்ததால், ஐ.நாவின் அங்கீகரிக்கப்பட்ட தலையீடு சில உள் விவகாரங்கள் சர்வதேச தலையீட்டிற்கு உத்தரவாதம் அளிக்கும் ஒரு ஒப்பந்தத்துக்கு வீட்டோ நாடுகள் உடன்பட்டன. சோமாலியாவின் சூழலில் இது வெளிப்படையாக இருந்தது. இது மீண்டும் ஒருமுறை, இறையாண்மை-தலையீடு தொடர்பான அடிப்படை பதற்றத்தை மறைத்தது, ஏனெனில் சோமாலியாவில் அமெரிக்காவின் தன்னிச்சையான தலையீடு துல்லியமாக ஆதரவைப் பெற்றது. ஏனெனில் சோமாலியா ஒரு தோல்வியுற்ற நாடாக இருந்ததால் அது ஓர் இறையாண்மை நாடாக தகுதி பெறவில்லை என்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை ஒப்புக்கொண்டது. அதன்படி, தலையீட்டின் தார்மீகத் தன்மையைத் தடுக்கக்கூடிய பொருந்தக்கூடிய சட்டத் தடையாக இறையாண்மையின் உரிமை காணப்படவில்லை. ஆனால் வீட்டோ நாடுகளுக்கிடையிலான கருத்தொருமிப்பு நீண்டகாலம் நிலைக்கவில்லை. ஏனெனில் அமெரிக்கா இந்தக் கருத்தொருமிப்பைப் பயன்படுத்தி உலக நாடுகளில் தன்னிச்சையாக இராணுவத் தலையீடுகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இதற்கு எதிரான ரஷ்யா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தத் தொடங்கியது. இது கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் ஒழுங்கு மற்றும் நீதியின் இணக்கத்தன்மை குறித்து சர்வதேச சமுதாயத்தில் ஆழமான பிளவை பிரதிபலித்தது. இது இறுதியில் சர்வதேச சமூகத்தின் சரியான நடத்தை பற்றிய பொதுவான புரிதலை உருவாக்கும் திறனை இல்லாமல் செய்தது.

இங்கு 'சரியான நடத்தை' பற்றிய விவாதம் ஐ.நா.வின் அதிகாரத்தின் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். கெடுபிடிப்போருக்குப் பிந்தைய ஐ.நா. தீர்மானங்களுக்குள் காணப்படும் தெளிவின்மை போன்ற நிச்சயமற்ற தன்மை முரண்பட்ட விளக்கங்களைத் தூண்டியது. இது இறுதியில் ஐ.நா சாசனத்தின் கூட்டுப் பாதுகாப்பு அமைப்பின் முக்கிய விதிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தியது. சர்வதேச சட்டபூர்வமான சூழலில் இத்தகைய புரிதல், விதிகள் அவற்றின் உறுதியை இழக்கின்றன, அல்லது வேறுவிதமாகக் கூறினால், அவை தெளிவற்றதாக இருக்கும் போது அவற்றின் இணக்கம் இழுக்கப்படும். பிரச்சினைக்குரிய வகையில் நாடுகள் தெளிவற்ற, எப்போதும் விரிவடைந்து வரும், நெறிமுறையான நிகழ்ச்சி நிரலை உருவாக்கின. அதை நிறைவேற்றும் திறன் ஐ.நாவிடம் இல்லை. இது ஐ.நா.வின் அதிகாரத்தின் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. கெடுபிடிப்போருக்குப் பிந்தைய சகாப்தத்தில் சரியான நடத்தை என்ன என்பதைப் பற்றிய தெளிவான புரிதலை உள்ளடக்கியதாக 'புதிய உலக ஒழுங்கு' தேவைப்பட்டது என்பதை பின்னோக்கிப் பார்க்கும் போது தெளிவாகத் தெரிகிறது, ஆனால் அவ்வாறு ஒன்றும் ஏற்படவில்லை. நாடுகளுக்குள் நடக்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, தன்னிச்சையான தலையீடுகளுக்கான அங்கீகாரத்தை அமெரிக்கா தனது பெரும்பலத்தைப் பயன்படுத்தி ஐ.நாவில் கோரி நின்றது. ஆனால் அத்தகைய தலையீடுகளின் சட்ட அடிப்படைகள் பெரும்பாலும் ஆதாரமற்றவை. இவ்வகையான தலையீடுகள் ஐ.நா அமைப்பின் அதிகாரத்தை சிதைக்க மட்டுமே பயன்பட்டன.

ருவாண்டா இனப்படுகொலையானது சர்வதேச உறவுகளில் இறையாண்மை - தலையீடு - அதிகாரம் என்ற இக்கட்டான கேள்வியை மீண்டும் கொண்டுவந்த வினையூக்கியாகச் செயற்பட்டது. இதை கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தின் பரந்த சூழலில் வைக்க வேண்டும். 1993-ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஐ.நா.விற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பல அரங்காடிகள் ஐ.நா 'பயனற்றுப் போகிறது, அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்கு இயங்குகிறது' என்பதை அறிந்திருந்தனர். ஆனால் எதையும் செய்யவியலாதவாறு ஐ.நா தனது தார்மீக அதிகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தியிருந்தது.

1993-ம் ஆண்டு அக்டோபர் 3-ம் தேதி சோமாலியத் தலைநகர் மொகடிசுவில் அமெரிக்க படைவீரர்கள் கொல்லப்பட்ட போது ஐ.நா. ஏற்கனவே அமைதி காக்கும் உன்னதமான விதிகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. இந்த நிகழ்வு ஐ.நா.வின் செயற்பாடானது அதன் அமைதி காக்கும் அர்ப்பணிப்பின் மீது கட்டமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை வலுப்படுத்தியது. இந்தப் பின்புலத்தில் ருவாண்டாவில் ஐ.நா.வின் செயலற்ற தன்மையால் இனப்படுகொலையைத் தடுக்க ஒரு தெளிவான சட்டப்பூர்வ கடமை இருந்தும் தன்

விதிகளை தவறாகப் புரிந்துகொண்டது. இந்த சட்டப்பூர்வ கடமையை நிறைவேற்றத் தவறியதால், ஐ.நா.வின் ஒழுங்குமுறை கட்டமைப்பிற்குள் முழுமையான சிதைவை உந்தித்தள்ளும்




அளவிற்கு பலவீனப்பட்டுவிட்டது. இதனால் சர்வதேச சட்டப்பூர்வ நடைமுறையை எளிதாக்குவதற்கு உதவுவதில் ஐ.நா. அதன் பங்கில் தோல்வியுற்றதால் அதன் சட்டபூர்வமான தன்மை இறுதியில் கேள்விக்குள்ளாகியுள்ளது.

இனப்படுகொலை சர்வதேச அங்கீகாரத்துடன் ஒரு சிறப்பு உறவைக் கொண்டுள்ளது, ஏனெனில் இது சட்ட மற்றும் தார்மீக கண்ணோட்டத்தில் 'குற்றங்களின் குற்றம்' என சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இனப்படுகொலை உண்மையில் சர்வதேச ஒழுங்கிற்கு எவ்வாறு அச்சுறுத்தலாக உள்ளது என்பதைப் பார்க்க இத்தகைய புரிதல் நமக்கு உதவுகிறது, மனிதாபிமான தலையீடு பற்றிய கதையாடல்கள் சில சமயங்களில் இனப்படுகொலை ஐ.நா.வின் அதிகாரத்தை அழிக்கிறது என்ற கருத்தை நியாயப்படுத்துகின்றன என்றாலும், இனப்படுகொலைக்கும் சர்வதேச சட்டபூர்வத்திற்கும் இடையிலான சிறப்பு உறவுதான் சர்வதேசத்தின் மீதான இனப்படுகொலையின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கான கதவுகளைத் திறக்கும் திறவுகோலாக செயற்படுகிறது.

ருவாண்டா இனப்படுகொலையின் பின்னணியில், சர்வதேச சமூகம் அதன் சட்டபூர்வ கடமையை நிறைவேற்றத் தவறியது, கொசோவோவின் சூழலில் ஐ.நா.வின் அதிகாரத்தை (படையைப் பயன்படுத்துவதைப் பொறுத்தவரை) நேட்டோ சவால் செய்யக்கூடிய அளவிற்கு ஐ.நா மற்றும் பாதுகாப்புச் சபையின் அதிகாரத்தை பலவீனமாக்கியது. சம்பந்தப்பட்ட அரங்காடிகள் ஐ.நாவை வெளிப்படையாக நிராகரிக்கவில்லை என்றாலும், சர்வதேச சமூகத்தில் எழுந்த ஒருமித்த ஆதரவின் நிலை அவ்வாறு செய்தது, ஏனெனில் ருவாண்டா இனப்படுகொலை முதலில் ஐ.நா மற்றும் பாதுகாப்புச் சபையின் உணரப்பட்ட அதிகாரத்தை அழித்துவிட்டது. இதற்குக் காரணம் குற்றத்தின் சர்வதேச சட்டபூர்வத் தொடர்புதான்.

இதை சர்வதேச உறவுகளின் பரந்த சூழலில் புரிந்துகொள்ள, ருவாண்டா இனப்படுகொலைக்குப் பின் ஏற்பட்ட நெருக்கடி கொசோவோவிலும் பின்னர் ஈராக்கிலும் பரவியது. எனவே, ருவாண்டா இனப்படுகொலையின் பின்னணியில் ஐ.நா.வின் அதிகாரத்தின் பலவீனமடைந்தமை எவ்வாறு பரந்த தாக்கங்களைக் கொண்டிருந்தது என்பதை நாம் காணலாம். இது தற்காலிகமான முறையில் ஐ.நா.வின் அதிகாரத்தை சவால் செய்ய நாடுகளுக்கு வழி வகுத்தது. பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை ஈராக்கில் 2003 அமெரிக்கத் தலைமையிலான தலையீட்டை எதிர்த்தன. மேலும் அமெரிக்காவே 2008-ஆம் ஆண்டு ஜோர்ஜியாவில் ரஷ்ய தலையீட்டை எதிர்த்த போது, தங்கள் எதிர்ப்பை நியாயப்படுத்தும் முயற்சியில் தோல்விகண்டன. வீட்டோ நாடுகள் அனைத்து மனித உரிமை மீறல்களையும் தடுக்க முடியும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை என்றாலும், இனப்படுகொலை என்பது தேசிய நலன்கள் ஆபத்தில் இருக்கும்போது மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மற்றொரு கொள்கை விருப்பமாக பார்க்க முடியாது என்பது தெளிவாகிறது. இனப்படுகொலை சர்வதேச சட்டத்துடனும் சர்வதேச ஒழுக்கத்துடனும் வைத்திருக்கும் உறவின் காரணமாக, சர்வதேச சமூகத்தில் இனப்படுகொலை நிகழும்போது, இந்த கருத்துக்களின் மதிப்பு சிதைந்துவிடும். அதன்படி, இனப்படுகொலை தடுப்பு என்பது - அரசுகள் சர்வதேச ஒழுங்கை மதிப்பதாக இருந்தால் - ஒரு நாட்டின் தேசிய நலனோடு தொடர்புடையது.

## தொடரும் குறிப்புகள்:

2005-ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஒருமனதாக 'காக்கும் கடப்பாடு' (Responsbiltiy to Protect - R2P) கொள்கையை அங்கீகரித்தது. இது அரசின் இறையாண்மை, பொறுப்புகள் மற்றும் உரிமைகளை உள்ளடக்கியது என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனச் சுத்திகரிப்பு ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுகளுக்கு இருப்பதால், இந்தப் பொறுப்பு தேசிய மற்றும் சர்வதேச அளவிலானது என்று வரையறுக்கப்பட்டது. எந்தவொரு காரணத்திற்காகவும், ஒரு அரசு இந்தப் பொறுப்பில் 'வெளிப்படையாகத் தோல்வியடைந்தால்', சர்வதேச சமூகம் இந்தப் பொறுப்பின் பற்றாக்குறையை நிறைவேற்ற அழைக்கப்படும். அதன்படி, காக்கும் கடப்பாடு என்பது சட்ட, தார்மீக, சரியான நடத்தை பற்றிய புதிய புரிதலை உருவாக்குவதற்கான சர்வதேச சமூகத்தின் முயற்சியை பிரதிபலிக்கிறது. இந்தப் பின்புலத்தில் முதலாவதாக, இனப்படுகொலை குற்றத்திற்கு காக்கும் கடப்பாட்டைப் பயன்படுத்துவதன் மூலம், இது இனப்படுகொலைத் தடுப்புப் பிரச்சினையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். இரண்டாவதாக, கொசோவோ நிகழ்வு முன்கொணர்ந்த நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதன் மூலம், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய சட்டப்பூர்வ நெருக்கடிக்கு அடித்தளமாக இருந்த இறையாண்மை-தலையீடு-அதிகார சங்கடத்தில் காக்கும் கடப்பாட்டின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்வது முக்கியம். காக்கும் கடப்பாடு இனப்படுகொலையைத் தடுத்தல் என்ற போர்வையில் எவ்வாறு தனது அரசியலை மேற்கொண்டது என்பதை ஆராய்வதும் இலங்கையில் அந்தக் காக்கும் கடப்பாட்டுக்கு என்ன நடந்தது என்ற வினாவை எழுப்புவதும் முக்கியமானது.



meenilankco@thaiveedu.com




தமிழ் இலக்கிய உரையாசிரியர்கள் மேலை இலக்கிய கோட்பாடுகளால் தாக்கம் பெறாத சுயம்புவான திறனாய்வாளர்களாக இருக்கின்றனர். ஒவ்வொருவரும் இலக்கண நூலை அணுகும் போதும், இலக்கிய பனுவல்களை அணுகும் போதும் அவர்களுக்கே உரித்தான பார்வையில் திறனாய்ந்திருக்கின்றனர். ஒரு நூலை விளக்கும்போது பதவுரை, தேவையான விளக்கக் குறிப்புகள், சில சொற்களுக்கும் தொடர்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் இலக்கண விளக்கங்கள், ஏனைய நூல்களிலிருந்து மேற்கோள்கள், பாட பேதங்கள், மற்றையோர் உரைகளில் இருந்து மாறுபடும்போது மறுப்புகள், உள்ளுறை, இறைச்சிக்கு உட்பொருள் கூறுதல், நோக்கு என்னும் கோட்பாட்டிற்கேற்ப ஒரு செய்யுளில் ஒவ்வொரு சொல்லும் செய்யும் பணி என்ன என்ற ஆய்வு, சமயங்கள், நுண்கலைகள் பற்றிய குறிப்புக்கள் ஆகியன. இவர்கள் தேர்ந்த திறனாய்வாளர்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லுவன. இவ்வுரையாசிரியர்கள் அரிய பல இலக்கியங்களைத் துய்த்து அவற்றின் சிறப்பையெல்லாம் வெளிப்படுத்தும் போது அன்னாரின் மதி நுட்பமும் கலையார்வமும் தெள்ளிதின் புலப்படும். அவ்வகையில் நோக்கினால் ஆங்கிலத்தில் சேக்ஸ்பியர் நாடகங்களுக்கு விளக்கக் குறிப்புகள் எழுதிய டாக்டர் ஜான்சன் போன்றோர்களுக்கு நிகரானவர்கள் உரையாசிரியர்கள் என பாராட்டுவார் மருதநாயகம் (ப. மருதநாயகம், நா. செல்வராசு (பதி.ஆ) 20-ம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள், ப.6).

மேலும், ஹொரேஸ், போப் போன்றவர்களும் தான் போற்றுகின்ற நூலைத் திறனாய்வு செய்து அதன் நிறைகளை வெளிக்கொணர்தலே திறனாய்வாளரின் கடமையென்றும் எதிர்மறைத் திறனாய்வால் எப்பயனும் இல்லை என்றும் கருதுபவர்கள். அவர்களின் பணி போன்றதே உரையாசிரியர்களின் திறனாய்வுப் பணியும் என்று சுட்டிக்காட்டுவார். திருவாய்மொழியை இயற்றிய நம்மாழ்வாரைத் தாயாகவும் அதற்கு உரைநயம் கண்ட இராமானுசரைத் செவிலித்தாயாகவும் போற்றுவது வைணவமரபு. இது, ஒரு நூலுக்கு அதன் ஆசிரியன் தாயென்றும் திறனாய்வாளனே செவிலி என்றும் கூறும் ஃபிரையின் கருத்தோடு ஒத்திலங்குகிறது (ப. மருதநாயகம், நா. செல்வராசு (பதி.ஆ.) 20-ம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள், ப.8), உரையாசிரியர்களின் பணி நூலைப் படிப்போரை இடைவெளிகளை நீக்கி அந்நூலோடு மிகவும் நெருக்கமாக உணர வைக்கின்றது. மூலநூலின் சிறப்பை ஆசிரியன் தன் மாணவனுக்கு வாக்குமூலங்களாக கையளித்துவிட முனைகிறான். அடுத்து, உரையாசிரியன் பணியானது தம் அறிவுத்திறத்தையும் தம் நோக்கத்தையும் வெளிப்படுத்திக் கொள்ளும்படி அமைகிறது. வைணவ பக்தி இலக்கியங்களுக்கு உரையெழுதியவர்களிடம் இத்தன்மையை நாம் காண முடிகிறது (தி.சு. நடராசன், திறனாய்வுக்கலை, ப.23).

பொதுவாக வண்ணம் என்பது எப்போதும் ஒரே மாதிரியானதாக இருப்பது அல்ல. அது வளர்நிலை தன்மை கொண்டது.

- படைப்பின் பண்புகள்
- விளக்கம் கூறு முயல்கின்றவரின் நோக்கம்
- பயிற்சி,
- அவரின் மொழிவளம்
- விளக்கம்

யாருக்காக எனும் பார்வை முதலியவை காரணமாக விளக்கங்கள் மாறக்கூடும். ஆனால் குறிப்பிட்ட எந்த விளக்கமும் ஏற்புடைய ஒன்றாகப் பலராலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த விளக்கம் உண்மையானதாகக் கருதப்படக்கூடும். தமிழ் இலக்கியங்களுக்குரிய உரைகள் மேற்கூறிய பண்புகளைப் பெற்றிருக்கின்றன என்று விளக்கமளிக்கிறார் தி.சு. நடராசன் (தி.சு. நடராசன், திறனாய்வுக்கலை, ப.24).

## உரைமரபு தோற்றம்:

தமிழில் 'உரைமரபு' என்பது தொன்று தொட்டு வருவது. சிலப்பதிகாரத்திற்கு எழுதப்பட்ட அரும்பதவுரையே முதல் உரை நூலாக அறியப்படுகிறது. பாடல்களின் சொற்களுக்கு சிறிய அளவில் பதவுரைகளையும், குறிப்புரைகளையும் தருகிறது. பாட்டுக்கு உரை என்ற வகையில் முதலில் தோன்றிய உரை இறையனார் களவியல் உரை என்று (பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்) அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியர் காலத்திற்கு முன்னமே பாடல்களுக்கு உரை எழுதும் மரபு இருந்ததாக யூகிக்க இடம் இருக்கிறது. அவை காலத்தால் அழிந்துபட்டிருக்க வாய்ப்பிருக்கிறது. தொல்காப்பிய நூற்பா, உரை என்பது ஒரு இலக்கிய வகை என்று அறிமுகப்படுத்துகிறது.

***பாட்டிடை வைத்தக் குறிப்பினானும்***
***பாவின்று எழுந்த கிளவியானும்***
***பொருள் மரபு இல்லா பொய்மொழியானும்***
***பொருளொடு புணர்ந்த நகை மொழியானும்***
***உரைவகை நடையே மொழி*** - 1429

நூற்பாவில் வரும் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்ற தொடர் நூலிற்கான உரை எனச் சொல்ல வருகிறது. 'பல சொல் தொடர்ந்து பொருள் காட்டுவனவற்றுள் ஓசை தழீஇயவற்றைப் பாட்டென்றார், ஓசையின்றிச் செய்யுட்தன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது, அவ்வகையுமன்றி வரும் உரைத்திறன் ஈண்டு உரையெனப்பட்டது' (தொல்காப்பியம் - மூலமும் கருத்துரையும் உரை விளக்கம், தமிழண்ணல்,ப.491) என்கிறார் இளம்பூரணர். சிலப்பதிகாரம் உரையிடையிட்டச் செய்யுள் என அறியப்படுகிறது. இதையொத்த 'பாட்டிடை வைத்தக் குறிப்பு' தொல்காப்பியர் காலத்திற்கு முன்னமே பாடலுக்கு உரைகுறிப்பு எழுதிய வழக்கம் இருந்திருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

பாக்கள் அல்லாது தோன்றும் சொல்வகை. இது உலக வழக்கில் நிகழும் உரையாடல் என்பது இளம்பூரணர் கருத்து. பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருள் எழுதுவன போல்வன என்பது பேராசிரியர் கருத்து (தொல்காப்பியம் - மூலமும் கருத்துரையும் உரை விளக்கம், தமிழண்ணல்,ப.492). தொல்காப்பியர் தமது இறுதி நூற்பாவில் நூலின் உத்திகளாக 32ஐ குறிக்கின்றார். அவை உரை எழுதுபவர் கைக் கொள்ள வேண்டிய முறையை வற்புறுத்துவதாகவும் இருக்கிறது.

**ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்**
**நுதலியது அறிதல், அதிகார வகையே**
**தொகுத்துக்கூறல், வகுத்து மெய்ந்நிறுத்தல்.**

என்ற நெடிய நூற்பாவில் உரைத்தும் என்றல், உரைத்தாம் என்றல், மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாதனை முட்டின்று முடித்தல், ஒருதலை துணிதல், இனைதல்லது இதுவென மொழிதல், தன்குறி வழக்கம் மிகவெடுத்துரைத்தல், ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என உத்திகளைக் கைக்கொண்டும் இன்னபிற புதிய உத்திகளை ஏற்படுத்திக்கொண்டும் மூலநூலின் சிறப்பையும் உரையாசிரியரின் உரைத்திறனை வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்பாகவும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்று புலவர் கூறிதாகத் தொல்காப்பியர் வரிசைப்படுத்தியிருக்கிறார். எனவே தொல்காப்பியர் காலத்திலேயே உரையாசிரியருக்குரிய பொறுப்பு ஏற்புறுத்தப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.உரையின் பொது இலக்கணம் பற்றி நன்னூல் பதினான்கு கூறுகளைக் கூறுகிறது.

*பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்*
*தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்*
*விரிவு அதிகாரம் துணிவு பயனொடு*
*ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே* - நன்: 21

உரையாசிரியன், முறையாக வழிமுறைப்படி விளக்கித் திறனாய வேண்டும் என்று வற்புறுத்துகிறது. அப்படிப்பட்ட திறனாய்வாளன் நுண்மான் நுழைபுலத்தோடு திறனாயும் தன்மை உள்ளவனாக இருக்கவேண்டும் என்பதை மாறனலங்காரம்,

*'... அஞ்சிறைப் பறவையின் அணைந்துறந்தழுவியும்*
*வெஞ்சிறைப் படுபுனன் ஆமைபோல் நோக்கியும்*
*அகன்றன னாமெனின் ஆமைபோன் றுன்னியும்*
*புனிற்றாவென அவன் புலந்தனின் முன்னியும்...'*

என்று கூறுகிறது. பறவைபோல அணைத்துத் தழுவியும் மீன் போல் நோக்கியும், விட்டு நீங்கிய காலத்தும் ஆமைபோன்று உளத்தால் நினைத்தும் ஈன்றணிமைப் போதினில் ஆ போல் அவனிருக்கும் புலத்துச் சென்றும் ஆய்வது என்கிறது (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.348). நூலை எடுத்துச் சொல்லும்போதும் நூலுக்கு உரை எழுதும்போதும் இந்த விரிந்த பார்வை உரையாசிரியனுள் இயங்க வேண்டும் என்கிறது. மாறனலங்காரத்திற்கு உரை கண்ட காரிரத்தின கவிராயரின் உரையில் கருத்தாழத்தோடு கூடிய நடையின் சிறப்பையும் மேற்கண்ட விளக்கத்திலிருந்து அறியலாம். பொ.ஆ.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த லான் ஜைனஸ் என்கிற கிரேக்க அறிஞர் கவிதையியலில் மிக உயர்ந்த நடை எது? என்ற கேள்விக்கு ஹோமரின் கவிதையிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். உள்ளார்ந்த ஒரு ஆற்றலினால் உண்டாகும் உயர்ந்த எண்ணங்களே உயர்ந்த நடையாக உண்டாகிறது (வை. சச்சிதானந்தன் மேலை இலக்கியத் திறனாய்வு வரலாறு) என்பதற்கு ஒப்ப நக்கீரர், பேராசிரியர், பரிமேலழகர் முதலியவரிடம் உரை அமைந்திருக்கிறது எனலாம். இரு உதாரணம்.

திங்கள் என்பதை பிறைத்திங்கள் மதித்திங்கள் என இரண்டாகப் பகுத்து 'பிறைத்திங்கள் முன்னொளியாய்ப் பின்னிருளாம் மதித்திங்கள் பின்னொளியாய் முன்னிருளாம்' (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.200) என்றும் (இறையனார் அகப்பொருள் 32), கருத்தரிப்பதில் உள்ள உடல்கூறுபற்றி, 'பூப்புப் புறப்பட்ட நான்று நின்ற கரு வயிற்றில் அழியும் இரண்டாம் நாளில் நின்ற கரு வயிற்றில் சாம் மூன்றாம் நாள் நிற்கும் கரு குறுவாழ்க்கைத்தாம் வாழினும் திருவின்றாம் அதனாற் கூடப்படாது' (இறையனார் அகப்பொருள் 45) என்றும் நக்கீரர் எழுதிச் செல்வதில் உரைச் சிறப்பை உணரலாம்.

## உரையாசிரியர்களின் திறனாய்வு:

பழந்தமிழ் இலக்கியப்பரப்பில் இலக்கிய பனுவல்களுக்கும், இலக்கணப் பனுவல்களுக்கும் உரையாசிரியர்கள் உரை எழுதி வந்திருக்கின்றனர். அவ்வுரையாசிரியர்களிடம் வெளிப்பட்ட திறனாய்வு முறைமைகளைப் புலப்படுத்தும் நெறி, 'புலப்பாட்டு நெறி' என்று குறிப்பிடலாம் என்கிறார், தமிழண்ணல். மூலநூலை விளக்க உரையாசிரியர்கள் கையாண்ட உரை மரபுகளைப் புலப்படுத்தும் நெறியாகவும், அவற்றை விளக்க உரையாசிரியர்கள் கையாண்ட உத்திகளைப் புலப்பாட்டு நெறியாகவும் கொள்ளலாம் என்கிறார் (தமிழண்ணல், உரைவிளக்கு, ப.17).

பலதுறை அறிவு, பண்பாட்டு மரபு, மேற்கோள், பாட வேறுபாடு, பிற உரைகளை மறுத்தல், தருக்கம், பிறமொழி அறிவு, சொற்பொருள், வரலாற்று செய்திகள், வினா-விடை பாங்கு, மாறுபாடு நீக்கல், வகுத்துக்கூறுதல் என புலப்படுத்தும் நெறிகள் உரையாசிரியர்களிடம் திறனாய்வு மரபாக வளர்ந்து செழிந்திருக்கிறது. கருத்தை விளங்குதல், இயைபு கூறுதல், உவமை நயம் காணுதல், அடைமொழி தொடர் நயங்கள் கூறுதல், சான்று கூறுதல், பண்பாட்டின் அடையாளம் உரைத்தல் எனப் புலப்பாட்டு நெறிகளின் வழி உரையாசிரியர்கள் திறனாய்ந்திருக்கின்றனர். தொல்காப்பியர் காலத்தில் இயல்பாக இருந்த கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளும் முறையை பிற்காலத்தில் ஒரு இலக்கிய வித்தையாக வைத்து செய்யுள் படைத்தனர். பழைய பனுவல்களில் உறைந்திருக்கும் சமூக, அரசியல் சிக்கல்களை அறிய பின் அமைப்பிய

லாளர்கள் சிதைவாக்கம் என்ற முறைமையைப் பயன்படுத்தி அறிந்தனர். சிதைத்து உருவாக்கிக் கொண்ட பழைய பனுவல்களில் இது ஒரு உத்தியாகவே பயன்பட்டு வந்திருக்கிறது. இப்பனுவல்களை கொண்டு கூட்டி உரையாசிரியர்கள் பொருள் உரைந்தனர். இன்றைய நிலையிலிருந்து பார்க்க ஒரு தலைகீழ்போக்காக வளர்ந்து வந்திருக்கிறது எனலாம்.

***பாணர் தாமரை மலையவும் புலவர்***
***பூநுதல் யானையோடு புனைதேர் பண்ணவும்***
***அறனோமற்றிது விறன்மாண் குடுமி***
***இன்னா வாகப் பிறர்மண் கொண்டு***
***இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே*** - புற. 12

இப்பாடலுக்கு புறநானூற்றுப் பழைய உரையாசிரியர் 'குடுமி பிறர்மண் இன்னாவாகக் கொண்டு மலையவும் பண்ணவும் நின் ஆர்வலர் முகந்து இனிய செய்பவை இது நினக்கு அறனோ ? சொல்வாயாக, எனக் கூட்டி வினை முடிவு செய்க' என்பதாக உரை விளக்கம் தருகிறார். பாடல் முழுவதற்குமாகக் கொண்டு கூட்டி வினை முடிவு செய்யுங்கால் பாடலை, உரைநடைப் போக்கிற்கேற்ப வாக்கியமாக வடிவப்படுத்திக் காட்டும் பாங்கு புலனாகிறது (தமிழண்ணல், உரைவிளக்கு, ப.27).

இலக்கண உரைகள் இலக்கணமாதல் ஒலிக் குறிப்பை பொருளாழ்ந்த இடத்திற்கு இளம்பூரணரின் உரை கொண்டு செல்வதை குற்றியலிகரம், குற்றியலுகரம் விளக்கத்தில் காணலாம். 'சந்தனக்கோல்' குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.114). அதுபோல இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற்பாலன என்று விளக்கத்தை காட்சி ரூபத்தில் காட்டுகிறார். இவ்விதமான மாதிரி உதாரணங்கள் தெய்வச்சிலையார் வரை தொடர்ந்ததைக் காணமுடிகிறது.

உரையாசிரியர்களின் இலக்கண அறிவு பிற்காலத்தில் இலக்கணமாகவே மாறுகின்றன. ஆகுபெயர் குறித்து இளம்பூரணர் உரை எழுதும்போது 'ஆகுபெயர் என்ற பொருண்மை என்னையெனின் ஒன்றன் பெயர் ஒன்றற்காய் நிற்றல் என்றவாறு' (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.109) என்கிறார்.

***முதலிற் கூறுந் சினையறி கிளவியும்***
***இணையிற் கூறும் முதலறி கிளவியும்***
***பிறந்த வழிக்கூறலும், பண்பு கொள் பெயரும்***
***இயன்றது மொழிதலும் இரு பெய ரொட்டும்***
***வினை முதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ***
***அனைமரபினவே ஆகுபெயர்க்கிளவி***
- தொல். 598

என்கிறார் தொல்காப்பியர். ஆகுபெயர் எங்கெங்கு வரும் என்கிறாரே தவிர ஆகுபெயர் என்பது என்ன என்று பொருள் விளக்கவில்லை. அதனை இளம்பூரணர் ஓரளவு வரையறுத்தார். நன்னூலார் திட்டமாகவே நூற்பாவாக மாற்றினார்.

***ஒன்றன் பெயரன் அதற்கினை பிறிதை***
***தொன்முறை உரைப்பன ஆகு பெயரே***
- நன். பெயர்: 33

இது இளம்பூரணரின் இலக்கண கொடை எனலாம். சிலவிடங்களில் உரிப்பொருள் மயங்கும், நிலம் மயங்காது! என்று கூற வந்த தொல்காப்பியர் அதனைத் 'திணைமயக்குறுதல்' என்கிறார்.

***திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே***
***நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென மொழிப***
***புலன் நன்கு உணர்ந்த புலமையோரே*** - 958

உரையாசிரியர் 'திணை மயக்கம்' என செறிவுடைய தொடராக அதை ஆள்கின்றனர் (தமிழண்ணல், உரை விளக்கு, ப.136).

## மொழிச் சிந்தனை:

சசூர் போன்றோரின் மொழிச்சிந்தனை இன்று பரவலாகப் பேசப்படுகிறது. அமைப்பியல் சிந்தனை, மொழி அமைப்பை புதிதாக விளக்க முனைந்தது. இச்சிந்தனை உரையாசிரியர்களிடம் இயல்பாக இருந்து வந்துள்ளது. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்குத் தெய்வச் சிலையார் உரை எழுதும் போது "எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறித்து நிற்கும் என்றவாறு, எனவே, இச்சொல் இப்பொருள் உணர்த்தும் என்னும் உரிமை இல என்றவாறாம். என்னை உரிமை இலவாகியவாறு எனின், உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடை தோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்ட துணையல்லது இவ்வெழுத்தினான் இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனவே பொருள் பற்றி வரும் பெயரெல்லாம் இடுகுறி என்பது பெறப்பட்டது (இரா.  இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.169) (நூ.151) என்று இடுகுறியால் பெயர்ச்சொற்கள் உண்டான விதத்தை நுட்பமாக விளக்குகிறார். உடலிலிருந்து ஒலி வெளிப்படும் ஒலிப்புமுறைகொண்டு ஒலியன்களை விளக்கவும் உரையாசிரியர்கள் முயற்சித்துள்ளனர்.

***அ இ உம் முதல் தன்வறிற் சுட்டே*** - நன். 66

என்கிற நூற்பாவிற்கு இராமாநுசக்கவிராயர் (காண்டிகை உரை) 'அகரம் தூரப்பொருளையும், இகரம் சமீபப் பொருளையும், உகரம் எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையும் சுட்டு மெனக் காண்க. உகரம் அவ்வாறு சுற்றி நிற்பதை, 'ஊழையும் உட்பக்கம் காண்பர்' என்பதற்குப் பின்பக்கமாய் முதுகு காட்டக் காண்பர் எனப் பொருள் கூறுதலாற் காண்பர்' (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.309) என விளக்கம் எழுதுதல் இவர்தம் பகுப்பாற்றல் நுணுக்கத்தை காட்டுகிறது எனலாம்.

## இயைபு காணுதல்:

உரையாசிரியர்கள் நூற்பா வைப்பு முறைகளையும், அதிகார வைப்பு முறைகளையும், தொடர் வைப்பு முறைகளையும் வைத்ததற்கான பொருத்தமான காரணங்களைக் கண்டு சொல்லியுள்ளனர். இது மேலை நாட்டினரின்அகரவரிசை படுத்தும் நெறிபோல அமைந்திருக்கிறது.

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப**
- தொல். மெய்ப் 1197

மெய்பாடுகள் எட்டனையும் இவ்விதம் வைத்ததற்குப் பேராசிரியர் தக்கக் காரணங்களைத் தேடிக் காண்கிறார் 'மற்று நகையை முன் வைத்ததென்னையெனின் பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருட்கும்' இவை என்னும் இயைபில்லன வல்ல என்றதற்கு, விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்தான் என்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான். இளிவரல் அதன்பின் வைத்தான். அழுகையும் இளிவரலோடு இயைபுமையின. தானிளிவந்து பிரிதோர் பொருளை விளக்குமாதலின் இளிவரலின் பின் வியப்பு வைத்தான். வியப்பு பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதன்பின் வைத்தான். அச்சத்தின் மறுதலையாகிய வீரத்தை அதன்பின் வைத்தான். அவ்வீரத்தின் பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன்பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலையாகலானும் எல்லாவற்றினும் ஈண்டு ஓதுதற்குச் சிறந்ததாகலானும் முதற்கண் ஓதிய நகைக்கு இயைபுடைத்தாகலானும் உவகையை அவ்வீற்றுக் கண் வைத்தான் என்பது. 'இவ்வெட்டனுள் முதனின்ற நான்கும் முற்கூறுதற்கும் இறுதி நின்ற நான்கும் பிற்கூறுதற்கும் காரணம் வருகின்ற சூத்திரங்களானும் பெரிதும்' (தமிழண்ணல், உரை விளக்கு, ப.40) படிப்பவர் மனம் கொள்ளுமாறு உரையமைக்கிறார், பேராசிரியர். இது இன்றைய அமைப்பியல் சிந்தனைக்கு நெருக்கமாக இருக்கிறது எனலாம்.

பரிமேலழகரின் உரைச்சிந்தனையில் வைப்புமுறை சிறப்புடன் விளக்கப்படுகிறது. அறன் வலியுறுத்தல் அதிகாரத்திற்குப் பின் இல்வாழ்க்கை அதிகாரத்தை வைத்ததற்கு 'அஃதாவது இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு, இன்னிலை அறஞ்செய்தற்குரிய இருவகை நிலையுள் முதலாதலின் இஃது அறன்வலியுறுத்தலின் பின் வைக்கப்பட்டது'(பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.26). ஈகை அதிகாரத்தை ஒப்புரவறிதலுக்குப் பின் வைத்ததற்கு, 'அஃதாவது வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல் இது மறுமை நோக்கியதாகலின் இன்மை நோக்கிய ஒப்புரவறிதலின் பின் வைக்கப்பட்டது' (பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.92). என ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பரிமேலழகர் தரும் விளக்கம் அதிகார வைப்பு முறைக்கானக் காரணங்கள் உலகியல் இயல்பையும் மனவியல் இயல்பையும் பண்பாட்டு இயல்பையும், மரபின் இயல்பையும் உள்வாங்கியதாக இருக்கின்றன.

சிக்கலுக்கு விடை தேடுதல் நெடுநல்வாடை அகமா? புறமா? என்பதற்கு நச்சினார்க் கினியர் விடை தேட முயன்றுள்ளமை திறனாய்வின் தகைமைக்குச் சான்றாக விளங்குகிறது. 'வாகைதானே பாலையது புறனே' நூற்பாவிற்கு அகப்புற திணை ஒப்புமைகளையும் பருவகால ஒப்புமைகளை கூறியும் சிக்கலுக்கு வருகிறார். 'தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந் தலைவிக்கு ஒரு பொழுது ஓரூழிபோல நெடிதாகிய வாடையாய்ப் பாலையாகிய உரிப்பொருளுணர்த்திற்று. அகத்தொடுங்கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் போகம் வேண்டிப் பொதுச் சொற்பொறானாய் அப்போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின் அவற்கு நல்லதாகிய வாடையாயிற்று. எனவே காமத்திடத்து வெற்றியெய்தலின் வாகைத்திணையாயிற்று. இப்பாட்டுச் சுட்டி ஒருவர்ப் பெயர் சொன்னாமையின் 'வேம்புதலையாத்த நோன்காழ் எஃகம்' என அடையாளப் பூக் கூறினமையின் அகமாகாதாயிற்று' (தமிழண்ணல், உரை விளக்கு, ப.49) என விரிந்துரைக்கிறார். நச்சினார்க்கினியர் நெடுநல்வாடை அகமா, புறமா என்ற சிக்கலைத் தீர்க்க தன்னுடைய நோக்கில் ஆய்வை கொண்டு சென்றிருக்கிறார் என்பது விளங்கும்.

## மறுப்புரைத்தல்:

அறம், பொருள், இன்பம், வீடு அகத்திணையுள் அடங்குமா? புறத்தினுள் அடங்குமா? என்று ஆராய்கிற இளம்பூரணர், களவு என்பது திருட்டோடு தொடர்புடைய ஒன்றா என்று ஆராய்கிற இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் நக்கீ-ரர், தொல்காப்பியர் கூறும் மணமுறைகள் உலகியல் வழக்கு அல்ல, புலவர்களின் இலக்கிய நாடக வழக்கு என்று நக்கீரரின் வாதத்திற்கு மாற்றுகாண அவை தமிழர்களின் உலக வழக்கு என்று ஆராய்கிற இடங்கள் எல்லாம் உரையாசிரியர்களின் திறனாய்வின் சிறப்பை நிலை நிறுத்துகின்றன. தொல்காப்பியரிடம் இறைச்சி, உள்ளுறை, உவமை என அடிப்படையான அணியிலக்கண கோட்பாடு இருந்தும் தனியாக அணி இலக்கணம் வகுக்காதது ஏன் என்று உரையாசிரியர் காலத்தில் கேள்வி எழுந்திருக்கலாம். அதற்கு விடை கூறும் முகத்தான் பேராசிரியர் விரிவாக ஆராய்ந்து மறுப்புரைத் திருக்கிறார்.

***மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ***
***யாத்த சீரே யாப்பு எனாஅ***
***மரபே...*** - தொ. 1259

என்ற நூற்பாவில் 'தளை' என்பதை ஓர் உறுப்பாகக் கொள்வாரை பேராசிரியர் மறுப்பார் (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.140). எழுத்தொலியின் கால அளவு, பாடலுக்கேற்ப அமையும் எழுத்துக்களின் இயல்பு அவ்வெழுத்தின் அசைவகை, அசைவகைகளை இணைத்து உருவாகும் சீர்கள் எல்லாம் யாப்பின் உறுப்புகள். சீர்களைத் தளைத்துக் கட்டி உருவாக்கும் பாடல்களே யாப்பு. இங்கு தளை என்பது உறுப்பாக வராமல் இணைக்கிற ஒரு செயலாக வருகிறது என்பதை அறியலாம். இளம்பூரணர் தம் காலத்தில் நிலவிய கருத்தைக்கொண்டு தொல்காப்பியர் கருத்திற்கு மாற்றாக கைக்கிளைக்கு 'சிறுமை உறவு' என்றும் பெருந்திணைக்கு 'அறவழிப்படாத காம வயப்பட்ட நிலை' என்றும் பொருள் கொள்கிறார். 1200 வருடங்களுக்குப் பின்வந்த வ.சு.ப. மாணிக்கனார் தொல்காப்பியர் வகுத்தளித்த நெறியைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். கைக்கிளைக்கு 'ஒரு பக்கம் கிளைத்த காதல் குறுங்கரு' என்றும் பெருந்திணைக்கு 'ஆற்றாது வெளிப்படுத்தும் காதல் மிகு திறம்' என்றும் விளக்கம் அளித்து உண்மைப் பொருளைக்கண்டு சொன்னதை இங்கு சுட்டிக்காட்டுதல் நலம். உரையாசிரியர் வழி திறனாய்வு சிறப்புற வளர்ந்ததை இதன் வழி அறியலாம்.

***அறம் பொருள் இன்பம் உயிர் அச்சம் நான்கின்***
***திறம் தெரிந்து தேறப்படும்*** - 501

இக் குறட்பாவில் 'உயிர் அச்சம்' என்ற சொல்லை வடநூல் மரபை ஒட்டி விளக்கம் சொல்பவர் 'உயிர் எச்சம்' என பாடம் கொண்டு தவறான பொருள் தருவதை பரிமேலழகர் மறுக்கிறார். ஓர் அமைச்சன் திடுக்கென அரசன் அழைப்பதாக வேகமாகக் கூறுகின்ற பொழுது தாம் ஏதோ தவறு செய்து விட்டோம். அதனால் அரசன் கொல்லும் பொருட்டு அழைப்பதாகக் கருதிக்கொள்வது உயிர் அச்சம் என்று விளக்கிவிட்டு 'வடநூல் பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது பிறரெல்லாம் இதனை 'உயிரெச்சம் எனப் பாடம்

திரிந்து தமக்குத் தோன்றிய வானோ உரைத்தார்' (பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.219) என பரிமேலழகர் மறுத்துரைக்கிறார்.

## பகுத்தறிந்து நிறுவுதல்:

உரையாசிரியர்கள் சிக்கல்களைக் காரணகாரியங்களோடு நிறுவி வந்துள்ளனர். காப்பியத்தில் தலைமை மாந்தனுக்கே பெரிய முக்கியத்துவம் உண்டு என்பதை 'தன்னேரில்லா தலைவன்' என்று ஆணை முதன்மைப்படுத்திப் பேசுகிறது தண்டியலங்காரம். சிலப்பதிகாரத்தில் முதலில் கண்ணகி (மங்கல வாழ்த்துப் பாடல்) அறிமுகப்படுத்தப்படுகிறாள். பிறகு கோவலன் அறிமுகப்படுத்தப் படுகிறான். இது காப்பிய இலக்கண நூலுக்கு மாற்றாக இருக்கிறது. இதனை விளக்க வந்த அடியார்க்கு நல்லார் "கண்ணகியை முற்கூறினார். பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்" என்று சுருக்கமாகக் கூறி நிறுவுகிறார். அத்தோடு ஆரிய மரபு ஆணை முதன்மைப்படுத்தி வந்துள்ளதையும், திராவிட மரபு பெண்ணை முதன்மைப்படுத்தி (தாய்த் தெய்வ வழிபாடு) வந்துள்ளமையையும் நினைத்துப் பார்க்கலாம்.ஒரு அகப்பாடல் ஏழுதிணைகளுள் எத்திணையை சேர்ந்தது என காணுவது குறித்து இளம்பூரணர் 'யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின் முதற்பொருளால் திணையாகும் என்பதூஉம் முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம் உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம்' (தமிழண்ணல், உரைவிளக்கு, ப.75) (தொல். 949) என்று பொருத்தமாக விளக்குகிறார்.

## சான்று காட்டி மறுத்தல்:

தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திணையையும் பூக்களைக் கொண்டு அடையாளப்படுத்துகிறார். இந்தச் சொல் குறிப்பீடு சரிதானா என்று இளம்பூரணர் சான்று காட்டி ஆராய்ந்திருக்கிறார். 'மாயோன் மேய காடுறை உலகமும்' (தொல். 951) என்கிற தொல்காப்பிய நூற்பாவின் இறுதியில் 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' என்றும், பாலைத்திணைக்கு நிலமும் பூவும் குறிப்படாமல் 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனில்' என்றும் குறிப்பிடுகிறார். இதனை இளம்பூரணர், 'முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக்குறியோ எனின் ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும், என்னை காரணம் எனின்,

***'நெல்லொடு, நாழிகொண்ட நறுவீமுல்லை, அரும் பவிழ் அலரி தூஉய்'***

- முல்லைப்பாட்டு-8-10

என்றமையால் காடுறை உலகிற்கு முல்லைப் பூ சிறந்ததாகலானும்,

**'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு, பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே'** (குறு. 3)

என்றவழி மைவரை உலகிற்கு குறிஞ்சிப்பூ சிறந்ததாகலானும்,

***'இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின், தாழ்சினை உறங்கும் தண்துறை ஊர்'***

- அகம். 286

என்ற வழி தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தமையானும்,

***'பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்***
***இனமீன் இருங்கழி ஓதம் மல்கு தொறும்***
***கயமூழ்கு மகளிர் கண்ணின் மாறும்'*** - குறு. 9

என்ற வழிப் பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமையானும் இந்நிலங்களை இவ்வாறு குறிப்பிட்டார் என்று கொள்ளப்படும். 'பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் இணையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டார்'. (தமிழண்ணல், உரைவிளக்கு, ப.99) என்று இளம்பூரணர், சான்றோர் செய்யுட்களை மேற்கோள் காட்டி விளக்கிச் செல்லும் முறை தேர்ந்த திறனாய்வு முறைமை பாற்பட்டதாக விளங்குகிறது.

***சொல்லுக சொல்லில் பயன்உடைய சொல்லற்க***
***சொல்லில் பயன் இலாச் சொல்.*** - 200

எனும் குறளில் 'சொல்' என்ற சொல் திரும்ப, திரும்ப வருகிறது. இதற்கு அமைதிகாண விழைந்த பரிமேலழகர், 'சொல்லில்' என்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட் பின்வருநிலை என்னும் அணி நோக்கி வந்தது. 'வைகலும் வைகல் வரக்கண்டும்' (நாலடி. 39) என்பது போல. இதனால் சொல்லப்படுவதைப் படாதனவும் நியமிக்கப்பட்ட (பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.85) என்று சான்று காட்டி பரிமேலழகர் விளக்குகிறார்.

## தருக்க நெறிமுறை:

புலவர்கள் தங்கள் பாடல்களில் கையாளப்படும் உவமைகள் தருக்கநெறிக்குட்பட்டு இருப்பதை உரையாசிரியர்கள் கண்டு எடுத்துரைத்துள்ளனர். சுவை என்பது சுவைப்போனும் சுவைக்கப் படுபொருளும் இணையும் போது ஏற்படுவது. இதை விளக்க வந்த பேராசிரியர், 'வேம்பென்னும் பொருளும் நாவென்னும் பொறியும் தலைப்பெய்த வழியல்லது கைப்புச் சுவை பிறவாததுபோல, அப்பொருள் கண்ட வழியல்லது நகையும் அச்சமும் தோன்றா' என்றார் (மெய்ப். 1). தொடை பற்றி விளக்க வந்த பேராசிரியர் (செய். 406) 'தொடை என்பன பூந்தொடை போலச் செய்யுட்குப் பொலிவு செய்ய வேண்டும்' என்றார். மேலும் 'செந்தொடையும் செய்யுட் பொலிவு செய்யுங்களால் கொன்றையும் கடம்பம்போல நின்றவாறே நின்று தொடைப்பொலிவு செய்யுமென்பதாம்' என விளக்கினார். எவ்விதமான தொடை நலனும் இன்றி வருவதே செந்தொடையாம். கொன்றையும் கடம்பும் சரம்சரமாய் மாலை போலப் பூக்கும். பிற பூக்களை எடுத்துக் கோத்துச் சரம் ஆக்குதல் வேண்டும். அதுவே பூத்தொடை. இயல்பாகத் தொடை எதுவுமின்றிக் கருத்தைத் தொடுப்பதைக் கொன்றை, கடம்பு சரமாய்ப் பூப்பதுபோல் அமைவதெனக் காட்டிய உவமை மிகவும் செவ்வியதாகும் (தமிழண்ணல், உரைவிளக்கு, ப.153).

'ஐந்திணை களவு' என்ற சொல்லாட்சிக்கும் 'யாயும் நாயும் யாராகியரே' என்ற குறுந்தொகை பாடலுக்கும் இறையனார் அகப் பொருள் உரையாசிரியர் தருக்கநெறி கொண்டு விளக்கியுள்ளமையை இங்கு நினைத்துப் பார்க்கலாம்.

## சொற்பொருள் விளக்கம் காணுதல்:

உரையாசிரியர்கள் சொற்களுக்கு செறிந்த பொருளை விளக்கி வரைகின்றனர். இடத்திற்கு தக்கபடியும் சூழலுக்குத் தக்கபடி

யும், மரபிற்கு உகந்தபடியும், மாற்றங்களுக்கு ஏற்றபடியும் உளவியல் சார்ந்தும் ஆழமான பொருளை தங்கள் திறன்களால் கண்டு சொல்லியிருக்கின்றனர். இளம்பூரணர் 'மடம்', 'பேதமை' என்ற சொற்களுக்கு, 'மடம் என்பது பொருண்மை அறியாது திரியக்கோடல், பேதமை என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல்' (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.113) என்கிற பண்பாட்டின் தளத்தில் வைத்து எடுத்துக்கூறுகிறார்.

*கல்வி தறுகண் இசைமை கொடையெனச்*
*சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே*

என்கிற மெய்ப்பாட்டியல் நூற்பாவை பேராசிரியர், விளக்கும் போது சொற்களின் உள்ளார்ந்த பொருளை விளக்குதலை அறியலாம். 'கல்வி என்பது, தவமுதலாகிய விச்சை, தறுகண் என்பது அஞ்சத்தக்கன கண்டவிடத்து அஞ்சாமை; இசைமை என்பது இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை கொடை என்பது, உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்தல்' இவ்விதம் விளக்கி கொண்டு வந்து 'வீரத்தைப் பெருமிதம் என்றெண்ணினான் என்னை? எல்லாரோடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம் எனப்படும் என்றற்கென்பது' (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, பக்.141-142) என பொருள் விளக்கம் தருகிறார்.

## உளவியல் பார்வை;

உரையாசிரியர்கள் பல விடங்களில் உளவியல் தன்மையோடு அணுகி நுட்பத்தை வெளிகொணர்ந்திருக்கின்றனர். 'செங்கடுமொழி' (பொ.112) என்பதை 'கொடிய கடுமொழியேயன்றி மனத்தினால் இனியளாகிக் கூறும் கடுமொழி' (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.113) என்று இளம்பூரணர் பகர்கின்றார். பல்வேறு மன உணர்வுகளைக் குறிக்கும் தொல்காப்பிய நூற்பா இது.

*'உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்*
*தன்மை அடக்கம் வரைதல் அன்பு எனாவுக்'*

இம்மெய்பாட்டியல் சூத்திரத்தையொட்டி மானுட உளவியலை உதாரணங்களோடு பேராசிரியர் காட்ட விளைகின்றார். மனிதர்கள் தங்கள் விருப்பதை நிறைவேற்ற புறத்தில் தங்களை எப்படி வெளிப்படுத்திக் கொள்கின்றனர் என்பதை மெய்ப்பாடாகவே உதாரணம் காட்டுகின்றார். 'பார்ப்பாராயிற் குந்தி, மிதித்து, குறுநடை கொண்டு, வந்து, தோன்றலும் அரசராயின், எடுத்த கழுத்தொடும், அடுத்த மார்பொடும், நடந்து, சேறலும், இடையராயிற், கோற்கையும், கொடுமடி உடையும், விரித்த வீளையும், வெண்பல்லுமாகித், தோன்றலும்' 'அடக்கம் என்பது ...பணிந்த மொழியும், தணிந்த நடையும் தானை மடக்கலும், வாய் புதைத்தலும் முதலாயின' (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, பக்.144-145) என மானுட உளவியலை புறந் தோற்றத்தின் வழி விளக்குகின்றார். உரையாசிரியர்கள் சொற்களை விளக்கும்போதே அதனை படிப்பவர்களுக்கு காட்சிரூபமாகக்காட்ட முனைகின்றனர். இளம்பூரணர், கலத்தல், மயக்கம் இரு சொற்களை 'கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போறல், மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாதல் போறல்' (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.113) என்று உணர்வுகளை உருவாகக் காட்டி விளக்குகிறார். வட நூல் சார்பு மனநிலையோடு உரையெழுதியவர்களிடம் சமூக வழக்கத்திற்குள் வந்து விட்ட புராண கதைகளை எடுத்துக் காட்டி நூற்பாக்களை விளக்கும் போக்கு இருந்துள்ளது. இப்பண்பை நச்சினார்க்கினியரிடம் மிகுதியாகக் காணமுடிகிறது. 'கொள்ளார் தே ஏங்குறித்த கொற்றம்' (புறம். 1013) நூற்பாவிற்கு 'இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக்



கொடுத்த துறையும் அது (இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, ப.113) என்று உதாரணம் காட்டுகிறார், நச்சினார்க்கினியர். இதன் பொருள் பகைவர் தேயத்தைக் கைக்கொள்ள உறுதிபூண்ட, கொற்றம் வெல்லுமுன்பே தம்மதென முடிவு செய்தல்.

பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த நச்சினார்க்கினியர் பதினாறு நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியர் காலத்து போர்முறைக்கு சாளுக்கிய அரண்மனைச் சூழலை முன் வைத்து விளக்கமளிப்பதையும் இங்கு ஒரு சேர இணைத்துப் பார்க்கலாம்.

*முழு முதல் அரணம் முற்றலுக் கோடலும்*
*அணை நெறி மரபிற்று ஆகும் என்ப* - 1011

எனும் நூற்பாவை அவ்விதம் விளக்கியிருக்கிறார். இலக்கிய உரையாசிரியர்களின் உரைத்திறன்கள் உரையாசிரியர்களின் ஆளுமை இலக்கியப் பனுவல்களை அணுகியதில் சிறப்பாகவே வெளிப்பட்டிருக்கிறது. இலக்கண உரையாசிரியர்கள் இலக்கியத்திறனை வெளிப்படுத்தியிருப்பது போலவே இலக்கியப் பனுவல்களை மட்டும் ஆராய்ந்தவர்கள் நிறையபேர்

இருக்கின்றனர். ஒவ்வொரு உரையாசிரியர்களுக்கும் அவர்களின் இலக்கிய ஈடுபாடு, உய்த்துணரும் நுட்பம், பரந்துபட்ட அறிவு, பட்டறிவு கொண்டு துலக்கி இருக்கின்றனர்.

## இலக்கிய நயம் காணுதல்:

இலக்கியத்தை நேசிக்கவும், தாம் உணர்ந்தவற்றைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் உள்ளமுமே திறனாய்விற்கான முதற்படி எனலாம். இலக்கியத்தின் நுட்பங்களை நுண்மான் நுழைபுலத்தோடு கண்டு சொல்கிற திறம் பெற்றவர்கள் திறனாய்வாளர்களாக அறியப்படுகிறார்கள். அவ்வகையில் உரையாசிரியர்கள் இலக்கியத்தை அழகியல் உணர்வோடு காணும் இரசனைமிக்க திறனாய்வாளர்களாகத் திகழ்கின்றனர்.

***அரும்பெறல் பாவாய்; ஆருயிர் அமிர்தே***
***பெருங்குடி வாணிகன் பெருமட மகனே!***
***மலையிடைப் பிறவா மணியே என்கோ!***
***அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!***
***யாழிடைப் பிறவா இசையே என் கோ!***
- மனையறம் படுத்த காதை

கண்ணகியைக் கோவலன் பாராட்டும் சிலப்பதிகார அடிகளை அடியார்க்கு நல்லார் திட்பநுட்பத்தோடு வெளிப்படுத்துகிறார். ‘இவற்றாற் சொல்லியது என்னையெனின், காட்சியின் உயிர் மயக்குறுதலிற் கொல்லியிற்பாவாய் என்றும், அவ்வாறு அழியும் உயிரை இமைப்பில் தருதலின் ஆருயிர் மருந்தே என்றுங்கூறி மலையிடைப் பிறக்குமணி குழையாமையின் அதிற்பிறவா மணியே என்பேனோ! அலையிடைப் பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவு இன்மையின் அதனிற் பிறவாத அமுதே என்பேனோ! யாழ்கட்கு (கண்ணுக்கு) இன்னாதலின் (இனிதாய் அழகியதாய் இல்லாததால்) அதனிடைப் பிறவாத இசையே என்பேனோவென’ (எஸ். சிவக்குமார், கொங்குதேர் வாழ்க்கை (தொ. நூ), ப.396). உயர்வான பொருள்களோடு ஒப்பிடமுடியாத உயர்ந்த தன்மை பெற்றவள் என்பதை அடியார்க்கு நல்லார் கவிதைக்கு புதிய பொருண்மைக்காட்டி எடுத்துக்கூறுகிறார் எனலாம். பரிமேலழகர் தமக்கு முன் எழுந்த குறள் உரைகளையெல்லாம் படித்து தள்ளுவன தள்ளி கொள்ளுவன கொண்டு தனது தனித்துவமான இலக்கியப் பார்வையால் திருக்குறளுக்கு ஒளியேற்றியவர் எனக்கருதலாம். ஒவ்வொரு குறளையும் வள்ளுவன் உள்ளத்திற்குப் பின்நின்று புதிய பரிமாணத்தைக் காட்டுகிறார்.

***மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்***
***உயிர்நீப்பர் மானம் வரின்***

குறளில் ‘மானம்’ என்ற பதத்திற்கு ‘எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம்’ (பரிமேலழகர், உரை திருக்குறள், ப.410) என்று குறளை துலக்கி மேலும் ஒளிவீசச் செய்கிறார்.

***தொடி நோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி***
***அஃது ஆண்டு அவள் செய்தது***

எனும் குறளில், ‘அவரைப் பிரிய, யான் ஈண்டு இருப்பின் இவை நில்லா எனத் தன் தொடிநோக்கி, அதற்கு ஏதுவாக இவை மெலியும் எனத் தன் மென்தோள்களையும் நோக்கி, பின் இவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல் வேண்டும் எனத் தன் அடியையும் நோக்கி, அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன் போக்காய் இருந்தது’ (பரிமேலழகர், உரை திருக்குறள், ப.539) பரிமேலழகரின் திறனாய்வு உரையே ஒரு கவித்துவ நிலைக்கு உயர்வதை இங்கு உணரலாம். உலகியல் அறிவு உரையாசிரியர்கள் இயற்கையின் பேரறிவை உள்வாங்கி பனுவல்களை விளக்கக்கூடியவர்கள் என்பதற்கு நெடுகக்காண முடிகிறது.

***‘கள்ளக் குறளாய் மாவலியின் கருத்தை அறிந்து வஞ்சித்து***
***பொள்ளக் கரத்த போதகத்தின் புலுதம் தீர்த்த புனிதன் இடம்***
***பள்ளச் செறுவில் கயல் உகள பழனக் கழனி அதனுள்ளே***
***புள்ளுபிள்ளைக்கு இரை தேடும் புள்ளம் பூதங்குடி***
***கிடந்தானே’***

என்ற பெரிய திருமொழி பாடலுக்கு பராசர பட்டர் அவர்கள் புலவன் ஆலவாயுடையான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வது போல உரை எழுதுகிறார்.

புலவன் ஆலவாயுடையான்: இப்பாசுரத்தில் ‘பள்ளச் செறுவில் கயல் உள’ என்று சொன்ன போதே அந்த வயலில் மீன்கள் அளவற்றுக் கிடந்தமை புலப்படுகிறது. இப்படி இருக்க கடைசி வரியில் புள்ளு பிள்ளைக்கு இரை தேடும் என்று எங்ஙனே சொல்லலாம்? மீன் அருமைப்பட்டிருந்தாலன்றோ (குறைவாக இருந்தாலன்றோ) இரையைத்தேட வேண்டியிருக்கும்? கொள்வார் தேட்டமாம்படி மீன்கள் குறைவற்றுக்கிடக்க - தேடுவதாகச் சொல்வது பொருந்தாதன்றோ?

பட்டர் பதில் : பிள்ளாய்... நீ கற்றவனாயினும் சொற்போக்கு அறிந்தில்லை போலும், ‘பிள்ளைக்கு இரை தேடும்’ என்றுள்ளது காண். அங்குள்ள மண் மிதிமண் ஆகையாலே (நிலவளத்தால்) மீன்கள் தூணும், துலாமுமாய்த் தடித்திருக்கும்; அவை பறவைக்குஞ்சுகளின் வாய்க்குக் கொள்ளாது. ஆகையால் அவற்றின் வாய்க்குப் பிடிக்கும்படியால் உரிய சிறிய மீன்களைத் தேடிப்பிடிக்க வேண்டுமன்றோ? (எஸ்.சிவக்குமார், கொங்குதேர் வாழ்க்கை (தொ.நூ), ப.399).

ஒரு பறவையியலாளரின் அனுபவ அறிவுத் திறத்தோடு பட்டரின் உரை விளங்குகிறது எனலாம்.

## கருத்துநிலை:

திவ்ய பிரபந்த இலக்கியத்தின் நாலாயிரம் பாசுரத்திற்கும் உரை எழுதியவர் பெரியவாச்சான் பிள்ளை. அவருடைய காலத்தில் வடநூல் மரபை போற்றியவர்களும் சரி. வைதீக பற்றாளர்களும் சரி தமிழ் மொழியின் சிறப்பைக் குறைத்தே மதிப்பிட்டனர். தொன்மை வாய்ந்த இலக்கண இலக்கியங்கள் சமஸ்கிருத மரபிலிருந்து வந்தவை என வாதிட்டனர். இது ஒரு ஆயிரமாண்டு கருத்து மோதலாக நீடித்து வருகிற ஒன்று. இந்தக் கருத்துநிலை அரசியல் ஊடாட்டச் சூழலை பெரியவாச்சான் பிள்ளையும் தன் உரைவழி எதிர்கொள்கிறார்.

***குடதிசை முடியை வைத்து குணதிசை பாடம் நீட்டி***
***வடதிசைப் பின்புகாட்டி தென்திசை இலங்கை நோக்கிக்***
***கடல்நிறைக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமாகண்டு***
***உடல் எனக்கு உருகுமாறு என் செய்கேன் உலகத்தீரே!***

என்ற திருமங்கையாழ்வார் பாடலுக்கு, 'வடக்குத் திக்கு ஆர்ய பூமியாகையாலே அங்குள்ளார் ஸ்ம்ஸ்கிருத முரணராய், ஆழ்வார்கள் ஈரச் சொல்லும் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கைத் திருத்தும் காரணம் கருதி தன் பின்னழகெல் லாம் காட்டியிருந்தார்' (எஸ்.சிவக்குமார், கொங்குதேர் வாழ்க்கை (தொ.நூ), ப.401) அதாவது வடவர்களுக்கு திரு மால் முகம் காட்ட விரும்பாமல் தமிழர்களையே பார்த்தார் என்ற பிள்ளை அவர்களின் விளக்கத்தில் அவரின் கருத்து நிலைப்பாட்டையும் அறியக்கூடலாம்.

## மரபறிவு:

உரையாசிரியர்களுக்கும், திறனாய்வாளர்க்கும் பரந்துபட்ட படிப்பறிவும் பட்டறிவும் தேவைப்படுகிறது. ஒரு பனுவலின் சிறப்பை அறிந்து வெளிப்படுத்த இவை உதவுகின்றன.

***நனையமை கள்ளின் தேறலொடு மாந்தி***
***நீர்ப்படு பருந்தின் இருஞ்சிறகன்ன***
***நிலம்தின் சிதாஅர் களைந்த பின்றை***
***நூலாக் கலிங்கம் வாலாரைக் கொளீஇ***

எனவரும் பதிற்றுப்பத்து 2-ம் பத்தில் வரும் அடிகளில் 'நனை யமை கள்ளின் தேறலொடு, நூலா கலிங்கம்' என்ற தொடர்க ளுக்கு ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் புத்துரை காண்கிறார். 'நனையமை கள்ளின் தேறலாவது, தேனை மூங் கிலிடத்துப் பெய்து அதனுள் இஞ்சிப்பூ முதலியவற்றை இட் டுப் பக்குவம் செய்து தெளித்துக் கொள்ளும் கள் தெளிவு, நூலா நூல் என்பது பட்டு கையால் நூற்கப்படாமை பற்றிய தால் நூலா நூல் எனப்பட்டது' (எஸ்.சிவக்குமார், கொங்குதேர் வாழ்க்கை (தொ.நூ), ப.51) என்று விளக்குவதில் உரையாசிரி யரின் மரபறிவுத்திறனை அறியலாம். இவ்வுரையாசிரியர், 'அணங்கெழில் அரிவையர்ப் பிணிக்கும்' என்ற பதிற்றுப்பத்து 7-ம் பத்து பகுதியில் வரும் பாடல் வரிக்கு 'கண்டார் மனத்தை வேட்கை விளைவித்து வருந்தும் இயல்பு பற்றிய எழிலை, அணங்கெழில் எனச்சிறப்பித்தார்' (எஸ்.சிவக்குமார், கொங்கு தேர் வாழ்க்கை (தொ.நூ), ப.54) என எழுதுவதன்வழி அவரின் மரபறிவு (திருக்குறள்) உரைக்கு ஆழத்தைத் தருகிறது என லாம். தமிழர் மனங்களில் உரைந்திருக்கும் தொன்மமாகவும் அணங்கெழிலைப் பார்க்கலாம்.

## உளவியல் திறனாய்வு:

வைணவ உரையாசிரியர்களில் பிரதிவாதி பயங்கரம் அண் ணங்கராச்சாரியார் மிக முக்கியமானவராகத் திகழ்கிறார். உரை எழுதும்போது தன்னை காதலியாக அர்ப்பணித்துக் கொள்கிறார். ஒருவகையில் இது ஆண்டாளின் உள்ளக்கொ திப்பு போல பொங்குகிறது. நாயக, நாயகிபாவம் என்ற எல் லைக்கோடு அழிந்து நாயகியின் உள்ளக்குமுறலாகவே உரைவழி விளக்கம் காண்கிறார் என்று அறிய ஏதுக்கள் நிரம்ப இருக்கிறது எனலாம்.

***தகவிலை தகவிலையே நீ கண்ணா!***
***தடமுலை புணர்தொறும் புணர்ச்சிக்கு ஆராச்***
***சுகவெள்ளம் விசும்பி இறந்து, அறிவை மூழ்க்கச்***
***சூழ்ந்து, அது கனவு என நீங்கி...***

என்ற நம்மாழ்வாரின் பாடல் வரியில் வரும் 'அது கனவு என நீங்கி' என்ற தொடருக்கு 'அது தான் கனா கண்டது போலாய்க் கழிந்து, பெருக்காறு வற்றி, அடி சுடுமாப் போலே யாயிற்று காண்' (எஸ்.சிவக்குமார், கொங்குதேர் வாழ்க்கை (தொ.நூ), பக்.154-155) என்றும். நம்மாழ்வாரின், 'தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து' எனும் வரிக்கு, 'கைங்கர்யருசி உடையீர், அடிமை செய்ய வாருங்கள் என்று அழைக்கின்றது போலும் திருமலை அருவி' (எஸ்.சிவக்குமார், கொங்குதேர் வாழ்க்கை (தொ.நூ), ப.151) என்றும்.

திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில் வரும் 'வாழ்ந்தே போம் நீரே' என்ற தொடருக்கு 'உம்முடைய உடம்பு ஆசைப்பட்டவர்களுக்காக ஏற்பட்டது என்று நினைத் திருந்தோம். அப்படி அன்றாகில் உம் உடம்பை நீரே கண்டு கொண்டு நீரே தொட்டுக்கொண்டு, நீரே மோந்துகொண்டு, நீரே கட்டிக்கொண்டு, நீரே வாழ்ந்துபோம்' (எஸ்.சிவக்குமார், கொங்குதேர் வாழ்க்கை (தொ.நூ), ப.172) என்றும். 'நென்னல் போய் வரும்' என்ற தொடருக்கு 'நேற்றைக்கு ஒரு நாள் கழிந் தது, இற்றை நாள் வந்தது, இதுவுங் கழிந்து நாளை நாள் வரக்கடவது, அதுவும் கழிந்து அடுத்தநாள் வரக்கடவது என் றிப்படியே பல்லைக்கடித்துக் கொண்டு பிரிவு நாட்களை எண்ணி இருக்க வேண்டாதபடி' (எஸ்.சிவக்குமார், கொங்கு தேர் வாழ்க்கை (தொ.நூ), ப.174) என்றும், உரையாசிரியர் அண்ணங்கராச்சாரியார் உரையெழுதும் பொழுது உளக் கொதி நிலையிலேயே எழுதுகிறார். அவரின் உரையில் உள வியல் அம்சம் மிக்கு இருப்பதைச் சுட்டலாம்.

இவ்வாறாக உரையாசிரியர்கள், பழந்தமிழ் இலக்கியத்தின் வழி தனித்துவமான திறனாய்வு மரபுகளை வளர்த்துப் போற்றி வந்துள்ளனர் எனலாம். உரையாசிரியர்களின் திற னாய்வு முறைகளை தொகுத்து ஆராய்கிறபோது விளக்க முறை திறனாய்வு என்ற வகையில் அடக்கலாம். கவிதையை விளக்குவதற்கு ஒவ்வொரு உரையாசிரியர்களும் தனித்துவ மான அணுகுமுறையைக் கையாண்டு திறனாய்ந்துள்ளமை தெளிவாகிறது. நயவுரை, சொற்பொருள் விளக்கம், தருக்கமு றையில் உண்மை காணுதல், ஒப்பிட்டுக் காட்டுதல் பாராட்டு முறையை மறுத்து புதிய கருத்தை நிறுவுதல், உளவியல் நோக்கில் விளக்குதல், பொருத்தம் காணுதல் என மூல இலக்கணத்தை இலக்கியத்தைப் பலவிதமான பார்வைக ளின் வழி கவிதையை மக்களுக்கு புரியவைக்கிற திற னாய்வை செய்து வந்திருக்கின்றனர்.

தமிழ் இலக்கிய உரை வல்லுநர்களாலேயே மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்களாக பிரித்து தொகுத்திருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. தரமான சங்கக் கவிதைகளை தொகுத்து அகம் புறம் என பகுத்தளித்திருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. உரையாசிரியர்களிடம் மேலோங்கியிருந்த திறனாய்வு மனப் பான்மை இதற்கு உதவியிருக்கக்கூடும். பத்துபாட்டு எட்டுத் தொகை பகுப்புக்கூட வகைமை யடிப்படையில் பிரிக்கப்பட்டி ருப்பதை உணரலாம். இதன் தொடர்ச்சியாகத்தான் பக்தி இலக்கியங்களும் தொகுத்து வகுக்கப்பட்டிருக்கின்றன. உரை எழுதப்பட்டிருக்கின்றன.



venugopal@thaiveedu.com




**சென்ற இதழில் –**

- அசோகச் சக்கரவர்த்தியின் (பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு) கிர்னார் (Girnar) கல்வெட்டு, தம்பபர்ணி (தாமரபரணி) என்று அழைக்கப்பட்ட ஈழத்தில் பௌத்தம் பரப்பும் முயற்சி முன்னெடுக்கப்பட்டிருப்பதை உறுதி செய்கிறது. இதனையே வரலாறு, மகிந்தனும் சங்கமித்தையும் வெள்ளரசுக் கிளையுடன் இலங்கை வந்து பௌத்த மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறுகிறது.
- எனவே, பொ.ஆ.மு.3-ம் நூற்றாண்டளவில் பௌத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.
- வெள்ளரசு மரத்தின் கிளை ஒன்று, அசோகச் சக்கரவர்த்தியின் மக்களான (?) மகிந்தனாலும் சங்கமித்தையாலும் கொண்டுவரப்பட்டு நடப்பட்டதாக, அறியப்படுகிறது, அசோகர் காலம், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு.
- 1958-ம் ஆண்டுக் கலவரத்துக்கு முன், அனுராதபுரியில் தமிழ் மக்கள் வாழ்ந்திருந்த வாழ்க்கை பற்றிய சிறு குறிப்பு.

**இந்த இதழில்...**

சங்க காலம் என்று அறியப்படும் காலம், பொ.ஆ.மு3 முதல் 1-ம் நூற்றாண்டு வரை என்று கூறப்பட்டு வந்த காலம் ஒன்றிருந்தது. இன்று, அகழாய்வின் காரணமாகவும் சங்க இலக்கிய நுண் ஆய்வுகளின் காரணமாகவும் சங்க காலம் மேலும் பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளது. ஏறக்குறைய பொ.ஆ.மு.5-ம் நூற்றாண்டுக்கு முன்னமே ஈழம் தமிழ் நாட்டிலிருந்து பிரிந்திருக்கிறது. சங்கப் பாடல்களில் குறிப்பிடப்பட்டிருந்த மலைகள், ஆறுகள் ஈழத்துடன் தொடர்புடையவையாக அறியப்படுகிறது. அசோகரது கிர்னார் பெரும்பாறைக் கல்வெட்டில் 'தம்பபர்ணி'(ஈழம்) சுதந்திர நாடாகவே அறியப்பட்டிருக்கிறது. தென் இந்தியாவில் ஆதிச்சநல்லூர் அருகே ஓடும் 'தாமரபரணி' ஆறு தெற்கு நோக்கி ஓடி ஈழம் வரை சென்று ஊடுருவியிருக்கிறது. ஒரு நாடு, அண்டை நாட்டில் ஓடும் ஆற்றால் பெயர் பெற்றது என்பதை விடத் தன் நாட்டில் ஓடும் ஆற்றால் பெயர் பெற்றது என்பது கூடுதல் பொருத்தமாக அமையும். ஒரு காலத்தில் தாமரபரணி ஈழத்தில் ஓடியிருக்கவேண்டும்.

சங்க இலக்கியங்களில் 'ஈழம்' தனியாகப் பேசப்படுகிறது. ஈழத்துப் பூதன்தேவனர் என்னும் புலவர் ஒருவர் ஏழு சங்கப் பாடல்கள் பாடியிருக்கிறார். சங்கப் புலவர்கள் பலர் ஊர்ப் பெயர்களால் அறியப்பட்டது போல பூதன்தேவனார் என்னும் புலவரும் தனது சொந்த நாடான ஈழ நாட்டின் பெயரால் அறியப்பட்டிருக்கிறார். இவர், அகநானூற்றில் 88, 231, 307 ஆகிய மூன்று பாடல்களையும் குறுந்தொகையில் 189, 343, 360 ஆகிய மூன்று பாடல்களையும் நற்றிணையில் 366 ம் பாடலையும் ஆக மொத்தம் 7 பாடல்கள் பாடியிருக்கிறார். அத்தனையும் மிகச் சிறப்பான அகத்திணைப்பாடல்கள். ஈழத்துப் புலவர் ஒருவர் சங்கப் புலவர் வரிசையில் இடம் பெற்றது மட்டுமல்லாமல் அவை தரம்மிக்க பாடல்களாகவும் அமையும் சிறப்புப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இது, சங்க காலத்தில், ஈழத்தில் தமிழ் வளர்ச்சி பெற்ற நிலையில் இருந்திருக்கிறது, ஈழம் தமிழ் அறிஞர் பலரை உருவாக்கியிருக்கிறது. ஈழத்துப் புலவர்கள் தமிழ்நாட்டினால் உருவாக்கப்பட்டவர்களாக இருக்கலாம் என்பதைக் குறித்துக் கொள்ளுவோம்.

## பௌத்தமதம் எவ்வாறு, எங்கிருந்து, எப்படி, எப்போது ஈழத்திற்கு வந்தது?

இந்தியாவின் பெரும்பகுதி பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டளவில்



மௌரிய மன்னனான அசோகனின் ஆட்சியின் கீழ் இருந்தது.



பௌத்தம், ஏறக்குறைய வட இந்தியாவில் தோன்றி வட நாட்டு அரசர்களால் வளர்க்கப்பட்டு, குறிப்பாக மௌரிய மன்னனான அசோகச் சக்கரவர்த்தியால் வளர்க்கப்பட்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் மட்டுமன்றி இந்தியாவுக்கு வெளியேயும் எடுத்துச் செல்லப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் அசோகனின் குகைக் கல்வெட்டுக்கள், பாறைக் கல்வெட்டுக்கள், தூண் கல்வெட்டுக்கள் இதனை உறுதிசெய்கின்றன. அசோகனின் தலைநகரான பாடலிபுரத்தில் மூன்றாம் பௌத்த மாநாடு நடந்தது என்பதை தீபவம்சம், மகாவம்சம் ஆகிய இலங்கை நூல்கள் உறுதி செய்கின்றன. பௌத்த மதத்தைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டவர் அசோகனின் மகனான மகிந்தன் என்று அறியப்படுகிறது. இலங்கை மன்னனாகிய அரிட்டர் என்பவர் தானும் பௌத்தனாகியதுடன் இலங்கையில் பௌத்த சமயம் பரவுவதற்கு பெரும் துணையாக இருந்தார் என்று மகாவம்சம் கூறுகிறது. மகிந்தனும் அரிட்டரும் தமிழ் நாட்டிற்கு வந்து பௌத்த சமயத்தைப் பரப்பியிருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்து.

தமிழகத்தில் மதுரையில் காணப்படும் சில பாறைக் குகைகளில் காணப்படும் கல்வெட்டுக்களின் எழுத்துகள் அசோகன் காலத்துக் கல்வெட்டுக்களை ஒத்த பிராமி எழுத்துக்களை ஒத்திருக்கின்றன என்பது ஆய்வாளர் கருத்து. அத்துடன் இக் குகைகளில் ஒன்று பாண்டி நாட்டில் அரிட்டாப்பட்டி என்னும் கிராமத்திற்கு அருகில் உள்ளது. இது அரிட்டர் என்னும் துறவியை நினைவூட்டுகிறது. ஒரு வேளை, அரிட்டரின் சீடர்கள் இங்கு வாழ்ந்திருக்கலாம் என்றும் அதனாலேயே இந்த இடம் அரிட்டாப்பட்டி என்ற அழைக்கப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர்.

பௌத்தம் உலகெங்கும் பரவக் காரணம் பௌத்த பிக்குகளைக் கொண்ட சங்கமாகும். இவர்கள் 'தேரர்' என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் மக்கள் மத்தியில் சென்று பௌத்த சமயப் போதனைகளைப் பரப்பினர். தமிழ் நாட்டிற்கு வந்த பௌத்த பிக்குகள் மக்களோடு நெருங்கிப் பழகியதுடம் அவர்கள் மொழியையும் கற்றுக் கொண்டனர்.

பௌத்த மடாலயங்களை அமைத்துப் பொது மக்களுக்கு மருத்துவ வசதிகளை இலவசமாகச் செய்தனர், கல்வி கற்பித்தனர். இங்கு புத்த ஜாதகக் கதைகள், புத்த சரித்திரம் முதலியன கற்பிக்கப்பட்டன. புத்தரின் போதனைகள், புத்தரின் சீடர்களால் 'திரிபிடகம்' என்னும் பெயரில் நூலாக எழுதி வழங்கப்பட்டது. அத்துடன் அறச்சாலைகள் அமைத்து குருடர், செவிடர், முதலிய அங்கவீனர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவு கொடுத்து உதவினர். பௌத்த தேரர்களின் அரிய செயல்களால் ஈர்க்கப்பட்ட மக்கள் பௌத்த சமயத்தில் இணைந்து கொண்டனர். தேரர்கள். மக்கள் மொழியைக் கற்று அவர்கள் மொழியில் இலக்கியம் செய்தார்கள். இதனால் மொழி வளம் பெற்றது, பௌத்தமும் வளர்ந்தது. பௌத்தம் தமிழ் நாட்டில் சிறப்புற வாழ்ந்திருக்கிறது என்பதற்கு அக்காலத்தில் எழுந்த பௌத்த இலக்கியங்களே சான்று. ஆனால், காலப்போக்கில், சமணம், ஆசீவகம் முதலிய பிற சமயங்களுடன் போட்டி போட வேண்டியநிலை ஏற்பட்டது. இம் மதங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதால் காலக்கிரமத்தில் தத்தம் கொள்கைகளை மாற்றிக் கொண்டும் சைவம், வைணவம் ஆகிய மதங்களுடன் தம்மை இணைத்துக் கொண்டும் அவற்றின் தனித்தன்மையை இழந்தன.

- பௌத்தமதம் சங்க காலத்திலேயே அறியப்பட்டிருந்தமையைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மீது மாங்குடி மருதனார் என்னும் புலவரால் பாடப்பட்ட

இலக்கியம் மதுரைக்காஞ்சி. சங்க காலத்தில் தமிழ் நாட்டில் நிலவிய சமூக வாழ்க்கை முறைகளை இவ்விலக்கியம் சிறப்புறக் காட்டுகிறது. மக்கள் அக் காலத்தில் பின்பற்றிய பல்வேறு சமயங்கள் பற்றியும் மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அக் காலத்தில் நிலவிய சமயங்களைக் குறிப்பிடும் பொழுது பௌத்தப் பள்ளிகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். பௌத்த சமயப் பெண்கள் மிக்க மகிழ்ச்சியோடு குழந்தைகளுடன் பௌத்த ஆலயத்திற்குச் சென்று வழிபட்டனர் என்பதை,

*'காமர் கவனிய பேரிளம் பெண்டிர்*
*பூவினம் கையினர் தொழுவனர் பழிச்சிச்*
*சிறந்து புறங்காக்குங் கடவுட் பள்ளியும்'*

மதுரைக்காஞ்சி 465- 467

இதன் மூலம், சங்க காலத்தில் பௌத்த வழிபாட்டு இடங்கள் இருந்திருக்கின்றன என்பதும், பௌத்தம் அக்கால மக்களின் இயல்பு வாழ்வில் ஒன்றி இணைந்திருந்தது என்பதும் தெளிவுறுகிறது. வைதிக சமயம் அதனது யாகத்தில் உயிர்க்கொலை செய்தலை விட்டு பௌத்தர்களின் அடிப்படைக் கொள்கையான கொல்லாமையை ஏற்றுக் கொண்டது, புத்துயிர் பெற்று பக்தி மார்க்கத்தை மேற்கொண்டது. இதனால் வைதீக மதங்கள் செல்வாக்குப் பெற பௌத்தம், சமணம், ஆசீவகம் ஆகிய மதங்கள் பல்லவ மன்னர் காலத்தில் (பொ.ஆ.பி 6-ம் நூற்றாண்டளவில்) செல்வாக்கு இழந்தன. ஆயினும் ராஜராஜன் காலம் வரை பௌத்தம் அரச ஆதரவைப் பெற்றிருந்தது மறுக்கமுடியாதது. ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் பௌத்த சமயம் பற்றிய சில குறிப்புக்களைத் தந்திருக்கிறது.

- இந்திரவிழவூர் எடுத்த காதையில் புகார் நகரின் சிறப்பும் இந்திரவிழாவின் சிறப்பும் பேசப்படுகிறது. அறவோரின் பள்ளிகளிலும் அறச்சாலைகளிலும் மதிற் புறத்தேயுள்ள புண்ணிய இடங்களிலும் அறவோர் உரைகள் மேலோங்கி இருந்தமை குறிப்பிடப்பட்டிருக்கிறது. பள்ளி என்பது சமணப் பள்ளிகளையும் குறிப்பதாயினும் இங்கு பௌத்தப் பள்ளியையே குறிக்கிறது. பௌத்த சமயத்தின் செல்வாக்கு சிலப்பதிகார காலத்தில் நன்கு வேரூன்றி இருந்ததாக அறியப்பட்டிருக்கிறது.

*'அறவோர் பள்ளியும் அறன்ஓம்படையும்*
*புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்*
*திறவோர் உரைக்குஞ் செயல்சிறந்து ஒருபால்*

இந்திரவிழவூர் எடுத்தகாதை 5:179-181

- நாடுகாண் காதையில், கோவலன், கண்ணகியுடனும் கவுந்தி அடிகளுடனும் மதுரை நோக்கிப் பயணமானபோது வழியில் பல கோட்டங்களைக் (கோயில்) காண்கின்றனர். அவற்றுள் இந்திர விகாரங்களும் அடங்கும். அவர்கள், இந்திரவிகாரங்கள் ஏழினை வழிபட்டுச் செல்வதாக் கூறப்படுகிறது. இந்திரவிகாரங்களின் சிறப்பைப் புலவர்,

*'பணை ஐந்து ஓங்கிய பாசிலைப்போதி*
*அணிதிகழ் நீழல் அறவோன் திருமொழி*
*அந்தரசாரிகள் அறைந்தனர் சாற்றும்*
*இந்திரவிகாரம் ஏழுடன் போகி'*

நாடுகாண் காதை: 11-14

என்று போதி மரத்தின் கீழ் அமர்ந்து அறவோன் அறவுரைகள் வழங்கும் செய்தி கூறப்படுகிறது.

- மணிமேகலை. இது ஒரு பௌத்த காப்பியம். இதனைப் பாடிய சீத்தலைச் சாத்தனார் ஒரு பௌத்தர். குண்டலகேசியும் ஒரு பௌத்த காப்பியம். இக் காப்பியங்கள் இரண்டுமே மதம் பரப்பும் நோக்கில் பாடப்பட்ட காப்பியங்களாகும். இக் காப்பியங்கள் அவை எழுந்த காலத்தில் பௌத்தம் தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றி இருந்தமைக்கான சான்றுகளாகும்.

பௌத்தமதம், ஹீனயானம், மகாயானம் என இரண்டாகப் பிளவுபட்டு இரு பிரிவுகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதால் பௌத்தமதம் ஈடாட்டம் கண்டது. தமிழில் எழுதப்பட்ட பௌத்த நூல்கள் என்று இரண்டு நூல்களைக் குறிப்பிடலாம். ஒன்று மனோன்மணியம், இரண்டாவது வீரசோழியம். சமீபத்தில் கிடைத்த சில தகவல்கள் முக்கியமானவை. அவற்றுள் 'வல்லிபுரம் புத்தர் சிலை' பற்றிய தகவல் முக்கியமானது.

யாழ்ப்பாணம் வல்லிபுரக் கோவில் (கிருஷ்ணன் கோவில்) வாசலில் ஒரு பௌத்த சிலை இருந்திருக்கிறது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் இச்சிலையை, பிரித்தானிய கவர்ணர் ஒருவர் தாய்லாந்து மன்னருக்குப் பரிசாகக் கொடுத்தார். அந்தச் சிலை பாங்கொக் நகரில் ஒரு முக்கியமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிலை வல்லிபுரம் கோவில் சிலை தான் என்று உறுதி செய்து அது பற்றி, சிலையின் நுணுக்கங்கள் அறிந்தவர்கள், பௌத்த வரலாறு தெரிந்தவர்கள், பௌத்த ஆர்வலர்கள் என்று பலர் ஆய்வுகள் மேற்கொண்டனர். அதில் ஒரு முக்கியமான விடயம் தென்பட்டது. பொ.ஆ.பி. 4, 5-ஆம் நூற்றாண்டளவில் தென்னாட்டில் வளர்ந்த பௌத்தம் 'அமராபதி பௌத்தம்' என்றும் அழைக்கப்பட்டது. அதற்குரிய சிற்பக்கலை மரபு ஒன்றும் இருந்தது. இந்த மரபிற்கும் அனுராதபுரம், பொலநறுவை முதலிய இடங்களில் கண்டறியப்பட்ட சிலைகளின் மரபுக்கும் பல்வேறு விடயங்களில் வேறுபாடு காணப்படுகிறது.

வல்லிபுரம் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை, இலங்கையில் உருவாகிய பௌத்தச் சிலைகளை ஒத்ததாக இல்லாமல் அமராபதி பாணியில் அமைக்கப்பட்ட சிலையாக இருந்திருக்கிறது. இதன் மூலம் அறியக்கிடப்பது, 'இலங்கையிலேயே இரு வகையான பௌத்த மரபு நிலவியிருக்கிறது' என்பதாகும். அதாவது தென்னிந்தியாவில் காஞ்சீபுரம், அமராவதி போன்ற இடங்களில் பேசப்பட்ட பௌத்தத்திற்கும் இந்தியாவில் வழக்கில் இருந்த பௌத்தத்திற்கும் இடையில் வேறுபாடு இருந்திருக்கிறது. இந்தியாவில் பௌத்தம் அழிந்தும் இலங்கையில் பௌத்தம் நிலைத்திருக்கிறது.

வல்லிபுரம் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை பற்றிய மேலதிக விபரம் அடுத்த இதழில் தொடரும்...



selvanayaki.s@thaiveedu.com




மகாகவி பாரதியாரின் வாழ்வில் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்திய குருநாதர்களுள் சித்த மரபினைச் சேர்ந்தவர்கள் மூவர். அவர்கள் பற்றி, 'குள்ளச்சாமி, யாழ்ப்பாணத்துச்-சாமி,கோவிந்தசாமி என்றவர்கள் பாரதியின் பக்குவநிலைய றிந்து, அவருக்கு ஞானோபதேசம் செய்தார்கள்' என்று தான் எழுதிய பாரதியார் சரித்திரத்தில் குறிக்கிறார் அவர்தம் மனைவி செல்லம்மா பாரதி, (செல்லம்மா பாரதி, ப.85)

பாரதிக்கு உபதேசம் செய்தவர்கள் பலராக இருக்கலாம். எனினும், அவரது பக்குவநிலை அறிந்து உபதேசம் செய்த வர்கள் இவர்கள் மூவரே என்று அறுதியிட்டு உரைத்ததில், செல்லம்மா பாரதியின் பக்குவமும் அடங்கியிருக்கிறது. அர சியல் ஆவேசத்தால், போர் வீரனாய் உயிர் துறந்துவிடாமல், ஞானாவேசத்தால் சாமியாராய் இல்லறம் துறந்துவிடாமல், இருக்கும் இடத்தில் இருந்தே இறைமையைத் தன்னுள் நிறைத்துக் கொண்டு, ஆன்ம விடுதலையையும், அரசியல் விடுதலையையும் பெற முடியும் என்பதை, பாரதிக்கு உணர்த்திக் காட்டிய பக்திநிறை சித்தர்கள் இம்மூவரும் என் பது உணரத்தக்க உண்மை.

இம்மூன்று சாமியார்களுள் முதலானவரான குள்ளச்சாமியின் கூட்டால், பாரதி பெற்ற அனுபவங்கள் பல. கதைகளாகவும், கட்டுரைகளாகவும், பாடல்களாகவும் அவர் புகழை விரித்து ரைத்த பாரதியின் பதிவுகளில் இருந்தும், பாரதியார் குறித்த அன்பர்களின் பதிவுகளில் இருந்தும் பல்வேறு செய்திகளை அறிந்துகொள்ள முடிந்தவை குறைவு. இன்னும் அறிந்து கொள்ள வேண்டியவை அநேகம்.

நடைமுறை வாழ்க்கையில் வெகு சாதாரணமாக நிகழும் செயல்களுக்குப் பின்னால், தெய்வ ஆற்றலும், தெய்விக அனுபவங்களும் நிறைந்திருக்கின்றன, என்பதைக் குள்ளச் சாமியுடன் பாரதி இருந்து பெற்ற வாழ்வியல் பதிவுகள் உணர்த்திக் காட்டுகின்றன. குறியீட்டுத் தன்மை உடைய சொற்களாலும், செயல்களாலும், தத்துவ விளக்கத்தைத் தந்து தன்னை ஆட்கொண்ட குள்ளச்சாமியின் கருணையி னால், புதுவையில் புதுவாழ்வு பெற்றவராகிறார் பாரதி. அதன் நீட்சியாய் அவர் பெற்ற தெய்விக அனுபவங்கள் ஆராய்ச்சிக ளுக்கு அப்பாற்பட்டவையாக அமைகின்றன.

39 ஆண்டுகளுக்குள் முடிந்துவிட்ட பாரதியின் வாழ்வில் பங் குபற்றிய குருநாதர்கள் பலர் என்பதை முன்னமே அறிந்திருக் கிறோம். இதழாசிரியராகவும், எழுத்தாளராகவும், மொழிபெ யர்ப்பாளராகவும், அவ்வப்போது கவிஞராகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட பாரதியின் அரசியல் ஈடுபாடு, அவரைப் புதுச்சேரிக்கு நாடுகடத்திக் கொள்ளச் செய்துவிடு கிறது. அதுவரையில், அவரை வழிநடத்திய குருநாதர்களாக அறியப்பெற்றவர்களின் கடமை அந்த அளவில் நிறைவுபெற் றுவிடுகின்றது என்றே சொல்லலாம்.

அரசியல் துறையில், திலகரும், சகோதரி நிவேதிதாவும், இத ழியல் துறையில் ஜி. சுப்பிரமணிய ஐயரும் காட்டிய வழிகள், ஆங்கில ஏகாதிபத்திய ஒடுக்குமுறையால் ஒரு முடிவுக்கு வந் துவிடுகின்றன. அதற்குப் பின்னர் கவிதை பாடுவதிலும், காவியங்கள் எழுதுவதிலும் கழிந்த பொழுதுகள் அவரை மகாகவியாக மாற்றிவிடுகின்றன. ஆயினும் வறுமையும் தனி மையும் வாட்டி வதைக்கத் தொடங்கிவிடுகின்றன. அவற்றி னின்று விடுபடப் போதைப் பழக்கத்திற்கு ஆளாகிவிடுகிறார் பாரதி. அதற்குக் காரணர் குள்ளச்சாமி என்ற குற்றச்சாட் டினை, பாரதியன்பர்கள் சிலர் முன்வைத்திருப்பதை மறுக்க முடியாது எனினும், அவரே அதற்கு முற்ற முழுக்காரணர் என் பதையும் ஏற்க முடியாது. காரணம், இளமைப் பருவத்தி லேயே எட்டயபுர மன்னரின் தொடர்பால், இப்பழக்கம் பார திக்கு அறிமுகமாகி இருந்தது. காசி வாசத்தில் எப்படியோ ? யாரும் சொல்லியமாதிரி தெரியவில்லை. மீளவும் தமிழகம் திரும்பிய பின்னர், மதுரையிலோ, சென்னையிலோ, பாரதி லாகிரிப் பொருள்களைப் பயன்படுத்தியதாகத் தெரிய வில்லை. ஆயினும் வெற்றிலையோடு புகையிலை சேர்த்துப் போடுகிற பழக்கம் பாரதிக்கு இருந்ததை அறிய முடிகிறது.

பிரெஞ்சுப் பிரதேசமான புதுச்சேரிக்கு வந்த பிறகு வாய்த்த அனுபவமும், அமைந்த வாழ்வும் வேறுவிதமாய் ஆகிவிடு கின்றன. எளிதில் கிட்டும் லாகிரிப் பொருள்களும், இயல் பாய்ப் பயன்படுத்தப் பழகிய மனிதர்களும் பாரதிக்குப் பரிச்ச யமாகிய நிலை. இலகுவாகவும், இலவசமாகவும் கிடைத்த தைப் பெற்று அனுபவித்ததில், உடலும், உள்ளமும் நலிந்து



விடுகின்றன. குடும்பப் பொறுப்பினை ஏற்க முடியவில்லை. மனைவி படும் துயர் சகிக்க முடியவில்லை. விரக்திக்கும் வேதனைக்கும் உள்ளாகிய பாரதிக்கு உற்ற துணையாய், உயிர் வளர்க்கும் மருந்தாய்க் குள்ளச்சாமி வருகிறார்.

அநேகமாக, புதுவையில் பாரதியின் அரசியல், இதழியல் இயக்கங்கள் முற்றுப் பெற்ற காலத்தில், வறுமையும், வெறுமையும் அவர் வாழ்வினை முற்றுகை இட்ட காலத்தில், நண்பர்கள் சிலர் உண்டாக்கிய அபின், கஞ்சாப் பழக்கத்தினைத் தொடர்வித்த நண்பர் சிலரது கூட்டால், குள்ளச்சாமியார் பாரதிக்கு அறிமுகமாகியிருக்க வேண்டும். (அதுகருதியே, 'பழந் தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளித்த பெரும் கவியான பாரதியாருக்கு வறுமையின் கொடுமையாலும், ஒரு சாமியாரின் கூட்டுறவாலும் அவர் புதுவையில் இருந்த பொழுது கஞ்சாப் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அதுபற்றி பாரதியாரைக் குறை கூறுவதைவிட, தமிழ்நாட்டின் தவக்குறையைச் சிந்திப்பது நலம்' என்று பரலி. சு. நெல்லையப்பர் குறிப்பிடுகிறார். இப்பழக்கம் பின்னர் பாரதியின் இறுதிநாள் வரை நீடித்திருந்தது

எனத் தெரிகிறது. எனினும் இதற்கு முற்ற முழுக்கக் குள்ளச்சாமி மட்டுமே காரணர் ஆகார். கடையத்தில் பாரதி வதிந்த காலத்தில், மொட்டைச்சாமி என்றதோர் ஆசாமி வருகிறார். அவரும் குள்ளச்சாமியும் ஒருவரா என்பதும் ஆய்வுக்குரியது.) (காண்க. கிருங்கை சேதுபதி, காரைக்குடியில் பாரதி, பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, 2019).

எது எப்படியோ? யாரறிவார்? புதுவையில், வேடிக்கையாகவோ, விளக்கம் வேண்டியோ குள்ளச்சாமியிடம் வினவிய பாரதியின் வினாக்களுக்கு, அவர் தன் செயல்களாலும் சின்னஞ்சிறு சொற்றொடர்களாலும் தந்த குறிப்புகள் பாரதியின் அகக்கண்களைத் திறந்துவிட்டிருக்கின்றன. ஸ்ரீஅரவிந்தருடன் பாரதி நிகழ்த்திய உரையாடல், இணைந்து கற்ற வேத, உபநிடத பாடங்களின் தாக்கம், நாலாயிர திவ்ய பிரபந்தமான ஆழ்வார் அமுதத்தையும், தேவாரம், திருவாசகம், பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார் பாடல்கள் ஆகியவற்றையும் முறைப்படப் பயின்று பெற்ற பக்குவம் அனைத்தும் கூடி, அவரை ஆன்மிகத் தளத்தினுள் ஆழப் புக வைத்தன. எனினும், துறவு நிலையேற்க அவர் மனம் ஒருப்படவில்லை. கட்டிய மனைவியை, கண்முன் உயிர்ச்சித்திரமாய் உலவும் பெண்மகவை, சக்தியின் பேராற்றலாய் விரியும் பிரபஞ்சத்தைப் பொய்யொன்று சொல்ல அவரால் முடியவே இல்லை.

உலக அளவில் அறிவியல் தொழில் நுட்பத்தால், அரசியல் எழுச்சியால் நிகழ்ந்து வரும் மாற்றங்களைக் கண்டு, கணித்து, அதற்கேற்ப, இந்தியத் திருநாடு இயங்கவேண்டும் என்று எண்ணிப் பணி செய்த கவியுள்ளத்தை, ஆங்கிலேய அரசு ஒடுக்க முனைந்தபோது, அதன் ஆற்றல், பக்திநெறியிலும், சித்த மரபிலும் ஓங்கி விரிந்தது. அதன் விளைவாய்ப் பல அற்புதப் பக்திப் பாடல்கள் தமிழுக்கு வாய்த்தன. ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரம்போல், தனியொருவனாய் நின்று யானே ஆறாயிரம் பாடல்கள் புனைவேன் என்று எழுச்சி கொண்ட பாரதியால், அறுபத்தாறு பாடல்களே பாட முடிந்தது. அதில் அவர் புதுச்சேரிச் சித்தர்கள் வழியாகக் கற்ற அனுபவமும், பெற்ற பக்குவமும் புலப்படுகின்றன. அவற்றின் முதிர்வில், அவர் சொல்லும் வாசகங்கள் மந்திரங்களாகின்றன. உபதேசங்களாய் ஒளிர்கின்றன.

கவிதை உலகிலும், இதழியல் தளத்திலும் பாரதிக்கு எத்தனை பெரிய இடம் உண்டோ, அதற்குச் சற்றும் குறைவின்றி, சித்தர் உலகிலும் அவருக்குச் சிறந்த இடத்தைப் பெற்றுத் தந்ததில், அவரைச் சித்தராகவே ஆக்கியதில், குள்ளச்சாமிக்குப் பெரிய பங்கு உண்டு.

***எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார் அப்பா!***
***யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்***
***மனத்தினிலே நின்றுஇதனை எழுது கின்றாள்***
***மனோன் மணிஎன் மாசக்தி வையத்தேவி***
***தினத்தினிலே புதிதாகப் பூத்து நிற்கும்***
***செய்யமணித் தாமரை நேர் முகத்தாள் காதல்***
***வனத்தினிலே தன்னைஒரு மலரைப் போலும்***
***வண்டினைப்போல் எனையும் உரு மாற்றி விட்டாள்***

காதல் வனத்தில் ஒரு மலராக, சக்தி பூத்திருக்க, அதனைச் சுற்றிவந்து அமுதுண்ணும் வண்டாகப் பாரதி உருமாறிய பக்குவத்தை இந்தப் பாடல் விரிக்கிறது. எனவே, அனைத்துத் துயரங்களில் இருந்தும், ஏன் மரணத்தில் இருந்தும் விடுதலை பெற்றேன் என்று அவரால் மனமுவந்து சொல்லவும் முடிந்திருக்கிறது. அது சாத்தியமா என்கிற கேள்விக்குப் புற அறிவால் விடை காண முடியாது.

‘பேசுவதில் பயனில்லை,அனுபவத்தால் பேரின்பம் எய்துவதே ஞானம்’ என்ற குள்ளச்சாமியின் உபதேசத்தை உண்மை அனுபவமாய்ப் பெற்றவர் பாரதி. அதற்கான சான்றுகள் அனேகம். அவற்றுள் ஒன்றாகப் பின்வரு நிகழ்வுப் பதிவினைச் சுட்டலாம். விடிந்தால் பொங்கல் பண்டிகை. பாரதியின் கையிலோ பைசா கூட இல்லை. பண்டிகை நாளும் அதுவுமாக வீடு துடைத்துக் கொண்டிருந்தது. பாரதியின் மனைவியான செல்லம்மாளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கவிதைகளில் மூழ்கியிருந்த பாரதியாரிடம் தெரிவித்ததற்கு ‘எல்லாம் பராசக்தி பார்த்துக்குவாள்’ என்று சொல்லிவிட்டார். என்ன செய்வது? விதிப்படி ஆகட்டும் என்று அந்த அம்மாளும் சோர்வாக உட்கார்ந்து விட்டாள்.

அன்று மாலை புதுச்சேரி பிரபல ஜவுளிக் கடையின் முதலாளியான முதலியார் அனுப்பி வைத்ததாக பாரதியாருக்கு வேஷ்டி, துண்டு, குழந்தைகளுக்கான பாவாடை, சட்டை, அவர் மனைவிக்கான புடவை முதலியவற்றை ஒருவன் கொண்டு வந்து கொடுத்தான். இத்தனைக்கும் அந்த முதலியார் அவருக்குச் சாதாரண அறிமுகந்தான். ‘நான் இப்படியொன்றும் கேட்கவில்லையேப்பா?’ என்று பாரதி சொல்லிப் பார்த்தார். ‘இது மாதிரி பெரியவங்களுக்கு எங்கள் முதலாளி அனுப்பி வைக்கிறது வழக்கமுங்க’ என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான். மற்றொரு கடைக்காரன் (கடற்கரை சிநேகம்) வெற்றிலை, பாக்கு, பழங்கள், இனிப்பு யாவும் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான்.

இவைகளைப் பார்த்து வீட்டிலுள்ளோர் அதிசயப்பட்டுக் கொண்டு இருந்தனர். பாரதியாருக்கு வேறொரு கவலை வந்து விட்டது. பண்டிகை முடிந்ததும் ‘பால் பொங்கிற்றா?’ என்று கேட்டு வருபவர்களை எப்படி வெறுங்கையுடன் அனுப்புவது? யோசனையில் அவர் உழன்று கொண்டிருந்தார். அன்றிரவு ஊரே உறங்கிக் கொண்டிருந்த வேளையில் பாரதியார் உறக்கமில்லாமல் தவித்தார். நடுநிசி. யாரோ கதவைத் தட்டினார்கள். பாரதியார் தான் சென்று கதவைத் திறந்தார். அவருக்கு அறிமுகமில்லாத ஒருவர் நின்று கொண்டிருந்தார். ‘இப்பொழுது தான் சொப்பனத்தில் பராசக்தி வந்து, என் கையிலிருக்கும் சில்லறையை உங்களிடம் கொடுத்து வரச் சொன்னாள்’ என்று சொல்லி சில்லறைப் பொட்டணத்தைப் பாரதியாரின் பாதங்களில் வைத்து நமஸ்கரித்தெழுந்தார்.

இதைக் கண்டு பாரதியாருக்குப் புல்லரித்துப் போயிற்று. அந்த ஆளைப் பற்றி விசாரித்ததற்கு ஏதோ முத்தியால் பேட்டை நெசவாளி என்று சொல்லிக்கொண்டு போய் விட்டார். அதன் பிறகு பாரதியார் தூக்கம் கலைந்து விளக்கைப் பெரிதாக்கி வைத்துக் கொண்டு பராசக்தி மேல் பாட்டு எழுத உட்கார்ந்து விட்டார். மறுநாள் பொங்கல் பண்டிகை அவர் வீட்டில் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டது. (திரு சம்பந்தம்,

‘புதுவையில் பாரதி’, ப.181) இதுபோல் சொல்லப்பட்டவையும் சொல்லப்படாதவையும் நிரம்ப உண்டு. அவற்றுள் பொய்க ளும் புனைவுகளும் மலிந்துவிட்டதையும் மறுக்க முடியாது. ஆயினும், பாரதி - குள்ளச்சாமியின் கருணையால் பெற்ற அனுபவங்கள் பலப்பல.

மாங்கொட்டைச் சாமியாம் குள்ளச்சாமியின் மகிமை பாடும் பாரதி, பெண்ணினத்தை வெறுக்காமல் ஏற்கும் சித்தராகப் பரிணமித்ததற்கு முக்கியக் காரணர் குள்ளச்சாமி.

***பெண்ணுக்கு விடுதலைஎன் றுஇங்கோர் நீதி***
***பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்!***
***மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வம் என்றால்,***
***மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட் டீரே!***
***விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர்,***
***விடுதலைஎன் பீர் கருணை வெள்ளம் என்பீர்,***
***பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லை என்றால்***
***பின்இந்த உலகினிலே வாழ்க்கை இல்லை.***

என்று பாரதியைப் பிரகடனம் செய்ய வைத்தமைக்குக் குள் ளச்சாமிக்குப் பெரிய பங்குண்டு.பெண்டாட்டி தனைஅடிமைப் படுத்துவதாகச் சொல்லிப் பெண் குலத்தை முழுதும் அடி மைப்படுத்துவதால், ஒட்டுமொத்த மனிதகுலமே அடிமைத்த ளையிலிருந்து மீள முடியாது என்று உரைக்கிறார். எனவே, தாயைப் போற்றிக் கொண்டாடிவிட்டு, மனைவியை மறுதலிக் கும் போக்குக்கு மறுப்பளிக்கும் பாரதி,

***தாய்க்குமேல் இங்கே ஓர் தெய்வம் உண்டோ?***
***தாய்பெண்ணே அல்லளோ? தமக்கை, தங்கை***
***வாய்க்கும்பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?***
***மனைவிஒருத் தியைஅடிமைப் படுத்தவேண்டித்***
***தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ?***
***தாயைப்போ லேபிள்ளை என்று முன்னோர்***
***வாக்குளதன் றோ? பெண்மை அடிமை யுற்றால்***
***மக்களெலாம் அடிமையுறல் வியப்பொன் றாமோ?***

என்று கேட்கிறார். பின்னர் மண்விடுதலைக்கும் தன் விடுத லைக்கும், பெண்விடுதலையே மூலம் என்பதைப் பின்வரும் பாடலில் சொல்லிப் புரியவைக்கிறார்.

***வீட்டிலுள்ள பழக்கமே நாட்டில் உண்டாம்***
***வீட்டினிலே தனக்கடிமை பிறராம் என்பான்;***
***நாட்டினிலே...****
***நாடோறும் முயன்றிடுவான் நலிந்து சாவான்;***
***காட்டிலுள்ள பறவைகள்போல் வாழ்வோம் அப்பா;***
***காதல்இங்கே உண்டாயிற் கவலை யில்லை;***
***பாட்டினிலே காதலைநான் பாட வேண்டிப்***
***பரமசிவன் பாதமலர் பணிகின் றேனே.***
(*இடைப்பட்ட இந்த இடத்திற்கான தொடர் கிடைக்காமலி ருக்கிறது.)

மாயை குறித்த மாயையில் மயங்கிச் சிக்கியிருந்த ஆண்க ளுக்கு அறிவுபுகட்டி, மாயை பொய் எனப் புரியவைத்து மண் மீதில் மனைவியைத் துணைக்கொண்டு, வாழ்வாங்கு வாழ் வதே வாழ்க்கை என்று பாரதி உபதேசம் செய்தார் என்றால், அதற்கு உற்ற துணையாகக் குள்ளச்சாமி ஓரளவிற்கு இருந் திருக்கிறார். ‘தாரமும் குருவும் தலைவிதிப் பிரகாரம்’ என்பார் கள். தாரத்தையே குருவாகக் கொள்ளும் அளவிற்கு, இந்தக் குருவின் உபதேசமும் உதவியும் பாரதிக்கு வாய்த்தது என்று கூறுவது மிகையாகாது. முற்றும் துறந்தவர்களாகத் துறவிகள் வாழ்ந்தாலும், தம்மைச் சுற்றி நிற்கும் சீடர்களுக்கு, அவர்க ளின் இல்லற வாழ்வுக்கு உற்ற துணையாக, இருந்து உதவிப் பல நற்பணிகளைச் செய்விப்பதே அவர்களின் கடமை என் பதை, பாரதி-குள்ளச்சாமி உறவு நமக்கு நன்கு உணர்த்திக் காட்டுகின்றது.

எதற்காக, எப்போது, யாரால் இவ்வுலகத்தில் குள்ளச்சாமி அவதரித்தாரோ, தெரியாது. அவர் பிறந்த தேதி, இருந்த சூழல் விரிவாகத் தெரியாது. என்றைக்கு, பாரதியின் வாழ் வில் அவர் குருநாதராகப் புகுந்தாரோ, அன்றிலிருந்து அவர் உலகத்தார் கவனத்திற்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறார். பாரதியை ஆட்கொள்வதற்கென்றே அவர் அவதரித்தாரோ என்று சொல்லத்தக்க அளவில் அவர்களின் வாழ்க்கை நிகழ் வுகள் அமைந்திருப்பது விசித்திரம். மகாகவி பாரதி மறைந்த பிறகு, 21 ஆண்டுகள் மகான் குள்ளச்சாமி வாழ்ந்ததாகத் தெரிகிறது. அவர்தம் வாழ்வில் நடந்த நிகழ்வையும் அவர் சமாதிகூடிய ஆண்டினையும் புதுவை அன்பர் பின்வருமாறு பதிவிடுகிறார்.

‘குள்ளச்சாமிச் சித்தர் சென்னையில் தங்கியிருந்தபோது சென்னை கச்சாலீஸ்வரர் கோவிலுக்கு அடிக்கடி செல்வது வழக்கம். கோயிலில் ஒருநாள் ஒரு பெண்மணி குறும்புத்தன மாக மிளகாய்ப் பொடியைச் சந்தனம் போல், குழைத்து குள் ளச்சாமி உடம்பு முழுவதும் பூசிவிட்டார். சுவாமிகள் சிரித்துக் கொண்டே இருந்தார். அடுத்த சில மணிநேரங்களிலேயே, ‘ஐயோ, உடம்பு எல்லாம் எரியுதே’ என்று கதறி அழுதாள். சுவாமிகளின் கால்களில் விழுந்து கதறினாள். சித்தரும் பெருந்தன்மையுடன் அவளை மன்னித்து அவளது துன்பத் தைப் போக்கினார்.இந்நிகழ்ச்சிக்குப் பிறகு குள்ளச்சாமி சித் தர் சென்னையில் காணப்படவில்லை. புதுச்சேரியில் மறுபடி யும் நடமாடத் தொடங்கினார். கடைசியாக புதுச்சேரியில் நொத்தேர் வாஞ்சிலிங்க சுவாமிநாதப் பிள்ளையவர்களின் வீட்டில் விசேஷ மரியாதையுடன் பூஜிக்கப்பட்டு வந்தார். வெகுநாட்கள் வரை மௌனவிரதம் பூண்ட குள்ளச்சாமி சித் தர் 1942-ம் ஆண்டில் சமாதி அடைந்ததாகக் கூறப்படுகிறது’. (சி.எஸ். முருகேசன், பாரதி கண்ட சித்தர்கள் 2000, பக்.124-125.)

மகாகவி பாரதியார் வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்து அவரையும் ஒரு சித்தராக்கிய மகான் குள்ளச்சாமியின் வாழ்வு வரம்பிட்டு உரைக்க முடியாதது. ஆயினும் பாரதி வர லாற்றில் பதிவானது. நீள விரியும் அவர்தம் வாழ்வும் குறுகிய அளவில் முடிந்த பாரதியின் இயக்கமும் புதுவை வாழ்வில் இணைந்ததன் பயனாய் விளைந்தவை அனந்தம். அவற்றுள் தேடக் கிடைத்த செய்திகளைத் தொகுத்துச் சொல்லியவை போகச் சொல்ல வேண்டியவை மிகுதி. இன்னும் தேடினால் கிட்டவும் கூடிய செய்திகளை இணைத்துப் பார்த்து எழுதி னால், அது மீளவும் ஒரு சரித்திரமாய் விரியலாம்.
காலம் கைகொடுக்கட்டும்.



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் ஏழாவது படலமாகிய வனம்புகு படலத்தில் கம்பனின் கவி வண்ணத்தைச் சுவைத்து மகிழ்ந்தோம். இந்த இதழில் இராமன், சீதை, இலக்குமணன் மூவரும் காட்டு வழியே கங்கையைக் கடந்து சித்திரகூட மலையை அடைந்து அங்கே அவர்கள் தங்கி வசிக்க இருக்கின்ற செய்திகளைச் சொல்லும் சித்திரகூடப் படலத்தில் வரும் சில செய்யுள்களிலே கம்பனின் கவிச் சிறப்பைப் படித்துச் சுவைப்போம்.

இராமன், சீதை, இலக்குமணன் மூவரும் சித்திரகூட மலையை நோக்கிச் செல்லும்போது இராமன், அம்மலையின் பல்வகை வளங்களையும் சீதைக்குக் காட்டிக் கொண்டே செல்கிறான். அக்காட்சிகளை அழகிய கற்பனையும், வருணனையும் கொண்ட 37 செய்யுள்களில் கம்பர் எடுத்துக் காட்டுகிறார். அவற்றுள் சிலவற்றை இக்கட்டுரையில் எடுத்து வருகின்றேன்.

***வாளும் வேலும்விட்(டு) அளாயின வனையகண் மயிலே***
***தாளின் ஏலமும் தாமலமும் சுடர்தரு சாரல்***
***நீள மாலய துயில்வன நீருண்ட கமஞ்சூற்***
***காள மேகமும் நாகமும் தெரிகில காணாய்.***

- கம்ப. அயோத்தி. 750

வாளையும் வேலையும் சேர்த்து ஒன்று கலந்து வைத்ததைப் போன்ற கண்களையுடைய மயில்போன்ற சாயலையுடையவளே! தனது காலடியிலே ஏலக்கொடியும், பச்சிலைச் செடிகளும் ஒளிவிடுகின்ற மலைச்சாரலிலே நீட்டமான தன்மையுடையனவாய் உறங்குகின்றனவான நீரையுண்டு அதனால் நிறைந்து சூல்கொண்ட கருமேகமும், யானையும் வேற்றுமை உணர முடியாதவாறு இருப்பவற்றைக் காண்பாய் எனக் காட்டுகின்றான்.

'வாளும், வேலும் விட்டளாயின கண்கள்' எனச் சீதையின் கண்களைக் கம்பன் வருணனை செய்வது தன்மைத் தற்குறிப்பேற்ற அணி நயமாகும். நீருண்டு சூல்கொண்ட கருமேகத்தை உருவிலும், நிறத்திலும் வேறுபாடு காணமுடியாது இருக்கின்றதென்று மறைவணி நயத்தோடு கம்பர் கற்பனை செய்திருப்பதும் சிறப்பு. 'நீருண்ட கமம் சூற் காளமேகம்' என்னும் தொடர், நீரையுண்டு அதனால் நிறைந்து சூல்கொண்ட கருமேகம் என்னும் பொருளைத் தருகிறது. இதிலே கமம் என்னும் சொல் நிறைவைக் குறிக்கும் சொல்லாக இருப்பதைக் கவனிக்கலாம். இப்பொருளிலேயே நெல்போன்ற தானியங்கள் விளைகின்ற வயல், நீரால் நிறைந்து அதன் பயனாகப் பயிர்கள் விளைச்சலால் நிறைவதால் அதனைக் கமம் என்னும் சொல்லாலும் அழைக்கிறோம். கமம் என்னும் சொல்லோடு சேர்ந்த பெயர்களையுடைய பல ஊர்கள் தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் இருக்கின்றன. கமம் என்னும் சொல் பேச்சு வழக்கில் காமம் என மருவி இக்காலத்தில் அவை வழங்கி வருகின்றன என்பதையும் அறிந்து கொள்வோம்.

***இழைந்த நூலிணை மணிக்குடம் சுமக்கின்ற தென்னக்***
***குழைந்த நுண்ணிடைக் குவியிள வனமுலைக் கொம்பே!***
***தழைந்த சந்தனச் சோலைதன் செலவினைத் தடுப்ப***
***நுழைந்து போகின்ற தொக்கின்ற மதியினை நோக்காய்!***

- கம்ப. அயோத்தி. 757

ஓரிழையாலான நூலானது இரண்டு மணிக் குடங்களைச் சுமக்கின்றதென்று சொல்லுமாறு மெல்லிய இடையிலே குவிந்த இளமையான அழகிய தனங்களைக் கொண்டுள்ள பூங்கொம்பு போன்றவளே! வான வீதியிற் தான் செல்வதைத் தடுப்பதைப் போன்று தழைந்துள்ள சந்தனச் சோலைக்குள் புகுந்து போவதைப் போலத் தோன்றுகின்ற நிலவை பார் என இராமன் சீதைக்குக் காட்டுகின்றான்.

இளமையான அழகிய தனங்களைச் சுமந்து கொண்டிருக்கும் சீதையின் நுண்ணிய இடையை, 'இணை மணிக்குடம் சுமக்கும் இழைந்த நூலுக்கு' உவமையாக்கும் கம்பரின் கற்பனைச் சிறப்பை இச்செய்யுளில் காண்கிறோம். வானளாவி ஓங்கிய மலையிலே உயர்ந்து தழைத்துள்ள சந்தனச் சோலை வான் வெளியைத் தடுத்துவிட்டதனால் நிலா அந்தச் சோலையினூடாகச் செல்வது போலிருக்கின்றது என்னும் 'தன்மைத் தற்குறிப்பேற்ற அணி' நயத்துடன் கூடிய கம்பரின் கற்ப

னைத்திறனும் இங்கே புலப்படுகிறது. காட்டு மரங்களுக்கிடையே நிலவொளி பரவுகின்றபோது உண்மையிலேயே அக்



காட்டு மரங்களிடையே நிலா பயணிப்பதைப் போன்ற மாயத் தோற்றம் தென்படும். இயற்கையின் இந்த மாயை அழகை நம்மிற் பலரும் நேரில் கண்டு சுவைத்திருக்கலாம்.

***சீல மின்னதென் றருந்ததிக் கருளிய திருவே***
***நீல வண்டினம் படிந்தெழ வளைந்துடன் நிமிர்வ***
***கோல வேங்கையின் கொம்பர்கள் பொன்மலர் தூவிக்***
***காலி னிற்றொழு தெழுவன நிகர்ப்பன காணாய்.***

- கம்ப. அயோத்தி. 764

நல்லொழுக்கம் இன்னதென்று அருந்ததிக்கும் காட்டியருளிய திருமகள் போன்ற கட்டழகியே! கருநிற வண்டுகள் மொய்ப்பதனால்; வளைந்து, அவ்வண்டுகள் மேலே செல்வதனால் உடனே மேலெழுகின்றன அழகிய வேங்கை மரங்களின் சிறு கிளைகள்;. வேங்கை மரக் கிளைகளில் கருவண்டுகள் மொய்க்கும் போது அப்பாரத்தைத் தாங்க மாட்டாது தமது பொன்னிற மலர்களைச் சிதறிய வண்ணம் அக்கிளைகள் விரைந்து தாழ்ந்தமையால் அவற்றினின்று அவ்வண்டுகள் மேலெழுந்து செல்ல அக்கிளைகளும் மேலெழுந்து செல்லும். இந்தக் காட்சி, ‘உன்னைக் கண்டு மலர்களைத் தூவித் தாளில் வீழ்ந்து எழுந்திருப்பவரை ஒத்திருக்கின்றது’ என்று இராமன் சீதைக்குக் காட்டுகிறான். இக்கருத்து, தற்குறிப்பேற்ற அணி நயமாகும். வேங்கை மலர் பொன் போன்ற நிறமுடையதாக இருப்பதனால் பொன் மலர் தூவி என்றார் கம்பர். ‘படிந்தெழ வளைந்துடன் நிமிர்வ’ என்னும் சொற்றொடர் ‘படிதலால் வளைந்து எழுவதால் நிமிர்வ’ எனச் சொற்களை நிரைப்படுத்திப் பொருள் கொள்வது ‘முறை நிரல்நிறைப் பொருள் கோள்’ என்று அழைக்கப்படும் செய்யுளுக்குப் பொருள் காணுகின்ற உத்தியில் கம்பர் அமைத்திருக்கும் சிறப்பையும் நோக்கலாம்.

***நினைந்த போதினும் அமிழ்தொக்கு நேரிழை நிறை தேன்***
***வனைந்த வேங்கையிற் கோங்கினில் வயின்றொறுந் தொடுத்துக்***
***குனிந்த ஊசலிற் கொடிச்சியர் எடுத்தவின் குறிஞ்சிக்***
***கனிந்த பாடல்கேட்டு அசுணமா வருவன காணாய்.***

- கம்ப. அயோத்தி. 772

‘நினைக்கும் போதெல்லாம் அமுதத்தை உண்டதைப்போல மகிழ்ச்சியைத் தருகின்ற அழகிய அணிகலம் பூண்டவளே! நிறைந்த தேனைக் கொண்டிருக்கின்ற அழகிய வேங்கை மரத்திலும், கோங்க மரத்திலும், மற்றைய மரங்களிலும், கட்டப்பட்டுள்ள வளைந்தாடும் தன்மையுள்ள ஊஞ்சல்களிலிருந்து குறிஞ்சிநிலப் பெண்கள் எடுத்துப் பாடிய இனிய குறிஞ்சிப் பண்ணோடு கூடிய சுவை மிகுந்த பாடலைக் கேட்டு அசுணமாக்கள் வருகின்றன. அவற்றைப் பார்’ என்று இராமன் சீதையிடம் கூறுகிறான்.

அசுணமா என்பது குறிஞ்சி நிலத்திலுள்ள இசையறி விலங்கு எனக் கூறப்படுகிறது. அது இனிய யாழோசை கேட்டு இன்புறுதலும், அதிர்ந்து முழங்கும் பறையொலி கேட்டு உயிர் நீப்பதுமான தன்மையுள்ளது எனக் கூறப்படுகிறது. ‘இன்னளிக் குரல்கேட்ட அசுணமா அன்னளாய்’ என்றும், ‘பறைபட வாளா அவுணமா’ என்றும் கம்பர் வேறு இடங்களில் அசுணமா குறித்துப் பாடியிருப்பதையும் காணலாம். கொடிச்சியர் என அழைக்கப்படும் குறிஞ்சி நிலப் பெண்கள், யாழில் குறிஞ்சிப் பண் இசைத்துப் பாடுவதைக் காட்டும் கம்பரின் கருத்து, தொல்காப்பியம் கூறும் கருப்பொருளை அடியொற்றி வருவதை எடுத்துக் காட்டுகிறது. தொல்காப்பியர் கூறும் தமிழ் நாட்டின் ஐவகை நிலங்களின் மரபுகளை அடியொற்றிக் கம்பர் இக்காப்பியத்தின் பல இடங்களில் இவ்வாறு பதிவு செய்திருப்பதைக் காணக் கிடைக்கிறது.

***செம்பொ னாற்செய்து குலிகமிட் டெழுதிய செப்போர்
கொம்பர் தாங்கிய தெனப்பொலி வனமுலைக் கொடியே
அம்பொன் மால்வரை யலர்கதிர் உச்சிசென் றணையப்
பைம்பொன் மாமுடி மிலைச்சிய தொப்பது பாராய்.***

- கம்ப. அயோத்தி. 774

'சிறந்த பொன்னினால் செய்யப்பட்டு, இங்குலிகத்தைக் கொண்டு எழுதப்பட்ட செப்புச் சிமிழை ஒரு செடிக்கொம்பு தாங்குகின்றது என்று செல்லக்கூடியதாக விளங்குகின்ற அழகிய தனங்களையுடைய பூங்கொடி போன்றவளே! அழகிய பொன்மயமான இம்மலை உச்சியில் கதிரவனது ஒளிக் கதிர்கள் விரிந்து சென்று பரவுகின்றபோது அம்மலையுச்சி பசும் பொன்னாலான முடியை அணிந்ததைப்போல ஒத்திருப்பதைப் பார்' என இராமன் காட்டுகிறான்.

கதிரவன் உச்சிப்போதில் மலை உச்சியை வந்து அணைய, அதன் கதிர்களால் அம்மலை பொன் முடியை அணிந்ததைப் போல் காட்சி தருகின்றது என்னும் கம்பரின் வருணனை நயம் மிக்கது. குவிகமெழுதிய செம்பொற் செப்பைச் சீதையின் தொய்யில் எழுதிய கொங்கைகளுக்கு உவமையாக்குகிறார். வனமுலைக் கொடியே என்னும் சொற்றொடரில் சிலேடை அணி இருப்பதைக் காணலாம். வனப்பு முலை என்பதிலுள்ள வனப்பு என்னும் சொல் விகாரமடைந்து வன முலையாகி அழகிய கொங்கைகள் எனப் பொருள்படுவது ஒன்று. வன முல்லைக் கொடியே என்பதாக அதில் வரும் முல்லை என்னும் சொல் முலையென விகாரமடைந்து வனத்திலுள்ள முல்லைக் கொடி போன்றவளே எனவும் இன்னொரு பொருள் படுவதாக இரு கருத்துகள் பெறப்படும் சிலேடையணியைக் கம்பர் இங்கே சிறப்பாக அமைந்துள்ளார்.

***நெய்கொள் நீருண்டு நெருப்புண்டு நீண்டமை நிறைந்த
வைகொள் வேலெனக் காலனும் மறுகுறுங் கண்ணாய்
மெய்கள் நோகின்ற பிடிகளை விரும்பிய வேழம்
கைகள் நோகில தாங்கின நிற்பன காணாய்.***

- கம்ப. அயோத்தி. 785

'நெருப்பிற் கிடந்து காய்ச்சப்பட்டு, துருப்பிடியாதிருப்பதற்கு நெய் பூசப்பெற்ற கூர்மை கொண்ட வேற்படையைப் போன்ற, காலனையும் கலக்கமுறச் செய்யக்கூடிய, நீரினையுண்ட மைநிறைந்த கண்களைப் படைத்தவளே! கன்றை ஈனுகின்ற போது உடல் நோவடைகின்ற பெண் யானைகளைத் தங்கள் துதிக்கைகளின் நோவையும் பாராமல் அன்போடு தாங்கிப் பிடிக்கின்ற காட்சிகளைக் காண்க!' என்று இராமன் கூறுகிறான். இக்காட்சியைக் காட்டுவதால் சீதை மீதுள்ள தன்னுடைய அன்பையும் அவன் வெளிப்படுத்துவதாகக் கம்பரின் சிந்தனைச் சிறப்பு அமைந்துள்ளதை நோக்கலாம். காட்டுவழிப் பயணத்திலும், சூழலிலும் சீதை துயரடையாமல் இருப்பதற்காக இராமன் இவ்வாறான இயற்கையின் இனிய பக்கங்களை எடுத்துக்காட்டுவது போலக் கம்பரின் கருத்தோட்டம் அமைந்துள்ளது வியப்புக்குரியது.

இயற்கை எழில் கொண்ட காட்சிகளை இராமன் சீதைக்குக் காட்டுவதாக வனம்புகு படலத்திலும் சித்திரகூடப் படலத்திலும் படைத்துள்ள செய்யுள்கள் பலவற்றிலே கம்பர் சீதையின் அழகை வருணிக்கும் பாங்கு மிகச் சிறப்பாகக் காணப்படுவதை நோக்கலாம். 'குருதி வாளெனச் செவ்வரி பரந்தகட் குயிலே, வடங்கொள் பூண்முலை மடமயிலே, உவரி வாயன்றிப் பாற்கடலுதவிய அமுதே, குழைந்த நுண்ணிடைக் குவியிள வனமுலைக் கொம்பே, ஆடுகின்ற மா மயிலினும் அழகிய குயிலே, வீறு பஞ்சின்றி அமுதநெய் மாட்டிய விளக்கே, எழுவு தண்டமிழ் யாழினும் இனிய சொற் கிளியே' என்றெல்லாம் இன்னும் பலவாறாக இராமனின் வாயிலாகக் கம்பர் சீதையின் அழகையும் குணநலத்தையும் வருணிக்கும் சிறப்பை இவ்விரு படலங்களிலும் காணலாம்.

***இனைய யாவையும் ஏந்திழைக் கியம்பினன் காட்டி
அனைய மால்வரை யருந்தவர் எதிர்வர வணங்கி
வினையின் நீங்கிய வேதியர் விருந்தின னானான்
மனையின் மெய்யெனும் மாதவம் புரிந்தவன் மைந்தன்.***

- கம்ப. அயோத்தி. 787

இல்லறத்திலிருந்தவாறே சத்தியத்தின் வழி நின்று பெருந்தவத்தைச் செய்தவனாகிய தயரதனின் மைந்தனாகிய இராமன் சீதைக்கு மலை வளங்கள் யாவையும் சொல்லிக் காட்டியவாறு வரும்பொழுது, அந்த மலையில் உறையும் அரிய தவ முனிவோர் எதிர்கொள்ள அவர்களை வணங்கி அவர்களுடைய விருந்தோம்பலைப் பெற்றுக்கொள்கிறான்.

அந்தச் சித்திரகூட மலையிலேயே இலக்குமணன் மூங்கிற் துண்டுகளை ஏணிபோல் அமைய வைத்து தேக்கு மரங்கள் முதலியன கொண்டு சுவரமைத்து, அதன் மேலே கூரையமைத்து புல், இலைகள் ஆகியன கொண்டு கூரை வேய்ந்து, சிற்ப நூலின் முறைமை பொருந்த அவர்கள் தங்கியிருப்பதற்கான குடிசை அமைத்தான் என்பதனை ஐந்து செய்யுள்களிலே கம்பர் சிறப்பாகக் கூறுகிறார்.

***இன்னண இளையவன் இழைத்த சாலையில்
பொன்னிறத் திருவொடும் குடிபுக் கானரோ
நன்னெடுந் திசைமுகன் அகத்தும் நம்மனோர்க்கு
உன்னரும் உயிருளும் ஒக்க வைகுவான்.***

- கம்ப. அயோத்தி. 798

இவ்வாறு இலக்குமணன் செய்தமைத்த குடிசையிலே பெருமை மிக்க பிரமதேவனுள்ளிலும், நம்மைப் போன்ற அஞ்ஞானிகளுடைய அறிவால் அறிதற்கரிய உயிர்களிலும் ஒரு சேர வேறுபாடில்லாமல் தங்குபவனாகிய இராமன் பொன்னிறத்தவளாகிய திருமகளாகிய சீதையுடன் குடிபுகுந்தான் என்கிறார் கம்பர்.

இராமன் சீதை, இலக்குமணன் மூவரும் சித்திரகூட மலையை அடைந்து அங்கு தங்கினர் என்னும் செய்தியை முடித்துக் கொண்டு தைலமாட்டுப் படலத்தின் ஈற்றில் பரதனை அழைத்துவர முடங்கல் அனுப்பிய பின் நிகழ்ந்த செய்திகளைக் கூறும் பள்ளி படைப்படலத்தில் கம்பர் படைத்துள்ள செய்யுள் நயங்களை அடுத்துவரும் இதழில் சுவைத்து மகிழ்வோம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com



கனடா, தொல்காப்பிய மன்றமும்
தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய மன்றமும்
இணைந்து நடத்தும்
முதலாம் உலகத் தொல்காப்பிய
ஆராய்ச்சி மாநாடு
திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசித் திங்கள் 04, 05, 06 ஆம் நாள்களில்
(2024-09-20, 2024-09-21, 2024-09-22)
கனடா
தொன்மைத் தமிழர் வரலாறும்
தொல்காப்பிய மன்றம்
கனடா
குறிக்கோள் : தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள்
மேற்கொள்ளுவதற்கான களமாக இம்மாநாடு
அமையவேண்டும்.
இணையத்தளம் : www.tolkappiyam.ca
தொடர்புகளுக்கு : 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152

# தமிழ்வலை - 107

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-107 வினா

### இடமிருந்து வலம்

3 வட கொரிய தலைநகர்
4 பண்டைத் தமிழகத் துறை
7 மாவேந்தருக்கு வேந்தர் செலுத்தும் கப்பம்
8 மூவேந்தரால் கொல்லப்பட்ட குறுநில மன்னன்
9 சென்னையின் பழைய பெயர்
10 விலங்குணவு
11 புகழ்பெற்ற ஆங்கில நாடகாசிரியர்
12 இயல்பு
14 பழுப்பு மஞ்சள்
17 மணிமேகலை ஆசிரியர்

### மேலிருந்து கீழ்

1 ஓர் அமெரிக்க மாநிலம்
2 வர்த்தகர்
5 நோபல் பரிசு பெற்ற தமிழக விஞ்ஞானி (1-1-3)
6 மதன்
10 சுங்கவரி
11 அண்மையில் பதவிதுறந்த வங்காளதேச அதிபர் (2-3)
13 புதல்வர்
14 ஏறத்தாழ 10 மைல் தூரத்தை குறிக்கும் பழைய சொல்
15 விற்பனைப் பெறுமதி
16 யாழ் குடாநாட்டில் பேர்போன முதியோரகம் அமைந்துள்ள இடம்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 106-க்கான விடைகள்




## தமிழ்வலை-106 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ
புஷ்பம் நாகராஜா, திருச்சி.
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்
நேசன் சபாராணி, பிரான்ஸ்
த.செ. நடராசா, ரொறன்ரோ.
விநோதா வசீகரன், மார்க்கம்.
சுதர்சன் ஜெயலட்சுமி, யாழ்ப்பாணம்.
உமா கதிர், ஏஜக்ஸ், கனடா.
ஜெயரட்ணம் ஜோண், ரொறன்ரோ

### பரிசுபெறும் போட்டியாளர்

## இராசாத்தி தேவதாஸ்,

**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.





# வாழ்வுரிமை



– மா. சித்திவினாயகம்

13

***‘அசைந்து கெட்டது மனம்
அசையாமல் கெட்டது உடல்...’***

கரடிப் போக்கின் வயல்வெளிக்கப்பால் பிரபலமான அந்த வாசகம் பெரிய எழுத்தாகப் பலகையில் தொங்கியது..

வெள்ளேந்தியான செவ்வந்தி ஆட்டிற்கு அதன் அர்த்தம் உடனடியாகப் புரியவில்லை.

முந்தி UNP ஆட்சிக் காலத்தில் தமிழரை,

***‘அசைந்து தின்னுமாம் யானை,
அசையாமல் தின்னுமாம் வீடு’***

என்று இந்த கம்யூனிசக்காரர்கள் சொல்லித் திரிவார்கள். ஆனால் இதென்ன புதுசாக் கிடக்கு என்றபடி வழியால் போன மனிதர்கள் இருவர் அந்த மண்டபத்துள் நுழைவதைப் பார்த்த ஆடு, ஆர்வக் கோளாறில் புதிதாக வெள்ளையடித்த அந்த மண்டபத்துள் தானும் நுழைந்து பார்க்கத் தன் தலையை விட்டது.

உள்ளே சிலர் தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். சிலர் யோகாசனப் பயிற்சியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அசையாமல் வைக்க வேண்டிய மனதை ஓயாத சிந்தனையால் போட்டுக் குழப்பி விடுகின்றார்கள். அசைந்து உழைக்க வேண்டிய உடலை ஓரிடத்தில் வைத்து நோயோடு உழல்கின்றார்கள். அவற்றைத் தீர்க்கிற யோகா மையம் இதுவென்று யோகாசனப் பயிற்சிக்கார குரு உள்ளே விளக்கப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்.

தியானம், யோகா போன்ற மன உடல் நலப் பயிற்சிகள் மூலமாக வாழ்க்கையின் கவலை மற்றும் பயத்தைக் குறைக்க முடியும். பிறர் மீது தேவையில்லாமல் ஏற்படும் வெறுப்பு, கோபம் போன்ற எதிர்மறை உணர்ச்சிகளை அடக்கி நேர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளலாம். நம்மால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் வாழ்க்கையை நடத்த இந்தக் கலைகள் அவசியம் என்றபடி கண்ணை மூடித் தியானித்தான் அந்தப் பயிற்சிக்காரன்.

இதென்னடா இது. என்றைக்கும் ஆட்ட, ஓட்டமாய் ஓடித்திரிகிற எங்களைப் பிடிச்சு பண்ணையில அடைச்சுப்போட்டு இவனுகள் தாங்கள் உடற்பயிற்சி செய்தால் தான் நோயில்லாமல் வாழலாமாம்... அப்போ எங்களுக்கு? ஆட்டிற்குக் கோபம் கோபமாக வந்தது.

ஓட்டமும் நடையுமாக ஓடிவந்து பண்ணையின் ஞானியான தேவனிடம் இதைச் சொன்னபோது பன்றித் தேவன் சிரிப்போடு ஒன்றைச் சொன்னான்.

இந்தப் பண்ணைக்காரன் திரவியம் புதுசு புதுசாய் சிந்திக்கிற ஆள். அவன் எப்போதும் இப்படித்தான்... அவனின் மூளைக்குத் தான் இப்படியான வியாபார யுக்திகள் பிறக்கும்... இப்படித்தான் பண்ணையின் மேற்கு மூலையில் கடந்த வருடம் பரத நாட்டிய வகுப்புகளை ஆரம்பிக்கின்றோமென்று மண்டபம் ஒன்றைத் தயார்செய்து பெண்கள், ஆண்களைச் சேர்த்து அவைகளுக்கு உடுப்பு, சலங்கை, தட்டுக்களி என்று இந்தியாவில் கொள்வனவு செய்து, இங்கு பெரு விலைக்கு விற்பனை செய்து வியாபாரம் நடத்துகின்றான். உள்ளூர் வறியவர்களின் குழந்தைகள் பரத நாட்டியத்தைப் பழக மாதா மாதம் பெருந்தொகைப் பணத்தைக் கொடுப்பதோடு, பத்து வருடம் இடைவிடாது இதோடு அலைந்து அரங்கேற்றம் என்கிற பெரு நிகழ்விற்காகக் கோடி ரூபாய்களுக்கு மேல் ஏழைத் தாய் தந்தை செலவிடுகின்றார்கள்... இதில் பிள்ளைகள் அரங்கேறுகின்றார்கள் என்ற பெயரில் தங்களுக்கு விசுவாசமான அரசியல்வாதிகளை, நாட்டிய வியாபாரிகளை, அதிகாரிகளைக் கூட்டிவந்து இப்பேற்பட்ட பண்ணை முதலாளிகள் தாங்கள் பெயரெடுத்துக் கொள்கின்றார்கள். அவர்களால் தாங்களே இலாபம் பெற்றுக் கொள்கின்றார்கள். அரங்கேறிய பிள்ளைக்கோ, அதன் தாய் தந்தைக்கோ அதன் பிறகு என்ன

நன்மையென்று சிந்திப்பவரோ, கேள்வி கேட்பவர்களோ எவரும் இங்கில்லை. கடன்பட்டு அரங்கேற்றம் செய்கிற பெற்றோர் கடன் தொல்லையால் பாதி வயதிலே உயிரிழந்து போகின்ற பரிதாபத்தில் உள்ளார்கள், அல்லது தீராக் கடன்காரர்களாகி நிற்கின்றார்கள்...

இந்த ஆடுகிற பிள்ளைகளுக்கு அதனால் எதிர்காலத்தில் என்ன இலாபம் என்பதை விடவும் பண்ணை முதலாளிக்கு அது இலாபம் தருகிற பெரு வியாபாரம் என்பது தான் இங்கு பேச வேண்டிய பெரும் பொருள் என்றான் பன்றித் தேவன்.

பண்ணை விலங்குகளான நாம் பாவம். எமக்கு இவற்றின் நன்மை தீமை தெரியாது. இந்தத் தொல்லை எமக்கில்லை என்றது மூலையில் நின்ற எருது!

உனக்கில்லை தான். ஆனால் இவர்கள் எம்மினக் குரங்கைக் கூட ஆட்டம் பழக்கி காசு சம்பாதிக்கிற அநியாயக்காரர். பாம்புக்கும் ஆட்டம் பழக்கி அதனை ஆடுவித்துத் தாம் பணம் சம்பாதிக்கின்ற சாகஸக்காரர். நாய்க்குக் கூடச் சட்டை போட்டு பலே டான்ஸ் பழக்குகிற கில்லாடிகள் இந்த மனிதர்கள் என்றது பன்றித் தேவன்.

பன்றித் தேவன் சொன்னதைக் கேட்டு அமாயா நாய் நாணிக் கோணியது. பலே டான்ஸ் உட்பட அனைத்தையும் நாய் அமாயாவிற்கும் சிறு வயதில் பழக்கியிருந்தாள் வெள்ளைச்சியான ஸ்ரெவ்வனி. ஆனால் அவள், காசுக்கு ஆடவிட்டுத் தன் நாய் கற்ற கலையை விற்பவளல்ல.

என்றைக்கும் இந்த மனிதர்கள் கோளாறுதான் என்றது சுடலையாகிய காகம்... அதிலும் படிச்சவன் ஆகக் கிறுக்குப் பிடிச்சவனாயிருக்கின்றான்...

நேற்று இன்சினியர் ஏகாம்பரம் வீட்டுச் சுவரில் நான் சும்மா உட்கார்ந்திருந்தேன்.

கா... கா... என்று கத்துகிற சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன் இன்சினியர் வலிய ஓடி வந்து, ‘தாத்தா வந்திற்றார் பாருடா கண்ணா. கா... கா... என்று இன்னும் நல்லாக் கத்து... எப்பவும் ஆடி அமாவாசைக்கு அப்படியே டாணெண்டு மணியடிச்ச மாதிரி வந்துருவாரடா உங்க தாத்தா... அவர்தான் வந்திற்றார் என்று காகத்தைக் காட்டி... மகனுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான் ஏகாம்பரம்.

அவனது மூன்று வயது மகன் சொன்னான். ‘அது தாத்தா இல்லையப்பா... அது காகம்’ என்று.

‘அடே செல்லம்... அதைக் காகமென்று இன்றைக்குச் சொல்லக் கூடாது... அது தாண்டா உங்க தாத்தன்... அமாவாசைக்கு மட்டும் எங்களைப் பார்க்க உருமாறி வந்து உட்கார்ந்திருக்காரு... நம்ம தாத்தன்.’

என்று உரிமையோடு மகனுக்குப் சொன்னான் ஏகாம்பரம்.

காகமாகிய நானும் கிட்டபோய்ப் பார்ப்போமெனப் பையனுக்குக் கிட்டப் போனேன்.

‘செல்லம்... உன் தாத்தாவுக்கு உன்னில எவ்வளவு பாசமும் நேசமும்... நெருங்கி வாறாரடா உங்க தாத்தா...’

அப்பன் சொல்லப் பையன் சிரித்தான்...

நான் தத்தித் தத்தி சிறுவனுக்கு அருகில் போனேன்...

ஆடி அமாவாசைக்கு நல்ல சோறு கறி. இலையில் பொரியல், பாயாசம், வடையோடு வைத்திருந்து நீட்டினார்கள். வருசம் பூரா அண்டங்காகமென விரட்டப்படுகிற பேய்க் காகமான நான், இண்டைக்கு மட்டும் அவர்களின் தாத்தா. எத்துணை சந்தர்ப்பவாதிகள் இந்த மனிதர்கள்.

வருந்தியழும் போதும் வராத தெய்வத்தையும், தேம்பியழும் போதும் தேடாத உறவுகளையும் தான் அவர்கள் சிலையாக்கிப் படமாக்கி வைத்துக் கும்பிட்டுக் கும்பிட்டு நாடகமாடுகின்றார்கள்...

ஒருவர் இறந்த பின் அவர் பயன்படுத்திய பழைய கிழிந்த உடைகளை, அவர் உணவுகளைக் கொட்டிவிடுகிற, எரிக்கிற இந்த சந்தர்ப்பவாத மனிதர்கள் அவரது பணத்தை, நகையை, பொருட்களை அவரோடு சேர்த்து எரிப்பதுமில்லை புதைப்பதுமில்லை. தனக்குத் தனக்கென அதற்காக அவர்கள் நித்தமும் சண்டை போடுகின்றார்கள்..

சுடலையாகிய காகம் பெரு மூச்சோடு நிறுத்தியது.

எம்மில் எந்தவொரு விலங்கும் தன் இரப்பையின் மேல் இன்னொரு தொந்தி வளர்த்துத் திரிவதில்லை. சர்க்கரை நோயும், முடக்கு வாதமுமாய் ஆஸ்பத்திரிகளுக்கு அலைவதில்லை. எந்தப் பறவையும் கேடுகெட்ட இந்த மனிதர் போல கூடுகட்டி வாடகைக்கு விடுவதில்லை. எந்த விலங்கும் இன்னதெல்லாம் என் நிலமெனத் தேவையற்று நிலம் திருடுவதில்லை. பெரு உயரமாய் ஆளாளுக்குச் சிலையெழுப்பி மகிழ்வதில்லை. கூட்டு வாழ்க்கையோடு சமூகமாய் வாழ்கிற எங்களைச் சீரழிப்பவர் இந்த மனிதர் தான். ஒருவனுக்கு ஒருத்தி என்பதை அவர்கள் படத்தில் பார்க்கின்றார்கள். எங்கள் புறாக்கள் வாழ்ந்து காட்டுகின்றன. யானை மாண்டால் அதன் தந்தம் ஆபரணம்... மான் இறந்தால் மான்தோல் ஆசனம்... புலி செத்தால் புலிப்பல் வீரம்... மயிற்தோகை விசிறி... எருமை செத்தால் கூட எருமைத் தலையை வீட்டு அலங்காரமாக்குகின்ற இந்த மனிதர்... தாம் மாண்டால் உடனேயே எரித்து விடுகின்றார். இரண்டு நாட் கிடந்தால் எவருக்கும் அவசியமற்றுப் புவியெங்கும் புழுத்து நாறுகின்றது.

எழுத்துப் படிப்பும், எண்ணின் வித்தையும் மட்டுமே கற்பதல்ல கல்வி. சக இனத்தோடும், காணும் மனிதரோடும் அன்பாய் ஒன்றித்துச் சமமாக வாழ்ந்து சிறந்துகொள்ளக் கற்பிப்ப



தும் அதன் மூலம் கற்பதும் தான் கல்வி. தன் வீட்டிலேயே சலிப்பில்லாமல் உழைக்கிற அடிமை விலங்கொன்றைப் பெண் என்ற பெயரில் இலவசமாக வைத்திருக்கிற, சாதி பிரிக்கிற இந்த மக்களுக்கு எது சரியான கல்வியெனத் தெரியவில்லை. இனி நாம்தான் இவர்களுக்கு அதைக் கற்பிக்க வேண்டியிருக்கின்றது என்றான் பன்றித் தேவன்.

வண்டியிழுக்க மிருகம்... வயலுழ மிருகம்... பாலிற்கு மிருகம் என்று அனைத்திற்கும் நாம் தான் அவர்களுக்கு உறு துணை... ஆனால், இவர்களால் எமக்கோ, இந்தப் புவிக்கோ

எந்த இலாபமும் இல்லை. ஆனால், அவன் தானே எல்லாவற்றிற்கும் அதிபதியாம்... தேவன் பெரு மூச்செறிந்தான்..

எல்லா மனிதரையும் அப்படிச் சொல்ல முடியுமா என்றது வயதாளியான எருது.

நாம் காண்கின்ற பெரும்பாலானோர் அப்படித்தான் இருக்கின்றார்கள் என்றது பன்றித் தேவன். காகம் சொல்வதைப் போலஅவர்கள் காரியவாதிகள்... மூதாதைகளுக்குச் சாப்பாடு வைத்து வழிபடுகிற இந்த மனிதர்கள் மூதாதைகளைக் கொன்று தின்றவர்கள் என்றால் நீங்கள் நம்புவீர்களா? என்று தொடர்ந்தான் தேவன்...

1857-ல் ஜேர்மனியின் நிண்டேர்தல் (Neanderthal) என்னுமிடத்தில் ஆதி மனிதரான எம்மின விலங்கின் மண்டையோடு கண்டுபிடிக்கப்பட்டது. அதனுடைய காலம் 40,000 வருடங்களுக்கு மேலான பழமையானது. அந்தக் காலம் மனிதரை மனிதர்கள் உண்ட காலம். மனிதர் மனித இறைச்சியை வாணிபம் செய்தனர். அவர்களிடையே இறந்தவர்களை அடக்கம் செய்கிற வழக்கம் அன்று இருந்ததில்லை. ஆபிரிக்காவின் கொங்கோவின் ஆடவரும், பெண்களும், சிறுவரும் மனித இறைச்சிக்காக உலகமெங்கும் விற்கப்பட்ட காலமது... நியூ பிரிட்டன் தீவில் மனித இறைச்சி கடைகளில் விற்கப்பட்டது. சாலமன் தீவில் இறைச்சியடிப்பதற்காக அவர்கள் பெண்களை எம் எருதுகளை வளர்ப்பது போலத் தொழுவங்களில் கொழுப்பாக வளர்த்தெடுத்துப் பெரு விருந்துகளில் அவர்களைக் கொன்று விருந்தாக்கினார்கள். தையிட்டித் தீவில் போலனேசத் தலைவன் வெள்ளையின மனித இறைச்சிப் பொரியல் வாழைப்பழம் போல மிகச் சுவையோடிருந்ததாகத் தன்நண்பர்களுக்குச் சொல்லி மகிழ்ந்ததாக வரலாறுண்டு. வெள்ளையினத்தவரின் இறைச்சியில் அதிக உப்புக் கரிப்பதாயும், வெள்ளைக் கப்பல்காரர்களின் இறைச்சியை விடவும் உண்மையில் நல்ல ருசிமிக்கது கறுப்புமனித இறைச்சியென்றும் பீஜீத் தீவு மக்கள் குறைபட்டு வாழ்ந்த தகவல்களை 'வில்லி-யம் டூரன்ட்', 'நாகரிகத்தின் வரலாறு' எனப் பதிவு செய்ததைப் படித்த ஞாபகம் எனக்கு இன்னமும் உண்டு... பெரும்பாலான மனிதர்களின் முன்னோரான குரங்குகளின் பரிணாமக் குடும்பமான ஹோமோ முதல், நியண்டர்தால்கள் வரையான ஹோமோ சேபியன்ஸ்கள் அனைவரும் நரமாமிசம் உண்டவர்கள் எனத் தொல்லியல் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. அமெரிக்காவில் கொலம்பஸ் பார்த்த முதல் பழங்குடியினர் நரமாமிசம் உண்பவர்கள் என்பதற்கு அவனே சான்று. இப்படித்தான் இன்றைக்கு நாகரிக மானிடமாகவும், முன்னோரைப் போற்றுவதாகவும் நடிக்கும் இந்தக் கிறுக்கர்களின் கொடுமை வரலாறு என்றது பன்றி.

அவர்களது மனித இறைச்சியை உண்ணும் குணம் பசிக் கொடுமையால் மட்டும் உண்டாகவில்லை. நொறுக்குத் தீனியைப் போல எலும்புகளை உடைக்கும் போது அதனுள்ளிருக்கிற ஊன் மிகச் சுவையுடையதாயிருந்ததாம். அந்தச் சுவை காரணமாக மனித எலும்பை உடைத்து அதன் ஊனை உண்ட மக்கள் பின் அதன் இறைச்சியையும் உண்ணத் தொடங்கினார்களாம்... இன்றும் தென்கடல் தீவுப் பகுதிகளில் வாழும் மக்கள் நீளப் பன்றியை உணவாகக் கொண்டுள்ளார்களாம். நீளப் பன்றி என்பது மனிதரைக் குறிக்கும்... வீரமுள்ளவரைக் கொன்று தின்பதால் அவனுடைய வீரம் உண்பவரைச் சேர்கிறதென்ற நம்பிக்கையும் கூட நரமாமிசம் உண்போரிடம் அக்காலமிருந்தது...

ஆனாலும் நான் பார்த்த சில மனிதர்கள் இன்னமும் நல்லவர்களாய்த்தான் இருக்கின்றார்களென்றது ஆதங்கத்தோடு மீண்டும் முதிர்ந்த எருது.

எருது தன் முன்னாள் எஜமானாகிய செக்கு கணபதியைப் பற்றிக் கூறத் தொடங்கியது. கணபதி நல்ல மனிதர்... சின்னக் கன்றாக நான் இருந்த காலத்திலேயே அவர் என்னோடு பழகிப், பின் நான் வாலிப மிடுக்கில் எருதாக மாறிய பொழுதுகளில் என்னை நுகத்தில் பூட்டப் படாத பாடுபட்டுப் பழக்கியவர்.

கழுத்தில் பொற்சீந்தல் வேரைச் சுருளாக்கிப் போட்டு என் கழுத்தை வண்டி இழுக்கும் மாடாக்கிப் பணியச் செய்தவர் அவர்தான்.

கீழ்ப்படிவைக் கற்றது அவரிடம் தான். அவரும் மிக கீழ்ப்படிவான ஆள். அவருக்குக் குடும்பம் கிடையாது. நான்தான் எல்லாம். என்னோடு எல்லாக் கதைகளையும் பேசுவார். தானில்லாக் காலத்தே நிர்க்கதியாய்ப் போகப் போறியே... என்று கண்ணீர் விடுவார். சிலநேரம் கள்ளுக் குடிச்சாரெண்டால் பெருங்குரலெடுத்துப் பாடுவார். தேவாரம், திருப்புகழ் அத்தனையும் அத்துப்படி..

***'முத்தைத்தரு பத்தித் திருநகை***
***அத்திக்கிறை சத்திச் சரவண***
***முத்திக்கொரு வித்துக் குருபர... எனவோதும்...'***

என்று இராகமாய்த் தொடங்கி... மூச்சே விடாமல்,

***'...கொட்டில்நிறை எள்ளைப் பரவியெம்***
***மாட்டில் நுகம் பூட்டிச் செக்கினில்***
***ஊத்தும் நல்லெண்ணையைப் பெருமாளே !'***

என்று முடிச்சாரெண்டால் கேட்கிற ஆட்கள் கண்ணீர் விடுவினம். தேவாரம், திருப்புகழ் அறிந்த மனிதர் என்றாலும்,

***'நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பஞ்சாத்தியே***
***சுற்றி வந்த மொணமொணன்று சொல்லு மந்திரம் ஏதடா***
***நட்டகல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்***
***சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?'***

என்று தன்னுள்ளேயே இறையைக் கண்டவர். என்றைக்கும் கோவில் கோவிலாக ஏறி இறங்காதவர். பொங்கலெனில், கொம்புக்குக் கலரடித்து எனக்காகப் பொங்கி மாலையிட்டு, என்னை அலங்கரித்து ஒரு வெற்றிவீரனைப் போலப் பாடிக் கொண்டே அந்த ஊரெங்கும் கொண்டு உலாத்துவார். தன் பாட்டுக்குத் தானே கேள்வி கேட்டுப் பதிலும் சொல்லுவார்.

மாவிலித் துறையில் கரப்புக் குத்தி மீன் பிடிப்பார்... லிங்கத் தோட சூள் கொளுத்துவார்.

பரட்டைத் தலைகொண்ட சிறுவர்கள் வீட்டிற்கு இலவசமாக நல்லெண்ணெய் கொடுக்கிற நல்லவர். மற்றையோர்க்கு என் றும் நல்லதையே நினைக்கிற குழந்தைமனக் குபேரன். எவ ருக்கும் கெட்டதை அவர் ஒருபோதும் செய்து நானறியேன்.

பெண்களை ஏமாற்றிக் காரியம் சாதிக்கிற, அமரத்துவக் காத லெனக் கூறிக் குடும்பங்களைச் சீரழிக்கிற ஆண் பேய்கள் நிறைந்த ஊரில் பெண் நாடாத சித்தராக வாழ்ந்து முடித்த பிரம்மச்சாரிதான் அந்த எண்ணெய்ச் சித்தர் கணபதி.

என்னை அவரின் ஒற்றைக் கரத்தை வண்டியில் பூட்டினால், நான் அவரைச் சுமந்து, அவர் சொல்லாமலேயே அவர் வீட் டிற்கு வந்து நிற்கிற நல்ல நம்பகமான உழைப்பாளி.

செக்கின் துலாவின் மேல் அவர் உட்கார்ந்து இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி சுற்றிச் சுற்றி என் கடமை தவறா மல் எண்ணெய் ஊற்ற உதவுவேன்.

எனக்கு வைக்கோலும், புல்லும், புண்ணாக்கும் தந்து என் னைத் தன் பிள்ளைபோல புஷ்டியாக வளர்த்தார் கணபதி. பக்கத்துக் கடை நடராசாவிட்டச் சொல்லியிருந்தார். தனக்கு ஒண்டு நடந்தால் தன்ர எருதை அவர்தான் காப்பாற்ற வேணு மென... என்று கண் கலங்கியது எருது.

எருதின் கதை கேட்டு எல்லா விலங்கும் வாயைப் பிளந்தன...

மரச்செக்கு எண்ணெய் என்பது ஓர் காலத்தில் பெரு மவுசு. அதிலும் எள் எண்ணெய், மனிதர்கள் தேடி வாங்கிய சத் துள்ள மகா ஔடதம். அந்த உயிரோட்டந்தரும் எண்ணெய் தயாரிக்க மிகுந்த பக்குவமாக, நேரம், பொருட்செலவு என்ப வற்றைப் பொருட்படுத்தாமல் அன்றைய மனிதர்கள் செக் கைப் பயன்படுத்தினார்கள். மாவிடிக்கஉரல், உலக்கை, அரைப்பதற்கு அம்மி, குளவி என இருந்த அனைத்தும் இன் றைக்கு இயந்திரமாகி விட்டது. நாகரிக மனிதர் மரச்செக்கை கைவிட்டார். மாடுகளை வைத்துச் செக்கு ஆட்டுவிக்க நிறைய நேரமாகும் என்பதால் மாடுகளை இப்பொழுது யாரும் உபயோகிப்பதில்லை. ஈற்றில் செக்குக் கணபதியும் என்னைத் தனித்துவிட்டுச் செத்துப் போனார். என்னைப் பிடித்து வைத்திருந்த நடராசா அடிமாட்டு விலைக்குத் திரவி யத்தின் பண்ணைக்காக என்னை இன்று விற்று விட்டான்.

உண்மை பேசுகின்றவர், வார்த்தைகளின் அலங்காரம் அறிந் தவரல்ல. அவர் என்றைக்கும் சத்தியத்திற்கு மட்டுமே கட்டுப் பட்டிருக்கிறவர். அதனால் அவர்கள் எப்போதும் இச் சந்தர்ப் பவாத உலகில் தோல்வியடைகின்றார். பொய் பேசுகிற பித்த லாட்டக்காரர் எதை வேண்டுமானாலும் எப்போதும் சொல்லி வாழ்ந்து விடுகின்றார் என்பார் பியோதர் தஸ்தாயேவ்ஸ்கி. அதே போல் நானும், செக்குக் கணபதியும், மரச் செக்கும் இந்தப் பொய்யுலகில் தோற்றுப் போய்க் கிடப்பவர்கள். மறைந்து கொண்டிருக்கிற மரச் செக்கைக் கண்ட இறுதியான பரம்பரை நாம் தான்...

இப்போ சொல்லுங்கள் தன்னைவிட என்னை நேசித்த செக்கு கணபதி கெட்டவரா? அவர் நரமாமிசம் தின்கிற ஏமாற்றுக்கா ரனா? என்றது எருது. எருதின் இரக்கமுள்ள கண்ணீருக்கு முன் பன்றித் தேவனாலும் பதில் சொல்ல முடியவில்லை.

உலகம் தோன்றிய நாள் முதல் எந்த ஒரு விலங்கும் தன் வரம் புகளை மீறியதில்லை. இயற்கையை அழித்ததில்லை. அவற் றிற்குச் சுயநலமில்லை. ஆனால் அறிவு பெற்றதெனச் சொல் லுகிற மனிதரோ நாளுக்கு நாள் இயற்கையை அழித்த வண் ணம் நீதி பேசுகின்ற கொடியவர்.

இப்படித்தான் ஓர் நாள், நல்லெண்ணெய் வாங்க வந்த நன் றாய்ப் படித்த வாத்தியார் ஒருவர் வந்த வேளையில், கணபதி யார் அடிவளவினுள் ஒடியல் காய வைத்துக் கொண்டிருந் தார். நான் செக்கைச் சுற்றிக்கொண்டிருந்தேன். வந்தவர் சற் றும் பொறுமையில்லாமல் கணபதி... கணபதி... என்று கத்தி னார்.

தோள்த் துண்டைக் கமக்கட்டுக்குள் மடித்து வைத்தபடி வாறன் மாஸ்டர்... என்றபடி அடிவளவிலிருந்து வந்தார் கண பதி.

ஒரு போத்தல் நல்லெண்ணெய் வேண்டும் என்றபடியே வந்த வர்.

டேய் கணபதி.. நீ இந்த மாட்டைத் தனிய சுத்த விட்டிட்டு அடி வளவிற்குள் நிண்டால், மாடு சுத்தாமல் நிண்டால் என்னசெய் வாய்... என்றார் மாஸ்டர்.

சுத்தாம நிண்டால் அதின்ர கழுத்தில கிடக்கிற மணியடிக் காது. மாடு சுத்திறது, சுத்தாதது அதில தெரியும் தானே மாஸ்டர் என்றார் எண்ணெய் போத்தலைக் கொடுத்தபடியே கணபதி...

அப்போ மாடு ஒருவேளை சுத்தாமல் ஓர் இடத்தில் நின்று கொண்டு தலையை மட்டும் ஆட்டினால், அப்ப என்ன செய் வாய் கணபதி... என்றார் மாஸ்டர்.

கணபதிக்குக் கடுங்கேந்தி... என்ர மாடு உங்க அளவிற்குப் படிக்கேல்லை... இது படிக்காத மாடு மாஸ்டர்... அதுக்கு உங் கட படிச்ச கிறுக்குப் புத்தியில்லை... அதால அது நிண்டு கொண்டு தலையாட்டாது என்றார் கணபதி.

மாஸ்டர் கணபதியோடு ஒன்றும் பேசாமல் எழுந்து போய்விட் டார்... என்றது கிழட்டு எருது. விலங்குகள் ஆரவாரப்பட்டுச் சிரித்தன...

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com




நீங்கதான் சார் எனக்குச் செய்யணும்... வேறே யாரும் உதவ மாட்டாங்க இந்த வளாகத்துல...! இப்படிச் சொல்லிக் கொண்டுதான் என் முன்னே வந்து அமர்ந்தார் கோபாலக்கிருஷ்ணன். முகத்தில் அப்படியொரு கவலை. எதையோ நினைத்துப் பதறிக் கொண்டிருப்பவர் போலான தோற்றம். அப்படி நேருக்கு நேர் அமருவது அபூர்வம்... அப்படியே அமர்ந்தாலும் கண்களை நேரடியாகப் பார்த்துப் பேசமாட்டார். அது ஏனென்று எனக்குத் தெரியும். அவருக்கும் தெரியும்தான்... குற்றமுள்ள நெஞ்சு...

என்னிடம் வருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் கண்களுக்குச் சேணம் பூட்டிக்கொண்டு அமர்ந்திருப்பவன். என் மேஜையில் என் முன்னே இருக்கும் ஃபைல்தான் என் பார்வைக்குத் தெரியும். மற்ற எதையும் நான் கண்டு கொள்வதில்லை. பரந்து விரிந்த அந்த மாவட்ட அலுவலகங்களின் வளாகத்தில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள் அவருக்கு. எத்தனையோ வருடப் பழக்கம். மாடிக்கு மாடி, அலுவலகத்துக்கு அலுவலகம் எங்கு நுழைந்தாலும் அவருக்கு வரவேற்பு உண்டுதான். அதெல்லாம் உதட்டளவில் என்று இப்போது நிரூபணமாகி விட்டதோ? போயும் போயும் என்னிடம் வந்து நிற்கிறாரே! நானெல்லாம் ஒரு ஆளா அவருக்கு? என்னை லட்சியமே பண்ணாத அவருக்குத் தன்னின் அலட்சியத்தை ஒதுக்கி என்னிடம் வந்து நிற்க வேண்டிய ஒரு தருணம் வந்திருக்கிறது பாருங்கள்... அதுதான் காலத்தின் கட்டாயம்.

வருஷம் போன கடைசியில் அவர் இப்படி என்னைத் தேடிக் கொண்டு வருவானேன்? ஆளா இல்லை? இத்தனைக்கும் அவருக்கு அடுத்த கீழ் ராங்க்தான் நான். எனக்குச் சம்பளத்திற்குக் கையெழுத்திடுபவரே அவர்தான். அவர் நினைத்தால் ஏதேனும் ஒரு கிளார்க்கைக் கூட ஏற்பாடு செய்துகொள்ள முடியும்தான். முடியவில்லையோ? அல்லது நம்பிக்கையில்லையா?

என்னையெல்லாம் அவர் மதித்ததேயில்லை. அதுபற்றி நான் கவலைப்பட்டதுமில்லை. இவர்களெல்லாம் மதித்தால் என்ன, மதிக்காவிட்டால்தான் என்ன? மதிப்பதனால் ஏதேனும் பெருமை கூடிவிடப் போகிறதா அல்லது மதிக்காததினால் ஏதேனும் குறைந்து விடப்போகிறதா? இரண்டும் இல்லை. அவர் வேலை அவருக்கு. என் வேலை எனக்கு. என் மதிப்பு எனக்கு அவர் (அவ)மதிப்பு அவருக்கு.

ஆனாலும் கூடுதல் பொறுப்பிலிருக்கும் அந்த எதிர் அலுவலகத்தில் என் முகம் பார்க்க அமர்ந்து கொண்டு, வேலையைக் கவனிக்கிறாரோ இல்லையோ... என்னைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். நான் இருக்கையில் இருக்கிறேனா என்று பார்க்கிறார். வேலை செய்கிறேனா இல்லை அரட்டை அடிக்கிறேனா என்று பார்க்கிறார். எங்கே போகப் போகிறேன். நான்தான் காலையில் வந்து அமர்ந்தால் அசையாமல் பேனாவும் கையுமாகக் குத்துக்கல் போலக் கிடக்கிறேனே? அவருக்கென்ன தெரியாதா?

நான் என்ன செய்கிறேன் என்பதுதான் அவரது முக்கியமான வேலை. அவர் கவனிக்கிறார் என்பது எனக்குத் தெரியும்தான் என்றாலும், எத்தனை நேரத்துக்கு அதையே நினைத்துக் கொண்டிருப்பது அல்லது பார்ப்பது? நான் வேலை செய்ய வந்தவன். அவர் வேவு பார்க்க வந்தவர். இப்படித்தான் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

அவருக்கு வேலை முக்கியமில்லை. எல்லாம் குருட்டுக் கையெழுத்துத்தான். அதுதான் பணியாளர்கள் அவரவர் வேலைகளைப் பார்த்து விடுகிறார்களே! பிறகென்ன நீட்டின இடத்தில் கையொப்பம் இட்டால் சரி. எதற்குக் கையொப்பமிட்டோம் என்று கூட மண்டையில் ஏறுமோ ஏறாதோ? சதா அந்த 'இன்னொன்றிலேயே' கவனமாயிருந்தால்? ஆபீஸ் வருவதே அதற்குத்தான் என்றிருந்தால்? பிறகு எதுதான் விளங்கும்? புத்தியை மழுங்கச் செய்யும் அந்த இன்னொன்று!

எனக்கு என் வேலையில்தான் கவனம். இன்று எதையெல்லாம் முடிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தோடுதான் தினமும் அலுவலகத்திற்குள்ளேயே நுழைகிறேன் நான். இந்தந்தக் கோப்பையெல்லாம் புட் அப் பண்ணுங்க... என்று வந்ததும் சொல்லி விடுவேன். மதியம் வரை பார்ப்பேன். வரவில்லையெனில் நானே கோப்பினை வாங்கி அல்லது பீரோவைத் திறந்து நானே எடுத்து எழுதி விடுவேன். எவனை எதிர்பார்த்தும் நான் இல்லை. எனக்குத் தேவை என்னை எவரும் குறை கூறக் கூடாது. அவ்வளவே...! நினைத்த நேரம் நினைத்த வேலை முடியணும்... எது கேட்டாலும்... இதோ உங்க டேபிள்ல... என்று சொல்லணும். எதிராளி தலை குனியணும். கொஞ்சம் தாமதிச்சா அப்புறம் அவரே செய்துக்குவாரு... என்று இருந்து விட்டால்...? அதற்கு விடுவதில்லை. புரிந்தவர்கள் என்னிடம் வேலை கற்றுக் கொள்ளலாம். புரியாதவர்கள் தடுமாறலாம்.

அவருக்கு நேர் எதிர் அலுவலகத்தில் வாயிலுக்கு நேரே என் இருக்கை இருப்பது எனக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது. எதிர்த்தாற்போல் இருந்து, சதா என்னையே நோட்டம் விட்டுக் கொண்டிருக்கும் இந்த மனுஷரின் பார்வையிலிருந்து முதலில் மறைய வேண்டும். அதென்ன அப்படி ஒரு பார்வை? தன்னைப் போலவே மற்றவரையும் நினைக்கும் சந்தேகப் பார்வை அது!

பேசாமல் தன் வேலையைக் கவனிப்பாரா... நான் என்ன செய்கிறேன் என்பதைக் கவனிப்பதா அவர் வேலை? இடம் மாற்ற எவ்வளவோ முயன்றேன்.. அமையவில்லை. காரணம் அந்தக் கட்டடங்கள் தனித் தனியாக ரயில் கூபே போல ஒவ்வொரு திட்ட அலுவலகங்களுக்கும் பிரித்து விடப்பட்டிருந்தன. அதிகபட்சம் இரண்டு அறைகள். அதற்குள்தான் எல்லாமும். உறால் போல் ஒன்று. அலுவலரின் அறை இன்னொன்று. அந்த அலுவலரின் அறையிலும் கூட ஓரமாய் டைப்ரைட்டர், கம்ப்யூட்டர் பிரின்டர்... என்று இருந்தது. இடவசதி நெருக்கடி. அலுவலகம் எப்படி நெருக்கடியாயிருந்தால் என்ன? வரவுதான் பிரதானம்!

அப்படி அமைந்ததுதான் நான் வேலை பார்க்கும் அலுவலகமும். ஒரிஜினலாக நான் அதுநாள்வரை பணியாற்றிய துறையே வேறு. முப்பத்து மூன்று ஆண்டு காலம் சர்வீஸ் போட்டுவிட்டு, கடைசி ஒரு வருடத்திற்குப் பதவி உயர்விற்கு ஆசைப்பட்டு இங்கே விருப்பம் தெரிவித்து வந்து சேர்ந்தவன் நான். அந்தத் தகுதி இங்குதான் கிடைத்தது. அதில் அலாதிச் சந்தோஷம் எனக்கு. பச்சை இங்க்கில் கையெழுத்துப் போட வேண்டும் என்று ஆசை. சர்டிபிகேட்டுகளுக்கு அட்டெஸ்ட்டேஷன் போடும் தகுதி பெறவேண்டும். கெஜடட் ராங்க் அலுவலர்களுக்கே அது சாத்தியம்.. அந்த இடத்தை வேறு துறைக்கு மாறிக் கொள்வதன் மூலம் அடைய முடியுமானால் தவறென்ன? என்னுடைய மூலத் துறையிலேயே நீட்டித்து, பதவி உயர்வு வரும் வரும் என்று காத்திருப்பதை விட அல்லது காத்திருந்து ஏமாறுவதை விட, எனது கணக்கியல் கல்வித் தகுதியை வைத்துக் கணித்து, இந்தா பிடி... வந்து வேலையைப் பார்... என்று வரவேற்றுக் காத்திருக்கும் பரிச்சயமில்லாத இன்னொரு துறைக்குச் சென்று என் சர்வீசை அங்கே முடித்துக் கொள்வதில் என்ன தவறிருக்க முடியும்? பச்சை இங்கில் கையெழுத்துப் போடுபவரெல்லாம் யோக்கியர்களா? மனுஷரின் அடிப்படை குணத்தை இந்த இங்க் மாற்றிவிடுமா என்ன? அந்த இங்கிற்கான கௌரவம் அவரவர் கையில்... செயலில். பச்சை மையில் கையெழுத்துப் போட்டே தீருவது... அதற்கான இந்த வாய்ப்பை எவ்வகையிலும் நழுவ விடுவதில்லை... எதற்காகவும் இழக்கத் தயாராக இல்லை.. என் மனம் உறுதி செய்து கொண்டது. என் மூலமாக அந்தப் பச்சை மை கையெழுத்திற்கு ஒரு தனிப்பட்ட கௌரவத்தை அளிப்பது என்று உறுதி செய்து கொண்டேன். என்னைப் போலவேயான சிந்தனையிலும், செயற்பாட்டிலும் இன்னும் பலரும் இருந்திருக்கலாம் தானே? நான் மட்டும் என்ன கொம்பா? ஆனாலும் அதில் அப்படி ஒரு மோகம்...!

வேணாம் சார்... போகாதீங்க... கடைசி ஒரு வருஷத்துக்கு எதுக்கு முகம் தெரியாதவங்க நடுவுல போய் மாட்டிக்கிட்டு அவஸ்தைப்படுறீங்க? பேசாம இங்கயே இருந்து நிம்மதியா ரிடையர்ட் ஆகுங்க... அதான் நல்லது... அது பெரிய கடல் சார்... அங்கெல்லாம் உங்களால சமாளிக்க முடியாது. அகடிதகடனா சாமர்த்தியம் வேணும் அதுக்கெல்லாம்... துட்டு இஷ்டத்துக்குப் புழங்குற இடம் சார்... சபலமில்லாத, திரும்பிக் கூடப் பார்க்காத நீங்கள்லாம் அதுக்கு லாயக்கில்ல. உங்களுக்குப் பொருந்தவே பொருந்தாதாக்கும். பெண் பணியாளர்கள் ரொம்பவும்தான் வருத்தப்பட்டார்கள்.

ஏய்... சார் போயிருவார் போலிருக்குடி... அடுத்து எந்த கடுவன் பூனை வருதோ? எப்படிச் சமாளிக்கப் போறோமோ? நம்ம பாடு திண்டாட்டம்தான்.. பேசிக் கொண்டார்கள்.

சார்.. நீங்கல்லாம் சுணங்கலாமா சார்... நம்ம டிபார்ட்மென்ட்ல பிரமோஷனுக்கு லேட்டாகும் சார்... அடுத்த மார்ச்லதான் வரும். நீங்க டிசம்பரோட வெளில வந்துடறீங்க... எதிர்பார்த்து... எதிர்பார்த்து ஏமாந்து நிக்கப் போறீங்களா? பேசாமப் போங்க சார்... அப்புறம் எதுக்காக அக்கௌன்டன்ஸி படிச்சீங்களாம்? ஒருவேளை இங்கே கிடைக்கலேன்னா அதையாவது பிடிப்போம்னுதானே? இன்னும் கூட ஒரு வருஷம் உங்களுக்கு சர்வீஸ் இருந்திச்சுன்னா நானே உங்கள இங்கயே இருங்க சார்னுதான் சொல்லுவேன். ஒன் இயர் தானே இருக்கு. சம்பளத்துல ஒரு அப் கிடைக்கும்ல சார். ஸ்கேல் ஆப் பே...யே மாறிடும் சார்... எப்படியும் ரெண்டாயிரத்துக்குக் குறையாது சம்பளம் கூடிடும். எங்கயோ போயிடுவீங்க. எதுக்காக சார் விடுறீங்க. அதுக்கேத்தாப்ல பென்ஷனும் கூடும்ல சார்... வேலை தெரியாதவங்கதான். பயப்படணும். நீங்கள்லாம் எங்க போனாலும் சமாளிச்சிடுவீங்க. அப்புறம் ஏன் சார் தயங்குறீங்க?

பல்லக் கடிச்சிட்டு ஒரு வருஷம் ரயில்ல போயிட்டு வந்திட்டீங்கன்னா... ஃபினான்ஷியலா உங்களுக்குப் பெரிய லாபம் தானே சார்... வெளியூர்னு பார்க்காதீங்க...! ஒரு ரூம்கூட எடுத்திட்டு அங்கயே தங்கிடுங்க... வெள்ளிக்கிழமை ராத்திரி வீட்டுக்கு வந்தாப் போதும்... லட்டு மாதிரிச் சான்ஸ் சார்... நம்ப சாரு ஆபீசர் ஆயிட்டாருன்னு எங்களுக்கெல்லாம் பெருமையா இருக்கும். வீட்டுக்கு வந்து மாமிட்ட சொல்லட்டுங்களா சார்... நாங்க வர்றோம்... மாமி சம்மதிப்பாங்க. புருஷனுக்குப் பதவி உயர்வை எந்த மனைவிதான் சார் வேண்டாம்பாங்க... அது அவங்களுக்குப் பெருமையில்லையா? கண்ணை மூடிட்டுக் கிளம்புங்க சார்...

அதையும் இதையும் இஷ்டத்துக்குச் சொல்லி ஆளைக் கிளப்பியே விட்டார்கள். இனி இங்கிருந்தா பழைய மதிப்பு இருக்காது போலிருக்கே, பிரமோஷன வேண்டாம்னு சொன்ன லூசு... என்று திட்டுவார்களோ என எனக்கே தோன்ற ஆரம்பித்து விட்டது.

ஊக்கப்படுத்தியவர்களின் வார்த்தைகளே நின்றது. நானென்ன சொங்கியா? பயந்து நடுங்கறதுக்கு? ரெண்டுல ஒண்ணு பார்த்திடுவோம். அப்டியென்ன மலைய முழுங்கற வேலை? அது நம்மள முழுங்கறதுக்குப் பதிலா நாம அதை முழுங்கிட வேண்டியதுதான். சரண்டராகிக் கால்லவிழ வச்சிடவேண்டியதுதான். முடிவு செய்துகொண்டுதான் வந்து அமர்ந்திருந்தேன். பச்சை மைப் பேனா என் சட்டைப் பையில்!

கொஞ்ச நாளைக்கு ஒன்றுமே பிடிபடவில்லை என்பது என்னவோ உண்மைதான். திடீர் திடீரென்று மீட்டிங் நடந்தது. பொது மக்கள் சந்திப்பு, குறை கேட்டல், மனுப் பெறுதல்... துறை வாரியாகப் பிரித்தளித்தல்... அதில் இருபத்து நாலு மணி நேரத்தில் முடிக்க வேண்டியவை, மூன்று நாட்களுக்குள் முடிக்க வேண்டியவை... என்று ஒரே அமர்க்களமாய் இருந்தது. இங்கிட்டு அங்கிட்டு என்று அசைய முடியவில்லை



என்பதுதான் உண்மை. எந்நேரமும் பரபரப்பா... இதென்னடா இது பெரிய வம்பாப் போச்சு. தினமுமா ஆபீஸ் இப்படி மூச்சைப் பிடிக்கும்? ஒரு நாளாச்சும் ரிலாக்ஸ்டா இருந்தோம்ங்கிறது இல்லையே? தப்புப்பண்ணிட்டமோ? சிவனேன்னு நம்ப டிபார்ட்மென்ட்லயே பெஞ்சைத் தேய்ச்சிட்டு இருந்திருக்கலாமோ? இந்தப் பாடு படுத்துறாங்க...

சஞ்சலம் வந்து விட்டது மனதுக்கு. பச்சை மைக் கையெழுத்து பயப்பட வைத்தது. அப்பொழுதுதான் முடிவு செய்தேன். இனி அஞ்சரையானால் ரயிலுக்குக் கிளம்புவதில்லையென்று. ஆறு மணிக்கு டாண் என்று ஆடி அசைந்து அந்த மீட்டர் கேஜ் வண்டி வந்து நிற்கும். ரயிலுக்கு எங்காவது ஸ்டாப் உண்டா? அங்கு உண்டு. அது ஆட்சியர் தன் அதிகாரத்தில் பணியாளர்களுக்கென வாங்கிக் கொடுத்த சலுகை. இல்லையானால் டவுனுக்குள் ஸ்டேஷன் வரை போய்த் திரும்பிவர வேண்டும். சிட்டி பஸ் பிடிக்க பஸ் ஸ்டான்ட் நடக்க வேண்டும். ஆபீஸ் வந்து சேர பத்தரை ஆகி விடும். ஏன் பதினொண்ணு கூட ஆகும்தான். அதனால் உண்டான ஏற்பாடு அது. ரயில்வே நிர்வாகம் அதை ஏற்றுக்கொண்டு ஊருக்குள் நுழையும்முன் அந்த ஸ்டாப்பில் நின்று பணியாளர்களை இறக்கி விட்டுச் சென்றது.

ஒருவருக்கொருவர் டாட்டா காண்பித்து விடைபெற்றுக் கொள்ளும் கண் கொள்ளாக் காட்சி மறக்க முடியாதது. டவுனுக்குள் சென்று இறங்கி அங்கேயுள்ள வங்கி, அலுவலகங்கள் என்று செல்லும் மீதிப் பணியாளர்களும் இருந்தார்களே...! அவர்க

ளுக்குத்தான் இந்த விடை கொடுத்தல்.

மாலை அதுபோல் அவர்கள் முதலில் ஏறி வர, இங்கு வந்து நிற்கும் ரயிலில் நாங்கள் ஏறிக் கொள்வோம். எங்களுக்குள் புத்தகங்கள் பறிமாறிக் கொள்வதுண்டு. விஷய ஞானமுள்ள எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? ஒன்றுமே தெரியாத ஆளாய் இருந்திருக்கிறோமே என்று நான் என்னைப்பற்றி நினைத்த துண்டு.

இனி மாலை ரயிலுக்குக் கிளம்புவதில்லை என்று நான் முடி வெடுத்த வேளையில்தான்... பலரும் சொன்னார்கள்.

எல்லா நாளும் இருக்கணும்ங்கிறதில்லை... கேம்ப் முடிச் சிட்டு சீஃப் சில நாளைக்குச் சாயங்காலம் வருவாரு... உடனே மீட்டிங் போடுவாரு... டெண்டர் இருக்கும் சில நாளைக்கு. அது ஓப்பன் பண்ணி... கான்ட்ராக்டர்களுக்கு ஒதுக்கீடு ஆணை கொடுத்தாகணும். அந்த மாதிரி முக்கியமான நாள்ல மட்டும் இருங்க... போதும். எதுக்கு அநாவசியமா அலட்டிக்கிறீங்க... புதுசுதானே நீங்க. கொஞ்சநாள்ல எல் லாம் பழகிடும். கடலலை என்னைக்கு ஓயறது? எல்லாம் அப்டி அப்டித்தான்னு மைன்ட் பண்ணாமப் போயிட்டேயி ருக்க வேண்டியதுதான். பி...ரிலாக்ஸ்... நோ... டென்ஷன். நானும் அந்தக் குட்டையில் ஐக்கியமானேன். அதாவது நேரம் காலம் இல்லாமல் வேலை பார்ப்பது. கெதியாய்க் கிடப்பது. என் பேனாவிற்குப் பங்கம் வராமல் பாதுகாப்பது. அதாவது என் கையெழுத்தைக் கௌரவப்படுத்துவது.

அவர் போட்டுட்டாருல்ல... அப்புறம் என்ன? கண்ணை மூடிட்டு அப்ருவ் பண்ணலாம்... அதுதான் நான்.

சார்...உங்களுக்கு டயமாச்சு...கிளம்பலயா? பெறவு ரயில் போயிடும்... கருணாகரன் என்ற அந்த சீனியர் மோஸ்ட் அஸிஸ்டென்ட் என்னை உசுப்ப ஆரம்பித்தார். ஒருவேளை இதற்கு மேலும் நாம் இங்கிருப்பது இவர்களுக்கு ஏதேனும் இடைஞ்சலாய் இருக்குமோ... அதுதான் இப்படி விரட்டுகிறார் களோ என்றும் தோன்றியது எனக்கு.

நானும் அந்தச் சூழ்நிலைக்குப் படிப்படியாகப் பழகிக் கொண்டேன் என்றே வைத்துக் கொள்ளுங்களேன். இருக்கும் நேரத்தில் துளி நேரத்தையும் வீணாக்காமல், கருமமே கண் ணாக வேலை பார்க்க ஆரம்பித்தேன். என் வேகத்திற்கு ஆபீ சில் இருப்பவர்களால் ஃபைல் போட முடியவில்லை என்றே சொல்லலாம். அரசுக்கு அனுப்ப வேண்டிய பிரேரணைகளை அத்தனை சுடிதமாகத் தயார் பண்ணினேன் நான்.

என்னா சார்... இந்த டிபார்ட்மென்ட்லயே பழம் தின்னு கொட்டை போட்ட ஆள் மாதிரி... ஆனாலும் ஜெட் வேகம் சார் உங்க வேல... எங்களால ஈடு கொடுக்க முடில... என் மனம் மானசீகமாகப் பெருமைப்பட்டது.

தாமதங்கள் எதுவுமின்றி கோப்புகள் நகர்ந்து கொண்டிருந் தன. பழைய பென்டிங்கெல்லாம் கரைய ஆரம்பித்திருந்தன. எதுக்கு இப்படித் தோண்டித் தோண்டி எடுக்கிறாரு? நாமளா தூக்கி நட்டமா நிறுத்தப் போறோம் டிபார்ட்மென்ட்டை? என் றும் முனகிக் கொண்டார்கள். மனிதர்கள் சராசரிகள்தானே என்பதையும் அவ்வப்போது நிரூபித்தார்கள்.

இதனால்தான் அந்த மனுஷர் அந்த ஆபீசே கதின்னு கிடக் காரோ? இங்க எட்டியே பார்க்க மாட்டேங்கிறாரே? காலைல வந்து அட்டன்டென்சை சைன் பண்ணிட்டுப் போறதோடு சரி... டேபிள்ல ஏதாச்சும் இருந்தா கையெழுத்துப் போடுறாரு. மத் தப்படி எதிர்த்தாப்லதான் கதியாக் கிடக்காரு?

அங்கதான சார் இத விடப் பைசா... அடிஷனல் சார்ஜ்ல இருக்கைல அடிச்சாத்தான முடியும். இங்க வழக்கமா உள் ளது எப்படியும் கைக்கு வந்து சேர்ந்துரும். அங்க கூடுதல் பொறுப்புல உள்ளது கைய விட்டுப் போயிடக் கூடாதுல்ல? அதிலெல்லாம் சாரு ரொம்பக் கவனமா இருப்பாரு. நீங்க வேறே அவருக்கேத்தாப்ல அமைஞ்சிட்டீங்களா.. எதுக்கு இந்த ஆபீசப் பத்திக் கவலப்படப்போறாரு? அதான் மூக்குல வேர்த்த மாதிரி உங்களையே பார்த்திட்டிருக்காருன்னு வேறே சொல்றீங்க...! அவருக்கெல்லாம் சொல்லிக் கொடுக்கணுமா சார்... எம்டன் சார்... இதுலயே ஊறித் திளைச்சவரு சார்... எது எது... எப்டி எப்டின்னு கரைச்சுக் குடிச்சவரு சார்... கில்லாடி யாக்கும்.

தங்கள் அலுவலகத் தலைமையைப்பற்றி அந்தப் பணியாளர் களே எவ்வளவு பெருமையாய்க் கூறுகிறார்கள்? இவர்களை அவர் கண்டுகொள்வதில்லை. அதனால் அவரை இவர்கள் கண்டுகொள்வதில்லை. அங்கங்கே கைமாற வேண்டியவை கள் முறையே கால நிர்ணயமாய் நடந்தேறிக் கொண்டிருக் கின்றன. பின் யார்தான், எதைப்பற்றித்தான் கவலைப்பட்டாக வேண்டும்? பரஸ்பர மதிப்பற்றுப் போன இடம்.

கவலையெல்லாம் வேலையை மட்டும் செய்து வந்து போய்க் கொண்டிருப்பவனுக்குத்தான். பயப்படுபவன் பயந்து கொண் டேயிருக்க வேண்டியதுதான். உதறிச் செல்பவன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கடந்து போக வேண்டி யதுதான். அதற்கு மேல் சொல்வதற்கு அங்கு பெரிதாக ஒன் றுமில்லை.

சார்.. வேலையெல்லாம் முடிச்சிட்டீங்கல்ல. ஃப்ரீயாத்தான இருக்கீங்க? எதிரில் அமர்ந்திருந்த கோபாலக் கிருஷ்ணனின் கேள்வியின் குரல் தணிந்து சோகமாய் வெளிவருவதை உணர்ந்தேன் நான்.

ஏன் சார்? என்ன பிரச்னை? உங்களுக்கு என்ன வேணும்? சொல்லுங்க...

ஒண்ணுமில்லே... இந்தக் காம்ப்ளெக்ஸ் பூராவும் உங்களப் பத்தித்தான் பேசிக்கிறாங்க...

என்னன்னு சார்...? ஏதாச்சும் தப்பா...!

ஐயையோ... அதுக்குத்தான் நாங்க இருக்கமே... ரொம்பப் புகழ்ந்து பேசிக்கிறாங்க... அதைச் சொல்ல வந்தேன்... லேசாய்ச் சிரித்துக் கொண்டார். அதில் கூட ஒரு சிறு வேதனை இருப்ப தாய்த் தோன்றியது. தன்னிரக்க நகைச்சுவை.

இன்னும் என்னன்னே நீங்க சொல்லலை... புதிர் போட்டுட்டே இருக்கீங்க...?

என்ன இருந்தாலும் மேலதிகாரி...

சொல்லியனுப்பினால் நானே வந்திருப்பனே சார்... நீங்க ஏன் வந்தீங்க...? கனிவோடு கேட்டேன்.

இதுவும் என் ஆபீஸ்தானே... ரெகுலர் போஸ்ட் இதுதானே... அதுதானே அடிஷனல் சார்ஜ்... அங்கெல்லாம் நீங்க வர

வேண்டாம்ன்னுட்டுத்தான் நானே புறப்பட்டு வந்தேன்... இப்ப என்னடான்னா நிலைமை திடீர்னு மாறிடுச்சு...!

தன் ஆபீசர் இருக்கையில் உட்கார்ந்து என்னை அழைத்திருக்கலாம். பதிலாக எனக்கு எதிராக வந்து யதார்த்தமாய் அமர்ந்து விட்டாரே!

எதையோ சொல்லத் தயங்குகிறார் என்று புரிந்தது எனக்கு. அங்கெல்லாம் நான் வரக்கூடாது என்றால் என்ன அர்த்தம்? அதென்ன பாபப்பட்ட இடமா? எல்லாமும் ஆபீஸ்தானே? அங்கேயும் இதே பணியாளர்கள்தானே இருக்கிறார்கள். தலைமையாக இவர் இருக்கிறார். கூடுதல் பொறுப்பு. அவ்வளவுதானே?

ஏன் சார் நான் வந்தா என்ன? நீங்க கூப்பிட்டீங்கன்னா வந்துட்டுப் போறேன்.

வேண்டாம்ங்க... அங்க ஆளுக சரியில்லை... யாரும், எவனும் நம்பிக்கைக்குரிய ஆளுகளாத் தெரியல... பயமா இருக்கு. எந்த நேரம் என்ன பண்ணுவாங்களோன்னு. தந்திரக்கார ஆசாமிங்க அங்க இருக்கிறவங்க. ஆனாப் பாருங்க... அத்தனை பேரும் சீனியர்ஸ். அதுனாலதான் பயப்பட வேண்டியிருக்கு! நீங்க அங்க வந்தீங்கன்னா ஒருவேளை நீங்களும் மாறினாலும் போச்சு...! சிரித்துக் கொண்டார்.

நீங்க எதுக்கு சார் பயப்படணும். அவுங்களுக்கு பாஸ். இதச் செய். அதச் செய்ன்னா செய்துட்டுப் போறாங்க. Do what I say..ன்னுட்டுப் போங்க. அவ்வளவுதானே?

அப்படியெல்லாம் அவங்ககிட்ட கட்டன்ரைட்டாப் பேச முடியாதுங்க. அது ஒரு மாதிரி ஆபீசாக்கும். ஏண்டா அடிஷனல் சார்ஜ்ன்னு நொந்து கிடக்கேன் நான். குரலில் அலுப்புத் தெரிந்தது.

எங்கள் பேச்சை எழுத்தர்கள் கவனியாததுபோல் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. பார்த்தால் அவரவர் வேலையில் ஈடுபட்டிருப்பதுபோல்தான் தெரியும். ஆனால் கவனம் முழுதும் இங்கே...!

ஆபீஸ் வேலைக்குத்தானே சார் சொல்றீங்க... சொந்த வேலைக்கா? அப்புறம் என்ன தயக்கம்?

அதுக்கே அவுங்ககிட்டல்லாம் ஸ்டிரிக்டாப் பேச முடியாது சார்... இதப் பாருங்க ஆர்டர... நேத்து சாயங்காலமே வந்திருச்சு... இங்க வந்திருக்கணுமே வரல்லையா? என் நேரத்தப் பாருங்க? எல்லாம் என் தலைவிதி...!

அவரின் இயலாமையை, திறனற்ற தன்மையை நினைத்து எனக்குச் சிரிப்பும் வந்தது. அதே சமயம் பரிதாபமாயும் இருந்தது. என்னவோ ஆர்டர் என்கிறாரே? வாங்கிப் பார்த்த எனக்கு ஆச்சரியம்...

என்ன சார் இப்டி...? திடீர்னு? என்று அதிர்ந்தேன் நான்.

திடீர் திடீர்னுதான் இங்கே எல்லாமும் நடக்குது. வேலை செய்றதை விட கோள் மூட்டி விடுறவனும், புறம் சொல்றவனும் தான் சார் இங்க கெட்டிக்காரங்க. புரிஞ்சிக்குங்க. வேலை ரெண்டாம் பட்சம்தான். யார் யாரு சீஃப்புக்கு நெருங்கியிருக்கான்ங்கிறதுதான் முக்கியம். அரசியல்வாதி வந்தா நம்மள ஒதுங்குங்க... ஒதுங்குங்கன்னு விலக்குவாரு...கவனிச்சிருக்கீங்களா?

அப்ப இனிமே இங்கே நீங்க அடிஷனல் சார்ஜா? அது ரெகுலரா? அதிர்ந்து போய்க் கேட்டேன்.

உங்களப்பத்தி சீஃப்கிட்டே யாரோ சொல்லியிருக்காங்க போல்ருக்கு. அப்போ இந்தாள அங்க ரெகுலராப் போட்டுட்டு இதை கூடுதல் பொறுப்பாக்கிடுங்கன்னுட்டாராம் பாஸ்...

ஆமா சார்... ஆர்டர் வந்திருக்கு... தபால்ல வச்சிருக்கனே... என்றவாறே எழுந்து வந்தார் கருணாகரன் அசிஸ்டன்ட்.

முக்கியமான தபால்னா உடனே சொல்ல மாட்டீங்களா? டேபிள்ல வச்சாப் போதுமா? என்ன நீங்க? கடிந்து கொண்டேன் அவரை.

நல்லா பைசா கிடைக்குமென்று அங்கு கூடுதல் பொறுப்பைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்ட ஆசாமி இப்பொழுது அதுவே ரெகுலர் என்றாகும்போது ஏன் சளைத்துக் கொள்கிறார்? எதற்காகப் பயப்படுகிறார்? இன்னும் உரிமையோடு அள்ளலாமே? பகிர்ந்து உண்டு பல்லுயிர் ஓம்புக... என்கிற நன்னெறி தெரியவில்லையோ?

சரி.. நீங்க இன்னும் தபாலே பார்க்கல போலிருக்கு... பார்த்து வைங்க... நான் அப்புறமா வர்றேன்... இந்த ஆபீஸ் அடிஷனல் சார்ஜ் எனக்கு. சி.டி.சி. ரெடி பண்ணனும். நீங்கதான் முழுசாப் பார்த்துக்கணும். அந்தத் தைரியத்துலதான் நான் அங்க உட்கார்ந்திருக்கேன். அப்புறம் பார்க்கலாம். சொல்லிக்கொண்டே எழுந்து கிளம்பினார் கோபாலக் கிருஷ்ணன். வந்த விஷயம் முடிவதற்குள் மனதில் என்னவோ வந்துவிட்டது. ஆள் பதட்டமாகவே இருந்தார். அவருக்கு இன்னும் நான்கு மாதங்களோ ஆறு மாதங்களோதான் இருந்தன ஓய்வு பெறுவதற்கு. வம்பு தும்பு எதுவுமில்லாமல் ஓய்வு பெற வேண்டுமே என்கிற பயம் வந்துவிட்டது போலும். எல்லோருக்கும் உள்ளதுதான் அது. கடைசி நேர டென்ஷன். எதிலும் மாட்டிக் கொள்ளாமல், எந்தக் கறையும் படாமல், கறையிருந்தாலும் வெளிப்படாமல், எந்தக் குற்றச்சாட்டு நடவடிக்கையும் இல்லாமல் வெளியேற வேண்டுமே!

எவன் பி.ஏ. சார்னு கூப்பிடுறான்... எல்லாப் பயலுகளும் கோபாலக் கிருஷ்ணன்... கோபாலக் கிருஷ்ணன்னுதான் ரகசியமாக் கூப்பிடுறாய்ங்க. இந்தக் குறை அவர் மனதில் ஆழமாய் வேறூன்றியிருந்தது.

ஓய்வு பெறும் நாளன்று மாலை ஐந்து மணிக்கு மேல்தான் ‘வயது மூப்பில் ஓய்வு பெற அனுமதியளிக்கப்படுகிறது’ என்கிற ஆணை வந்து சேரும். அதுவரை வயிற்றைக் கலக்கும். கெதம்... கெதம் என்றிருக்கும். எவராவது, என்னத்தையாவது மொட்டையைப் போட்டு நிறுத்தி விடுவாரோ, நிறுத்தியிருப்பாரோ என்கிற உதறல் மனதுக்குள் ஓடிக்கொண்டேயிருக்கும். இது தப்பு செய்தவருக்கும் சரி, செய்யாதவருக்கும் சரி... காரணம் மர்மமான நடவடிக்கைகள் பலவும் புழங்கும் இடம் அது.

ஓய்வு பெற அனுமதி என்று ஆணை கிடைத்து விட்டாலும் அதற்குப் பிறகும் ஏதேனும் பாதகம் நேரக் கூடுமோ என்றெல்லாம் மனம் பதைக்கும். இதற்கெல்லாவற்றிற்கும் நடுவிலே தான் ‘கெட்டுகெதர்’ ஃபங்ஷனும் நடந்தேறும். மனது விட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்த முடியாமல், உள்ளுக்குள் நடுங்

கிக்கொண்டே பார்ட்டியை அட்டென்ட் பண்ண வேண்டியிருக்கும். பகைத்துக் கொண்டவன், முறுக்கிக் கொண்டவன், முணுக்கென்றவன், மனதுக்குள் திட்டியவன், ஒத்துழைக்காதவன், விருப்பமில்லாமல் வந்தவன், மரியாதையில்லாமல் முனகியவன், முதுகுக்குப் பின்னே கேலி செய்தவன் என எல்லாத் தரப்பினரும் வேறு வழியின்றி வந்து அமர்ந்து இனிப்பு, காரம், காப்பி என்று அருந்தி, புகழ்ந்து நாலு வார்த்தைகள் பொய்யாய்ப் பேசி, கைகுலுக்கி அசடு வழிந்து மாலை போட்டு, துண்டு போர்த்தி மரியாதையோடு அனுப்பி வைத்துப் பிரிந்து செல்வார்கள்.

ஃபாக்ஸ் வந்திச்சா... ஃபாக்ஸ் வந்திச்சா? என்பதற்குத் தகவல் சொல்ல அமர்த்திய ஆள் இன்னும் வரவில்லையே என்று துடிதுடித்துக் கொண்டிருக்கும் வேளையில்... கையில் அந்த ஜெராக்ஸ் நகலோடு ஆள் பரபரத்து வந்து கொண்டிருக்கையிலும் கூட அது ஓய்வு பெற அனுமதியளித்த ஆணைதானா இல்ல வேறேதாவதா? என்கிற சந்தேகம் உதித்து வயிற்றைக் கலக்க... சார் ஆர்டர் வந்திடுச்சு... என்று கொண்டு வந்தவன் குரலெடுத்து, சிரித்த முகத்தோடு கொடுத்த பின்னால்தான் உயிரே நிலைக்கும்.

யப்பாடா... இருங்க... முதல்ல பாத்ரூம் போயிட்டு வந்திடறேன் என்று ஓடுவார் அந்த ஓய்வு பெறும் அலுவலர். ஓய்வு பெற்றவர்களின் நடவடிக்கைகளைக் கண்ணுற்றிருந்த எனக்கு இதையெல்லாம் புரிய வைத்திருந்தது.

சார்... குட் மார்னிங் சார்... மெல்ல அழைத்துக் கொண்டே அருகில் வந்து அமர்ந்தார் கருணாகரன். யாரானாலும் பக்கத்தில் வந்தால் நிற்கக் கூடாது என்று சொல்லியிருந்தேன் நான். அது பியூனானாலும், டிரைவரானாலும், நேற்றுப் பணியில் சேர்ந்த கிளார்க் ஆனாலும் அப்படித்தான் என்னைப் பொறுத்தவரை. கௌரவம், மரியாதை என்பதெல்லாம் நாம் இருப்பதைப் பொறுத்துத் தானே அமையும் என்பது என் நம்பிக்கை.

சொல்லுங்க கருணா... என்றவாறே அவர் முகத்தைப் பார்த்தேன்.

கோபாலக் கிருஷ்ணன் நேத்து வந்தார் சார்... நீங்க போனப்புறம்...

எவ்வளவு சர்வ சாதாரணமாகத் தன் உயர் அதிகாரியைப் பெயர் சொல்லி அழைக்கிறார்கள்? மூன்றாம் நபரிடம்தான் எனினும் பெயர் சொல்லலாமா? பி.ஏ. சார் என்று சொல்ல வேண்டியதுதானே? இதைத்தான் சொல்லி நேற்று வருத்தப்பட்டாரோ?

எதுக்காக? சற்று உன்னிப்பாய்க் கேட்டேன்.

அவருக்கு உங்களால காரியமாக வேண்டியிருக்காம். அந்த ஆபீஸ்ல யாரும் செய்ய மாட்டேங்கிறாங்களாம்...!

ஏன்? அவர்தானே அவங்களுக்கு பாஸ். அவர் சொன்னாச் செய்துதானே ஆகணும்?

அதெல்லாம் சின்னச் சின்னத் தனி ஆபீஸ்கள்ல நடக்கும் சார். இந்த மாதிரிக் கடல்ல நடந்தேறுமா சார். இது பெரிய கிடங்கு சார்...

என்ன சொல்ல வர்றீங்க... புரியல? உண்மையிலேயே அந்தப் பூடகம் எனக்குப் புரியவில்லைதான்.

வந்தவுடனே, சார் போயிட்டாரா? அதுக்குள்ளயுமா? டிரெயினுக்குக் கரெக்டா கிளம்பிடுறாரு தவறாம... கொஞ்சம் இருக்கக் கூடாதான்னு சலிச்சிக்கிட்டார் சார்.

அப்புறம்? மனதுக்குள் சிரித்துக் கொண்டே கேட்டேன் நான்.

அவுரு டெய்லி அப்படித்தான் சார் போறாரு. அஞ்சரையானாப் பையத் தூக்கிடுவாரு. டெண்டர் ஓப்பனிங், மீட்டிங்னு இருக்கிற அன்னைக்கு மட்டும்தான் இருப்பாருன்னேன் சார். அதுக்கு என்ன சொன்னாருங்கிறீங்க?

என்ன சொன்னாரு? பதறாமல் கேட்டேன். முதல் முறையாக உதவியாளர் கருணாகரன் அப்பொழுதுதான் என்னிடம் மனம் விட்டுப் பேசுகிறார் என்று தோன்றியது எனக்கு.

ஏன்யா... பைசா வர்ற எடத்துல அப்டியெல்லாம் நேரத்துக்குக் கிளம்ப முடியுமா? ஒரு மணி நேரம், ரெண்டு மணி நேரம் கூட இருந்திட்டுத்தான் போகணும். ட்ரெயின் போனாப் போகுது. பஸ்ல போயிக்க வேண்டியதுதான்.. அப்புறம் சாதாரண கிளார்க்குக்கும் இவருக்கும் என்னய்யா வித்தியாசமின்னுட்டார் சார்...

அவுரு காசு வாங்க மாட்டாரு சார். அதத் தெரிஞ்சிக்குங்கன்னேன் சட்னு... அதிர்ந்து போனாரு உடனே!

என்னது? காசு வாங்க மாட்டாரா? காசு வாங்க மாட்டாரா? ன்னு திருப்பித் திருப்பிக் கேட்டுட்டேயிருந்தாரு சார். அந்தச் செய்தியே அவருக்கு அதிர்ச்சியா இருந்திச்சு. முகத்துல புதுப் பயம் வந்த மாதிரி ஆயிட்டாரு.

வந்த புதுசுலயே அதக் காண்பிச்சிட்டாரு. கான்ட்ராக்டர் ஒருத்தரு உள்ளே நுழையும் போது ரூபா நோட்ட இவர் சட்டைப் பையில எதிர்பாராமத் திணிச்சிட்டார். அதுக்கே பழிச் சண்டைக்குப் போயிட்டாரு. வச்ச நீங்களே எடுத்திடுங்கன்னு அந்த ரூபாயக் கையால கூடத் தொடலன்னு சொன்னேன் சார். அவுரு என்ன கேட்டார் தெரியுமா சார்? அதான் சார் படு ஜோக்?

என்ன கேட்டாரு? முழுவதும் சொல்லுங்க என்றேன். நான் கேட்பதை விட, இந்த மாதிரிச் செய்திகளைப் பிறரிடத்தில் வாய்விட்டுச் சொல்வதில் ஒரு தனி உற்சாகம் அவர்களுக்குள் பொங்குவதாய் உணர்ந்தேன் நான். வம்பு பேச யாருக்குத்தான் பிடிக்காது? அதிலும் இது துட்டுப் பகிரும் விஷயம்!

அப்போ அவருக்குச் சேரவேண்டிய காசெல்லாம் என்னாச்சுன்னு கேட்டுட்டார் சார். கூடவே நீங்க பிரிச்சு எடுத்துக்கிட்டீங்களா?-ன்னு எங்களக் கொக்கி போடுறார் சார். கான்ட்ராக்டரே வச்சிக்கிட்டாரு... நாங்க ஒண்ணும் தொடலன்னு சொல்லிட்டோம். அதுல நம்பிக்கையே வல்ல அந்தாளுக்கு. இப்போ எப்படி வந்து நிக்கிறாரு பார்த்தீங்களா சார்? காரியக்கார ஆளு சார். தன் காரியக் கெட்டி! இந்தாளுக்கு எதுவுமே செய்யக் கூடாது சார். படு மோசமான ஆளு. அதான் சார் எல்லாரும் போட்டுப் பார்க்கிறாங்க...!

அதுசரி... எதுக்கு வந்தாரு? சொல்லாமலேயே போயிட்டாரே. ஆளு பதட்டமாவே இருந்தாருங்கிறீங்க? ஏன்னே புரியலையே? விடாமல் கேள்வி போட்டேன்.

அது வேறொண்ணுமில்ல சார்... அவருக்குப் பென்ஷன் ப்ர

போசலை அந்தாபீஸ்ல போடாம இழுக்கிறாங்க. ஏ.ஓ-கிட்ட எத்தனையோ வாட்டி சொல்லிப் பார்த்துட்டாராம். செய்றேன்... செய்றேன்ங்கிறாரேயொழிய யாரும் செய்றாப்ல இல்ல. குறைஞ்சது மூணு மாசத்துக்கு முன்னாடியாவது பென்ஷன் ப்ரபோசல் ஏ.ஜி-க்குப் போயாகணுமில்லையா சார்... அங்க ஆளத் தவிக்க விடுறாங்க. இவரால ஆட்சியர் கிட்டயும் போய் நிற்க முடியாது ஏன்னா இந்தாளு வண்டவாளம் பெரி சுக்கு நல்லாத் தெரியும். மல முழுங்கின்னு அதான் சமயம் வாரபோது வசம்மா போட்டுப் பார்க்குறாங்க.

அதுக்காக ஒருத்தர் ஓய்வு பெறுவதற்கு முன்னால ப்ரபோசல் போய்ச் சேர வேண்டாமா? அப்புறம் பென்ஷன் எப்டி வாங்கு வாரு? ரெகுலர் சார்ஜ் அங்கதான ப்ரபோசல் போடணும். கடைசி ஸ்டேஷன் அதுதானே?

அந்தாபீஸ்ல பயங்கர சில்ர கொழிக்கிற இடம், கேம்ப் போகுற இடமெல்லாம் வாரி வளைக்கிறாராம். லம்ப்பா அடிக் கிறாராம். ஒரு கான்ட்ராக்டர விடமாட்டார் சார். தேடித் தேடிப் போவாரு. ஆபீஸ் ஸ்டாஃப் யாருக்கும் பங்கு கொடுக்கிறதில் லயாம். ஏ.ஓ-வே புலம்புறாரு. தனக்கானதையும் சேர்த்து அவரே சுருட்டிர்றாருன்னு. அவுங்கவுங்களுக்குன்னு உள்ள பர்சன்டேஜ்ஜைக் கொடுத்திட்டாத்தான சார் பிரச்சினையில் லாம இருக்கும். இல்லன்னா சிக்கல்தான சார். நீங்க இந்த வளாகத்துல இருக்கிற பியூன்கள், டிரைவர்கள், கிளார்க்கு கள்னு எல்லாருக்கும் சம்பள நிர்ணயம், லீவ் சாங்ஷன், அரி யர் பில்னு போட்டுக் கொடுத்தீங்கல்ல. அதனால் எல்லாரும் உங்களப் பத்திப் பேச ஆரம்பிச்சிட்டாங்க. அது காதுல விழுந்து போச்சு போலிருக்கு. ஐயா வந்து நிக்கிறாரு. அநே கமா அதுக்காகத்தான் இருக்கும்னு நினைக்கிறேன் சார்...

எதுக்கு? பென்ஷன் ப்ரபோசலுக்கா? என்று புரியாமல் கேட் டேன் நான். ஒரு அலுவலருக்கே இந்த நிலைமையா? அது சரி அலுவலர் அலுவலராய் இருந்தால்தானே? நினைத்துக் கொண்டேன்.

அது மட்டுமில்ல சார்... அவருக்கு இன்னும் பே கமிஷன் ஃபிக் கேஷனே போடலை சார். சம்பளமே நிர்ணயிக்கலே. அதப் போட்டுட்டுல்ல பென்ஷனுக்கு அனுப்பணும். அது வந்தப் பிறகுதானே மத்த பெனிஃபிட்ஸ் சிக்கல்தான் சார். ஓய்வு பெற்று வெறுங்கையோட வீட்டுக்குப் போக வேண்டிதான்...

அய்யய்ய...அப்படீன்னா சம்பள நிர்ணயம் அப்ரூவாகி அப்பு றம்தானே பென்ஷனுக்குப் பிரேரணையே அனுப்ப முடியும்? இன்னும் எவ்வளவோ இருக்கே...! ஆள் வசமா மாட்டிக்கிட் டார் போலயே...!

அதான் சார் மனுஷன் எதுவும் ஓடாம பதட்டமா உங்ககிட்ட வந்து நிக்கிறாரு. ஒண்ணு தெரியுமா சார்... முக்கியமானது சொல்றேன் அவுரு ப்ளூ இங்க்லதான் சார் எப்பவும் கையெ முத்துப் போடுவாரு. பச்சை இங்க்கே தொட மாட்டாரு. அந் தப் பேனாவே நமக்கு ஆகாதும்பார். பச்சை இங்கைப் பார்த் தாலே அவருக்கு அலர்ஜி சார்...

இதுக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்? எதுக்காக அப்படி?

இனம் புரியாத பயம்தான். வேறென்ன சார்? மனசாட்சி உறுத் துது. எல்லாரும் ப்ளூ இங்க் பேனாலதான் எழுதுறோம். ஆனா ஆபீசர்ஸ் பச்சை இங்க் பேனாதான் யூஸ் பண்ணு வாங்க. பார்த்திருக்கோம். இவரு அதத் தொடக்கூட மாட்டாரு சார்... கீழேயிருந்து படிப்படியா ப்ரமோஷன்ல வந்தவர். அந் தத் தயக்கமாக் கூட இருக்கலாம். கேட்டா வேணாம்யா கலெக்டர் பர்ப்பிள்ல போடுறாரு நாம சைடுல பச்சைன்னா சரிக்குச் சமமாத் தெரியும். அது சரிவராதுன்னு சொல்லிடு வார் சார்...நீங்களும் படிப்படியா பிரமோஷன்ல வந்தவர்தான சார்? நான் பச்சைலதான் போடுவேன்னுல்ல நீங்க பிடிவாதம் பண்றீங்க? அந்த தைரியம் அவருக்குக் கிடையாது சார்... அதுக்கு ஒரு தனி மரியாதை எப்பவும் உண்டு சார். ரொம்பக் கவனமா இருப்பார். இந்த வளாகத்துல இருக்கிற ஆபீஸ் கள்ல பலரும் அப்படித்தான். எல்லாம் ப்ளூ இங்க்தான். அவுங்கவுங்க செயலே அவுங்கவுங்க மனசு. அவ்வளவுதான். அதுக்கு ஒரு கௌரவத்த ஏற்படுத்துறது அந்தந்த நபரோட பொறுப்பு. அப்படித்தான் சொல்லியாகணும். மனசுதான சார் கோயில்? நான் கருணாகரனையே பார்த்துக் கொண்டிருந் தேன்.

மனசுதான் கோயிலென்றால் நூறு சதவிகிதம் இங்கே சுத்தமா கவல்லவா இருந்தாக வேண்டும்? அப்படியா இருக்கிறது? கீழிருந்து மேலே வரை மனிதர்கள் சராசரிகள்தான் என்பதை யல்லவா உணர்த்திக் கொண்டிருக்கிறார்கள்? அத்தி பூத் தாற்போல் ஓரிருவர் தங்களை நேர்கோட்டில் நிறுத்திக் கொள் கிறார்கள். அவ்வளவுதானே? பெரும்பாலானோர் உலகத் தோடு ஒட்ட ஒழுகல் என்று கைகோர்த்துத்தானே அலைகி றார்கள்?

தங்களுக்குப் பாஸாக இருந்த ஒரு அலுவலரைப் பற்றிப் பணியாளர்கள் என்னவெல்லாம், எப்படியெல்லாம் புகார் சொல்ல வேண்டிய நிலை வந்து விடுகிறது? ஆற்றோடு போகும் நீர்... அய்யா குடி... அம்மா குடி... அதுதானே?

இந்த எல்லாவற்றிற்கும் எது காரணம்? நேர்மையற்ற செயற் பாடுகள். மனிதரின் ஆசை...! முரணான ஆசைகள். தெரிந்தே செய்யும் தவறுகள். அதுவே அவரவர் துன்பத்திற்கான கார ணங்கள்...! நான் இப்படித்தான் எண்ணிக் கொண்டேன்.

மறுநாள் அலுவலகம் வந்து சேர்ந்த போது என் இருக்கைக்கு எதிரே முன்னதாகவே வந்து அமர்ந்திருந்தார் கோபாலக் கிருஷ்ணன். முகம் மிகுந்த வாட்டமாயிருந்தது. இதென்ன... சோகமே உருவாய் இப்படி...?

வணக்கம் சத்தியமூர்த்தி சார்... எனக்கு நீங்கதான் செய்ய ணும். என் பணி ஓய்வுப் பலன்களையெல்லாம் நீங்கதான் வாங்கித்தர ஏற்பாடு பண்ணனும். பிரபோஸல் அனுப்பணும். உங்களத்தான் நான் நம்பியிருக்கேன். உங்கள விட்டா இங்க வேறே யாரும் எனக்குச் செய்துதர மாட்டாங்க... நான் பீஸ்ஃபுல்லா ரிடையர்டாவது உங்க கைலதான் இருக்கு என்றவாறே என் இரு கரங்களையும் இறுகப் பற்றி இழுத்து முகம் புதைத் துக் கொண்டார் கோபாலக் கிருஷ்ணன். கை விரல்களில் ஈரம் படர்ந்த போது அவர் அழுகிறார் என்பதை என்னால் உணர முடிந்தது. அவர் உடம்பு குலுங்கியது. என் மனம் இரங்கியது. அவருக்கு உதவ வேண்டும் என்றுதான் இசைந்தது.



ushadeepan@thaiveedu.com

# பாலைவனம் பற்றிய குறிப்புகள்

– ஜிஃப்ரி ஹாசன்



அலங்காரம் நிறைந்த தோரணங்கள் எங்கும் தொங்கிக் கொண்டிருந்த மண்டபம் ஒன்றுக்குள் கூட்டம் நடந்து கொண் டிருந்தது. பாலைவனத்துக்குச் செல்லவிருக்கும் சில மனிதர் களைக் கொண்ட அந்தக் கூட்டத்தில் பல்வேறு தலைப்புக ளில் சில பிரமுகர்கள் உரையாற்றிக்கொண்டிருந்தனர். கிட் டத்தட்ட விண்வெளிக்குச் செல்பவர்கள் போல் அவர்கள் ஒவ் வொருவரும் காணப்பட்டனர். அவர்களது பயணத்தைப் பற்றி பல்வேறு கோணங்களில் பார்வைக்கு கிட்டத்தட்ட பிரபல இருத்தலியல் தத்துவவாதி சார்த்தரைப் போன்று தென்பட்ட ஆனால் மூக்குக் கண்ணாடி அணியாத ஒருத்தர் பேசிக் கொண்டிருந்தார். அவரையடுத்து, உருவத்தில் கிட்டத்தட்ட பிரபல இஸ்லாமிய சமூகவியலாளர் கலாநிதி அலி ஷரிஅத் தியைப் போன்று காணப்பட்ட ஒருவர் பேசத் தொடங்கி இருந் தார். மிக நீண்ட நேரமாக, ஆனால் மிக அற்புதமாக அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் பின்வருமாறு:

'மனிதர்கள், மரங்கள், சோலைகள், அருவிகள், நீரோடை கள் என எதுவுமே இல்லாத, ஏன் பறவைகளின் பாடலையோ, ஓடைகளின் சங்கீதத்தையோ கேட்க முடியாத ஒரு காலைக் காட்சியையோ, ஒரு மாலைக் காட்சியையோ காண முடியாத ஒரு பாலைவனத்துக்கு நீங்கள் செல்லப் போகிறீர்கள். உல கில் உள்ள இடங்களால் மிகக் கெட்டதும், மிகக் குரூரமான தும் பாலைவனமாகத்தானிருக்க வேண்டும் என நான் சிந்தித் துக் கொண்டிருந்த தருணத்தில்தான் உங்களின் இந்தப் பயண அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. ஒட்டகங்களால் மட் டுமே பயணிக்க முடிகிற பாலைவனத்தை நோக்கி நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் அந்தப் பயணம் எவ்வளவு கொடிய தாக, துயர் நிறைந்ததாக இருக்கும் என இப்போது எண்ணிப் பார்க்கிறேன்.

பாடப்புத்தகங்களுக்கூடாகவும், தொலைக்காட்சிப் பெட்டிக ளுக்கூடாகவுமே உங்களுக்கு பாலைவனம் பரிச்சயமாக இருக்க முடியும். வெறும் காட்சியாக மட்டுமே அதனைப் பார்த்த நீங்கள், அதனை உங்கள் வாழும் இடமாக மாற்றிக் கொள்ளப்போவதாக அறிவித்திருப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கிறது. ஒரு புவியி யலாளன் என்ற வகையில் உங்களுக்கு பாலைவனம் பற்றி நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய இருக்கிறேன். இங்கு நமது தலைக்கு மேலே அதோ இருக்கிறதே அந்த வானம் அது நீங்கள் செல்லவிருக்கும், உலகின் ஓர் உன்னத இட மாக நீங்கள் தெரிவு செய்திருக்கும் அந்த பாலைவனத்துக்கு மேலாலும் விரிந்திருக்கும். நமது இந்த வானத்திலிருக்கும் சூரியனின் வெப்பக் கதிர்கள் மேகங்கள் அதன் கீழிருப்பதால் நம்மை பெரிதளவுக்கு சிரமப்படுத்துவதில்லை. இன்னும் பற வைகள் பறக்கும். இதில் இரவானால் நிலவு வரும். நட்சத்தி ரங்கள் கண் சிமிட்டும். மார்கழி வந்தால் மழை கூடப் பெய் யும்.

ஆனால் பாலைவனத்துக்கு மேலால் இருக்கும் வானம் எவ்வ ளவு கொடியது. அதில் நெருப்பைக் கக்கும் ஒரு சூரியனைத் தவிர வேறெதுவும் இருப்பதில்லை. அங்கு நீங்கள் ஒரு வரட் சியான உபயோகமற்ற பெருவெளியில் தனித்துவிடப்பட்ட தைப் போன்று உணர்வீர்கள். உண்மையைச் சொல்வதா னால், அத்தகையதொரு பாலைவனத்துக்குப் போவது நீங் கள் உங்களது ஆன்மாவையே போக்கிக் கொள்வதற்கு ஒப் பானது. அத்தகையதொரு கருமத்தை ஆற்றுவதற்காக இப் போது இந்த மண்டபத்துக்குள் ஒரு தற்காலிக ஓய்வுக்காக நீங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள். எவ்வளவு அற்புத மான மனிதர்கள் நீங்கள். உங்கள் உடல்களை உறிஞ்சப் போகும், தோலை உரித்து வியர்வைத் துளிகளால் உங்களை போர்த்தப் போகும், அழகான உங்கள் முகங்களை கோடுக ளாலான சித்திரத்தைப் போல் சிதைத்து விடக் காத்துக்கிடக் கும் ஒரு பாலைவனத்தை நோக்கி போகவிருக்கும் நீங்கள் ஒரு தற்காலிகமான ஓய்வில் எவ்வளவு ஒய்யாரமாக இருக்கி றீர்கள்.

அந்தப் பாலைவனம் உங்களுக்கு வேண்டாம். இடங்களால் அது மிகக் கடினமானது. அங்கு உங்களுக்கு கிடைக்கவிருப்

பது வியர்வையும், கண்ணீரும், இன்னும் சில சகிக்க முடியாத வேதனைகளும்தான். நெருப்பால் செய்யப்பட்ட மழையையும் காற்றையுமே உங்களால் அங்கு அனுபவிக்க முடியும். அந்த சூரியனுக்கு திமிர் அதிகம். அதன் காற்றுக்கு எக்களிப்பு அதிகம். தயவு செய்து நீங்கள் அங்கு போய்விடவேண்டாம் என உங்களிடம் கெஞ்சிக் கூத்தாடுகின்ற அனுபவசாலிகளை, அறிவுஜீவிகளை எவ்வளவு மோசமாக நீங்கள் அலட்சியம் செய்கிறீர்கள்.

நண்பர்களே! நீங்கள் அமர்ந்திருக்கும் நாட்காலிகளைப் பாருங்கள். எவ்வளவு அலங்காரமானவை. எவ்வளவு அற்புதமான வேலைப்பாடுகளால் செய்யப்பட்டுள்ளது. அது, நீங்கள் உங்கள் புட்டத்தை வைத்து உட்கார்ந்து இருப்பதற்கு எவ்வளவு வசதியாக இருக்கிறது. அது உங்களை தன் முதுகில் எவ்வளவு நேரமாக சுமந்து கொண்டிருக்கிறது. உங்களைச் சுமந்து கொண்டிருக்கும் அந்தக் கதிரைகள் ‘எழுந்திருங்கடா சோம்பேறிகளே!’ என எப்போதாவது கூச்சலிட்டு தன் கால்களால் உங்களை உதைத்திருக்கிறதா? இல்லை, நான் ஒரு கதைக்குக் கேட்கிறேன் - உங்களால் ஒரு நிமிடமேனும் அந்தக் கதிரைகளைத் தூக்கி தலையில் வைத்திருக்க முடியுமா? உங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் கதிரைகளையே உங்களால் தாங்கிக் கொள்ள முடியாத போது, உயிர் கொல்லும் பாலைவனத்து வலிகளை எப்படித்தான் சகித்துக் கொள்ளப் போகிறீர்களோ?

கதிரை ஒரு நல்ல குறியீடாக என்னை அறியாமலே வந்து விழுந்துவிட்டது. எங்களில் பலர் கதிரைகளுக்காக மிகவும் வருந்தி உழைக்கிறோம். பின் அந்தக் கதிரைகளில் இருந்து கொண்டு பிறரை வருத்துகிறோம். உண்மையில் பாலைவனத்தால் வறுக்கப்படப்போகும் எங்கள் பிரச்சினைகளை கதிரைகள் மீது அதீத நம்பிக்கை கொண்டு போட்டி போட்டுக் கொண்டிருப்பவர்கள் அலட்டிக்கொள்ளப் போவதில்லை. ஆனால் அத்தகையவர்களை கடவுளுக்கு சமமாக நீங்கள் கருதுவதைத்தான் நான் மிகுந்த ஆச்சரியத்துடன் பார்க்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு பாலைவனத்துக்குச் செல்வதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது. பாலைவனத்தின் மணல் வெள்ளையாக இருக்கிறது என்பதற்காக, பாலைவனத்தில் மணல் மலைகள் இருப்பது உண்மை என்பதற்காக, நீண்ட வெளியாகத் தடைகளற்றுக் கிடக்கிறது என்பதற்காக உங்களது வசிப்பிடமாக அல்லது புகலிடமாக நீங்கள் அதனைத் தெரிவு செய்திருப்பதை அறியாமையின் பாற்பட்டதாகத்தான் நான் பார்க்கிறேன். பாலைவனத்தில் உண்மையில் உங்களுக்கு என்ன இருக்கிறது? மேலே அலங்காரமற்ற வானமும், கீழே வெறும் மணலும்தான். அப்படிப்பட்ட ஓர் இடத்தை உங்கள் புகலிடமாக்கிக் கொண்டது குறித்து உங்களில் ஒவ்வொருவரும் வெட்கப்பட வேண்டும்.

நீங்கள் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பூமி உங்களுக்கு நீண்ட நெடுங்காலமாகவே அநீதி இழைத்து வருவதை நான் அறிவேன். இந்தப் பூமியின் சட்டங்கள் சில வேளை உங்களுக்கு சங்கடமாக இருக்கலாம். அதன் தத்துவங்கள் எப்போதும் உங்களுக்கு தலையிடியையே தரலாம். இப்பூமியின் மேற்பரப்பிலுள்ள கட்டுப்பாடுகள், விதிகள், மனிதர்கள் என எல்லாமும் அதிகாரத்தின் குறியீடாகி உங்களை அச்சுறுத்தலாம். இந்த மண் உங்களது கனவுகளை, சுதந்திரத்தை, நீங்கள் எழுத நினைத்த கவிதையை, பாட முயன்ற பாடலை, வரையத் துடித்த ஓவியங்களை வன்முறைகொண்டு சிதைத்திருக்கலாம். நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தப் பூமி சில அதிகார மனிதர்களால் நீங்கள் வாழப் பொருத்தமற்றதாக மாற்றப்பட்டிருக்கலாம். அவைகளை நானும் அப்படியே ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இது தொடர்பில் அடியேனின் தாழ்மையான கருத்துகளையும் முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த மண்ணில் நாங்கள் ஏற்றுக் கொண்ட கொள்கைகளுக்கப்பால், நாம் உணரும் உண்மைகளுக்கப்பால் நுண்ணிய சில மெய்மைகள் இருக்கின்றன. சோகம் மண்டிய தணிந்த குரல்களில் அவை எங்களுடன் உரையாடுகின்றன. துரதிஸ்டம் என்னவென்றால், இரைச்சல் நிறைந்த, குரூரமான மனிதர்களின் கூக்குரல்களைத் தாண்டி அவை எங்கள் காதுகளை வந்தடையாமலே போய்விடுகின்றன. நரகத்தின் பொறுப்பாளர் மாலிக் அவர்களுக்கு நரகவாதிகளின் எந்தப் பேரிரைச்சலும் கேட்பதில்லையாம். கேட்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் அவ்வாறு படைக்கவும் பட்டிருக்கிறார். தாங்க முடியாத வேதனையில் நரகவாதிகள் ஏக குரலில் ஆர்ப்பாட்டமாய் அலறும் சத்தம் எப்போதாவது இருந்துவிட்டு மாலிக்குக்கு கேட்குமாம். அப்போது மாலிக் ‘சும்மா கிடவுங்கள்’ என ஒரு வார்த்தையை மட்டுமே உதிர்ப்பாராம். அவர் அப்படிப் பேசுவது அவருக்கு அப்படிக் கட்டளை இடப்பட்டிருப்பதனால் ஆகும்.

இந்தப் பூவுலகில் நரகவாதிகளின் கூக்குரலைப் போலன்றி மெல்லிய குரல்களில் மெய்மைகள் எங்களை நோக்கி பேசிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், நாங்களும் மாலிக்கைப் போன்று அந்தக் குரல்களுக்கு செவிசாய்த்தலின்றி, அதன் மீது எதுவித ஈடுபாடுமின்றி உணர்ச்சியற்றுக் கிடக்கிறோம். ஆனால் நாங்கள் அப்படி விதிக்கபட்டிருக்கவில்லை என்பதுதான் வெட்கத்துடன் ஒத்துக் கொள்ள வேண்டிய உண்மையாக இருக்கிறது.

நமது மண்ணின் நட்புகள் மிகவும் அருவருக்கத்தக்கதாக, அசிங்கமானதாக மாறிப்போயுள்ள இந்த யுகத்தில் நான் இந்த மண்ணைப் புகழ்ந்து பேசுவதாக நீங்கள் முணுமுணுக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். உண்மையில் உங்கள் முணுமுணுப்புக்கு அர்த்தம் இருக்கிறது. இந்த மண்ணில் மனித வாழ்க்கை அர்த்தங்களை இழந்து வருகிறது. அர்த்தத்தை இழந்த வாழ்வு உபயோகமற்றது. உண்மையில், வாழ்வென்பது அர்த்தங்கள் பற்றிய பிரக்ஞைதான். எனவே, அர்த்தங்களற்ற வாழ்வோடு இந்த மண்ணில் மல்லுக் கட்டுவதே நம் விதியா? அர்த்தத்தை தொலைத்த இந்த மண்ணின் வாழ்வை விடவும் வேறு முட்டாள்தனம் உண்டா?



இவை போன்ற கேள்விகள்தான் கூட்டத்திலிருக்கும் உங்கள் மண்டைகளை குடைந்து கொண்டிருக்கும் என்று நம்புகிறேன். ஆனால் நமது மண்ணுக்கு பாலைவனத்துக்கில்லாத ஒரு வனப்பு இருக்கிறது, நாகரிகம் இருக்கிறது, சுவாரஸ்யமான வரலாறு இருக்கிறது, துரதிஸ்டவசமாக அவை இந்தப் பூமி யின் மேற்பரப்பில் காணப்படுவதில்லை. அவை இந்த பூமி

யின் ஆழத்துள் புதைந்து கிடக்கின்றன. பாலைவனத்தில் கிடந்து கஷ்டப்படுவதை விடுத்து இந்த மண்ணைத் தோண்டி அதன் அர்த்தங்களை நீங்கள் கண்டுபிடிப்பீர்களேயானால், நீங்கள் உண்மையில் ஒரு புத்திசாலித்தனமான நடவடிக்கையை மேற்கொள்கிறீர்கள் என பாராட்டப்படுவீர்கள்.

ஆனால் நமது மண்ணின் மரங்கள், செடி கொடிகள், புற்பூண்டுகள், நீரோடைகள், ஆறுகள், மலைகள் எல்லாமும் மிகப் பழைமையானதாகவும், இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த யுகத்துக்குப் பொருத்தமற்றதாகவும் நீங்கள் கருதுகிறீர்கள்.

பழைய உளுத்துப் போன இந்த மரத்தில் உயிர் மேல் ஆசையுள்ள எவரும் ஏற முடியாது என நம்புகிறீர்கள். இங்குள்ள ஆறுகள் மனிதர்கள் குளிப்பதற்கான தகுதியை இழந்து கன நாளாயிற்று என நினைக்கிறீர்கள். உங்களைப் பொறுத்தவரை நமது குளங்களெல்லாம் பாழடைந்து விட்டன. மலைகளெல்லாம் பார்ப்பதற்குத்தான் மலைகள். உண்மையில் அவை வெறும் பஞ்சுக் குவியல்கள்தான். எனவே, எதுவும் உறுதியற்ற ஒரு மூடநம்பிக்கையின் பாற்பட்ட வெறும் மண்ணாங்கட்டியாக இந்த மண் இருக்கையில் அறிவியலை ஆராதிக்கும் ஒரு புத்திஜீவித்துவ வாழ்க்கை இங்கு எப்படிச் சாத்தியம் என்பதாக உங்கள் கேள்வி அமைந்து விடுகிறது. உங்களது இந்த சந்தேகங்கள் அல்லது கேள்விகள் அறிவியில் பயங்கரவாதமாக வெளிப்படுகின்றன என்று நான் கருதவில்லை. அறியாமையின் பயங்கரம்தான் இது என்று நினைக்கிறேன்.

இவை உளுத்துப் போன மரங்களாயினும் நிழல்கள் தருகின்றனவே - அதற்காகவேனும், பாழடைந்த ஆறுகளாயினும் வெப்பக் காற்றை குளிர்விக்கின்றனவே - அதற்காகவேனும், பலமிழந்த மலைகளாயினும் அழகியலுக்காகவேனும் காணக் கிடைக்கின்றனவே - அதற்காகவேனும், வாசமிழந்த மலர்களாயினும் வண்ணங்கள் கிடைக்கின்றனவே - அதற்காகவேனும் இவற்றை நீங்கள் நேசிப்பதை நான் விரும்புகிறேன். மரங்கள் வளர முடியாத, குளங்கள் அமைக்க முடியாத, மலைகள் முளைக்க முடியாத, பூக்கள் மலர முடியாத ஒரு பாலவனத்தை விடவும் இந்த மண் மேலானது. இந்த மண் மகிமை மிக்கது... வாருங்கள் இங்குள்ள மலைகளை உறுதியாக்குவோம். ஆறுகளை சுத்திகரிப்போம். மரங்களை திடப்படுத்துவோம். மேலும் ஒரு நந்தவனத்தை அமைப்போம். மனிதர்களை வளப்படுத்துவோம். அப்போது நாங்கள் காண விரும்பும் ஒரு வலுவுள்ள, வனப்புள்ள பூமியையும், அர்த்தம் நிறைந்த வாழ்வையும் நாம் காணலாம்...’

அதுவரைக்கும் பொறுமையாக இருந்த கூட்டத்தில் சலசலப்பு ஏற்படத் தொடங்கியது. கூட்டம் கூச்சலிடத் தொடங்கியது. பேச்சாளரின் பாதுகாப்புக் காரணங் கருதி, அதற்கு மேல் பேச அவர் அனுமதிக்கப்படவில்லை. பாலைவனத்தை அவர் இழிவுபடுத்திவிட்டதாக கூட்டத்தில் குரல்கள் எழத் தொடங்கின. பேச்சாளர் பாதுகாப்புக் கருதி அவசர அவசரமாக மேடையிலிருந்து வெளியேற்றப்பட்டார். கூட்டத்தை ஒழுங்குபடுத்தி இருந்தவர்கள் பரபரப்பாக சில தீர்மானங்களை நிறைவேற்றினர். நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் பின்வருமாறு:

தீர்மானம் இல. 01
பாலைவனத்துக்கெதிரான கொள்கைகளை உடையவர்கள் அடிப்படைவாதிகள் அல்லது பயங்கரவாதிகள் எனக் கருதப்படுவர்.

தீர்மானம் இல. 02
பாலைவனத்துக்கெதிரான கருத்துகள் வெறும் அடிப்படைவாத சீற்றமாகவே கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக இறுதியாகப் பேசியவரின் உரை ஓர் அடிப்படைவாதச் சீற்றமாகும்.

தீர்மானம் இல. 03
பாலைவனத்தில் மரம் வளர்த்தல், குளங் கட்டுதல், மலை உருவாக்குதல் போன்ற பணிகளை சிரமமாகக் கருதுபவர்களின் பயண அனுமதி முன்னறிவிப்பின்றி இரத்துச் செய்யப்படும்.

தீர்மானம் இல. 04
மதச்சார்பற்றவர்களுக்கும், பின்-நவீனத்துவம் எனும் மெகா தத்துவம் பற்றிய அறிவுடையவர்களுக்கும் பாலைவனப் பயணத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

தீர்மானம் இல. 05
இறுதியாகப் பேசியவர் பாலைவனம் பற்றிய எந்தவித அடிப்படை அறிவுமற்றவர்.

ஏனைய 6 முதல் 10 வரையான தீர்மானங்கள் கூட்டத்தில் வாசிக்கப்படவில்லை. அவற்றை ஏற்றுக் கொள்ளக்கூடிய துணிச்சல் இந்த நூற்றாண்டு மனிதர்களுக்கு இல்லாததால் அவை மர்மப்படுத்தப்படுகின்றன.

கரகோசத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.



jiffry.hassan@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com     Fax: 1-416-849-0594     Tel: 1-416-857-6406***




விளாடிமர் என்ற நகரில் இவான் டிமிற்றிவிச் அக்சியோனொவ் என்ற வணிகன் ஒருத்தன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு இரண்டு கடைகளும் ஒரு வீடும் சொந்தமாக இருந்தன.

அக்சியோனொவ் அழகானவன். வெண்ணிறச் சுருள் முடியுடையவன். நிறைந்த வேடிக்கையும் பாடுவதில் மிகவும் விருப்பமும் உடையவன். இளம் வயதாக இருக்கையிலேயே மது அருந்தவும் வெளிக்கிட்டிருந்தான். அதிகம் மது அருந்தியிருந்தால் பெரும் கலகமும் செய்வான். ஆனால் மணம் முடித்த பின் மதுவருந்துவதை நிறுத்திவிட்டான். அவ்வப்போது அருந்துவதை விட.

ஒரு கோடை காலத்தில் ஒருநாள் அக்சியோனொவ் நிஷ்னிச் சந்தைக்குச் செல்ல வெளிக்கிட்டான். தன் குடும்பத்திற்குச் சென்று வருகிறேன் என்று சொன்னான். அப்போது அவனுடைய மனைவி, ‘இவான் டிமிற்றிவிச், இன்றைக்கு நீ குடிக்காதே. ஏனென்றால், நான் நேற்றிரவு உன்னைப் பற்றிக் கெட்ட கனவொன்று கண்டேன்.’

அக்சியோனொவ் சிரித்து விட்டு, ‘நான் சந்தைக்குப் போனவுடன் களியாட்டம் ஆடத் துவங்கி விடுவேன் என்று நினைக்கிறாயா ?’ என்றான்.

அவனுடைய மனைவி, ‘நான் எதற்காகப் பயப்படுகிறேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் ஒரு கெட்ட கனவொன்றைக் கண்டேன். அதற்காகத்தான் பயப்படுகிறேன். நீ நகரத்திலிருந்து திரும்பி வந்து தலையிலிருந்து தொப்பியை எடுத்தபோது உன்னுடைய தலைமுடி முழுவதும் நரைத்திருந்ததைக் கண்டேன். அது கூடாது. அது கெட்ட கனவு,’ என்றாள்.

அக்சியோனொவ் சிரித்துவிட்டுச் சொன்னான். அதுவொரு அதிர்ஷ்டமான கனவு. நான் என்னுடைய பொருட்கள் அத்தனையையும் விற்று விட்டு, உனக்குச் சில பரிசுப் பொருட்களையும் கொண்டு வருவேன், இருந்து பார்,’ என்றான்.

அப்படிக் குடும்பத்திற்கு விடை சொல்லி விட்டுத் தன் வண்டியில் ஏறிச் சென்றான்.

அவன் பயணத்தில் அரைவாசித் தூரம் கடந்தபோது அவனுக்குத் தெரிந்த இன்னொரு வணிகனையும் கண்டான். அவர்கள் இருவரும் அன்றிரவு ஒரே விடுதியில் தங்கினார்கள். இருவரும் ஒன்றாகத் தேநீர் அருந்தினார்கள். அடுத்தடுத்த அறையில் தூங்கவும் சென்றார்கள்.

அக்சியோனொவ் காலையில் நேரம் சென்று தூங்கும் வழக்கமுடையவனல்ல. காலை இன்னும் குளிர்ச்சியாக இருக்கையிலேயே அவன் தன் பயணத்தைத் துவங்க நினைத்துத் தன் வண்டியோட்டியை அழைத்து, அதிகாலையில் குதிரைகளை வண்டியில் கட்டச் செய்தான்.

பின்னர், விடுதியின் எதிரேயிருந்த குடிசையில் வாழ்ந்த விடுதி உரிமையாளரிடம் விடுதிக் கட்டணத்தைச் செலுத்தி விட்டுத் தன் பயணத்தைத் துவங்கினான்.

ஒரு இருபத்தைந்து மைல் தூரத்தைக் கடந்த பின் குதிரைகளுக்குத் தீனி கொடுப்பதற்காக வண்டியை நிறுத்தி விட்டு, விடுதிக்குப் போகும் பாதையொன்றில் சற்று நேரம் இளைப்பாறினான். பின் விடுதி முகப்பிற்குச் சென்று தண்ணீரைச் சமோவார் பாத்திரத்தில் சூடாக்கச் சொல்லி விட்டுத், தன் கிட்டாரை எடுத்து வாசிக்கத் துவங்கினான்.

திடீரென்று மூன்று குதிரைகள் பூட்டிய வண்டியொன்று மணியடித்துக் கொண்டு வந்து நின்றது. அதிலிருந்து ஒரு அதிகாரி இறங்கினார். அவருக்குப் பின்னால் இரண்டு படைவீரர்களும் இறங்கினார்கள். அதிகாரி அக்சினோயொவிடம் வந்து அவன் யார், எங்கே இருந்து வருகிறான் என்ற கேள்விகளைக் கேட்கத் துவங்கினார். அக்சினோயொவ் அவற்றிற்கு முழுப் பதில்களையும் சொல்லி விட்டு, ‘என்னுடன் தேநீர் அருந்த வரமாட்டீர்களா ?’ என்று அவர்களைக் கேட்டான். ஆனால் அதிகாரியோ மேலும் பல குறுக்குக் கேள்விகளைக் கேட்டார். ‘நேற்றிரவு நீ எங்கே தங்கினாய் ? தனியாகவா அல்ல, இன்னொரு வணிகனுடனா ? அந்த வணிகனை இன்று காலையில் கண்டாயா ? ஏன் நீ அதிகாலையில் அந்த விடுதியை விட்டு வெளியேறினாய் ?

அக்சியோனொவ் இந்தக் கேள்விகளை ஏன் கேட்கிறார்கள் என்று வியந்தான். இருந்தும் நிகழ்ந்தவை எல்லாவற்றையும் விபரித்தான். அத்துடன், ‘என்னை ஒரு கள்வனைப் போலவோ கொள்ளைக்காரனைப் போலவோ எண்ணிக் கேள்வி கேட்கிறீர்களே ஏன் ? நான் என் வியாபாரம் சம்பந்தமாகப் பயணம் செய்கிறேன். என்னை இப்படிக் கேள்வி கேட்கத் தேவையில்லை,’ என்றான்.

அந்த அதிகாரி தன்னுடன் வந்த இராணுவ வீரர்களை அழைத்தார். பின், 'நான் இந்த மாவட்டத்தின் பொலிஸ் அதி காரி. நேற்றிரவு விடுதியில் உன் கூடத் தங்கிய வணிகன் தொண்டை அறுக்கப்பட்டு இறந்துள்ளான். அதனால் உன்னை விசாரிக்கிறேன். உன்னுடைய உடைமைகளை நாங்கள் தேட வேண்டும்,' என்றான்.

இராணுவ வீரர்களும் பொலிஸ் அதிகாரியும் அக்சினோ யொவ்வின் பயண மூட்டைகளினுள்ளே தேடினார்கள். சடுதி யாக அதிகாரி ஒரு பைக்குள்ளிருந்து ஒரு கத்தியை வெளியே எடுத்து, 'யாருடைய கத்தி இது ?' என்று கத்திக் கேட்டான்.

அக்சினோயொவ் தன்னுடைய பொதிக்குள்ளிருந்து இரத்தம் தோய்ந்த கத்தியொன்றை எடுத்ததைக் கண்டு பயந்து போனான்.

'இந்தக் கத்தியில் எப்படி இரத்தம் வந்தது ?'

இக்சினோயொவ் பதிலளிக்க முயன்றான். அவனால் ஒரு வார்த்தையைக் கூடப் பேச முடியவில்லை. திக்கித் திணறவே முடிந்தது. 'எனக்குத் தெரியாது. இது என்னுடையதல்ல.' அதன் பின் பொலிஸ் அதிகாரி சொன்னார். 'இன்று காலை, அந்த வணிகன் தொண்டை வெட்டப்பட்டுக் கட்டிலில் கிடந் தான். உன்னால் மட்டுமே அதைச் செய்திருக்க முடியும். வீடு உள்ளால் பூட்டப்பட்டிருந்தது. அங்கே வேறெவரும் இருக்க வில்லை. உன்னுடைய பைக்குள் இந்தக் கத்தி இருக்கிறது. உன்னுடைய முகமும் பாவனைகளும் உன்னைக் காட்டிக் கொடுக்கின்றன! எப்படி நீ கொன்றாய் என்பதை எனக்குச் சொல். எவ்வளவு பணம் அவனிடமிருந்து களவெடுத்தாய் ?'

அக்சினோயொவ் தான் அதைச் செய்யவில்லை என்றும், வணிகனுடன் சேர்ந்து தேநீர் அருந்திய பிறகு அவனைத் தான் காணவில்லை என்றும், தனக்குச் சொந்தமான ஆயிரம் றூபிளைத் தவிர தன்னிடம் வேறு பணம் எதுவுமில்லை என் றும் அந்தக் கத்தி தன்னுடையதில்லை என்றும் சத்தியம் செய்தான். ஆனால் அவனுடைய குரல் உடைந்து போய் விட் டது, முகம் பளுப்பேறி விட்டது, அச்சத்தால் நடுங்கினான், குற்றம் இளைத்தவன் போல.

பொலிஸ் அதிகாரி அவனைக் கட்டிப் போட்டு வண்டியில் ஏற் றும்படி தன் இராணுவ வீரர்களுக்குக் கட்டளையிட்டார். அவர் கள் அவனுடைய கால்களைக் கட்டிப் போட்டு, வண்டியில் வீசியபோது அவன் சிலுவைக்குறி போட்டுக் கொண்டு விக்கி விக்கி அழுதான். அவனிடமிருந்த பணத்தையும் பொருட்க ளையும் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அவனை அரு கேயிருந்த ஒரு நகரத்திற்கு அனுப்பி அங்கே சிறையில் வைத்தார்கள். விளாடிமரில் அவனுடைய குணநலனைப் பற்றி விசாரித்தார்கள். அந்த நகரத்தில் வாழ்ந்த வணிகரும் பிறரும் முந்தைய காலத்தில் அவன் குடித்துத் தன் நேரத்தை வீணாக்கினான், ஆனால் நல்லவன் என்று சொன்னார்கள். அதன் பிறகு வழக்கு நடந்தது. றியாசானிலுள்ள ஒரு வணி கனை அவன் கொலை செய்ததாகவும் அவனிடமிருந்து இரு பத்தி ஐயாயிரம் றூபிள்கள் கொள்ளையடித்ததாகவும் குற் றஞ் சாட்டப்பட்டான்.

அவனுடைய மனைவி பரிதவித்துப் போனாள். எதை நம்புவ தென்று அவளுக்குத் தெரியவில்லை. அவளுடைய குழந்தை கள் எல்லோரும் சிறியவர்கள். அவர்களில் ஒன்று பால்குடி. அவர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு அவன் சிறை யிருக்கும் நகரத்திற்குச் சென்றாள். முதலில் அவனைப் பார்க்க அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. மிகவும் இரங்கி வேண்டியதன் பின் அதிகாரிகளிடமிருந்து உத்தரவு கிடைத் தது. பின் அவளை அவர்கள் அவனிடம் அழைத்துச் சென் றார்கள். அவள் தன் கணவனை சிறைச்சாலை உடையில், சங்கிலியால் கட்டப்பட்டு கள்வர்களுடனும் குற்றவாளிகளுட னும் கண்டபோது மயங்கி விழுந்து விட்டாள். விழுந்தவள்



லியோ ரோல்ஸ்ரோய் 1828-1910) ரஷிய எழுத்தாளர், ஆன்மீகச் சிந்தனையாளர். உலக இலக்கியத்தின் மாபெரும் எழுத்தா ளர்களில் ஒருவராகவும் செல்வாக்குள்ளவ ராகவும் கணிக்கப்படுகின்றார். அவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஆறு முறையும் சமாதானத்துக்கான நோபல் பரிசு இரண்டு முறையும் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் கிடைக்க வில்லை. ரஷ்ய நிலப் பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்தவர். War and Peace, Anna Karenina போன்ற மாபெரும் நாவல் களையும், The Death of Ivan Ilyich, Family Happiness, Hadji Murad போன்ற குறுநாவல்களையும் நூற்றுக் கணக் கான சிறுகதைகளையும் எழுதியுள்ளார். The Kingdom of God is within You என்ற நூல் காந்தியையும் மாட்டின் லூதர் கிங் யூனியர் போன்றவர்களையும் வெகுவாகப் பாதித் தது. அதில் வன்முறையற்ற எதிர்ப்புப் போன்ற கருத்துகளை எடுத்துக் கூறுகின்றார். பல கட்டுரை நூல்களையும் எழுதி யிருக்கின்றார். ஆழ்ந்த ஆன்மீக விழிப்புணர்ச்சியை அடைந்த பின் எழுதியது Confesssion என்ற அபுனைவு நூல். யேசுநாதரின் மலைப் பிரசங்கம் அவரை ஓர் தணி யாப் பற்றுள்ள கிறிஸ்தவ அராஜகவாதியாகவும் அமைதி வாதியாகவும் ஆக்கியது. ஜேர்மன் மொழியில் அவர் வாசித்த திருக்குறள் அவரை அகிம்சாவாதியாக ஆக்கியது. காந்தி அவரிடம் கேட்ட அறிவுரைகளுக்கு அவர் காந்திக்கு எழுதிய A Letter to a Hindu கடிதங்கள் தொகுப்பாக்கப் பெற்றுள்ளன. அதில் அகிம்சைக் கருத்துகளைக் காந்திக்கு எடுத்துக் கூறியுள்ளார். இறுதிக் காலத்தில் அவர் புலால் உணவைத் தவிர்த்து சைவ உணவையே உண்டிருக் கிறார். அவரின் இறுதி நாட்கள் பற்றிய அருமையான திரைப்படம் 'The Last Station.'

பலர் இவரின் படைப்புகள் பற்றிப் புகழ்ந்து எழுதியுள் ளார்கள். வேர்ஜினியா வுல்ஃப் இவரை, 'நாவலாசிரியர்கள் அனைவரிலுமே மிக உயர்ந்தவர்,' என்று சொல்லியிருக் கிறார். டோஸ்ரோயெவிஸ்கி அவருடைய நாவல்களை விரும்பி வாசித்துப் புகழ்ந்துள்ளார். அன்ரன் செக்கோவ் அவருடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தவர். குஸ்ராவ் ஃப்ளோபியர் இவரின் போரும் சமாதானமும் நாவலை வாசித்த பின், 'எத்தகைய உயர்தரமான கலைஞர், எத்த கைய உளவியலாளர் இவர்,' என்று புகழ்ந்துள்ளார். பிரித் தானியாவைச் சேர்ந்த விமர்சகரும் கவிஞருமான மத்தியு ஆர்னால்ட், 'ரோல்ஸ்ரோயின் நாவல் ஒரு கலைப்படைப் பல்ல, வாழ்க்கையின் ஒரு பகுதி' என்கிறார். 'எல்லோரும் உலகத்தை மாற்றுவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் எவரும் தன்னை மாற்ற நினைப்பதில்லை,' என்பது அவரு டைய சிறந்ததொரு மேற்கோள்.




மூர்ச்சை தெளிய அதிக நேரம் எடுத்தது. பின் தன் பிள்ளை களை அருகே அழைத்து வைத்துக் கொண்டு அவனருகில் இருந்தாள். வீட்டு நிலைமைகளைச் சொன்னாள். பின் என்ன நடந்தது என்று கேட்டாள். நடந்தவை எல்லாவற்றையும் அவன் சொன்னான். 'இப்போது நாங்கள் என்ன செய்வது? என்று கேட்டாள்.

'அப்பாவி மனிதர் ஒருத்தரை இறக்கவிடக் கூடாது என்று ஜாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்,' என்றான்.

ஜாருக்குத் தான் விண்ணப்பித்து விட்டதாக அவள் சொன் னாள். ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாள்.

அக்சியோனொவ் அதற்குப் பதிலளிக்காமல் மனம் தளர்ந்து போய் கீழே பார்த்துக் கொண்டிருந்தான்.

அதன் பிறகு மனைவி சொன்னாள். 'உன்னுடைய தலைமுடி நரைத்திருந்தது என்று நான் கனவு கண்டது பொய்யல்ல. அது நினைவிருக்கிறதா? அந்த நாளில் நீ பயணம் போயி ருக்கக் கூடாது.' அவனுடைய தலைமுடியைத் தன் விரல்க ளால் கோதி விட்டாள். 'என் அன்பே, உன்னுடைய மனை விக்கு உண்மையைச் சொல். அதை நீ செய்தாயா?'

'அப்போ நீயும் என்னைச் சந்தேகிக்கிறாயா?' என்றான் அக்சி னோயொவ், தன் முகத்தைக் கைகளுக்குள் மறைத்துக்

கொண்டே. பின் அழத் துவங்கினான். படைவீரன் ஒருவன் வந்து மனைவியும் குழந்தைகளும் போய்விட வேண்டும் என்று சொன்னான். அக்சினோயொவ் கடைசி முறையாகத் தன் குடும்பத்திற்கு விடை கூறினான்.

அவர்கள் போனபின் அக்சினோயொவ் தான் என்ன சொன்னான் என்பதை நினைவில் மீட்டான். தன் மனைவி கூடத் தன்னைச் சந்தேகித்தபோது அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். 'கடவுளுக்கு மட்டும் தான் உண்மை தெரியும் போலும். அவனிடம் மட்டுந்தான் நாங்கள் விண்ணப்பிக்க வேண்டும், அவனிடமிருந்து மட்டுந்தான் நாங்கள் கருணையை எதிர்பார்க்கலாம்.'

அதன் பின் அக்சினோயொவ் எந்த விண்ணப்பமும் செய்யவில்லை. எல்லா நம்பிக்கையையும் கைவிட்டு, கடவுளை மட்டும் பிரார்த்தித்தான்.

அக்சினோயொவுக்குக் கசையடி கொடுக்கவும் பின் சுரங்கத்திற்கு அனுப்பவும் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. முடிச்சுப் போட்ட கசையால் அவனை அடித்தார்கள். முடிச்சால் ஏற்பட்ட காயங்கள் ஆறியவுடன் அவனையும் மற்றக் குற்றவாளிகளுடன் அழைத்துச் சென்றார்கள்.

இருபத்தாறு ஆண்டுகள் அக்சினோயொவ் குற்றவாளியாகச் சைபீரியாவில் வாழ்ந்தான். அவனுடைய தலைமுடி பனியைப் போல வெள்ளையாக மாறிவிட்டது. அவனுடைய தாடி நீளமாக, மெலிந்து, சாம்பல் நிறமாக வளர்ந்து விட்டது. அவனுடைய களிப்பெல்லாம் மறைந்து விட்டது. உடல் கூனி விட்டது. மெதுவாகவே நடந்தான். குறைவாகவே பேசினான். சிரிக்கவேயில்லை. ஆனால் அடிக்கடி பிரார்த்தித்தான்.

சிறையில் அக்சியோனொவ் சப்பாத்துகள் தைக்கப் பழகினான். கொஞ்சப் பணம் உழைத்தான். அதைக் கொண்டு புனிதர்களின் வாழ்க்கை என்ற நூலை வாங்கினான். சிறையில் சற்று வெளிச்சம் இருந்தபோது அதை வாசித்தான். ஞாயிறுகளில் சிறையிலுள்ள தேவாலயத்திற்குச் சென்று பாடங்களை வாசித்தான். சேர்ந்திசைக் குழுவில் பாடினான். அவனுடைய குரல் இன்னும் இனிமையாகவே இருந்தது.

சிறைச்சாலை அதிகாரிகள் அக்சினோயொவை அவனுடைய அடக்கத்திற்காக விரும்பினார்கள். சக சிறைக் கைதிகள் அவனை மரியாதையாக நடத்தினார்கள். அவனை அவர்கள் 'தாத்தா' என்றும் 'புனிதர்' என்றும் அழைத்தார்கள். அதிகாரிகளிடம் எதைப் பற்றியாவது முறையிட விரும்பினால் அவனையே எப்பொழுதும் அவர்களுடைய பேச்சாளராக அனுப்பினார்கள். சிறைக் கைதிகளிடையே வாய்ச் சண்டை ஏற்பட்டால் சரியானதையே செய்வான் அவன் என்று அவனிடமே வந்தார்கள்.

வீட்டிலிருந்து எந்தவிதமான செய்தியும் அக்சியோனொவுக்கு வரவில்லை. அவனுடைய மனைவியும் குழந்தைகளும் இன்னும் உயிருடன் இருக்கின்றார்களா இல்லையா என்பது கூட அவனுக்குத் தெரியாது.

ஒருநாள் சிறைச்சாலைக்குப் புதியதொரு குற்றவாளிகள் கூட்டமொன்று வந்தது. மாலை நேரத்தில் பழைய சிறைக் கைதிகள் புதிய குற்றவாளிகளைச் சுற்றிக் கூடியிருந்து எந்த நகரத்திலிருந்து அல்லது கிராமத்திலிருந்து அவர்கள் வருகிறார்கள் என்றும் என்ன குற்றத்திற்காக அவர்கள் தண்டனை பெற்றார்கள் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். புதியவர்களிடையே அக்சினோயொவும் இருந்துகொண்டு அவர்கள் சொல்லுவதைக் குனிந்த தலை நிமிராமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

உயரமான, அறுபது வயதுள்ள வலிமையான, ஒட்ட வெட்டப்பட்ட, நரைத்த தாடியுள்ள ஒரு குற்றவாளி ஏன் அவர்கள் தன்னைக் கைது செய்தார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

'நண்பர்களே, நான் சறுக்கு வண்டியில் கட்டப்பட்டிருந்த ஒரு குதிரையை எடுத்தேன். அதற்காக நான் கைது செய்யப்பட்டு, களவெடுத்தேன் என்று குற்றஞ் சாட்டப்பட்டேன். நான் வேகமாக வீடு செல்ல வேண்டுமென்பதற்காகத் தான் அதை எடுத்தேன். வீடு சென்றவுடன் அதைப் போகச் சொல்லி விட்டுவிட்டேன் என்றேன். அத்துடன், அந்த வண்டியோட்டியும் என்னுடைய உற்ற நண்பன். 'அது பரவாயில்லை,' என்றேன். அவர்கள் சொன்னார்கள், 'இல்லை, நீ அதைக் களவெடுத்தாய்,' என்றார்கள். ஆனால் அதை எப்போது, எங்கே களவெடுத்தேன் என்று அவர்கள் சொல்லவில்லை. ஆனால் நான் ஒரு முறை உண்மையில் ஒரு தவறு செய்திருந்தேன். அதற்கான தண்டனையை அனுபவிக்க நான் இங்கே எப்போதோ வந்திருக்க வேண்டும். ஆனால் அதை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. இப்பொழுது, இங்கே நான் செய்யாத குற்றத்துக்காக அனுப்பப்பட்டிருக்கிறேன். ஓ, நான் உங்களுக்கு ஒரு பொய் சொல்லுகிறேன். சைபீரியாவுக்கு முன்பு வந்திருக்கிறேன். ஆனால் பல காலம் இங்கே தங்கவில்லை.'

'நீ எவ்விடத்திலிருந்து வருகிறாய் ?' என்று ஒருத்தன் கேட்டான்.

'விளாடிமிலிருந்து. என்னுடைய குடும்பம் அந்த நகரம்தான். என்னுடைய பெயர் மக்கர். என்னைச் செமியோனொவிச் என்றும் அழைப்பார்கள்.'

அக்சியோனொவ் தன் தலையைத் தூக்கிச் சொன்னான். 'செமியோனொவிச், விளடிமிரைச் சேர்ந்த அக்சியோனொவ் என்ற வணிகனைப் பற்றி ஏதாவது தெரியுமா ? அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கிறார்களா ?'

'அவர்களைத் தெரியுமா ? என்றா கேட்கிறீர்கள். நிச்சயமாக, அவர்களை நன்றாகத் தெரியும். அக்சினோயொவ் குடும்பம் ஒரு பணக்காரக் குடும்பம். அவர்களுடைய தந்தை சைபீரியாவில் இருக்கிறார். எங்களைப் போல அவரும் பாவம் செய்தவர் போலும்! உங்களைப் பொறுத்தவரை, தாத்தா, நீங்க எப்படி இங்கே வந்தீர்கள் ?'

அக்சியோனொவ் தன்னுடைய துரதிர்ஷ்டத்தைப் பற்றிப் பேச விரும்பவில்லை. பெருமூச்சு மட்டும் விட்டபின், 'என்னுடைய பாவத்திற்காக நான் இருபத்தாறு ஆண்டுகள் இந்தச் சிறையில் இருக்கிறேன்.'

'என்ன பாவம் செய்தீர்கள் ?' என்று மக்கர் செமியோனிச் கேட்டான்.

அக்சியோனொவ், 'சரி, சரி, இதற்கு நான் தகுதியானவனாக

இருந்திருக்கலாம்!' அதற்கு மேல் அவன் ஒன்றும் சொல்ல வில்லை. ஆனால் அவனுடைய தோழர்கள் அவன் எப்படி அங்கே வந்தான் என்று சொன்னார்கள். யாரோ ஒருத்தர் ஒரு வணிகனைக் கொன்று விட்டு அக்சினோயொவின் உடைமை களுக்குள் அந்தக் கத்தியை வைத்திருக்கிறார். அதனால் அக்சியோனொவ் அநியாயமாகத் தண்டனைக்காளாக்கி இருக்கிறான் என்று சொன்னான்.

அதைக் கேட்ட மக்கர் செமியோனிச் அக்சினோயொவைப் பார்த்தான். பின் தன் தொடையில் தட்டி, 'இது ஆச்சரியம். உண்மையில் ஆச்சரியம். நீங்கள் எப்படி வயதாகிப் போனீர் கள், தாத்தா ?'

அவன் ஏன் அப்படி ஆச்சரியப்பட்டான் என்று மற்றவர்கள் அவனைக் கேட்டார்கள். அக்சியோனொவை முன்னர் அவன் எங்கே பார்த்தான்? ஆனால் மக்கர் செமியோனிச் அதற்குப் பதிலளிக்கவில்லை. ஒன்றை மட்டும் சொன்னான். 'தோழர் களே, நாங்கள் இங்கே சந்திப்பது ஆச்சரியம்தான்!' என் றான்.

இந்த மனிதருக்கு அந்த வணிகனைக் கொன்றது யார் எனத் தெரிந்திருக்கலாம் என்று இந்த வார்த்தைகள் அக்சியோ னொவ்வைச் சிந்திக்க வைத்தன. அதனால் 'செமியோனிச் நீ அந்த விஷயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாய், அல் லவா ? ஆகவே சிலவேளை நீ என்னையும் முன்பு பார்த்திருக் கலாம்,' என்றான்.

'எப்படி நான் கேள்விப்பட்டிருக்கலாம்? உலத்தில் நிறைய வதந்திகள் உலாவுகின்றன. அது நடந்தது பல காலத்திற்கு முன்பு. நான் கேள்விப்பட்டேன் என்பதையே நான் மறந்து விட் டேன்.'

'யார் அந்த வணிகனைக் கொன்றது என்பதைப் பற்றி நீ கேள் விப்பட்டிருக்கலாம்,' என்றான் அக்சியோனொவ்.

மக்கர் செமியோனிச் சிரித்துவிட்டு, 'பையிலிருந்த கத்தியை வைத்திருந்தவன் தான் கொன்றிருக்கலாம்! வேறொருத்தன் அந்தக் கத்தியை அங்கே மறைத்து வைத்திருந்தால், 'அவ னைக் கண்டுபிடிக்கும்வரை அவன் கள்வனல்ல,' என்பது முதுமொழி அல்லவா ?' உன்னுடைய தலைக்குக் கீழிருந்த பைக்குள் எப்படி ஒருத்தன் கத்தியை வைக்க முடியும்? அப் படி வைக்கும்போது நீ கட்டாயம் எழும்பியிருப்பாய், அல் லவா ?'

இந்த வார்த்தைகளை அக்சினோயொவ் கேட்டபோது, இவன் தான் அந்த வணிகனைக் கொன்றது என்பது நிச்சயம் என்று நம்பினான். அக்சினோயொவ் எழுந்து வெளியே சென்றான். அன்றிரவு முழுவதும் துயிலாமல் விழித்திருந்தான். மிகவும் துயருற்றிருந்தான். பலவிதமான படிமங்கள் மனதினில் எழுந் துகொண்டேயிருந்தன. அன்று அவன் சந்தைக்கு வெளிக்கிட் டுச் சென்றபோது அவன் மனைவி நின்ற கோலமும் மனதில் வந்தது. அவள் தற்போது இங்கே நிற்பதுபோலத் தெரிந்தாள். அவளுடைய முகமும், அவளுடைய கண்களும் அவன் முன் னால் தோன்றின. அவள் கதைப்பதும் சிரிப்பதும் அவனுக்குக் கேட்டன. அதன் பின் தன் குழந்தைகளைக் கண்டான். மிகச் சிறியவர்களாக. அப்போதிருந்தது போல. ஒன்று, சிறிய உடையை அணிந்திருந்தது. மற்றொன்று தாயின் முலையில் பால் குடித்துக் கொண்டிருந்தது. அதன் பின் அவன் தன் னைப் பற்றி நினைத்தான். இளமையாக, மகிழ்ச்சியாக. விடு தியின் முக மண்டபத்தில் கிட்டார் வாசித்துக் கொண்டிருந்த போது எப்படி அவன் கைது செய்யப்பட்டான், எப்படி எத் தனை சுதந்திரமானவனாக இருந்தான். அப்போதுதான் அவன் கைது செய்யப்பட்டான் என்பது நினைவுக்கு வந்தது. எங்கே அவன் கசையால் அடிக்கப்பட்டான் என்பதும், அதைச் செய்தவனும் அங்கே சுற்றியிருந்த மக்களும், கட்டப் பட்டிருந்த சங்கிலிகள், குற்றவாளிகள், இருபத்தைந்து ஆண்டு சிறைவாழ்க்கை, தன் வயதுக்கு மீறி முதுமையடைந் தமை என்று பலதும் பத்தும் அவன் மனதில் தோன்றின. இப்ப டியான நினைவுகள் எல்லாம் வந்து அவனை மிகுந்த துயரத் துக்குள்ளாக்கியதால் அவன் தன் உயிரை மாய்த்து விடக் கூடத் தயாரானான்.

'இவையெல்லாம் நடந்தது அந்தக் கெட்டவன் செய்த செய லால்தான்!' என்று அக்சியோனொவ் நினைத்தான். அவனு டைய கோபம் மக்கர் செமியோனிச்சின் மீது இருந்தது. அவ னைப் பழிவாங்க நினைத்தான். அதற்காக அவன் அதில் தான் சாக வேண்டியிருந்தாலும் பரவாயில்லை என்று நினைத் தான். அன்றிரவு முழுவதும் அவன் பிரார்த்தித்துக்கொண்டே யிருந்தான். இருந்தும் அவனுக்கு அமைதி வரவில்லை. பக லில் மக்கர் செமியோனிச் அருகில் போகவுமில்லை, அவ னைப் பார்க்கக் கூட இல்லை.

அப்படி இரண்டு கிழமைகள் கழிந்தன. அக்சியோனொவ்வால் இரவில் துயில முடியவில்லை. அத்தனை அருவருக்கத்தக்க வாழ்க்கை. என்ன செய்வதென்று அவனுக்குத் தெரிய வில்லை.

ஒருநாள் இரவு சிறைச்சாலையில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கையில் கைதிகள் படுத்திருந்த பலகைத் தட் டுக்களின் கீழிருந்து ஏதோவொரு பொருள் உருண்டு வந்து கொண்டிருந்தது. அது என்னவென்று பார்ப்பதற்காக நின் றான். சடுதியாக மக்கர் செமியொனிச் ஒரு தட்டிலிருந்து ஊர்ந்து வெளியே வந்து அக்சியோனொவ்வைப் பயத்துடன் நிமிர்ந்து பார்த்தான். அக்சினோயொவ் அதைக் காணாதது போலப் போக முயன்றான். ஆனால் மக்கர் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான். சுவரின் கீழே ஒரு குழியைத் தோண்டுகிறான் என்றும் சிறை அதிகாரிகள் கைதி களை வேலைக்கு அழைத்துச் செல்லும்போது மண்ணைத் தன் உயர்ந்த சப்பாத்துகளுக்குள் போட்டு அதை வெளியே தெருவில் கொட்டிக்கொண்டிருந்தான் என்றும் சொன்னான்.

'கிழவனே, இதைப்பற்றி வெளியே சொல்லி விடாதே, நீயும் வெளியேறலாம். இதைப்பற்றி நீ உளறினால் அவர்கள் என் னைக் கசையடி கொடுத்துக் கொன்று விடுவார்கள். அதற்கு முன் நான் உன்னைக் கொன்று விடுவேன்,' என்றான்.

அக்சினோயொவ் தன் எதிரியைப் பார்த்துக் கோபத்தால் நடுங்கினான். 'தப்பியோடி விட நான் விரும்பவில்லை. உனக் கும் என்னைக் கொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. என்னை நீ பல காலத்துக்கு முன்னமே கொன்று விட்டாய்! உன்னைப் பற்றிச் சொல்ல வேண்டுமா இல்லையா என்ப தைப் பற்றிக் கடவுள் எனக்குச் சொன்னபடி தான் நான் செய் வேன்,' என்றான்.

அடுத்த நாள், கைதிகளைக் காவலாளிகள் வேலை செய்ய வெளியே அழைத்துச் சென்றபோது, பாதுகாப்பு வீரர்கள் யாரோ ஒருத்தன் சப்பாத்துக்குள்ளிருந்து மண்ணை வெளியே கொட்டியிருப்பதைக் கண்டனர். அதனால் சிறைச் சாலையில் தேடினார்கள். அப்போது ஒரு சுரங்கப் பாதை யையும் கண்டு பிடித்தார்கள். ஆளுநர் வந்து கைதிகள் அனைவரையும் குழியைத் தோண்டியது யார் என்பதை விசா ரித்தார். எல்லோரும் தங்களுக்குத் தெரியாது என்று மறுத் தார்கள். தெரிந்தவர்களும் மக்கர் செமியொவிச்சைக் காட் டிக்கொடுக்க விரும்பவில்லை. அவனுக்குக் கசையடி கொடுத்தே கொன்று போடுவார்கள் என்று தெரிந்ததால் அப் படிச் சொன்னார்கள். கடைசியில் ஆளுநர் அக்சியோனொவி டம் திரும்பினார். அக்சினோயொவ் ஒரு நேர்மையான மனிதர் என்று அவருக்குத் தெரியும்.

'நீ உண்மை பேசும் ஆள். கடவுள் முன் சொல், யார் இந்தக் குழியைத் தோண்டியது?'

மக்கர் செமியோனிச் எதைப் பற்றியும் கவலைப்படாதவன் போல அக்சியோனொவ்வைப் பார்க்காமல் ஆளுநரைப் பார்த்துக்கொண்டு நின்றான். அக்சியோனொவ்வின் உதடுக ளும் கைகளும் நடுங்கின. நீண்ட நேரம் அவனால் ஒரு வார்த் தையைக் கூடப் பேசமுடியவில்லை. 'என் வாழ்க்கையை நாச மாக்கியவனை நான் ஏன் பாதுகாக்க வேண்டும்? நான் பட்ட கஷ்டங்களுக்கான தண்டனையை அவன் அனுபவிக்கட்டும். ஆனால் உண்மையை நான் சொன்னால் அவர்கள் அவனு டைய உயிரைக் கசையடி கொடுத்து எடுத்து விடுவார்கள். சிலவேளை நான் பிழையாக அவனைச் சந்தேகப்பட்டால்.. எல்லாவற்றுக்கும் மேலாக, இதில் எனக்கென்ன நன்மை வரப் போகிறது?' என்றும் சிந்தித்தான்.

'சரி, முதியவனே. உண்மையைச் சொல்லு. சுவரின் கீழே யார் கிண்டியது?' என்று ஆளுநர் திரும்பவும் கேட்டான்.

அக்சியோனொவ் மக்கர் செமியோனிச்சை ஓரக் கண்ணால் பார்த்துக்கொண்டு சொன்னான், 'மாண்பு மிக்கவரே, நான் சொல்ல வேண்டும் என்பது கடவுள் சித்தமல்ல. என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். என் தலைவிதி உங் கள் கையில்.'

ஆளுநர் பலமுறை முயன்றும் அக்சியோனொவ் எதையும் சொல்ல மறுத்துவிட்டான். அதனால் அந்தப் பிரச்சினையை அவர்கள் அப்படியே விட்டு விட்டார்கள்.

அன்றிரவு அக்சினோயொவ் தன் படுக்கையில் கிடந்து துயி லத் துவங்கியபோது யாரோ ஒருத்தன் சத்தமில்லாமல் வந்து அவன் படுக்கையிலிருந்தான். இருட்டில் அவனைக் கூர்ந்து அவதானித்தபோது அது மக்கர் என்பதை அடையாளங் கண் டான்.

'என்னிடம் இதற்கு மேலும் என்ன கேட்கிறாய்? ஏன் இங்கே வந்தாய்?' என்றான் அக்சினோயொவ்.

மக்கர் செமியோனிச் அமைதியாக இருந்தான். அக்சினோ-யொவ் நிமிர்ந்திருந்து, 'உனக்கு என்ன வேணும்? இங்கேயி ருந்து போய்விடு. போகாவிட்டால், காவலாளியைக் கூப்பிடு வேன்,' என்றான்.

மக்கர் செமியோனிச் அக்சினோவுக்குக் கிட்டக் குனிந்து குசு குசுத்தான், 'இவான் டிமிற்றிச், என்னை மன்னித்து விடு!'

'எதற்காக மன்னிப்பு?' என்றான் அக்சினோயொவ்.

'நான் தான் அந்த வணிகனைக் கொன்று விட்டு கத்தியை உன்னுடைய பொருட்களுடன் ஒளித்து வைத்தேன். உன்னை யும் கொல்ல நினைத்தேன். ஆனால் வெளியே சத்தம் கேட் டது. அதனால் கத்தியை உன்னுடைய பைக்குள் ஒளித்து வைத்து விட்டு யன்னலால் தப்பித்து விட்டேன்.'

அக்சினோயொவ் அமைதியானான். அவனுக்கு என்ன சொல் வதென்று தெரியவில்லை. மக்கர் செமியோனிச் கட்டிலிலி ருந்து நழுவி நிலத்தில் முழங்காலில் இருந்தான். 'இவான் டி மிற்றிச், என்னை மன்னித்துக் கொள்! தேவன்மீது அன்பு கூர்ந்து, என்னை மன்னித்து விடு! நான்தான் வணிகனைக் கொன்றேன் என்ற குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன், உன்னை விடுவிப்பார்கள், நீ வீட்டுக்குப் போகலாம்.'

'பேசுவது உனக்குச் சுலபம். ஆனால் இந்த இருபத்தைந்து ஆண்டுகள் உனக்காகத் துன்பப்பட்டு விட்டேன். இப்போது நான் எங்கே போவேன்? என்னுடைய மனைவி இறந்து விட் டாள். என்னுடைய குழந்தைகள் என்னை மறந்து போயிருப் பார்கள். எனக்குப் போவதற்கு ஒரு இடமும் இல்லை,' என் றான் அக்சினோயொவ்.

மக்கர் செமியோனொவ் எழும்பாமல் நிலத்தில் தலையை மோதினான். 'இவான் டிமிற்றிச், என்னை மன்னித்து விடு!' என்று கத்தினான். என்னை முடிச்சுள்ள கசையால் அடித்த போதுகூட, அது பொறுக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் உன்னை இப்போது பார்ப்பதிலும் அது அத்தனை கஷ்ட மான விஷயமல்ல என்று தெரிகிறது. இருந்தும் உனக்கு என் னில் இரக்கம் இருந்தது. அதனால் என்னை நீ காட்டிக் கொடுக்கவில்லை. கிறிஸ்துவுக்காக, என்னை மன்னித்து விடு. நான் பாவி!' அவன் தேம்பித் தேம்பி அழத் துவங்கி னான்.

அக்சினோயொவ் அவன் தேம்பியழுவதைப் பார்த்துத் தானும் கண்ணீர் விட்டு அழுதான். 'உன்னைக் கடவுள் மன் னிப்பார்! நான் உன்னிலும் பார்க்க நூறு மடங்கு கீழான பாவி யாக இருக்கலாம்!' என்றான். இந்த வார்த்தைகளுடன் அவனு டைய இதயக் கனம் எளிதாகியது. வீட்டுக்குப் போக வேண் டும் என்ற ஆவல் மறைந்து போனது. சிறையை விட்டுச் செல்ல வேண்டும் என்ற விருப்பமும் இருக்கவில்லை. ஆனால் இறுதி நேரம் வருவதற்காகக் காத்திருந்தான்.

அக்சினோயொவ் சொல்லியும் கூட, மக்கர் செமியோனிச் தன் குற்றத்தை அதிகாரிகளிடம் ஒப்புக்கொண்டான். ஆனால் அக் சியோனொவ்வை விடுவிக்கச் சொல்லி ஆணை வந்தபோது, அவன் ஏற்கெனவே இறந்து போயிருந்தான்.



mahalingam.k@thaiveedu.com



LIGHT DISPELS DARKNESS
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
மகளிர் கல்லூரி பழைய
மாணவர்கள் பெருமையுடன்
வழங்கும்
முற்றிலும்
புதுமையான நிகழ்வுகளுடன்,
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்
வானவில் 2024
இயல்–இசை–நாடகம்
கோடை காலத்தின் குளிர் தென்றல்
SEPTEMBER
28
SATURDAY
6:00 PM
இரண்டு
நாட்கள்
SEPTEMBER
29
SUNDAY
6:00 PM
Armenian Youth Centre
50 Hallcrown Pl. North York, M2J 1P6
பேச்சுப் போட்டி
Saturday, August 24, 2024 at 9:00AM
Talenta Academy
2020 Ellesmere Road, Unit #2, Toronto, ON M1H 2Z8
முதலிடம் பெறுபவருக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
647-760-6689, 416-697-1317,
647-969-1154, 416-918-2464


SEPTEMBER 28
1:30 PM
SEPTEMBER 29
1:30 PM
LUNAR
ஆக்குவாய்
காப்பாய்
Written & Directed by
MATHIVASAN
MUTHUKUMAR


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

**We've Moved**
**Our New Address**

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You



33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE
REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977




HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam
Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com




With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON
ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined




BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

# STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

**SARVAA CPA**
PROFESSIONAL CORPORATION

**Our passion is to solve your tax problems:**

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

cpa CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272







BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
HOMELIFE
GRAND MASTER CLUB
Chairman's Club Award Winner 2015
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Chairman's Club Award Winner 2017
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace CO
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician | ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280




Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani • Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090




SABONA




Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com




Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141




Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE




LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough




Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life 100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Patricia Peter BBM
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law
RAMAN HOME COMFORT INC
HEATING
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc.
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
416.261.1544
AEREN Thiyagarajah
DILEEP Thangavel
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545
RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.
UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP
Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE
Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120
Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.
Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER
Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE
BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
HomeLife Today Realty Ltd.
NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
INFORCE LIFE Financial Services Inc.
QUALITY ADVICE YOU CAN TRUST
Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532
DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
RE/MAX